உ
கணபதி துணை.

கடவுண்மாமுனிவர் அருளிச்செய்த

திருவாதவூரடிகள் புராணம்.

இஃது

ஆசிரியர், ஸ்ரீமத். ம. க. வேற்பிள்ளை
அவர்கள் செய்த

விருத்தியுரையுடன்,

ஷை ஆசிரியரது சிரேஷ்ட புத்திரரும்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்போதகாசிரியருமாகிய
திருஞானசம்பந்தப்பிள்ளை
அவர்களின் கேள்விப்படி,

யாழ்ப்பாணம்
வண்ணார்பண்ணை
சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்
சி. சி. சண்முகம்பிள்ளையால்,
தமது
ஸ்ரீ சண்முகநாத யந்திரசாலையில்
அச்சிடப் பெற்றது.

இரண்டாம் பதிப்பு

இராக்ஷத௵ ஆவணிமீ.
1915.

(Copyright Registered.)

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாதவூரடிகள் புராண சருக்கவகராதி.

பக்கம்.	சருக்கம்	பாடற்றொகை.
க.	பாயிரம்	எ
கஉ.	மந்திரிச் சருக்கம்	சக
சச.	திருப்பெருந்துறைச் சருக்கம்	கஙரு
ககூச.	குதிரையிட்ட சருக்கம்	கூகூ
உ0உ.	மண்சுமந்த சருக்கம்	கூரு
உகூக.	திருவம்பலச் சருக்கம்	எ0
ஙு0க.	புத்தரை வாதில்வென்ற சருக்கம்	கூகூ
ஙுகூரு.	திருவடிபெற்ற சருக்கம்	ஙுரு

திருவாதவூரடிகள் புராண சருக்கவகராதி முற்றிற்று.

விளம்பரம்.

இப்புத்தகம் வாங்க விரும்புவோர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சண்முகநாதன் புத்தகசாலை சி. சி. சண்முகம்பிள்ளையிடத்தில் நேரிலாவது வி. பி. மூலமாயாவது பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை: கிளேஸ் காகிதம் ரூபா 1—75.
றவ் ,, ,, 1—50.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

நல்லூர், மகாவித்துவசிரோமணி,

ஸ்ரீமத். ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள்

இயற்றியது.

மதிமலி சடைமுடி வரதன தருள்பெறு
துதியமை வாதவூர்த் தோன்றலார் சரிதையைக்
கடவுண்மா முனியெனுந் திடமுடைக் கவிஞன்
புடவியோர் மகிழ்தரப் புராணமா வகுத்தன
னதற்குரை விரிவொன் றரிறபத் தருகெனப்
புதர்க்குழு வோர்சிலர் புகன்றன ராக
மட்டுவிற் பதிவயிற் சிட்டரு யமர்ந்த
கணபதிப் பிள்ளைவேள் கணிப்பருந் தவத்தா
னணியவேற் பிள்ளையா நற்பெருங் கலைஞன்
பொன்னவ னன்ன நன்மதிப் புலவர்கண்
மெச்சிட வோருரை விரித்தன
னுச்சிமே லறிஞர்கொண் டுவப்புறல் கடனே.

திருவனந்தபுரத்து மஹாராஜாகலீஜு

திராவிட பிரதம மகாபண்டிதர்

ஸ்ரீமத். பு. வ. கணபதிப்பிள்ளை.

மெய்வைத்த சமயங்கள் பலவற்றின் விழுப்புடைய வேத நூலின்
கைவைத்த சைவமதங் காட்டுமுதற் கடவுளையே கருதி யன்பிற்
றெய்வத்தன் மையரான திருவாத புரேசரது சிறந்த காதை
யுய்வைத்தந் தருளுதற்கங் குயர்கடவுண் முனிதமிழா லுரைத்தானன்றே.

அன்றுவட மொழிக்கடலி னகத்தியமா முனியுரைத்த வமல காதை
நன்றுநில வுதற்குவந்து பெரும்புலமைக் கடவுண்முனி நவின்ற பாவிற்
சென்றுநிகழ் திருவாதவூரர் புராணப்பொருளைத் தெளிவித் துய்வோ
மென்றுவிரி வுரையியற்றித் தமிழறிவோ ரகமலர்த்து மென்றூழானான்.

தேறரிய திரிசொல்லுக் கியற்சொல்லுந் தொகைநிலைக்கு விரியுஞ்சேர்ந்து
கூறரிய தொடர்மொழிக்கு வேறுவே றும்வகையுங் குறிப்புக் கோர்ந்து
பேறரிய வெளிப்படையு மாக்கியிலக் கணமைந்தும் பிழையா தார்ந்து
மாறரிய பதிநூலின் வகைகளையும் விரித்துரையில் வாய்க்கச் செய்தோன்.

மழைசுரந்து வளம்பெருக்கு மட்டுவிலாம் பதியகத்து வாழ்வேளாளப்
பழையபெரு நன்மரபுற் பவித்தெழில்கா ளைப்பருவம் படைத்த நாளிற்
கழைகமுகென் றிடவயிர்ப்புக் காட்டுநல்லூ ரெனும்பதியிற் கார்த்திகேயத்
தழைமனத்துத் தமிழோசன் றன்னிட நன்னூலாதி தகவா லோதி.

எத்தலமும் புகழ்நிறுத்து முத்தமிழி னியற்றமிழ்நூ லெல்லா மாய்ந்து
சித்தனரு வுருவனருள் சிவாகமநூ லுந்தெளிந்து சிவன்றா ளேத்து
முத்தமனு மாறுமுக நாவலன்பா லும்புலவ ருவப்பாலுச்சி
வைத்தவவன் மருகன்பொன் னம்பலவன் பாலுமிக மகிழ்ந்துகற்றோன்.

வேறு.

இங்கெடுத் துரைத்தமூவ ரிடமிருந்து கற்றபே
றங்கெடுத் துரைத்தவாத வூரர்மான்மி யத்திலாம்
பங்கெடுத்த விரிவுரைப் பயன்கள் காட்டுமளவிறுன்
பங்கெடுத் துணர்ந்துளோர்கள் பரமவின்ப முறுவரே.

வேறு.

மாசத்தார் தொழுதேத்த வரமளிக்கும் பசுபதிவாழ் வளம்பு லோலித்
தேசத்தார் நன்மரபிற் செனித்தகண பதிப்பிள்ளைச் செம்ம லாற்று
நேசத்தார் தவப்புதல்வ னுயுதித்த வேற்பிள்ளை நிதிமான் பூமி
வாசத்தார் மகிழ்வாத வூரர்கதைக் குரைவிரித்து வகுத்தான் மன்னோ.

சுன்னாகம்,

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர்.

நிலம்புகழுந் தமிழ்நாட்டி லறிஞரெலாங் கொண்டாடி நியமமாகத்
தலம்புகழு முறையோதிப் பொருளாய்ந்து களிகூருஞ் சைவ சாரப்
புலம்பரவு திருவாத வூரடிகள் புராணமுறும் பொருவில் பத்தி
நலம்பரவு கவிகள்பல பிறதிகொடு வழுநீங்க நயப்பா னய்ந்து.

திருத்தமுறும்பதப்பொருளுங் கருத்துரையுஞ்சரித்திரமுஞ்சிறந்தநுண்மை
யருத்தமுறு மிலக்கணமுஞ் சித்தாந்த சாத்திரமு மரிய காட்டாய்ப்
பொருத்தமுறு மிலக்கியமுந் தடைவிடையும் பிறநலமும் பொருந்திநிற்பக்
கருத்தமையும் விருத்தியுரை யுரைத்தறிஞர் களிப்பவுப காரி யானான்.

யாவனெனிற் சொல்லுதும் யாழ்ப்பாணமுறும் புலோலிநக ரேரின்வாழ்நர்
காவலனா யுதித்தகண பதிப்பிள்ளை தவப்புதல்வன் கனகமேனிப்
பூவனிதை திருவருளும் பாவனிதை திருவருளும் பொருந்தும் வள்ள
றேவுலக கற்பகம்போற் கற்பவர்க்கு மெய்ப்பொருள்க டெளிக்குந்தேசன்.

நல்லைநக ராறுமுக நாவலர்க்கு மாமணிபோ னல்லோர் கொள்ளுஞ்
சொல்லமர்வித் துவசூடா மணிபொன்னம் பலநாமத் தோன்ற லுக்குங்
கல்விதரு குருகார்த்தி கேயனுக்கு மாணவனாங் கடமை பூண்டு
வல்லமையா னிலக்கியலக் கணமுதல பலகலைகண் மரபிற் கற்றோன்.

மன்றமரும் புலியூரந் தாதியெனு நூற்குரைமுன் வகுத்த சீலன்
குன்றனையபெருங்குணத்தோன் சைவநெறிமுறையாளன் கோதில்வாய்மை
நன்றியறி வருளாண்மை பொறைகேண்மை முதலாய நலங்கள்பூண்டோன்
வென்றிவளஞ் செறிமட்டு விலிலுறையும் வேற்பிள்ளை வித்துவானே.

புலோலிநகர்,
ஸ்ரீமத். அரு. சோமசுந்தரப்புலவர்.

பூவினர விந்தமெனப் புனனதியிற் கங்கையெனப்
பாவினரும் வெள்ளையெனப் படர்சுடரிற் பானுவெனச்
தேவினரி யெனத்தருவிற் றிகழ்மலர்க்கற் பகமெனச்சீர்
மேவியபன் னாடுகளின் மேதகைய தென்னாட்டில். (க)

வாய்ந்தமலர்த் தண்டலையும் வளவயலும் பொலிவெய்தி
யேய்ந்தவித ரணநிதியோ ரில்லங்கள் பலகுழுமித்
தோய்ந்தவருஞ் சிவபத்தித் தொண்டர் மடங்குலவிமுன்னா
லாய்ந்தவர்கள் கவிக்கடங்கா தமர்வாத வூரின்கண். (உ)

நீறுமணி கண்டிகையு நிமலவெழுத் தைந்துமுடி
யாறுபடர் சிவன்புகழு மவனியெலாம் பெரிதேற
மாறுபடு பரசமய மயலிருளா ழிப்புறத்தி
லேறுமிரு ளொடுமருவி யெழவஞ்சிக் கிடந்தினைய. (ங)

நந்தலறுங் கடல்புடைசூழ் ஞாலமுளார் பயன்றுய்ப்ப
வந்ததிரு வாதவூர் வள்ளறிரு மான்மியத்தைச்
செந்தமிழி னியல்பாவிற் செய்துவினைக் குரம்பைகொடு
முந்துபுகழ் ஸ்ரீ இயினனான் முதுகடவுண் மாமுனியே. (ச)

அந்தவருட் டிருவாதவூ ரடிகள் புராணமதைச்
சிந்தைதெவிட் டாவமுதைத் தேன்பெருக்கைப் புளிப்பிக்குஞ்
சந்தமிகும் பாடலினைத் தக்கவுரை யொன்றியற்றி
யிந்தநில முயவெழுதா வெழுத்திசைவித் திடுதியென. (௫)

தேவநிலத் தைந்தருவுஞ் சேர்ந்துவடி வொன்றொன்றாய்ப்
பாவலரைப் புரந்தருளும் படிபடியி லமர்ந்தனையார்
காவலரு மதித்தபுகழ்க் காமருகார் காத்தாராம்
பூவலய வறிஞர்முதற் பொருவிறந்தோர் போற்றிசைக்க. (௬)

வீடுமனை நிகர்விரதன் வித்தையினான் மாஞானி
பீடுகெழு சாந்தமுதற் பெருங்குணம்பே ரணியானோ
னீடுபுகழ்ச் சன்மார்க்க நெறிநின்றோ னிபுணர்பலர்
பாடுபுகழ்க் கார்த்திகே யாசிரியன் றன்பாலும். (௭)

பண்டிதர்தம் போரேறாய்ப் பகர்வித்வ சிரோமணியாய்த்
தெண்டிரையி னமிர்தமெனத் திகழ்தரு லக்கியங்கட்குங்
கண்டருலக் கணங்கட்குங் கரைகாணாக் கலைக்கடலாய்
மண்டியபொன் னம்பலப்பே ராசிரியமணி மாட்டும். (௮)

நிலப்பரப்பின் விரிபுகழா னிருமலன்மா சிவபூசை
நலப்படு தொண்டர்கள்பூசை நாளுநனி நடத்தினோன்
புலப்படுபொய்ந் நாவலர்கள் போலாதோன் றிருநல்லூர்
வலப்படுநல் லாறுமுக மகத்துவநா வலன்மாட்டும். (௯)

கற்றவனைந் திலக்கணமுங் கசடறவைந் திலக்கணமு
முற்றதொரு மட்டுவினன் குறைபதியாக் கொண்டுவப்போன்
றெற்றெனவே சித்தாந்தந் தெளிந்தவன்சீர் விதாலயங்கள்
குற்றமற வதிபதியாக் கொடுநடத்துங் குணசீலன். (௧௦)

பொய்யடரு மழுக்காறு புறமொழிதல் கடுங்குறளை
வெய்யசின முதலியன மிறிஞ்சியென விளங்கினோன்
றூய்யசுவை கெழீஇயதமிழ்த் தோமறுதொன் னூல்பலவு
மையமொடு திரிபகல வாங்குகற்பித் திடுமாசான். (௧௧)

பிறையொன்று செஞ்சடிலப் பெம்மானை யனுதினமு
முறையொன்ற நெஞ்சதனின் முதிருமன்பின் வழிபடுவோ
னறையொன்று கடம்பணிதோ ணம்பெருமான் புராணமதை
நிறையொன்ற வாய்ந்துமன நெகிழ்ந்திறைக்குநீர்விழியான். ( )

ஒன்றுமதி வள்ளுவர்தா மூருணிநீர் நிறைந்தற்றே
யென்றுவிளம் பியகுறளுக் கியைந்தவிலக் கியமானோன்
மன்றுணட மொழியாத மணிகண்டன் மதவல்லி
யென்றுமினிதிற்படர வெழுகொளுகொம்பேயனையான்.(கங)

வஞ்சகமா தியமாசு மனக்களங்க வழிமறுத்தோ
னெஞ்சகத்திற் படுமெவையு நிகழ்த்திடுநீர் மைகொடீயன்
விஞ்சுபொருட் செல்வமதை விரவியநன் மாணவர்க்கொன்
றெஞ்சலிலா தீகல்வி யெனுஞ்செல்வ மொடுபடைத்தோன். ()

முன்னிளமை யிந்நூற்கு முறைமையினோர் பொழிப்புரையு
மன்னுபுலி யூரின்மிசை வாய்த்தவந்தா திக்குரையு [யோ
பன்னுதல்செய் தோன்சிவன்றாட் பத்திமையின் பழுப்புடை
னுன்னியதன் மரபிரண்டுஞ் சைவமரபா வுடையோன். (கரு)

மன்னுதிரு நெல்வேலி மட்டுவின்மாண் புலோலியினிற்
றுன்னுநதி குலக்கிளையின் றோற்றமுறு மேற்றத்தான்
றன்னிகரில் புலோலிநகர் சார்ந்தகண பதிப்பிள்ளை
முன்னரியற் றியதவத்தின் முதிர்ந்தபெரும் பேறனையான். ()

உற்றபெரும் பருணிதனா யோங்கியவேற் பிள்ளையுயர்
முற்றவத்தெய் தியவுடற்கு முதிர்ந்தபய னிதினாங்கு
மற்றிலையென் றுணர்ந்துமந்த மதிவாணர் வேண்டுதலை
யற்றமறு தூண்டுகோ லாகமிக வநுசரித்தும். (கஎ)

மூலமதைத் தமிழ்நாட்டு முற்புலவர் பற்பலரு
மேலுமச்சி லியைவித்த வெண்ணரிய பிழைகளெலாம்
சாலமிகும் பழையனவாய்த் தனிமதுரை மாநகரிற்
சீலமிகு சம்பந்த வாதீனஞ் சிராப்பள்ளி. (கஅ)

கச்சியினின் வருவித்த கருதுமுண்மைப் பிரதிகொடு
நச்சியிய லுறத்திருத்தி நன்குமேற் கோணாட்டி
மெச்சியவைந் திலக்கணத்தின் விதிவேண்டு வனவிளக்கி
யுச்சியின் மெய்ப்புலவர்கொள வுரைவிருத்தி யுதவினனே. ()

நல்லூர், மகாவித்துவசிரோமணி,

ஸ்ரீமத். ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் மாணாக்கரும்,

தஞ்சைத் திராவிடநேசப் பத்திராதிபருமாகிய

உரத்தூர், ஸ்ரீமத். கோ. வைத்தியலிங்கம்பிள்ளை.

திருவளர் சைவச் செந்நெறி தழைக்க
வரவுருக் கொண்டருள் வாதவூ ரடிகடங்
காதையை விளங்கக் கடவுண்மா முனிவரன்
மேதகு புராணமா விரித்துரைத் தருளின
னன்னது பின்ன ரரியுழு வரியெனச்
சென்னா ளேட்டிற் சிதைந்தமை திருத்துபு
முத்தமிழ்ப் புலமைசெ யெத்திறத் தோருஞ்
சித்தங் களிமிக்ச் செவ்விதி னுளங்கொளீஇப்
பதப்பொரு டெளிவுதாற் பரியப் பொருண்முதல்
விதப்படு பல்பயன் வெளிப்பட முறையே
வேண்டுழி வகைபெற விளக்கிநன் கிலக்கண
நச்சர் பூரணர் நவிற்றுரை கட்கிணை
யிச்சம யத்திது வென்றே யிசைப்பச்
சொற்றன னோருரை தொன்னெறிப் படியே
மல்லன் மிகுபொழி னல்லையி னுதித்திங்
கென்னுளங் குடிகொள் பொன்னம் பலவணும்
புண்ணிய மூர்த்திநற் புலவர்சி ரோமணி
யாதிமுச் செல்வர்பா லருந்தமிழ் பயின்றோ
னேமுறக் கற்போர்க் கெடுத்தினி துரைப்போன்
மட்டுவிற் பதிவாழ் மாகண பதிவே
ணற்றவப் பயனாய் நன்மர புதித்தோன்
கற்றவர் வியக்குங் கல்விப் பிரசங்கி
வாலுணர் வின்வழா வள்ளல்
வேலுப் பிள்ளையாம் விற்பனர் பிரானே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

உரைப்பாயிரம்.

———:o:———

மலைமுனி சொலத்தண் டமிழ்மொழி வகுத்த
வுலகுயி ரீன்ற சிலைநுதல் கொழுநன்
பதம்பணிந் தேத்தி யிதந்தரு பனுவல்க
ணம்மனோர் நற்கதி செம்மையிற் புகுமா
நவிற்றிய நல்லை நாவல ராதியாம்
புவிப்பெருங் குரவரெம் புந்திவிட் டகலாச்
செல்வர்கண் மூவரைத் திருவடி வணங்குது
நாதமூர் வாய்மை வாதவூ ரடிகள்
பொலமலி சிவனருள் புராணத்
தெளிவிரி வுரைநனி திகழ்தரற் பொருட்டே.

இத்திருவாதவூரடிகள் புராணம், அதிபரமாப்தராகிய சிவபிரான் அருளிச்செய்த வேதசிவாகமமென்னும் முதனூலிரண்டனுள் வேதத்திற் குபாங்கமாகிய பதினெண்புராணங் களுக்குட் சிறந்த காந்தபுராணத்துள்ள சங்கரசங்கிதையின் ஓர் கூறாகிய ஆலாசிய மான்மியத்தின் ஓர் பாகமாயுள்ளது. பலஅற்புதங்களினாலே சைவசமயமே மெய்ச்சமயமென்று தாபித்தருளிய உண்மைநாயன்மார்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகண் முதலிய சமயகுரவர் நால்வருட் பரம கிருபாலுவாகிய திருவாதவூரடிகளது திவ்வியசரித்திரத்தை விரித்துணர்த்துவது. தமிழிலே, அதிநுட்பமாகிய சிருங்கார வருணனைகளையுடைய காவிய நடைபற்றிவரும் புராணநடை, போலாகாது இருடிகள் வாக்காகிய சமஸ்கிருத புராணநடை பற்றிப்பெரும்பாலும் வருணனைகளும் திரிசொற்பிரயோகமு மின்றி இயற்சொற் பிரயோகமே கொண்டு, சிவபத்தியே தமக் கொருவடிவமாகிய கடவுண்மாமுனிவரால் அருளிச்செய்யப் பட்டது. சிவமூலமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரம் சிவசின்னங் களாகிய விபூதி ருத்திராக்ஷங்கள் திருவாசகம் திருக்கோவை யாரென்னும் இவைகளின் மகிமைகளை விளக்கி ஞாபகங்கூர் விப்பது. சிதம்பர ரகசியங்களை விளக்குவது. வேதாந்தத்தெளிவாகிய சிவஞானபோதம் சிவஞானசித்தியார்முதலிய சைவ சித்தாந்தசாத்திரங்கட்குப் பெரிதும் இலக்கியமாயுள்ளது. சரியைமுதலிய நான்குபாதங்களையுந் தனித்தனி விவகரிப்

பது. சிவபத்தி அடியார்பத்திகளை வளர்ப்பது சைவசித்தாந்திகட்கு நெறிகாட்டியாயுள்ளது. சிவாலயம் விக்கினேசுவராலயம் குகாலயம் முதலிய சைவாலயங்களினும், புண்ணியநதிதீரங்களினும், திருமடங்களினும், சுத்தகிருகங்களினும், வருடந்தோறும் மார்கழிமாசத்துத் திருவாதிரை அந்தமான முற்பத்துத்தினங்களினும் பெரும்பாலும் நியமமாகி அன்போடு பூசிக்கவும், வாசிக்கவும், அர்த்தஞ்சொல்லவும், கேட்கவும் படுவது. ஆதலின் அவ்வாலயங்கட் கின்றியமையாதது. ஆரம்பத்திலே, செய்யுணடையிற் சிறுவர்கள் வாசிக்கப் பழகுதற்கும் பொருள்சொல்லப்பழகுதற்குஞ் சிறந்ததென்றும், சுருங்கியதென்றும், சிறிதும் காம சிருங்கார வருணனைகள் இன்மையினாலே கற்கும் மாணாக்கர்கட்கு உள்ளத்தில் ஒரு சிறிதேனும் சிற்றின்பஞாபகம் உதிக்கச் செய்யாததென்றும், எல்லாராலும் விசேஷமாக எடுத்துக்கொள்ளப்பட்டமையின், வித்தியாசாலைவித்தியார்த்திகட்கு இன்றியமையாதது. வேறும் இன்னோரன்ன பல குணாதிசயங்களை யுடையது.

இத்துணைப்பெருஞ் சிறப்பினதாகிய இப்புராணத்திற்கு இங்குள்ள அறிஞர் சிலர் வேண்டிக்கொண்டபிரகாரம் விருத்தியுரை செய்யுமாறு கருதி, முதலில் மூலபாடங்களை ஆராயும்பொழுது, அவை, தம்மனம்போனவாறே திருத்தி அச்சிற் பதிப்பித்த புலவர்களான் மிகவும் பிறழ்ந்திருப்பக்கண்டு, மதுரைத் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் ஆதீனமுதலிய விசேஷதானங்கள் சிலவற்றினின்றும் நமதுநண்பர்கள் உபகரித்தமிகப்பழைய மூலப்பிரதிரூபங்களைக்கொண்டு ஆராய்ந்து மூலபாடங்களை உள்ளவாறு கண்டு, நஞ்சிற்றறிவிற்குத்தோன்றியபிரகாரம், பண்டையுரையாசிரியர்கள் திருவடிகளை மனமொழி மெய்களிற்றொழுது, பெரும்பான்மை பதப்பொருள் பற்றியும், சிறுபான்மை தாற்பரியப்பொருண் முதலியபற்றியும், ஒரு தொடர்ப்பொருளை அதனை விளக்குதற்கேற்ற மற்றொருதொடரான் ஓரோவழியமைத்தும். சிலவற்றை விரித்தும், சிலவற்றைச் சுருக்கியும், சிலவற்றை விரிவஞ்சி விரியாதொழிந்தும், இன்னோரன்ன தொன்னெறிமரபொடும், விருத்தியுரையிது வேண்டினமென்க.

திருச்சிற்றம்பலம்.

இங்ஙனம்,
ம. க. வே.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாதவூரடிகள் புராணம்.

மூலமும் உரையும்.

காப்பு.

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

இதன்பொருள்: மால் பவள வரையில் நிலவு எறிப்பது போல் பரந்த நீற்று அழகு - பெரிய பவளமலையின்கண்ணே சந்திரிகை பிரகாசிப்பதுபோலச் செம்பவளத் திருமேனியிலே பரவப்பூசிய வெண்மையாகிய விபூதியினது கோலமானது,—மாது பச்சு உடம்பில் திவள - உமையம்மையினது பசுமையாகிய திருமேனியிலே துவளாநிற்ப,—உடன் நின்று ஆடிய பரமன் சிறுவனை - அவ்வம்மையுடனின்று திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமானுடைய திருக்குமாரரை,—தவள மா மருப்பு ஒன்று ஒடித்து ஒருகரத்தில் தரித்து - வெண்மையாகிய பெரிய ஒரு திருக்கொம்பை முரித்து ஒரு திருக்கரத்தில் எழுத்தாணியாகக் கொண்டு,—பெரும் பாரதப் போர் உயர் கிரிப் புறத்து எழுதும் - மகாபாரதயுத்தசரித்திரத்தை உயர்ந்த மேருகிரியாகிய எட்டின்கண் ணெழுதியருளிய,—கவளமா களிற்றின் திருமுகம் படைத்த கடவுளை - கவளவுணவையுடைய கரிய களிற்றியானையினது திருமுகத்தையுடைய விநாயகக்கடவுளை,—நினைந்து - யாமீண்டெடுத்துக்கொண்ட இலக்கியம் இடையூறின்றி இனிது முடியும்பொருட்டு மனத்தினாலே தியானித்து,—கைதொழுவாம் - கைகளினாலே அஞ்சலிசெய்வாம் என்றவாறு.

யாமென்னுந் தோன்றா எழுவாய் "எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி, யவ்விய னிலையல் செவ்விதென்ப" என்பதனால்வருவிக்கப்பட்

டது. நீற்றழகென்னுஞ் சொற்பிரயோகத்திற் கேற்ப நீற்றின தழகெனு ஆறாவதன் பொருள்படப் பொருளுரைப்பினும், மேல்வருந் திவளுதல் வினைக்கு அந்நீறல்லது வினைமுதல் பிறிதொன்றின்மையின், அழகையு டைய நீறென்பதே கருத்தாகக்கொள்க. ஆடியவென்னும் பெயரெச்சங் காலவழுவமைதி; விடமுண்டருளியவழிக் கைலைக்கணிகழ்ந்த திருநடன மெனக்கொண்டு வழாநிலையென் றுரைப்பினு மமையும். போரெழுதுங் கடவுளென முடிக்க. போர் ஆகுபெயர். நினைந்து கைதொழுவாமெனவே, இனம்பற்றி வாக்காற்றுதித்தலும் ஈண்டுக் கொள்ளப்படும். மூத்தமகன் மாட்டுத்தந்தைக்கும் இளையமகன்மாட்டுத் தாய்க்கும் அன்புமிகுமென்னும் உலகியல்புபற்றிச் சேட்டபுத்திரராகிய விநாயகக்கடவுளைப் பரமன்சிறுவ னென்றார். அது "முன்னீன்ற தநயர்பாற் றந்தையருண் முழுதிருத்தப், பின்னீன்ற தநயர்பாற் றாயுவக்கும் பெரிதென்பார்" என்னும் உபதேச காண்டச் செய்யுளானும் "மூத்தமக னிடத்தார்வ மீன்றெடுத்த பிதாமக ற்கு முதிருமாற்றால்" என்னும் பார்க்கவபுராணச் செய்யுளானு மறிக. இக்கருத்துப்பற்றியன்றே ஆசிரியர் இளையமகற்கு வணக்கங்கூறுமிடத்துத் தாயைவிதந்து "மங்கையுமை கண்குளிர வந்துலவுகின்றதாள்" எனக் கூறியதூஉமென்க. கவளவுணவு வாய்கொண்டவளவுணவு. ஈண்டுக் கவள மென்றது பாசஞானத்தோ டொருங்கெண்ணப்படும் பசுஞானத்தை. அது 'தறுகட்பாசக் கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணையென்னும், வெள்ளமதம் பொழிசித்தி வேழ" மென்பதனானுமுண ர்க. பாசஞானமாவது: வேதமுதலிய சொற்பிரபஞ்சமும் நிலமுதனாத மீறாகிய பொருட்பிரபஞ்சமும் பற்றி நிகழுஞ் சுட்டுணர்வாகிய ஏகதேச ஞானமாம். பசுஞானமாவது: ஆன்மா தற்சொரூபமே அறியமாட்டாது, மேற்கூறிய இருவகைப் பிரபஞ்சங்களினும் மூத்தனாகிய தான் மேற்பட்ட தென்னுஞ் செருக்காற் பதியைப்போல நானும் பிரமமாவேனெனத் தன் னைக் கடிதின் மதிக்க வருஞ் சிவசமவாத ஞானமாம். அது "வேதசாத்திர மிருதி புராணகலை ஞானம் விரும்ப சவை வைகரியா தித்திறங்கண் மேலா நாதமுடி வானவெல்லாம் பாசஞான நணுகியான் மாவிவைகீழ்நாடலாலே, காதலினா லான்பிரம மென்னுஞானங் கருதுபசுஞானம்" என்பதனானறிக. மங்கல மொழிமுதல் வகுத்துக் கூறவேண்டுதலிற் பவளமால்வரையெனவும். விபூதி சமயசாதனத் திருவருட் சின்னமாகலின் அதுவாயிலாகச் சமயக் கடவுளைக் கூறுதல் ஈண்டைச் சமயநிலைக் கியைபுடைத்தென்னுங் கருத் தாற் பரந்தநீற்றழகு பச்சுடம்பிற் றிவள எனவும், பசுநூலாகிய பாரதசரித் திரத்தைக் கொம்பைமுரித்துத் தாமே மலைமீதெழுதிய கடவுள் இச்சிவ புராணத்தை யாங் கூறுதற்கருள் செய்வரென்பது சொல்லவும் வேண்டு மோவென்பார் அதுதோன்றப் பாரதப்பெரும்போர் மருப்பொன்றொடி த்துக் கிரிப்புறத் தெழுதுங் கடவுளெனவுங்கூறினார். இன்னும் பவளமால் வரையி னிலவெறிப்பதுபோற் பரந்தநீற்றழகு என்பதனான் யோகவடிவ

மும், பச்சுடம்பிற் றிவளமா துடனின் றுடிய என்பதனாற் போகவடிவ
மும் குறிக்கப்படுமாகலின், தமக்கென ஓர் வடிவமுமின்றி ஆன்மாக்கள்
பொருட் டிவ்வடிவங்களைத் தாமேகொண்டருளும் பரமகருணாநிதியாகிய
சிவபெருமானுடைய திருக்குமாரராகலின், அவர், தந்தை குணமே மைந்
தற்கு மிகும் என்பதுபற்றி யாம் ஈண்டெடுத்துக்கொண்ட இவ்விலக்கியம்
இடையூறின்றி இனிது முடியும்பொருட் டொருதலையான் அநுக்கிரகஞ்
செய்வரென்ப தினிதுவிளக்கிய, பவளமால்வரையி னிலவெறிப்பதுபோற்
பரந்தநீற் றழகுபச்சுடம்பிற், றிவளமா துடனின் றுடியபரமன் சிறுவன்
என்றாரெனக் கோடலுமாம். கயமுகனைக் கொல்லும்பொருட்டு முரித்த
கொம்பை ஈண்டுப் பாரதமெழுதும்பொருட்டு முரித்ததென்றது புராண
பேதம் பற்றியென்க. இந்நூலின்கண் மேல்வரும்மலைவுகளும் இங்ஙனமே
பெரும்பான்மையும் புராணபேதம்பற்றியே வருமென்ப துய்த்துணர்ந்து
கோடற்கு இஃதீண்டுமுதற் கண்வைக்கப்பட்டது. "எதிலாக்கற்ப மெண்
ணில சென்றன, வாதலா லிக்கதையு மனந்தமாம் பேதமாகும்" "வேத
மொடு தந்திரமு மவற்றின்சார்பு மிருதிகளும் பிறநூலும் வேறுவேறா,
வோதிடுமெண் டத்தியற்கை மலைவோவென்றா லுண்மைதெரிந் திடிற்படை
ப்பு முலப்பில்பேத, மாதலினா லவ்வவற்றின் றிரிபுநாடி யறிந்தவுனக்கீண்
டுண்மை யதுவேசொற்றாம்" என்பனவற்றாற் 'புராணபேத மின்னதென்ப
தினிதுவிளங்கும். இங்ஙனமே சிவாகமங்கள் தம்முண் மலைவனவற்றிற்
கும் பெரும்பான்மையும் ஆகமபேதத்தின்மேல் வைத்தே சமாதானஞ்செய்
யப்படும். அது "மற்றையமாதங்களொரு நான்கும் வழுவவற்று, ளுற்றிடு
நற்காலங்களும்" என்னும் சைவசமயநெறிக் குறளுரையானும், "பலவாஞ்
சிருட்டி பகராகமமும், பலவிதமாய்த் தோன்றுமெனப் பார்." என்னுங்
குறள் முதலியவற்றானு முய்த்துணர்க. இனி இதற்கிங்ஙனமன்றி ஒடித்
துயர் தவளமா மருப்பொன்றொருகரத்திற் றரித்துப் பெரும்பாரதப்போர்
கிரிப்புறத்தெழுதுங் கடவுளெனக் கொண்டு கூட்டிப் பொருள்கொண்டு
ஒடித்தகொம்பு துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ்செய்து மேம்பட, ஒடி
யாத மற்றைக் கொம்பிற் கம்மேம்பாடின்மையின், இதினும் அது உயர்ந்த
தென்பார் ஒடித்துயர் என்றாரென் றுரைத்தலுமொன்று. ஒடித்துயர் ஒடி
த்தலினுயர்ந்ததென்க. ஆசிரியர் தாம் ஈண்டு முதற்கட் செய்துகொண்ட
கடவுள்வாழ்த்தை இங்ஙனஞ் செய்யுளான் விளக்கியது மாணாக்கற் கறி
வுறுத்தற் பொருட்டென்க. இத்தலைச்செய்யுள் எழுசீர்க்கழிநெடி லடியா
சிரியவிருத்தம்; "கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃதழியா மர
பின தகவலாகும்" என்ப திலக்கணமாகலின். பவளவரையுந்தொக்குநிற்குந்
திருமேனியுமாகிய உவமான உவமேயங்கட்கிடையினும், நிலவெறித்தலும்
நீற்றழகுமாகிய உவமான உவமேயங்கட் கிடையினும், ஒப்பவாராது. அவ
ற்று ளோரிடத்துமாத்திரம் போலுமென்னு முவமைச்சொல் வந்தமையின்
இஃது 'ஒருவயிற்போலி' யென்னு மலங்காரமாம். ஈண்டுப் பொதுத்தன்

மையும் உவமேயமுந் தொக்கதொகையாகலின், இது விரிதொகையெ ன்னு மிரண்டனுட் 'டொகையுவமை' யின்பாற் படுமென்க

இக்காப்புச்செய்யுளின் ஈற்றடியிற் களமாகளிற்றின் றிருமுகம் படைத்தகடவுள் என்னும் பாடத்தைமாற்றிக் களமாமுகத்தின் றிருமு கம் படைத்த கடவுள் எனப் பாடங்கொள்வாருமுளர். அது ஆசிரியரது பாடமன்றென்பதற்குத் தமிழ்த்தேயமே சான்றாகலானும், பழைய ஏட்டுப் பிரதிகளில் இல்லாத பாடங்கோடல் ஆன்றோ ராசாரமன்மையானும், அது, "சித்திரமிலகுசெவ்வாய்ச் சீறடிப்புதல்வர்" என்றற்றொடக்கத்துமூ லபாடங்களைச் சித்திரவிலவுச்செவ்வாய்ச் சீறடிப்புதல்வர் என்றற்றொடக் கத்தனவாக ஆன்றோர் திருத்தாது வாளாபோதலான் அறியக்கிடத்தலா னும், "முன்னூலினில்லாப்பொருளை மொழிவாரேனு, மின்னூனிரயத்திழி ந்து" "திங்களொடு ஞாயிறன்ன வாய்மையும் ... துலைநாவன்னசமநிலை யுளப்பட, வெண்வகை யுறுப்பினவாகி." என்றற் றொடக்கத் தான்றோர் வாக்குக்களை அவரங்ஙனந் திருத்தாது வாளாபோதற்குக் காரணமென் பது நாம் ஊகித் துணர்தற்பாலதொன்றாகலானும், இன்னோரன்ன பிற வாற்றானும், பொருட்சிறப்பு முதலியன நோக்கியாதல் பிறிதொருகாரண ம்பற்றியாதல் பண்டை அருட்பெரும்புலமை ஆசிரியர்களது மூலபாடங் களைத் தத்தம் மனம்போன போக்கின்வண்ணமே புத்திபூர்வமாகப் புதுக்கி விபரீதபாடப் பிரயோகங்கோடல் இகபரமிரண்டினும் உய்தியில்குற்றமே யாமென்க. அல்லதூஉம், களமா என்பதற்கு யானையெனப் பொருள் கோடலே ஈண்டைக் கின்றியமையாததொரு விசேஷார்த்தமாமென்பது அவர்கருத்தாயின். ஆசிரியரது களமாகளிற்றின் றிருமுகமென்னும் மூல பாடத்தையே களிற்றுக் களமாவின் முகமென அந்நுவயஞ்செய்து களி ற்றியானையின் முகமெனப் பொருளுரைக்க, அவ்வர்த்தம் தானேயமையு மென்க.

சபாபதி.

வேறு.

இதந்தரு மடந்தையொ டியைந்துயி ருடம்புபோல்
விதம்படுல கங்களின் விரிந்தொளி விளங்குவார்
மதங்கமொடு துந்துபி வளங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழ லிறைஞ்சுவாம்.

இ—ள். இதம் தரு மடந்தை ஒடு இயைந்து - ஆன்மாக்கட் கின் பத்தைத்தருஞ் சிவகாமியம்மையோடுகூடி,—விதம்படு உலகங்களின் உட ம்பு உயிர்போல் விரிந்து ஒளி விளங்குவார் - பலவகைப்பட்ட உலகங்களி னெல்லாம் உடம்பின்க ணுயிர்போல வியாபித்துநின் றறிவுருவாய்விளங் குஞ் சபாநாயகரது.—மதங்கம் ஒடு துந்துபி வளம் கெழ முழங்க - மிருத ங்கத்தோடுதேவதுந்துபிகள் வளம்பொருந்த ஒலிக்க,—சிதம்பர நடம்பயில்

செழும் கழல் இறைஞ்சுவாம் - சிதம்பரத்தின்கண்ணே திருநடனஞ்செய்தருளுகின்ற செழுமையாகிய திருவடிகளை யாம் வணங்குவாம் எ-று.

ஒளிபோல விளக்கலின் அறிவை ஈண்டொளி என்றார். இயற்பெயராகவைத்துச் சோதியாய் விளங்குபவரென் றுரைப்பினு மமையும். விளங்குவாரது கழலென வியையும். விளங்குவாரென்பது வினையாலணையும் பெயர். மிருதங்கமென்னும் வடமொழி மதங்கமெனத் தற்பவமாயிற்று. மிருதங்கமுந் துந்துபியு ளடங்குமாயினும் நடனத்திற் கின்றியமையாச் சிறப்புடைமை தோன்ற அதனை ஒடுக்கொடுத்துப் பிரித்து வேறுகூறினார். துந்துபிகள் தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, கண்டக்கருவி என்பன. வளமென்றது ஈண்டு நாடகநூற் சதிவிதியை; அதற்கது செல்வம்போறலின் வளமெனப்பட்டது. பஞ்சகிருத்திய நடனவாத்தியமாகலின் அவ்விசேடம்பற்றி வளங்கெழுஎன்றார் எனினுமமையும். ஏகாரம் அசைநிலை. சிதம்பரமெனினும் ஞானாகாசமெனினு மொக்கும். போகமோக்ஷமென்னு மிரண்டனுள் மோக்ஷம் சிவத்தின்காரியமாக, ஏனைப் போகஞ் சத்தியின் காரியமாகலிற் சத்தியை இடந்தருமடந்தை யென்றும், அக்கினியுஞ் சூடும்போலத் தம்முட் பின்னமறக் கலத்தலின் இயைந்தென்றும், உடம்பெங்கும் உயிரது வியாபக முண்மைபோல உலகெங்குந் தமது வியாபக முண்மையின் உயிருடம்புபோல் விதம்படுலகங்களின் விரிந்தென்றும், அங்ஙனம் வியாபித்து நிற்பினும் அவற்றின்கட்டொடக் குண்டு சூக்கும அதிசூக்கும சித்தாந்தன்மையிற்சிறிதுந் திரிபின்றி விளங்குதலின் ஒளி விளங்குவார் என்றும், வேண்டுவார் வேண்டியாங்கீயும் வளமுடைமையிற் செழுங்கழலென்றுங் கூறினார். இது கலிவிருத்தம். "அளவடிநான்கின கலிவிருத்தம்மே" என்பதோத்தாகலின். (க)

சிவகாமியம்மை.

ஆடக சிதம்பர வணங்குமை யணங்கிலா
நாடக னனந்தசுக நன்குபுனை பங்கின
ளேடக மணம்பொருவ வெங்கணு மியைந்துளாள்
பாடக மிலங்குசிறு பங்கய மிறைஞ்சுவாம்.

இ—ள்: ஏடு அகம் மணம் பொருவ எங்கணும் இயைந்துளாள் - மலரின்கண் மணம்போல உலகெங்கும் வியாபித்துநிற்பவரும்;—அணங்கு இலா நாடகன் அனந்த சுகம் நன்குபுனை பங்கினள் - உள்ளவாறே தரிசித்த ஆன்மாக்கட்குப் பிறவித்துன்பத்தை இன்மைசெய்யுந் திருநடனத்தையுடைய சபாநாயகரது வரம்பிலின்பத்தை இனிதாக அனுபவிக்கும் (அவரது) வாமபாகத்தையுடையவரும்;—சிதம்பர ஆடக அணங்கு உமை - சிதம்பரத்தின்கணுள்ள கனகசபையிலே நிருத்தசாக்ஷியாய் நின்றருளுபவரு

மாகிய அழகையுடைய சிவகாமியம்மையினது;—பாடகம் இலங்கு சிறு பங்கயம் இறைஞ்சுவாம் - வேதமாகிய பாதகடகங்கள் விளங்குஞ் சிறிய திருவடித்தாமரைகளை யாம் வணங்குவாம் எ-று.

ஆடகம் ஆகுபெயர். ஈறுதொக்க இலாதஎன்னும் பெயரெச்சம் நாடகமென்பதன் முதனிலையாகிய நாடகமென்னுங் கருத்தாப் பெயர்கொண்டது. இலாநாடகம் இன்மையாகச்செய்த நாடகமெனப் பண்படியிற் பிறந்த பெயரெச்சம். ஏடு - பூவிதழ். அகம் ஏழனுருபு. பங்கயமென்னும் ஆகுபெயர்ப் பொருள் ஈண்டுக் 'குறிப்புருவகம்.' அனந்தசுகம் சுத்தசாட்குண்ணியங்களு ளொன்று. இதனுள் ஏடக மணம்பொருவ வெங்கணு மியைந்துளாள் என்பது பண்புபற்றிவந்த 'விரியுவமாலங்கார' மென்க. (உ)

சுப்பிரமணியக்கடவுள்.

துங்கமத கும்பவுயர் தும்பிமுகர் தம்பிசீர்
தங்குநெகி ழுஞ்சிறு சதங்கைகள் புலம்பவே
மங்கையுமை கண்குளிர வந்துலவு கின்றதா
ளங்கைமலர் கொண்டுமிகு மன்புட னிறைஞ்சுவாம்.

இ—ள்: துங்க மத உயர் கும்ப தும்பிமுகர் தம்பி - சுத்தமாகிய மதம் பில்கும் உயர்ந்த மத்தகத்தையும் யானைமுகத்தையுமுடைய விநாயகக்கடவுளுக்குத் தம்பியாகிய சுப்பிரமணியக்கடவுளது;—சீர் தங்கு நெகிழும் சிறுசதங்கைகள் புலம்ப - அழகிய சிலம்புகளும் சிறுசதங்கைகளும் சத்திக்கவும்;—மங்கை உமை கண்குளிர வந்து உலவுகின்றதாள் - நித்திய கன்னிகையாகிய உமையம்மையினது திருக்கண்கள் குளிரவும், அவர் முன் வந்துலாவிவிளையாடியருளுந்திருவடிகளை;—அங்கை மலர் கொண்டுமிகும் அன்பு உடன் இறைஞ்சுவாம் - அகங்கையிற் பூக்களைக்கொண் டருச்சித்து மிக்க அன்போடு யாம் வணங்குவாம் எ-று.

புலம்ப வந்து குளிர உலவுகின்ற தம்பிதாளெனநிரனிறையாக்கி முடிக்க. புலம்பவும் குளிரவும் வந்துலவுகின்ற தம்பிதாளென முடிப்பினுமமையும். உலாவுகின்ற எனற்பாலது உலவுகின்ற எனக்குறுகிற்று. உடன் என்னுஞ் சொல்லுருபு ஒடுவுருபின் விசேடப்பொருட்கண்வந்தது. கண் குளிர்தல் காதன்மிக நோக்கிக் களித்தல். இச்சாஞானக்கிரியைகளுள் ஒன்றாகலின் மதமென வாளாகூறாது துங்கமதமென்றும், சிவசத்திகட்கு வணக்கஞ்செய்தபின்னர் மறித்தும் விநாயகவணக்கஞ் செய்தே சுப்பிரமணிய வணக்கஞ்செய்தன் முறையாயினும், இது சுருங்கியநூலாகலின் விரிவஞ்சுவார், அவ்விநாயக வணக்கமுமாமா றொருவாறுதோன்றச் சுப்பிரமணியக் கடவுட்குப் பிறவடைகொடாது தும்பிமுகர் தம்பியென்றும், என்றுமிளையோராகலின் நெகிழுஞ் சிறுசதங்கைகள் புலம்பவென்றும்,

இளைய திருக்குமாரரது திருவடிகளாகலின் மங்கையுமை கண்குளிர வந்திலவுகின்றதாள் என்றும், தமிழ்மொழியா னூலியற்றுந் தமக்கும், அத்தமிழ்மொழிக் கதிபராகிய அகத்திய முனிவருக் கதனைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியராகிய சுப்பிரமணியக்கடவுட்குமுள்ள சீடகுருத்துவ சம்பந்தமும் விசேடவழிபாடுந்தோன்ற இறைஞ்சுவாமென் றொழியாது அங்கைமலர் கொண்டுமிகு மன்புடனிறைஞ்சுவா மென்றுங் கூறினார்.

"தும்பிமுகர்தம்பி" என்னும் பாடத்தைத் தும்பிமுகனெம்பி எனப் பாடந்தந்து அதனுள் எம்பி என்பதற்குத் தம்பி எனப் பொருளுரைத்து அது அப்பொருள் பயந்ததற்கு "எம்பியு மனுசனு மிளையோன்பெயரே" என்னும் பிங்கலந்தைச்சூத்திரப் பிரமாணமுமொன்றுகாட்டிச் சாதிப்பாருமுளர். எனக்குத் தந்தையென்னும் பொருளில் என் என்னுந் தன்மைச் சொல்லோடு தொடர்ந்து தானும் அத்தன்மையின்பாற்படும் தந்தையென்னும் முறைப்பெயர் அத்தொடர்ச்சிக்கண் அந் நிலைமொழியோடு விகாரமேற்று எந்தை என மரூஉமொழியாய் வந்தாற்போல, எனக்குத் தம்பி என்னும் பொருளில் என் என்னுந் தன்மைச்சொல்லோடு தொடர்ந்து தானும் அத்தன்மையின்பாற்படுந் தம்பி என்னும் முறைப்பெயர் அத்தொடர்ச்சிக்கண் அந்நிலைமொழியோடு விகாரமேற்று எம்பி என மரூஉமொழியாய் வந்தமையான், அது அத்தன்மையிடப் பொருடருவதல்லது படர்க்கையிடப் பொருடாராமையானும், ஈண்டுத் தன்மையிடப்பொருள்கோடல் சிறிதும் பொருந்தாமையானும், "இயற்பெயர் முன்னர்த்தந்தை முறைவரின்" "ஆதனும் பூதனுங் கூறியவியல்பொடு" என்னும் முதற் குறிப்புடைய தொல்காப்பியப் புள்ளி மயங்கியற்சூத்திர விதிபற்றி, மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின்மொழியா ததனையும் முட்டின்றுமுடித்தல் என்னும் தந்திரவுத்தியான் அத்தொடர் மரூஉமொழி என்பது அறியக்கிடத்தலானும், "நீபமலர் மாலைபுனையுந், தந்தைநம வாறுமுக வாதிநம சோதிநம தற்பரமதா, மெந்தைநம வென்றுமிளை யோய்நம குமாரநம வென்று தொழுதார்" எனவரும் இவ்வொரேசெய்யுளிற்றானே தந்தைக்கும் எந்தைக்கும் தம்முள் வேற்றுமை இனிது தெளியப்படுதல்போல, "எம்பிக்கும்மென் னன்னைதனக்கு மிறுதிக்கோ, ரம்புய்க்கும்போர் வில்லிதனக்கு மயனிற்குந், தம்பிக்கும்நம் மாண்மைதவிர்ந்தே சயநிற்கும்" எனவரும் இவ்வொரேசெய்யுளிற்றானே தம்பிக்கும் எம்பிக்கும் தம்முள் வேற்றுமை இனிது தெளியப்படுதலானும், மற்றும் இலக்கியங்களுள்ளும் தம்பி என்னும்பொருளில் எம்பிஎன்னும் சொற்பிரயோகம் யாண்டுங்காணப்படாமையானும், "எம்பியை யிங்குபெற்றே னென்னெனக் கரியதென்றான்" என்னுஞ் சீவகசிந்தாமணிச் செய்யுளில் எம்பி என்பதற்கு என்றம்பி என்றே நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையானும், பிங்கலந்தையின் வழிநூ

லாகிய சூடாமணி நிகண்டு நூலுடையார் அப்பிங்கலர் இளையோற்குப் பரி யாயப் பெயராக வைத்தோதிய எம்பி என்பதை அஃதப் பொருட்டாகாமை கண்டு, தமது சூடாமணிநிகண்டில் தம்பியின்பெயர் விகற்பங்கூறும்வழித் தாமும் எடுத்தோதாது தள்ளிவிட்டமையானும், திவாகரமுதலிய ஏனைநிக ண்டுகளினும் அவ்வாறே அப்பொருளில் அச்சொல்லை எடுத்தோதாமை யானும், இவ்வாறே தொல்காப்பியமுதலிய இலக்கணங்களோடும்பேரிலக் கியங்களோடும் மாறுபட்ட தொன்றியாது அது கொள்ளற்பாலதன்றித் தள்ளற்பாலதொன்றாகலானும், இன்னோரன்ன பிறவாற்றானும் அவர் பாடம்பொருந்தாமைகாண்க. இத்துணையுங் கடவுள்வாழ்த்து, (கூ)

தென்பொதிய மாமுனி சிறக்கவரு ளெண்ணெண்
ணின்பவிளை யாடல தெனுங்கடலு ளுயேன்
மின்பயிலு மாமதுரை மேவுதமிழ் மாறன்
றுன்பமற நல்குகதை சொல்லலுறு கின்றேன்.

இ—ள்: தென்பொதிய மாமுனி சிறக்க - தெற்கின்கணுள்ள பொ தியமலை வாசராகிய அகத்தியமகாமுனிவர் வாயிலாக உலகம் படிமுறை யானேகேட்டு முத்தியடைய,—அருள் - சுப்பிரமணியக்கடவுள் அம்முனி வர்க்குத் திருவாய்மலர்ந் தருளிய,—எண் எண் இன்ப விளையாடலது எனும் கடலுள் - இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடன் முதல் வன்னியுங் கிணறு மிலிங்கமு மழைத்த திருவிளையாடலீறாக மதுரைச் சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய நிரதிசய வின்பந்தரும் அறுபத்துநான்கு திருவிளை யாடல்களை யுடையதாகிய ஆலாசிய மான்மியமென்னுஞ் சமுத்திரத்தி னுள்ளே,—மின்பயில் உ - மீனாக்ஷியம்மை வலப்பாகத்திற் பொருந்துஞ் சோமசுந்தரக்கடவுளானவர்,—மா - நரிப்பரிகளை,—மதுரை மேவுதமிழ் மாறன் துன்பம் அற நல்குகதை - மதுரையாகிய இராசதானியிலே அரசு வீற்றிருந்த அரிமர்த்தனபாண்டியனது பிறவித்துன்பம் பற்றற அவ்வரச னுக்குக் கொடுத்தருளிய திருவிளையாடலை,—நாயேன் சொல்லலுறுகின் றேன் - புழுத்த நாயினுங்கடையேனாகிய தமியேன் தமிழ்மொழியிற் பத் தியரூபமாகக் கூறத்தொடங்கினேன். எ-று.

இரட்டித்துக் கூறும்வழி எண்ணெட்டெனை வருமொழி யியல்பாகற் பாலது எண்ணெண்ணென மரீஇயிற்று; "தம்மியல்கிளப்பிற் றம்முற்றும் வரூஉ, மெண்ணின்றுகுதி யுளப்படப்பிறவு, மன்னவையெல்லா மருஉ வின் பாத்திய, புணரிய னிலையிடை யுணரத்தோன்றா" என்னும் அதிகா ரப் புறனடையாற் கொள்க. ஒருவன் பெறும்பேறுக ளெவற்றினுஞ் சிறந் தமையின் முத்தி சிறப்பெனப்பட்டது. அருளென்னும் இறந்தகாலவினைத் தொகை விளையாடலதென்னும் வினைக்குறிப்பு முற்றின்பகுதியோடு முடி ந்தது. மின்-பெண். அது "மின்பாலன்ப, ரானவரடியார்" என ஆசிரியர்

கூறுமாற்றானும், "மின்னே யுனக்கு மிகு கற்புடை மீனுமொவ்வாள்" எனப் பிறர்கூறுமாற்றானு மறிக. உ-சிவன். அது "ஆலுக்கணிகலம் வெண்டலைமாலை" என்பதனானு மறிக. இனி மின்பயிலு மா என்பதற்கு மின்னல்போலுங் குதிரை என்பாருமுளர். அப்பொருட்கு, நல்கென்னும் வினைக்கு வினைமுதல் வருவித்துரைக்க வேண்டுதலின், அது அத்துணைச் சிறப்பின்றென்க. அருள் என்னும்வினைக்குச் சுப்பிரமணியக்கடவுள் என்னும் வினைமுதல் ஈண்டு வருவிக்கப்பட்டவா றென்னையெனின், அது சொல்லில்வழிய தாகலான் உய்த்துணர்ந்து வினைமுதல் வருவிக்கப்பட்டது. சொல்லுள்வழி அச்சொற்கு அநாவசியகமான பொருள்கூறிக் கழித்து, ஆண்டவசியமான வினைமுதன் முதலியன வருவித்தல் குற்றமாமென்பது, "சொல்லில் வழிய துய்த்தலெனமறுக்க" எனச் சேனாவரையர் கூறியவாற்றானறிக. முனிசிறக்க முனியாற்சிறக்க. மாஎன்பது ஈண்டுக்கதைத் தொடர்பாற் பாய்மாவை யுணர்த்திநின்றது. கதைப்பரப்புச்சொற்பொருளாழம் அரும்பொருட்கிடக்கை முதலியவற்றாற் பேதமின்மையின் அம்முதனூல் கடலாக வருவகஞ் செய்யப்பட்டது. சுப்பிரமணியக்கடவுள் அகத்தியமுனிவருக்கு மதுரைச் சோமசுந்தரக் கடவுளது திருவிளையாடல் அறுபத்துநான்கையும் திருவாய் மலர்ந்தருளினா ரென்பது "அத்தலத்தனைய மூவகைச்சிறப்பு மளவிலா வுயிர்க்கெலாங்கருணை, வைத்தவன்செய்த திருவிளையாட்டும் வரையுரங்கிளிய வேலெடுத்த, வித்தகனெனக்கு விளம்பியவாறே விளம்புவ னுமக்கெனவந்த, வுத்தம முனிவர் யாவருங் கேட்க வுணர்த்துவான் கடலெலா முண்டான்" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானறிக. இது வழிகூறியவாறு. ஈண்டுக் குதிரை கொடுத்த திருவிளையாடலைக் கூறுவேனென்ற வாசிரியர் பின்னர் மண்சுமந்த திருவிளையாடலையுங்கூறியது மிகைபடக் கூறலாம் பிறவெனின். அற்றன்று. மண்சுமந்த திருவிளையாடல் ஈண்டுக்குதிரைகொடுத்த திருவிளையாடலினொழிபாகலினென்க. அற்றேல், ஏனை மந்திரிச் சருக்கம், திருப்பெருந்துறைச்சருக்கம்முதலியனவோவெனின், அவை நுதலியபொருளாகலின் ஈண்டைக் கெய்தாமையின் அது கடாவன்றென்க. நுதலியபொருள் திருவாதவூரடிகளது சரித்திரம். அதனை வருஞ்செய்யுளிற் காண்க. இதனுள் விளையாடலதெனுங்கடலு லென்புழி எனுமென்னும் மாட்டேற்றுச்சொல் விரிந்துவந்தமையின், இது 'விரியுருவகாலங்கார'மென்க. (௯)

அற்புத னிருந்தருள் பெருந்துறை யடைந்தே
சிற்பர முணர்ந்துதிரு வாசக முரைப்பார்
முற்பக லருந்தவ முயன்றுபெறு மன்பா
லுற்பவ மொழிந்தமை மொழிந்திட ரொழிப்பாம்.

இ—ள்: அற்புதன் இருந்தருள் பெருந்துறை அடைந்து - ஞானமே திருமேனியாகவுடைய ஜனவன்னாதசுவாமி எழுந்தருளி யிருக்கப்பெ

ற்ற திருப்பெருந்துறையென்னும் ஸ்தலத்தை யடைந்து ஞானோபதேசம் பெற்று,—சித்பரம் உணர்ந்து திருவாசகம் உரைப்பார் - சூக்குமசித்தாகிய சிவத்தைத் திருவருளானறிந்து திருவாசக மருளிச்செய்பவராகிய திருவாதவூரடிகள்.—முன்பகல் அரும் தவம் முயன்று பெறும் அன்பால் - பூர்வசன்மங்களிலே அரிய சிவபுண்ணியங்களைச் செய்து பெற்ற விசேட சிவபத்திவாயிலாக,—உற்பவம் ஒழிந்தமை மொழிந்து - பிறவியொழிந்துய்ந்த சரித்திரத்தைப் புராணமாகப்பாடி,—இடர் ஒழிப்பாம் - நாமும் நமது பிறவித்துன்பத்தை நீக்கிக்கொள்வாம் எ-று.

படிமுறையானன்றி இவ்வொருபிறப்பிற் செய்த தவந்தானே அமையாதென்ப துணர்த்துதற்கு முற்பகலென விசேடிக்கப்பட்டது. அது, "பாழ்ச்செய்விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக், கீழ்ச்செய்தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத், தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்றலையா, லாட்செய் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே." என்னுந் திருவாக்கானுமறிக. முற்பகல் பின்மொழியாகுபெயர். தவமெனவாளாகூறாது அருந்தவமென்றார் பதிபுண்ணியங்களென் றறிவித்தற்கென்க. ஈண்டுப் பதிபுண்ணியங்களென்றது சரியை கிரியா யோகங்களை. இவை சுவர்க்காதிபுவனபோகங்களைப் பயந்து விரைவின்மீளப் பிறவியினுறுத்தும் பசுபுண்ணியங்களாகிய ஏனைத்தவங்கள் கன்மயோகங்கண் முதலியனபோலன்றி முறையானே சாலோகமுதலிய பதமுத்திகளைப் பயந்து முடிவின்கணெவ்வாற்றானும் ஞானம்வாயிலாகச் சாயுச்சியமாகிய பரமுத்தியைப் பயந்தேவிடும் முத்திசாதனங்களாமென்பதறிக. அது 'தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள் சாந்தி விரதங் கன்ம யோகங்கள் சரித்தோ, ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோ, ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா மொடுங்கும்போ தரன்முனிலா தொழியினுற்பவித்து, ஞானநெறி யடைந்தடைவர் சிவனையங்கு நாதனை முன்னிற்கி னனுதவர்நற்றோளே" "சுருதிவழியொழுகினவர் சுவர்க்கத்தா பாகமநூற், சரியை கிரியாயோகர் சாலோக சாமீப, வுருவவமை வினராக வுதவுதுமெம் முடனுகும், பெருகியஞானிகளெம்மைப் பெற்றார்போக் கற்றாரே" என்பனவற்றானறிக. திருப்பெருந்துறையி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு ஜனவன்னாத ரென்பது அபிஷேகத்திருநாமம். இது ஆலாசியமான்மியத்திற் கண்டது. இனி இவருக்கு அபிஷேகத்திருநாமம் ஆன்மநாதரென்பது கன்னபாரம்பரையென்க. நுதலியபொருள் கூறியவாறு. (௫)

கொண்டலனை கண்டனருள் கொண்டுதமிழ் பாடித்
தொண்டுபடு மன்பர்செயல் சொன்னநெறி தன்னால்
வண்டமிழ் தெரிந்தவர்கள் மற்றெனுரை குற்ற
முண்டெனினு நன்கிதென வுள்ளுவர்க ளெள்ளார்.

இ—ள்: கொண்டல் அன கண்டன் அருள் கொண்டு தமிழ் பாடி - முகில்போலுங் கரிய திருக்கண்டத்தையுடைய கைலாசபதியினது திருவருள்பெற்றுத் தமிழ்வேதமாகிய திருவாசகத்தைப்பாடி,—தொண்டுபடும் அன்பர் செயல் சொன்ன நெறி தன்னல் - அடிமைத்திறம்பூண்ட திருவாதவூரடிகளது திவ்வியசரித்திரத்தைத் தமியேன் புராணமாகக்கூறியமுறைமையினல்,—என் உரை குற்றம் உண்டு எனினும் - எனது இந்நூலின்கட் குற்றமுளதாயினும்,—வண் தமிழ் தெரிந்தவர்கள் இது நன்கு என உள்ளுவர்கள் - வளவிய தமிழ்நூல்களை ஓதியுணர்ந்த கவிஞர் இது குணமுடையதேயாமென்று நன்குமதிப்பர்,—எள்ளார் - அஃதொழிந்திகழார் எ-று.

உவமவுருபு இடைக்குறைந்து நின்றது. தமிழ் இருவழியும் இனிமை. அது "தமிழ்தழிய சாயலவர்" என்பதனுனுமறிக. அது இனிமையையுடைய பாஷையையுணர்த்தி ஆகுபெயராய்நின்றது. வளமென்றது ஈண்டுச் சொற்சுவை பொருட்சுவைகளை. மற்று அசை. உம்மை ஐயவும்மை. உரை கருவியாகுபெயர். குற்றம் சொற்குற்றம் பொருட்குற்றம் முதலியன. இந்நூல் குற்றமுடையதாயினும், அடிமைத்திறத்தோடு மெய்யன்பு மொருங்குடைய திருவாதவூரடிகளது திவ்வியசரித்திரத்தைக் கூறுங்குணமுடைமைபற்றிச் சான்றோர் கைக்கொள்வர் என்பதாம். "ஈசனுக்கன்பில்லா ரடியவர்க் கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார், பேசுவதென் னறிவிலாப் பிணங்களைநா மிணங்கிற் பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ, யாசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட் டவர் கருமமுன்கருமமாகச்செய்து, கூசிமொழிந்தருண் ஞானக்குறியினின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித்திரியே" "மறைநான்கும் பயின்றொழுகி யிட்டிகளும்பலவியற்றிமல்லன்ஞாலத், திறவாதபுகழ்படைத்து மீசனிடத்தன்பிலரை யெண்ணுதுள்ளம், புறமோதிக் கொலைபயின்று மதுமாந்துங் கொடும்பாவப் புலையரேனு, மறவாணன் றிருவடிக்கீ ழன்பினரே லவரெம்மை யடிமைகொள்வார்" என்பனவற்றானும் மெய்யன்பு மடிமைத்திறமு மொருங்குடைய சிவபத்திமான்களது விசேடமும், அவையில்லாதார திழிவு மினிது விளங்குதல்காண்க. அவையடக்கங் கூறியவாறு. அவையடக்கம் நூல்செய்தபின்னர்ச் செயப்படுவதொன்றாகலிற் சொன்னநெறி தன்னல் என இறந்தகாலத்தாற் கூறினர். (கூ)

இந்தவள நற்கதை யியம்பினர் நயந்தே
சிந்தையி னினைப்பவர் செவிப்புல நிறைப்போர்
புந்திமகி ழப்புவி புரப்பருடல் விட்டா
லந்தவுல கந்தனி லரன்சபையில் வாழ்வார்.

இ—ள்: இந்தவள நல் கதை நயந்து இயம்பினர் - இந்த வளவிய நல்ல சிவபுராணத்தை அன்புகூர்ந்து வாசிப்பவர் பொருள் சொல்பவர்க

ளும்,— செவிப்புலம் நிறைப்போர் - செவிமடுப்பவர்களும்,—சிந்தையில் நினைப்பவர் - மனத்தாற் சிந்திப்பவர்களும்,—புந்தி மகிழப் புவி புரப்பர் - இம்மைக்கண் மனமகிழப் பூமியைப் பாதுகாப்பர்.—உடல் விட்டால் அந்த உலகத்தினில் அரன் சபையில் வாழ்வார் - தேகநீக்கத்தின்கண் அந்தச்சிவலோகத்திலே சிவசந்நிதியில் வாழ்வார்கள் எ-று.

நயந்தென்பதை ஏனையிடத்துங்கூட்டுக. பின்னர் உடல் விட்டால் என்பதனுன் முன்னர் இம்மைக்கண் என்பது பெற்றும். சுட்டிரண்டனுட் பின்னையது பண்டறிசுட்டு. செவிப்புலம் செவியாகிய இடம். பயன் கூறியவாறு. "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு, மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்" என்பவாகலின், இவையனைத்தும் பாயிரமே யாமென்க. (எ)

பாயிரமுற்றிற்று.

உ

மந்திரிச்சருக்கம்.

முக்கணொரு நான்குபுய வைந்துமுக முன்னோன்
சொக்கனரு ணன்மைபெறு தொன்மைதிகழ் நன்னா
டக்கடு விடத்தையர னுக்கருள்வ தென்றே
மைக்கடலில் வைகலொழி வைகைவள நாடு.

இ—ள்: முக்கண் - சோமசூரியாக்கினிகளாகிய மூன்றுதிருக்கண்களும்,— ஒரு நான்கு புயம் - ஒப்பற்ற நான்கு திருப்புயங்களும்,—ஐந்துமுக முன்னோன் சொக்கன் - ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதமென்னு மைந்து திருமுகங்களுமுள்ள முதல்வராகிய சொக்கநாத சுவாமியினது,—அருள் நன்மைபெறு தொன்மை திகழ் நல் நாடு - திருவருளாகிய நன்மையைப்பெறும் பழமைவிளங்காநின்ற நல்லநாடாவது,—அக்கடுவிடத்தை அரனுக்கு அருள்வது என்று - அந்தக் கொடிய ஆலகாலவிஷத்தைச் சிவபெருமானுக்கு உணவாகக் கொடுத்ததென்று வெறுத்து,—மைக்கடலில் வைகல் ஒழி வைகை வளநாடு - கரிய சமுத்திரமாகிய தன்னுயகனிடத்துச் சென்று தங்குதலொழிந்த வைகைநதி பிரவாகிக்கும் பாண்டிவள நாடேயாம் எ-று.

அக்கடுவிடமென்பது கொடுமையான் எல்லாரானும் முன்னரே அறியப்பட்ட அவ்விடமென்னுங் கருத்திற்றாகலின், அகரவிடைச்சொற் பண்டறிசுட்டு., நாடிரண்டுந் தனித்தனி எழுவாயும் பயனிலையுமாதற் கேற்பன வாய்த் தடுமாறுதல். "செய்யுண்மருங்கினும் வழங்கியன்மருங்கினும்" என்னும் அதிகாரப்புறனடையாற்கொள்க. வருஞ்செய்யுளினினுமீதொக்கும்.

றும் அதிகாரப் புறனடையாற் கொள்க. வருஞ்செய்யுளினுமீதொக்கும். இடையாய காலத்தன்றிப் படைப்புக்காலந்தொட்டுச் செல்வமுதலிய நல்லநாட்டமைதிக ளாறனையும் ஒருங்குடைய நாடென்பது விளக்குவார் தொன்மைதிகழ் நன்னாடென்றும், பாற்கடல்கொடுத்த நஞ்சின்பொருட்டுப் பெயர்ச்சார்புபற்றிக் கருங்கடலாகிய தன்னையகனோடு சங்கமியாத விசேடமுடைய நதி என்பார் அக்கடு விடத்தை யரனுக்கருள்வதென்றே மைக்கடலில் வைகலொழி வைகை என்றுங்கூறினார். நதியைப் பெண்பாற்படுத்துக்கூறுதல் வடமொழிவழக்கு. அறுவகைநாட்டமைதிகளாவன: செல்வம், விளைநிலம், செங்கோன்மை, நோயின்மை, வளமுடைமை, குறும்பின்மை என்பன. வளம் ஆகரங்களிற் படுவனவும் வயலினும் தண்டலையினும் விளைவனவுமாம். முக்கணொரு நான்குபுய வைந்துமுக மென்பன முரண்டொடை. ஈண்டாசிரியர் தங்குறிப்பை நதிமேலேற்றிக் கூறுதலின் "இது பெயர்பொருட்டற் குறிப்பேற்ற"மென்னு மலங்காரமென்க. (க)

நீண்டகயி லைக்கிறை நிகழ்த்தவரு ளாலே
பூண்டமுனி மெய்த்தமிழ் புகன்றதிரு நாடு
மூண்டபகை செற்றுலக முற்றுமர சாளும்
பாண்டிய னலங்குலவு பாண்டிவள நாடு.

இ—ள்: நீண்ட கயிலைக்குஇறை அருளால் மெய்த் தமிழ் நிகழ்த்த- நெடிய கைலாசகிரிக்குத் தலைவராகிய ஸ்ரீகண்ட பரமசிவனானவர் உலகங் கடைத்தேறல் வேண்டுமென்னுந் திருவருளினாலே மெய்ம்மையாகிய தமிழ்மொழிக் கிலக்கணத்தைப் போதித்தருள,—பூண்டமுனி புகன்ற திருநாடு - அதனைக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்துகொண்ட அகத்தியமகாமுனிவர் அதனை நன்மாணாக்கர்களுக்குக் கற்பித்துப் பரப்பிய நாடாவது,—மூண்ட பகை செற்று உலகம் முற்றும் அரசாளும் - முயன்றுவந்த பகைவரைக்கொன்று உலகமுழுவதையு மரசுசெய்த,—பாண்டியன் நலம் குலவு பாண்டி வளநாடு - சோமசுந்தர பாண்டியரது நன்மை எஞ்ஞான்றும் விளங்காநின்ற பாண்டிவளநாடேயாம் எ-று.

கயிலை போலி. கைலை முக்கியஸ்தானமாகலின் அதுபற்றிக் கைலைக்குத் தலைவரென்றார். தமிழ் இருமடி ஆகுபெயர். நலம் நீதிமுதலியன. தமிழ்மொழிக்கருத்தா அகத்தியமுனிவரும் பிறிதுபாடையும் வேறுசமயக் கடவுளரும் என்பார் மதங்களை மறுத்தற்பொருட்டுக் கயிலைக்கிறை நிகழ்த்த என்றும், உலகிற்கு அவரதருளுடனுள்ளதாகலின். உலகமெஞ்ஞான்றுள்ளதோ அத்தமிழ்மொழியு மஞ்ஞான்றுள்ளதென அதன்றொன்மைவிளக்குவார் நிகழ்த்தவென்றொழியாது அருளால் என்றும், கேட்டமாத்திரையி னமையாது சிந்தித்துத் தெளிந்துகொண்டமை தோன்றப் பூண்ட

முனி என்றும், ஏனைய மொழிகள்போலன்றித் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும், மகத்தியல்கும்பத் தகத்தியமுனிவனும் பிறரும் முச்சங்கமிரீஇ ஆராய்ந்து வழூஉக்களைத் தர்க்கஞ்செய்து கொண்ட சிறப்புடைமைதோன்ற மெய்த்தமிழென்றும், உலகமுற்று மரசாளுதல் பசுபதிக்கன்றி நரபதிகட்கேலாமையின் அப்பசுபதியை உலகமுற்று மரசாளும் பாண்டியனென விசேடித்துங்கூறினர். (உ)

வேறு.

மேவுமூர் வளம்பலவு மிகுந்துளநா டதனினல்ம்
பாவுமூர் பழமறைதே ரந்தணர்கள் பயின்றுளவூர்
தாவுமூர் விடையேறி தங்கியவூ ரங்குறையுந்
தேவரூ ரினுமேன்மை சிறந்ததிரு வாதவூர்.

இ—ள்: வளம் பலவும் மேவும் ஊர் மிகுந்துள நாடு அதனின் - பலவளங்களும் பொருந்திய ஊர்கண் மிகப்பெற்றுள்ள அப்பாண்டிநாட்டின்கண்ணே,—நலம் பாவும் ஊர்—பலதிற நன்மைகளும் மிக்கவூரும்,— பழ மறை தேர் அந்தணர்கள் பயின்றுள ஊர் - பழையவேதங்களை அத்தியயனஞ்செய்யும் பிராமணர்கள் மிக வசிக்கப்பெற்றவூரும்,—தாவும் ஊர் விடையேறி தங்கிய ஊர் - தாவுகின்ற விட்டுணுவாகிய இடபத்தை வாகனமாகக்கொண் டிவர்ந்தருளுஞ் சிவபெருமான் எழுந்தருளியிருக்கப்பெற்ற ஊருமாயுள்ளது,—அங்கு உறையுந் தேவர் ஊரினும் மேன்மை சிறந்ததிரு வாதவூர் - அங்கே வசிக்குந் தேவர்களது அமராவதியினும் மகிமை சிறந்துள்ள திருவாதவூரானது எ-று.

விட்டுணுவாகிய விடையென்பது போதரத் தாவுமூர் விடை என விசேடிக்கப்பட்டது. தாவும் விடை ஊர்விடை எனத் தனித்தனிமுடிக்க. தாவுதல்வினைக்கு உலகமும் ஊருதல்வினைக்குக் கலுழனுமாகிய செயப்படுபொருள்களை வருவித்துரைக்க. ஏறி பெயர். அங்கெனறது திருவாதவூரை. அதன் விசேடம்பற்றித் தேவர்கள் அங்கேவசித்தலின் அது அத்தல புராணத்துட்காண்க. ஐந்தனுருபு உறழ்பொருட்கண்வந்தது. பலவளமென்றது நாடுபடுதிரவிய முதலிய ஐவகைத்திரவியங்களையும். இது தரவு கொச்சகக்கலிப்பா; "தரவே தரவிணை தாழிசை தாமுஞ், சிலவும் பலவுஞ் சிறந்து மயங்கியு, மற்றும் விகற்பம் பலவா வருகவுங், கொச்சகமென்னுங் குறியின வாகும்" என்றாராகலின். (௩)

அந்நகரின் மறையோரி லருள்புனைமாத் தியர்குலத்திற்
றன்னிகரில் சைவநெறித் தலைவனவன் றனித்தேவி
மின்னனையா டிருவயிற்றின் மென்கொடிபங் கினனருளாற்
றென்னவன்செங் கோன்முதல்வர் திருவவ தாரஞ்செய்தார்.

இ—ள்: அந்நகரில் - அந்தத்திருவாதவூரிலே,—மறையோரில் - பிராமணவருணத்திலே,—அருள்புனை மாத்தியர் குலத்தில் - பாண்டியர்களது அருளைப்பெறும் ஆமாத்தியரது குடியிலே,—தன் நிகரில் சைவநெறித்தலைவன் - தனக்கு நிகரில்லாத சைவசமயத்தை மேற்கொள்ளும் தலைவராகிய சம்புபாதாசிரயர் என்னும் ஒருவருளர்,—அவன் தனித் தேவி மின் அனையாள் திருவயிற்றில் - அவருக்கு அவரது ஒப்பற்ற மனைவியாராகிய மின்போலும் சிவஞானவதியாரது திருவயிற்றினின்றும்,—மென்கொடி பங்கினன் அருளால் - உமாசமேதராகிய சிவபெருமானுடைய திருவருளினாலே.—தென்னவன் செங்கோன் முதல்வர் திருவவதாரஞ் செய்தார் - அரிமர்த்தனபாண்டியனது செங்கோலை நடத்தும் முதன்மந்திரியாகுமோர் சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார் எ-று.

அமாத்தியர் மாத்தியரெனத் தலைக்குறை. அமாத்தியர் சூழ்ச்சித்துணைவர்; கூடவிருப்பவரென்பது பொருள். குலம்—குடி. அது "சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறு மாதமிலி நாயேனை" என்பதனானுமறிக. தன்னென்றது சைவத்தை. உளன் என்னும் பயனிலை அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது. "எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி, யவ்விய னிலையல் செவ்விதென்ப" என்னுஞ் சூத்திரத்து மொழிந்தபொருளோடொன்ற வவ்வயின் மொழியா ததனையு முட்டின்று முடித்தலென்பதனாற் கொள்க. சைவநெறித் தலைவனென்பதனைத் தலைச்சைவன் என விகுதி பிரித்துக்கூட்டி, ஆதிசைவரெனப் பொருள்கோடலு மொன்று. சைவர் அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்தியசைவர்என எழுவகையர். அவருள் அநாதிசைவராவார்சதாசிவமூர்த்தி. ஆதிசைவராவார்சிருட்டியாரம்பத்திலேஅவ்வநாதிசைவரது சத்தியோசாத முதலிய பஞ்சவத்திரங்களினின்றும் தோன்றிய கௌசிகர். காசிபர், பாரத்துவாசர். கௌதமர், அகத்தியர் என்னும் பஞ்சரிஷி கோத்திரத்துப் பிறந்த சிவப்பிராமணர். மகாசைவராவார் பிரமாமுகத்திற் றோன்றிய வைதிகப்பிராமணருள்ளே சிவதீக்ஷைபெற்றவர். அநுசைவராவார்சிவதீக்ஷைபெற்றக்ஷத்திரியரும், வைசியருமாம். அவாந்தர சைவராவார் சிவதீக்ஷைபெற்ற சூத்திரர். பிரவரசைவராவார் சிவதீக்ஷைபெற்ற அநுலோமர். அந்தியசைவராவார் சிவதீக்ஷைபெற்ற மற்றையோர். அது "அரிய சதாசிவனென்போ னநாதிசைவ னவன்பா லவதரித்த சிவமறையோ ராதிசைவ ரிவர்பா, லுரியசிவ தீக்கைபெற்ற விப்பிரர்மா சைவருயர்ந்தவர சன்வணிக னநுசைவ ராவார், பெரியகுவ லைப்புயத்தோ னவாந்தரசைவன் சீர் பெறுசவனன் னாதியநுலோமர் பிரவரராம், விரியவனிமிசையொழிந்தோ ரந்தியசை வத்தோர் விரிந்திடுமேழ் சைவவித மிவையென நூல் விளம்பும்" என்பதனானுமறிக. சைவர் சிவனைவழிபடுவோர். நெறி சன்மார்க்கம். மென்கொடி 'உருவகம்'. அவதாரம்-இறங்குதல். பாண்டிய

ர்களுக்குப் பரம்பரையானே சூழ்ச்சித்துணையாய் அவரோடுகூடவிருக்குங் குடி என்பார் அருள்புனை மாத்தியர் குலம் என்றும், கல்வி, அறிவு, ஒழுக் கங்களாற் சிறந்த ஆதிசைவரென்பார், சைவநெறித் தலைவன் என்றும், நற் குண நற்செய்கைகளையுடைய அழகிற்சிறந்த சதித்துவரத்தினம் என்பார் தனித்தேவி மின்னனையாள் என்றும், புண்ணியலோகங்களாகிய மேலுல கங்களினின்றுஞ் சிவாஞ்ஞையினாற் பூமியில் வந்தார் என்பார் மென்கொ டிபங்கினனருளாற் றிருவவதாரஞ்செய்தார் என்றுங்கூறினர். மேலுலகங் களிலிருந்து சிவாஞ்ஞையினாற் பூமியில் வந்தார் என்பது 'அந்தரர்தம் பதி யினிழிந் தருள்புனைமாத் தியர்குலத்தில் வந்தருளி' 'வாமுடன் புவியிற் றோன்று மறையவர்க்கிறைவர்' என முன்னர் வருவனவற்றானு முணர்க.

வேறு.

பொய்ம்மையா முலகின்மாயப் பொங்கிரு ளகலவன்னோர்
தம்மையாழ் நரகிற்றள்ளுஞ் சமயதா ரகைமழுங்க
வெம்மையா ளுடையானன்ப ரிதயதா மரைகளெல்லாஞ்
செம்மையாய் மலரஞான தினகர ருதயஞ்செய்தார்.

இ—ள்: பொய்ம்மை ஆம் உலகின் மாயப் பொங்கு இருள் அகல - பொய்ப்பொருளாகிய உலகின்கணுள்ள அஞ்ஞானமாகிய மிக்க அந்தகார மானது ஓட்டெடுக்கவும்,—அன்னோர் தம்மை ஆழ் நரகில் தள்ளும் சமய தாரகை மழுங்க - அவ்வந்தகாரத்து ளகப்பட்ட நம்போலிகளை ஆழ்ந்தநர கமாகிய படுகுழியின்கண் வீழ்த்துக் கெடுக்கும் உலோகாயதம் முதலிய பர சமயங்களாகிய நட்சத்திரங்கள் ஒளிமழுங்கவும்,—எம்மை ஆள் உடையான் அன்பர் இதய தாமரைகள் எல்லாம் செம்மையாய் மலர - பசுக்களாகிய எம்மை அநாதியே அடிமையாகவுடைய பதியாகிய சிவபெருமானது அடி யார்களுடைய இருதயகமலங்களெல்லாஞ் செவ்வையாய் விகசிக்கவும்,— ஞான தினகரர் உதயஞ்செய்தார் - அச்சற்புத்திரராகிய ஞானசூரியர் உதி த்தார் எ-று.

மாயம் ஆகுபெயர். அகல, மழுங்க, மலர என்னுஞ்செயவெனெச்சங் கள் காரியப்பொருள். இன்னதன்மைத்தென ஒருவராலுங் கூறப்படா மையின் அவிச்சையை இருளாகவும், பொருணிச்சயஞ்செய்யுங் கருவியா காமையிற் சமயங்களை நட்சத்திரங்களாகவும், அந்தரியாகபூசையில் அன்ப ரிருதயங்களை, நிலமுதற் சத்திதத்துவமீறாகிய முப்பத்தைந்தினையுங் கிழங்குமுதற் பீசமீறாகிய அவயவங்களாகவுடைய திப்பிய கமலங்களாக ஆகமங்கோடலின், அதுபற்றி அன்பரிதயங்களைத் தாமரைகளாகவும், புற விருளோட்டுதன் முதலிய இம்முத்தொழில்செய்யு மேனைச் சூரியனலா காத அகவிருளோட்டுதன் முதலிய இம்முத்தொழில்களை இப்புதல்வர் செய்தலின் அவரை ஞானசூரியராகவும், அதற்கேற்பப் பிறத்தலை உதயஞ்

செய்தலாகவு முருவகஞ் செய்யப்பட்டவாறு. அந்தரியாகபூசையிலே அன்பரிருதயம் கமலமாகச் சிவாகமங்கோடலை "நாட்டமிதயந்தானு நாபியினிலடியாய் ஞாலமுத றத்துவத்தா லெண்விரனு ளத்தாய், மூட்டுமோகினி சுத்த வித்தைமலரெட்டாய் முழுவிதழெட் டக்கரங்கண் முறைமையினிலுடைத்தாய்க், காட்டுகம லாசனமேல்" என்பதனு றிக. மாயப் பொங்கிரு ளகலுதலும் சமயதாரகை மழுங்குதலும் இதயதாமரைக ளலர்தலும் ஞான்தினகரரது உதயத்தாலியைதலின், இது 'இயைபுருவகாலங்கார'மென்க இவ்விடங்களின் ஆகியவென்னும் மாட்டேற்றுச் சொற்றொக்கு நின்றமையின், இது தொகையுருவகத்தின் பாற்படும். (௫)

மருவாத நெறிபூண்ட மத்தனெனும் புத்தனுடன்
பெருவாது வென்றுசிவன் பெருநாம மிகவளர
வொருவாத பிறவியிற்சென் றொருநாம முறாதவர்க்குத்
திருவாத வூரரெனுந் திருநாமந் தரித்தார்கள்.

இ—ள்: சிவன் பெரு நாமம் மிக வளர - சிவமூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரம் உலகெங்குந் தழைத்தோங்க,—மருவாதநெறிபூண்ட மத்தன் எனும் புத்தன் உடன் பெருவாது வென்று - அளவைகட்குச் சிறிதும்பொருந்தாத பொய்ச்சமயாநுசாரத்தை மேற்கொண்ட உன்மத்தனாகிய புத்த குருவுடனே பெரியவாதஞ்செய்து வென்று,—ஒருவாத பிறவியில்சென்று ஒருநாமம் உறாதவர்க்கு - விட்டுநீங்காத பிறவியின்கட் பிரவேசித்து இனி ஒருநாமதேயமும் பொருந்தப் பெறாத அப்புதல்வருக்கு,—திருவாதவூரர் எனும் திருநாமம் தரித்தார்கள் - ஞாதியர் திருவாதவூரரென்னுந் திருநாமகரணஞ்செய்தனர் எ-று.

செய்தென்பது சொல்லெச்சம். மத்தம் - மயக்கம். அளவை - தருக்கம். விட்டுநீங்காமை எளிதினீங்காமை. பௌத்தம் நாத்திகமதங்களுளொன்றாகலின் அதனை மருவாதநெறி என்றும், அம்மத குருவாகலின் மத்தனெனும் புத்தனென்றும், சமயவாதமாகலிற் பெருவாதென்றும், சிவமூலமந்திரமாகலிற் பெருநாமமென்றும், அநாதியே சகசித்ததாகலின் ஒருவாத பிறவி என்றும், இனிப் பரமுத்தியடைவராதலிற் பிறவியிற்சென் றொருநாம முறாதவர் என்றுங்கூறினர். திருவாதவூரரென்பது கருவூரர் என்புழிப்போல ஊரால்வருபெயர். இவர் பின்னர்ப் பரமதகண்டனம் சுவமதஸ்தாபனம் முதலிய அற்புதங்களைச் செய்து சமயகுரவரானமை பற்றித் திருவாதவூரடிகளென விசேடிக்கப் பட்டார். திருவாதபுரேசர் வாதவூரிறைவர் என்றற்றொடக்கத்தனவு மிக்கருத்தே பற்றிவந்தன. மாணிக்கவாசகரென்பது திருப்பெருந்துறையிலே பரமாசாரியரா லிடப்பட்ட தீக்ஷா நாமம். அதன்பொருளுங் காரணமும் "பழுதிலாதசொன் மணியினைப் பத்திசெய்தன்பு, முழுதுமாகிய வடத்திறன் முறைதொடுத்தலங்க, லழு

துசாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந்தையர், வழுவிலாதபேர் மாணிக்கவாச கனென்றார்" "பின்னுமவர்கன வின்கண்மன்றுணடம் பிரியாதபெருமான் வந்து, முன்னவனைப் பெருந்துறையிற் குருந்தடியி லாட்கொண்ட முறை யினானு, மின்னிசைவண் டமிழ் மணிபோற் பாடுங்கா [illegible]த்தானு மியா மன்றிட்ட, மன்னியபேர் மாணிக்க வாசகனென் றழைமின்கள் வருவ னென்றார்" என்பனவற்றானறிக. இச்சற்புத்திரருக்குப் பூர்வசன்மத் திரு நாமம் குடமுழாநந்தீசானென்பது; அது "குடமுழாநந்தீசனை மணிவாசகனாக த்தந்தாய்" என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தானுமறிக. நாமகர ணங் கூறியவாறு. (கூ)

வேறு.

தவமெனும் பெரிய வித்துட் டங்கியே யங்கு ரித்துப்
பவமெனும் பங்க நீங்கிப் பயிலருட் குருத்துண் டாகி
யவமெனுங் களைக ணீங்கி யாக்குவோ னருளா லுண்மைச்
சிவமெனும் விளைவுண் டாக வளர்ந்தது தெய்வச் சாலி

இ—ள்: தவம் எனும் பெரிய வித்துள் தங்கி அங்குரித்து - தவமெ ன்று சிறப்பித்துச் சொல்லப்படும் பெரிய வித்தினுள்ளே தங்கியிருந்து முளைத்து,— பவம் எனும்பங்கம் நீங்கி-பிறவியாகிய சேற்றினின்று நீங்கி,— பயில் அருள் குருத்து உண்டாகி - பொருந்திய திருவருளாகிய குருத்து வளரப்பெற்று,— அவம் எனும் களைகள் நீங்கி - நானுவித விக்கினங்களா கிய களைகளினின்று நீங்கி,— ஆக்குவோன் அருளால் - தம்மை உண்டாக் குபவராகிய சிவபெருமானென்னும் உழவரது திருவருளினாலே,— உண் மைச் சிவம் எனும் விளைவு உண்டாக - பரமுத்தியென்று விதந்து கூறத் தக்கும் விளைவு பின்னர் உளதாவதாக,— தெய்வச்சாலி வளர்ந்தது - அச்சற் புத்திரராகிய தெய்வத்தன்மையையுடைய செந்நெற்பயிரானது வளர்ந் தது எ-று.

அங்குரித்தல் - முளைத்தல். சிவம் - முத்தி. சாலி ஆகுபெயர். இது போற் சிறந்ததும் பெரும்பயன்றருவதும் பிறிதோர் வித்தின்மையினாலே தவவித்தென்னாது தவமெனும்பெரியவித்தெனவும், பரமுத்தியென்பதறி வித்தற்குச் சிவமென்னாது உண்மைச் சிவமெனவும் விசேடிக்கப்பட்டன. சிவவிளைவாகிய காரியத்திற் கின்றியமையாத காரணமாகலின் நிஷ்காமிய புண்ணியமாகிய தவத்தை வித்தாகவும், அதனை வித்தென்றதற்கேற்பப் பிறத்தலை முளைத்தலாகவும், அப்பிறவி கன்மபேதங்களைப் புசிப்பித்துத் தொலைப்பித்தற்குக் கருவியாகலின், அதனைச் சேறாகவும், மேலும் மேலு ம் புதிதுபுதிதாகப் பதிந்து விரிதலினாலே திருவருளைத் தளிராகவும் தேகாதிப்பிரபஞ்சமாகிய பொய்ப்பொருளை மெய்ப்பொருளெனக்கொண் டோம்புவது காலக்கழிவாய்க் கேடுபயத்தலின் அவற்றைக் களைகளாகவும்,

தனுகரண புவனபோகங்களைக் கூட்டி முடிப்பவராகலிற் சிவபெருமானை உழவராகவும், அத்தவித்து முதலிய சாதனங்களாற் சாதித்துப் பெறும் மெய்ப்பயனாகலிற் பரமுத்தியை உண்மைச் சிவவிளைவாகவும், ஏனைவிளைவுகள்போலன்றி இது சிவவிளைவாதலானும், அவ்விளைவை யுறுவது அச்சற்புத்திரராகலானும் அவரைத் தெய்வத்தன்மைபொருந்திய நெற்பயிராகவும் உருவகஞ்செய்தார். தங்கியிருத்தல் உரியகாலம் வருந்துணையு முளையாதடங்கியிருத்தல். நானாவித விக்கினங்களை "காலைமலமொடு கடும்பகற் பசிநிசி. வேலைநித்திரை யாத்திரைபிழைத்தும்" என்னும் திருவாக்கின் கட்காண்க. இது அறுசீர்க்கழிநெடி லடியாசிரியவிருத்தம். (எ)

வேறு.

தேனினொடு கரும்பினெழுஞ் செழும்பாகு முக்கனியு
மானினறும் பாலுமுட னளவியுளங் களிகூர
வீனமிகும் பலயோனிப் பிறவியெனும் பசிதீர
ஞானவமு துண்பார்க்கு நயந்தமுது நுகர்வித்தார்.

இ—ள்: ஈனம் மிகும் பல யோனிப் பிறவி எனும் பசிதீர ஞான அமுது உண்பார்க்கு - இழிவுமிகுந்த பலயோனிகளிற் சென்று பிறக்கும் பிறவியாகிய பெரும்பசி நீங்கச் சிவஞானமாகிய திருவமுதை இனி உண்பவராகிய அப்புதல்வருக்கு,—தேனின் ஒடு கரும்பின் எழும் செழும்பாகும்- தேனும் கரும்பினின்று மூளதாகுஞ் செழுமைபொருந்திய சருக்கரையும்;- முக்கனியும் - மா வாழை பலா என்னுமிவற்றின் முப்பழங்களும்,—ஆனின் நறும் பாலும் உடன் அளவி - பசுவினது நல்ல பாலுமாகிய இவற்றை அன்னத்துடன்கலந்து,—உளம் களிகூர - மனங்களிப்புமிக,—நயந்து - விரும்பி,—அமுதுநுகர்வித்தார் - அன்னப்பிராசனஞ்செய்வித்தனர் எ—று. ஒடு எண்ணொடு; மேலுஞ் சென்றியைந்தது. அமுதென முன்னர் வருகின்றமையின் உடனளவியென வாளாகூறினார். பின்னும் பின்னும்பிறத்தலிற் பிறவி பசியாகவும், அப்பிறப்பை யொழிப்பதொன்றாகலின் ஞானம் அமுதாகவும் உருவகஞ்செய்யப்பட்டன. அன்னப்பிராசனங்கூறியவாறு. அன்னப்பிராசனம்-சோற்றையுண்பித்தல். (அ)

காயமுட னுயிர்முயலுங் கருமமெலாம் பரனருளாற்
றாயமனத் துணர்ந்துவினைத் தொகையெழுதி நாடோறு
மாயதுயர் சுகமளிக்கும் யமன்கணக்கி லரும்பாவத்
தீயசிகை யில்லார்க்குச் சிறந்தசிகை வருவித்தார்.

இ—ள்: காயம் உடன் உயிர் முயலும் கருமம் எலாம் - உடம்போடுயிர் கூடிநின்று செய்யுங் கன்மபேதங்களையெல்லாம்,—பரன் அருளால் தூய மனத்து உணர்ந்து - சிவபெருமானது திருவருளினாலே சுத்தமாகிய

மனத்திலைநிந்து,—வினைத் தொகை நாள் தோறும் எழுதி - அக்கன்ம பேதங்களாகிய நல்வினை தீவினைகளின் றொகைகளை நாடோறுமெழுதி.—ஆய சுகம் துயர் (நாள்தோறும்) அளிக்கும் யமன் கணக்கில் - அந்நல்வினை தீவினைகளுக்கீடாகப் பொருந்திய இன்பத்துன்பங்களை நாடோறும் அநுபவிக்கும்படி கொடுக்கும் யமனது அக்கிரசந்தானி என்னும் கணக்கேட்டிலே,—அரும் பாவத் தீய சிகை இல்லார்க்கு - அநுபவித்தற்கரிய கொடிய தீவினையை எழுதிய பிடி இல்லாத அப்புதல்வருக்கு,—சிறந்த சிகை வருவித்தார்-அழகிய குடுமிவைத்தலாகிய சௌளகன்மஞ் செய்வித்தனர். எ-று.

எழுதி அளிக்கும் யமன்கணக்கென முடிக்க. சிகை முன்னையது ஈண்டேட்டுப்பிடி; சேடமெனினுமாம். உடம்போடு கூடியவழியல்லது உயிர் ஒருகன்மமுஞ் செய்யமாட்டாமையிற் காயமுட னுயிர்முயலுங் கருமமென்றும், அக்கன்மபேதங்களையெல்லாஞ் சிற்சத்திபதிந்தவழி யல்லது தன்னியல்பானறிதல் கூடாமையிற் கருமமெலாம் பரனருளாலுணர்ந்தென்றும், அங்ஙன முணர்ந்தவற்றை ஒருபாற்கோடாது நடுவுநிலைமையோடு நின்று நிகழ்த்துமனமாகலிற் றூயமனமென்றும், வினைத்திறம் பலவாகலின் வினைத்தொகை என்றும், இன்னவினைப்பயனை இன்னகாலத்து இன்ன ஆன்மா இன்னபிரகாரம் அநுபவிக்கவேண்டுமென்னும் ஆதிசங்கற்பமொன்றுண்மையின், அதன்வழியொழுகுங் கணக்கை எழுதிநாடோறுமாயதுயர் சுகமளிக்கும் யமன்கணக்கென்றும், அப்புதல்வர் பூர்வசன்மங்களிலே பாவசேடமில்லாதவராகலின் யமன்கணக்கிலரும்பாவத் தீயசிகையில்லார்க்கென்றும், உரியகாலத்து விதிப்படி செய்தமைதோன்றச் சிறந்த சிகை என்றுங் கூறினர். சௌளகன்மங் கூறியவாறு. (கூ)

குவலயமங் கையைநீடு கோலஞ்செய் தரும்பொன்னு
நவமணியுங் குவைசெய்து நன்குடன்மங் கலநாளிற்
றவமணமுந் திருநீற்றின் றன்மணமுந் தவறுத
சிவமணமும் பெறக்கல்விச் செல்விமணம் புணர்வித்தார்.

இ—ள்: குவலய மங்கையை நீடு கோலஞ் செய்து - பூமிதேவியை மிக அலங்கரித்து,—அரும் பொன்னும் நவமணியும் குவை செய்து - அரிய பொன்னையும் நவரத்தினங்களையுங் குவித்து,—மங்கல நாளில் - ஓர் சுபதினத்திலே,—தவமணமும் - தவசம்பந்தமும்,—திரு நீற்றின் மணமும் - விபூதி சம்பந்தமும்,—தவறுத சிவமணமும் பெற - தவறற்ற சிவசம்பந்தமுமாகிய புத்திரர்களைப் பெறும்பொருட்டு,—நன்கு உடன் கல்விச் செல்வி மணம் புணர்வித்தார் - நன்மையோடு அப்புதல்வருக்குக் கல்வியாகிய பெண்ணை விவாகஞ் செய்வித்தனர். எ-று.

சிவம் ஈண்டும் முத்தி. கல்விச்செல்வி மணம்புணர்தல் ஒருபாத்தியாயர்வாயிலாக வித்தியாரம்பஞ்செய்தல். பொன்னையும் நவரத்தினங்களையுங்

குவித்தல் அதன்மீது முதற்கண் நிலவெழுத்தெழுதுதற் பொருட்டென்க. அது தண்டுலத்தின்மேலெழுதுந் தற்கால வழக்கானுமறிக. மற்றைஉலோகங்களுட் சிறந்ததாகலின் அரும்பொன்னென்றும், பரமுத்தியென்ப தறிவித்தற்குத் தவறாத சிவமென்றும். கல்விச்செல்வி மணம்புணர்தல் ஏனை நாமகரணம் முதலியனபோலன்றித் திருவாசகம் வாயிலாகத் தவமணமுதலிய மூன்றையுந் தமக்கும் பிறர்க்குந்தரும் விசேடநன்மைத்தாகலின் நன்குடன் என்றுங் கூறினர். குவலயமங்கை கல்விச்செல்வியென்பன- வடமொழிவழக்கு. வித்தியாரம்பங்கூறியவாறு. மணம் புணர்வித்தாரென்னும் வினையுரிமையால் வித்தியாரம்பத்தை விவாகமாகவும், கல்வியை மணமகளாகவும் உருவகஞ்செய்து, அவ்வுருவகத்தானும். பெறவென்னும் வினையுரிமையானும் கல்விப்பயன்களாகிய தவமணமுதலிய மூன்றையும் புத்திரர்களாக உருவகஞ்செய்தமையின், இது 'சிறப்புருவக' மென்னு மலங்காரமென்க. மணமென்னும் சொல்லும் பொருளும் பலகால் வருதலிற் 'சொற்பொருட்பின்வருநிலை' யென்னு மலங்காரமும். இவையிரண்டுங் கலந்துவருதலிற் 'சங்கீரண' மென்னுமலங்காரமும் இச்செய்யுளின் வந்தமை காண்க.

(க0)

இதுநூன்மற் றல்லதுநூ லில்லையெனு மறுசமய
விதநூலுந் தலநூலும் விரிந்தபுரா தனநூலும்
பொதுநூலென் றுலகனைத்தும் புகழ்மறைநூ லுஞ்சைவ
முதுநூலுந் தரிப்பார்க்கு முந்நூலுந் தரித்தார்கள்.

இ—ள்: இது நூல் அல்லது மற்று நூல் இல்லை எனும் அறு சமயவிதநூலும் - இதுவே மெய்ச்சமயநூல் இதுவல்லது மெய்ச்சமயநூல் பிறிதில்லையென்று தனித்தனி வாதிக்கும் அறுசமயநூலையும்,—தல நூலும் - தலபுராணநூலையும்,—விரிந்த புராதன நூலும் - பரந்த பதினெண்புராண நூலையும்.—பொது நூல் என்று உலகு அனைத்தும் புகழ் மறை நூலும் - சாமானியசுருதியென்று உயர்ந்தோரனைவருந் துதிக்கும் வேதநூலையும்,—முது சைவ நூலுந் தரிப்பார்க்கு - விசேடசுருதியாகிய பழைய சிவாகமநூலையுங் கற்று அவைகளின் பொருளை மனத்திலே நன்கு தரித்துக்கொள்பவராகிய அப்புதல்வருக்கு,—முந்நூலும் தரித்தார்கள் - முப்புரிநூலைத் தரித்தலாகிய உபநயனமுஞ்செய்தார்கள். எ-று.

இதுவேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது. மற்று பிறிதென்னும்பொருட்டு. முந்நூலுமென்னுமும்மை இறந்ததுதழீஇயிற்று. புராதனம் பழமை புராணமென்பன ஒருபொருட்கிளவி. சமயநூன்முதலிய ஐந்தும் ஒன்றற்கொன் றிம்முறையானே சிறந்தமையின், அம்முறையே முறையாகவைக்கப்பட்டன. அறுசமயவிதங்களை "அறுவகைச் சமயத்தோர்க்கும்" என்பதன் பொழிப்புரையிற் காண்க. உபநய

னங்கூறியவாறு. இது சொற்பொருட்பின் வருநிலை. இறுதிக்கணுள்ள மூந் நூலைத் தலைப்பெய்தவழிச் சொற்பின்வருநிலையுமாம். சொற்பின்வருநிலையைப் பதாவிருத்தியலங்காரமெனவும். பொருட்பின்வருநிலையை அர்த்தாவிருத்தியலங்காரமெனவும், சொற்பொருட்பின்வருநிலையை உபயாவிருத்தியலங்காரமெனவும் வடநூலார் கூறுப. (கக)

மிக்கலையுஞ் செழுநீரு மதிக்கலையு மிலைக்குமவ
ரக்கலையுந் தோளர்புலி யதட்கலையர் நல்லருளா
லொக்கலையும் பிறக்கலையு மொழித்திடுமா கமகலையு
மெக்கலையுங் கற்றுணர்ந்தா ரீரெட்டாண் டெல்லையினில்.

இ—ள்: மிக்கு அலையும் செழு நீரும் மதிக்கலையும் மிலைக்குமவர் - நதிகளுட்சிறந்து. அலைமறிகின்ற செழுமையாகிய கங்காசலத்தையும் ஒரு கலையாகிய பிறையையுந் தரித்தவரும்.—அக்கு அலையும் தோளர் - பிரமவிஷ்ணுக்களது எலும்புமணிமாலைகளசையுந் திருப்புயங்களையுடையவரும்.—புலி அதள் கலையர் நல் அருளால் - புலித்தோலாகிய வஸ்திரத்தையுடையவருமாகிய சிவபெருமானது நல்ல திருவருளினாலே,—ஒக்கலையும் பிறக்கலையும் ஒழித்திடும் ஆகம கலையும் - தேகபந்துக்களையும் சனன மரணங்களையும் பக்குவான்மாக்கட்கு நீக்குஞ் சிவாகம கலைகளையும்.—எக்கலையும் - மற்று மெவ்வித கலைகளையும்.—ஈர் எட்டு ஆண்டு எல்லையினில் கற்று உணர்ந்தார் - அப்புதல்வர் பதினாறு வயசினுள்ளே கற்றுத் தெளிந்தார். எ-று.

வீடுபேற்றிற்கு முக்கிய கருவிநூலாகலின் ஆகமகலை வேறெடுத்தோதப்பட்டது. திருவருளை முன்னிட்டுநின்றோதினாராகலிற் பதினாறு வயசினுள்ளே சிவாகமமுதலிய சகலகலைகளையுஞ் சந்தேகவிபரீதமறக்கற்றுத்தெளிந்தாரென்பார் நல்லருளாலென்றார். சகலகலைகளாவன வேதம். வேதாங்கங்களாகிய சிக்ஷை. கற்பம். வியாகரணம், சந்தசு, சோதிடம், நிருத்தி, தருக்கம். தருமசாத்திரம். புராணம். மீமாஞ்சை. ஆயுர்வேதம், தனுர்வேதம், நானாதேசபாஷை. இராசநீதி முதலியன. (கஉ)

உழைக்கரனுக் கன்பாகி யுண்மையறிந் துலகமெலாம்
பிழைக்கவருட் கவிபாடும் பெரியவர்தஞ் செயலெல்லாந்
தழைத்தகலைத் தமிழ்மாறன் றக்கோர்க ளுரைக்கவறிந்
தழைத்துரிமைத் திறநல்கி யகலாநண் பாயினன்.

இ—ள்: உழைக் கரனுக்கு அன்பு ஆகி - மான்கன்றையேந்திய திருக்கரத்தையுடைய சிவபெருமானிடத் தன்புகொண்டு,—உண்மை அறிந்து - வேதசிவாகமங்களின் மெய்ப்பொருளைத் திருவருளாலுணர்ந்து,—உலகம் எலாம் பிழைக்க - எதிர்காலத் திவ்வுலகின்கணுள்ளவரெல்லாம்

கடைத்தேற,—அருள் கவி பாடும் பெரியவர் தம் செயல் எல்லாம் - அம்மெய்ப்பொருளைத் திருவாசகமாகிய அருட்பாவாகப் பாடியருளும் பெருந்தகைமையையுடைய திருவாதவூரடிகளது நற்குண நற்செய்கைகளையெல்லாம்,—தழைத்த கலைத் தமிழ் மாறன் தக்கோர்கள் உரைக்க அறிந்து - பரந்த கலைகளையுடைய தமிழைவளர்க்கும் அரிமர்த்தனபாண்டியன் ஆப்தர்களாகிய பெரியோர்கள் சொல்லக்கேட்டறிந்து,—அழைத்து - அவரைத் தன்மாட்டு வருவித்து,—உரிமைத் திறம் நல்கி - அவருக்குத் தன்னோடு உரிமைத்திறங்கள் சிலவற்றைச் செய்து,—அகலா நண்பு ஆயினன் - தான் அவரோடு பிரியாநட்பையுடையனாயினன். எ-று.

தம்மென்பது ஈண்டுக் கட்டுரைச்சுவைக்கண் வந்தது. குணஞ்செயலான் விளங்குதலின் அதனைச் செயலுளடக்கிக் கூறினர். மேல்வருவதுமது. அறுபத்துநான்கு கலைகளென்றறிவித்தற்குத் தழைத்த கலையெனவிசேடிக்கப்பட்டது. நல்கல் ஈண்டு வினைச்சொல்லாகிய வொப்புமை பற்றிச் செய்தலின் மேற்று; 'சொல்லவா வுரகதுவச' என்புழிப்போல; நூற் புறனடையாற்கொள்க. உரிமைத்திறம் நட்பாதற்கேற்பன. (கரு)

சங்கோல மிடும்பழனத் தடம்புடைசூழ் வாதவூ
ரெங்கோவின் செய்கையறிந் தியல்புடையா ரெனநாடிப்
பொங்கோத வேலைநிலம் புரந்துபெரும் பகைதுரந்து
செங்கோலை முறைநடத்துஞ் செழுந்தலைமைத் திறநல்கி.

இ—ள்: சங்கு ஓலம் இடும் பழனம் தடம் புடை சூழ் வாதவூர் எம் கோவின் செய்கை நாடி - சங்குகள் சத்திக்கின்ற வயல்களுந் தடாகங்களுந் இடங்கடோறுஞ் சூழப்பெற்ற திருவாதவூரிலே திருவவதாரஞ் செய்த நந்தலைவரது நற்குண நற்செய்கைகளைப் பாண்டியராசன் பரீக்ஷித்து,—இயல்பு உடையார் என அறிந்து - தகுதியுடையவரென்று நன்றாக அறிந்து,—பொங்கு ஓத வேலை நிலம் புரந்து - மோதரிக்கும் அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூமியைப் பாதுகாத்து,—பெரும் பகை துரந்து - பெரிய பகைவர்களை ஓட்டி,—செங்கோலை முறை நடத்தும் செழும் தலைமைத் திறம் நல்கி - தனது செங்கோலை நீதிவழுவாமற் செலுத்தும் மாட்சிமைபொருந்திய முதன்மந்திரியாய உத்தியோகத்தை அவருக்குக் கொடுத்து. எ-று

பழனந்தடம் பழனத்தடமென ஓசைபற்றி வலிந்து நின்றது; இயல்பாகவைத்துரைப்பினு மமையும். எம்மென்றது ஏனைச் சைவரையெல்லாம் உளப்படுத்தியென்க. தலைமைத்திறமென் முன்னர் வருகின்றமையின் இயல்புடையாரென வாளா கூறப்பட்டது. இது குளகம். அது 'குளகம் பலபாட்டொருவினை கொள்ளும்' என்பதனானறிக. (கசு)

வேறு.

தென்னவன் பிரம ராய னென்றருள் சிறந்த நாம
மன்னவர் மதிக்க நல்கி வையக முய்வ தாக
மின்னவ மணிப்பூ ணாடை வெண்மதிக் கவிகை தண்டு
பொன்னவிர் கவரி வேழ மளித்தனன் பொருநை நாடன்.

இ—ள்: பொருநை நாடன் - தாமிரபர்ணிநதி பிரவாகிக்கும் நாட்டையுடைய பாண்டியராசன் (அதன்பின்னரும்).—வையகம் உய்வதாக - உலகங் கடைத்தேறுவதாக,—தென்னவன் பிரமராயன் என்று அருள் சிறந்த நாமம் - தென்னவன் பிரமராயனென்றழைக்கப்படும் ஓர் சிறப்புப்பெயரை,—மன்னவர் மதிக்க நல்கி - மற்றை அரசர்களும் நன்குமதிக்கும்வண்ணம் அவருக்குக் கொடுத்து,—மின் நவ மணிப் பூண் - ஒளி பொருந்திய நவரத்தினாபரணம்,—ஆடை - பீதாம்பரம்,—வெள் மதிக்கவிகை - சந்திரன்போலும் வெண் கொற்றக்குடை,—தண்டு - முத்துச்சிவிகை,—பொன் அவிர் கவரி - பொற்காம்புவிளங்குஞ் சாமரம்,—வேழம் அளித்தனன் - யானைகளாகிய இவைகளையுங் கொடுத்து மிகவுஞ் சன்மானித்தனன். எ-று.

அருளென்னும் வினைத்தொகை வினைச்சொல்லாதலாகிய ஒப்புமை பற்றி ஈண்டழைத்தன்மேற்று. மன்னவருமென்னு முயர்வுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. பொன் விடாதஆகுபெயர். இனிப்பொன்னவிரென்பதனைப் பொன் நவிரெனப் பிரித்து, நவிர் வாளென்றுரைப்பாருமுளர். அரசன் தன்கீழ்வாழ்தலினும் இவர்கீழ் வாழ்தலேதன்னுட்டிற்குவப்பென்பதுபற்றி இவைகளைக் கொடுத்தானென்பார் வையகமுய்வதாக என்றார். தென்னவன்பிரமராயன் பாண்டியனது பிராமணவருணத்து முதலதிபதி. (கஞ)

இந்திரச் செல்வம் போல விளைந்துள வின்ப மெய்தி
மந்திரத் தலைமை பூண்ட வண்புகழ் வாத வூரர்
தந்திரத் தொகுதி சூழத் தாரகா கணங்க ளோடு
மந்தரத் திழிந்து மண்மே லமர்ந்தவெண் மதிய மொத்தார்.

இ—ள்: மந்திரத் தலைமை பூண்ட வண்புகழ் வாதவூரர் - முதன் மந்திரியாய வுத்தியோகத்தைப் பெற்ற வளவிய புகழையுடைய திருவாதவூரடிகள்,—இந்திர செல்வம் போல இயைந்துள இன்பம் எய்தி - இந்திரசம்பத்தைப்போலத் தமக்குக் கிடைத்த பெருஞ் செல்வத்தினாலே தாமநுபவித்தற்குரிய விசேஷ இன்பங்களை அநுபவித்து,—தந்திரத் தொகுதி சூழ - சேனா சமூகங்கள் சூழ, (மேலுலகத்தினின்று மவதாரஞ்செய்து விபூதியை உத்தூளனஞ்செய்த திருமேனியுடையவராய் அரசனது அத்

தானியின்கண் நடுநாயகமாக வீற்றிருத்தலால்).—தாரகா கணங்களோ டும் அந்தரத்து இழிந்து மண்மேல் அமர்ந்த வெள் மதியம் ஒத்தார் - நக்ஷத்திர சமூகங்களோடும் ஆகாயத்தினின்று மிறங்கிப் பூமியின்கண் வந்திருக்கும் வெண்மையாகிய ஒரு பூரணசந்திரனை ஒத்தனர். எ-று.

உவமையண்ட பொருட்கும் கொள்ளப்பட்டது. திருவாதவூரடிகள் இன்பத்தானும், தலைமையானும், நிறத்தானும், தந்திரத்தொகுதி சூழுத லானும், பிறவாற்றானும் பூலோகத் தமர்ந்த சந்திரனென்றளதாயின் அத னை நிகர்த்தாரென்பது கருத்து. அந்தரத்திழிந்துமண்மேலமர்தல் மதி க்கு அபூதமாகலின், 'இது அபூதவுவமாலங்கார' மென்க. அபூதம்-சம்பவி யாதது. (கசு)

பெருங்கட ஞகநீதி பெருக்கியே தருக்கு நல்கி
யிருங்கட கத்தோண் மேல்வைத் தீண்டருள் பூண்ட கோவுங்
கருங்கட நாக மெட்டுங் காளமா நாக மெட்டும்
பரங்கெட வுலக பாரம் பரித்தனர் திருத்த மிக்கார்.

இ—ள்: இரும் கடகத் தோள் மேல் வைத்து ஈண்டு அருள் பூண்ட கோவும் - பெரிய கங்கணமணிந்த புயங்களின்மீது வைத்துத் தாங்கி மி க்க சிவகாருண்ணியத்தை மேற்கொண்ட பாண்டியராசனும்.—கரும் கட நாகம் எட்டும் - கரிய மதத்தையுடைய அட்டயானைகளும்,—காளமா நாகம் எட்டும் பரம் கெட - நஞ்சையுடைய அட்டமாநாகங்களும் தாம் மேற்கொண்ட பூமிபாரத்தினின்று நீங்கியின்பமடைய,—திருத்தம் மி க்கார் - சீர்திருத்த மிகுந்த திருவாதவூரடிகள்,—பெருங்கடன் ஆக நீதி பெருக்கி - தமக்கு முக்கியகடமையாக இராசநீதியை விருத்திசெய்து,— தருக்கு நல்கி - அரசனுக்கும் பிரசைகட்கு மகிழ்ச்சியைக் கொடுத்து,— உலக பாரம் பரித்தனர் - பூமிபாரம்முழுதுந் தாமே தாங்கினர். எ-று.

உலகபாரமென முன்னர் வருகின்றமையின் வைத்தெனை வாளாகூ றினர், அரசனைத் தழீ இக்கோடற்கு நீதிபெருக்கலும், குடிகளைத் தழீஇக் கோடற்குத் தருக்கு நல்கலும் பெரும்பான்மையும் வேண்டப்பட்டன. திருத்தம் தங்கடமைகளைச் சோரவிடாமை. அதனை வருஞ்செய்யுளிற் காண்க. ஈண்டுப் புகழ்பொருள் திருவாதவூரடிகளாகலின், நீதிபெருக் கித் தருக்கு நல்குதலைக் கோவாகிய அல்பொருட்கேற்றுதல் சிறிதும் பொருந்தா தென்க. கடவுள்யானை எட்டாவன ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிர தீபம், என்பன. கடவுட்பாம்பெட்டாவன் வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபா லன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன், என்பன. தரு க்கு பிரமுதிதம் மகிழ்ச்சி என்பன ஒருபொருட் கிளவி. (கஎ)

காதலித் தறஞ்செய் வோர்க்குக் கவசமுங் கண்ணு மாகி
யேதிலர்க் கிடும்பை யாகி யிறைஞ்சினர்க் கின்ப மாகி
யாதுலர்க் கன்னை யாகி யரனடிக் கன்பு மிக்கார்
பூதலத் திறைவ னாணை பொதுவற நடத்து நாளில்.

இ—ள்: அரன் அடிக்குஅன்புமிக்கார் - சிவபெருமானுடையதிருவடிகளுக்கன்புமிகுந்த திருவாதவூரடிகள்,— காதலித்து - விருப்பங்கூர்ந்து,—அறம் செய்வோர்க்குக் கவசமும் கண்ணும் ஆகி - தருமஞ்செய்பவர்களுக்கு வச்சிரகவசமும் கண்களுமாகியும்,—ஏதிலர்க்கு இடும்பை ஆகி - அத்தருமத்துக்கும் அரசனுக்கும் பகையாயினோர்க்குத் துன்பமாகியும்,—இறைஞ்சினர்க்கு இன்பமாகி - தம்மரசனை வழிபடுகின்றவர்க்கின்பமாகியும்,—ஆதுலர்க்கு அன்னை ஆகி - ஏழைகட்கு மாதாவாகியும்,—இறைவன் ஆணை பூதலத்துப் பொது அற நடத்தும் நாளில் - அவ்வரசனது ஆஞ்ஞாசக்கரத்தைப் பூமியின்கண்ணே (அது) பலர்க்கும் பொதுமைநீங்க நடத்திவருங்காலத்தில். எ-று.

பகைவரது படைக்கலம் புக்குத் துன்பஞ்செய்யவொட்டாது தடுத்துச் சரீரத்தைப் பாதுகாக்கும் வைரச் சட்டைபோலப் பெரும் பாவிகளது விக்கினங்கள் புக்குத் துன்பஞ்செய்யவொட்டாது தடுத்துத் தருமஞ்செய்வோரைப் பாதுகாத்தலின் அறஞ்செய்வோர்க்குக் கவசமாகி என்றும், தீநெறிக்கண்வரும் ஏதங்களைக் காட்டித் தடுத்து நன்னெறிக்கட் செலுத்துங் கண்போலப் பாவநெறிக்கண் வருமேதங்களை எடுத்துக் காட்டி அதன்கட்புகவொட்டாது தடுத்துத் தருமநெறிக்கட் செலுத்துதலிற் கண்ணாகி என்றும், பகைவரைக் கண்ணோடாது தண்டித்தலின் ஏதிலர்க்கிடும்பையாகி என்றும், இராசநீதியின்வழியமைந்தொழுகுவாரை இனியசொற் செயல்கொண்டு மகிழ்வித்தலின் இறைஞ்சினர்க் கின்பமாகி என்றும், இயற்கையன்புகொண்டு வேண்டுவகொடுத் தெஞ்ஞான்றும் ஒருபெற்றியே தன்னினுந் தன்பிள்ளைகளைக் குறிக்கொண்டோம்புந் தாயைப்போல இயற்கையருள்கொண்டு வேண்டுவகொடுத் தெஞ்ஞான்று மொருபெற்றியே தம்மினும் தங்கீழ்வாழும் தரித்திரர்களைக் குறிக்கொண்டோம்புதலின் ஆதுலர்க் கன்னையாகி என்றும், இவைகளை இங்ஙனம் பிறர்க்கு நடித்துக்காட்டுதற்பொருட்டன்றி உள்ளவாறே நெஞ்சொத்தியற்றலிற் காதலித்தென்றுங் கூறினார். ஈண்டிறைஞ்சல் அரசன் சொல்வழி அடங்கி ஒழுகுதல். அறஞ்செய்வோரையும் இறைஞ்சினரையும் ஆதுலரையும் நட்பினராகவும், பாவஞ்செய்வோரைப் பகைவராகவும், கொணடொழுகினாரென்பது கருத்தென்க. ஆதுலரை ஓம்புதல் ஏலையவற்றினும் உத்தமபுருஷர்களுக்குச் சிறந்த இலக்கணமாகலின், அதனை இறுதிக்கட்டந்து கூறினார். இது ஏதுக்களோடு கூடிவந்த

'பலபொருளுருவக' மென்னு மலங்காரமென்க. அவ்வேது விளக்கிய மொழிகள் ஈண்டுத்தொக்குநின்றன. (கஅ)

பற்பல பொருளா யுள்ள பாசமு மதனை மேவி
யுற்பவ பேத மான வுடம்புயி ரொடுங்கு மாறு
மற்புத புத்தி முத்தி யளித்தரு ளாலே மேலாந்
தற்பர னடத்து மாறு முணர்ந்தனர் சைவ நூலின்.

இ—ள்: பற்பல பொருளாய் உள்ள பாசமும்—ஜநகம் தாரகம், போக்கியம் என நானுபேதமாய் விரிந்த பாசத்தையும்,—அதனை மேவி உற்பவ பேதம் ஆன உடம்பு உயிர் ஒடுங்கும் ஆறும் - அநாதியே அப்பாசத்தாற் பந்திக்கப்பட்டு நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு எண்பத்துநான்குநூறுயிர யோனிபேதமாகிய உடம்புகளோடு கூடி உயிர்கள் பிறந்து பின்னர் இறக்குந் தன்மையையும்,—மேலாம் தற்பரன் - சமயக்கடவுளரெவரினு மிக மேலாகிய சிவபெருமான்,—அருளால் - தமது கைம்மாறற்ற திருவருளினலே,—அற்புத முத்தி புத்தி அளித்து நடத்தும் ஆறும் - அவற்றுள் அபக்குவான்மாக்கட்கு இருவினைக்கீடாகத் தனுகரண புவனபோகங்களையும், பக்குவான்மாக்களுக்கு ஞானம்வாயிலாக மோக்ஷத்தையும் கொடுத்துப் பஞ்சகிருத்தியங்களையும் நடத்தியருளுந் தன்மையையும்,—சைவநூலின் உணர்ந்தனர் - திருவாதவூரடிகள் சைவாகமங்களை ஓதி, அவைகளிலே சந்தேகவிபரீதமற நன்குதெளிந்தனர். எ-று.

இன் எழனுருபு. இதனைத் திருக்கோவையாரினும், திருவள்ளுவரினும் காண்க. எடுக்குமாறெனவும் பாடம். அற்புதம் - ஞானம். புத்தி - அநுபவம். தற்பரன் ஆன்மாக்கட்குமேலானவன். நால்வகைத்தோற்றம் அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன. எழுவகைப்பிறப்பு தேவர், மனிதர், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. எண்பத்துநான்குநூறுயிரயோனி அத்திமுதல் எறும்பீறுயுள்ளவையனைத்துமாம். நால்வகைத்தோற்றம் தொகையும், எழுவகைப்பிறப்பு வகையும், எண்பத்துநான்குநூறுயிரயோனிபேதம் விரியுமென்க. பாசமானது ஆணவம், மாயை, கார்மியம், வைந்தவம், திரோதாயியெனப் பலவாறு விரிதலிற் பற்பல பொருளாயுள்ள பாசமென விசேடிக்கப்பட்டதெனினு மமையும். முன்னர் ஆகமக்கலையும் என்புழிக் கல்வி அறிவின்பொருட்டுப் பொதுவகையானும், ஈண்டு ஆன்மலாபத்தின்பொருட்டுச் சிறப்புவகையானும், சைவாகமங்களை ஓதி உணர்ந்தாரென்ப தினிதுவிளங்குதலின், இது கூறியது கூறலென்னுங் குற்றமாகாமை தெளிக. சிறப்புவகையாலுணர்தலாவது திரிபதார்த்தலக்ஷணங்களை சைவாகமத்தின் ஞானகாண்டம் பற்றியுணர்தல். (கக)

அவ்விய மனத்தி ளுலே யனைத்துரு வங்கள் கூடி
யிவ்வுயிர் பிறந்து மீள விறந்திடு மென்றி ரங்கி
வெவ்வெயில் வருத்த முற்றுர் மென்னிழல் விரும்பு மாபோ
னவ்வியு மழுவு மேந்து நம்பனுக் கன்பு மிக்கார்.

இ—ள்: இவ்வுயிர் - இந்த உயிரானது,—அவ்விய மனத்திளுலே அனைத்து உருவங்கள் கூடிப் பிறந்து மீள இறந்திடும் என்று இரங்கி - மித்தியாஞானத்தையுடைய மனங் காரணமாக எல்லாவுடம்புகளோடுங் கூடிப் பிறந்து மீள இறந்துவிடுமென்று திருவாதவூரடிகள் ஆன்மவிசாரங்கொண்டு இரங்கி,—வெவ்வெயில் வருத்தம் உற்றுர் மெல் நிழல் விரும்பு மா போல் - கொடிய வெய்யிலின்கட் சூடுண்டு வருந்தினவர் விருக்ஷத்தினது மெல்லிய நிழலை விரும்புமாறுபோலப் பிறப்பிறப்புப் பிணி மூப்புக்களாகிய இடும்பைகட்கஞ்சி,—நவ்வியும் மழுவு மேந்தும் நம்பனுக்கு அன்பு மிக்கார் - மானையும் மழுவையுந் தாங்கும் சிவபெருமானிடத்துப் பேரன்புடையராயினர். எ-று.

அவ்வியம் போலி. இரங்கி மிக்காரென முடிக்க. விரும்புமாறு விரும்புமா எனக் கடைக்குறைந்துநின்றதோர் செய்யுண்முடிபு. அவ்வியம் - பொய்; என்றது, ஈண்டு யானெனதென்னும் அகங்கார மமகாரங்களாகிய தற்போதமுனைப்பை. இவ்வுயிரென்றது மூவகையான்மாக்களுட் சகலவர்க்கத்துட்பட்ட தம்மை. மீமாம்சகமதத்தர்களாகிய தேவதாருவனத்து இருடிகள் அபிசார ஓமத்தினின்றும் எழுப்பித் தம்மைக் கொல்லும்வண்ணம் விடுத்த கொலைக்கருவிகளாகிய மான் மழு என்பனவற்றுற் கொலையுண்ணுத அதிபரமாப்தராகலின், அவரே நித்தியரும் நம்பற்பாலரென்பதும் பெறப்பட்டமையின், தமது தேகாநித்தியத்தை நீக்குதற்பொருட்டு, அந்நித்தியரிடத்தே பேரன்புசெய்தார் என்பார் நவ்வியுமழுவுமேந்து நம்பனுக்கன்புமிக்கார் என்றுர். நம்பன் பழையோனென்றுமாம், 'நிழலருமை வெய்யிறனி னின்றுலே யீசன், கழலருமை யின்னலிலே காண்'' எனப் பிறரு மிங்ஙனங் கூறுதல்காண்க. முன் பிரயோகித்த பொருட்கொப்பதோர்பொருள் பின் பிரயோகிக்கப்பட்டமையின், 'இது மறுபொருளுவமை' யென்னுமணியென்க. (உ0)

தீத்திற வினையி ளுலே சிறைப்படு முயிரை யெல்லாம்
பார்த்தன ருலக வாழ்விற் பயனிலை யென்று தேர்ந்து
கூத்தினர் தன்மை வேறு கொலம்வே றுரு மாபோ
னீத்தனர் மனத்தின் முன்போ னிகழ்த்தினர் வழுதி நீதி.

இ—ள்: தீத் திற வினையிளுலே சிறைப்படும் உயிரை எல்லாம் பார்த்தனர் - கொடிய இருவினைகளினுலே சரீரமாகிய சிறையின்கண்

ஆகப்பட்டுப் பிறந்திறந்துழலும் ஆன்மகோடிகளையெல்லாம் திருவாதவூரடிகள் உற்று நோக்கி.—உலக வாழ்வில் பயன் இலை என்று தேர்ந்து - மாயாகாரியமாகிய இந்தப் பிரபஞ்சவாழ்விலே ஒருபிரயோசனமுமில்லையென்று நன்கு தெளிந்து,—கூத்தினர் தன்மை வேறு கோலம் வேறு ஆகுமா போல் - கூத்தாடிகளது உண்மைத்தன்மைவேறு அவரது புறவேஷம் வேறாயினாற்போல.—மனத்தின் நீத்தனர் - தமதுமனத்தினின்றும் இப்பிரபஞ்சப்பற்றை முழுதும் நீக்கிவிட்டனர். (அங்ஙனம் நீக்கிய வழியும்).—வழுதி நீதி முன்போல் நிகழ்த்தினர் - பாண்டியனது இராசநீதியை முன்போலப் புறத்தே நடத்திவந்தனர். எ-று

நல்வினை தீவினை என வினைப்பகுதி இரண்டாகலின் தீத்திருவினை என்றார். திறம் கூறுபாடு. காமியமாகிய நல்வினையும் சிறைப்படுதற்குக் காரணமாதலினாலே தீவினையின்பாற் பட்டது. உண்மைத்தன்மை அவரது சுபாவவியற்கை. அவை இன்னான்மக னின்னானென்றற்றொடக்கத்தன. கோலத்தன்மை ஒத்தவேடமும் ஆடல் பாடலும் அபிநயித்தலும் முதலியன. இவையிரண்டுந் தம்முட் பெரிதும் வேறுபட்டாற்போலத் திருவாதவூரடிகளது அகமும் புறமும் பெரிதும் வேறுபட்டமையிற் கூத்தினர் செய்கைவேறு கோலம்வே றுகுமாபோ னீத்தனர் மனத்தின் முன்போ னிகழ்த்தினர் வழுதிநீதி என்றார். தம்மரசனுக்குத் தீங்குசெய்தல் வேண்டுமென்னும் சிந்தை யொருசிறிதுமின்றி அதன்கட் பற்றற்று நின்றே நடத்தினாரென்பது கருத்தாதலின், இராசநீதியை அகத்தின்கண் நீக்கிப் புறத்தே நடத்தல் உட்பகையென்னுங் குற்றமாகாமையறிக. இதுவுமவ்வணியென்க.　　　　(உக)

வரமுடன் புவியிற் றோன்று மறையவர்க் கிறைவ ருண்மை
தருமுணர் வென்னு நாலாஞ் சத்திநி பாத மெய்தி
பரமவஞ் செழுத்து மொன்றும் பராபர முணர்த்து ஞான
குருபரன் றிருத்தாள் சென்று கூடுதல் வேண்டு மென்று.

இ—ள்: வரம் உடன் புவியில் தோன்றும் மறையவர்க்கு இறைவர் - சிவாநுக்கிரகத்தினாலே இப்பூமியின்கண் வந்து அவதாரஞ்செய்த பிராமணோத்தமராகிய திருவாதவூரடிகள்,—உண்மை தரும் உணர்வு என்னும் நாலாம் சத்திநிபாதம் எய்தி - உண்மைப்பொருளைத் தவறாது தரும் மெய்யுணர்வின் காரியமாகிய நான்கு சத்திநிபாதங்களுள் இறுதிக்கண்ணதாகிய அதிதீவிர பக்குவததை அடைந்து,—பரம அஞ்சு எழுத்தும் ஒன்று ஆம் பரா பரம் உணர்த்தும் - சத்தகோடி மகாமந்திரங்களைவற்றினு மிக மேலாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமும் ஏகாக்ஷரமாம் பரமசிவத்தைப் போதிக்கும்,—ஞான குருபரன் திருத் தாள் சென்று கூடுதல்வேண்டும் என்று - வினைக் கிரியாபாத ஆசாரியரின் மேம்பட்ட ஞானாசாரியரது திரு

வடிகளை இனி ஒருதலையாக நாம் தேடிச்சென்று தலைப்படுதல் வேண்டுமென்று தம்முட் சிந்தித்து. எ-று.

என்று சொல்லலுற்றாரென வருஞ்செய்யுளின் முடிக்க. ஒடு ஒடுருபுகளின் சொல்லுருபாகிய உடனென்பது ஈண்டு ஆல் ஆனுருபுகளின் கருவிப்பொருட்கண் வந்தது. உண்மைப்பொருள் முத்தி சத்திநிபாதம் - சத்திபதிதல். சத்தி - திருவருள். நிபாதம் - பதிதல். விழுதல் என்னும் பொருளே சிறந்ததென்பர் திராவிடமகாபாடியகாரர். சத்திநிபாதம் நான்காவன: மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்பன. தீவிரதரமெனினும் அதிதீவிரமெனினு மொக்கும். அவற்றுள் மந்ததரமாவது நமக்குப் பெறுபேறாயுள்ள பதியொருவருண்டென்றறிவொழிந்திருத்தல். மந்தமாவது அப்பதியை அடைதற்கு வழி எங்ஙனமென்றாராய்தல். தீவிரமாவது அங்ஙன மாராய்ந்தறிந்த பதியை அடையும்பொருட்டு அதற்குத் தடையாயுள்ள பிரபஞ்சத்தை அகத்தான் வெறுத்துப் புறத்தாற்றழுவுதல். தீவிரதரமாவது அப்பிரபஞ்சத்தை அகம் புறமென்னு மிரண்டானும் முற்றத்துறந்து, ஞானாசாரியரொருவரையே பொருட்படுத்துத் திரிகரணங்களினானும் வழிபடுதல். மந்ததரம் வாழைத்தண்டினும், மந்தம் பச்சைவிறகினும், தீவிரம் உலர்ந்தவிறகினும், தீவிரதரம் கரியினும் நெருப்புப் பற்றுதல்போல்வனவாம். இருவினையொப்பும், ஆணவமலபரிபாகமும் உற்றவிடத்தே சத்திநிபாதமுண்டாம். சத்திநிபாதமாவது ஆன்மாவினது ஞானத்தைத் தடுக்கும் ஆணவமலசத்தி நழுவும் அவசரத்தில் முற்பிற்பாடறச் சிவத்தினது சிற்சத்திபதிந்து அவ்வான்மாவினது நித்திய ஞானக் கிரியையை விளக்குவதாம். இனிப் பஞ்சாக்ஷரமும் ஏகாக்ஷரமாமாறு வகாரத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும், அதில் யகாரமு மொடுங்குதலாம். அது, "நகரமொடு மகரமது சடந்தருகா ரணமா நாடுமவை நீங்கியிடு வகையை நவிலுதுங்கேள், வகரமதி னகரமுதல் யகரத்திற்றானே மகரமுநீங் கிடுமரிய சிகரமநுத் தன்னால், யகரலயம் வகரமுந்தான் சிகரத்தி லொடுக்க மாகும்" "மாயநட் போரையு மாயாமல மெனுமாதரையும், வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந், தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப் பின்றாயைமறந், தேயுமதே நிட்டை யென்றானெழிற் கச்சி யேகம்பனே." என்பனவற்றானறிக. இவை இங்ஙனமொடுங்க நின்ற பதியக்ஷரமாகிய சிகாரமானது, தூல, சூக்கும, காரண, மகாகாரண, மகாமநு என்னும் பஞ்சாக்ஷரபேதமைந்தனுள் இறுதிக்கண்ணதாகிய மகாமநுவென்க. இம்மகாமநுவின்பொருள் பரசிவனாகலின், அப்பரசிவனைப் பரமவஞ்செழுத்துமொன்றாம் பராபரமென்றும், அப்பராபரத்தை ஞானகுருவல்லது கிரியாகுரு போதித்தல் கூடாமையிற் பராபர முணர்த்து ஞான குருபரன் றிருத்தாள்சென்று கூடுதல் வேண்டுமென்று சிந்தித்தார் என்றுங் கூறினார். வகாரம் பரை

யக்ஷரமும், யகாரம் சிவாக்ஷரமும், மகாரம் மலவக்ஷரமும், நகாரம் திரோதாயியக்ஷரமுமாம். (௨௨)

மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின் மேவு
நற்கனி கொள்ள வேண்டி நயந்துகல் லெறிவார் போலச்
சற்குரு வுளனோ வென்று நாடுவார் தர்க்கமெல்லாஞ்
சொற்கலை ஞான சைவர் தம்முடன் சொல்ல லுற்றார்.

இ—ள்: வளம் கெழு விளவின் மேவும் நல் கனி கொள்ள வேண்டி - அயலாரது வளம்பொருந்திய விளாமரத்தின் கண்ணுள்ள நல்ல பழங்களைக் கவர உள்ளே விரும்பி,—நயந்து - அதனைப் புறத்தேமறைக்கக் கருதி,—மற்கடவிலங்கு தன்னால் கல் எறிவார் போல - அவ்விளாமரத்திருக்கும் குரங்காகிய விலங்கின்மேல்வைத்துப் பழங்களை உதிர்க்கும் பொருட்டுக் கல்லால் எறிபவர்போல,—சற்குரு உளனோ என்று நாடுவார் - திருவாதவூரடிகள் சற்காரியவாதகுரு உண்டோ என்று ஆராய்பவராகி,—தர்க்கம் எல்லாம் சொல் கலை ஞான சைவர் தம் உடன் சொல்லலுற்றார் - தருக்கங்களையெல்லாம் இலக்கணம்முதலிய நூல்களில் வல்ல ஞானசாரியர்களோடு பேசுவாராயினார். எ-று.

நாடுவார் எச்சமுற்று. நயத்தல்-மதித்தல். சொல்-இலக்கணம்; சொல்லப்படுங் கலையெனினு மமையும். இங்ஙனம் பலநாட் கழிந்ததென்பார் சொன்னதொன்றைது சொல்லலுற்றார் என்றார். இதுவுமவ்வலங்காரம். ( )

வளங்கெழு புவியி னுள்ள வாவியுங் காவுமோடி
விளங்கிசை வண்டு தண்டேன் மிகுமலர் தேடுமாபோ
லுளங்கொள நிமல னன்னூ லோதின ருண்மையெல்லா
மளந்தறி வுணர்ந்த நீரர் யாவரென் றாயு நாளில்.

இ—ள்: விளங்கு இசை வண்டு - விளங்காநிற்கும் இசையினையுடைய வண்டு,—வளம் கெழு புவியில் உள்ள வாவியும் காவும் ஓடி - வளம்பொருந்திய பூமியின்கணுள்ள தடாகங்களினுஞ் சோலைகளினும் விரைந்துபோய்,—தண் தேன் மிகு மலர் தேடு மாபோல் - தண்ணியதேன்மிக்க பூவைத் தேடுமாறுபோல,—உளம் கொள நல் நிமலன் நூல் ஓதினர் - மனங்கொள்ள நல்லசிவாகமங்களை ஓதியுணர்ந்த திருவாதவூரடிகள்,—உண்மையெல்லாம் அளந்து அறிவு உணர்ந்த நீரர் யாவர் என்று ஆயும் நாளில்- அச்சிவாகமங்களிலுள்ள மெய்ப்பொருள்களையெல்லாம் அளவைசெய் தநுபூதியினும் வைத்தறிந்த ஞானசாரியர் யாவரோ என்று இங்ஙனம் ஆராயுங்காலத்தில் எ-று.

அளவைசெய்தறிதல் தருக்கநூலுட் கூறியவாறுபற்றி ஊழான் உள்ள வாறுணர்தல். யுத்தியும் ஒருபிரமாணமாகலின் உளங்கொள என்றும், அநாதி நித்தியமாகலிற் பதி பசு பாசங்களை உண்மையென்றுங் கூறினர். ஞானாசாரியர் சிலரிடத்துச் சிவாகமப்பொருள் காணப்படினும், அவ்வளவி னமையாது அவை முழுவதும் ஒருங் கநுபூதியினும் வைத்துணர்ந்த பரம ஞானாசாரியர் ஒருவரைத் தேடினர் என்பார். வண்டு தண்டேன் மிகுமலர் தேடுமாபோ லுண்மையெல்லா மளந்தறிவுணர்ந்த சீரர் யாவரென் றுயுநாளிலென்றார். இதுவு மவ்வலங்காரமென்க. (உச)

வேறு.

மேதகு வனிதைய ரெங்கணும் வீசிய கவரி யசைந்தெழ
மாதவ முனிவர்க ளந்தணர் மாசறு கவிஞர் செறிந்திட
வேதமின் மதிகுல புங்கவ னேர்கெழு மணிமுடி யின்றிர
ளாதவன் மிசையெழ வந்தரி யாசன மதனி லிருந்தனன்.

இ—ள்: மேதகு வனிதையர் எங்கணும் வீசிய கவரி அசைந்து எழ - மேன்மைபொருந்திய நடனஸ்திரீகள் இருமருங்கினும் இரட்டுகின்ற சாமரங்கள் தாழ்ந்தெழவும்,—மாதவ முனிவர்கள் அந்தணர் மாசு அறு கவிஞர் செறிந்திட - பெரிய தவத்தையுடைய இருடிகளும் பிராமணர்களும் கசடற்ற புலவர்களும் தற்சூழவும்,—ஏர் கெழு திரள் மணி முடி இன் ஆதவன் மிசை எழ - அழகுபொருந்திய திரண்ட இரத்தினமகுடமாகிய இனிய சூரியன் சிரசிலே உதயமாகவும்,—ஏதம் இல் மதிகுல புங்கவன் வந்து - குற்றமற்ற சந்திரகுலத் தரசனாகிய அரிமர்த்தனபாண்டியன் ஒரு தினம் அத்தாணியின்கண் வந்து,—அரி ஆசனம் அதனில் இருந்தனன் - சிங்காசனத்தில் வீற்றிருந்தான் எ-று.

அசைதல்-சோர்தல். மேன்மை ஆடல் பாடல் அழகுமுதலியவற்றான் வரும் விசேடம். முடியின்றிரள் என்பதற்கு முடியுறுப் பைந்தன் கூட்டம் எனப்பொருள் கூறுவாருமுளர். இது சொன்னோக்கம்பற்றாது தம்மன நோக்கம்பற்றிக் கூறுவார் கூற்றேயாமென மறுக்க. முடிமுதல் ஆசன மீறாகிய இராசசின்ன மிருபத்தொன்றனுள் ஆதியந்தங்களினுள்ள முடியும் ஆசனமுமாகிய அவ்விரண்டனையுங் கிளந்தெடுத்தோதி, அவைவாயிலாகச் சாமரம் முதலிய ஏனையவற்றுள் ஈண்டைக்கேற்பன வேறுசிலவற்றையுந் தழீஇக்கோடல் குறிப்பிப்பார் கவரியசைந்தெழ, முடியின்றிர ளாதவன்மிசையெழ வந்தரி யாசன மதனி லிருந்தனன் என்றும், நன்மக்களது சகவாச முடையனென்பார் மாதவ முனிவர்க ளந்தணர் மாசறு கவிஞர் செறிந்திட என்றும், சிவபெருமானது திருமுடிமீதிருக்கும் மறுவற்ற சந்திரகுலமென்பார் ஏதமின் மதிகுலமென்றும், பாண்டியரு ளுயர்ந்தவ

னென்பார் புங்கவனென்றும், ஏனைவெப்பஞ்செய்யுஞ் சூரியனோ டிதனிடைவிசேடமுண்மைவிளக்குவார் இன்ஆதவன் என்றுங்கூறினர். இனிமை ஈண்டுயிர்களுக்குப் பலவாற்றானுந் தட்பஞ்செய்தல், ஆசனமது ஆசனமாகிய அது. இராசசின்ன மிருபத்தொன்றாவன: முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கிரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைகயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம் என்பன. இதுவும் அறுசீரடி ஆசிரியவிருத்தம். முடியை ஆதவனாக அபேதஞ்செய்தமையின், இது உருவகாலங்காரமென்க. (௨௫)

தாதகி மார்ப னெடும்புவி சார்தரு மாழ்கட லின்கரை
தீதில மாதுர கங்கொடு சீர்கெழு மாரியர் வந்தன
ரேதமி லாயது கண்டனம் யாமென வேதொழு தன்பொடு
மேதினி காவலன் முன்சில மேதகு தூதர்வி ளம்பினர்.

இ—ள்: மேதகு சில தூதர் - அத்தருணத்து மேன்மைபொருந்திய சில தூதுவர்.—மேதினி காவலன் முன் அன்பொடு தொழுது - இந்நிலவுலகவரசனாகிய பாண்டியனுக்கு முன்வந்து அன்போடு வணங்கி,—ஏதம் இலாய் - ஒருகுற்றமுமில்லாத நம்மரசனே,—சீர் கெழும் ஆரியர் - செல்வத்தையுடைய ஆரியதேசவர்த்தகர்,—தாதகி மார்பன் நெடும் புவி சார்தரும் ஆழ் கடலின் கரை - ஆத்திமாலையையணிந்த மார்பையுடைய சோழனது நெடிய நாட்டைச்சூழ்ந்த ஆழமாகிய கடலினது கரையிலே,—தீது இல மாதுரகம் கொடு வந்தனர் - குற்றமற்ற நல்ல குதிரைகளைக் கொண்டுவந்திறங்கினர்,—அது யாம் கண்டனம் என விளம்பினர்-அதனை நாம் நேரே கண்டேமென்று விண்ணப்பஞ்செய்தனர். எ-று.

தமிழ்நாட்டு மூவேந்தராளுந் தேயங்களுட் பெருந்தேயமென்பார் நெடும்புவியென்றும், மேற்கூறும் சந்திரசுழிமுதலிய குற்றம் முற்றுமற்ற குதிரைகளென்பார் தீதிலமாதுரகமென்றும், செல்வாராகலின் உயர்ந்த சாதிக் குதிரைகளைக் கொண்டுவருதல் கூடுமென்பது குறிப்பிப்பார் சீர்கெழுமாரியரென்றும், நாமிங்ஙனஞ் சொல்வனவற்றின் பலாபலங்களைப் பாகுபடுத்துணரும் விவேகசத்திமுதலிய நல்லிலக்கணங்களையெல்லாமொருங்குடையையென்பார் அதனை எதிர்மறைமுகத்தின்வைத்து ஏதமிலாயென்றும், அது கேள்விப்பட்டதன்று நேரே நம்மாற் காணப்பட்டதென்பார் அது கண்டனம் யாமென்றும், இத்தூதுவர் தான் வகுத்துக் கூறுவான் கூறியது கூறுவானென்னு மிருதிறத்தருட் சிறந்த முன்னையரென்பார் சில மேதகுதூதுவர் என்றும் கூறினர். (௨௬)

ஏவல்செய் வார்களி லிங்கிவ ரேபரி வானவ ரென்றிகன்
மேவிய தூதரை வன்றிறன் மீன்வர் கோனு மகிழ்ந்துபின்

வாவுநன் மாதுர கங்கொடு வாருமெ னுவுட லுந்தன்
தாவியு மாயர னன்புடை யார்முக நாடி மொழிந்தனன்.

இ—ள்: வல் திறல் மீனவர் கோனும் - இங்ஙனந் தூதுவர்கூறக் கேட்ட மிக்க வலிமையையுடைய பாண்டியராசனும்,—ஏவல் செய்வார்களில் இங்கிவரே பரிவானவர் என்று - நம்பணி செய்பவர்களுள் இவர்களே எம்மிடத் தன்புள்ளவர்களென்று நன்கு மதித்து,—இகல் மேவிய தூதரை மகிழ்ந்து - சொல்வன்மையையுடைய அத்தூதுவர்களை மனமகிழ்ந்துநோக்கி,—பின் - அதன்பின்பு,—தனது உடலும் ஆவியுமாய் அரன் அன்புடையார் முகம் நாடி - தனதுடம்பு முயிருமாகி, அதன்மேற் சிவபத்திமானுமாகிய திருவாதவூரடிகளுடைய முகத்தைப் பார்த்து,—வாவும் நல்மா துரகம் கொடு வாரும் எனு மொழிந்தனன் - நீர் தாவுகின்ற நல்ல பெரிய குதிரைகளை இவர்கூறிய இடத்துச் சென்று விலைக்கு வாங்கிக் கொண்டுவாருமென்று கூறினன். எ-று.

இங்கிவர் ஒருசொன்னீர்மைத்து. ஏகாரம் பிரிநிலை. உம்மை உயர்வுசிறப்பு. தனக்காவதொன்றனைத் தாமே அறிந்து கூறினராகலின் மகிழ்ந்தென்றும், தான் அவரென இரண்டற அரசன் மதித்திருக்கின்றமைதோன்ற உடலுந் தனதாவியுமாயென்றும், ஏனையமைச்சரினும் அரசன் மிகவும் விசுவசித்தற் கேதுவாய், அவர்மாட்டுள்ள விசேடந்தோன்ற அரனன்புடையாரென்றுங் கூறினர். (உஎ)

மீனவர் கோன்மொழி யின்படி வேணிய னேச ரியைந்தபி
னனை சோதி யுடன்புவி யாள்பவன் வாசி கொளும்படி
வானவி மான மெனுந்திரு வாழ்வுள கோயில் புகுந்துதன்
னீனமி லாநெறி வந்தபொன் னேழெழு கோடி வழங்கினன்.

இ—ள்: மீனவர் கோன் மொழியின் படி வேணியன் நேசர் இயைந்தபின் - பாண்டியராசனது சொல்லின்வண்ணமே சடையையுடைய சிவபெருமானது அன்பராகிய திருவாதவூரடிகள் உடம்பட்டபின்னர்,—புவி ஆள்பவன் ஆனன சோதியுடன் - அவ்வரசன் முகமலர்ச்சியோடு,—வாசி கொளும்படி - குதிரை கொள்ளும்பொருட்டு,—வான விமானம் எனும் திரு வாழ்வு உள தன் கோயில் புகுந்து - தேவவிமானமென்று சொல்லத்தகும் திருமகள்வாழுந் தனது திரவியசாலையுட் புகுந்து,—ஈனம் இலா நெறி வந்த பொன் ஏழ் எழு கோடி வழங்கினன் - தருமநெறியானீட்டிய திரவியத்தில் நாற்பத்தொன்பதுகோடி பொன் கொடுத்தனன். எ-று.

எனுமென்னும் பெயரெச்சம் கோயிலென்னு மிடப்பெயர்கொண்டது. வானவிமானமென்பதற்கு விண்ணிழி விமானமெனினுமமையும்.

மீனவர்கோன் அரசர்க்கரசன். தன்கேள்விக் கவர் உடம்பட்டமையின் ஆனனசோதியுடனென்றும், மகாலங்காரத்தோடு பொன்மயமுமாயிருத்தலின் வானவிமானமெனும் கோயிலென்றும், திருமகள் எஞ்ஞான்றும் விட்டுநீங்காது வசிக்கப்பெறுதலின் திருவாழ் கோயிலென்றது திருவாழ்வுள கோயிலென்றும், பின் சிவபுண்ணியவிஷயத்திற் செலவழிக்கப்படுதலின் முன் அவை தருமநெறியா னீட்டப்பட்ட பொன்னென்ப தினிதுவிளங்குமென்பார் எதிர்மறைமுகத்தான் ஈனமிலாநெறிவந்தபொன்னென்றுங் கூறினார். ஒருபொன் ஒருவராகனெனடைகொண்டது. (உஅ)

விற்படை வெற்றி மடந்தையு மிக்க மலர்த்திரு வும்பயின்
மற்புய வெற்பின னங்கயல் வைத்த வலத்தன் வழங்கிய
பொற்பு மிகுத்த தனங்கொடு பொற்க வனப்பரி கொண்டிட
நற்பய ணத்தை முயன்றனர் நக்கனை நெக்குணர் கின்றவர்.

இ—ள்: நக்கனை நெக்கு உணர்கின்றவர் - திகம்பரராகிய சிவபெருமானை மனம் நெக்குநெக்குருகித் தியானிக்கும் திருவாதவூரடிகள்,—வில் படை வெற்றி மடந்தையும் மிக்க மலர்த் திருவும் பயில் மல்புய வெற்பினன் - வில்லாகியபடையோடு வீரலக்குமியும் செந்தாமரையாசனியாகிய மகாலக்குமியும் வசிக்கும் மல்யுத்தஞ்செய்யும் புயகிரிகளையுடையவனும்,—அம் கயல் வைத்த வலத்தன் வழங்கிய - அழகிய மீனக் கொடியையுயர்த்த வலப்பாகத்தை யுடையவனுமாகிய பாண்டியன் கொடுத்த,—பொற்பு மிகுத்த தனம் கொடு பொன் கவனப்பரி கொண்டிட - பொலிவு மிக்க திரவியத்தைப் பெற்றுக்கொண்டு, அழகிய வேகத்தையுடைய குதிரைகளைக் கொள்ளும்பொருட்டு,—நல் பயணத்தை முயன்றனர் - நல்ல பிரயாணத்தை முயன்றனர். எ-று.

பிரயாணம் பயணமெனத் தற்சமமாயிற்று. விற்படைவெற்றிமடந்தை என்பதற்கு வில்லின்கட்டங்கும் வீரலக்குமியெனவும், அங்கயல் வைத்தவலத்தன் என்பதற்கு அழகிய கயன்மற்சக்கொடியை எங்கும் நிறுத்திய வெற்றியையுடையவனெனவும் பொருள்கோடலுமாம். வீரலக்குமி வில்லின்கட்டங்குதலை "தாக்கணங் கமர்சிலை தன்னைச் சின்னமே யாக்கினன்" என்பதனானுமறிக. இப்பொருட்கு விற்படை என்புழி ஐ சாரியை. இன்னும் வில்லின்கட்டங்குஞ் சயமகளும் மலரின்கட்டங்குந் திருமகளும் அவற்றை வெறுத்தொழிந்து வந்து தங்குதற்கேற்ற சிறந்த புயகிரிகளென்பார் விற்படைவெற்றிமடந்தையு மிக்கமலர்த்திருவும்பயின், மற்புயவெற்பினனென்றார் எனக்கோடலுமொன்று. முயறல்-தொடங்கல். திகம்பரர் திக்கை ஆடையாகவுடையவர். நீர்ப்பூக்களுட் டாமரைப்பூவும் தாமரைகளுட் செந்தாமரைப்பூவும் சிறந்தமையின், அதனை மிக்கமலரென்றும், திருப்பெருந்துறையை அடைந்து ஞானோபதே

சம் பெறுதற்கு இப்பயண மேதுவாயினமையின் நற்பயணமென்றுங் கூறினர். (உக)

மெய்த்தவ ருற்ற பெருந்துறை வித்தக ரைக்குறு கும்படி
யித்தகு நற்பொருள் கொண்டுநீ ரிப்படி யிற்செலு மென்றலி
னத்தகு புத்தி யொழிந்துயி ரற்புத முத்தி பெறும்படி
யுய்த்துள சத்தி யுடன்பொரு வொத்தன னுத்தம பஞ்சவன்

இ—ள்: மெய்த் தவர் உற்ற பெருந்துறை வித்தகரைக் குறுகும் படி - மெய்ம்மையாகிய தவத்தையுடைய பெரியோர்கள் வாழும் திருப்பெருந்துறையிலே சாதுரியராகிய ஞானதேசிகரை யடையும்படி.—இத் தகு நல் பொருள் கொண்டு - இந்தத் தகுதியாகிய நல்ல பொன்னைக் கைக்கொண்டு,—அத் தகு புத்தி ஒழிந்து - அம்மந்திரி யத்தியோகத்துக்கு வேண்டும் சூழ்ச்சிகளை இதுபொழுது மிகவுந் தவிர்ந்து.—நீர் இப்படியில் செலும் என்றலின்—நீர் இந்நெறியானே செல்லுமென்று திருவாதவூரடிகளைச் செலுத்துதலினல்,—உயிர் அற்புத முத்தி பெறும் படி உய்த்துள சத்தி உடன் - பக்குவான்மாவைப் பரமுத்தி பெறும்படி செலுத்தும் பிரேரகசத்தியோடு,—உத்தம பஞ்சவன் பொருவொத்தனன் - உத்தமபுருஷனுகிய பாண்டியன் உவமை பொருந்தினன். எ-று.

படி ஆகுபெயர். சத்தியைக் குறிக்குங்காற் பொருள் சிவாகமப்பொருளும், படி தன்மையும், புத்தி அனுபவமுமாம். சிவாகமப்பொருள் கொண்டு, வினைப்போகங்கடொலையப், பரமுத்திபெறும்படி, இத்தன்மைத்தாகிய ஒழுக்கநெறியாற் செல்லுகவென்று பக்குவான்மாவைச் சிவசத்தி செலுத்துதல்போல; செல்வப்பொருள்கொண்டு, அமைச்சுக்குரிய சூழ்ச்சிகடவிர, ஞானதேசிகரை அடையும்படி, திருப்பெருந்துறைக் கேகும் இந்நெறியானே செல்லுகவென்று திருவாதவூரடிகளை அரசன் செலுத்துதலின், அதனேடு உவமையாயினனென்பார் பொருவொத்தனனென்ருர். ஒத்தல் - பொருந்தல், மாயாமலமாகிய அழுக்கைக்கொண்டே மூலமலமாகிய அழுக்கைக் கழுவுதலின் வித்தகர் என்றும், அறிஞர் கைப்படின் இருமையும் பயத்தற் சிறப்புடைமையின் இத்தகுநற்பொருளென்றும், பரமுத்தியாகலின் அற்புதமுத்தி என்றும், பக்குவமுண்மையின் உத்தமபஞ்சவனென்றுங் கூறினர். இவ்வரிமர்த்தனபாண்டியன் பக்குவமுடைய உத்தமபுருஷனென்பதனை "கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை கைப்பிடித்துக், குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி கேடு கண்டீர், மதுரையர் மன்னன் மறுபிறப் போடமறித்திடுமே." எனவரும் திருவாக்கானுய்த்துணர்க. நீரென்பது நீர்எனக் குறுகிற்று. ()

பற்றிலர் பெற்ற சிவன்கழல் பற்றின ரைக்கலை வண்டமி
ழுற்ற மலைக்கிறை வன்றனை யொக்க மதித்தருள் கொண்டலை
விற்றுவ சத்த னெடும்படை மிக்க புலிக்கொடி யன்படை
மற்றுள கொற்றவர் தம்படை வர்க்கமு முற்கொ டெழுந்தன

இ—ள்: பற்று இலர் பெற்ற சிவன் கழல் பற்றினரை - இருவகைப் பற்றுமற்ற மெய்ஞ்ஞானிகள் அத்துவிதமாய்க்கலக்கப் பெறும் சிவபெருமானுடைய திருவடிகளை இறுகப் பற்றினவரும்,—கலை வண் தமிழ் உற்ற மலைக்கு இறைவன் தனை ஒக்க மதித்தருள் கொண்டலை - கலைகளையுடைய வளவிய தமிழ் மொழி இருந்து பரவப்பெற்ற பொதியமலைக்குத் தலைவனாகிய பாண்டியன் தன்னைப்போல நன்குமதித்த கிருபாமேகமுமாகிய திருவாதவூரடிகளை,—வில் துவசத்தன் நெடும்படை (வர்க்கமும்)-விற்கொடியையுடைய சேரனது தொகைமிக்க சேனைசமூகமும்,—புலிக் கொடியன் மிக்க படை (வர்க்கமும்) - புலிக்கொடியையுடைய சோழனது தொகைமிக்க சேனைசமூகமும்,—மற்றுள கொற்றவர் தம் படை வர்க்கமும் முன் கொடு எழுந்தன - மற்றுமுள்ள சாமந்தர்களது சேனைசமூகங்களும் தமக்கொரு முதலாகக்கொண்டெழுந்தன. எ-று.

பற்றிலர் என்புழி இரண்டென்னுந் தொகைச்சொல்லும் முற்றும்மையும், முற்கொடு என்புழி ஆக்கச்சொல்லும், விகாரத்தாற்றொக்கன. பற்றிலராற் பெறப்படுதல் நிச்சயமாகலின், அத்தெளிவுபற்றிப் பெற்ற என இறந்தகாலத்தாற் கூறினார். தன்னைப்போல நன்குமதித்தல் அமைச்சனாகவன்றி அரசனாக மதித்தல். அரசன் அவ்வாறு மதிக்கவே, சேனைகளும் அங்ஙனம் மதித்தன என்பார் முற்கொடெழுந்தன என்றும், தமிழ் முனிவராகிய அகத்தியர் தங்கியிருந்து, அத்தமிழைப் பரப்பிய முக்கிய ஸ்தானமாகலின், பொதியமலையைக் கலைவண்டமிழுற்றமலை என்றும், அம்மலையைத் தனது தசாங்கங்களு ளொன்றாகவுடையனாகலிற் பாண்டியனை மலைக்கிறைவன் என்றும் எதிர்காலத்தவர் ஓதி உய்யும்வண்ணம் திருவாசகமழை பொழிபவராகலின் திருவாதவூரடிகளைக் கொண்டலென்றும், சேர சோழர்களிருவரும் சார்வபௌமனாகிய பாண்டியனைப்போல நெடுநிலவரசர்களாகலின் அதனை விளக்குதற்கு விற்றுவசத்தனெடும்படை மிக்கபுலிக்கொடியன்படை என அவர்கள் சேனைத்தொகையையும் நாமதேயங்களையும் விதந்தும், மற்றையரசர்கள் சாமந்தர்களாகிய குறுநிலவரசர்களாகலின் அங்ஙனம் விதவாது வாளா மற்றுள கொற்றவர் என்றுங் கூறினார். மலைக்கிறைவனை அகத்தியமுனிவரெனக் கோடலுமொன்று. இப்பொருட்குத் தன் சாரியை. சார்வபௌமன் நெடுநிலவரசன். சாமந்தர் குறுநிலமன்னர். இது பயனடியான்வந்த 'விரியுவமாலங்கார'மென்க. ()

உக்கிர நச்சுர கங்களி னுச்சி பனிப்ப வசைந்தடி
வைக்கு முரத்தன வெங்கய மைக்கிரி யொக்க மலிந்தன
பக்கமு முற்பிற குந்துடி பற்பல கொட்ட வியங்குவ
தக்க மனத்தில் விரைந்துள தத்து பரித்திரள் வந்தன.

இ—ள்: உக்கிர நச்சு உரகங்களின் உச்சி பனிப்ப அசைந்து அடி வைக்கும் உரத்தன வெம் கயம் - கொடிய நஞ்சையுடைய சேஷன்முதலிய பாம்புகளின் முடிகள் சுமக்கலாற்றாது நடுங்க, உடம்பு தள்ளாடிக் கால்களைப் புடைபெயர்த்து வைக்கும் வலியையுடையனவாகிய வெவ்விய யானைகள்,—மைக்கிரி ஒக்க மலிந்தன - தோற்றத்தாற் கரியமலைகளைப் போல நிறைந்தன,—துடி பற்பல கொட்ட பக்கமும் முன் பிறகும் இயங்குவ - உடுக்கைகள் மிகப் பலவற்றை இயம்ப இருபக்கங்களினும் முன்னரும் பின்னரும் அவற்றின் றாளகதிக்கேற்ப இயங்கி நடிப்பனவும்,—தக்க மனத்தில் விரைந்துள - தகுதியாகிய மனோகதியைப்போல விரைந்து செல்வனவுமாகிய,—தத்து பரித்திரள் வந்தன - தாவுகின்ற குதிரைக் கூட்டங்கள் சென்றன. எ-று.

தள்ளாடுதல் வலியின்மையினாலன்று பேருடம்புடைமையினாலென்பார் பின்னர் உரத்தன என்றும், ஐங்கதிகள்போலன்றி அவற்றினுஞ் சிறந்த கிளர்ச்சியையுடைய மனோகதிபோலென்பார் தக்கமனத்திலென்றும், தாளகதிக்கேற்ப நடித்தல் செயற்கையாயினும் மனோகதிபோல விரைதல் அவற்றிற்கியற்கை என்பார் விரைந்தென்னாது விரைந்துள என்றுங் கூறினார். ஐங்கதிகளை, "மயிலிருஞ்சர முயலொடு யூகமற்றெழிலைப், பயில் பரித்தொகை" என்பதனானுமறிக. அசைத்தடி என்னும் பாடமும் செயற்கைப்பாடமே, இயற்கைப்பாடமன்று. இதனுட் கயமைக்கிரி ஒக்க என்பது 'விரியுவமாலங்கார'மென்க. (௯உ)

வேறு.

கொங்கணர் கலிங்கரொடு கொங்கர்துளு நாடர்
சிங்களர்க ளொட்டியர் தெலுங்கரொடு சீனர்
தங்குதிறன் மாளவர் மலாடர்தமி லொன்றா
யெங்கணு மிடைந்தவர்க ளெண்ணமுடி வில்லார்.

இ—ள்: கொங்கணர்களும் கலிங்கர்களும் கொங்கர்களும் துளுவர்களும் சிங்களர்களும் ஒட்டியர்களும் தெலுங்கர்களும் சீனர்களும் மாளவர்களும் மலாடர்களும் தம்முட்கலந்து எவ்விடத்தும் நெருங்கிய பதாதி வீரர்கள் இவ்வளவினரென்றெண்ணக் கடைபோகாதவர். எ-று.

ஒடு எண்ணொடு. மலயமானாடு மலாடென மரீஇயிற்று. மலயமான் - சேரன். மலயமானுடு மலையாளம். தங்குதிறல் என்பதனைத் திறல்

தங்கென மாறுக. பொருளாதியாறும் பிறவுங் காரணமாகப் பொருட்கு வரும் பெயர்களுள் இவை இடப்பாகுபாட்டினு ளொன்றாகிய தேயத்தால் வருபெயரென்பது விளக்குவார் நாடர் என்றும், இவர்தாம் பலதிறத்தாராயினும் ஈண்டன்ன ரல்லரென்பார் தமிலொன்றாயென்றும், இறப்பப் பலர் என்பார் எண்ணமுடிவில்லாரென்றுங் கூறினர். இது கலிவிருத்தம். (௩௩)

இத்திற மெழுந்தபடை யெங்கணு நெருங்கத்
தத்துபரி மீதுள தமிழ்க்கவிஞர் சூழச்
சித்திர மடந்தையர் திரண்டிரு மருங்கு
மொய்த்துவர வீணைகுழன் முன்னரிசை கொள்ள.

இ—ள்: இத்திறம் எழுந்த படை எங்கணும் நெருங்க - இந்தப் பிரகாரமெழுந்த நால்வகைச்சேனைகள் எவ்விடத்தும் நெருங்கவும்,—தத்து பரிமீது உள தமிழ்க் கவிஞர் சூழ - தாவுகின்ற குதிரைமேலிவர்ந்த தமிழ்ப் புலவர்கள் தம்மைச் சூழவும் - சித்திர மடந்தையர் திரண்டு இரு மருங்கும் மொய்த்து வர - அழகையுடைய நடனஸ்திரீகள் தம்முட் கூடி இருமருங்கினும் நெருங்கிவரவும்,—வீணை குழல் முன்னர் இசை கொள்ள - யாழ்களும் குழல்களும் எதிரே ஒலிக்கவும். எ-று.

திருவாதவூரடிகள் ஏனையவற்றினும் தமிழின்கண் மிக விருப்பமுடைய புலவர் திலகராகலின், அவ்வியையுபற்றி அத்தமிழ்ப்புலவர்களே அவரை அகத்துச் சூழ்ந்தனரென்பார் அவரை முதற்கண் விதந்துகூறினர். இனி நங்கடவுட்கும் ஏனையமொழிகளினும் அத்தமிழ்மொழிக்கண்ணேயே விருப்பமிக்குண்டென்பது "தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்தது முதலை யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக், கண்ட தும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித், தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்" என்பதுமுதலிய ஏதுக்களானுய்த்துணர்க். (௩௪)

கட்டுமள கத்தினர் கனத்துள தனத்தார்
பட்டுடை மருங்கினர் பனிக்கவரி வீச
வட்டமதி வெண்குடை வயங்கமுர செங்குங்
கொட்டவுயர் காளமொடு கோடுகள் கறங்க.

இ—ள்: கட்டும் அளகத்தினர் - கைசெய்து முடிக்கப்பட்ட கூந்தலையுடையவரும்,—கனத்துள தனத்தார் - கனத்த தனங்களையுடையவரும்,—பட்டு உடை மருங்கினர் - பட்டுவஸ்திர முடுத்த இடையை யுடையவருமாகிய நடனஸ்திரீகள்,—பனிக் கவரி வீச - குளிர்ச்சிபொருந்திய சாமரங்களை இரட்டவும்,—வட்ட மதி வெண் குடை வயங்க - பூரணசந்திரன்போலும் வெண் கொற்றக்குடை பிரகாசிக்கவும்,—முரசு எங்கும்

கொட்ட - பேரிகைகள் எவ்விடங்களினும் மொத்துண்ணவும்.—உயர் காளம் ஒடு கோடுகள் கறங்க - உயர்வாகிய சிறுசின்னங்களோடு சங்குகள் சத்திக்கவும். எ-று.

கனக்கவேண்டுந் துணையும் கனத்தொழிந்தன வென்பார் கனதன மென்னாது கனத்துள தனமென்றும், சைத்தியோபசாரங்களுள் ஒன்றாகலிற் பனிக்கவரியென்றும், கொட்டுதல் பிரயாண நிமித்தம்பற்றியுமென்பார் முரசு கொட்டவென்னாது முரசெங்குங் கொட்ட என்றும், மங்கலவாத்தியங்களுட் சிறந்தனவாகலின் உயர்காளமொடு கோடுகள் கறங்க என்றுங் கூறினார். கோடு கொம்பெனினுமமையும். (௩௫)

மிண்டியுள பாடகர் வியந்துகர வாரங்
கொண்டுபுடை சூழவெழில் சேர்குழலர் பாடத்
தண்டரள மல்கிய தனிச்சிவிகை மேல்கொண்
டெண்டிசை மிகப்புகழ் கயற்கொடி யிலங்க.

இ—ள்: மிண்டி உள பாடகர் கரவாரம் கொண்டு வியந்து புடை சூழ - தம்முனெருங்கிநிற்கும்மாகதர்கைகொட்டுதல்கொண்டு துதித்துப்பக்கத்தே சூழவும்,—எழில் சேர் குழலர் பாட - அழகுபொருந்திய கூந்தலையுடைய விறலிகள் பாடவும்,—எண் திசை மிகப் புகழ் கயல் கொடி - அட்டதிக்கினரும் மிகவும் புகழும் பாண்டியனது மீனக்கொடி,—தண் தரளம் மல்கிய தனிச் சிவிகை மேல் கொண்டு இலங்க - மிகக் குளிர்ச்சி பொருந்திய ஒப்பற்ற முத்துச்சிவிகையிலே உயர்த்தப்பெற்று விளங்கவும். எ-று.

கரவாரம் என்புழி ஆர் ஒலி. அது ஆர்த்தலென்னும் தொழிற்பெயர்ப் பகுதியானுமறிக. கரவாரம் என்பதனை உத்தரத்தார் கரகோஷம் என வழங்குப. இனிக் கரவாரம் என்பதனைக் கர வாரம் எனப் பிரித்து, வாரம் வாரப்பாட்டென்றலு மொன்று. அது 'வாரம் பாடுந் தோரிய மடந்தையும்' என்பதனானறிக. வாரமாவது பற்று. அஃது ஒரொற்றுவாரமும், ஈரொற்றுவாரமுமென இருவகைப்படும். அவை தாளத்து ஒரு மாத்திரையும் இருமாத்திரையும் பெற்றுவரும். மாகதர் - நின்றேத்துவார். விறலிகள்-பாடன்மகளிர். சிவிகை-பல்லாக்கு. இனி மேல்கொண்டென்னும் செய்தெனெச்சத்திற்குத் திருவாதவூரடிகளை வினைமுதலாகக் கொள்வாருமுளர், அங்ஙனங் கொள்ளின், அச்செய்தெனெச்சம் வருஞ்செய்யுளின் மங்கலதினத்தினெடுமாளிகையகன்றே என்புழி அகன்றென்னும் செய்தெனெச்சத்தையும், அவ்வகன்றென்னும் செய்தெனெச்சம் சொக்கரை வணங்கி என்புழி, வணங்கி என்னும் செய்தெனெச்சத்தையுங் கொள்ளவேண்டுதலானும், அங்ஙனங் கொள்ளின், திருவாதவூரடிகள்

சிவாலயதரிசனஞ் செய்யச் செல்லும்போது சிவிகைமீதிவர்ந்து சென்றா ரெனப் பொருள்பட்டுச் சிவாகமவிரோதமாய் முடியுமாகலானும், சிவிகை மீதிவர்தல் பின்னர் எழில்சிறக்கும் வென்றிவளவன்புவியின் மேன்மை யொடு செல்வாரென்புழி மேன்மையொடு செல்வார் என்பதனாற் குறிப்பிக் கப்படுதலானும், தேரின்மையிற் சிவிகையல்லது மீனக்கொடியுயர்த்தற்கு வேறிடமின்மையானும், மீனக்கொடி விளக்கமும் ஈண்டு ஒருதலையாகக் கூறப்படல்வேண்டுமாதலானும், பிறவாற்றானும் அது பொருந்தாதென்க. அற்றேல். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முத்துச்சிவிகைமீதிவர்ந்து சிவாலயதரிசனஞ்செய்யச் சென்றாராலெனின். வாகனமேறிச்சென்று சிவாலயதரிசனஞ்செய்தல் பாவமென்று அதனைவிலக்கிய சிவபெருமானே அந்நாயனாருக்குச் சிவிகைகொடுத்து இதன்மேலிவர்ந்து சிவாலயதரிசனஞ் செய்க என்று பணித்தமையின், அவரது அந்நிலைமை பத்திமார்க்கமும், இவரது இந்நிலைமை விதிமார்க்கமுமாமாகலின், அது கடாவன்றென்க. ()

மங்கல தினத்திநெடு மாளிகை யகன்றே
துங்கமணி யக்கையணி சொக்கரை வணங்கி
யங்குவிடை பெற்றுமறை யந்தணரின் மிக்கார்
திங்கண்மர பிற்குரிசில் கோயிலுழை சென்றார்.

இ—ள்: மறை அந்தணரில் மிக்கார் - வேதங்களை அத்தியயனஞ் செய்யும் பிராமணர்களுக்குள்ளே சிரேட்டராகிய திருவாதவூரடிகள்,—மங்கல தினத்தில் நெடு மாளிகை அகன்று - பிரயாணத்துக்கேற்ற ஒரு சுப தினத்திலே தமது நெடிய திருமாளிகையை விட்டகன்று திருவாலவாயின் கட் சென்று,—அங்கு துங்க மணி அக்கை அணி சொக்கரை வணங்கி விடை பெற்று-அங்கே உயர்வாகிய உருத்திராக்கமணியையும் எலும்பையு மணிந்த சொக்கநாதசுவாமியை வணங்கி அநுமதிபெற்றுக்கொண்டு,—திங்கள் மரபில் குரிசில் கோயில் உழை சென்றார் - சந்திரகுலத்தரசனாகிய அரிமர்த்தனபாண்டியனது மாளிகையின்கட் சென்றார் எ - று.

சொக்கர் - அழகர். மேன்மாடமென்பார் நெடுமாளிகை என்றும், மணிகள் பலவற்றுள்ளும் உயர்ந்தமணி என்பார் உருத்திராக்கமணியைத் துங்கமணி என்றும் கூறினார். (கூஎ)

சென்றுதமிழ் மாறனருள் பெற்றெழில் சிறக்கும்
வென்றிவள வன்புவியின் மேன்மையொடு செல்வார்
குன்றனைய மாடமொடு கோபுர நெருங்கு
நன்றிமது ரைப்பதியை நன்கொடு கடந்தார்.

இ—ள்: சென்று தமிழ் மாறன் அருள் பெற்று - திருவாதவூரடிகள் அங்ஙனஞ்சென்று தமக்கினிய பாண்டியனது அருட்பிரசாதம்பெற்று,—வென்றி வளவன் புவியில் எழில் சிறக்கும் மேன்மையொடு செல்வார்—

வெற்றியையுடைய சோழனது புனனாட்டின்கண்ணே மேற்கூறிய இராசோபசாரங்களோடு செல்பவராகி,—குன்று அனைய மாடம் ஒடு கோபுரம் நெருங்கும் நன்றி மதுரைப் பதியை - மலைகளையொத்த மாடங்களோடு கோபுரங்கள் நெருங்கப்பெறும் நல்ல மதுரையாகிய இராசதானியை:— நன்கொடு கடந்தார் - நன்மையோடு நீங்கினார் எ - று.

தமிழ்மாறன் தமிழ்மொழியையுடைய பாண்டியனென்னினு மமையும். எழில், சிறக்குமென்னும் விசேடம் மேன்மை என்னும் ஆகுபெயர்ப் பொருளை விசேடித்துநின்றது. ஆகுபெயர்ப்பொருள் முத்துச்சிவிகை முதலியன; ஈண்டுப் புகழ்பொருட்கேற்பதோரடையை அல்பொருட்கேற்றுதல் வழுவாகலினென்க. நெருங்க, சூழ, வர, கொள்ள, வீச, வயங்க, கொட்ட, கறங்க, சூழ, பாட, இலங்கச் செல்வார் என அச்செயவெனெச்சங்களையெல்லாம் ஈண்டுத்தந்துமுடிக்க. அவை மேலைச்செய்யுளின் அகன்றென்னுமெச்சத்தோடு முடியாமை மேலுங் காட்டப்பட்டது. அரசன் நேரே விடைதந்து, பிரியக்கண்டு, சகிக்கமாட்டாதவனாகலின், அவனிடத்து விடைபெற்றென்னாது அருள்பெற்றென்றும், உத்தம சிவக்ஷேத்திரமாகலின் நன்றிமதுரைப்பதி என்றும், புறப்படுகின்றுழிச் சுபசகுனநிகழ்ச்சியோடு புறப்பட்டு அவ்விடத்தைவிட்டகன்றார் என்பார். நன்கொடு கடந்தாரென்றுங் கூறினார். புறப்படுகின்றுழிச் சுபசகுனநிழ்ச்சியோடு புறப்பட்டாரென்பதனை "ஆதிசைவனு மருச்சகனொருவனேரணைந்து, பூதியீந்தனனெமக்கிது போலிலை நிமித்த, மீதுநன்னெறிக் கேதுவென் றிருகையேற்றணிந்து" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானுமறிக. மதுரை-கலக்கப்பட்டது. அது ஈண்டுத் தகுதிபற்றி நனைக்கப்படுதலின்மேற்று. அது சிவபெருமான் தமது திருச்சடையின்கணுள்ள பாலசந்திரனது அமுதைப் புரோக்ஷித்துக் கலந்து சாந்திசெயப்பெற்ற புனிதத்தின்மேற்றென்க. மத என்னும் வடமொழித்தாது கலத்தலென்னும்பொருட்டு. அதனை "பொன்மய மான சடைமதிக் கலையின் புத்தமு துகுத்தன ரதுபோய்ச், சின்மய மான தம்மடி யடைந்தார்ச் சிவமய மாக்கிய செயல்போற், றன்மய மாக்கி யந்நகர் முழுதுஞ் சாந்திசெய் ததுவது மதுர, நன்மய மான தன்மையான் மதுரா நகரென வுரைத்தனர் நாமம்" என்பதனானறிக. (௬௧)

நெடுங்குட திசைக்கட னிறைந்தொலி சிறந்தே
யுடைந்துதய நற்றிசையி னுற்றுவரு மாபோன்
மிடைந்தபதி யுங்கடமும் வெற்புமிவை யெல்லாங்
கடந்துவதி சென்றுபல காவத மகன்றார்.

இ—ள்: நெடும் குட திசைக் கடல் - நெடிய மேற்றிசைக்கடலானது,—நிறைந்து ஒலி சிறந்து உடைந்து - முன்னையினும் நீர் நிறைந்து ஒலிமிகுந்து அணையுடைந்து,—நல் உதய திசையில் உற்று வருமாபோல் - நல்ல பூருவதிக்கிலே புரட்டெடுத்துப் பாய்ந்து வருமாறுபோல,—வதி சென்று - திருவாதவூரடிகள் சேனைகளோடு வழிக்கொண்டு சென்று,—

மிடைந்த பதியும் கடமும் வெற்பும் இவை எல்லாம் கடந்து - நெருங்கிய ஊர்களும் காடுகளும் மலைகளுமாகிய இவைகளையெல்லாங் கடந்து,—பல காவதம் அகன்றார் - பல காவததூரம் போனார் எ - று.

நிறைந்து, சிறந்து, உடைந்தென்னுஞ் செய்தெனெச்சங்கள் சினைவினையாகலின் உற்றுவருமென்னும் முதல்வினையோடு முடிந்தன. உறுதல்-மிகுதல். உதயநற்றிசை என விசேடித்தார் சுபகருமஞ் செய்கின்றுழி எதிர்நோக்கப்படும் மங்கலதிக்காகலினென்க. சோழநாட்டுக்குப் பாண்டிநாடு மேற்கின்கண்ணதாகலின் அப்பாண்டிநாட்டினின்று சோழநாட்டுக்கு வருஞ் சேனையை நெடுங்குடதிசைக்கடலுதய நற்றிசையில் வருமாபோலென்றும், மிகுதியும் ஒலியும் வேகமுங்கொண்டுவருதலின் நிறைந்தொலி சிறந்தே யுடைந்துவருமாபோலென்றுங் கூறினார். நெல் எட்டுக்கொண்டது ஒருவிரல். விரல் பன்னிரண்டுகொண்டது ஒருசாண். சாண் இரண்டுகொண்டது ஒருமுழம். முழம் இரண்டுகொண்டது ஒரு சிறுகோல். சிறுகோல் நான்குகொண்டது ஒருதண்டம். தண்டம் ஐந்துகொண்டது ஒரு காண்டம். காண்டம் பத்துக்கொண்டது ஒருவர்த்தம். வர்த்தம் பத்துக்கொண்டது ஒருகுரோசம். குரோசம் நான்குகொண்டது ஒருகாவதமென்க. எனவே, பதினாறாயிரம்முழங்கொண்டது ஒருகாவதமாம். காவதமெனினும் காதமெனினுமொக்கும். காவதம் நான்குகொண்டது ஒரு யோசனை. (௪0)

என்றுமுள பொன்றுமுட லென்னுநகர் தோறுஞ்
சென்றவழி மாறியொரு தெய்வவழி செல்வார்
நன்றியுள முத்திபெற நம்பர்தம தன்பா
லன்றுயர் பெருந்துறை யடைந்தபடி சொல்வாம்.

இ—ள்: என்றும் உள பொன்றும் உடல் என்னும் நகர் தோறும் சென்ற வழி மாறி - எஞ்ஞான்றும் காரணத்தின்கணுளவாகிக் காரியப்பட்டுப் பிறந்திறக்கும் சரீரங்களாகிய நகரங்கடோறு மிதுகாறுஞ் சென்ற வினைச் சமயவழி தப்பி,—ஒரு தெய்வவழி செல்வார் நன்றி உள முத்தி பெற - இதுபொழுது ஒப்பற்ற தெய்வத்தன்மைபொருந்திய சித்தாந்த சைவவழியிற் செல்பவராகிய திருவாதவூரடிகள் பரமுத்தி பெறும்பொருட்டு,—தமது அன்பால் - அவரது பத்திமைகாரணமாக,—நம்பர் அன்று உயர் பெருந்துறை அடைந்த படி சொல்வாம்-கைலாசபதி அத்தினத்தின்கண் உயர்வாகிய திருப்பெருந்துறையை அடைந்த சரித்திரத்தை இனி யாங் கூறுவாம் எ - று.

உளவாகிப் பொன்றுமென ஆக்கம் வருவித்துரைக்க. நன்றியுளமுத்தி நன்றியினால் வரும் முத்தி. நன்றி - நன்மை; என்றது சிவபுண்ணியத்தை. ஏற்புழிக்கோடலான் அஃதீண்டு ஞானத்தின்மேற்று. பரமுத்திக்கேதுக் கூறியவாறு. தம்மென்ற தீண்டுச் சுட்டின்பொருள்பட நின்று திருவாத

ஆரடிகளை யுணர்த்திற்று; மேற் செல்வாரென வந்தமையின். சிரத்தை அன்புடைமையும் இருவினையொப்புடைமையும் வேறன்மையின் முன்னர் இருவினையொத்தருள்வயத்தா லென்பதனோடு இதுமலையாமையறிக. காரணம் மாயை. காரியம் தனுகரணபுவனபோகங்கள். உயிராகிய ஆதேயத்துக்கு உடம்புகள் ஆதாரமாகலின் அவை அதற்கு நகராகவும், அந்நகரங்கள் உயிர்க்கு ஏனைச் சமயச்சார்பான் வருவனவாகலின், அச்சார்பை அந்நகரங்கட்குச் செல்லும் வழியாகவும், பரமுத்திக்கு நேரே வாயிலாகிய தத்துவ ஞானத்தைப் பயப்பது சைவசித்தாந்தமொன்றேயாகலின், அது அதற்கு வழியாகவும் உருவகஞ் செய்யப்பட்டன. "புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம, வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் பிடித்துஞ், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும்வேத சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றூற் சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்." என்பதனு மிஃதுய்த்துணர்க.

(சக)

மந்திரிச்சருக்க முற்றிற்று.

உ

திருப்பெருந்துறைச் சருக்கம்.

பழமறை முழுதுண ரந்தணர் பலர்தொழ நடமுயல் கின்றவர்
மழுவுழை கரமிசை கொண்டிட மருவிய கவுரி மகிழ்ந்திட
விழைதகு மிரசித பொங்கொளி விடுமுயர் கயிலை விலங்கலி
னழகுறு தபனிய மண்டப மதனிடை யருள்கொ டிருந்தனர்.

இ—ள்: பழ மறை முழுது உணர் அந்தணர் பலர் தொழ நடம் முயல்கின்றவர் - பழைய நான்குவேதங்களையு மோதியுணர்ந்த மகாபண்டிதர்களாகிய தில்லைவாழந்தணர்கண் மூவாயிரவர் தரிசித்து வணங்கக் கனகசபையிலே பஞ்சகிருத்திய நிருத்தஞ் செய்தருளும் சிவபெருமானனைவர்,—மழு உழை கர மிசை கொண்டு - மழுவையும் மானையும் திருக்கரங்களிற் கொண்டு,—இடம் மருவிய கவுரி மகிழ்ந்திட - தமது வாமபாகத்திற் பொருந்திய உமையம்மை திருவுளம் மகிழாநிற்ப,—விழை தகும் இரசித பொங்கு ஒளி விடும் உயர் கயிலை விலங்கலில் - எவரும் விரும்பத்தகும் வெள்ளியினது மிக்க ஒளியைவீசும் உயர்ந்த கைலாசகிரியின்கண்ணே,—அழகு உறு தபனிய மண்டபம் - அழகுபொருந்திய சுத்தமாயாமயமாகிய செம்பொற் றிருக்கோயிலொன்றுண்டு,—அதன் இடை அருள் கொடு

இருந்தனர் - அதன்கண் மந்திர சிங்காசனத்தின்மீதே ஆன்மாக்களது தியானுதிகட்குத் தாமகப்படுதல் வேண்டுமென்னும் திருவருளினலே சத்திகாரியமாகிய உருவத்திருமேனி கொண்டு ஸ்ரீகண்டசரீரியாய் வீற்றிருந்தருளினர். எ-று.

முழுதுமென்னு முற்றும்மையும், விழைய என்னும் பெயரெச்சத்தீறும், மண்டபமென்பதன் பயனிலேயும் விகாரத்தாற்றொக்கன. மண்டபமதனிடை என்புழி அது பகுதிப்பொருள் விகுதியுமாம். வேதம் அநாதிநூலாகலிற் பழமறை யென்றும், நான்கையுந் தழீஇக்கோடற்கு முழுதுமென்றும். இங்ஙனங் காணப்பட்ட தொன்றுகொண்டு காணப்படாததொன்றை அறிவிக்கின், அது அறிபவர்க் கினிது விளங்குமாகலின், காணப்பட்ட கனகசபையின்கண்ணே திருநடனஞ் செய்தருளும் சிவபெருமானுனவர் காணப்படாத கைலாசகிரியின்கண் வீற்றிருந்தருளினர் என்றுங்கூறினர். இது அறுசீரடியாசிரியவிருத்தம். (௧)

மதுமலர் கரமிசை கொண்டுநின் வழிவழி யடியவ ரென்றுதம்,
முதுமறை தெரியமொ ழிந்தெதிர் முறைமுறை முனிவர்வ
ணங்கின, ரிதுபர னருளைவ ழங்குவ தெனவரி பிரமரெ ழுந்து
நம்,பதநிலை பெறவரு ளென்றிரு பரிபுர கழல்கள்ப ணிந்தனர்.

இ—ள்: முனிவர் மது மலர் கர மிசை கொண்டு நின் வழி வழி அடியவர் என்று - அப்பொழுது இருடிகள் தேன்பொருந்திய நறுமலர்களைக் கையிற்கொண்டு அடியேங்கள் தேவரீருக்குப் பரம்பரையாக வழித்தொண்டரென்று விண்ணப்பஞ்செய்து அருச்சித்து,—தம் முதுமறை தெரிய மொழிந்து எதிர் முறைமுறை வணங்கினர் - தமக்குரியபழையவேதங்களை அப்பொருடோன்றப் பாராயணஞ்செய்து துதித்துச் சந்நிதியிலே பலமுறை நமஸ்காரஞ்செய்தனர்;—அரி பிரமர் பரன் அருளை வழங்குவது இது என எழுந்து - அதுகண்ட விஷ்ணு பிரமா என்னு மிருவரும் சிவபெருமான் நமக்குத்திருவருள்செய்தற்கு இதுவே உசித சமையமென்று விரைந்தெழுந்து,—நம் பத நிலை பெற அருள் என்று பரிபுர இருகழல்கள் பணிந்தனர் - நம்பதவிகள் நமக்கென்ஞான்றும் நிலைபெறத் தேவரீர் திருவருள் செய்யுமென்று பிரார்த்தித்து வேதங்களாகிய சிலம்புகள்தரித்த உபயதிருவடிகளை வணங்கினர். எ-று.

அப்பொருள் பதியாகிய சிவபெருமானுக்குப் பசுக்களாகிய தாம் வழித்தொண்டரென்னும் பொருள். ஒரோர்வழிப் பரம்பொருள் யாமே என்று மயங்கும் பிரம விஷ்ணுக்களாகிய நம்போலன்றி, இருடிகள் சிவபெருமானுருவரே பரமபதி யென்றும், நாமெல்லாம் அநாதியே பஞ்சபாசங்களினுற் பந்திக்கப்பட்ட பசுக்கள் என்றும், ஆகலின் அப்பதிக்கு நாம் என்றும் மீளா அடிமைகள் என்றும் வேதாகமங்கள் கூறுமுண்மையை ஒரு

போதும் மறவாத உத்தம சிவபத்திமான்களாகலின், அவ்விருடிகள்வணங்கி யருள்பெறும்போதே அச்சார்புபற்றி நாமும் வணங்கியருள்பெறல்வேண்டு மென வுட்கொண்டு, இதுபா னருளை வழங்குவதென்றாரென்க. அக்கருத்து "வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்டமுழுதுந் தருவோய்நீ, வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய்" "திருப்பெருந்துறை யுறைவான், வானோர்களு மறியாததோர் வளமீந்தனனெனக்கே" 'சுடர்பொற் குன்றைத் தோளாமுத்தை வாளாதொழும் புகந்து, கடைபட்டேனை யாண்டுகொண்ட கருணாலயனைத் திருமால்பிரமன், றடைபட்டின்னுஞ் சாரமாட்டாத் தன்னைத்தந்த வென்னாரமுதை' 'பூமே லயனொடு மாலும் புகலரிதென், றேமாறிநிற்க வினையே னிறுமாக்க, நாய்மேற் றவிசிட்டு நன்றாப் பொருட்படுத்த, தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ' 'அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்குந், தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் வந்து நம்ம, யுருக்கும் பணிகொள்ளுமென்பதுகேட்டுல கமெல்லாஞ், சிரிக்குந் திறப்பாடித் தெள்ளேணங்கொட்டாமோ' என்பனவற்றானு மறிக. பதம் வைகுண்டமும் சத்தியவுலகமுமாம். (௨)

பரவரு மணிகள் விளங்கிய பணவர வணியர னங்கமு
மருவிய தரள வடந்திகழ் மதிநுதன் மலைமக ளங்கமு
மிரவியு மதியு மிருந்தென வெதிரெதி ரிலகுதல் கண்டன
ரரகர சிவசிவ வென்றுள மயர்வுற வழுதன ரன்பினர்.

இ—ள்: பரவு அரும் மணிகள் விளங்கிய பண அரவு அணி அரன் அங்கமும் - விலைசொல்லுதற்கரிய இரத்தினம்விளங்கும் படத்தையுடைய பாம்பை ஆபரணமாக வணிந்த சிவபெருமானது திருமேனியும்,—மருவிய தரள வடம் திகழ் மதி நுதல் மலை மகள் அங்கமும் - வாமபாகத்திற்பொருந்திய முத்துவடம் விளங்கும் மதிபோலும் நெற்றியையுடைய பார்ப்பதியம்மையினது திருமேனியும்.—இரவியும் மதியும் இருந்து என எதிர்எதிர் இலகுதல்கண்டனர் - சூரியனுஞ்சந்திரனுமொருங்கியைந்திருப்பதுபோல ஒன்றற்கொன்று சமீபமாகத் தமக்கெதிரே விளங்குதலைத் தரிசித்து.—அன்பினர் அரகர சிவசிவ என்று உளம் அயர்வு உற அழுதனர் - சிவபத்தர்கள் அரகர சிவசிவவென் றுச்சரித்து மனோலயம்பொருந்த விம்மி அழுதார்கள். எ-று.

இருந்தது எனற்பாலது இருந்து என விகாரமாயிற்று. சூரிய சந்திரர்க ளிருவரும் திருமேனிக ளிரண்டற்கும் முறையே செம்மை தண்மைகளும் அதிக அற்ப விளக்கமும் பற்றிவந்த பண்புவமை. கண்டனர் முற்றெச்சம். உள மயர்வுற என்பதனை உளம் மயர்வுற எனப் பிரிப்பினு மமையும். மயர்வு-பற்று. நிரனிறையணி. இதனை வடநூலார் யதாசங்கியாலங்காரமெனவும், கிரமாலங்காரமெனவும் கூறுப. (௩)

அடியொழி மரமென நொந்துழி னவனியில் விழுவதொ ழிந்துநின், னுடனுறை பெருமை வழங்குவ துளதுகொலென நினை நெஞ்சொடு, மடலவிழ் கடிகம ழைந்தரு மலர்பல முறை முறை சிந்திமுன், னிடமிஃ தெனமகி ழிந்திர னிமையவ ரெவரு மிறைஞ்சினர்.

இ—ள்: இஃது இடம் என மகிழ் இந்திரன் இமையவர் எவரும்- நாம் பெறற்பாலனவற்றைச் சிவபெருமானிடத்துப் பெறுதற் கிதுவே நல்லசமையமென்று மனமகிழு மிந்திரன் முதலிய தேவர்க ளனைவரும்;— பின் - முன்னை நல்வினைக்கீடாகிய இன்ப மீண்டனுபவிக்கப்பட்டு முடிந் தபின்னர்.—நொந்து - இன்னும் நெடுங்கால மீண்டிருந் தின்பங்களை அநுபவித்தற் கேதுவாகிய நல்வினைகளை முன்னர் மிகவுஞ் செய்திருந்தே மில்லையேயென்று மனம்நொந்து.— அடி ஒழி மரம் என அவனியில் விழு வது ஒழிந்து - இனி அடியற்ற மரம்போல இப்போகபூமியினின்றுங் கன் மபூமியின்கண் வீழ்வதைத் தவிர்ந்து.—நின் உடன் உறை பெருமை வழங் குவது உளது கொல் என நினை நெஞ்சு ஒடு - தேவரீரோடிருக்கும் சாமீப மாகிய பதமுத்தியை எமக்குத் தந்தருளுவது மொருகாலத்துண்டு கொல் லோவென் றிங்ஙனம் பலதலையான் மேல்விளைவு கருதும் மனத்தோடும் - மடல் அவிழ் கடி கமழ் ஐந்தரு மலர் பல சிந்தி முன் வணங்கினர் - இதழ் விரிகின்ற நறுமணங்கமழும் பஞ்சதருக்களின் மலர்கள் பலவற்றைப் பல முறைதூவிச் சந்நிதியில் வணங்கினர்கள். எ-று.

பெருமை ஆகுபெயர். வழங்குவது மென்னும் சிறப்பும்மை விகாரத் தாற் றொக்கது. ஐந்தருமலருக்குக் கடிகமழுதல் சாதியடை. இடம் ஈண் டுக்காலத்தின்மேற்று. இடமிஃதென மகிழிந்திர னிமையவர் என்பதற்குச் சிவபெருமான் தம்மெய்யன்பரொருவருக்குத்திருவருள்செய்யத்தொடங்கு மிக்காலமே அச்சார்புபற்றி எம்போலிகளும் திருவருள்பெறுங் காலமாக லின், இதுவே அதற்குநல்லசமையமென்று மனம்மகிழுகின்ற இந்திரன்மு தலிய தேவர்களென விரித்துரைத்துக்கொள்க. மேல் இது பரனருளை வழங்குவதென்றதற்கும் இதனையே கருத்தாகக் கூறுதலுமொன்று. கன்ம பூமி பாரதகண்டம். அது, 'நாலிரு கண்டத்தோரும் விண்ணுளோரு நர கினரு மவ்விடத்தி னண்ணி ஸ்வகி, மேலையிரு வினையாற்றி யவற்றிற் கே ற்ற வியன்பயன்க டுய்ப்பரென விளம்பு மாற்றுற், சீலமிகு பாரதமாங் கண்டமொன்றே தீவினைநல் வினையாகுஞ் செயற்கைக் கெல்லா, மூல மொரு குறைபெறினே வந்துதேவர் முனிவர்களுந் தவம்பூசை முயல்வ ரங்கண்' என்பதனுமறிக. (௬)

வேறு.

திண்டிறன் மிகுஞ்சுரிகை யுந்திகழ் பிரம்புங்
கொண்டருகு நின்றுகுரு நந்தியருள் கூரப்
புண்டரிக மாதுபுவி மங்கையெழில் சிங்கா
வண்டர்மட வார்களுல கன்னைபுற மன்ன.

இ—ள்: குரு நந்தி - சைவசித்தாந்த பிரதம சிவாசாரிய சுவாமிகளாகிய திருநந்திதேவர்.—திண் திறல் மிகும் சுரிகையும் திகழ் பிரம்பும் கொண்டு அருகு நின்று அருள் கூர - திண்ணிய வலிமிக்க உடைவாளையும் பொற்றகடு மருவிவிளங்கும் பிரம்பையும் திருக்கரங்களிற் கொண்டு ஒதுக்கித் திருமருங்கினின்று சந்நிதியை அடைந்தோர்க்குத் திருவருள் சுரக்கவும்,—புண்டரிக மாது புவி மங்கை எழில் சிங்கா அண்டர் மடவார்கள் - செந்தாமரை யாசனியாகிய இலக்குமியும் பூமிதேவியும் அழகு குன்றாத ஏனைத்தேவமகளிரும்,—உலகு அன்னை புறம் மன்ன - உலகமாதாவாகிய உமையம்மைக்கருகே சேவித்துநிற்கவும். எ-று.

பரமகிருபாலுவாகிய திருநந்திதேவர் அணுக்கத் திருத்தொண்டரென்பது விளக்குவார் சுரிகையுந் திகழ்பிரம்புங் கொண்டருகுநின்று குருநந்தியருள் கூர என்றார். திண்மை-உறுதிப்பாடு. சிங்கல்-குறைதல். இது கலிவிருத்தம். (ரு)

துன்னுபல பூதகண நாதர்புடை சூழக்
கின்னரர்கள் கந்தருவர் கீதவிசை பாட
மின்னுமுடி மன்னுநதி வீசுதிரை நன்னீ
ரென்னவொளிர் சாமரை யெழுந்தழகு செய்ய.

இ—ள். துன்னு பல பூத கண நாதர் புடை சூழ - நெருங்கிய பல பூதகணதிபர்கள் பக்கத்தே சூழவும்,—கின்னரர்கள் கந்தருவர் கீத இசை பாட - கின்னரர்களும் கந்தருவர்களும் சாமவேதகீத இசைகளைப்பாடவும்,—மின்னு முடி மன்னு நதி வீசு நல் நீர் திரை என்ன - மின்போலும் சடாமுடியிற் பொருந்திய கங்காநதிவீசும் நல்ல நீர்த்திரைகளைப்போல,—ஒளிர் சாமரை எழுந்து அழகு செய்ய - விளங்குகின்ற வெண்சாமரங்கள் இரட்டப்பட்டுச் சபையை அலங்கரிக்கவும். எ-று.

மின்னுகின்ற எனப் பெயரெச்ச முடிபாக வைத்துரைப்பினு மமையும். (சு)

இந்தவள மல்குசபை யின்னல்கெட மன்னுந்
தந்தைமணி மன்றிலுறை தாண்டவ பதத்தோன்
செந்தமிழின் வந்தசிவ ஞானவமு துண்டா
மந்தமி லருட்கடலை யாண்டருள வேண்டி.

இ—ள். இந்த வளம் மல்கு சபை - இங்ஙனம் நாம்கூறிய வள ங்களனிறைந்த தேவசபையின்கண்ணே,—இன்னல்கெடமன்னுந் தந்தை- ஆன்மாக்களது பிறவித்துன்பம் நீங்கும்பொருட்டு உருவத் திருமேனிகொ ண்டு வீற்றிருந்தருளும் பரமபிதாவும்,—மணி மன்றில் உறை தாண்டவ பதத்தோன் - அழகிய கனகசபையின்கண்ணே தங்கும் அநவரததாண்ட வஞ் செய்தருளுபவருமாகிய சிவபெருமான்,—வந்த சிவ ஞான அமுது செந்தமிழின் உண்டாம் அந்தம் இல் அருள் கடலை - தம்மினின்றும் ஆரிய மொழிவடிவில் வெளிவந்த சிவஞானமாகிய அமுதம் அத்தியற்புத அதி மதுரச் சுத்தச் செந்தமிழ் மொழிவடிவில் உண்டாகப்பெறும் கரையற்ற கிருபாசமுத்திரமுமாகிய திருவாதவூரடிகளை,—ஆண்டருள வேண்டி-அடி மைகொண்டருளத் திருவுளங்கொண்டு எ-று.

கூர, மன்ன, சூழ, பாட, செய்ய, மன்னுந்தந்தை என மேலைச்செய வெனெச்சங்களையெல்லாம் ஈண்டுத் தந்துமுடிக்க. தம்மால் ஆரியமொழி வடிவில் வெளிவந்த சிவஞானம் என்றது வேதத்தின் ஞானகாண்டத்தை அது கேட்போர்க்குக் கழிபெருஞ் சுவையோடு முத்தியாகிய உறுதிபயத்த லின், உண்போர்க்குக் கழிபெருஞ்சுவையோடு கடிதினிறவாமை யாகிய உறுதிபயக்கும் அமுதாக உருவகஞ்செய்யப்பட்டது. அச்சிவஞானமாகிய அமுதமே செந்தமிழ்வேதமாகிய திருவாசகம் திருக்கோவைகளாகத் திரு வாதவூரடிகளிடத்துத்தோன்றுதலானும் அமுதுதோன்றுமிடம்பாற்கடலா தலானும் அத்திருவாதவூரடிகளை அமுது செந்தமிழினுண்டாங்கடல் என் றும், அத்தேவாமுதத்தோடும் அது தோன்றும் பாற்கடலோடும் இவற் றிடை விசேடந்தோன்றச் சிவஞானவமுது எனவும் அந்தமிலருட்கடல் எனவும் விசேடித்துங் கூறினர். (எ)

மைத்தகடன் மண்ணவர்க டம்முருவில் வம்மென்
றத்தகைய பத்தர்கண நாதரை யழைத்தே
சித்திதரு தேசிக சிறந்தவடி வங்கொண்
டுத்தம நெடுங்கயிலை யோங்கலது நீங்கி.

இ—ள்: அத் தகைய பத்தர் கண நாதரை அழைத்து - நாம் முற் கூறிய அத்தகுதிபொருந்திய அன்பர்களாகிய கணநாதர்களை விளித்து,— மைத்த கடல் மண்ணவர்கள் தம் உருவில் வம் என்று - நீங்கள் கரியகடல் சூழ்ந்த மண்ணுலகவாசிகளாகிய மனிதரது வடிவமாக நம்முடன் வாருங் களென்று பணித்து,—சித்திதரு சிறந்த தேசிக வடிவம் கொண்டு - தாமும் பக்குவான்மாக்கட்கு முத்திகொடுக்கு மழகிய ஞானதேசிகத் திருமேனி கொண்டு,—உத்தம நெடும் கயிலை ஓங்கல் நீங்கி - தமது வாசஸ்தானங்க ளைவற்றினும் மிக முக்கிய ஸ்தானமாகிய நெடிய கைலாசகிரியை விட்டு நீங்கி. எ-று.

வேண்டி, கொண்டு, நீங்கி என ஈண்டுத் தந்துமுடிக்க. (அ)

கொன்னெறழி தன்னுருவு கொண்டொருவர் தேடும்
பொன்னடி யெனுஞ்சலச மண்மிசை பொருந்தப்
பன்னுமறை வல்லவர் பரிந்தழல் வளர்ப்பார்
மன்னுமொரு தெய்விக வளம்பதியில் வந்தார்.

இ—ள்: கொன் எறழி தன் உருவு கொண்டு ஒருவர் தேடும் பொன் அடியெனும் சலசம் மண்மிசை பொருந்த - பெரிய பன்றியினது வடிவங்கொண்டு விஷ்ணு தேடி யறிதற்கரிய பொன்போலுந் திருவடித் தாமரைகள் பூமியிற்பொருந்த நடந்தருளி,—பன்னும் மறை வல்லவர் - ஓதப்படும் வேதங்களில் வல்லவரும்,—பரிந்து அழல் வளர்ப்பார் மன்னும்- உலகத்தவர்மீது அன்புகூர்ந்து நித்தியாக்கினி வளர்ப்பவருமாகிய பிராமணர்கள் மிக்கிருக்கும்,—ஒரு தெய்விக வளம் பதியில் வந்தார் - தெய்வத் தன்மைபொருந்திய வளத்தையுடைய ஓர் திருப்பதியின் கண் வந்துசேர்ந் தருளினர். எ-று.

அங்ஙனம் அரிய திருவடிகள் இங்ஙன மெளிவர நடந்தன என்பார் ஒருவர்தேடும் பொன்னடியெனுஞ்சலசமண்மிசைபொருந்த என்றும், நித்தியாக்கினி உலகநன்மையின்பொருட்டு வளர்க்கப்படுதலின் பரிந்தழல் வளர்ப்பாரென்றுங் கூறினர். ஒருவரென்பது தொகைக்குறிப்புப்பெயர்.

வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர் களெல்லா
நம்புசிவ நாமமெனு நற்புணை பிடித்தா
லெம்பர னருட்கரை யிலேறுதுறை யாமா
றம்புவி மொழிந்துள பெருந்துறை யதன்பேர்.

இ—ள்: அதன்பேர் - அத்திருப்பதியின்பெயர்,—வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்கள் எல்லாம் - கொடிய பிறவியாகிய சமுத்திரத்தின் கண் வீழ்ந் தழுந்துகின்ற நம்போலிகளெல்லாம்,—நம்பு சிவ நாமம் எனும் நல்புணை பிடித்தால் - மெய்ஞ்ஞானிகள் நம்புகின்ற சிவமூலமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமென்னும் நல்ல தெப்பத்தைத் தமக்கு ஆதாரமாகப் பற்றிக் கொண்டால்,—எம் பரன் அருள் கரையில் ஏறுதுறை ஆம் ஆறு - எம்முடைய சிவபெருமானது திருவருளான் வரும் முத்திக்கரையில் அவர் ஏறுமிடமாயிருக்குமவ்வேதுவினால்,—அம் புவி மொழிந்துள பெருந்துறை-அழகிய பூமியின்கணுள்ள அறிஞர்கூறிய திருப்பெருந்துறை என்பதாம். எ-று.

ஆற்றினல் என மூன்றுவது விரிக்க. ஆமால் எனப் பாடாந்தரம் கொண்டு, ஆல் என்பதற்கு அக்காரணத்தால் எனப் பொருளுரைப்பாரும் ஆலை அசையென்றொழித்து, பெருந் துறை என்னும் ஏதுப்பெயரை வாளா

பெயராக்கி யிடர்ப்படுவாருமாயினர். ஆல் காரணத்துக்குப் பெயரன்மை யானும், காரணப்பொருளில் வந்த மூன்றும் வேற்றுமையுருபெனின், அது பெயரோடல்லது வினையுடனும் தனித்தும் வாராமையானும், அது இலக்கணநுட்பமில்லாதார் கூற்றேயாமென மறுக்க. புவி ஆகுபெயர். மொழிந்துள என்பதனை மொழிந்து உள எனப்பிரித்து, கூறி வழங்கப்படுகின்ற எனப் பொருளுரைப்பினுமமையும். தன்னுள் வீழ்ந்தாரையும் ஒரோவழிக் கொல்லுதல்செய்யும் ஏனைச் சமுத்திரம்போலன்றிப், பிறவிவேலை எஞ்ஞான்றும் அனைவரையும் தப்பாது தன்னுள் வீழ்த்துக் கொல்லுங்கொடுமைபற்றி அதனை வெம்பிறவி வேலையென்றும், அதனைக் கடக்கமாட்டாத ஏனைத் தெப்பங்கள்போலன்றித் தப்பாது கடக்குமாற்றலொருங்குடைமையிற் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை நற்புணையென்றும் கூறினர். பிடித்தாலென்பது பிடிப்பதனருமை விளக்கிநின்றது. பிடித்தல் மனத்தையொருக்கிச் செபித்தல். புணையாக உருவகஞ்செய்துகொண்டமைக்கேற்பப் பிடித்தாலென்றார். பவசாகரத்தின்வாய்வீழ்ந்தழுந்துகின்ற நம்போலிகளெல்லாம் தன்மாட்டிருந்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி செபித்து வழிபடின், அது தெப்பமாக, முத்திக்கரையிலேறுந்துறையாகிய திவ்விய சிவக்ஷேத்திரமாகலின், இவ்வேதுப்பற்றித் திருப்பெருந்துறையெனக் காரணக்குறியாயிற்றென்பதாம். (க0

ஈனமில் பெருந்துறை யெனும்பதியின் ஞாங்கர்
கானமிகு புன்னைவளர் கந்தமுள சந்தம்
வானமுயர் சண்பக மரந்திகழ் நரந்தந்
தேனின முரன்றெழு செருந்திகள் பொருந்தி.

இ—ள்: ஈனம் இல் பெருந்துறை எனும் பதியின் ஞாங்கர் - குற்றமற்ற அத் திருப்பெருந்துறையென்னும் ஸ்தலத்தின்கண்ணே,— கானம் மிகு புன்னை - வாசனைமிகுந்த புன்னைமரங்களும்—வளர் கந்தம் உள சந்தம் - வளராநின்ற மணத்தையுடைய சந்தனமரங்களும்,—வானம் உயர் சண்பக மரம் - ஆகாயத்தின்கணுயர்ந்த சண்பகமரங்களும்,—திகழ் நரந்தம் - சேய்மைக்கண்விளங்கும் நாரத்தைகளும்,—தேன் இனம் முரன்று எழு செருந்திகள் பொருந்தி - வண்டுக்கூட்டங்கள் ஒலித்தெழுகின்ற செருந்திமரங்களும் பொருந்தி. எ-று.

ஞாங்கர் என்பது ஈண்டு ஏழனுருபு; "அன்னபிறவும்" என்பதனாற் கொள்க. செருந்தி செங்கோடு. (கக

கோடுகவி னும்பெரிய கோங்குமிக வோங்கும்
பாடல நெடும்பலவு பைங்கமுகு தெங்கு
நீடளி யிரைத்தெழு நிரைக்குரவு சூத
மேடவிழ் செழுங்கவி ரிலஞ்சிகண் மலிந்து.

இ—ள்: கோடு கவினும் பெரிய கோங்கு - கொம்பர்கள் விளங்கும் பெரிய கோங்கமரங்களும்,—மிக ஓங்கும் பாலடம்- மிகவுயர்ந்தபாதிரி மரங்களும்,—நெடும் பலவு - நெடிய பலாமரங்களும்,—பைங் கமுகு - பசிய கமுகுகளும்,—தெங்கு - தென்னைகளும்,—அளி இரைத்து எழு நிரை நீடு குரவு - வண்டுகளொலித்தெழும் வரிசையாகிய நெடிய குரா மரக்களும்,—ஏடு அவிழ் செழும் கவிர் - இதழ்விரிகின்ற செழுமையாகிய முருக்குக்களும்,—இலஞ்சிகள் மலிந்து - மகிழமரங்களும் நிறைந்து எ-று.

மாக்கவின் மிகுங்கலப மஞ்ஞைசிறை யன்னங்
கூக்குரல் செயுங்கரிய கோகில நெருங்க
மீக்குலவு மந்தியின முந்துதொறு மேன்மே
லார்க்குஞிமி றெங்கணு மடர்ந்திசை தொடங்க.

இ—ள்: மா கவின் மிகும் கலப மஞ்ஞை - நீலநிறம்பொருந்திய அழகுமிக்க தோகையினையுடைய மயில்களும்,—சிறை அன்னம் - சிறகுகளையுடைய அன்னங்களும்,—கூக்குரல் செயும் கரிய கோகிலம் நெருங்க - காமிகளைக் கூவிக் கலகஞ்செய்யுங் கரிய குயில்களும் நெருங்கவும்,—மீக் குலவும் மந்தி இனம் உந்துதொறும் - மரங்களின்மீது சஞ்சரிக்குங் குரங்குக்கூட்டங்கள் பாயுந்தோறு மெழுந்து,—மேல் மேல் ஆர்க்குஞிமிறு எங்கணும் அடர்ந்து இசை தொடங்க - மேலும் மேலும் சத்திக்கும் வண்டுகளெவ்விடத்தும் பரந்து இராகங்களைப் பாடும்படி தொடங்கவும். எ-று.

கலாபம் கலபமெனக் குறுகிற்று. அடர்தல் - திரிதல். (௬௩)

வீழ்ந்தநற வத்துளி விழிப்புனல தாகச்
சூழ்ந்துமுரல் வண்டினிசை தோத்திரம தாக
தாழ்ந்துமல ரேந்தியிறை தன்றிருமு னின்றே
வாழ்ந்துருகு மன்பரென மன்னுமொரு பூங்கா.

இ—ள்: வீழ்ந்த நறவத் துளி விழிப் புனல் ஆக - பூங்கொத்துக்களினின்றும் வீழ்ந்ததேன் துளிகள் கண்ணீராகவும்,—சூழ்ந்து முரல் வண்டின் இசை தோத்திரம் ஆக - அவைகளைச் சூழ்ந்து சத்திக்கும் வண்டுகளினது கீதம் தோத்திரமாகவும்,—மலர் ஏந்தித் தாழ்ந்து - மலர்களைத் தாங்கிப் பணிந்து,—இறை திருமுன் நின்று - சிவசந்நிதியினின்று,—வாழ்ந்து உருகும் அன்பர் என - பேரனந்தப் பெருவாழ்வடைந்து மனம் நெக்கு நெக்குருகுஞ் சிவபத்தர்களைப்போல,—ஒரு பூங்கா மன்னும் - ஒரு பூஞ்சோலை தங்கும். எ-று.

தாழ்தல் அன்பர்மேற்செல்லுங்கால் வணங்குதலும், பூங்காவின்மேற் செல்லுங்கால் மலரைத் தாங்குதலினாலே பாரமெய்திக் கீழேபணிதலுமாகவுரைக்க. ஒருபூங்காவானது பொருந்தி, மலிந்து, நெருங்கவும்,

தொடங்கவும், ஆகவும், ஆகவும், தாழ்ந்து, எந்தி அன்பரெனப் பெருந் துறையெனும்பதியின் ஞாங்கர் மன்னும் எனக் கொண்டுகூட்டி முடிக்க. இதனுட் டாழ்ந்து மலரேந்தி என்பழிச் சொற்கணின்றுங்குறிப்பப்பொருள் இருதிறப்படுதலின், இது 'செம்மொழிச்சிலேடை' என்னும் அலங்காரமும், அன்பரென மன்னுமொரு பூங்கா என்பது 'விரியுவமாலங்கார'முமாம். சிலேடையோடுகூடி உவமாலங்காரம் வருதலை "அற்புதஞ் சிலேடை யதிசயம் விரோத, மொப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம், விலக்கேயேது வென வேண்டவும் படுமே." என்பதனானறிக. (கச)

வாய்த்தவள மிவ்வகை வயங்குமத ணுப்ப
ணேத்தரு தவச்சினைக ளெங்கணு நெருங்க
மீத்திக ழறக்குழை தழைத்துமிளிர் மெய்ம்மை
பூத்தறிஞர் போன்றெழில் பொருந்துமொர் குருந்தம்.

இ—ள்: வாய்த்த வளம் இவ்வகை வயங்கும் அதன் நாப்பண் - சிறந்தவளங்கள் இங்ஙனம் விளங்கும் அதன்மத்தியிலே,—ஏத்து அருதவச் சினைகள் எங்கணும் நெருங்க - சொல்லுதற்கரிய தவமாகிய கிளைகள் எவ்விடத்தும் நெருங்க,—மீத் திகழ் அறக் குழை தழைத்து - மேலாக விளங்கும் தருமமாகிய இலைகள் பொதுளி;—மிளிர் மெய்ம்மை பூத்து - இருவகைக் குற்றமுமற்று விளங்கும் மெய்ஞ்ஞானமாகிய பூக்களைப் பூத்து,—அறிஞர் போன்று - அறிஞர்களையொத்து,—ஒரு குருந்தம் எழில் பொருந்தும் - ஓர் குருந்தமரம் அழகுடனிற்கும். எ-று.

ஏத்து முதனிலைத்தொழிற்பெயர். ஏ - உயர்ச்சி; என்பாருமுளர். நாப்பண் பொருந்துமென வியையும். மெய்ம்மை ஆகுபெயர். எழிலோடென மூன்றுவது விரிக்க. ஐம்பொறிகட்கும் மனத்துக்குமினிய வளமென்பார் வாய்த்தவளமென்றும், எவரானுந் தன்பெருமை கூறுதற்கரியதவமென்பார் ஏத்தருதவமென்றும், அறம் பொருள் இன்பம் வீடென்னும் புருஷார்த்தம் நான்கனுள்ளும் இறுதிக்கண்ணதாகிய வீட்டுக் கேதுவாய், ஏனைப்பொருளின்பங்களிரண்டினும் மிக மேலாய், முதற்கண் வைக்கப்பட்டு விளங்கும் அறமென்பார் மீத்திகழறமென்றும், அவ்வறங்கள் பலவற்றுள்ளும் தனக்கொப்புயர்வின்றிச் சந்தேக விபரீதமாகிய இருகுற்றமுமற்று விளங்கும் மெய்ம்மையென்பார் மிளிர்மெய்ம்மை என்றும் கூறினார். அக்குருந்து பரமாசாரியர் தன்கீழ் வீற்றிருக்கப்பெறுதலாகிய அரும்பெரும்பேற்றையுடைமையான், அதற்கு அத்தவம்முதலியவற்றைச் சினைமுதலியவாகவுருவகஞ்செய்து, அவைகளையுடைய அறிஞரைப்போன் றழகுடனிற்குமென் றிங்ஙனம் விசேடித்தார் என்க. குருந்தின்மேற் செல்லுங்கால் ஏத்து அருதவச்சினைகள் என்பதற்கு உன்னதமான அரிய மிக்க சாகைகள் என்றும், அறக்குழை என்பதற்கு அதிபத்திரமென்றும், மெய்ம்மைபூத்தென் பதற்குப் பொய்ப்பூவன்றிக் காய்க்கும்பூவைப் பூத்து எனவுமுரைக்க. இதுவும் மேலையலங்காரம். (கரு)

ஆர்வமுடன் வந்தின மகப்பட வழைக்கும்
பார்வையென மாந்தர்படி வங்கொடு நடந்தார்
ரேர்வரு குருந்தமொ டிலங்குமுயர் காவிற்
சேர்குவ மெனத்திரு வுளத்தருள் சிறந்து.

இ—ள்: ஆர்வமுடன் வந்து இனம் அகப்பட அழைக்கும் பார்வை என - பிறர் குறிப்புடன் வந்து தன்னினம் அவர்கை அகப்படும்படி அதன் குரலான் அழைக்கும் பார்வை மிருகத்தைப்போல,—மாந்தர் படிவம் கொடு நடந்தார் - மேற்கூறியபிரகாரம் திருவாதவூரடிகளை அடிமைக் கொள்ளும்பொருட்டு அவர்போலும் மானுடவடிவங்கொண் டெழுந்தருளி வந்த சிவபெருமானனவர்.—ஏர் வரு குருந்தம் ஒடு இலங்கும் உயர்காவில் சேர்குவம் எனத் திரு உளத்து அருள் சிறந்து - அழகுபொருந்திய அக் குருந்தமரத்தோடு சேர்ந்து விளங்கும் உயர்வாகிய அப்பூஞ்சோலையின் கண்ணே நாமடைவோமென்று திருவுள்ளத்தின்கட் கிருபைகூர்ந்து. எ-று.

அழைத்தல் விளித்தல். தன்னினம் தன்சாதிவிலங்கு. பார்வை தீபகம். அது "ஒங்கும்விஞ் ஞானிகட்கோர் மலநீக்க வொளியுருவாந், தாங்கும் பிரளயர்க்கீர் மலநீக்கச் சதுர்ப்புயங்கொண், டாங்கதிநீக்குஞ் சகலர்க்கு மும்மல மாய்ந்தறுக்கப், பாங்குறு தீபகம்போ லுருக்கொண்டு பரன்வருமே." என்பதனுனும், "போக்குமீட்சியுட்புறம்பிலாப் பூரண வடிவ. மாக்கினனொருதீபகம்போல்வருமண்ணல்" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானுமறிக. இது தொழில்பற்றிவந்த உவமாலங்காரமென்க. ()

வந்துதிகழ் தொண்டர்புடை சூழமகிழ் வெய்திக்
கொந்தலர் மலர்ப்பொலி குருந்தடி பொருந்தி
யந்தமுத லில்லவ ரருட்டமி ழுரைப்பார்
பந்தமறு மெல்லையது பார்த்தினி திருந்தார்.

இ—ள்: முதல் அந்தம் இல்லவர் - ஆதிமத்தியாந்தரகிதராகிய பரமாசாரியர்,—திகழ் தொண்டர் மகிழ்வு எய்திப் புடை சூழ வந்து - திருத்தொண்டர்கள் மனமகிழ்ச்சிகொண்டு தம்பக்கத்தே சூழ இங்ஙனம் வந்து,—கொந்து அலர் மலர்ப் பொலி குருந்து அடி பொருந்தி - கொத்துக்களின்மலர்ந்த பூக்களினற் பொலியும் அக்குருந்தமரத்தினடியை அடைந்து.—அருள் தமிழ் உரைப்பார் பந்தம் அறும் எல்லை இனிது பார்த்து இருந்தார் - அருட்பாவாகிய திருவாசகத்தைப் பாடியருளும் திருவாதவூரடிகளது பாசக்கட்டறுங் காலவரையறையை முற்பிற்பாடற எதிர்நோக்கி இருந்தருளினர். எ-று.

"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்னு முபலக்கணத்தான் அந்தமுதலில்லவர் என்பதற்கு ஆதிமத்தியாந்தரகிதரெனப்

பொருளுரைக்கப்பட்டது. கைலாசகிரியினின்றும் ஈண்டெழுந்தருளின மைதோன்றத் தன்மையிடத்திற்குச் சிறந்த வங்கென்னு மெச்சத்தாற் கூறினுரென்க. கொத்து பூங்கொத்து. (கஎ)

பொங்குபுனல் யாறுபல போய்விழு கடற்போ
லெங்குமுள நல்லுயிர்க ளெய்துமொளி யாகுந்
திங்களணி வேணிய ரிருப்பவடி சேருந்
துங்கமறை யாளர்பலர் துன்றுநெறி சென்றூர்.

இ—ள்: பொங்கு புனல் யாறு பல போய் விழு கடல் போல் - மிக்க நீரையுடைய ஆறுகள் பலபோய் வீழ்கின்ற ஒரு சமுத்திரத்தைப் போல,—எங்கும் உள நல் உயிர்கள் எய்தும் ஒளி ஆகும் திங்கள் அணி வேணியர் இருப்ப - உலகெங்குமுள்ள பக்குவான்மாக்களனைத்தும் சென்று மீளாது கலக்கும் நின்மலவொளிவடிவாகிய பாலசந்திரனையணிந்த சடையையுடைய பரமாசாரியர் இங்ஙனம் வீற்றிருப்ப,—அடி சேரும் துங்க மறையாளர் - அவருடைய திருவடிகளை இனி அடையப்பெறும் பிராமணோத்தமராகிய திருவாதவூரடிகள்,—பலர் துன்றும் நெறி சென்றூர் - பலரும் போக்குவரவுசெய்யும் அந்நெறிக்கட் போயினுர். எ-று.

ஆற்றுநீர் தன்கட்சென்று பின்னர் மீளப் பெருதகடல் ஆன்மா தன்கட்சென்று பின்னர்க் கருவிக்கோத்தின் மீளப் பெருத சிவத்திற்குத் தொழிற்சார்புபற்றிவந்த பொருளுவமையென்க. அது "முன்னிறை நீர் சிறைமுறிய முடுகி யோடி முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல்" என்பதனுனுமறிக. இதனுட் பொங்குபுனல் யாறெ்ன உவமையைப் புகழ்ந்து சிறப்பித்தமையின், இது 'புகழ்பொருளுவமாலங்கார' மென்க. (கஅ)

வேறு.

செம்மனத்து வாதவூர்ச் செல்வர்தமைப் புல்லாத
பொய்மயக்கந் தரும்பாசம் போலமலர்ந் தனபூவை
எம்மயக்கு மொழிப்பவருக் கினிப்பிறவி யில்லையெனக்
கைம்மறிக்கு மவர்போல மலர்ந்தனவங் குளகாந்தள்.

இ—ள்: செம் மனத்து வாதவூர்ச் செல்வர் தமைப் புல்லாத பொய்ம் மயக்கம் தரும் பாசம்போல - சித்தசுத்தியையுடைய அருட்செல்வராகிய திருவாதவூரடிகளை இனிப் பந்தியாத பொய்யாகிய மயக்கத்தை விளைவிக்கும் பாசங்களைப்போல,—அங்கு உள பூவை மலர்ந்தன - அந்நெறியின்கணுள்ள காயாக்கள் கரிய பூக்களை மலர்ந்தன,—எம் மயக்கும் ஒழிப்பவருக்கு இனிப் பிறவி இல்லை எனக் கைம்மறிக்குமவர்போல - பெண் பொன் மண்ணென்னும் எவ்வகை மயக்கங்களையும் ஒருசேர நீக்கியருளு மவ்வடிகளுக்கு இனிச் சனனமில்லையென்று கையமைத்துத் தடுத்

துக் காட்டுபவரைப்போல,—காந்தள் மலர்ந்தன - அங்குள்ள காந்தட் செடிகள் மலர்ந்தசைந்தன. எ-று.

செம்மனம் செம்மையாகியமனம். வாதவூர்ச்செல்வர் வாதவூரி லவதரித்த செல்வர். அவரைப் புல்லிய பாசம் இதுபொழுது மலராமையின் உவமையாகா என்பார் செல்வர்தமைப்புல்லாத பொய்ம்மயக்கந்தரும் பாசம்போல என்றும், உண்மைதெளிந்தவழிக் கயிற்றி லரவுபோலக் கெடுதலின் நிலையற்ற மயக்கமென்பார் பொய்ம்மயக்கமென்றும், மூவேடணையல்லது மயக்கவினைவிற்கு வித்து வேறொன்றின்மையின் எல்லாம் இவையே என்பார் எம்மயக்கும் என்றும் கூறினர். எடணை - விருப்பம்; பிணக்கென்பாருமுளர்; இப்பொருட்கு மூவேடணை அருத்தவேடணை, புத்திரவேடணை, உலகவேடணை என்பனவாம். புல்லாத மயக்கமென முடித்தலுமொன்று. காந்தள் கைக்குவமையாகலின் இங்ஙனங்கூறினர். இது தரவு கொச்சகம். இதனுட் பொய்ம்மயக்கந்தரும் பாசம்போல என உவமையைப்பழித் துவமித்தலின், இது 'நிந்தையுவமாலங்கார'மாம். இன்னும், எம்மயக்கு மொழிப்பவருக் கினிப்பிறவியில்லையெனக், கைம்மறிக்குமவர்போல மலர்ந்தனவங்குளகாந்தள் என்பது தற்குறிப்பேற்றத்தை அடியாகவும், நுட்பமென்னு மலங்காரத்தை அங்கமாகவுங்கொண்ட விரியுவமாலங்காரமென்க. "தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினு, மரிதுணர் வினைத்திற நுட்பமாகும்" என்பதனுன் நுட்பமென்னு மலங்காரவியல்பு தெள்ளிதிற்பெறப்படும். (௧௬)

விற்காட்டுங் கரத்துமத னம்பாகி வெம்பிறவி
யிற்காட்டி யாவரையு மாகுலஞ்செ யெம்பாவ
நிற்காட்டி லொழிப்பவர்யார் நீயருள்க வெமக்கென்று
பற்காட்டி நிற்பவர்போன் மலர்ந்தனமென் பனிமுல்லை.

இ—ள்: மதன் கரத்து வில் காட்டும் அம்பு ஆகி - நாம், மன்மதனது கையின்கணுள்ள வில்லானது தன்கட்கொண்டு காட்டும் புஷ்பபாணங்களாகி,—யாவரையும் வெம் பிறவி இற்கு ஆட்டி - ஆடவர்மகளிர் அனைவரையும் கொடிய பிறவியைத்தரும் இல்லறத்தின்கட் கூத்தாட்டி,—ஆகுலம் செய் எம் பாவம் - வியாகுலஞ்செய்யு மெமது பாவத்தை,—நின் காட்டில் ஒழிப்பவர் யார் - தேவரீரினும்பார்க்க நீக்கவல்ல பரமாசாரியர் வேறுயாவருளர் (ஒருவருமிலர் ஆகலான்),—நீ எமக்கு அருள்க என்று பல் காட்டி நிற்பவர் போல் - நீரே யெமக் கருள்செய்கவென்று பல்லைக்காட்டிக் கெஞ்சி நிற்பவரைப்போல,—மென் பனி முல்லை மலர்ந்தன - மென்மையாகிய பசிய முல்லைக்கொடிகள் மலர்ந்தன. எ-று.

முதலடியை இங்ஙனங் கொண்டுகூட்டாது யாற்றுநீர்ப் பொருள்கோளாகவைத்துரைப்பினு மமையும். இற்கென்னும் நான்கனுருபு ஏழனுருபாகத் திரிக்கப்பட்டது. இல் இல்லறம். நின்னீறு ஈண்டியல்பா

காது திரிதல் "உறவே" என்னும் இலேசாற் கொள்க. காட்டில் என்பது முன்னர் ஐகாரம்பெற்று, ஐந்தனுருபின் எல்லைப்பொருட்கண் வருவ தோர் சொல்லுருபு; "இளந்தவல்ல வேறுபிற தோன்றினும்" என்பதனுற் கொள்க. நீயேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற் ரொக்கது. முல்லையரும்பே பற்குவமையாயினும், பல்லையிழித்துக்காட்டி நெடிது நிற் றற்காயின் மலரு முவமையாமென்பார் நிற்பனபோன் மலர்ந்தன என் ருர். முல்லைக்கொடிகட்கு வர்க்கசுபாவமான அலர்தலின்மேற் கவி தாங் கருதிய பற்காட்டிநிற்றலை ஆரோபித்தலின், இது 'அல்பொருட்டற் குறிப் பேற்றமென்னு மலங்கார'மென்க. இதனை வடநூலார் உத்பிரேக்ஷாலங் காரமென்பர். (உ௦)

பொற்புடைய தமிழ்பாடும் புண்ணியரெப் பொருளினுமாஞ்
சிற்பரனுண் மையில்விழிக்குந் திருநயனஞ் சேர்தலினு
னிற்பதுவாம் பிறவியிது வென்றிரங்கி நீண்மரங்கள்
கற்பனையை யுணர்ந்துமலர்க் கண்ணீர்கள் பொழிந்தனவால்

இ—ள்: நீள் மரங்கள் - அந்நெறியின்கணிற்கும் நெடியமரங் கள்,—பொற்பு உடைய தமிழ் பாடும் புண்ணியர் - அழகையுடைய தமிழ் வேதமாகிய திருவாசகத்தைப் பாடியருளும் புண்ணியபுருஷராகிய திரு வாதவூரடிகளது,—எப் பொருளினும் ஆம் சித் பரன் உண்மையில் விழிக் கும் திரு நயனம் சேர்தலினல் - சகல பிரபஞ்சப்பொருளினும் வியாபித் துநிற்கும் சூக்குமசித்தாகிய சிவபெருமானது சத்தியநிர்வாணம்போலும் மலர்ந்த திருக்கண்ணோக்கம்பெற்ற விசேடத்தினல்,—இது பிறவி நிற் பது ஆம் என்று (உணர்ந்து) - எம்முடைய இப்பிறவி நிலையியற்பொருளா கிய தாவரப்பிறவியென்றறிந்தும்,—கற்பனையை உணர்ந்து இரங்கி - அது முத்திக்கருகமற்றதென்னும் ஆகமவிதியை அறிந்தும் இரக்கங்கொண்டு,— மலர்க் கண் கள் நீர் பொழிந்தன - மலர்களாகிய கண்களினின்றுந் தேனு கிய நீரைப்பொழிந்தனபோலும். எ-று.

பொற்பு சுருங்கச்சொல்லன் முதலிய அழகு. இல்லென்னும் ஐந்த னுருபு உவமப்பொருட்கண் வந்தது. போலுமென்னும் செய்யுமென் முற்றெஞ்சிநின்றது. புண்ணியரது நயனமென வியையும். உண்மை ஆகு பெயர். சத்தியநிர்வாணம் சிவதீக்கைகளுட்சிறந்தவொன்று. அது தன் னைப்பெற்ற பக்குவர்க்கு உடனே முத்திப் பயன்கொடுத்தல்போலத் திருக் கண்ணோக்கமும் தன்னைப்பெற்ற அம்மரங்கட்கு உடனே அறிவுப்பயன் கொடுத்ததென்பது பெறப்படுதலின், இது பயனுவமையென்க. உணர்ந் தென்பது முன்னும் கூட்டப்பட்டது. திருவாதவூரடிகள் செல்லும் அந் நெறிக்கணிற்கும் மரங்கள் பூந்தேனைப்பொழிதல் அவ்வடிகளது திருக் கண்ணோக்கம் பெற்ற விசேடத்தாலே தாம் அவ்வடிகளைப்போலன்றி முத்திக்கருகமற்ற நிலைமையையறிந் திரங்குவனபோலுமென்பதாம். உமா

பதிசிவாசாரிய சுவாமிகளாலே தாவரப்பொருளாகிய முள்ளிச்செடி முத்தி பெற்றதென்னையென்னும் ஆக்ஷேபத்தை ஒழித்தற்குக் கற்பனையை உணர்ந் தென விசேடிக்கப்பட்டது. இது சிலேடையோடு கூடிவந்த தற்குறிப் பேற்றமென்னு மலங்காரமென்க.

இதற்கின்னுமோருரைவருமாறு:— நீள் மரங்கள் - அந்நெறியின் கணிற்கும் நெடிய மரங்கள்,—பொற்பு உடைய தமிழ் பாடும் புண்ணியர் - அழகையுடைய தமிழ்வேதமாகிய திருவாசகத்தைப் பாடியருளும் புண் ணியபுருஷராகிய திருவாதவூரடிகள்,—எப்பொருளினும் ஆம் சித் பரன் உண்மையில் விழிக்கும் திருநயனம் சேர்தலினால் - சகல பிரபஞ்சப்பொரு ளினும் திலதைலம்போல வியாபித்துநிற்கும் சூக்குமசித்தாகிய சிவபெரு மான் உண்மையாக நோக்கியருளும் திருநயனதீக்ஷையாகிய சாக்ஷுஷி தீக்ஷையை இனிப் பெறுதலினால்,—இது பிறவி நிற்பது ஆம் என்று - இவர்க் கநாதியாகவரு மிப்பிறவி இனி இவ்வளவி னொழிவதாமென்று கருதி,—கற்பனையை உணர்ந்து - தாவரப்பொருளாகிய தமக்கு இங்ஙனம் முத்தி சித்தியாதென்னும் விதியை அறிந்து,—மலர்க் கண் கள் நீர் பொ ழிந்தன - மலர்களாகிய கண்களினின்றும் தேனாகிய நீரைப் பொழிந்தன போலும். என்பதாம்.

புண்ணியர் சேர்தலினால் எனவியையும். நயனம் ஆகுபெயர். அவ் வடிகளை அநாதியே பந்தித்த பாசத்தை நீக்கும் தீக்ஷாநோக்கமாகலின் உண்மையில் என விசேடிக்கப்பட்டது. இரங்கல் மரமிரங்கல். அம்மரங் கள் அவ்வடிகள் பெறும்பேற்றைத் தாம் பெறாமைக்குத் தம்மை நொந் திரங்குவனபோலும் என்பதாம். (உக)

முன்னைவினைப் பெருங்காடு மூடுறவைம் புலவேடர்
துன்னியலைத் திடர்செய்யுந் துன்பவழி செல்லாம
லுன்னருநற் சிவஞான வுபதேசந் தமிழ்செய்வா
ரின்னவகைத் துளகான மெய்தியவந் நெறிநீங்கி.

இ—ள்: உன் அரும் நல் சிவஞான உபதேசம் தமிழ் செய்வார் - இத்தன்மைத்தென்று நம்மனோரா னினைத்தற்குமரிய சிவஞானோபதேசத் தைத் தமிழிலே திருவாசகமாக மொழிபெயர்த்துச் செய்பவராகிய திருவாத வூரடிகள்,—முன்னை வினைப் பெருங் காடு மூடுற - பழைய இருவினையா கிய பெரியகாடு மூட,—ஐம்புல வேடர் துன்னி அலைத்து இடர் செய்யும் துன்ப வழி செல்லாமல் - ஐம்புலன்களாகிய வேட்டுவர் அதனுண் மறைந்து நின்று ஆறலைத்துப் பலதிறத்தனவாகிய இடும்பைகளைச்செய்யும் பிறவி நெறிக்கட் பிரவேசியாமல்,—இன்ன வகைத்து உள கானம் எய்திய அந் நெறிநீங்கி - இத்தன்மைகளையுடைய வனத்தின்கட் சென்ற அந்நெறியை விட்டுநீங்கி. எ-று.

மூடுற ஒருசொன்னீர்மைத்து; நன்குமூட என்றதாம். அறிவுப்பெருஞ்செல்வத்தை முழுவதுங் கொள்ளைகொள்ளுதலின் ஐம்புலன்களை வேட்டுவராகவும், அதற்கின்றியமையாத மறைவிடமாந் துணைசெய்து நிற்றலின் இருவினைகளைக் காடாகவும் உருவகஞ்செய்தார். அங்ஙனம் துணைசெய்துநிற்றல் அநாதியாக வுண்மையின் வினைக்காடு பெருங்காடென விசேடிக்கப்பட்டது புலனும் துன்பமும் ஆகுபெயர். (உஉ)

வேறு.

விரிந்தகட லுக்கிடை விழுந்திட ருழந்தே
திரிந்தவர் நயந்துகரை சென்றணுகு மாபோல்
வருந்தவுழல் வித்தவினை யொத்தருள் வசத்தா
லருந்தவர் பெருந்துறை மருங்கினி லணைந்தார்.

இ—ள்: விரிந்த கடலுக்கு இடை விழுந்து இடர் உழந்து திரிந்தவர் - பரந்த சமுத்திரமத்தியின்கண் வீழ்ந்து துன்பத்தை யநுபவித்துத் திரையான் மொத்துண்டு அச்சமுத்திரமெங்கும் அலைந்து திரிந்தவர்கள்,—கரை நயந்து அணையு மா போல் - பின்னர்க் கரையையடையுங் கான் மிக விரும்பியடையுமாறுபோல.—அரும் தவர் - அரிய தவத்தையுடைய திருவாதவூரடிகள்.—வருந்த உழல் வித்த வினை அருள் வசத்தால் ஒத்து - இதுகாறும் சனனமரணங்களில் வருந்தும்படி மூன்றுலகினு முழலச் செய்த தமதிருவினைகளும் இதுபொழுது திருவருள்வாயிலாகத் தம்முளொத்துவரப்பெறுதலான்,—பெருந்துறை மருங்கினில் (நயந்து) அணைந்தார் - திருப்பெருந்துறையின் சமீபத்தில் அதனை மிக விரும்பி அடைந்தார். எ-று.

ஒத்தலான் என்பது ஒத்தெனத்திரிந்து நின்றது; 'எழுவாரையெல்லாம் பொறுத்து'' என்புழிப்போல. இருவினையொப்பு முன்னர்க் கூறுதும். இது கலிவிருத்தம். இது மறுபொருளுவமையணி. (உங)

இந்தவுல கஞ்சிவ னிருக்குமுல காகச்
சிந்தையருள் கொண்டுதிரு வாசக முரைப்பார்
பந்தமற வந்தமில் பரங்குறுக வென்றே
வந்துள பெருந்துறையின் வண்மையுரை செய்வாம்.

இ—ள்: சிந்தை அருள் கொண்டு திருவாசகம் உரைப்பார் - உலகங் கடைத்தேறும்பொருட்டுத் திருவுள்ளத்திற் கிருபைகூர்ந்து திருவாசகம் பாடியருளுந் திருவாதவூரடிகள்,—பந்தம் அற அந்தம் இல் பரம் குறுக என்று - பாசக்கட்டறுக, மீளாத பரமுத்திபெறுக எனத் திருவுளத்தடைத்து,—இந்த உலகம் சிவன் இருக்கும் உலகு ஆக வந்துள - இப்பூலோகஞ் சிவலோகமாகச் சிவபெருமான் நேரே எழுந்தருளிவந்து வீற்றிருக்கப்பெற்ற,—பெருந்துறையின் வண்மை உரை செய்வாம். திருப்பெருந்துறையின் வளத்தைச் சிறிதுசொல்வாம் எ-று.

அற, குறுக என்பன அகரவீற்று வியங்கோள். திருவாதவூரடிகள் பந்தமறுக, பரமுத்திபெறுக என முடிக்க; செயவெனெச்சங்களாக வைத்

துரைப்பினு மமையும். சிவனெனன மேல் வந்தமையின் வருதல்வினைக்கு வினைமுதல் கூறுதொழிந்தார். சிந்தையருள்கொண்டு வந்துள பெருந் துறை எனச் சிவன்மேலேற்றி முடித்தலுமாம். திருப்பெருந்துறை சிவ பெருமான் சிவலோகத்தில் வீற்றிருத்தல்போல உருவத்திருமேனிகொ ண்டு நேரே எழுந்தருளிவந்து தன்மாட்டு வீற்றிருக்கப்பெறுதலின், அத னைத் தனக்கங்கமாகவுடைய பூலோகத்தைச் சிவலோகமென்னும் பொரு ள்பட இந்தவுலகஞ் சிவனிருக்கு மூலகாக வந்துள பெருந்துறை என்றும், பாசநீக்கமாத்திரையே முத்தியென்பார் மதத்தை மறுத்தற்பொருட்டுப் பந்தமற வென்றவளவினமையாது அந்தமில் பரங்குறகவென்றும் கூறி னர். இவ்வுலகஞ் சிவனிருக்குமூலகாக வந்தருளினமையை "அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த, வப்பார் சடையப்பனானந்தவார்கழலே, யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கு, மப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய்" என்னுந் திருவாக்கானு மறிக. (உ௪)

மாத்தியர் குலத்தலைவர் வன்பிறவி யெவ்வந்
தீர்த்துலக வையரருள் செய்யுமிட மென்றே
தோத்திர முரைத்துமிசை வந்துசுரர் சிந்தும்
பூத்திர ளுதிர்ந்தவகை போன்றதலர் பொங்கர்.

இ—ள்: அலர் பொங்கர் - நாம் மேலேசுட்டிய அப்பூஞ்சோலையா னது,—மாத்தியர் குலத்தலைவர் வல் பிறவி எவ்வம் தீர்த்து - ஆமாத்திய குல முதல்வராகிய திருவாதவூரடிகளது வலிய சனனதோஷத்தையொ ழித்து,—உலக ஐயர் அருள் செய்யும் இடம் என்று - விச்சுவாதிகராகிய சிவபெருமான் திருவருள்செய்யுமிட மிஃதென்று கருதி,—சுரர் மிசை வந்து தோத்திரம் உரைத்துச் சிந்தும் பூத்திரள் உதிர்ந்த வகை போன் றது - தேவர்கள் ஆகாயத்தில் வந்துநின்று தோத்திரஞ்செய்து சொரியும் பூவினது கூட்டம் உதிர்ந்து கிடந்ததை ஒத்தது. எ-று.

அநாதியாக வருகின்றமையானும் உலகவையரதருளானன்றிப் பிறி தொன்றாற் றீராமையானும் வன்பிறவியெவ்வமென விசேடிக்கப்பட் டது. வண்டுகளின துச்சவிசையுண்மையிற் றோத்திரமுரைத்தென்றார். வகை தன்மை. மலர்களின் விசேடமும மிகுதியும் கூறியவாறெனக. (உ௫)

வேறு.

பேறறிந்து தவமுயல்வோ மென்றுபெருந் துறைநாடி
யாறியங்கி யிளைக்குமவர்க் களிக்கவெதிர் நிற்பவர்போற்
கூறுமின்ப நிழல்செய்து குறையாத பத்தியுட
னீறணிந்து சோறேந்தி நின்றனதுன் றியகைதை.

இ—ள்: பேறு அறிந்து தவம் முயல்வோம் என்று - பெறற்பால தின்னதென்றறிந்து அதனைப் பெறும்பொருட்டுத் தவஞ்செய்வோமென்று

கருதி;—பெருந்துறை நாடி ஆறு இயங்கி இளைக்குமவர்க்கு அளிக்கஎதிர் நிற்பவர்போல் - திருப்பெருந்துறையை நோக்கி வழிநடந்து பசிதாகங்களான் மெலியுந் திருவாதவூரடிகளுக்கு அம்மெலிவுநீங்க வேண்டுவகொடுத்துபசரிக்கும்படி எதிர்வந்து நிற்கும் அடியார்க்கடியவரைப்போல,—துன்றிய கைதை - நெருங்கிய தாழைகள்,—கூறும் இன்ப நிழல்செய்து - விதந்து கூறத்தகும் இன்பம்பொருந்திய நிழலைச்செய்து,—குறையாத பத்தி உடன் - நிறைந்த பத்தியுடனே,—நீறணிந்து சோறு ஏந்தி நின்றன - நீற்றையணிந்து சோற்றைத்தாங்கி நின்றன. எ-று.

நிற்பவர்மேற் செல்லுங்கால் நிழல் பந்தர்நிழலும், பத்தி சிரத்தையும், நீறு விபூதியும், சோறு திருவமுதுமாம். கைதைமேற் செல்லுங்காற் பத்தி வரிசையும், நீறு மகரந்தமும், சோறு துணர்ச்சோற்றியுமாம். பூந்தர் நிழல் வெய்யில் வெப்பத்தையும் தாகத்தையு மொருங்குநீக்கும் நீர்ப்பந்தர் நிழலென்பது விளக்குதற்குக் கூறுமின்பநிழலென விசேடிக்கப்பட்டது. பேறறிந்து தவமுயல்வோமென்றது தாழை. இது தரவுகொச்சகம். இது செம்மொழிச்சிலேடையோடு கூடிவந்த 'மறுபொருளுவமாலங்கார' மெனக. (௨௬)

நிலந்தனில்வந் தொருகுருந்த நீழலிலே யெவ்வுலகுங்
கலந்தபொரு ளிருந்தபடி கண்டுமனங் களிப்பெய்தித்
துலங்கியதங் கண்ணீருஞ் சொரிந்துகரங் குவித்துமுக
மலர்ந்தபெருந் தவர்போல மலர்ந்தனபுண் டரிகங்கள்.

இ—ள்: எவ் உலகும் கலந்த பொருள் - சர்வலோகங்களினும் மணியு மொலியும்போல வியாபக வியாப்பியமாய்க் கலந்திருக்கும் பரம்பொருளாகிய சிவபெருமான்,—நிலந்தனில் வந்து ஒரு குருந்த நீழலில் இருந்த படி கண்டு - இந்நிலவுலகத்தின்கண் வந்து திருப்பெருந்துறையில் ஓர் குருந்தமரநிழலில் எழுந்தருளியிருந்தமையைத் தரிசித்து,—மனம் களிப்பு எய்தி-மனங் களிகூர்ந்து,—துலங்கிய தம் கண் நீரும் சொரிந்து - தம்மனத்தின்கணுள்ள அன்பைப் புறத்தேவிளக்கும் கண்ணீரையும் பொழிந்து,—கரம் குவித்து - கைகுவித்து,—முகம் மலர்ந்த பெருந்தவர் போல - முகமலர்ச்சியடைந்த பெரிய தபோதனரைப்போல,—புண்டரிகங்கள் மலர்ந்தன - தடாகங்களினுள்ள செந்தாமரைகள் விகசித்தன. எ-று.

துலக்கிய என்பது எதுகைநோக்கி மெலிந்துநின்றது. இனி ஆனந்தபாஷ்பமென்பது விளக்குதற்குத் துலங்கியவென விசேடிக்கப்பட்டதெனக் கோடலுமாம். உம்மை எச்சவும்மை. புண்டரீகம் புண்டரிகமெனக் குறுகிற்று. புண்டரீகங்கண்மேற் செல்லுங்காற் கண்ணீர் தேனொழுகிய நீரெனவும், கரங்குவித்தென்றது ஒப்புமைபற்றி அரும்புகளையுணர்த்திநின்றதெனவும், முகமலர்ந்தென்றது நாண்மலரையுணர்த்திநின்றதெனவுங்கொள்க. இது சுவையணியோடு கூடிவந்த 'மறுபொருளுவமாலங்கார' மெனக. (௨௭)

ஆன்றபயன் பிறர்நுகர வகத்தினிமை யுளதாகத்
தோன்றியநல் லறிவினர்போற் றுவன்றியெழுந் தனகன்ன
லேன்றகுல மாதர்தம திறைவர்முக நாடிலவர்
வான்றகைய நிலையென்ன வளைந்துவிளைந் தனசெந்நெல்.

இ—ள்: ஆன்ற பயன் பிறர் நுகர - மிக்க தம்பிரயோசனங்களைப் பிறரனுபவிக்க,—அகத்து இனிமை உளதாகத் தோன்றிய நல் அறிவினர் போல் - அதுகொண்டு மனத்தின்கண் வெறுப்புத் தோன்றாது மகிழ்ச்சியே நிலைபெறத் தோன்றப்பெறும் நல்ல அறிவையுடைய மேன்மக்களைப் போல,—கன்னல் துவன்றி எழுந்தன - வயல்களிலே கரும்புகள் தம்பயனைப் பிறரநுபவிக்கத் தாம் மகிழ்ந்து வளர்ந்தன,—ஏன்ற குல மாதர் தமது இறைவர் முகம் நாடில் - பயின்றுவரும் குலமகளிர் தங்காதலர் தம் முகத்தைநோக்கியவழி,—அவர் வான் தகைய நிலை என்ன - நாணியொல்கும் அவரது பெருந்தகைமைநிலையைப்போல,—செந் நெல் விளைந்து வளைந்தன - செந்நெற்கள் விளைந்து தலைவணங்கின. எ-று.

தோன்றிய அறிவெனப் பகுதியோடு முடிக்க; வினையெச்சமென்றல் ஈண்டுப்பொருந்தாது. வளைந்துவிளைந்தன என்பது பொருட்கேற்ப விளைந்துவளைந்தன என விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது. வான்றகைய நிலை எஞ்ஞான்றும் பயின்றுவரினும் புதுப்புணர்ச்சிக்கட்போல நாணியொல்கிநிற்கும் பயிர்ப்புநிலை. அது "எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண் மேற் சேர்ந்தெழினு, மஞ்ஞான்று கண்டனம்போ ஞணுதுமால்" என்பதனுமறிக. அந்நிலை அவர்க்கு மேம்பாட்டைத்தருதலின் வான்றகையநிலை என விசேடிக்கப்பட்டது. "மகிழ்நர்வந்துழிக், கையுறுமுவகையாற் பணியுங் கற்பினோர், மெய்யுறுபரிவென விளைந்து சாய்ந்தவே" எனப் பிறருமிங்ஙனங் கூறுதல் காண்க. துவன்றல் - பொலிதல். முகம் நாடலை இடக்கரடக்கலென்றலு மொன்று. (உஅ)

முலைக்கிரியுங் கருங்கூந்தன் மொய்வனமு மரணுகக்
கொலைப்புருவ வெஞ்சாபங் குனித்துவிழிக் கணையேவி
நிலைப்படுநற் பொருடேட நினைந்துதவ நீணெறியிற்
றலைப்படுவார் தமைவருத்துந் தன்மையினர் வயன்மாதர்.

இ—ள்: முலைக் கிரியும் கரும் கூந்தல் மொய் வனமும் அரண் ஆக - தம்முலையாகிய மலையும் கரிய கூந்தலாகிய நெருங்கிய காடும் முறையே மலையரணும் காட்டரணுமாக, (அவற்றைப் பொருந்திநின்று),—கொலைப் புருவ வெம் சாபம் குனித்து - சாக்காடென்னு மவத்தையைச் செய்யும் புருவமாகிய கொடிய வில்லை வளைத்து,—விழிக் கணை ஏவி - கண்ணாகிய அம்பைத் தொடுத்துச் செலுத்திக் காமயுத்தஞ்செய்து,—நிலைப் படு நல் பொருள் தேட நினைந்து தவம் நீள் நெறியில் தலைப்படுவார் தமை - நித்தியப்பொருளாகிய நல்ல முத்தியைத் தேடும்படி கருதித் தவ

யாகிய மேனெறிக்கணொழுகும் முனிவர்களையும்,— வருத்தும் தன்மையினர் - அம்மேனெறியினின்றும் தம்மாட்டு மீட்கும் பேரழகையுடையவர்,—வயன் மாதர் - அத் திருப்பெருந்துறைக்கட் கடைசியர்களும். எ-று.

தலைப்படுவார்தமையுமென்னு முயர்வுசிறப்பும்மையும் மாதருமென்னு மிழிவுசிறப்பும்மையும் விகாரத்தாற்றொக்கன. தலைப்படுவோரையும் எனவும்பாடம். பகைவரை வெல்லக்கருது மரசர்க் கின்றியமையாத இடத்துணைகளாகிய ஐந்தரண்களுள்ளும் வின்முதலிய படைத்துணைகளுள்ளும், மாதர்க்கு முலை மலையையும், கூந்தல் காட்டையும், புருவம் வில்லையும், கண் அம்பையும் வடிவாயொத்து, முனிவர்களாகிய பகைவர்களை மயக்கி நிலையழித்து வசீகரித்தற் கின்றியமையாப் போர்த்துணைகளாய்ச் சிறந்தமையின், முறையே அம்முலையும் கூந்தலும் மலையரணும் காட்டரணுமாகவும், புருவமும் கண்ணும் வில்லும் அம்புமாகவும் உருவகஞ் செய்யப்பட்டன. அரண்களைந்தாவன:—நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண், மதிலரணென்பன. வருத்துதல் - தங்கண்வரச்செய்தல்; வருந்தச்செய்தலெனினு மமையும். மாதராகிய பொருட்கு அழகுமோர் பண்பாகலின், அவ்வழகைத் தன்மை என்றார். சாக்காடு ஆசிரியர் பொருளதிகாரத்துட் கூறிய பத்தவத்தைகளினொன்று. அது "ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப" "வேட்கையொருதலை யுள்ளுதன் மெலிதல், லாக்கஞ் செப்பனுவரை யிறத்தல், நோக்குவ வெல்லா மவையே போறன், மறத்தன் மயக்கஞ் சாக்காடென்றிச், சிறப்புடை மரபினவை, களவென மொழிப" என்பதனானறிக. இது 'உருவகாலங்கார' மென்க (உகூ)

வேறு.

இன்னவகை மன்னிவளர் காவுமெழின் மேவுங்
கன்னல்வய லுந்திகழ்தல் கண்டுவகை கொண்டே
யின்னலுட லம்பெற வினிப்புவியில் வாரா
மன்னவர் பெருந்துறை வளம்பதியில் வந்தார்.

இ—ள்: இன்ன வகை மன்னி வளர் காவும் - இத்தன்மைகள் பொருந்தி வளராநின்ற சோலையும்,—எழில் மேவும் கன்னல் வயலும் திகழ்தல் கண்டு உவகை கொண்டு - அழகுபொருந்திய கரும்புகளையுடைய வயலும் விளங்குதலைக் கண்டு மகிழ்ந்து,— இன்னல் உடலம் பெற இனிப் புவியில் வாரா மன்னவர் - துக்கமயமாகிய சரீரத்தை யெடுத்தற்பொருட்டு இனிப் பூமியின்கண் வாராத திருவாதவூரடிகள்,—பெருந்துறை வளம்பதியில் வந்தார் - திருப்பெருந்துறையாகிய வளவிய சிவக்ஷேத்திரத்தில் வந்து சேர்ந்தார். எ-று.

வேதத்துக்கும் முத்திக்கும் அதிகாரியாகலின் திருவாதவூரடிகளை மன்னவர் என்றார்; தென்னவன் பிரமராயனென்னும் சிறப்புப்பெயர் பற்றி மன்னவரென்றாரெனினு மமையும். இது கலிவிருத்தம். (௩0)

மாதவர் மிகும்பதி புகுந்துழி மருங்கே
நாதனுறை தண்டலையி னன்குபுனை தொண்ட
ரோதுறு சிவாகம வொலிப்பொலிவு கேளா
யாதிஃ தறிந்துரைமி னேவலர்க ளென்றார்.

இ—ள்: மாதவர் மிகும் பதி புகுந்துழி - திருவாதவூரடிகள் பெரிய தபோதனர்கண் மிக்கிருக்கும் அத்திருப்பதியின்கட் சென்றருளியபொழுது.—மருங்கே நாதன் உறை தண்டலையில் - பக்கத்தே பரமாசாரியர் வீற்றிருக்கும் பூஞ்சோலையில்.—நன்கு புனை தொண்டர் ஓதுறு சிவாகம ஒலிப் பொலிவு கேளா - எண்வகைப் பத்திகளையுடைய திருத்தொண்டர்கள் ஓதுகின்ற சிவாகமத்தினது சிறந்த ஒலியைக் கேட்டு.—ஏவலர்கள் இஃது யாது அறிந்து உரைமின் என்றார் - ஏவலாளர்களே இவ்வொலி யாது அறிந்து சொல்லுங்களென்று பணித்தருளினார். எ-று.

நன்கு ஆகுபெயர். புனைதல் மேற்கோடல். எண்வகைப் பத்திகளாவன "தொண்டரடி தொழல் பூசைத்தொழின் மகிழ்த லழகார் துளங்கிய வர்ச்சனை புரித லுருகுதி நியமங்கள், கொண்டபணி திருவடிக்கே கொடுத்த லீசன் குணமருவு மருங்கதையைக் குலவிக் கேட்டு, மண்டி விழி துளும்பன் மயிர்சிலும்ப லுன்னன் மருவுதிருப் பணிகாட்டி வருவவாங்கி, யுண்டிகொளா தொழிதலென விவையோரெட்டு முடையரவர் பத்தரென வுரைத்துளாரே" என்பதனானறிக. இனி இயற்பெயராகவே கொண்டு, எல்லா நன்மைகளையுமெனப் பொருளுரைத்து, அந் நன்மைகளையெல்லாம் மேற்கோடலாவது மனவாக்குக் காயமென்னும் திரிகரணங்களாலும் தமக்கும் பிறர்க்கும் பயன்படும் நன்மைகளையே செய்தலெனக் கோடலுமொன்று. (௩௧)

சென்றவர்கள் வந்துசிவ பத்தர்பலர் சூழக்
கொன்றைமுடி வைத்தகுண வெற்பைநிக ரொப்பார்
நின்றதொர் குருந்தமர நீழலி லிருந்தா
ரென்றலு மகிழ்ந்தன ரினிப்பிறவி யில்லார்.

இ—ள்: அவர்கள் சென்று வந்து - அவ்வேவலாளர்கள் உடனே போய்மீண்டுவந்து.—சிவ பத்தர் பலர் சூழ - சிவனடியார் பலர் சூழ்ந்து சேவிக்க,—கொன்றை முடி வைத்த குண வெற்பை நிகரொப்பார் - கொன்றைமாலிகையைத் திருமுடியிலேதரித்த குணமலையாகிய சிவபெருமானை முழுவதுமொத்த ஒருசிவயோகியார்,—நின்றது ஓர் குருந்த மர நீழலில் இருந்தார் என்றலும் - அங்கே நிற்கின்றதொரு குருந்தமரநிழலில் வீற்றிருக்கின்றாரென்று விண்ணப்பஞ்செய்தலும்,—இனிப் பிறவி இல்லார் மகிழ்ந்தனர் - இனிப் பிறவாத திருவாதவூரடிகள் அவ்வுரைமுடிவதன் முன்னரே பரமானந்தமடைந்தார். எ-று.

என்றாலுமென்பது உம்மீற்று வினையெச்சம்; புதியனபுகுதலாற் கொள்க. அவ்வுரை முழுவதும் செவிப்புலனுவதன் முன்னரே மகிழ்ந்தார் அம்மகிழ்ச்சியின்பின்னரே மிகுதி முழுவதும் கேட்டறிந்தார்என்பார் என்றலு மகிழ்ந்தனர் என்பதை இச்செய்யுளிற் கூறி. ஏவலருரைத்த மொழி கேட்டென்பதை வருஞ்செய்யுளிற் பின்னர்க் கூறினாரென்க. ஆண்டுக்கேட்கப்படுமொலியை யறிந்துரைமி னென்றூர்க்கு ஒரு சிவயோகியா இருக்கின்றாரென் றேவலர் கூறுதல் விடைவழுவாம் பிறவெனின், அவ்வாறுனம் வாளாகூறாது, சிவபத்தர் பலர்சூழ என விதந்துகூறுதலின். அப்பத்தர்கூட்டத்து நிகழுமொலியே அவ்வொலி என்பது தானே சித்தித்தலின். விடைவழுவா மாறியாண்டையதெனக் கூறி மறக்க இது 'ஆநந்தரசாலங்கார'மென்க. (கூஉ)

ஏவல ருரைத்தமொழி கேட்டரனை யெய்து
மாவலொடு காவினை யணைந்தக மலர்ந்து
மேவிய மணிச்சிவிகை விட்டிழி திழிந்தே
தேவர்பர வும்பரமர் தெய்வசபை கண்டார்.

இ—ள்: ஏவலர் உரைத்த மொழி கேட்டு - ஏவலாளர்கள் கூறிய வார்த்தையைத் திருவாதவூரடிகள் பின்னர் முழுவதுங் கேட்டு,—அரனை எய்தும் ஆவல் ஒடு காவினை அணைந்து - பக்குவான்மாக்களது பாசத்தை யரிக்கும் சிவபெருமானை அடையவேண்டுமென்னும் வேணவாவோடு அச்சோலையையடைந்து,—அகம் மலர்ந்து - பின்னரும் மனமகிழ்ந்து.—மேவிய மணிச்சிவிகை விட்டு இழிந்து - தாமிவர்ந்துவந்த முத்துச்சிவிகையை விட்டிறங்கி,—தேவர் பரவும் பரமர் தெய்வசபை இனிது கண்டார் - அரிபிரமேந்திராதி தேவர்களும் வழிபடும் பரமாசாரியரது தெய்வத்தன்மை பொருந்திய மகாசபையை நேரேகண்டார். எ-று.

அரனை என்றது ஈண்டுக்கவிகூற்று. (கூகூ)

வேறு.

அண்டமெலாங் கடந்தபொருள் பகரு நூலி
னளவுரைப்பார் தெளிந்தயர்வா ராய்வா ராகித்
தொண்டுபடு மடியார்க ளூற்றுன் பான்மேற்
றொண்ணூற்றுன் பானென்னுந் தொகுதி சூழ
வொண்டொடிபங் கினனிருப்ப விருப்பா லெய்தி
யுடனுரைத்துச் சிவஞான முணர்வா ரன்பு
மண்டியநெஞ் சினில்வணங்கி வணங்கார் போல
மந்திரியா மேன்மையுடன் வந்து நின்றார்.

இ—ள்: அண்டம் எலாம் கடந்த பொருள் பகரும் நூலின் அளவு உரைப்பார் - சகல வண்டங்களையும் தமது வியாபகத்து ளடக்கித் தாம்

அவற்றுளடக்கி வியாப்பியமாகாத அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் அருளிச்செய்த ஆகமங்களி னளவைகளைக் குருசந்நிதியில் ஓதுபவர் சிலரும்,—ஆய்வார் - சிந்திப்பவர்சிலரும்,—தெளிந்து அயர்வார் ஆகி - தெளிந்து தம்வயமழிவார் சிலருமாகி,—தொண்டுபடும் அடியார்கள் ஒன்பான் நூற்று மேல் தொண்ணூற்று ஒன்பான் என்னும் தொகுதி சூழ - அடிமைத்திறம்பூண்ட திருக்கூட்டத்தினர் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரென்னுந் தொகையினை யுடையவர் தம்மைச்சூழ்ந்து சேவிக்க,—ஒள் தொடி பங்கினன் இருப்ப - ஒளிபொருந்திய வளையலைத் தரித்த உமாதேவிபாகராகிய சிவபெருமான் வீற்றிருக்க,—விருப்பால் எய்தி - திருவாதவூரடிகள் விருப்பத்தோடு சமீபத்திற்போய்,—உடன் உரைத்துச் சிவஞானம் உணர்வார் - அவரோடு சம்பாஷித்து அதிசூக்குமமாகிய சிவஞானத்தை அநுபூதியின் வைத்துணருங்கருத்தினராகி,—அன்பு மண்டிய நெஞ்சினில் வணங்கி - அன்புநிறைந்த மனத்தினால் அவரைவணங்கி,—வணங்கார்போல - காயத்தான் வணங்காதார் போன்று,—மந்திரி ஆம் மேன்மை உடன் வந்து நின்றார்-தம்மதிகாரத்துக்கேற்றபெருமிதத்தோடுபின்னும் அதிசமீபத்திற்சென்று நின்றனர். எ-று.

மந்திரியார் எனவும் பாடம். சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிஎன்னும் மும்மாயா புவனங்கட்கும் அப்பாற்பட்டவர் என்பார் அண்டங்கடந்த பொருளென்னாது அண்டமெலாங்கடந்த பொருளென்றும், தெளிதலே சமாதியுமாமென்பார் தெளிவார் என்னாது தெளிந்தயர்வார் என்றுங்கூறினார். மும்மாயாபுவனங்கட்கும் அப்பாற்பட்டவர் என்பதை "அப்பாலைக் கப்பாலைக் கப்பாலானை யாரூரிற் கண்டடியேனடைந்தவாறே" "பாதாளமேழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர், போதார் புனை முடியு மெல்லாப் பொருண்முடிவே" "கீதமினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான், பாதமிரண்டும் வினவிற் பாதாளமேழினுக் கப்பாற், சோதிமணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை, யாதி குணமொன்றுமிலா னந்தமிலான்வரக் கூவாய்" என்னும் திருவாக்குக்களானறிக. அளவு காட்சி முதலிய பிரமாணங்கள். அவைகளை "அளவைகாண்டல் கருதலுரை யபாவம் பொருளொப் பாறெண்ப, ரளவை மேலு மொழிபுண்மை யைதிகத் தோடியல் பெனநான், களவை காண்ப ரிவைபிற்றின் மேலு மறைவரவை யெல்லா, மளவை காண்டல் கருதலுரையென் றிம் மூன்றி னடங்கிடுமே" என்பதனானறிக. ஈண்டளவென்றது அளக்கப்படுபொருளை என்பதுமுன்னர் ஆய்வார் தெளிந்தயர்வார் என்பனவற்றான் இனிது விளங்குதலின், அதனை இயற்பெயராகக் கொள்ளாது ஆகுபெயரெனக் கொள்க. அளவுரைப்பார் ஆய்வார் தெளிந்தயர்வார் என்றிங்ஙனம் வைத்தலே முறையாயினும் செய்யுளாகலிற் பிறழவைத்தார். வீடுபேற்றிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை அறிவார்க்கு அறிதற் குபாயம் மூன்று. அவை கேள்வி, விமரிசம், பாவனை என்பன. அவற்றுட் கேள்வி அளவுரைப்பார் என்பத

றனும், விமரிசம் ஆய்வார் என்பதனும், பாவனை தெளிந்தயர்வார் என்பத ஞனும் ஈண்டுக் கூறப்பட்டன. "அருளிஞ லாகமத்தே யறியலா மருளிஞ லுந், தெருளலாஞ் சிவனைஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே, மரு ளெலா நீங்கக்கண்டு வாழலாம்" என்பதனுனு மிஃதறிக. விமரிசம்-சிந்தித் தல்; விமரிசனமெழுணினுமொக்கும் பாவனை தெளிதல். தொண்டுபடு மடி யார்கள் என்புழி அடியார்களென்பது "உலகளந்தான் ருயது" என்புழிப் போல வாளாபெயராய் நின்றது. "தொகுதியினர் என நிற்கற்பாலது தொகுதி என நின்றது இயல்பாகு நோன்பிற் கொன்றின்மை" என் புழிப்போல. திருவாதவூரடிகளோடு ஆயிரவரெனக் கோடற்குத் தொளா யிரத்துத் தொண்ணூற்றென்பதின்ம ரென்னும் தொகைகொண்டது போலும். மனத்தால் வணங்கல் பிறர்க்குப் புலனுகாவண்ணம் வணங் கினதாகப் பாவித்தல். "இன்னிசைவீணையர் யாழினரொருபா லிருக் கொடு தோத்திர மியம்பினரொருபாற், றுன்னிய பிணைமலர்க் கையின ரொருபாற் ருெழுகைய ரழுகையர் துவள்கையரொருபாற், சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபாற் றிருப்பெருந் துறையுறை சிவபெருமானே" "சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை, விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறிருந்துன் றிருநாமந், தரிப்பார் பொன்னம்பலத்தாடுந் தலைவா வென்பா ரவர்முன்னே, நரிப்பாய் நாயே னிருப்பேனே நம்பியினித்தா னல்காயே" எனவரும் அடிக டிருவாக்கா னும் திருத்தொண்டர்களது இன்னோன்ன வழிபாடுண்மை தெளிக. இஃதெண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம். (ருச)

உருத்திரநற் றிருமணியை யிலங்கு காதி
லொண்சிரத்திற் கந்தரத்தி லொளிகொண் மார்பிற்
கரத்திலணிந் திலகுதிரு முண்ட மங்கிக்
கண்கரந்த நன்னுதன்மேற் கவினச் சாத்தித்
திருத்திகழும் வேதியனு ரம்பொன் மேனி
திகழ்வதுகண் டகமகிழ்வார் செங்கை மீது
பொருத்தமுறும் புத்தகமே தையா வென்னப்
பொய்ம்மையிலாச் சிவஞான போத மென்றூர்.

இ—ள்: நல் உருத்திரமணியை - நல்ல உருத்திராக்கமணியை,- இலங்கு காதில் - விளங்காநிற்குந் திருச்செவிகளினும்,—ஒள் சிரத்தில் - அழகிய சிரசினும்.—கந்தரத்தில் - திருக்கழுத்தினும்,—ஒளிகொள் மார் பில் - ஒளிபொருந்திய திருமார்பினும்,—கரத்தில் அணிந்து - திருக்கரங் களினுந் தரித்தும்,—இலகு திருமுண்டம் - வெள்ளொளி விளங்குந் திரிபு ண்டரத்தை,—அங்கிக் கண் கரந்த நல் நுதல் மேல் கவினச் சாத்தி - அக் கினிக்கண்ணை மறைத்த நல்ல திருநெற்றியிலே சிவாகமவிதி விளங்கத் தரித்தும்,—திருத் திகழும் வேதியனுர் அம்பொன்மேனி திகழ்வது கண்டு அகம் மகிழ்வார் - குருலக்ஷணம் விளங்கும் அநாதிசைவராகிய சிவபெரு

மானது மாற்றுயர்ந்த பொன்போலும் ஞானதேசிகத் திருமேனி பேரொளிசெய்வதைத் தரிசித்து மேலும் மனம் களிகூரும் திருவாதவூரடிகள் அவரை நோக்கி,—ஐயா செங்கை மீது பொருத்தம் உறும் புத்தகம் எது என்ன - சுவாமீ உமது சிவந்த திருக்கரத்திற் பொருந்தும் திருமுறை யாதென்று வினவ,—பொய்ம்மை இலாச் சிவஞான போதம் என்றார் - அதற்கு அவர் இது மெய்ம்மையாகிய சிவஞானபோதமென்று கூறியருளினார். எ-று.

உருத்திராக்க மணியென்னுந் தொடர்மொழி இடைக்கட் சிதைந்து உருத்திரமணியென மரீஇயிற்று. புத்திரதீபமணி சாளக்கிராமமுதலியவற்றினும் மிக விசிட்டமுடையதாகலின் நன்மணியெனவும், சிவசின்னங்களுள் ஒன்றாகலிற் றிருமணியெனவும் விசேடிக்கப்பட்டது. திரிபுரத்தசுரர்களாலே தமக்கு நிகழ்கின்ற துன்பத்தைத் தேவர்கள் கைலாசபதிக்குவிண்ணப்பஞ் செய்துகொண்ட பொழுது அவர் திருவுளமிரங்கிப் பதினொரு தேவவருடந் திருக்கண்களை மலர்த்திக்கொண்டிருப்ப அக்கண்களி லிருந் தொழுகிய கண்ணீரினின்றுந் தோன்றினமையால் உருத்திராக்கமணியெனக் காரணக் குறியாயிற்றென்க. அம்மணிகளைத் தரிக்கும்போது செவிகளின் அவ்வாறும் சிரத்தினுங் கழுத்தினும் மார்பினும் தனித்தனி முப்பத்திரண்டும் கைகளில் எவ்வெட்டும் விதிப்படி வடமாக்கித் தரித்தல்வேண்டும். இங்ஙனமன்றித் தரிக்கப்படும் அவயவங்களின் பிரமாணமே மணிப்பிரமாணமாகக் கொண்டு தரித்தலுமாம். கண்டென்னுஞ் செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. சிவாகமங்கள் கூறும் ஆசாரிய புருஷலக்ஷணம் முழுவதும் அமைந் திருத்தலைத் தரிசித்து, அதனானும் இவர் பரமாசாரியரென அகமகிழ்ந்தார் என்பார் அம்பொன் மேனி திகழ்வதுகண்டகமகிழ்வார் என்றார். மகிழ்வார் என்பது வினையாலணையும்பெயர். கண்கரந்த நுதலென்றது இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேலேற்றிக் கூறப்பட்டது. முண்டம் திரிபுண்டரம். அது "சைவவெண்டிருநீற்றுமுண்டத்தொளித்தழைப்பும்" என்பதனானு மறிக. திரிபுண்டரம் முக்குறித்தொகுதி. திரி-மூன்று. புண்டரம்-கீறு. சிவஞானபோதம் ரௌரவாகமத்திலே பாவவிமோசன படலத்திலே சர்வாகம சாரமாய் விளங்கும் பன்னிரண்டு சூத்திரமென்க. [இதனைச் சர்வஞ்ஞதையுடைய பரமபதியாகிய பரமாசாரியரே தமதருமைத் திருவாக்கினாலே பொய்ம்மையிலாச்சிவஞான போதமென விதந்து கூறியருளுவாராயின், சிற்றறிவையுடைய பசுவர்க்கத்துள்ளும் மிகவுந் தாழ்ந்த பருவத்தையுடைய புழுத்த நாயினுங் கடையேமாகிய நாமா விதந்து கூறவல்லேம்.] (நடு)

என்றலுமே சிவமேது ஞான மேதிங்
கிலங்கியிடும் போதமே தியம்பு வீரே
லன்றுவட நீழலில்வந் திருந்தார் நீரே
யடியேனு முமக்கடிமை யாவே னென்ன

நின்றசிவ மொன்றதனைத் தேர்தல் ஞான
 நிகழ்போதந் தேர்ந்ததனைத் தெளித லாமென்
றொன்றியநற் பொருள்வினவி நிற்பார் சிந்தை
 யுருகும்வகை யுரைசெய்தா ருவமை யில்லார்.

இ—ள்: *என்றலும் - என்றிங்ஙன முத்தரமளித் தருளலும்,—சிவம் ஏது - அதுகேட்ட திருவாதவூரடிகள் சுவாமீ சிவஞானபோதமென்னும் அம்மும்மொழித் தொடரினுண் முதற்கணின்ற சிவமாவதியாது.—ஞானம் ஏது - இடைக்கணின்ற ஞானமாவதியாது,—இங்கு இலங்கியிடும் போதமேது,—இறுதிக்கண் விளங்கும் போதமாவ தியாது,—இயம்புவீரேல் - இம்முத்திற வினாக்கட்கும் பிரதியுத்தரமளித் தருளுவீராயின்.—அன்று வட நீழலில் வந்து இருந்தார் நீரே - சனகர் முதலிய முனீந்திரர் நால்வருக்கும் வேதார்த்தங்களிற் சமுசயம் பிறந்த அக்காலத்துக் கைலாசகிரியின் தக்ஷிணசிகரத்தினிற்கும் கல்லாலவிருக்ஷ நிழலி லெழுந்தருளி வந்திருந்து கொண்டு அச்சமுசயந்தீர்த்த தக்ஷிணாமூர்த்தியுந் தேவரீரே.—அடியேனும் உமக்கு அடிமை ஆவேன் என்ன - தமியேனுந் தேவரீருக்கு மீளாவடிமை யாவேனென்று விண்ணப்பஞ்செய்ய.—உவமை இல்லார் - அதற்குச் சமானாதிகரகிதராகிய பரமாசாரியர்,—நின்றசிவம் ஒன்று - அவ்வாசக முதற்கணின்ற சிவமாவது நித்த முத்த சுத்த சித்தாகியவொருவஸ்து.—அதனைத் தேர்தல் ஞானம் - அவ்வஸ்துவைச் சந்தேக விபரீதக் காட்சிகளின்றி அதனருள்வழிப்பட்டு நின்று உள்ளவாறு அறிதலே இடைநின்ற ஞானமாவது,—நிகழ் போதந் தேர்ந்ததனைத் தெளிதல் ஆம் என்று - இனி இறுதிக்கண் விளங்கும் போதமாவது அங்ஙனம் ஆகமவளவையின் வைத்தறிந்ததனை அநுபூதி நிலையில் வைத்து நிச்சயஞ்செய்தலேயாமென்று,—ஒன்றிய நல் பொருள் வினவி நிற்பார் சிந்தை உருகும்வகை உரைசெய்தார் - சிவஞானபோதமென்னும் அவ்வாக்கியத்திற் பொருந்திய உண்மைப்பொருளை ஐவகை வினாக்களுள் "அவனறிவுதான் கோடல்" என்னும் வினாவான் வினவிநிற்குந் திருவாதவூரடிகளுடைய மனம் நெக்குநெக்குருகும்வண்ணம் பிரதியுத்தரமளித் தருளினார். எ-று.

முதற்கணின்ற ஏகாரம் இசைநிறை. சனகர்முதலிய முனீந்திரரும் பிறருமேயன்றி நாயேனும் அடிமையாவேனென்னும் பொருடந்துநிற்றலின் அடியேனுமென்னும்மை இழிவு சிறப்போ டெச்சமுமாமென்க. ஒன்றென்பது ஈண்டு நித்த முத்த சுத்த சித்தாகிய ஒன்றென்பதை எடுத்தலோசைவகையாற் கூறிக்காண்க. ஐவகை வினாக்களை 'அறியான்வினாவ லறிவொப்புக்காண்ட, லையமறுத்த லவனறிவு தான்கோடன்.மெய்யவற்குக் காட்டலோ டைவகை வினாவே" என்பதனானறிக. ஒப்பின்மை கூறவே உயர்வின்மை தானே பெறப்படுமாகலின் உவமையில்லாரென்றொழிந்தார். உத்தரப்பொருட்டின்மையானன்றிச் சொற்சாதுரிய வகையானும் வசீகரித்தனரென்பார் சிந்தை யுருகும்வகை யுரைசெய்தாரென்

றார். இக்கருத்து, வருஞ்செய்யுளில் உத்தமரின்னவா றுரைத்தலுமென் றமையாது இன்னவாறிங் குரைத்தலுமென விசேடித்து விளக்கியவாற் றானுமறிக. அனுபூதி அநுபவம். இனி நின்றசிவ மொன்று என்பதற்கு மகாசங்கார காலத்தின்கண்ணே அச்சங்கரித்தற் றொழிற்குச் செய்வோ னாய் நிற்பதல்லது ஒருவாற்றானும் செயப்படுபொருளாவதின்றிச் சேஷி த்துநின்ற சிவமாவது ஒருவஸ்து எனப் பொருள்கொண்டு, பதிப்பொரு ளாவது நிருவிகற்ப சவிகற்பங்களுள், நிருவிகற்பமா யல்லது சவிகற்ப மா யுணர்த்துதற் கரியதொரு பொருளாகலின் சிவமொன்றென்றொழிந் தார் என விசேடங்கூறுதலுமொன்று. "சொல்லுநூல்களிற் பெரியதே தரியமெய்ச்சுருதி, யில்லறத்தினுக் கியைவதே தில்லுடையில்லாண், மல் லன் மாலையின் மணமுளதேது வண்சாதி, நல்லமாதவ மேதுதங் குலம்புரி நடையே" என்புழிப்போல இவையிரண்டும் வினாவுத்தரமென்னும் சொ ல்லணியின்பாற் படுமென்க. (௬௬)

வேறு.

உத்தம ரின்னவாறிங் குரைத்தலு முவந்து நாலாஞ்
சத்திநி பாதமெய்துந் தன்மைய ராதலாலே
யத்திரு மன்றுளாடு மையரிங் கென்னையாள
வித்திரு மேனிகொண்டா ரென்பது மனத்திலெண்ணி.

இ—ள்: உத்தமர் இன்ன ஆறு இங்கு உரைத்தலும் - தேசிகோத் தமராகிய சிவபெருமான் இந்தப்பிரகாரந் திருவாய்மலர்ந்தருளுதலும்;— உவந்து - திருவாதவூரடிகள் அதுகேட்டு மிகவும் மனமகிழ்ந்து;—நாலாஞ் சத்திநிபாதம் எய்துந் தன்மையர் ஆதலால் - அவர் சத்திநிபாதம் நான்க னுள் இறுதிக்கண்ணதாகிய அதிதீவிர பக்குவம் பொருந்தப்பெற்ற திரிகர ணசுத்தியை யுடையராதலினால்;—அத்திரு மன்றுள் ஆடும் ஐயர் - அக்கன கசபையின்கண்ணே பஞ்சகிருத்தியநிருத்தஞ் செய்தருளுஞ்சபாநாயகரே;- என்னை ஆள இத்திரு மேனிகொண்டார் என்பது மனத்தில்எண்ணி - தமி யேனை அடிமைகொண்டருளும் பொருட்டு இத்தேசிகத்திருமேனி கொண் டருளினாரென்பதைத் தம்மனத்திற் சிந்தித்து. எ-று.

ஆதலால் எண்ணியெனமுடிக்க. சத்திநிபாதம்நான்காவன: மந்ததரம் மந்தம், தீவிரம், தீவிரதரம் என்பன. சத்திநிபாதம் நான்கனுள் மந்ததர மாவது. பாலின்கண்ணெய் ஒருவாறு தோன்றியும் தோன்றாதும் மறைந் துடனிற்றல்போல ஆன்மாவின்கட் சிவம் ஒருவாறு தோன்றியும் தோன் றாதும் மறைந்துடனிற்றலாம். மந்தமாவது பழத்தினிரதம் உய்த்துணரும் வழி விளங்கித் தோன்றுவதா யுடனிற்றல்போல ஆன்மாவின்கட் சிவம் உய்த்துணரும்வழி விளங்கித் தோன்றுவதா யுடனிற்றலாம், தீவிரமாவது எள்ளின்கணெண்ணெய் இனிது விளங்கித் தோன்றினும் பிரித்தறியப்ப டா துடனிற்றல்போல ஆன்மாவின்கட் சிவம் இனிது விளங்கித்தோன்றி னும் பிரித்தறியப் படாதுட னிற்றலாம். தீவிரதரமாவது தீ இரும்பைத்

தன்வண்ணமாக்குதல்போலச் சிவம் ஆன்மாவைத் தன்வண்ணமாக்கிச் சிவானந்தம் மேலிடச்செய்து நிற்றலாம். அது "இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரத மெள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுளனிறைவன், வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவேயருளு மலமறுப்போரான்மாவின் மலரடிஞா னத்தாற், சிந்தனைசெய் தர்ச்சிக்கச் சிவனுளத்தேதோன்றித் தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன்றன்னைப். பந்தனையை யறுத்துத்தா னுக்கித்தன்னுருவப் பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன்பாலே" என்பதனுனுமறிக. இதனுள் இந்தனத்தினெரி இந்நான்குபருவத்துள்ளும் வாராத சாமானியர்க்குச் சிறிதுந் தோன்றுதவாறு மறைந்து டனிற்றற் குவமையாய் வந்ததென்க. இன்னும் இப்பருவங்கட்கு முறையே வெய்யிலில் வெதும்புமரக்கும், வெய்யிலிலுருகும் மெழுகும், சூட்டி விளகும் நெய்யும், இடையறுதொழுகும் தைலதாரையும் உவமானமாகக் கூறப்படுதலும்; வாழைத்தண்டில் அக்கினிபற்றுதலும், பச்சைவிறகில் அக்கினிபற்றுதலும், உலர்ந்தவிறகில் அக்கினி பற்றுதலும், கரியில் அக்கினிபற்றுதலும், உவமானமாகக் கூறப்படுதலும், ஆகமங்களுட்காண்க. சிவானந்தம் மேலிடச் செய்தலாவது இறைவன் தனக்குரிய முற்றுணர்வு முதலிய எண்குணங்களும் படிகம்போலச் சார்ந்ததன்வண்ணமா மியல்புடைய ஆன்மாவுக்குரிய குணமாம்படி அத்துவிதவியைபானே ஆன்மாவின்மாட்டு விளங்கித் தோன்றச்செய்தல். திருவாதவூரடிகளுக்கு இந்நான்கனுள் நாலாஞ்சத்தி பதிந்தமையை "பித்திது வெனப்பிறர் நகைக்கவரு நாலாஞ், சத்திபதிய" என வழிநூலாசிரியர் கூறியவாற்றுனுமுணர்க. இது அறுசீரடியாசிரியவிருத்தம். (கூஎ)

மின்னினு நிலைமை யில்லா விழுப்பொருள் யாவும் வேண்டே
னுன்னடி யடைந்து நாயே னுறுபவ மொழித்தல் வேண்டு
மென்னை யின்றடிமைக்கொள்வா யெம்முயிர்க்கிறைவாவென்று
முன்னுற வணங்கி நின்முர் முகமெலாங் கண்ணீர் வார.

இ—ள்: எம்முயிர்க்கு இறைவா- எமதான்மநாயகரே,—நாயேன்- புழுத்த நாயினுங் கடையேனுகிய தமியேன்,—மின்னினும் நிலைமை இல்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன் - தோன்றியாங்கழியும் மின்னலினும் விரைந்தழிதன் மாலையவாய விழுமிய பிரபஞ்சப் பொருள்களினுள் ஒன்றையும் விரும்பமாட்டேன்,—உன் அடி அடைந்து உறுபவம்ஒழித்தல் வேண்டும் - தேவரீருடைய திருவடிகளையே புகலிடமாகவடைந்து அநாதியே சகசித்தபிறவியை நீக்குதல்வேண்டும் ஆதலினுல்,—என்னை இன்று அடிமைக்கொள்வாயென்று - தமியேனை இதுபொழுது அடிமைக்கொண்டருளுமென்று,—முகம் எலாங் கண் நீர் வார முன் உற வணங்கினின்முர்- முகமுழுவதுங் கண்ணீரொழுகக் குருசந்நிதியிலே மறித்தும் வணங்கிநின்றனர். எ-று.

எம்மென்றது ஏனை ஆன்மகோடிகளேயுந் தழீஇக்கொண் டென்க. அது முன்னர் என்னையின்றடிமைக் கொள்வாயெனத் தழுவாது கூறிய வாற்றானுமறிக. கல்விமுதலிய சிறந்தபொருளாயினும் என்றற்கு விழுப் பொருளென விசேடிக்கப்பட்டது. அவ்வுடையுரிமை கல்விக்கே சிறந்த தென்பது "கேடில்விழுச்செல்வங்கல்வி" என்பதனானுமறிக. இனி விழுப்பொருளென்பதற்குத் துன்பத்தைத்தரும் பொருளென்றலு மொன்று." இப்பொருட்கு நிலைமொழி விழுமம். இதுவும் 'ஆனந்தரசாலங்கார' மென்க. (நூஅ)

இவ்வகை புகன்று முன்னோன் முன்னுற விரங்கி நிற்பத்
திவ்விய தரமே யான செய்திய ரென்று நாடி
யவ்வடி யவரின் மிக்கா ரொருவரிவ் வடிமை தன்னை
வெவ்வினை யகற்றி யாள வேண்டுமென் றிறைஞ்சி நின்றார்.

இ—ள்: இவ்வகை புகன்று முன்னோன் முன்னுற இரங்கி நிற்ப- திருவாதவூரடிகள் இந்தப்பிரகாரம் விண்ணப்பஞ்செய்து பரமாசாரியரது சந்நிதியிலே இரக்கமுற்று நிற்ப,—அவ் அடியவரின் மிக்கார் ஒருவர்நாடி - அத்திருத்தொண்டர்களுக்குட் சிறந்தவரொருவர் அதுகண்டு,—திவ்விய தரம் ஆன செய்தியர் என்று - இவர் தீவிரதரமான பக்குவத்தையுடையவ ரென்றனுமானித்து,—வெவ்வினை அகற்றி இவ் அடிமை தன்னை ஆள வேண்டும் என்று - கொடிய வினைகளை நீக்கி இவ்வடியவரைத் தேவரீர் அடிமைகொண்டருள வேண்டுமென்று பிரார்த்தித்து,— இறைஞ்சி நின்றார் - வணங்கிநின்றார். எ-று. (நூகூ)

கருப்புக நினையார் தம்மேற் கண்ணருள் செய்து நெஞ்சிற்
பரப்பற மிதித்தல் வேண்டி யெடுத்தபொற் பாதங் கொண்டு
திருப்புனை மறையோர் போற்றத் தில்லையம் பலத்தே நின்ற
வருட்பரா னந்த வாரி யாதலி னதற்கி யைந்தார்.

இ—ள்: கருப்புக நினையார் மேல் கண் அருள் செய்து - கருப் பாசயத்தின்கட் பிரவேசிக்க விருப்பமில்லாத பக்குவான்மாக்கண்மீது கிருபாநோக்கஞ்செய்து,—எடுத்த பொன் பாதம் கொண்டு நெஞ்சில் பரப்பு அற மிதித்தல் வேண்டி - தூக்கிய திருவடியைக்கொண்டு அவரது சித் தவிருத்தி குன்றும் வண்ணம் சிரசில்வைத்துத் தீக்ஷைசெய்யத் திருவுளம் பொருந்தி,—திருப்புனை மறையோர் போற்றத் - திருவுடையந்தணர் துதித்து வழிபட,—தில்லை அம்பலத்து நின்ற அருள் பர ஆனந்த வாரி ஆதலின் - சிதம்பரத்திலே கனகசபையின்கண்ணே அநவரதமும் நின்றருளுகின்ற சீவகாருண்ணியத்தையுடைய சிவானந்த சமுத்திரமாகலின்,—அதற்கு இயைந்தார் - பிரேரகாசாரியரது வேண்டுகோளுக்குப் பரமாசாரியர் உடம்பட்டருளினர். எ-று.

பொற்பாதம் என்புழிப் பொன் -பொலிவு; உலகெங்கும் விரிந்தபாத மென்றதாம். அது "மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம்" என்பதனு மறிக. வேண்டி, நின்ற, வாரியென முடிக்க. இங்ஙனமன்றி வேண்டி, கொண்டு, நின்ற, வாரியென முறையே முடித்தலுமொன்று. ஈண்டுச் சக்ஷு தீக்ஷையின்றித் திருவடி தீக்ஷை செய்தலாகாமையின் அதுவுமுடன் கூறப்பட்டது. கருப்புக நினையாமை பிறவிக்கேற்பவைகளைச் செய்ய முபலாமை. பக்குவான்மாக்கட்குத் திருவடிதீக்ஷை செய்தருளுங் கடப் பாடுபூண்டு கனகசபையின்கண்ணே அநவரதமும் வெளிநின்றருளுஞ் சிவ காருண்ணிய சமுத்திரமாகலின், பரமாசாரியர் அதற்கு உடம்பட்டாரென் பதாம். இனி நினையாரென்றது திருவாதவூரடிகளை என்பாருமுளர். (சo)

அத்தகு பகலோன் முன்ன ரலர்செயு மம்பு சாத
மொத்தவர் தம்மை நாடி யுன்னையின் றடிமை கொள்ள
வித்தலத் தணைந்தோ நீமுன் னியற்றிய தவத்தி னாலே
சித்தம திரங்கல் வேண்டா வெனத்திரு வாய்ம லர்ந்தார்.

இ—ள்: அத்தகு பகலோன் முன்னர் அலர் செயும் அம்புசாதம் ஒத்தவர் தம்மை நாடி - அத்தகுதியையுடைய சூரியனது சந்நிதிமாத்திரை யிலே அலருதல் செய்யுந் தாமரைமலரையொத்த திருவாதவூரடிகளைப் பரமாசாரியர் நோக்கி,—நீ முன் இயற்றிய தவத்தினாலே இன்று உன்னை அடிமைகொள்ள இத் தலத்து அணைந்தோம் - அன்பனே நீ பூர்வசன்மங் களிற் செய்த நிஷ்காமனு புண்ணியவசத்தினாலே இத்தினம் உன்னை அடி மைகொள்ளும்பொருட்டு நாம் இப்பெருந்துறையின்கண் வந்தேம் ஆக லால்,—சித்தம் இரங்கல் வேண்டா எனத் திருவாய் மலர்ந்தார் - இனி மனமிரங்குதலை ஒழிவாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினார். எ-று.

அகரம் பண்டறிசுட்டு அலர் முதனிலைத் தொழிற்பெயர். அம்பு-நீர். சாதம்-தோன்றுதல். ஈண்டும் தவமென்றது சரியை கிரியா யோகங்களா கிய பதிபுண்ணியங்களை. சூரியன் நவக்கிரகங்களினும் மற்றும் ஒளியுடை ப்பொருள்கள் பலவற்றினும் மிக்குத்தோன்றுதலும் இராக்காலம்போலத் தம்பதிகளைக் காமநெறிக்கட் செலுத்தாதும் பிறவுமாகிய தகுதியுடைமை எல்லாராலும் அறியப்பட்டதொன்றாகலின் அதுபற்றி அச்சூரியனை அத் தகுபகலோனென்றும், அச்சூரியனது சந்நிதிமாத்திரையின் மலருந் தாம ரைபோலத் திருவாதவூரடிகள் பரமாசாரியரது சந்நிதிமாத்திரையின் முக மலர்ச்சியடைந்தமையின், அவரைப் பகலோன் முன்ன ரலர்செயு மம்பு சாத மொத்தவர் என்றும், பரமாசாரியர் பரமதயாநிதியாகலின், நீ முன் னியற்றிய தவத்தினாலே யுன்னையின் றடிமைகொள்ள வித்தலத்தணைந் தோம் என்றமையாது பின்னரும் விதந்து சித்தமதிரங்கல் வேண்டாவெ னத் திருவாய் மலர்ந்தார் என்றுங்கூறினார். நிஷ்காமனு புண்ணியம் வேறு பயனை இச்சியாது செய்த புண்ணியம். (சக)

வந்துநான் வறுமை யுற்றேன் மாற்றென திலம்பா டென்று
சிந்தையா குலமுற் றான்கைச் செழும்பொரு ளீதல்செய்வாற்
கிந்தநா ளளிக்க வேண்டு மெனவிதி யின்மை யாலே
யந்தநா ளிந்நா ளாக வடிமைகொண் டருள வெண்ணி.

இ—ள்: வந்து - தன்னைநாடி வந்து,—நான் வறுமை உற்றேன் - நான் மிகவும் வறுமையடைந்தேன்,—எனது இலம்பாடு மாற்று என்று - எனது வறுமையை நீக்குகென்று யாசித்து.—சிந்தை ஆகுலம் உற்றான் கைச் செழும் பொருள் ஈதல் செய்வாற்கு - மனோவியாகுலமடைந்த ஒரு நித்தியதரித்திரன் கையிலே செழுமையாகிய திரவியத்தைக் குறைவறக் கொடுக்கும் தாதாவுக்கு,—இந்தநாள் அளிக்க வேண்டும் என விதி இன்மையால் - இன்னநாள்களின்மாத்திரங் கொடுத்தல் வேண்டும் அல்லுழிக் கொடுக்கலாகாதென்னும் விதியில்லாமையினாலே,—அந்த நாள் இந்நாள் ஆக அடிமைக் கொண்டு அருள எண்ணி - அந்நாளே இதற்கும் நாளாகப் பரமாசாரியர் திருவாதவூரடிகளை அடிமைகொண்டருளத் திருவுளங்கொண்டு. எ-று.

அந்தநாள் என்றது வறியவர்கட்கீதற்குப் பொதுவகையான் விலக்கப்பட்டு. மிக வறியவர்கட் கீதற்குச் சிறப்புவகையான் விலக்கப்படாத நாளை. இந்தநாள் என்றது பக்குவிகட் குபதேசித்தற்குப் பொதுவகையான். விலக்கப்பட்டு, அதிதீவிர பக்குவிகட்குபதேசித்தற்குச் சிறப்புவகையான் விலக்கப்படாத நாளை. என் சொல்லியவாறோவெனில். ஞானாசாரியர் ஞானதீக்ஷைசெய்யத் தொடங்குமுன் தீக்ஷிக்கப்படும் மாணாக்கன் அந்தணனாயின் மூன்றவருடமும். க்ஷத்திரியனாயின் ஆறுவருடமும், வைசியனாயின் ஒன்பதுவருடமும், சூத்திரனாயிற் பன்னிரண்டுவருடமும் பக்குவாபக்குவம் பரீக்ஷித்துப் பக்குவனாயினன்றே தீக்ஷித்தல் வேண்டுமென்னும் ஆகமவிதிக்கு விரோதமாக ஈண்டுப் பரீக்ஷையின்றி ஞானதீக்ஷைசெய்யத் தொடங்கிய தென்னையென நிகழும் ஆட்சேபத்திற்குச் சமாதானங் கூறியவாறென்க. ஈண்டு ஞானாசாரியராவார் முற்றுணர்வு முதலிய எண்குணங்களையுடைய கைலாசபதியே யாகலானும் மாணாக்கர் அதிதீவிரபக்குவத்தை யுடையவரென்பது தெற்றென விளங்குதலானும் பரீட்சை எற்றுக்கென்பது கருத்தென்க. ஈண்டுவிதியென்றது சிறப்பு விதியை என்பது முதன்மூன்றடிகளானும் இனிதுவிளங்குமென்க. இலம்பாடு-வறுமை அது "இலம்பாடொற்கமா யிரண்டும் வறுமை" என்பதனானு மறிக. ()

அத்தகு தொண்டர்க் கெல்லா மதிபரா மவரை நோக்கி
யித்தவ முடையோ னெய்து மிடரொழித் தாழ்வ திந்நாள்
வித்தக விதற்கு வேண்டுங் கருமநீ விரைவிற் செய்கென்
றுத்தம வடிவங் காட்டு முண்மையா ருரைத்தல் செய்தார்.

இ—ள்: உத்தம வடிவம் காட்டும் உண்மையார் - ஞானதேசிகத் திருமேனியைத் தரிசிப்பித்தருளும் மெய்ப்பொருளாகிய சிவபெருமானு வர்,—அத் தகு தொண்டர்க்கு எல்லாம் அதிபராம் அவரை நோக்கி - அத் தகுதியையுடைய திருத்தொண்டர்களுக்கெல்லாம் முதல்வராகிய அப் பிரேரகாசாரியரைப் பார்த்து,—வித்தக - சாதுரியனே,—இத்தவம் உடையோன் எய்தும் இடர் ஒழித்து ஆள்வது இந்நாள் - தவத்தையுடைய இவ் வன்பன் பொருந்தும் பிறவித்துன்பத்தை நீக்கி நாம் அடிமைகொள்வது இத்தினமே,—இதற்கு வேண்டும் கருமம் நீ விரைவில் செய்கு என்று உரைத்தல் செய்தார் - இதற்குவேண்டுங் காரியங்களை நீ ஒரு சிறிதும் காலநீட்டமின்றிப் பிரயத்தனஞ்செய்யக்கடவையென்று பணித்தருளினர் எ-று.

செய்க என்னும் வியங்கோளீறு குறைந்துநின்றது. செய்யாவென்னும் முன்னிலைவினைமுற்று வி ⁊ திகுன்றிக் குகரச்சாரியைபெற்று நின்ற தெனினு மமையும். ஞான தீக்ஷாகருமத்தையே இடரொழித்தாள்வதென்றாகலின் ஈண்டிதுவென்றது தீக்ஷையை என்க. அதற்குவேண்டுங் கருமங்கள் இவை என்பது முன்னர்க் கூறுப. தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரென மேலே விதந்துகூறிய அத்திருத்தொண்டர் என்பார் அத்தகுதொண்டர் என்றும், அவர்களுள்ளும் முன்னிறைஞ்சி நின்ற அவரை என்பார் அதிபராமவரை என்றும், இடரொழித் தாளத்தகும் பக்குவன் என்பார் திருவாதவூரடிகளை இத்தவமுடையோன் என்றும், இதற்கு வேண்டுங் கருமங்களைச் செய்தற்கு நீயே வல்லையென்பார் வித்தக என்றும், இருவினையொப்பும் மலபரிபாகமும் முற்பிற்பாடற நிகழும் இப்பொழுதேயென்பார் விரைவில் என்றும், ஞானசாரியருக் காகமங்கள் விதித்த புருடாகிருதிமுதலிய அனைத்திலக்கணங்களும் ஒழுங்கமைந்த வடிவம் என்பார் உத்தமவடிவமென்றுங் கூறினர். அத்திருத்தொண்டர்கள் வரலாறு முன்னர்க் கூறுதும். (சகூ)

முன்னவன் புகன்ற வாறு முயல்குவ மென்றே யந்த
மன்னிருந் தவத்தின் மிக்கார் வகைமலர்த் தெரியலாலும்
பொன்னிடை யழுத்தி முத்தம் புனைந்தபல் பட்டி னாலு
மந்நெடுங் காவி னூடங் கானபூங் கோயில் செய்தே.

இ—ள்: அந்த மன் இரும் தவத்தின் மிக்கார் - நிலைபெற்ற பெரிய தவத்தான் மேம்பட்ட அந்தப் பிரேரகாசாரியர்,—முன்னவன் புகன்ற ஆறு முயல்குவம் என்று - முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகிய பரமாசாரியர் பணித்தருளியபிரகாரஞ் செய்யக்கடவோமென்று,—வகை மலர்த் தெரியலானும் - நானாவிதமாகிய பூமாலைகளினாலும்,—பொன் இடை அழுத்தி முத்தம் புனைந்த பல் பட்டினாலும் - பொன்னிழைகளை இடையிடையே செறித்து முத்துக்களைக்கொண்டு

விளிம்பிழைத்த நானாவிதமாகிய பட்டுவஸ்திரங்களினாலும்,—அங்கு அந் நெடும் காவின் ஊடு ஆன பூங் கோயில் செய்து - அங்கே உயர்வாகிய அச் சோலையின்கண்ணே தீக்ஷைக்கியைந்த ஒருபூங்கோயிலைச் செய்து. எ-று.

முயல்குவம் என்பது உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. அத்திருக் கூட்டத்துட் பிரேரகாசாரியராகிய முதன்மைபெறுதற்குரிய பூர்வசன்ம புண்ணிய விசேடத்தையுடையவரென்பார் அந்த மன்னிருந்தவத்தின் மிக் கார் என்றும், இவ்வரும்பெரும்பேற்றைப் பெறுதற்கிடமாகிய சோலை என்பார் அந்நெடுங்காவென்றும். தீக்ஷாமண்டபத் திலக்கணம்பொருந்தச் செய்த கோயிலென்பார் ஆனபூங்கோயிலென்றுங் கூறினர். பொன்னி டையழுத்தி என்பதற்குப் பொன்னைத் தகடுசெய் திடையிடையே அழுத்தி யெனப் பொருள்கோடலுமொன்று. (சச)

செய்தநற் கோயி லூடு சிறந்தவா சனமுஞ் சேர்த்து
மெய்தகு தொண்டர்க் கெல்லா மிக்கவ ரிறைவற் சார்ந்து
கைதவ முடையார் நெஞ்சிற் கனவிலுங் காண நில்லா
மைதரு களத்தாய் கோட்டஞ் சமைந்தது வாய்ப்ப வென்றார்.

இ—ள்: மெய் தகு தொண்டர்க்கு எல்லாம் மிக்கவர் - மெய்யறி வையுடைய திருத்தொண்டர்களுக்கெல்லாம் அதிபர்,—செய்த நல் கோ யில் ஊடு சிறந்த ஆசனமும் சேர்த்து - இங்ஙனஞ் செய்யப்பட்ட நல்ல கோயிலினுள்ளே திவ்விய ஒரு ஆசனத்தையு மமைத்து,—இறைவற் சார் ந்து - பரமாசாரியரை யடைந்து,—கைதவம் உடையார் நெஞ்சில் கனவி லும் காண நில்லா மைதரு களத்தாய் - கபடிகளது மனத்தின்கணிகழுஞ் சொப்பனத்தினும் அவர் காணுதற் கொருசிறிது வெளிநில்லாத காளகண் டத்தையுடையவரே,—கோட்டம் வாய்ப்பச் சமைந்தது என்றார் - கோயில் தீக்ஷாமண்டபத்திலக்கணம் பொருந்தச் செயப்பட்டு முடிந்தது என்று விண்ணப்பஞ்செய்தார். எ-று.

மெய் ஆகுபெயர். தகுதல்-பொருந்துதல். (சரு)

ஆயிடைக் குடபால் வெற்பி லாதபன் கரந்து ஞாலம்
பாயிருள் பரந்த பின்பு கடிகையோர் பதினைந் தாகி
மேயநல் லுயிர்க ளெல்லாம் விழித்துயில் பயிலுங் காலைத்
தூயதொண் டர்க்கு மாயை தொலையுநல் லமையந் தோன்ற.

இ—ள்: ஆயிடைக் குடபால் வெற்பில் ஆதபன் கரந்து - அப் பொழுது மேற்குத்திக்கிலுள்ள அஸ்தமயனகிரியிலே சூரியன் மறைத லால்,—ஞாலம் இருள் பரந்த பின்பு - பூமியிலே இருள்பரந்தபின்னர்,— கடிகை ஓர் பதினைந்து ஆகி - அத்தயாமமாகப்பெற்று,—மேய நல் உயிர் கள் எல்லாம் விழித்துயில் பயிலுங்காலை - பகற்காலத்து வேண்டுமிடங்க ளிற் சஞ்சரித்த நல்ல ஆன்மவர்க்கங்களெல்லாம் கண்களை முகிழ்த்து நித்

திரை செய்யும்போது,—தூய தொண்டர்க்குமாயை தொலையும் நல் அமையம் தோன்ற - சித்தசுத்தியையுடைய திருவாதவூரடிகளுக்கு மாயாமலம் சத்திகுன்றும் நல்லதருணம்வந்து சம்பவிக்க. எ-று.

ஆயிடை என்புழிக் காலம் இடப்பெயராற்கூறப்பட்டது. கரத்தலால் என்பது கரந்தெனத் திரிந்துநின்றது. ஆகிப்பயிலுங்காலை எனமுடிக்க. முற்பிற் பாடற உலகெங்கும் ஏககாலத்து வியாபித்தலிற் பாயிருளென விசேடித்தார். ஒளியினது அபாவமாகிய இருளை ஈண்டுப் பாயிருளென்ற திலக்கணைபற்றியென்க. (௬௬)

இங்கிவன் றன்னை யாளுங் காலமீ தென்று தெய்வ
சங்கம தகன்று முன்னோன் மஞ்சனச் சாலை சார்ந்து
குங்குமம் புழுகு சாந்தங் குழைத்துமெய்ம் முழுதும் பூசிக்
கங்கையி னன்னீர் வாசங் கலந்தமென் பனிநீ ராடி.

இ—ள்: முன்னோன் இங்கு இவன்றன்னை ஆளும் காலம் ஈது என்று - பரமாசாரியர் இங்கே இவ்வன்பனை நாம் அடிமைகொள்ளுங்காலம் இதுவேயென்று திருவுளத்தடைத்து;—தெய்வ சங்கம் அகன்று மஞ்சனச் சாலை சார்ந்து - அத்தேவசபையை விட்டு நீங்கி ஸ்நானமண்டபத்தை அடைந்து;—குங்குமம் புழுகு சாந்தம் குழைத்து மெய் முழுதும்பூசி - குங்குமத்தையும் நாவிப்புழுகையுஞ் சந்தனத்தையுங்குழைத்துத் திருமேனியெங்கும் அர்ப்பணஞ்செய்து;—நல் வாசம் கலந்த கங்கையின்நீர் மெல் பனிநீர் ஆடி - நல்ல வாசனையூட்டிய கங்காதீர்த்தத்தினாலும் நொய்ம்மையாகிய பனிநீரினாலும் ஸ்நானஞ்செய்தருளி. எ-று.

திவ்வியமென்னும் வடமொழி ஈண்டுத் தெய்வமென்றுயிற்று. (௬௭)

மெய்ப்புன றுகிலான் மாற்றி விலைமதிப் பில்லா நல்ல
வொப்பருஞ் செம்பட் டாடை யுடுத்துயர் கோட்ட மெய்திச்
செப்பிள முலையாள் பாகன் றென்றிசை யதனை நோக்கி
யப்பெருந் தவிசின் மேலங் கழகுற விருந்த பின்னர்

இ—ள்: செப்பு இள முலையாள் பாகன் - கடைந்த நீலரத்தினச்செப்பை நிகர்த்த இளமையாகிய ஸ்தனங்களையுடைய உமாதேவிபாகராகிய சிவபெருமான்;—மெய்ப்புனல் துகிலான் மாற்றி - திருமேனியிற் பொருந்திய நீரைத் திருவொற்றாடையினாலே ஒற்றி நீக்கி;—விலை மதிப்பு இல்லா நல்ல ஒப்பு அரும் செம்பட்டு ஆடை உடுத்து - விலைமதித்தற்கரிய நல்ல ஒப்பற்ற செம்மையாகிய பட்டுப் பரிவட்டத்தைத் திருவரையிலே சாத்தி,—உயர் கோட்டம் எய்தி - உயர்ச்சிபொருந்திய தீக்ஷாமண்டபத்தை அடைந்து,—பெரும் அத்தவிசின் மேல் தென்திசை யதனைநோக்கி அங்கு அழகு உற இருந்தபின்னர் - பெருமைபொருந்திய அவ்வாசனத்தின்மீதே தெற்குத்திக்கை நோக்கி அங்கே யோகாசனமாக வீற்றிருந்தருளிய பின்னர். எ-று.

அங்கழகுற வென்பதற்கு அத்தவிசிற் கழகுபொருந்த எனவும் நோக்கப்பட்ட அத்தென்றிசைக் கழகுபொருந்த எனவும் பொருள் கூறினும் பொருந்தும். செப்பென வரையாது கூறினும் கடைந்த நீலரத்தினச் செப்பென்பது எற்புழிக் கோடலாற் பெற்றாம். இன்னும் செப்பிள முலை என்பதற்கு ஏனைமகளிர் முலைபோலாகாது என்றும் ஒரேபெற்றியவாய்ச் சாயாத முலையென ஆன்றோர் செப்பும் இளமுலை என்றலும் ஒன்று. (சஅ)

அண்டரு மலர்தூ யேத்து மன்பருந் தூநீராடி
வெண்டுகில் புனைந்து நீறு விளங்கிய மெய்யராகி
முண்டக மலர்த்தாள் வைத்து முத்திதந் தருள மேனி
கொண்டவர் திருமுன் சென்று குறுகியங் குவகை கூர்ந்து.

இ—ள்: அண்டரும் மலர் தூய் எத்தும் அன்பரும் - தேவர்களும் புஷ்பாஞ்சலி செய்து துதிக்கத் தகும் சிவபத்திமானாகிய திருவாதவூரடிகளென்னுஞ் சீடரும்,—தூநீர் ஆடி - சுத்தமாகியநீரிலே ஸ்நானஞ்செய்து,- வெண் துகில் புனைந்து - வெண்மையாகிய இரண்டு வஸ்திரங்களைத் தரித்து,—நீறு விளங்கிய மெய்யர் ஆகி - விபூதி பிரகாசிக்கின்ற திருமேனியை யுடையவராகி,—முண்டக மலர்த்தாள் வைத்து முத்திதந்தருளமேனி கொண்டவர் திருமுன் குறுகிச் சென்று - செந்தாமரை மலர்போலுந் திருவடிகளைச் சிரசின்மீது சூட்டித் திருவடிதீக்ஷை செய்து தமக்குப்பரமுத்தி பிரசாதித் தருளும்வண்ணங் குருமூர்த்தங் கொண்டெழுந்தருளிய சிவபெருமானது சந்நிதியிலே அதிசமீபத்திற் சென்று,—அங்கு உவகைகூர்ந்து- அங்கே மகிழ்ச்சிமிகுந்து. எ-று.

பாவத்திற்குக் கருமையும் சுசியின்மையும், புண்ணியத்திற்கு வெண்மையும் சுசியுண்மையும் இயல்பாகலின், பாவசம்பந்தமாகிய பிறவிநீக்கத்துப் புண்ணியசம்பந்தமாகிய வீடுபேற்றைத் தலைப்படுவோர்க்கு அவ்வீட்டிற்கு வாயிலாகிய தீக்ஷாகாலத்து வெண்டுகிற்றாரணம் சுசியுடைமைக்கும் சாத்துவிக சம்பந்தத்திற்கும் அறிகுறியாக வேண்டப்படுதலின் வெண்டுகில் புனைந்தென்றும், விபூதிதாரணம் பசுமலநீக்கத்துச் சிவத்துவ விளக்கத்திற்கு அறிகுறியாக வேண்டப்படுதலின் நீறு விளங்கிய மெய்யராகி என்றும், அபிஷேக அருச்சனைகளின் பொருட்டும் திருவடிப்பேற்றின் பொருட்டும் தீக்ஷாகாலத்துக் குருசந்நிதியைச் சீடர் அதி சமீபத்திற் குறுகவேண்டுதலின் மேனி கொண்டவர் திருமுன் சென்றென்றமையாது குறுகியென்றும், தமது பூர்வகால சிந்திதமனோரதம் ஈண்டு நன்கு சித்திக்கப்பெறுதலின் அதற்கு மிக மகிழ்ந்தென்பார் அங்குவகை கூர்ந்தென்றுங் கூறினர். குறுகல்-அணுகல். சிந்திதம்-சிந்திக்கப்பட்டது. மனோரதம்-மன இச்சை. (சகூ)

விண்ணவ ரதிபன் பொற்றாள் விளக்கியர்ச் சனைமுன் செய்து
தண்ணறும் பனிநீர் தோய்ந்த சாந்தமெய்ம் முழுதுஞ் சாத்தி

வண்ணமென் கழுநீர் மாலை வளம்பெற வணிந்து பின்னர்க்
கண்ணுறு பரிவு தீரக் கண்டுள மகிழ்ச்சி கொண்டு.

இ—ள்: முன் விண்ணவர் அதிபன் பொன் தாள் விளக்கி அர்ச்சனை செய்து - முன்னரே தேவநாயகராகிய சிவபெருமானுடைய பொன்போலுந் திருவடிகளை அபிஷேகஞ்செய் தருச்சித்து.—தண் நறும் பனிநீர் தோய்ந்த சாந்தம் மெய் முழுதுஞ் சாத்தி - தட்பமாகிய நறிய பனிநீர்கலந்த சந்தனக்குழம்பைத் திருமேனி முழுவதுஞ் சாத்தி,—வண்ணம் மெல் கழுநீர் மாலை வளம் பெற அணிந்து - அழகிய மிருதுவாகிய செங்கழுநீர் மாலையை அது அழகுபெறத் தரித்து,—பின்னர் - அதன்பின்னர்,—கண் உறு பரிவு தீரக் கண்டு - கண்களைப்பெற்று இதுகாறும் பாதுகாத்த துன்பந்தீரத் தரிசித்து,—உளம் மகிழ்ச்சி கொண்டு - அதனுன் மனத்திலே பேரானந்தங்கொண்டு. எ-று.

முன்னர் அபிஷேகம் அருச்சனை அலங்காரங்களைச் செய்துமுடித்துப் பின்னர்த் தரிசித்து மகிழ்ந்தார் என்பார் முன், பின்னரென இங்ஙனம் பிரித்து விசேடித்தார். தீக்ஷகாலத்திலே ஞானசாரியர் செம்பட்டுடுத்துச் செங்கழுநீர்மாலை தரித்தல் வேண்டுமென்பது சிவாகமநூற் றுணிபென்க. (௫ ப)

பருப்புட ணளி கேரப் பழச்செழுந் துருவல் சேர்த்துச்
சருக்கரை கலந்து பாலிற் சமைத்தநல் லமுது தன்னை
யிருத்திய கனகக் கான்மே லிலங்குபொற் கலத்தின் மீது
விருப்பொடு படைத்து நெய்யு மிக்கமுக் கனியும் பெய்து.

இ—ள்: பருப்பு உடன் செழும் நாளிகேரப் பழத்துருவல் சேர்த்து - பருப்போடு செழுமையாகிய தேங்காய்த்துருவலைச் சேர்த்து.—சருக்கரை கலந்து பாலில் சமைத்த நல் அமுது தன்னை - சருக்கரையைக்கலந்து பால்கொண்டு சமைத்த நல்ல திருவமுதை,—இருத்திய கனகக் கால் மேல் இலங்கு பொன் கலத்தின் மீது விருப்பொடு படைத்து - வைக்கப்பட்ட சுவர்ண முக்காலியின்மீது விளங்குகின்ற பொற்பாத்திரத்தின்கட் பிரீதியோடு படைத்து,—நெய்யும் மிக்க முக்கனியும்பெய்து - அதன்மீது அன்னசுத்தியாகிய நெய்யையும் முப்பழங்களையும் விநியோகித்து எ-று

துருவல் ஆகுபெயர். கால் முக்காலி. அது, "பரிகலங்க" ளோரின் விளங்கத் திருத்திக் காலிரண்டுபடிய வேற்றுதலும்" என்பதனுனுமறிக. காலியைக் காலென்றார் ஆதேயமாகிய பரிகலத்திற்குத் தான் ஆதாரமாயவழி அதனது கால்போன்று நிற்றலினென்க. இக்கருத்துப்பற்றியன்றே காலியைப் பரிகலக்காலெனவுங் கூறுப. அது "பரிசுவிளங்கப் போனகமுந் திருத்திப் பாவாடையி லேற்றித், தெரியும் வண்ணஞ் செஞ்சாலிச் செழும்போ னகமுங் கறியமுதும், வரிசையின் முன் படைத்தெடுத்து மன்னும் பரிகலக் கான்மேல், விரிவெண் டுகிலின் மிசைவைக்க விமலர் பார்த்தங் கருள்செய்வார்" என்பதனுனுமறிக. காலி காலையுடையது. சமைத்

தற்குப் பால் முக்கியப்பொருளாகலின் அதனை எதுவின்பாற் படுத்திப் பாலிற் சமைத்த என்றும், மகா நைவேத்தியமாகலின் நல்லமுதென்றும். தமது ஆன்மபோதத்தை நிவேதிப்பதாகப் பாவித்துப் படைத்தலின் விருபொடு படைத்தென்றும், முக்கனியெனப் பொதுப்படக்கூறினும் வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழமாகிய அவை தம்மையே சுட்டும் வழக்குவலிமிகுதியும், சுவை மிகுதியு முடைமைபற்றி மிக்க முக்கனியென்றுங் கூறினர். நாளிகேரம் என்பதற்கு உட்டுளையிலுலே நீரை இழுப்பதென்பது பொருள். அது "ஏளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத், தலையாலேதான் றருதலால்" என்பதனுனுமறிக. (ருச)

மாலயன் வலாரி மற்றை வானவர் பிழைக்க முன்னு
ளாலமுண் டவனே நல்ல வமுதமுண் டருளா யென்று
சீலமா மகிழ்ச்சி பொங்குஞ் சிந்தையி னுரைப்பக் கால
காலனு முண்டு நீராற் கரமலர் கழீஇய பின்னர்.

இ—ள்: மால் அயன் வலாரி மற்றை வானவர் பிழைக்க முந்நாள் ஆலம் உண்டவனே - அரிபிரமேந்திராதி தேவர்கள் உய்யும்பொருட்டு முன்னோர்காலத்திற் கொடியஆலகாலவிஷத்தையுண்டவரே,—நல்லஅமுதம் உண்டருளாய் என்று - இந்த நல்ல திருவமுதையுண்டருளுமென்று,- சீலமா மகிழ்ச்சி பொங்கும் சிந்தையின் உரைப்ப - ஞானசாரசம்பந்தமான பெருமகிழ்ச்சி பொலிகின்ற மனவிருப்பத்தோடு திருவாதவூரடிகள் பிரார்த்திக்க,—கால காலனும் உண்டு நீரால் கரமலர் கழீஇய பின்னர் - காலகாலராகிய சிவபெருமானும் திருவமுதுசெய்து நீரினுலே திருக்கைமலர் சுத்திசெயப் பெற்றபின்னர். எ-று.

சிந்தை ஆகுபெயர். ஈண்டுண்ணுதல் திருக்கரத்தாற் பரிசித்துவைத்தன் மாத்திரை யல்லது உட்கொள்ளலன்றென்க. அஃது ஈண்டுவாக்குச் சுத்தி கூறுது கரசுத்திமாத்திரையே கூறியதனுனும், "மறைநெறி யினையவாற் றுன் மலைமக னுய்த்து மற்றெம், மிறையிவை நுகர்தல்வேண்டு மெனத் தொழ வினிதே யென்னுக், கறைமிட றணிந்த மேலோன் கரத்தினுலவற்றைத்தொட்டாங், குறுபெருங் கருணைசெய்தே யுவந்தனங் கோடியென் றுன்" "தொன்மைகொ ளருளி னீராற் றய்த்தன வாகத்தொட்ட, நின்மல வுணவை" எனப் பிறுண்டும் கூறுமாற்றானுமறிக. வேற்றுமை தோன்ற இடையே மற்றையென்னும் இடைச்சொற்பெய்துபிரித்தும், ஒரோவழித்தாமே பரம்பொருளென்று மயங்கிக் கர்விக்கும் விட்டுணு பிரமா முதலிய தேவர்களும் உய்யும்பொருட்டுக் கொடிய ஆலகால விஷத்தை யுண்டருளின சிவகாருண்ணிய சமுத்திரமாகிய தேவரீர் என்றும் மீளா ஏழை அடிமையாகிய தமியே னுய்யும்பொருட்டு நல்ல திருவமுதை உண்டருளுவது சொல்லவும் வேண்டுமோவெனப் பிரார்த்தித்தார் என்பதுதொனிக்க மாலயன் வலாரி மற்றை வானவர் பிழைக்க முன்னு, ளாலமுண்டவனே என இங்ஙனம் விளிதந்துங் கூறினுரென்க. (ருஉ)

வெள்ளிலை பழுக்காய் நல்கி விரைதரு தூப தீபங்
கொள்ளுநற் றேசு காட்டிக் கோலநன் னீறு சாத்தித்
தெள்ளொளி விளங்கு மாடி திருந்தமுன் றிகழ்வித் தெங்கு
முள்ளவர் முடிமே லோங்க வொண்குடை கவித்தல் செய்து.

இ—ள்: வெள்ளிலை பழுக்காய் நல்கி - வெற்றிலை பாக்குக்களை நிவேதித்து.—விரை தரு தூப தீபம் கொள்ளும் நல் தேசு காட்டி - அகின்முதலிய சுகந்தவர்க்கப் பொடிதூவிய தூபத்தையும் தீபத்தையும் ஞான சஞ்சுக பாவனையாகக் கொள்ளப்படும் நல்ல கர்ப்பூர தீபசோதியையும் திருமூசம் முதலிய அங்கங்கடோறுந் தந்து பிரணவாகிருதியாகச் சுற்றி ஆராதித்து.—கோல நல் நீறு சாத்தி - உத்தமாங்கம் முதலிய அவயவங்களிலே அழகிய நல்ல விபூதியைச் சாத்தி.—தெள் ஒளி விளங்கும் ஆடி திருந்தமுன் திகழ்வித்து - தெளிவாகிய ஒளிவிளங்குங் கண்ணாடியைத் திருத்தமுற அபிமுகத்திற் பிரதிவிம்பித்து,—எங்கும் உள்ளவர் முடிமேல் ஓங்க ஒண் குடை கவித்தல் செய்து - சிதசித்துப் பிரபஞ்ச மெங்கும்வியாபகமாகிய சிவபெருமானது திருமுடிமேல் உயர ஒளிபொருந்திய குடையைக்கவித்து. எ-று.

தேஜஸ்—பிரகாசம். (ருங)

கற்றைவெண் கவரி செம்பொற் காம்புநீ டால வட்டம்
பற்றியன் புடனே வீசிப் பரிவுட னடியார் சூழப்
பொற்றவி சிடையே மேவும் புண்ணியன் றிருமுன் பைம்போ
துற்றகை யுடனே வாத வூரரங் கிருந்த பின்னர்.

இ—ள்: கற்றை வெண் கவரி - தொகுதியாகிய வெள்ளிய சாமரத்தையும்,—செம்பொன் காம்பு நீடு ஆலவட்டம் அன்பு உடனே பற்றி வீசி - மாற்றுயர்ந்த பொன்மயமாகிய காம்புநெடிய ஆலவட்டத்தையும் அன்போடுபற்றிப் பணிமாறி,—அடியார் பரிவு உடன் சூழப் பொன் தவிசு இடைமேவும் புண்ணியன் திருமுன் - திருத்தொண்டர்கள் அன்போடு திருமருங்கிற் சூழப் பொன்னாசனத்தின்மீது வீற்றிருக்கும் புண்ணியவடிவினராகிய பரமாசாரியரது திவ்விய மகாசந்நிதியிலே,—வாதவூரர் பைம்போது உற்ற கைஉடன் அங்கு இருந்தபின்னர் - திருவாதவூரடிகள் பசிய மலர்பொருந்திய திருக்கரத்துடனே அபிமுகத்திற் சுகாசனமாக விருந்த பின்னர். எ-று

மலர் திருவடி சூட்டும்போது அருச்சித்தற்கெனக. கற்றை ஈண்டு மயிர்த்தொகுதி. (ருச)

மந்திரம் பதங்கள் வன்னம் புவனங்க டத்துவங்க
ளோந்துநற் கலைக ளென்னு மறுவகை யகற்றி யந்தச்

சிந்தனைக் கரிய மேலைச் சிவத்துட னறிவு சேரப்
பந்தனை யொழிவார் தம்மேற் பரிந்தருட் பார்வை செய்து.

இ—ள்: தவப்பெரு வடிவங் கொண்டார் - நங்கவிநாயகராகிய திருவாதவூரடிகளது அனந்தகோடி பூர்வசன்ம தவத்தானை மிகு மகத்துவம் பொருந்திய ஞானதேசிகத் திருமேனி கொண் டெழுந்தருளிய கைலாசபதியாகிய பரமாசாரியரானவர்,—மந்திரம் பதங்கள் வன்னம் புவனங்கள் தத்துவங்கள் ஐந்து நல் கலைகள் என்னும் அறுவகை அகற்றி - மந்திராத்துவா பதாத்துவா வர்ணாத்துவா புவனாத்துவா தத்துவாத்துவா நல்ல பஞ்சகலாத்துவா என்னும் சடத்துவாக்களினுங்கட்டுப்பட்டிருக்கின்றபோகங்களனைத்தையும் ஏககாலத்திலேபுசிப்பித்துத்தொலைத்தலாகிய அத்துவசுத்தியைச் செய்து,—சிந்தனைக்கு அரிய சிவத்துடன் அந்த அறிவு மேலைச்சேர - மனோதீதமாகிய சிவசைதன்னியத்தோடு அந்த ஆன்ம சைதன்னியம் துவாதசாந்த பரியந்தம் பொருந்த யோசித்து,—பந்தனை ஒழிவார் தம் மேல் பரிந்து அருட்பார்வை செய்து - பாசக்கட்டவிழும் பக்குவராகிய அச்சீடர்மீது அன்புகூர்ந்து கிருபாநோக்கஞ் செய்தலாகிய சக்ஷுதீக்ஷையைச் செய்தருளி. எ-று.

வினைமுதல் வருஞ் செய்யுளினின்றும் வருவிக்கப்பட்டது. தவத்தாலென மூன்றுவது விரிக்க. அகற்றிச் செய்தென முடிக்க. தவப்பெரு வடிவமென விசேடித்தார் ஞானதேசிக மூர்த்தமென்பது விளக்குதற் பொருட்டு. சடத்துவா-ஆறத்துவா அத்துவா-வழி. இவற்றுள் மந்திரம் பதினொன்றும், பதங்கள் எண்பத்தொன்றும், வன்னங்கள் ஐம்பத்தொன்றும், புவனங்கள் இருநூற்றிருபத்துநான்கும், தத்துவங்கள் முப்பத்தாறும், கலைகள் ஐந்துமென வறிக. அது "ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்று பதங்க ளெண்பத்தொன் றக்கரங்க ளைம்பத்தொன்றுகு, மாய்ந்தபுர மிருநூற்றே டிருபத்து நாலா மறிதருதத் துவமுப்பத் தாறுகலையைந்தே" என்பதனுனறிக. பதினொருமந்திரங்கள் ஈசான மந்திரம்முதல் அஸ்திரமந்திரம் ஈறுயின. எண்பத்தொருபதங்கள் பிரணவாதி பிரணவாந்தமாகிய ஓம், வியோம வியாபினே என்பனமுதல் ஓம் சிவாய நமோநம: ஓம் என்பன ஈறுயின. ஐம்பத்தோரக்ஷரங்கள் அகாரம்முதல் க்ஷகாரம் ஈறுயின. இருநூற்றிருபத்துநான்கு புவனங்கள் காலாக்கினி புவனம் முதல் அநாசிருதாபுவனம்ஈறுயின. முப்பத்தாறுதத்துவங்கள் பிருதுவிதத்துவமுதற்சிவதத்துவம்ஈறுயின. பஞ்சகலைகள் நிவிர்த்திகலைமுதற் சாந்தியாதீதகலைஈறுயின. பதினொன்குதிறத்துயோனிகளினுற்பத்தியை நிவிர்த்திசெய்து சமுசாரபந்தத்தில் வெறுப்பையுண்டாக்கி ஆன்மாவுக்கு மோக்ஷத்தில்உன்முகஞ்செய்தலால் நிவிர்த்திகலை எனவும், இடையருத தியானத்தான் அநுக்கிரகிக்கப்பட்டு, மோக்ஷத்தில் உன்முகமான ஆன்மாவைக் கீழத்துவாவிற் சமுசாரபந்தத்தைத் தடுத்து நிறுத்துதலாற்பிரதிட்டாகலை எனவும்

மூவகை விடயமாகிய வாசகஞானத்தை விடுத்து (ப்பாரிசேஷத்தாற்) சாட்சாத்காரமான அசேஷபதார்த்த ஞானத்தை விளக்குதலால் வித்தியாகலையெனவும், ஆன்மாவுக்கு எல்லாத்துக்கங்களினும் சாந்தியைச்செய்தலாற் சாந்திகலை எனவும், இவைகளையெல்லாங் கீழ்ப்படுத்து ஆன்மாவை மேலே செலுத்துதலாற் சாந்தியாதீதகலை எனவும் பெயராயின. இம்மந்திரம் முதலிய ஆறத்துவாக்களுள் முன்மூன்றும் சொல்வடிவமும் பின்மூன்றும் பொருள்வடிவமுமாகி, ஆன்மாக்கள் இருவினைப்பயன்களை நுகர்தற்கு இவை ஏதுவாமென்பதும் பிறவும் "சிவத்துக்குமேலில்லைத் தெய்வஞ் சிவஞான, சித்திக்குமே லில்லைநூல்" என ஆன்றோரெடுத்தேத்தும் சிவஞானசித்தியார் முதலிய விரிந்த ஞானநூல்களுட் காண்க. அசுத்தம் மிச்சிரம் சுத்தமென்னும் மூவகை யத்துவாக்களும் இங்ஙன மைவகைப்பட்டு ஒன்றினொன்று வியாத்தியாய் முறையானே பஞ்சகலைகளுளடங்குதலின், அவ்விசேடம்பற்றிக் கலைகளை நற்கலைகளென்றார். வியாத்தி சமநிறைவு. மந்திரம் என்பதற்கு நினைப்பவனைக் காப்பதென்பது பொருள். பதினொன்குதிறத் தியோனிகள் மிருகம் முதற் றூவாம் ஈறாகிய வைந்தும், மானுஷ்யமொன்றும், பைசாசமுதற் பிரமா ஈறாய எட்டுமாம். உன்முகம் மேன்முகம். மூவகைவிடயம் ஆத்தவிடயம், சத்தவிடயம், செம்மிய விடயமென்பன. சாட்சாத்காரம் பிரத்தியக்ஷம். அசேஷபதார்த்தம் சேஷியாதபதார்த்தம். சேஷித்தல்-விஞ்சுதல். அத்துவசுத்தியாவது இவ்வாறத்துவாக்களினும் கட்டுப்பட்டிருக்கின்ற போகங்களையெல்லாம் ஏககாலத்திலே புசிப்பித்துத் தொலைத்து மோக்ஷத்தைக் கொடுத்தலாம். இதுவே நிர்வாணதீக்ஷை எனப்படும். நிர்வாணம்-மோக்ஷம். சட்சுதீக்ஷையாவது மாந்திரிகன் பாம்பினாற் கடிக்கப்பட்டவனைக் கருடபாவனையினாலே பார்த்து விஷந்தீர்த்தல்போல ஆசாரியர் சீடனைச் சிவபாவனையினாலே பார்த்துப் பாசவிமோசனஞ் செய்தலாம். அந்தச் சிந்தனைக் கரிய மேலைச் சிவத்துட னறிவு சேர என்பதனான் மானசதீக்ஷை கூறப்பட்டது. மானசதீட்சையாவது ஆசாரியர் தமது இரேசகவாயுவினாலே புறப்பட்டுச் சீடனுடைய பூரகவாயுவினாலே அவனுடைய இருதயத்திற் பிரவேசித்துச் சீடசைதன்னியத்தை வாங்கித் துவாதசாந்த பரியந்தம் பிராசாதோச்சாரண சகிதமாகக் கொண்டுபோய்ப் பின்பு தம்முடைய இருதயத்திலே சிவசைதன்னியத்துடன் கலந்ததாகப் பாவித்துப் பின்னர் அச்சீடசைதன்னியத்தைச் சீடதேகத்திலே பிரதிட்டைசெய்தலாம். யோசித்தல்-சேர்த்தல். சைதன்னியம்-அறிவு. கலை-ஏவுவிப்பது; போக்குவது. (ருரு)

எவர்க்குமெய்ஞ்ஞான மாமஞ் செழுத்தையு முணர்த்தவேண்டி
யவத்தொழி லகற்றி யாளுஞ் சிவத்தைதமுன் னாக மாறித்
தவப்பெரு வடிவங் கொண்டார் தண்டமிழ் பாடுமன்பர்
செவிப்புலன் வழியே சிந்தை யுறத்திரு வாய்ம லர்ந்தார்.

இ—ள்: தவப்பெரு வடிவம் கொண்டார் - பரமாசாரியர் அதன் பின்னர்.—எவர்க்கும் மெய்ஞ்ஞானம் ஆம் அஞ்செழுத்தையும் உணர்த்த வேண்டி - எவர்கட்கும் மெய்ஞ்ஞானத்தைத் தரும் ஸ்ரீபஞ்சாக்கரத்தை உபதேசித்தலாகிய வாசிக தீக்கைசெய்யத் திருவுளங்கொண்டு.—அவத்தொழில் அகற்றி - "சூக்குமபஞ்சாக்கரத்திலே இறுதிக்கண்ணிற்கும் கேட்டைத்தரும் திரோதாயி யக்கரமாகிய நகரத்தையும் மலவக்கரமாகிய மகரத்தையும் நீக்கி,—ஆளும் சிவத்தை - யகரவக்கரப் பொருளாகிய ஆன்மாவை அடிமைகொண்டருளும் பதியக்கரமாகிய சிகரத்தையும் பரையக்கரமாகிய வகரத்தையும்,—முன் ஆக மாறி - அவ்யகரத்துக்கு முன்னாக அம்முறை மாறி —தண் தமிழ் பாடும் அன்பர் செவிப்புலன் வழியே சிந்தை உற — தண்ணிய தமிழ்வேதமாகிய திருவாசகத்தைப் பாடியருளும் சமயாசாரியராகிய அத்திருவாதவூரடிகளது செவிப்புலனாகிய சத்தவிடயத்தின் வழியே மனஞ்சென்றொடுங்க, திருவாய் மலர்ந்தார் - உபதேசித்தருளினார். எ-று.

மெய்ஞ்ஞானமாமஞ்செழுத்தென்றது காரியகாரணவுபசாரம். ஈண்டஞ்செழுத்தென்றது சூக்கும பஞ்சாக்கரத்தை. அது, "சூக்கமாகுமைந்தெழுத்தினிற் சுற்றிய பாச, வீக்கநீக்கிமெய் யானந்தம் விளைநிலத்துய்த்துப், போக்கு மீட்சியுட் புறம்பிலாப் பூரணவடிவ, மாக்கினுனொரு தீபகம் போல்வரு மண்ணல்" என்பதனானுமறிக. அவம் கேடு; என்றது சனன மரணங்களை. தொழில் ஆகுபெயர். அகற்றி மாறி என முடிக்க. ஆளுமென்பது சிவத்திற்கடை. சிவத்தை என்றது சிகரவகரங்களை. ஈண்டு முன் என்றது இடமுன்னை. மாறுதல் அந்நகர மகரங்களின்று நீங்கிய இடத்திலே சிகர வகரங்களை அம்முறை மாறிநிற்கச் செய்தலாம். அது, "பொருளரு ளான்மாப் பொருந்திடுந் திரோதை, மருவிரு மலமாய் வயங்குமைந் தெழுத்திற், றிரோதையு மலமுந் தீர்த்ததனிடத்தில், வரோதைய மான வாசியை நிறுவி, வளம்பொலி சிவாய வாசியென் றுளத்தில், விளம்புக நின்னை விளக்குமா னந்த, முத்தியைந் தெழுத்து மொழிந்தனமிதனைச், சித்தசாந் தியினிற் செப்பென மொழிந்தான்" என்பதனானுமறிக. இருதலைமாணிக்க மென்பதும் முத்திபஞ்சாக்கர மென்பது மிதுவே. வாசிக தீக்கையாவது வருணாச்சிரமாநுகுணமாகப் பதினொருமந்திரத்தோடு ஸ்ரீபஞ்சாக்கரத்தை உபதேசித்தலாம். மூவகை யான்மாக்கட்கெல்லாம் மெய்ஞ்ஞானத்தைக்கொடுப்பது ஸ்ரீபஞ்சாக்கரமே யென்பார் எவர்க்குமெய்ஞ்ஞானமாமஞ்செழுத்தென்றும்: செவிக் கின்பஞ்செய்யுந் தமிழென்பார் தண்டமிழென்றும், மனம் மற்றை விடயங்களின் வழியன்றிச்சத்தவிடயத்தின்வழியேசென்றொடுங்க உபதேசித்தார் என்பார் செவிப்புலன்வழியே சிந்தையுறத் திருவாய்மலர்ந்தார் என்றுங் கூறினார். ஈண்டுக்கூறிய ஸ்ரீபஞ்சாக்கரத்தின் அக்கரமாறுதலை அறியும் அறிவுமதுகையுடையரல்லாதார் சிவத்தை முன்னாக மாறி யவத்தொழில் அகற்றி என

அந்நுவயஞ் செய்து அதற்கேற்பப் பொருளுரைப்பாரும், ஆற்றொழுக்காக வைத்துப் பொருள்கொள்ளுங்காலும் அவத்தொழிலை நீக்கி யடிமைகொள்ளுகின்ற சிவ என்பதனை முன்னிற்கும்படி மாறி எனவுரைப்பாருமாய் விஷயஞானரகிதராய்த் தமக்கது இவ்வுரைவாயிலாகத்தானும் புலனுகாமையை வெளிப்படுத்துவர். (௫௬)

வேறு.

விரவு மன்பொரு வடிவுகொண் டணைவார்
　விழித்த பார்வையின் விளக்கின்முன் னிருள்போற்
சுருதி செந்தமி ழாக்கிய மொழியார்
　தொலைவி லாதவெந் துயர்ப்பவ மொழிந்து
பரவி மென்பதம் பணிபவர் படிமேற்
　படிய வீழ்ந்தனர் வாழ்ந்தனர் பரிவான்
மருவு மிங்கிவர் சென்னியி லிருதாண்
　மகிழ வைத்தனர் மதிநதி முடிப்பார்.

இ—ள்: விரவும் அன்பு ஒரு வடிவு கொண்டு அணைவார் விழித்த பார்வையின் - திருவாதவூரடிகளிடத்துப் பொருந்திய திருவருளையே தமக்கோர் வடிவமாகக்கொண் டெழுந்தருளிய பரமாசாரியர்செய்த சாக்ஷுஷதீக்ஷையினலே, சுருதி செந்தமிழ் ஆக்கியமொழியார் தொலைவு இலாத வெம் துயர்ப்பவம் விளக்கின் முன் இருள்போல் ஒழிந்து - வடமொழி வேதத்தைத் தென்மொழி வேதமாக்கும் மாணிக்கவாசக சுவாமிகள் இதுகாறுந் தம்மை விட்டு நீங்காத கொடிய துன்பத்தைத் தரும் பிறவி இதுபொழுது விளக்கின்முன் னிருள்போல விட்டுநீங்கப் பெற்று,—பரவி மெல் பதம் பணிபவர் படிமேல் படிய வீழ்ந்தனர் வாழ்ந்தனர் - துதித்து மென்மையாகிய திருவடிகளை வணங்குபவர் பூமியிலே எட்டுறுப்புந்தோயச் சந்நிதியில் வீழ்ந்து நமஸ்கரித்துப் பெருவாழ்வை அடைந்தனர்,—மதி நதி முடிப்பார் மருவும் இங்கிவர் சென்னியில் இருதாள் மகிழப் பரிவால் வைத்தனர் - அதுபொழுது அக்குருமூர்த்திகள் தீவிரதர பக்குவம் பொருந்திய இவ்வடிகளது சிரசிலே தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகளாகிய இரண்டு திருவடிகளையும் அவர் மனமகிழுமாறு ஆதரவோடு சூட்டுதலாகிய திருவடிதீக்ஷை செய்தருளினர். எ-று.

உவமை பிறவிதானே ஒழிதற் கெடுத்துக் காட்டப் பட்டது. இங்கிவர் ஒருசொல். ஆக்கிய என்பது காலமயக்கம். இஃதறியாதார் கவிகூற்றென்பர். இருதாள்களுமென்னு முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. அன்பின் முதிர்ச்சியாகிய அருள், ஈண்டுக் காரண காரிய ஒற்றுமைபற்றி அன்பென உபசரித்துக் கூறப்பட்டது. நமஸ்காரவிதியை ' வலஞ்செய்து தண்டனை மானவிதி வழிதழுவத் தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற்றிரு கன்னந்—துலங்குமுகம் வாய்ப்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி—ரிலங்கு

சிரங் கரமுழந்தா ளெனுமைந்து மியைந்திடவே" என்பதனானும், "சிரங் கர முழந்தாண் மண்ணேத் தீண்டிற் பஞ்சாங்க மாகுஞ், சிரந்தனிற் கரங் கள்கூப்பிற் றிரிவித வங்கமாகுஞ், சிரந்தனைத் தாழ்த்து நிற்கை யேகாங்கமாகும், வரம்பெறு மெட்டுமைந்து மத்திம மூன்றே கம்பின்" என் பதனானு மறிக. திருவாதவூரடிகளுக்குப் பரமாசாரியர் திருவடிதீக்ஷைசெ ய்தருளினமையை "இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே. துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தே, னணையார் புனற்றி ல்லை யம்பலத்தே யாடுகின்ற புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய் யாமோ" என்றற் றொடக்கத்தனவாக வரும் அவ்வடிக டிருவாக்குக்களா னுமறிக. இத்திருவடிதீக்ஷையே மூலமலமாகிய ஆணவமலசத்தியைக் குன் றுவித்து முத்திபயத்தற்கண் மிகவும் சிறப்புடைத்தென்க. சுருதியெனப் பொதுவகையாற் கூறினும் ஈண்டுத் தலைமைபற்றிப் பிரபல சுருதியாகிய உபநிஷத்துக்களையே ஏற்புழிக்கோடலாற் கொள்ளப்படுமென்க. இது எண்சீர்க்கழிநெடி லடியாசிரியவிருத்தம். (கூஎ)

மன்னு முன்னுள வுயிர்க்கர ணங்கண்
 மாய்ந்து பொய்ம்முத லறிவிழந் தருளாற்
றுன்னு மின்னருட் சிவகர ணங்க
 டோன்ற லாற்சுக வறிவதிற் றோன்றிச்
சென்னி யின்மிசை மேவிய பாதந்
 திருந்து கண்ணிணை சேர்த்திரு கரத்தா
லுன்னல் செய்திடு மிதயமே லணைவித்
 துவகை கூர்ந்துமெய் யுணர்ச்சியி னெழுந்தார்.

இ—ள்: மன்னும் முன் உள உயிர்க் கரணங்கள் மாய்ந்து - மிக வும் முன்னுள்ள பசுகரணங்கள் தந்தன்மை மறையப்பெற்றும்,—முதல் பொய் அறிவு இழந்து - பழைய மித்தியா ஞானமாகிய சந்தேக விபரீதங் கள் தவிரப்பெற்றும்,—அருளால் இன் அருள் துன்னும் சிவ கரணங்கள் தோன்றலால் - திருவருளினாலே இனிய சிற்சத்திபதியுஞ் சிவகரணங்களா கத் தோன்றுதலினாலே,—சுக அறிவு அதில் தோன்றி - கைவல்லிய சுகத் தைத் தரும் சிவஞானம் அக்கரணங்களினின்றுந் தோன்றப்பெற்று,— சென்னியின் மிசை மேவிய பாதம் இரு கரத்தால் திருந்து இணை கண் சேர்த்து - சிரசிற்பொருந்திய திருவடிகளை இரண்டுகைகளினாலுந் திருந் திய இருகண்களினு மொற்றி,—உன்னல் செய்திடும் இதயமேல் அணைவி த்து - தியானித்தற் கருவியாகிய இருதய ஸ்தானமாயுள்ள மார்பிலணை த்து,—உவகை கூர்ந்து மெய் உணர்ச்சியின் எழுந்தார் - திருவாதவூரடிகள் சிவானந்தக் களிகூர்ந்து திருவடிஞானத்தோ டெழுந்தார். எ-று.

சிவகரணங்க டோன்றலால் என்புழி ஆக்கச்சொற்றொக்கது. மாய் தல்-மறைதல்; ஈண்டுத்திரிதன்மேற்று. இதயம் ஆகுபெயர். ஈண்டுக்கர

ணங்களாவன அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன. இவை, நானே பிரமனென்னும் பசுஞானத்தோடு கூடிய வழிப் பசுகரணங்களாயும், உண்மைச் சிவோகம்பாவனைபற்றி நிகழும் சிவஞானத்தோடு கூடியவழிச் சிவகரணங்களாகியுந் தன்மை திரிவனவென்க. அது "பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங், காலனையன் றேவிக் கராங்கொண்ட-பாலன், மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங், கரணம்போ லல்லாமை காண்" என்பதனுள்ளுங் குறிப்பிக்கப்பட்டவாற்றானுய்த்துணர்க. கரணம் ஈண்டு விசேடகருவி. பசுகரணங்கள் அநாதியே சூக்குமதேகமாய்ச் சகசித்துள்ளனவாகலின் முன்னுளவென் றமையாது மன்னுமுன்னுள வுயிர்க்கரணமென்றும், அவை திரியுந்தன்மையவாகலின் மாய்ந்தென்றும், திரிதலாவது பழைய மித்தியாஞானத்தை யொழிவதாகலிற் பொய்ம்முழுதறிவிழந்தென்றும், சிவகரணங்களாதலாவது சிற்சத்தி பதிதலாகலின் துன்னுமின்னருட் சிவகரணங்க டோன்றலானென்றும், அச்சிற்சத்தியே நிரதிசய வின்ப சுகத்திற்குக் காரணமாதலின் சுகவறிவைத் தோற்றியென்றும், திருவடிகள் ஒற்றப் பெறுதற்குரிய தவத்தாற்றிருந்திய கண்ணென்பார் திருந்து கண்ணென்றும், அத்திருவடிகளின் அருமைவிளக்குவார் கண்ணிணை சேர்த்தென்றும், அத்திருவடிகள் அகத்தே தியானிக்கப்படு பொருளா யிருத்தலைப் புறத்தே குறிப்பிப்பார் உன்னல் செய்திடு மிதயமே லணைவித்தென்றும், பண்டைநினைவு நினைந்தவாறே ஈண்டுச் சித்தித்தமையின் மிகமகிழ்ந்தார் என்பார் உவகைகூர்ந்தென்றும். அத்திருவடிஞானமயமாய் எழுந்தாரென்பார் மெய்யுணர்ச்சியினெழுந்தார் என்றுங்கூறினர். அருமைபற்றிக் கண்ணினும் ஆசைபற்றி மார்பினுங் கொள்ளப்பட்டனவென வேற்றுமை தெரித்துக் கூறுவார் அவ்வேறுபாடுதோன்றத் திருந்துகண்ணிணை சேர்த்தென்றும், இதயமேலணைவித்தென்றும் கூறினர் எனக் கோடலுமாமென்க. பாத மிருகரத்தாற் கண்ணிணை சேர்த்தென்பதனானே அக்கரம் முன்னர்த் தாங்கிய மலர் ஈண்டுருச்சிக்கப்பட்டொழிந்தமையும் பெறப்பட்டதென்க. (கூஅ)

மேலை யத்தலத் திந்திர னிமையோர்
 மீதெ லாம்பொழி விரைமலர் மழையே
போல வித்தலம் புதையவந் துதிரப்
 பூத ருங்கண நாதரும் புகழச்
சால நற்குணம் புனையுநல் லடியார்
 தங்கள் செங்கையி லொலியனுந் தயங்கு
மால வட்டமுங் கவரியு மிருபா
 லசைய மாமுனிக் கணமடி வணங்க.

இ—ள்: மேலைய தலத்து இந்திரன் இமையோர் மீது பொழி விரைமலர் எலாம் - அத்தருணத்து மேலுலகின்கண்வசிக்கும் இந்திரன்மு

தலிய தேவர்கள் ஆகாயத்திலிருந் திறைக்கும் வாசனைபொருந்திய பூக்க ளெல்லாம்,—மழையே போல இத்தலம் புதைய வந்து உதிர - விடாமழை யேபோலத் திருப்பெருந்துறையென்னு மிந்தச் சிவஸ்தலம் மறையும்படி வந்துதிரவும்,—பூதருங் கணநாதரும் புகழ - பூதர்களுங் கணநாதர்களும் புகழவும்,—சால நல் குணம் புனையும் நல் அடியார் தங்கள் செம் கையில் ஒலியலும் தயங்கும் ஆலவட்டமும் கவரியும் இருபால் அசைய - மிகவும் நற்குணங்களைத் தமக்கணிகலமாக மேற்கொள்ளும் நல்ல திருத்தொண்டர்களுடைய சிவந்த கைகளிலுள்ள பீலிக்குச்சங்களும் பிரகாசிக்கின்ற ஆலவட்டங்களும் சாமரங்களு மிருபக்கங்களினும் இரட்டப்படவும்,—மா முனிக் கணம் அடி வணங்க - முனிபுங்கவர்களது கூட்டங்கள் திருவடிகளை வணங்கவும். எ-று.

இனி மேலையத்தலமென்பதை மேலை அத்தலம் எனக் கண்ணழித்து அகரம் பண்டறிசுட்டெனப் பொருளுரைத்தலுமொன்று. உதிரவும், புகழவும், அசையவும், வணங்கவும், இருந்த என வருஞ்செய்யுளில் முடிக்க. நற்குணம் சாத்துவிககுணம். அவை ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறியடக்கம் என்பன. சாலநற்குணம் சாத்துவிகத்திற் சாத்துவிககுணம். (ருக)

இருந்த வப்பெருங் கருணைய னெதிரே
  யெய்தி யன்புடை யியல்பின ரிறைஞ்சிச்
சிரந்தனிற் றம திருகரங் குவியாச்
  சிறந்த பேரரு ணிறைந்தசிந் தையராய்
வருந்தி யித்தல மகழ்ந்துமேற் பறந்து
  மால யன்றொழ வரியநீ யடியே
னருந்து யர்ப்பவ மகற்றவிங் குருவ
  மாவ தேயென வழுதுநெஞ் சழிந்தார்.

இ—ள்: இருந்த அப் பெருங் கருணையன் எதிரே அன்பு உடை இயல்பினர் எய்தி இறைஞ்சி - வீற்றிருக்கின்ற அந்தப் பரமகருணாநிதியாகிய பரமாசாரியரது சந்நிதியிலே இயற்கை யன்புடைய திருவாதவூரடிகள் வலம்வந்து வணங்கி,—தமது சிரந்தனில் இருகரங் குவியா - தம்முடைய சிரசிலே இரண்டுகைகளையுங் குவித்துக் கும்பிட்டு,—சிறந்த பேர் அருள் நிறைந்த சிந்தையர் ஆய் - சீரிய பெரிய திருவருணிறைந்த மனத்தையுடையராகி,—மால் அயன் வருந்தி இத்தலம் அகழ்ந்தும் மேல் பறந்தும் தொழ அரிய நீ - விஷ்ணுவும் பிரமாவும் முறையே பன்றியு மன்னமுமாகி வருத்தமுற்று இப்பூமியை அகழ்ந்தும் ஆகாயத்திற் பறந்தும் அடிமுடிகளைத் தரிசித்து வழிபடுதற்கரிய பெருந்தகைமையுடைய தேவரீர்,—அடியேன் அருந்துயர்ப்பவம் அகற்ற இங்கு உருவம் ஆவதே என அழுது நெஞ்சு அழிந்தார் - புழுத்த நாயினுங் கடையேனாகிய தமியேனது நீக்கு

தற்கரிய பிறவியை நீக்கும்பொருட்டு மானுடச்சட்டைசாத்திக் குருமூர்த்தங்கொண்டு இங்கெழுந்தருளுவதா ஐயையோ இஃதென்னை தகவின்மையென்று பிரலாபித்து மனோலயமடைந்தார். எ-று.

எதிரே யிறைஞ்சியென வினையும். ஐயையோ இஃதென்னை தகவின்மை என்ப திசையெச்சம். மார்ச்சாரசம்பந்தமாக வந்து தமக்குபகரித்தருளிய உயர்வொப்பற்ற நன்றியை முழுவதும் சிந்திக்கும் மனத்தராயென்பார் சிறந்த பேரருணிறைந்த சிந்தையராயென்றும், எத்துணையும் பெரிய தேவரீர் எத்துணையுஞ் சிறிய தமியேனையுமொருபொருட்படுத்துப் பிறவிநீக்கத்தின்பொருட்டு மானுடச்சட்டை சாத்திக் குருவடிவங்கொண்டெளிவந்து வெளிவந்தருளினமை அடியேன் வாயினாற்சொல்லுந்தரமன்றெனப் பரிதபித்திரங்கிச் சித்தவிருத்தி யொடுங்கினரென்பார் விருந்தியித்தல மகிழ்ந்துமேற் பறந்து மாலயன்றேட வரியநீ யடியே னருந்துயர்ப்பவ மகற்ற விங்குருவ மாவதேயென வழுதுநெஞ் சழிந்தார் என்றுங் கூறினர். மனோலயம்-மனவொடுக்கம். இங்கென்பது இரட்டுறமொழிதல். ஈண்டுப் பரவசமின்மையின், குவிய என்னும் பாடம் போலிப்பாடமென்றொழிக. (௬௦)

ஐய னேயெனை யாண்டருள் புரியு
மாதி யேயுழை யணிமழு விருக்குங்
கைய னேகொடுங் காலனை முனியுங்
கால னேயிரு கண்ணினுண் மணியே
செய்ய னேயடி போற்றியென் பெரிய
செல்வ மேயடி போற்றிபொய் யினர்தம்
பொய்ய னேயடி போற்றியெவ் வுயிர்க்கும்
போத மேயடி போற்றியென் றழுதார்.

இ—ள்: ஐயனே - பரமபிதாவே,—எனை ஆண்டு அருள் புரியும் ஆதியே - தமியேனை அடிமைக்கொண் டநுக்கிரகஞ் செய்தருளும் முதல்வரே,—உழை அணி மழு இருக்கும் கையனே - தேவதாருவனத் திருடிகள் அபிசார வோமாக்கினியினின்று மெழுப்பிக் கொல்லும்பொருட்டனுப்பிய மானும் மழுவுந் தங்கிய திருக்கரங்களை யுடையவரே,—கொடும் காலனை முனியும் காலனே - கொடிய யமனை வெகுண்டுதைத்த திருவடியை யுடையவரே,—(என்) இரு கண்ணின் உள் மணியே - எனதிரு கண்மணியா யுள்ளவரே,—செய்யனே அடி போற்றி - சிவந்த திருமேனியையுடையவரே தேவரீருடையதிருவடிகள் அடியேனாற் றுதிக்கற்பாலன,- என் பெரிய செல்வமே அடி போற்றி - எனது பெருஞ்செல்வமாயுள்ளவரே தேவரீருடைய திருவடிகள் அடியேனாற் றுதிக்கற்பாலன,—பொய்யினர்தம் பொய்யனே அடி போற்றி - நாஸ்திகருக்கு நாஸ்திகராயுள்ளவரே தேரீருடைய திருவடிகள் அடியேனாற் றுதிக்கற்பாலன,—எவ்வுயிர்க்

கும் போதமே அடி போற்றி என்று அழுதார் - சர்வான்மாக்கட்கும் அறிவுக் கறிவாயுள்ளவரே தேவரீருடைய திருவடிகள் அடியேனைற் றுதிக்கற் பாலனவென்று திருவாதவூரடிகள் புலம்பினர். எ-று.

முனியுமென்பது காரணகாரிய வுபசாரம். பொய்யினர்தம் பொய்யனெனவே மெய்யினர்தம் மெய்யனென்பதூஉம் பெற்றாம். அது "மையமர் கண்டனை வானநாடர் மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை, ஐயனை யையர்பிரானை நம்மை யகப்படுத் தாட்கொண் டருமை காட்டும், பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப் போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட், பையரவல்குன் மடந்தை நல்லீர் பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே" என்றற் றொடக்கத்தனவாகவரும் திருவாக்குக்களானுமுணர்க. மெய்யினர் ஆத்திகர். பொய்யினர் நாத்திகர். ஆத்திகராவார் கடவுளும் புண்ணியபாவங்களும் சுவர்க்கநரகங்களும் இவைபோல்வன பிறவும் உண்டென்போர். நாத்திகராவார் அவையில்லை யென்போர். அது "பொன்னுலகம் வெந்நரகம் புண்ணியபா வம்புரிவார், நின்மலனு முண்டென்று நிச்சயித்தா—ரிந்நிலைமை, யாத்திகரே யார்கண்டா ரம்மைப் பலனென்பார், நாத்திகரென் றேயுளத்து ணூடு" என்பதனானு முணர்க. இனிப் பொய்யினர்தம் பொய்யனென்பதற்குப் பொய்ச்சமயிகட்கு அவர் கற்பித்துக் கூறுங் கடவுளாய் நிற்பவரெனப் பொருள்கூறுதலுமொன்று. தீநெறிக்க ணீக்கி நன்னெறிக்கட் செலுத்துங் கண்மணிகளைப்போலப் பிறவிநெறிக்கணீக்கி முத்திநெறிக்கட் செலுத்தலின் இருகண்ணினுண் மணியே யென்றும், சிற்றின்பத்துக்கேதுவாகிய பொருட்செல்வம்போலன்றிப் பேரின்பத்துக் கேதுவாகலின் செல்வமென வாளாகூறாது என்பெரிய செல்வமேயென்றும் தூலசித்தாகிய ஆன்மாக்களுக்குச் சூக்கும அதிசூக்கும சித்தாய் நின் றறிவைவிளக்குதலின் எவ்வுயிர்க்கும் போதமே என்றுங்கூறினர். (சுக)

அற்றை ஞான்றிருள் வைகறை யெனும்போ
  தணைத லும்பர னருட்குரு வடிவந்
துற்ற சாந்துடன் முயங்குசெங் கழுநீர்த்
  தொடைய லின்சுமை பொறுதெனத் துளங்கிக்
கற்று மான்கரத் தேந்திய விறைவன்
  கவின்கொண் மார்பணி மலர்த்தொடை கழித்தங்
குற்ற வான்றுய ரகன்றுநல் லடியா
  ருடன் விளங்கினர் களங்கமொன் றில்லார்.

இ—ள்: அற்றை ஞான்று இருள் வைகறை எனும்போது அணைதலும் - அத்தினத் திருள்கழிகின்ற புலரிக்காலஞ் சமீபித்தலும்,—களங்கம் ஒன்று இல்லார் - காமவெகுளிமயக்கம் என்னும் முக்குற்றங்களுள் ஒருகுற்றமுமில்லாத திருவாதவூரடிகள்,—பரன் அருள்குருவடிவம் துற்ற

சாந்து உடன் முயங்கு செங்கழுநீர்த் தொடையலின் சுமை பொறாது என
த்துளங்கி - சிவபெருமானது சத்திகாரியமாகிய தேசிகத் திருமேனியா
னது செறியப்பூசிய சந்தனக்குழம்போடு புரளுகின்ற செங்கழுநீர்மாலையி
னது பாரத்தைத் தாங்கமாட்டாதென்று மனம் விதிர்விதிர்த்து,—கற்று
மான் கரத்து ஏந்திய இறைவன் கவின்கொள் மார்பு அணி மலர்த் தொ
டை கழித்து - மான்கன்றைத் திருக்கரத்திலே தாங்கிய அச்சிவபெருமா
னது அழகுபொருந்திய திருமார்பிலணிந்த பூமாலையைக் கழித்து;—அங்
கு உற்றவான் துயர் அகன்று - அங்ஙனம் பொருந்திய பெரிய மனவருத்
தத்தை ஒழிந்து,—அடியார் உடன் விளங்கினர் - திருத்தொண்டர்களோடு
கூடி விளங்கினர். எ-று.

அன்று கன்று என்னும் மென்றொடர்க் குற்றியலுகரமொழிகள் அல்
வழிப்புணர்ச்சிக்கண் முறையே அற்று கற்று என வன்றொடர்க் குற்றிய
லுகரமொழிகளாயின; "மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்
லாம், வல்லொற்றிறுதி கிளையொற்றாகும்" என்பதனாற்கொள்க. அற்றை
ஞான்றென்பது அன்றாகிய ஞான்றெனப் பண்புத்தொகை. ஐ சாரியை.
கற்றுமானென்பதுமது. இக்னை முன்பின்னாகத் தொக்க ஆறும்வேற்று
மைத்தொகையாய் அல்வழியுள் அடங்காவழியென்பாருமுளர். அற்றைநாட்
பொழுது தன்னெல்லையோடு கழிந்தறுதலின் விடியல் வைகறையெனப்
பட்டதென்பார் அற்றைஞான்றிருள் வைகறையெனும்போதென்றும், சாந்
துடன் முயங்குசெங் கழுநீர்த் தொடையலின்சுமைபொறாதெனவே, தொ
டையலில்வழிச் சாந்தினைப் பொறுக்குமென்பது தானே பெறப்படுதலின்
மார்பணி மலர்த்தொடை கழித்தென்றுங் கூறினர். இரண்டனையுஞ்சேரத்
தாங்கமாட்டாதென்ப தவ்வடிகள் கருத்தென்க. (கூஉ)

வேறு.

வாத வூருறை யிறைவர்தம் பெரிய
மாயை போலிருண் மாய்ந்துபின் னவர்பாற்
போத மாகிவந் துறுசுடர் விளக்கம்
போல வேயினன் புணரியிற் றோன்ற
வேத நாதர்த மிருபத மிறைஞ்சு
மெய்ம்மை யாளரை வேறுகொண் டிருந்தங்
கோது மாகமத் தறிவரும் பொருளை
யுரைக்க வேநினைந் தாரற முரைத்தார்.

இ—ள்: வாதவூர் உறை இறைவர் தம் பெரிய மாயை போல்
இருள் மாய்ந்து - அப்பொழுது திருவாதவூரடிகளுடைய பெரிய மாயா
மலத்தைப்போல இருண் மறைய,—பின் - அதன்பின்னர்,—அவர்பால்
போதம் ஆகி வந்து உறுசுடர் விளக்கம் போல இனன்புணரியில்தோன்ற-
அவ்வடிகளிடத்துச் சிவஞானமாகிவந்து பொருந்துகின்ற தீபத்தின் பிர
காசத்தைப்போலச் சூரியன் கிழக்குச் சமுத்திரத்திலே உதிக்க,—வே

நாதர் அறம் உரைத்தார் - வேதமுதல்வராகிய சிவபெருமான் முன்னரும் தருமோபதேசஞ் செய்தார் ஆகலின்,—தம் இருபதம் இறைஞ்சும் மெய்ம் மையாளரை வேறு கொண்டு இருந்து - தம்முடைய உபயதிருவடிகளை வழிபடும் அம்மெய்யன்பரைத் தனியிடத் தழைத்துக்கொடுசென்றிருந்து,- ஓதும் ஆகமத்து அறிவு அரும் பொருளை அங்கு உரைக்கநினைந்தார் - தாமருளிச்செய்த மூலாகமங்களிலே எளிதில் அறிந்துகோடற்கரிய சித்தாந்தப் பொருளை அங்கே போதித்தலாகிய சாத்திரதீக்ஷைசெய்யத் திருவுளங் கொண்டருளினார். (அஃதெங்ஙனமெனின்.) எ-று.

வாதவூருறை யிறைவர் என்பதனைச் சொற்கிடக்கை முறையானே விரித்துரைத்துக் கொள்க. மாயவென்னுஞ் செயவெனெச்சம் மாய்ந்தெனத் திரிந்துநின்றது; சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை" என்பதனாற்கொள்க. இருந்து, உரைக்க, நினைந்தார் என முறையானே முடிக்க. ஆகலின் என்பது சொல்லெச்சம். சாத்திரதீக்ஷையாவது சைவாகமாதி சிவசாத்திரப் பொருளை ஞானாசாரியர் நன்மாணாக்கனுக் கினிது போதித்தலாம். சிவபெருமான் முன்னருஞ் சனகர்முதலிய முனீந்திரர் நால்வர்க்கும் பிறர்க்குந் தருமோபதேசஞ் செய்தாராதலின், அங்ஙனமே ஈண்டுந் திருவாதவூரடிகளுக் காகமோபதேசஞ்செய்தல் புதுமையன்றெனவே, இவ்வடிகள் அம்முனிவரோடொத்தவரென்பது தாற்பரியத்தான் விளக்குதற்கு வேதநாதரென் றொழியாது அறமுரைத்தாரென்றும், அவரதடிமைத்திறம் சிரத்தையன்புகட் கேற்ப ஏனைத் திருத்தொண்டர்களினும் வேறாக ஓர் ஏகாந்தஸ்தானத்தில் அழைத்துக் கொடுசென் றிருந்தென்பார் தமிருபத மிறைஞ்சு மெய்ம்மையாளரை வேறுகொண் டிருந்தென்றும், முற்றறிவையுடைய பதியாகிய தம்மாலருளிச் செய்யப்பட்ட சைவாகமங்களின் முடிந்த முடிபாகிய சித்தாந்தப்பொருளைச் சிற்றறிவுடைய பசுவர்க்கங்களாற் றாமாக உள்ளவாறறிதல் கூடாதென்பார் அதனை ஓதுமாகமத் தறிவரும் பொருளென்றுங் கூறினார். மாயைக் கிருளையும் போதத்திற் கினனையும் தொன்றுதொட் டுவமானமாகக் கூறும் வழக்கை விபரீதஞ்செய்து, ஈண்டிருளுக்கு மாயையையும் இனனுக்குப் போதத்தையும் உவமான மாக்கிக் கூறுதலின், இது விபரீதவுவமாலங்காரமென்க. (கூ௩)

களிம்பு தோய்ந்தசெம் பெனவுனை மருவுங்
கருமை கூர்மலங் கண்டது கலக்கும்
பளிங்கு போன்றதுன் றன்மையம் மலத்தின்
பற்றி னானுடல் பலவெடுத் துழன்றாய்
வளங்கு லாம்புவ னந்தொறுஞ் செயுமுன்
வல்வி னைப்பயன் வருமுறை நெறியே
யளந்து நாந்தர நுகர்ந்துமே னுகர்வு
மாக்கி யேதிரிந் தனைமன வழுக்கால்.

இ—ள்: செம்பு தோய்ந்த களிம்பு என கருமை கூர் மலம் உனை மருவும்—செம்புள்ளஞான்றே அதனோடு சகசித்த களிம்பைப்போல இருண்மயமாகிய மலமானது ஆன்மாவாகிய உன்னை அநாதியே சகசித்திருக்கும்,—உன் தன்மை கண்டது கலக்கும் பளிங்கு போன்றது—ஆதலான் உன்னியல்பானது சார்ந்ததன்வண்ணமாய் நிற்கும் படிகம்போல நின்னாற் சாரப்பட்ட கருவிகளின் வண்ணமேயாய் நின்றது.—அம் மலத்தின் பற்றினல் உடல் பல எடுத்து வளங் குலாம் புவனந் தொறும் உழன்றாய்—அம்மலவாசனையினாலேயே உடம்புகள் பலவற்றை யெடுத்துப் பிறந்திறந் திதுகாறும் வளம்பொருந்திய சுவர்க்க மத்திய பாதலங்களிற் சுழன்று திரிந்தாய்.—செயும் முன் வல் வினைப்பயன்—அப்புவனங்கடோறும் நீ முன் செய்துகொண்ட இருவினைப்பயன்களாகிய சுகதுக்கங்களை.—வரு முறை நெறியே நாம் அளந்து தர நுகர்ந்தும்-நுகரவரும் வினைவினைவின் கிரமந்தவறாமலே நாம் நியதி செய்துதர நீ அநுபவித்தும்,—மன அழுக்கால் மேல் நுகர்வும் ஆக்கியே திரிந்தனை-அங்ஙனமநுபவிக்குமிடத்து யானெனதென்னும் முனைப்பாகிய மனக்குற்றங்களினாலே மேல் உடம்பெடுத் தநுபவித்தற் கேதுவாகிய ஆகாமியவினைவிளைவுகளையும் நின்கருத்துவகையாற் செய்துதிரிந்தனை. எ-று.

நுகர்வு ஆகுபெயர். மலம் துடைக்கப்படுவதென்னும்பொருட்டு. செம்புக்குக் களிம்பு சகசமேயென்பது காட்சிப்பிரமாணத்தால் எளிதினறியக்கிடத்தலின் அதனையெடுத்துக்கூறி விளக்கி, அவ்வாறே ஆன்மாவுக்கும் மலமநாதியென்பார் களிம்புதோய்ந்த செம்பெனவுனைமருவுங் கருமைகூர்மலமென்றும், அஃதங்ஙனமாகவே, தன்னையடுத்த பன்னிறங்களினியல்பே தன்கட்கொண்டு காட்டித் தன்னொளிதோன்றாது நிற்கும் படிகம்போல நீயும் நின்னாற்சாரப்பட்ட கருவிகளினியல்பே நின்கட்கொண்டுகாட்டி நின்னியல்பு தோன்றப்பெறாது நின்றனை யென்பார் கண்டதுகலக்கும் பளிங்குபோன்றதுன் றன்மை என்றுங் கூறினார். களிம்புதோய்ந்த செம்பென வுனைமருவுங் கருமைகூர் மலமென்றது ஆணவமாகிய மூலமலத்தை. இதனைக் கருமைகூர் மலமென்றார் "இருளொளிரவிருண்டமோகமாய்" என்பது அதனியல்பாகலினென்க. புவனந்தொறுஞ் செயுமுன் வல்வினையென்றது கன்மமலத்தை. பயன்வருமுறைநெறியே யளந்துநாந்தர நுகர்ந்தென்றது பிராரத்தவினையை. மேனுகர்வென்றது ஆகாமியவினையை. சகசித்தல்-உடன்கலந்துநிற்றல். (கூச)

செய்து ளோர்பெறும் வினைப்பய னொருவர்
சேர்க்க வேண்டுவ திலெனி னிதுமே
லெய்து மேலிது நுகர்வதென் றறிவ
தில்லை நீவினை யெனிற்சட மறியா

வுய்த லாகிய நன்னெறி யுணரா
  வுனையு முன்வினைப் பயனையு முணர்ந்து
மைத வாமல மொழித்தரு ளகலா
  வாழ்வு நல்குவம் யாமென மதிப்பாய்.

இ—ள்: செய்துளோர் பெறும் வினைப் பயன் ஒருவர் சேர்க்க வேண்டுவது இல் எனில் - தம்மைச் செய்துகொண்டவர் தாமே அநுபவிக்கத்தகும் வினைப்பயன்களை மற்றொரு கடவுள் இடையேநின்று கூட்ட வேண்டுவதில்லை அவரும்அவையுந் தாமேகூடுதல் பெறப்படுமெனின்,—நீ இது மேல் எய்தும் இது மேல் நுகர்வது என்று அறிவது இல்லை—நீ முற்றறிவுடையையல்லை யாகலின், அவ்வினைப்பயன்களுள் இவ்வினை மேல்வாற்பாலது அதற்கீடாக இன்னபயன் மேல் அநுபவிக்கற்பாலது என்றறியமாட்டாய்,—வினை எனில் சடம் அறியா—அவ்வினைப்பயன்கடாமறிந்து கூடாவோவெனின் அவை அசேதனப்பொருளாகலின் அறியவுங்கூடவுமாட்டா,—நாம் உய்தல் ஆகிய நல் நெறி உணரா உனையும் உன் வினைப் பயனையும் உணர்ந்து,-இங்ஙனமாகலின் முற்றறிவையுடைய நாமே கடைத்தேறும் நன்னெறியை யறியாத உன்னையு முன்வினைப் பயன்களையும் காலக்கிரமத்தோடு பொருந்த அறிந்து கூட்டிப் புசிப்பித்துத்தொலைத்து,—தவா மை மலம் ஒழித்து - உன்னை விட்டுநீங்காத கரிய மலவலியைக் குன்றுவித்து.—அகலா அருள் வாழ்வு நல்குவம் என மதிப்பாய்—நித்தியமாகிய நிரதிசயவின்ப வாழ்வை உனக்குத் தருவோமென்று நீ யறிந்துகொள்வாயாக எ-று.

வினை நிகழ்ச்சிக்கட் செய்துளோர் எனப் படர்க்கைப் பலர்பாலாற் கூறி, விடை நிகழ்ச்சிக்கண் அறிவதில்லை நீயென முன்னிலையொருமையில்வைத் தடிகளை எதிர்முகமாக்கியது உபதேசப்பொருளை வலியுறுத்துதற்கென்க. நடுநின்ற வினை ஆகுபெயர். அது முன்னர் உனையு முன் வினைப்பயனையுமுணர்ந்து என்பதனானுமுணர்க. மைம்மலம் தவாமல மெனவும், அகலாவாழ்வு அருள்வாழ்வு எனவும் தனித்தனி கூட்டுக. அசேதனம் அறிவில்பொருள். சடம், அசித்து, அசேதனம் என்பன ஒருபொருட்கிளவி. ஆன்மவர்க்கங்கள் வினைகளை ஈட்டுமிவ்வியல்பு தொன்றுதொட்டு வீடுபேறெய்துமளவும் இடையறவுபடாது தொடர்ச்சியாய் வருமென்பார் செய்தவரென்னாது செய்துளோரென்றும், வினைமுதல் செயப்படுபொருள் பயன்கட்குப் பிறர்மதமேற்கொண் டியையுடைமை விளக்குவார் செய்துளோர் வினைப்பயனென்னாது செய்துளோர்பெறும் வினைப்பயனென்றும், முற்றறிவின்மையின் உயிர்களும், சடமாகலின் வினைப்பயன்களுந் தாமாக அறிந்து கூடுமாறில்லையெனவே, அறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைத்து மலசத்தியை நலித்துப் பேரின்ப வாழ்வைக் கொடுத்தல் முற்றறிவும் பெருங்கருணையுமுடைய தமக்கே கடப்பாடென்பார் உய்தலாகிய நன்னெறி யுணரா வுனையு முன்வினைப்

பயனையு முணர்ந்து மைதவாமல மொழித்தரு ளகலாவாழ்வு நல்குவம் யாமென மதிப்பாய் என வினவில்வழியும் விதந்துங் கூறியருளினர். உணரா, உணர்ந்தென் புழி முறையே உயிர்க்குச் சிற்றறிவுடைமையுந் தமக்கு முற்றறிவுடைமையும் பெறப்படுதலின், வேறு விதந்திலர் என்க. (௬௫)

எவர்க்கு மிம்மலஞ் சேரவிங் கொழியா
திருப்ப தென்னெனி லின்னல்கொள் பிறவித்
துவக்கெ னுந்தம திருவினைப் பயனுந்
துலைபு கும்பொரு ளெனநிறை நிகர்த்தா
லவர்க்கு நம்பதங் கொடுத்திட ரொழிப்போ
மதுவி லாதவ ரழுங்கியவ் வளவும்
பவப்பெ ருங்கடல் வீழ்வர்தம் பருவம்
பார்க்கு மெம்மையுந் தம்மையும் பாரார்.

இ—ள்: எவர்க்கும் இம் மலம் சேர இங்கு ஒழியாது இருப்பது என் எனில் - சமஸ்தருக்கும் இம்மலத்தை ஒருசேர இங்ஙனம் நாம் நீக்காதிருப்பதென்னையெனின்,—இன்னல் கொள் பிறவித் துவக்கு எனும் தமது இரு வினைப்பயனும் துலை புகும் நிறை பொருள் என நிகர்த்தால் - துன்பத்தையுடைய சனனபந்தத்துக்கேதுவாகிய தமது இருவினைப்பயன்களுந் தராசுகோலின் இருதட்டுக்களினுமிட்ட சமநிறையுடைய பொருள்போலத் தம்முளொக்குமாயின்,—அவர்க்கு நம் பதம் கொடுத்து இடர் ஒழிப்போம் - அவ்வொப்புமையுடைய பக்குவர்களுக்கு நமது திருவடி தீக்ஷை செய்து மலத்தை நீக்குவோம்.—அது இலாதவர் அவ்வளவும் அழுங்கி பெரும் பவக் கடல் வீழ்வர்—அவ்விருவினை யொப்பில்லாத அபக்குவரெல்லாம் அந்நிலையடையுங்காறும் வருந்திப் பெரிய சனனசாகரத்தில் வீழ்வர்,—தம் பருவம் பார்க்கும் எம்மையும் தம்மையும் பாரார் - அந்நிலையொழிந்து தமதிருவினையொப்பு மலபரிபாகங்களைத் தம்பொருட்டு எதிர்நோக்கியிருக்கும் பதியாகிய நம்மையும், சனனமரண வேதனைப் பட்டுழலும் பசுக்களாகிய தம்மையும் விசாரியார்; ஆகலின் எவர்க்குமிம் மலஞ்சேரவிங்கொழியேம் என்பது அறிவாயாக. எ-று.

ஒழியாதென்பது அந்தர்ப்பாவிதணிச்சு; "குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்" என்புழிப்போல. அது முன்னர் ஒழிப்போமென்னும் பயனிலையானும், மலமொழித்தருளகலா வாழ்வு நல்குவம் யாமெனத் தம்மேல்வைத்து மேலைச்செய்யுளிற் கூறியவாற்றானுமுணர்க. ணிச்சு பிறவினைவிகுதி. பிறவிக்கேதுவாகிய துவக்குப் பிறவித்துவக்கெனக் காரணம் காரியமாகவுபசரிக்கப்பட்டது துவக்கு-கட்டு எனுமென்பது பெயரெச்சம்; என்றாகமங்கூறுமெனப் பொருள்கொண்டு முற்றென்பாரு முளர். அவர், அவ்வினைவிற் கது சேர்வினையாகாமையும் ஆகமத்தின்

மேல்வைத்துரைத்தல் ஈண்டுச் சிறப்பின்மையும், தமதிருவினைப்பயனுந் துலைபுகும் பொருளென நிறைநிகர்த்தா லவர்க்கு நம்பதங்கொடுத்திட ரொழிப்போமென முன்னர்க் கிளந்து கூறுதற்கோ ரியைபின்மையும், ஒழிப்போமென வினைப்பயனிலை கொடுத்துப் பின் முடிக்கப்படுதலும், பிறவும் நோக்கிற்றிலர். வினைப்பயன் சுகதுக்கங்கள். இடர் ஆகுபெயர். அதுவிலாதவராழுங்கி யவ்வளவும் பவப்பெருங் கடல் வீழ்வர் தம்பருவம் பார்க்கு மெம்மையுந் தம்மையும் பாரார் என்பதனால் அபக்குவர்க்கு ஒழியேமென்பது நன்குபெறப்பட்டது. படவே, எவர்க்கு மிம்மலஞ் சேர விங்கொழியா திருப்பதென் னென்னும் வினவிற்குச் செவ்வனிறையாய வாறு கண்டுகொள்க. இனி, அதுவிலாதவர்தம்பருவம் பார்க்குமெம்மையுந் தம்மையும்பாராராய் அவ்வளவுமழுங்கிப்பவப்பெருங்கடல் வீழ்வரென முடித்தலுமொன்று. இருவினையொப்பாவது நல்வினையால்வரும் இன்பத்திலும் தீவினையால்வருந் துன்பத்திலும் முறையே விருப்பும் வெறுப்புமின்றிச் சமபுத்திபண்ணுவது. ஓடும் பொன்னும் ஒப்பநோக்குவது மது. அது "ஓடும் பொன்னு முறவும் பகையுமோர், கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும், வீடுங் கானமும் வேறற நோக்குதல், கூடுந் தன்மை கொளுமன நன்மனம்" என்பதனானு முய்த்துணர்க. (௬௬)

என்று கூடுமிப் பருவமென் றியம்பில்
  யாமி ருந்துள விடந்தொறு மிறைஞ்சி
நன்றி சேர்சிவ புண்ணியம் புரியு
  நன்மை யாலிது நணுகுமென் றறிநீ
மன்றி லானவெம் மியல்புனக் குரைக்கின்
  மாசி லாவுரு மூன்றவற் றருவ
மொன்று பேரொளி யொன்றரு வுருவ
  மொன்று தானரு ளுருவமென் றுணர்வாய்.

இ—ள்: இப்பருவம் என்று கூடும் என்று இயம்பில் - இம்மலபரிபாக மொருவற் கென்றைக்கு வந்து பொருந்துமென்று நீவினவின்,— யாம் இருந்துள இடம் தொறும் இறைஞ்சி - நாம் வீற்றிருக்கும் ஸ்தலங்கடோறும் சென்று நம்மைத் தரிசித்து வணங்கி,—நன்றி சேர் சிவபுண்ணியம் புரியும் நன்மையால் இது நணுகும் என்று நீ அறி - நன்மைபொருந்திய சிவபுண்ணியங்களைச் செய்யும் விசேஷத்தினாலே இது வந்து பொருந்துமென்று நீ அறிவாயாக, அதுநிற்க,—மன்றில் ஆன எம் இயல்பு உனக்கு உரைக்கின் - கனகசபையின்கட்பொருந்திய நமது தடத்தலக்கணமாகிய பொதுவியல்பை உனக்குச் சொல்லப்புகின்,—மாசு இலா உரு மூன்று—நமக்குக் குற்றமற்ற வடிவங்கள் மூன்றுள்ளன,—அவற்று ஒன்று அருவம்—அம்மூன்றனுள் ஒருவடிவம் அருவமாகும்,—ஒன்று பேர் ஒளி அருவுருவம் - மற்றொருவடிவம் தேசோமயமாகிய அருபரூபமாம்,—

ஒன்று தான் அருள் உருவம் என்று உணர்வாய்—ஒழிந்த மற்றொன்று தான் அருண்மயமாகிய உருவம் என்று நீயறிவாயாக. எ-று.

ஊரும் பேரும் உருவும் இல்லாத தாம் அவற்றைக் கொண்டருளினமை ஆன்மாக்களை உய்விக்கவேண்டுமென்னும் திருவருண்மயமாகிய பஞ்சகிருத்திய நிகழ்ச்சியின்பொருட்டே என்பார் அத்தொடர்பு தோன்ற மன்றிலானவெம்மியல்பென்றார். ஈண்டு மன்றென்றது பராசத்தியின்மேற்று. அவற்றுளென எழனுருபு விரிக்க. தான் என்பது அம்மூவகையுங் கூறப்பட்டொழிகின்றமை யுணரநின்றது. சிவபுண்ணியங்களை வருஞ்செய்யுட்களிற் காண்க இப்பதிபுண்ணியங்களைச் சிவத்தலயாத்திரை செய்யம்வழித் திருவருளை முன்னிட்டு நின்றியற்றின், அவற்றாற் றப்பாது தானே இப்பருவம் வருமென்பார் யாமிருந்துளவிடந்தொறுமிறைஞ்சி நன்றிசேர்சிவபுண்ணியம்புரியு நன்மையாலிது நணுகுமென்றறிநீ யென்றும், இம்மலபரிபாகத்தைக் கொடுக்கமாட்டாத பசுபுண்ணியம்போலாது கொடுக்கவல்ல பதிபுண்ணியங்களை நன்றிசேர் சிவபுண்ணியமென விசேடித்தும், காம வெகுளி மயக்கங்களாகிய குற்றங்களுள் அகப்படுத்தும் பசுக்களது மாயாகாரியமாகிய உருவம்போலன்றி அக்குற்றங்களற்ற அருட்சத்திகாரியமாகிய வடிவங்களென்பார் மாசிலாவுரு என்றும் அருளுருவமென்றும் கூறினர். அருவுருவைப் பேரொளி யருவுருவெனச் சிறப்பித்தார் யான் எனதென்னுஞ் செருக்குற்ற பிரமவிஷ்ணுக்களுக்கிடையே தோன்றி அச்செருக்கை அடக்கிய அக்கினிப்பிழம்பு வடிவமும் இதுவேயென்று விளக்குதற்பொருட்டென்க. (கூஎ)

இந்த மூன்றினி னுருவுனக் கறிய
விசைந்த பேரரு ளியம்புமிவ் வுருவம்
வந்தி யாவரும் பணிவதற் கெளிதாய்
வரமெ லாந்தர வருமரு வுருவம்
பந்த மாகிய மலவிரு ளகற்றும்
பரிதியாயுள பல்லுயிர்க் குயிரா
யந்த மாதிக ளளப்பரு மொளியா
யமல மாகுமவ் வருவெனு முருவம்.

இ—ள்: இந்த மூன்றினில் உரு இசைந்த உனக்கு அறிய பேர் அருள் இயம்பும் இவ் உருவம்-மேலே தொகுத்தும் வகுத்துங் கூறிய இம்மூவகைவடிவங்களுள்ளும் உருவடிவமாவது பக்குவத்தையுடைய உனக்கு விளங்குமாறு பெருங்கருணையினாலே சாத்திரதீக்கை செய்கின்ற இக்குருவடிவமேயாம்,—அருவுருவம் யாவரும் வந்து வணங்குதற்கு எளிது ஆய் வரம் எலாம் தரவரும்—அருவுருவவடிவமாவது சகலரும் வந்து தரிசித்து வணங்குதற் கெளிவந்ததாய்ச் சகலவரங்களையுங் கொடுக்குஞ் சிவலிங்கவடிவமேயாம்;—அவ் அரு எனும் உருவம்-அவ்வருவடிவமாவது,—

பந்தம் ஆகிய மல இருள் அகற்றும் பரிதி ஆய் - அநாதிபந்தமாகிய ஆணவ மலவிருளை நீக்கும் ஞானபானுவாய்,—உள பல் உயிர்க்கு உயிர் ஆய் - அநாதியாயுள்ள பலதிறத்தான்மாக்களுக்கும் அந்தரான்மாவாய்,—ஆதி அந்தங்கள் அளப்பு அரும் ஒளி ஆய் - ஆதிமத்தியாந்தரகிதமாகிய பேரொளியாய் ,—அமலம் ஆகும் - நிருமலமாயிருக்கும். எ-று.

இவ்வுருவமெனச் சுட்டியது போகவடிவம், கோரவடிவம், யோக வடிவங்களனைத்தையுந் தொகுத்தென்க. அருவம் அவ்வியத்தமெனவும் நிஷ்களமெனவும், ரூபாரூபம் வியத்தாவ்வியத்தமெனவும் சகளநிஷ்கள மெனவும், உருவம் வியத்தமெனவும் சகளமெனவும் கூறப்படும். வரம் கருதியபேறு. தரவருமென்பது ஒருசொன்னீர்மைத்து. (௬அ)

ஆவ லாலெமக் காமலர் மரங்க
ளாக்க லம்மலர் பறித்தலம் மலராற்
றாவி லாவகை தார்பல சமைத்த
றணப்பி லெம்புகழ் சாற்றலன் புடனா
மேவு மாலய மலகிடன் மெழுகல்
விளங்க நல்விளக் கிடுதலெம் மடியார்க்
கேவ லானவை செய்தலிச் சரியை
யியற்ற வல்லவர்க் கெம்முல களிப்போம்.

இ—ள்: ஆவலால் எமக்கு ஆம் மலர் மரங்கள் ஆக்கல் - அவாவினாலெமக்குருகமாகிய பத்திரபுட்பங்களையுடைய விருக்ஷங்களை வைத்து வளர்த்தலும்.— அம்மலர் பறித்தல் - அப்பத்திரபுட்பங்களைக் கொய்தலும்.—அம் மலரால் தா இலா வகை பல தார் சமைத்தல் - அம்மலர்களினாலே விதிப்படி இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டு, பிணையன் முதலிய பலவகைத் திருமாலைகளைக் கட்டுதலும்,—தணப்பு இல் எம் புகழ் சாற்றல் - இடையறாது எமது கீர்த்திப்பிரதாபமாகிய தோத்திரங்களைப் பாடுதலும்,—நாம் மேவும் ஆலயம் அன்பு உடன் அலகிடல் மெழுகல் - நாம் வீற்றிருக்கும் ஆலயங்களை அன்போடு திருவலகிடுதலுந் திருமெழுக்குச் சாத்துதலும்,—விளங்க நல் விளக்கு இடுதல் - அவ்வாலயங்களிற் பிரகாசிக்கும்படி நல்ல தீபமேற்றுதலும்,—எம் அடியார்க்கு ஏவலானவை செய்தல் - நம்மடியவர்க் கவரேவிய தொண்டுகளைச் செய்தலுமாகிய,—இச்சரியை இயற்ற வல்லவர்க்கு - இச்சரியாபாதத்தை அநுட்டிக்க வல்லவர்களுக்கு,—எம் உலகு அளிப்போம்—எம்முடைய சிவலோகத் திருத்தலாகிய சாலோகபதத்தைக் கொடுப்போம். எ-று.

ஆவல் இச்சைப்பெருக்கம். தாவிலாவகை என்பதை இடைநிலைத் தீபமாகக்கொண் டேனையவற்றோடு மொட்டுக. தமக்காமலர்மரங்கள் வில்வம், பாதிரி, கோங்கு, பன்னி, கொன்றை, சண்பகம், மகிழ், புன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, செருந்தி முதலியன. வெண்டாழை, கருந்துளசி

தமக்காகாதவைகளாகலின் அவற்றை நீக்குதற்கு எமக்காமலர்மரமென விசேடிக்கப்பட்டது. மரங்களை விதிப்படி வைத்து வளர்த்தலாவது சண்டாளபூமி, சுடுகாடு, மலசலபூமிகளுக்கு அணிமைக்கணில்லாததாய், நான் கெல்லையுஞ் சுவரினாலேனும் வேலியினாலேனுஞ் சூழப்பட்டதாய், கீழே ஆழமாகவெட்டி எலும்புமுதலிய குற்றங்களறப் பரிசோதிக்கப்பட்டதாய், பசுநிரை கட்டப்பெற்றுக் கோசலகோமயங்களினாலே சுத்தியடைந்ததாயுள்ள நிலத்திலே விருக்ஷங்களை வைத்து, புலையர் புறச்சமயிகள் தூரஸ்திரீகள் முதலாயினோர் உள்ளே பிரவேசியாமலும், எச்சில், மூக்குநீர், மலசலமுதலியவற்றான் அசுசிப்படுத்தாமலும், அங்ஙனமுள்ள பத்திரபுட்பங்களைக் கடவுட்பூசை முதலியவற்றிற்கன்றிப் பிறவற்றிற்குபயோகப்படுத்தாமலும், அவைகளிற் சலந்தெறிக்கும்படி வஸ்திரந் தோயாமலும், வஸ்திரத்தைப் போடாமலும் பாதுகாத்து நீர்விடுகை முதலியவற்றாற் குறைவுறாது வளர்த்தலாம். இங்ஙனம் கோட்டுப்பூவைத்தரும் மரங்களை வைத்து வளர்த்தல் கூறவே "ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே" என்னும் உபலக்கணத்தால் நிலப்பூவைத்தரும் அலரி, நந்தியாவர்த்தம், வெள்ளெருக்கு, பட்டி, நாயுருவி, பொன்னூமத்தை, செவ்வந்தி, வெட்டிவேர், இலாமிச்சை, துளசி, தருப்பை, மருக்கொழுந்து, சிவகரந்தை, விட்ணுகாந்தி, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை, பூளை, அறுகு முதலிய செடிகளையும்; கொடிப்பூவைத்தரும் மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, வெண்காக்கொன்றை, கருங்காக்கொன்றை, கருமுகை, தாளி, வெற்றிலை முதலிய கொடிகளையும்; செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் முதலிய நீர்ப்பூக்களையும்; விதிப்படி வைத்து வளர்த்தலும் கொள்ளப்படுமென்க. விதிப்படி பூக்கொய்தலாவது நான்குவருணத்துட்பட்டவராயும், சிவதீக்ஷைபெற்றவராயும், நியமாசாரமுடையவராயு மிருப்பவர் சூரியோதயத்துக்கு முன்னே ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துச் சந்தியாவந்தனம் முடித்து இரண்டுகைகளையுங் கழுவித் திருப்பூங்கூடையை எடுத்து ஒருதண்டுநுனியிலே மாட்டி உயரப்பிடித்துக்கொண்டேனும் அரைக்குமேலே கையிற் பிடித்துக்கொண்டேனும் திருநந்தனவனத்திற்போய்ச் சிவபெருமானை மறவாத சிந்தையோடு பத்திரபுட்பங்களை யெடுத்து அவைகளைப் பத்திரத்தான் மூடிக்கொண்டு திரும்பிவந்து கால்களைச் சுத்திசெய்துகொண்டு உள்ளேபுகுந்து திருப்பூங்கூடையைத் தூக்கிவிடுதலாம். இது "பெரும்புலர்காலை மூழ்கிப்பித்தற்குப்பத்தராகி" என்னுந் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தானுமறிக. பத்திரபுட்ப மெடுக்கும்போது மனம் பிறிதுபடன் மிகவும் குற்றமாம். அது "கொந்தலர் கொய்யும்போது கூர்விழிமையலாலே, பைந்தொடிமடவார் தம்மைப்பார்த்தலாற் கயிலைவெற்பிற், சுந்தரன்பட்டகாதையறிதிரேதுணர்மென்போதா, லந்தணர்கீழ்களாவார் கீழ்களந்தணர்களாவார்" என்பதனானுமறிக. விதிப்படி திருமாலை கட்டு

தலாவது திருமாலேக்குறட்டைச் சுத்தசலத்திஞல் அலம்பி இடம் பண்ணித் திருப்பூங்கூடையிலுள்ள பத்திரபுட்பங்களே யெடுத்து அதில் வைத்துக்கொண்டு மௌனியாயிருந்து சாவதானமாக ஆராய்ந்து பழுக்கடிமுதலிய பழுதுள்ளவைகளே அகற்றிவிட்டு மேற்கூறிய திருமாலேகளேக் கட்டுதலாம். தா-குற்றம். அக்குற்றங்களாவன: பேசுதல், சிரித்தல், சிவபெருமானுடைய திருவடிகளினன்றிப் பிறவற்றிற் சிந்தைவைத்தல், கைகளால் உடம்பையேனும் வஸ்திரத்தையேனுந் தீண்டுதன் முதலியனவாம் தணப்பு-நீக்கம். இல்லென்னும் பண்படி இன்றியென வினையெச்சப் பொருடந்து நின்றது. புகழ் ஆகுபெயர். விதிப்படி தோத்திரம் பாடலாவது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் பெரியபுராணம் என்னும் அருட்பாக்களே மனங்கசிந்துருகக் கண்ணீர்வார உரோமஞ் சிலிர்ப்பப் பண்ணேடு பாடுதலாம். விதிப்படி திருவலகிடுதலாவது சூரியோதயத்துக்குமுன் ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு சிவாலயத்தினுட்புகுந்து மிருதுவாகிய துடைப்பத்தாற் கிருமி கீடங்கள் சாவாமல் மேற்பட அலகிட்டுக் குப்பையை வாரித் தூரத்துக் கொடுபோய்க் குழியிலிடுதலாம். அலகு-துடைப்பம்; மார்ச்சனியென்பதுமது. விதிப்படி திருமெழுக்குச்சாத்தலாவது ஈன்றணியதும் நோயற்றதுமாகிய பசுவின் சாணியைப்பூமியில் விழுமுன் இலேயிலேந்தியாயினும், அதுகூடாவழிச் சுத்தநிலத்து வீழ்ந்த சாணியை மேல்கீழ்தள்ளி நடுப்படவெடுத்தாயினும் வாவி நதி முதலியவற்றில் வடித்தெடுத்துவந்த சலத்துடன் கூட்டிச் செங்கற்படுத்த நிலத்தையும் சுண்ணம்புபடுத்தநிலத்தையும் மண்படுத்தநிலத்தையும் மெழுகுதலாம். கருங்கற்படுத்தநிலத்தைச் சலத்திஞலே கழுவுக. கருங்கல்லிற்பட்ட சாணி மலத்துக் கொக்கும். விதிப்படி தீபமேற்றுதலாவது தாமரைநூல், வெள்ளெருக்குநூல், பருத்திநூலென்பவற்றுள் இருபத்தோரிழையாலேனும், பதிஞன்கிழையாலேனும், ஏழிழையாலேனும் கற்பூரப்பொடிகூட்டித் திரிபண்ணி அழுக்கின்றி விளங்கும் அகலிலிட்டு உத்தமோத்தமமாகிய கபிலேநெய் முதலியவற்றை அவ்வகலுள்வார்த்துச் சுடர்கொளுவிப் பிரகாசிக்கச்செய்தலாம்-திருவிளக்குக் கபிலேநெய் உத்தமத்தின் உத்தமமும், மற்றைப்பசுக்களின்நெய்உத்தமத்தின்மத்திமமும், ஆட்டுநெய் எருமைநெய்கள் உத்தமத்தின் அதமமும், வெள்ளெள்ளின்நெய் மத்திமத்தின் உத்தமமும், மற்றையெள்ளின் நெய் மத்திமத்தின் மத்திமமும், மரக்கொட்டைகளின் நெய் அதமத்தின் அதமமுமென்க. கபிலே கபிலநிறமுடையபசு. கபிலநிறம் கருமையோடு கூடிய பொன்னிறம். ஏனேத்தீபங்களோடிவற்றிடை வேற்றுமைதோன்ற நல்விளக்கென்றும், அநுட்டித்தற் கருமைதோன்ற வல்லவரென்றுங் கூறிஞர். இச்சிவபுண்ணியங்களின்மகிமையை, "நிலேபெறுமாறெண்ணுதியேனெஞ்சேநீவாநித்தலுமெம்பிரானுடையகோயில்புக்குப், புலர்வதன் முனலகிட்டுமெழுக்குமிட்டுப்பூமாலேபுனேந்தேத்திப்புகழ்ந்துபாடித், தலே

யாரக்கும்பிட்டுக்கூத்துமாடிச்சங்கராசய போற்றிபோற்றியென்று, மலை புனல்சேர் செஞ்சடையெம்மாதியென்று மாரூராவென்றென்றேயலறுநி ல்லே" "விளக்கினற்பெற்றவின்பமெழுக்கினற்பதிற்றியாகுந், துளக்கி னன்மலர்தொடுத்தாற்றூயவிண்ணேறலாகும், விளக்கிட்டார்பேறு சொல் லின்மெய்ந்நெறிஞானமாகு, மளப்பிலகீதஞ்சொன்னர்க்கடிகடாமருளு மாறே" எனவருந் திருநாவுக்கரசுநாயனர் தேவாரங்களானறிக. விதிப் படி அடியார்க்கேவலாயின செய்தலை, முத்திநாதனுகிய பகைவனால் வஞ் சிக்கப்பட்டிறந்துவீழ்கின்ற மெய்ப்பொருணயனரதேவற்குறிப்பைக் கட வாது அவனைப் புறத்தேகொடுசென் றுய்வித்த தத்தன்முதலாயினேர்கட் காண்க. இதனனே நான்குபாதங்களுட் சரியாபாதமாவது புறத்தொழி ன்மாத்திரையானே உருவத்திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடென அதனிலக்கணமும் பயனுங் கூறியவாறு. அது "தாதமார்க்கஞ்சாற்றிற் சங்கரன்றன் கோயிற் றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ்சாத்திப், போது களுங் கொய்து பூந் தார்மாலை கண்ணி புனிதர்க்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித், தீதிறிரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ் செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ, தியாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியு மியற்றுவதிச் சரியை செய்வோ ரீசனுல கிருப்பர்" என்பத னுமறிக. (சுக)

கந்த வர்க்கமுங் கிளர்மணப் புகையுங்
கவின்கொ டீபமும் புனிதமஞ் சனமுங்
கொந்த விழ்ந்தநன் மலருமற் றுளவுங்
கொண்டு மாயையின் குணங்களொன் றிலரா
யைந்து சுத்திசெய் தகம்புற மிறைஞ்சி
யங்கி யின்கடன் கழித்தருள் வழிநின்
றிந்த நற்பெருங் கிரியையன் புடனே
யியற்ற வல்லவ ரெம்மரு கிருப்பார்.

இ—ள்: கந்தவர்க்கமும்—வாசனைதிரவியவர்க்கங்களும்,—மணம் கிளர் புகையும் - நறுமணங்கமழுந் தூபமும்,—கவின் கொள் தீபமும்—பி ரகாசம்பொருந்திய தீபமும்,—புனித மஞ்சனமும் - பரிசுத்தமாகிய திரு மஞ்சனமும்,—கொந்து அவிழ்ந்த நல் மலரும் - கொத்துக்களின் மலர்ந்த சுகந்த புஷ்பமும்,—மற்று உளவும் கொண்டு - மற்றுமுள்ள பூசோபகரண ங்களையுங் கைக்கொண்டு,—மாயையின் குணங்கள் ஒன்று இலர் ஆய் - மாயாகாரியமாகிய காமம்முதலிய துர்க்குணங்களுள் ஒன்றுமில்லாதவராய் —ஐந்து சுத்தி செய்து-பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தியென்னும் பஞ்சசுத்திகளையுஞ் செய்து,—அகம்புறம் இறை ஞ்சி - அகப்பூசை புறப்பூசைகளைச் செய்து,—அங்கியின் கடன் கழித்து - அக்கினிகாரியமுஞ் செய்து,—அருள் வழி நின்று - திருவருளை முன்னிட்

டுநின்று,—பெரும் நல் இந்தக் கிரியை இயற்ற வல்லவர் எம் அருகு இருப்பார் - பெரிய நன்மையையுடைய இந்தக் கிரியாபாதத்தை அநுட்டிக் கவல்லவர் எமது சமீபத்திருத்தலாகிய சாமீபபதத்தையடைவார். எ-று.

புனிதம் என்பதனை இடைநிலைத்தீபகமாகக்கொண்டு கந்தவர்க்க முத லியவற்று ளேற்பனவற்றோடொட்டுக. கின்றியற்றவல்லவரென எச்ச முடிபுசெய்க. கந்தவர்க்கங்கள் சந்தனம், பனிநீர், குங்குமப்பூ, கோரோ சனை, பச்சைக்கற்பூரம், புழுகு, சவ்வாது, கஸ்தூரி முதலியன. வர்க்கம்-வகை. திருமஞ்சனம்-அபிஷேகம். அது ஈண்டுச் சம்பிரதாயத்தான் அபிஷேகதீர்த்தத்தின்மேற்று. அபிஷேகதிரவியங்கள் சுத்தோதகம், எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு, பஞ்சகௌ வியம், இரசபஞ்சாமிர்தம், பலபஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, தமர த்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, இளநீர், சந்தன க்குழம்பு, உஷ்ணோதகம் முதலியன. இவற்றுட் பஞ்சகௌவியமென்பது விதிப்படி கூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பனவற்றினது தொகுதியாம். கோசம்பந்தம் கௌவியமென்க. இது பிரமகூர்ச்சமெனவும் பெயர்பெறும் பால், ஐந்து பலமும், தயிர் மூன்று பலமும், நெய் இரண்டுபலமும், கோசலம் ஒரு பலமும், கோமயம் கைப்பெருவிரலிற் பாதியளவுங் கொள்க. இரசபஞ்சாமிர்தமென்பது விதிப்படிகூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், தேன், சர்க்கரை யென்பவற்றினது தொகுதியாம். பலபஞ்சாமிர்தமென்பது முற்கூறிய இரசபஞ்சாமிர்தத்தோடு கூட்டி அமைக்கப்பட்ட வாழைப்பழம், மாம் பழம், பலாப்பழமாகிய முப்பழங்களினது தொகுதியாம். தாமிரபாத்திர த்தில் விடப்பட்ட பாலும், வெண்கலப்பாத்திரத்தில் விடப்பட்ட இள நீரும் கள்ளுக்குச் சமமென்க. இளநீரை முகிழ்திறந்து தனித்தனி அபி ஷேகிக்க. நெய் அபிஷேகஞ்செய்தவுடன் இளவெந்நீர் அபிஷேகஞ் செய்தல்வேண்டும். இளநீர் அபிஷேகித்ததன்பின் எண்பத்தொருபத மந் திரமுச்சரித்துச் சகச்சிரதாரைகொண்டு சுத்தோதகத்தால் அபிஷேகிக்க. சந்தனக்குழம்பின்பின் விதிப்படி தாபிக்கப்பட்ட நவகலசத்தினலும், விசேஷார்க்கியத்தினலும் அபிஷேகஞ்செய்க. கொத்து பூங்கொத்து. அது எதுகைநோக்கிக் கொங்தென மெலிந்துநின்றது. எடுத்துவைத்தலர்ந் தபூவும், தானே வீழ்ந்துகிடந்தபூவும், உதிர்ந்தபூவும், அரும்பும், கடவுட் பூசைக் காகாமையின் அவற்றை விலக்குதற்குக் கொந்த வீழ்ந்தமலரென் றும், தாழ்ந்தசாதியார், சிவதீக்ஷைபெருதவர், ஆசௌசமுடையவர், நித்தி யகருமம்விடுத்தவர், ஸ்நானஞ்செய்யாதவர், தூர்த்தர் எடுத்தபூவும், இரவி லெடுத்தபூவும், கை சீலை எருக்கிலை ஆமணக்கிலைகளிற் கொடுவந்தபூவும், காற்றினடியுண்டபூவும், புழுக்கடி எச்சம் சிலந்திநூல் மயிர் என்பவற்றோ

கேடிய பூவும், மோந்தபூவும், காகம் கோழி நாய் கழுதை பன்றி குரங்கு பூனை முதலியன தீண்டியபூவும் பூசைச்காகாமையின் அவைகளை விலக்கு தற்கு நன்மலரென்றும் விசேடித்தார். திருக்கோயிலினும் அதன்சமீபத் தினுமுள்ள பூ ஆன்மார்த்தபூசைக்காகாதென்க. சூரியோதயத்திலாயினும், விடிய மூன்று நாழிகைக்கு முன்னாயினும், இரண்டுநாழிகைக்கு முன்னாயி னும், ஒருநாழிகைக்கு முன்னாயினும், எடுத்த புஷ்பமே உத்தமம். மத்தி யானகாலத்தெடுத்தபுட்பம் சிவபெருமானுக்கும் தேவர்களுக்கும் பிதிர்களு க்கும், மனிதர்களுக்கும் ஆகா. உதயத்தில் நந்தியாவர்த்தப்பூவும், வெள் ளெருக்கம் பூவும் உத்தமம். மத்தியானத்தில் அலரிப்பூவும், தாமரைப் பூவும், தும்பைப்பூவும் உத்தமம். சாயங்காலத்தில் மல்லிகைப்பூவும், கரு மத்தம்பூவும், சண்பகப்பூவும் உத்தமம். அர்த்தராத்திரியில் கடப்பம்பூவும், பொன்மத்தம்பூவும், சிறுசண்பகப்பூவும், பிச்சிப்பூவும் உத்தமமென்க. விநாயகருக்குத் துளசியும், சிவபெருமானுக்குத் தாழம்பூவும், உமாதேவி யாருக்கு அறுகும், நெல்லியும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், சூரியனு க்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும், பிராமணருக்குத் தும்பையும் ஆகாவாம். திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர் த்தசி, அமாவாசி, பௌர்ணிமை, மாசப்பிறப்பு என்னும் இக்காலங்களில் வில்வமெடுக்கலாகாது. ஆதலின் இவையல்லாத மற்றைக்காலங்களில் வில்வம் எடுத்துவைத்துக்கொள்க, வில்வமரத்தடியையடைந்து நாடோ றும் ஹரகரவென்னு மொலியோடு பிரதக்ஷிணஞ்செய்பவர் பாவத்தினின் றும் நீங்குவர். மரிக்கும்போது வில்வத்தடிமண்ணை உடம்பிற் பூசினோர் சிவபுரத்தடைவர். வில்வபத்திரம் சிவபெருமானது இச்சாஞானக்கிரியை வடிவாயிருக்குமென்க. ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைக ளினும், திருவோண நக்ஷத்திரத்தினும், சத்தமி, அட்டமி, துவாதசி, சதுர் த்தசி, அமாவாசி, பௌர்ணிமைத்திதிகளினும், விதிபாதயோகத்தினும், மாசப்பிறப்பினும், பிராதக்காலம், சாயங்காலம், இராத்திரிகளினுந் துளசி யெடுக்கலாகாது. ஆகலின் இவையல்லாத மற்றைக்காலங்களிலே துள சியெடுத்துவைத்துக்கொள்க. இரண்டிலை கீழேயுள்ள துளசிக்கதிர் எப் பொழுதும் எடுக்கலாம். வில்வமும் கொக்கிறகுமந்தாரையும் ஆறுமாதத் திற்கும், வெண்டுளசி ஒருவருஷத்துக்கும், தாமரைப்பூ ஏழுநாளிற்கும் அலரிப்பூ மூன்றுநாளிற்கும் வைத்துச் சாத்தலாம். இனி உட்பூசைக்கு மல ரென்றது கொல்லாமைமுதலிய அட்டபுட்பங்களை. அவ்வட்டபுட்பங்க ளாவன: கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறை, அருள், அறிவு வாய்மை, தவம், அன்பு என்பனவாம். மற்றுமுள்ள பூசோபகரணங்களா வன பாத்தியாசமனார்க்கிய திரவியங்களும், நைவேத்தியங்களும் பிறவு மாம். பாத்தியத்திரவியங்கள் வெண்கடுகு, இலாமிச்சம்வேர், சந்தனம் அறுகு என்னுமிந்நான்குமாம். ஆசமனத்திரவியங்கள் சாதிக்காய், கிரா ம்பு, ஏலம், பூலாங்கிழங்கு, சண்பகமொட்டு, பச்சைக்கற்பூரம் என்னுமிவ்

வாறுமாம். அருக்கியத்திரவியங்கள் சலம், பால், தருப்பைநுனி, அக்ஷதை, எள், யவம், சம்பாநெல், வெண்கடுகு என்னுமிவ்வெட்டுமாம். நைவேத்தியங்கள் சுத்தான்னம், சித்திரான்னவகைகள், நெய், காய்ச்சுப்பால், தயிர், முப்பழம், தேங்காய்க்கீறு, சர்க்கரை, கறியமுதுகள், அபூபவர்க்கங்கள், பானகம், பானீயம், வெற்றிலைபாக்கு, முகவாசங்களும், பிறவுமாம். அபூபம்-பண்ணிகாரம். சித்திரான்னவர்க்கங்கள் மூற்கான்னம், குளான்னம், காயசான்னம், ஆமிலான்னம், தத்தியன்னம், சர்ஷபான்னம், மாஷன்னம், பாயசான்னம் என்பனவாம். இவற்றுள் மூற்கம்-பயறு. குளம்-சர்க்கரை. காயசம்-மிளகு. ஆமிலம்-புளி. ததி-தயிர். சர்ஷபம்-கடுகு. மாஷம்-உழுந்து. பண்ணிகாரவர்க்கங்கள் மோதகம், பிட்டு, அப்பம், வடை தேன்குழல், அதிரசம், தோசை, இட்டலி முதலியன. பானீயமென்பது ஏலம், சந்தனம், பச்சைக்கர்ப்பூரம், பாதிரிப்பூ, செங்கழுநீர்ப்பூ என்பன இடப்பெற்றசலமாம். முகவாசமென்பது ஏலம், இலவங்கம், பச்சைக்கற்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பவற்றின் பொடியைப் பனிநீரோடு கூட்டிச்செய்த குளிகையாம். காமம்முதலிய துர்க்குணங்கள் காமக்குரோத லோபமோக மத மாற்சரியங்களென்பன. இவற்றுட் காமம்-சிற்றின்பவேட்கை, குரோதம்-கோபம். உலோபம்-திரவிய வாஞ்சையாற் கொடாமை. மோகம்-மயக்கம். மதம்-செருக்கு. மாற்சரியம்-பொறாமை குணங்களுளொன்றுமென வுருபு மும்மையும் விரித்துரைக்க. இனி மாயையின் குணங்கலொன்றிலராய் என்பதற்கு மாயாகுணங்களோடு தொடர்பில்லாதவராய் எனப் பொருளுரைப்பினுமமையும். இனிப் பஞ்சசுத்திகளுட் பூதசுத்தியாவது பிருதுவி முதலிய பஞ்சபூதங்களாகிய வித்துடையதும், படைத்தல் காத்தல்களைச் செய்யும் பிரமவிஷ்ணுக்களால் உண்டாக்கப்பட்ட முளையுடையதும், விருப்பு வெறுப்புச் சோதிட்டோம யாகமுதலிய தருமம் பிரமகத்திமுதலிய அதர்மம் அசித்தம் அசுத்தம் துக்கமென்னுமிவற்றிற்குக்காரணமாகிய மோகமென்னும் இவைகளாகிய வேருடையதும், சத்தகோடி மகாமந்திரங்களாலும் அனந்தேசர்முதலிய மந்திரேசர் எண்மர்களாலும் போஷிக்கப்படுவதும், கலைமுதலிய தத்துவங்களாகிய நிலையுடையதும், காரணதன்மாத்திரைகளாகிய மகாசாகைகளும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களாகிய உபசாகைகளுமுடையதும், காரியதன்மாத்திரையாகிய சத்தாதிவிடயங்களைப் பற்றும் வடிவாகிய வியாபாரங்களைத் தளிராகவுடையதும், புத்தி குணங்களாகிய தன்மம் ஞானமுதலிய எட்டின் விகாரங்களாகிய முந்நூறு பாவங்களின் கூட்டத்தைப் பூவாகவுடையதும், புத்திதத்துவத்திற்றோன்றும் சித்தத்தால் அவதானிக்கப்படும் பொருள்களையே பழமாகவுடையதும், புருடனுகிய பறவையினாலே அனுபவிக்கப்படுவதும், போகவிடயமாகிய சரீரத்தையும் போககிரியையின் கர்த்தாவாகிய ஆன்மாவையும் இரசமாகவுடையதும், மேனோக்கும் வேருடையதும், கீழ்நோக்கும் கொம்பருடையதுமாகிய ஆலமரரூபத்தைத்

தியானித்து, கும்பகம் பூரகம் இரேசகமென்னுமிவற்றின்பாதி யிரட்டைகளாற் பஞ்சகலாமந்திரங்களைப் பிருதுவிமுதலிய தத்துவங்களோடிருக்கும் கந்தமுதலிய குணங்களி னிலேயோடு முறைப்படிசேர உச்சரித்து, பத்திரமுதலியன ஒழிந்த பாவனையினாலும், உலர்ந்தபாவனையினாலும் தகித்து நீறுக்கி,ஒழிந்தபாவனையினாலும்,சுத்தாகாசசொரூப பாவனையினாலும், சத்தியா னனைக்கப்பட்ட மந்திரமயமான சரீரமுடையவனாகித் தன்னிருதயத்திலே துவாதசாந்தத்தினின் றுஞ் சோதிலிங்க மாவாகித்துப்பாவனையினால் வந்த மலர்முதலியவற்றாற் புறம்போலருச்சித்து, நாபிகுண்டத்தக்கினியின் ஞானாக்கினியை வைத்தோமஞ்செய்து சிவார்ப்பணம்பண்ணி அச்சிவனைப் புறத்தேவந்து பூசனைகொண்டருள அனுமதிகோடலாம். பூதசுத்தி இன்னுமொருபிரகாரம் ஆகமங்களிற் கூறப்படும். அது, பிருதுவி முதல் ஆகாயமீறுகிய பஞ்சபூதங்களையும், அவ்வப்பூதங்களின் நிறம், குணம், குறி, தெய்வம், வடிவங்களோடு தியானித்து, அவ்வப்பூதங்களுக்குரிய கலாமந்திரங்களை அவ்வக்கலா பீசங்களோடு முறைப்படிசேர உச்சரித்து, அப்பூதங்களை விதிப்படி சுத்திசெய்வதாம். தானசுத்தியாவது அஸ்திரமந்திரங்களினாலே தாளத்திரயஞ்செய்து அங்குநின்று மிடையூறகற்றி அஸ்திரமந்திரத்தால் எம்மருங்குஞ் சொலிக்கும் அக்கினிவண்ணமாகிய மதிலையும், கவசமந்திரத்தால் அகழையுஞ் செய்து, சத்திமந்திரத்தான் மேலுங்கீழுஞ் சத்திகளினிறைவாகப் பாவித்துச் சிவலிங்கத்துக்குமுன் மண்டலமிட்டுப் பூமிதேவியைச் சகலாபரண சகிதையாகத் தியானித்து, இருதயமந்திரத்தாற் கந்தமுதலியவற்றைக்கொண் டருச்சித்து அஸ்திரமந்திரத்தினாலே திக்குப்பந்தனஞ் செய்தலாம். திரவியசுத்தியாவது சுவர்ண முதலியவற்றானியற்றிய அருக்கியமுதலிய பாத்திரங்களை அஸ்திரமந்திரத்தாற் கழுவி விந்தமிர்தமாகிய நீரை வௌஷடந்த இருதயமந்திரத்தா னிறைத்துத் திரவியங்களிட்டுப் பஞ்சப்பிரமமுதலிய மந்திரங்களான் முறைப்படி பூசித்துச் சங்கிதாமந்திரத்தாலபிமந்திரித்துத் திக்குப்பந்தனமும் அவகுண்டனமுஞ் செய்து தேனுமுத்திரைகொடுத்து அருக்கியசலத்தாலே தன்னையும்பூசோபகரணங்களையும் புரோக்ஷித்து,கவசத்தால் அப்பியுக்கணமும் இருதயத்தால் அபிமந்திரித்தலும் கவசத்தால் அவகுண்டனமும் தேனுமுத்திரையால் அமிர்தீகரணமுஞ்செய்து, புஷ்பத்தால் அருக்கியநீரெடுத்துத் திருமஞ்சனகுடத்தின்கணிட்டுத் தேனுமுத்திரை கொடுத்தலாம். மந்திரசுத்தியாவது தன்னாசனத்திற் சிவாசனமும் மார்பிற் சிவமூர்த்தியும் நியசித்துச் சந்தனதிலகமிட்டு மூலத்தாற் சிரசிலே புஷ்பமிட்டு ஆன்மபூசைசெய்து, குறில், நெடில், அளபெடையென்னும் மாத்திரைகளின் முறைப்படி பிரணவவாதியாகவும் நமோந்தமாகவும் மந்திரங்களை உச்சரித்தலாம். இலிங்கசுத்தியாவது ஸ்நானவேதிகையில் விரித்த வஸ்திரத்திலே சடுத்தாசனங் கற்பித்து இலிங்கத்தை யெழுந்தருளப்பண்ணி அந்த ஸ்நானவேதிகையில் வைத்து விதிப்படி பூசித்து, நின்மாலியங்கழி

த்து, இலிங்கத்தையும் ஆவுடையாரையும் அலம்பிச் சாமானியார்க்கியத் தாலுஞ் சுத்தோதகத்தாலும் அபிஷேகஞ்செய்து, தைலமுதல் அருக்கிய சலமீறாக முறைப்படி அபிஷேகஞ்செய்து, திருவொற்றாடை சாத்திப் பீடத்தி லெழுந்தருளப்பண்ணி ஓர் புஷ்பஞ் சாத்துதலாம். இவை புறப் பூசையின்கட் பஞ்சசுத்தியெனவறிக. இனி அகப்பூசையின்கட் பஞ்ச சுத்திகளாவன பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங் கசுத்தியென்பனவாம். அவற்றுட் பூதசுத்தியாவது முப்பத்தாறுதத்துவங் கள் நாமல்ல, அவையனைத்தும் சடம், அவையும் தாமாகக் காரியப்படமாட் டாவென்றறிதலாம். ஆன்மசுத்தியாவது அப்படியறிதல் திருவருளான ன்றி ஆன்மபோதத்தாலன்றென் றறிதலாம். திரவியசுத்தியாவது ஆன்ம போதத்தாற் றானேயறிதற்குச் சேட்டையில்லையென்று கண்டதுகொண் டே ஆன்மாவுக்கறிவில்லையென் றறிந்து, கண்டுகேட்டுண்டுயிர்த்துற் றறி வதெல்லாம் திருவருளென்றறிதலாம். மந்திரசுத்தியாவது ஐந்தெழுத் தைச் சிகாரமுதலாக மாறி அதனுண்மையை விசாரித்தறிதலாம். இலிங் கசுத்தியாவது பதி எங்கும் பூரணமாய்ப் பசுபாசங்களிரண்டினும் பிரிவற நின்று அவற்றைச் சேட்டிப்பித்துநின்ற தன்மையறிந்து, அத்தகைய சிவம் இலிங்கத்தினு மெழுந்தருளியிருக்குமென் றறிதலாம். அகப்பூசையெனி னும் அந்தரியாகபூசையெனினு மமையும். அந்தரியாகபூசையாவது நில முதற்சத்திதத்துவமீறாகிய முப்பத்தைந்தினையும் கிழங்குமுதற் பீசமீறாகிய அவயவங்களாயுடைய இதயகமலம் ஆசனமும், அதன்மேற் சத்திமூர்த்தி யும், சிவன்மூர்த்தி மானுமாகக்கொண்டு செய்யப்படும் பூசையாம். அது "நாட்டமித யந்தானு நாபியிவை லடியாய் ஞாலமுத றத்துவத்தா னெண் விரனு ளத்தாய், மூட்டுமோ கினிசுத்த வித்தைமல ரெட்டாய் முழுவித ழெட் டக்கரங்கண் முறைமையினுடைத்தாய்க், காட்டுகமலாசனமே லீசர்சதா சிவமுங் கலாமூர்த்த மாமிவற்றின் கண்ணுஞ் சத்தி, வீட்டை யருள் சிவன்மூர்த்தி மானுகிச் சத்தி மேலாகி நிற்பனிந்த விளைவறிந்து போற்றே" என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தினுட் குருமுக மாகப் பெற்றுக்கொள்க. அங்கியின்கடனுங்கழித்தெனை எச்சவும்மை வரு வித்துரைக்க. அது "எரியில்வருகாரியமும்பண்ணி" என்பதனுள்ளுங் காண்க. கடனென்றூர் பூசாந்தத்திற் றப்பாது செய்யப்படும் நியமவிதி யாதலை நோக்கியென்க. அக்கினிகாரியம் அக்கினியிற் செய்யப்படுங் காரியமென விரியும். அஃதாவது:—நாடோறும் புறப்பூசையின் முடி விலே உரிய திக்கொன்றில் விதிப்படி குண்டமமைத்து, வேண்டு முபகர ணங்கொண்டு, குண்டசமஸ்காரஞ்செய்து, அக்குண்டத்தினுள் நான்குபக் கங்களினும் அக்ஷபாடமிட்டு, அக்குண்டமத்தியில் உலக மாதாபிதாக்களா கிய வாகீசுவரி வாகீசுவரர்களை ஆவாகித்து, பின்பு பூதாக்கினியைக் கொண ர்ந்து சமஸ்காரஞ்செய்து, அவ்வாகீசுவரர் வாகீசுவரியோடு சையோகித்த தாகப் பாவித்து, அங்ஙனஞ் சையோகிக்கும் வழி வாகீசுவரர் வாகீசுவரி

யின் கருப்பநாடியிலே தமது வீரியத்தை விடும் பாவனையாகக் குண்டமத்தியிலே அக்கினியைப் பிரதிட்டைசெய்து, ஏனையகருமங்களுமியற்றி, கர்ப்பாக்கினியைப் பூசித்து, வாகீசுவரியின் கையிலே தருப்பைக்காப்பிட்டு, கருப்பாதானமுதற் சாதகன்மமீறாகிய சமஸ்காரங்கள் செய்துமுடித்து, அதன்பின்னர் அத்தருப்பைக்காப்பை நீக்கிப் பொற்காப்பிட்டு, குண்டத்தின் நான்குபக்கங்களினும் தருப்பைகளைப் பரப்பி, பரிதிகளையும் விட்டரங்களையும் சூழவைத்து, பஞ்சசமித்துக்களால் ஓமித்து, அப்பரிதி விட்டரங்களின் முறையே பிரமாமுதலிய விசேடதேவர்களையும் இந்திராதிதிக்குப்பாலகர்களையும் பூசித்துச் சிவாஞ்ஞைப்படி அக்கினியாகிய குழந்தையைப் பாதுகாக்கக்கடவீர்களென்று விஞ்ஞாபித்து, சுருக்குச்சுருவசுத்தியும் ஆச்சியசுத்தியுஞ்செய்து, அக்குழந்தையின் சத்தியோசாதம் முதலிய ஐம்முகங்கட்கும் அபிகாரக்கிரமமாகவும் அநுசந்தானக் கிரமமாகவும் ஏகீகரணக் கிரமமாகவும் முறையே ஆகுதிசெய்து, பின்பு நாமகரணமுஞ் செய்து, சிவகருமயோக்கியதை யுடையதாகப் பாவித்து. அதன்மேல் அவ்வாகீசுவரி வாகீசுவரர்களை உத்துவாசனஞ்செய்துவிட்டு, அவ்வக்கினியின் இரணியை, கனகை, இரத்தை, கிருஷ்ணை, சுப்பிரபை, அதிரத்தை, வெகுரூபை என்னும் எழுவிதநாக்குக்களுள் வெகுரூபை என்னும் நாக்கிலே சூடாகருமமீறாகிய் சமஸ்காரங்கள் பூரணமாகும்பொருட்டுப் பூரணாகுதியும் அக்கினித்தியானமும் பிறவுஞ்செய்து, அவ்வக்கினியின் இருதயகமலத்திற் சிவனை ஆவாகித்து, சருமுதலியவற்றால் ஓமித்து, பின்னும் பூரணாகுதிசெய்து, இரக்ஷை எடுத்தணிந்து, சிவனையும் அக்கினியையும் யோசித்து, பரிதிவிட்டரங்களிலிருக்குந் தேவர்களையும் உத்துவாசனம் செய்துவிட்டு, உட்பலி புறப்பலி இடுதலாம். சமஸ்காரம் சுத்தி, அக்ஷபாடம் தருப்பைகளால் அமைக்கப்படுந் திரைப்புடைவை. பூதாக்கினி என்பது அரணி சூரியகாந்தம் முதலியவற்றினின்றும் உண்டாக்கப்படும் அக்கினி. கருப்பநாடி கருவுண்டாகும் நரம்புத்தானம். பரிதி யாகதருக்கொம்பர். விட்டரம் ஓர்வகைத் தருப்பாசனம். சுருக்குச் சுருவம் நெய்யாகுதிக்கருவிகள். அபிகாரம் ஒவ்வொருமுகங்கட்கும் தனித்தனி முறையே ஆகுதி செய்தல். அநுசந்தானம் ஐம்முகங்களையும் விதிப்படி தொடர்ச்சியாகக் கலந்து ஆகுதிசெய்தல். ஏகீகரணம் ஐம்முகங்களையும் ஒன்றாக்கி ஆகுதி செய்தல். சரு, அவிசு. இரக்ஷை காப்பதென்னும்பொருட்டு. அஃதாவது சிவாக்கினியிலே தருப்பையை இட்டுத் தகித்து நெய்சேர்த்துக் குழைத்துத் திலகமிடுதலாம். இங்ஙனம் அக்கினிகாரியம் ஒருவாறு சுருக்கிக் கூறப்பட்டது. இதன்விரிவைச் சமந்திரகமாகச் சிவாகமங்களுட் காண்க, ஈண்டு விரிப்பிற் பெருகும். ஏனையவுமன்ன. இதனானே புறத்தொழில் அகத்தொழிலென்னுமிரண்டானும் அருவுருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியையெனப்படுமென அதனிலக்கணமும் பயனுங் கூறியவாறு. அது "புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போதுபுகை

யொளிமஞ் சனமமுது முதலகொண் டைந்து, சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்தி மானுஞ் சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த, பத்தியினு லர்ச்சித்துப் பரவிப் போற்றிப் பரிவினெடு மெரியில்வரு காரியமும் பண்ணி, நித்தலுமிக் கிரியையினை யியற்றுவோர்க ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங்காலே" என்பதனுனுமறிக. (எ0)

முக்கு ணம்புல னைந்துட னடக்கி
 மூல வாயுவை யெழுப்பிரு வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்
 திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க வஞ்செழுத் தோரெழுத் துருவாந்
 தன்மை கண்டரு டரும்பெரு வெளிக்கே
புக்க ழுந்தின ரெமதுருப் பெறுவார்
 புவியில் வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்.

இ—ள்: முக்குணம் புலன் ஐந்து உடன் அடக்கி - சாத்துவிகம் இராசதம் தாமதமென்னு முக்குணங்களையும் சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களாகிய ஐம்புலன்களோடு சேர அடக்கி,—மூல வாயுவை எழுப்பு இரு வழியைச் சிக்கெனும்படி அடைத்து - மூலாதாரத்தினின்றும் பிராணவாயுவை மேலெழுப்புகின்ற இடைபிங்கலையாகிய இருநாடிகளையுஞ் செவ்வே யடைத்து,—ஒருவழியைத் திறந்து - சுழிமுனையாகிய நடுநாடியைத் திறந்து,—தாண்டவச் சிலம்பு ஒலி உடன் போய் - தியானத்தானமாகிய புருவமத்தியிற் சூக்குமவகையாற் செயப்படும் அநவரத தாண்டவச் சிலம்பொலியோடு போய்,—தக்க அஞ்செழுத்து ஓர் எழுத்து உருவாம் தன்மை கண்டு - தகுதியாகியஸ்ரீபஞ்சாக்ஷரங்களும் ஏகாக்ஷரமாந்தன்மையை ஞானக்கண்ணினுலே தரிசித்து,—அருள் தரும் பெரு வெளிக்கே புக்கு அழுந்தினர் - திருவருள்சுரக்கும் பரவெளியின்கட் புகுந்திலயித்த சிவயோகிகள்,—புவியில் வேட்டுவன் எடுத்த மென் புழுப்போல் எமது உருப் பெறுவார்- இப்பூமியின்கண் வேட்டுவனென்னுஞ் செந்துவினு லெடுக்கப்பட்ட புழுப் பின்னர் அவ்வேட்டுவனுருவைப் பெறுதல்போல எமதுருவைப்பெறுதலாகிய சாரூபத்தையடைவர். எ-று.

முக்குணம் புலனைந்துட னடக்கலாவது அவற்றை மனஞ்சென்றவழிச் செலுத்தாது தடுத்துத் தாரணைக்கணிறுத்தலாம். எழுப்பிருவழியென இடம் கருத்தாவாயிற்று. இருவழியை யடைத்தென்பதனுல் அவை முன்னர்த் திறக்கப்பட்டிருந்தன என்பதூஉம், ஒருவழியைத் திறந்தென்பதனுல் அது முன்னர் அடைக்கப்பட்டிருந்ததென்பதூஉம் பெற்றும். திருச்சிலம்பொலியை "ஓசையெலாமற்றுவொலிக்குந்திருச்சிலம்பி, ஞேசைவழியேசென்றுத்தொடுங்கி—ஞேசையினி, லந்தத்தானத்தானரிவையுடனம்பலத்தே, வந்தொத்தானத்தான்மகிழ்ந்து" என்பதனுனுமறிக. தகுதி

சத்தகோடிமகாமந்திரங்களுள் விசேடத்தன்மை. அஞ்செழுத்தோரெழுத்தாதலே. மேற் பரமவஞ்செழுத்து மொன்றும் பராபரமுணர்த்து ஞான, குருபரன் என்புழிக் கூறினும், ஆண்டுக்காண்க. பரவெளியின்கட்புக்கழுந்தலாவது தியானிப்போனாகிய தானுந் தியானமும் தோன்றாது தியானப்பொருளாகிய சிவமும் ஒன்றே விளங்கப்பெறுதல். வெளிக்கென்பதுருபு மயக்கம். உவமை ஒன்று மற்றொன்றாகாது ஒன்றினது தன்மை மற்றொன்றினது தன்மையாதற் கெடுத்துக்காட்டியது. முக்குணங்களும் முறையே சுகதுக்க மோகங்கட்குக் காரணமாகலின் அவற்றை ஐம்புலன்களைப் போலக் குறிக்கொண்டு பாதுகாக்கவேண்டுமென்பார் முக்குணம்புலனைந்துடனடக்கி என முக்கியப்பொருளாக வைத்துக்கூறினர். மேல் இச்சரியை இந்த நற்பெருங்கிரியை என்றாற்போல இவ்வியோகர் இவ்விதத்தரெனச் சுட்டு வருவித்துரைக்க. இவ்வியோகபாதத்தை "கட்டளைகப்பணங் கட்டளையிட்டுத் தட்டுறுமலந்தீர் சாதனமொழிந்து, கடுங்கொலைவெறும் பொய் களவுகட்காமம், படும்பெயர்பஞ்ச பாதகந்தீர்த்துக் காமங்கோபங்கசடுறுமுலோபந், தீமனமோகஞ்சேர்மதமாற்சரிய, மீண்டிவைமுதலா வெண்ணில்பாவம், பூண்டனவொழியப் புந்திதந்தருளி, மன்னுகீழரணி வருத்தமிலுணர்வாய்ப், பின்னுமேலரணி பிரணவமாகக், கடையவேஞானக் கனலெழுமென்றே, தடைபடாப்பாச தகனஞ்செய்தா, னருளொளுந்தலத்திலறிந்துகான்மடக்கி, யிருளறவிருக்கு மியற்கையும்விண்டான், பன்னிரண்டங்குலம் பறிந்திடும்பிராணன், பின்னதிறன்கும் பிரிந்துபோமதனு, லாயுளுங்குறைந்திட் டாக்கையுந்தளர்ந்து. சாயுமென்றுரைத்துச் சாகாதிருக்க, நாடியோர்பத்து நாடிநாடிகள்புக், கோடியவாயு வொருபதுந்தேர்ந்து, சொன்ன நாடிகளிற் சுழிமுனைநடுவா, மின்னதின்பக்கத் திடைபிங்கலையா, மக்கினிதிங்க ளாதவன்கலைகள், புக்கமுச்சரமும் போய்மீண்டியங்கு, மூலகுண்டலியா முரகமூச்செறிந்து, வாலதுமேல்கீழ் மண்டலமிட்டுப், படந்தனைச்சுருக்கிப் படுத்துறங்குவது, நடந்துமேனோக்கி ஞானவீடளிக்கு, மண்டலமூன்று மருவுதூண்புகவக், குண்டலியெழுப்புங் கொள்கையீதென்றான், முன்னதிரேசக முப்பத்திரண்டு, பின்னதுபூரகம் பேசுமீரெட்டுக், கும்பகாலோடறுபதாக்கூறுந், தம்பமாத்திரையின் றன்மையுமுணர்த்தி, மூலமேமுதலா முடிநடுவுச்சிப். பாலளவினுநீள் படுதலைநோக்கி, மூலாதாரத்தின் முச்சுழிச்சுடரை, மேலாதாரத்தின் மெல்லெனத் தூண்டி, யிருவழிக்காலு மொருவழிநடத்திக், கருவழியடைத்துக் கமலமாறுருவிப், பன்னிரண்டந்தம் பரிதியுமதியு, மன்னியொன்றான வண்ணமுந் தெரிந்து, கமடமைந்தடக்குங் கருத்தெனப்பொறியின், மமதைகளடக்கி மனோலயமாக்கி, மூலக்கனலான்முழுமதியுருக்கிப், பாலைப்பருகும் பண்புதந்தருளி, யிட்டகாமியமு மெண்ணெண்கலையு, மட்டமாசித்தியு மன்புறக்கொடுத்துப், பன்னிருபட்சியும் பறவாவண்ண, மென்னுளேகிறுத்து மியற்கையும்விண்டான், மூலமேமுதலா மூவிருதலத்தின், கோலமு

ம்பூதக் குறிகளுமதன்பா, லைம்பதோடொன்று மகுடவிதமும், பொன்
பொலிகமலப் பூவிருமூன்றுந், தாரகவெழுத்துஞ் சார்பெழுத்தைந்தும்.
வாரணமுகவன் மலரோன்றிருமால், வருத்தமிலுருத்திரன் மகேசுவரன்
சதாசிவ, னுருத்தெளிந்திடநம் முருவேயாகு, மாறுமாமுகத் தமர்ந்ததுமிது
வே, வேறிலையென்று மெய்ம்மொழிசெப்பி, யிலங்குமாயிரத்தெட் டிதழ்த்
தாமரைமேற், றுலங்கிடுநடன சோதியுங்காட்டி, யிருபத்தோரா யிரத்தறு
நூறாய், மருவிநாடோறும் வளர்சுவாசத்தைச் சங்கெனவாங்கிச் சமனுறக்
கும்பித், தங்கென்றெழுப்பும் சபையுமருளிப், பொருளருளான்மாப் பொ
ருந்திடுந்திரோதை, மருவிருமலமாய் வயங்குமைந்தெழுத்திற், றிரோதை
யுமலமுந்தீர்த்ததனிடத்தில்,வரோதையமான வாசியைநிறுவி, வளம்பொலி
சிவாய வாசியென்றுளத்தில், விளம்புகநின்னை விளக்குமானந்த, முத்தியை
நதெழுத்து மொழிந்தனமிதனைச், சித்தசாந்தியினிற் செப்பெனமொழிந்
தான், வாசிவாவென்ன வழங்கு மூன்றெழுத்தும், பேசுதன்முதிர்ந்த
பேறென மொழிந்தா, னின்பமாம் வாசி யெனுமீரெழுத்தி, லன்புறுமகி
மை யதிசயமென்றான், சியெழுத்தொன்றே சிந்தையிற்கருதத், தூயநற்சு
டராய்த் தோன்றுவையென்றான், விந்துவு நாதமு மேவியவெளியிற், சிந்
தையைநிறுவிச் சிவன்வடிவாகித், தாக்குவைமூல நோக்குவையதீதம்,
போக்குவைபிறவி யாக்குவையின்பெனத், தராப்புகுநார்போற் சமனுறநி
ற்கு, மிராப்பகலற்றவிடத்தேயிருத்தி, நலம்படர்சோதி நடனகுஞ்சிதத்
தாட், சிலம்பொலிகேட்குந் திறம்பாலித்தான், மயற்பொறிபுலன்வாய்
மனம்புகுநனவி, லியற்றிடுதேவங்க ணியமகிட்டையதாஞ், சார்பொறி விடு
த்த சாக்கிரக்கனவு, சேர்தருகருத்தாற்செய்தவநியமம், நீங்காக்கரணநீங்க
வேநனவிற், றூங்காத்தூக்கச் சுழுத்தியாசனமா, மறிந்துதொண்ணூறு
மாறும்வேறாக்கிப், பிறிந்துதற்கண்டு பிரமமேதானாய்ச், சாதனம்விடுத்த
சாக்கிரதுரியம், பேதமற்றிருக்கைபிராணயாமஞ், சான்றுசாக்கிரம்போய்த்
தானிருந்தமையுந், தோன்றிடாதுலகைச் சுழற்றுங்கால்போற், பறந்திடுங்
காலாற் பரமறந்தளவிற் பிறந்திடுமதீதம் பிரத்தியாகாரம், வரனெனுமக
ண்ட வடிவுகண்டெங்குந், தானென்றிருக்கை தாரணையாகுங், காட்சிகளை
னைத்துங் கண்ணதாய் விளங்கி, யாட்சியினமைந்த ததுவேதியானந், தற்ப
தந்தொம்பதஞ் சார்ந்திடுமுபாதி, கற்பனைதீரக் கண்டசிற்பதமாஞ், சச்சி
தானந்த சமரசநிலைதேர்ந், துற்றசிற்பதம்பெற் றுறங்குதல்சமாதி, மன்னி
சோமமறையுபநிடதஞ், சொன்னவாக்கியத்தின் றொகையிதேஞான,யோக
வெட்டங்க முண்மைநீயுணர்தி, யேகசாரூப்பிய மிதுவெனமொழிந்தான்"
என்பதனானுமுணர்க இதனானே அகத்தொழின்மாத்திரையானே அரு
வத்திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடே யோகமென அதனிலக்க
ணமும் பயனுங் கூறியவாறு. அது "சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்து
வழி யிரண்டுஞ் சலிப்பற்று முச்சதுர மூலாதாரங்க, ளகமார்க்க மறிந்தவ
ற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங் கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண்

டலத்தின், மூகமார்க்க வமூதுடல முட்டத்தேக்கி முழுச்சோதி யினைந் திருத்தன் முதலாக வினைக, ளுகமார்க்க வட்டாங்கயோகமுற்று முழத்த னுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்"என்பதனுனுமறிக. (எக)

பரந்த வான்கலை முழுதுமா கமநூற்
பகுதி யும்பல சமயசாத் திரமுந்
தெரிந்து தேர்ந்ததில் வாய்ந்தமுப் பொருளின்
செய்தி யேபொரு ளெனமனந் தெளிந்து
புரிந்து போந்துள சிற்றறி வனைத்தும்
போக்கி யவ்வறி வெனச் சிவ போதம்
விரிந்து தோன்றுநெஞ் சுடையவித் தகரே
மேன்மை யானநம் மெய்ப்பதம் பெறுவார்.

இ—ள்: பரந்தவான் கலை முழுதும்—மிகவும் விரிந்த பெரியகலை களனைத்தையும்,—ஆகமநூல்பகுதியும்-ஆகமநூற் பாகுபாட்டையும்,—பல சமய சாத்திரமும் - பலதிறத்தனவாகிய சமயநூல்களையும்,—தெரிந்து தேர்ந்து - ஓதியுணர்ந்து,—அதில் வாய்ந்த முப்பொருளின்செய்தி ஏ பொருள்என மனம்தெளிந்து—அந்நூல்களிற் பிரதிபாதிக்கப்பட்ட பதி பசுபாசமென்னுந் திரிபதார்த்த லக்ஷணமே முக்கியப்பொருளென்று மனத்தினிச்சயித்து,—புரிந்து போந்துள சிற்றறிவு அனைத்தும் போக்கி—முன்செய்து போந்த சிற்றறிவு சிறுதொழில்களனைத்தும் பயனிலவென்று கண்டு கழித்து,—அவ் அறிவு எனச் சிவபோதம் விரிந்து தோன்றும் நெஞ்சு உடைய வித்தகரே - முன்னர் அச்சிற்றறிவின் விரிவைப்போலப் பின்னர்ச் சிவ ஞானம் விரிந்து தோன்றப்பெறும் மனத்தையுடைய சாதுரியர்களாகிய சிவஞானிகளே.—மேன்மையான நம் மெய் பதம் பெறுவார் - அப்பதமுத்தி மூன்றுக்கும் மேலாகிய எமது சத்திய முத்தியைத் தலைப்படுவார். எ-று.

அது சாதியொருமை, செய்தி காரியம். சிற்றறிவு விடாதவாகுபெயர். புரிவு விருப்பமுமாம். வேதமுதலிய அறுபத்துநான்கு கலைஞானங்களு மென்பார் பரந்தவான்கலை முழுதுமென்றும். விசேஷவித்தையாகிய சிவாகமமவற்றுள் அடங்காமையின் அதனையுமடக்குதற்குப் பின்னர் ஆகமநூலென விதந்தும், அம்முதனூலாகிய மூலாகமந்தான் சிவபேதம் உருத்திர பேதமென இருவகைப்படுதலின் அது விளக்குதற்கு ஆகமநூற்பகுதியென்றும், சமயம் புறப்புறம் புறம் அகப்புறம் அகமென நால்வகைப்படுதலின் அச்சமயசாத்திரங்களும்பலதிறத்தனவென்பார் பலசமயசாத்திரமென்றும், அவைகளையெல்லாங் கேட்டுச் சிந்தித்து ஆவனவற்றைத் தெளிதல்வேண்டுமென்பார் தெரிந்துதேர்ந்ததில் வாய்ந்த முப்பொருளின் செய்தியே பொருளென மனந்தெளிந்தென்றும், கீழுள்ளனவற்றைக் கீழெனக்கண்டு கழித்தாலன்றி மேலுள்ளன பயன்படாவென்பார் புரிந்துபோந்துள சிற்ற

றிவனைத்தும் போக்கியென்றும், பெத்தநிலைக்கண்ணான்மபோதவியாபகம் போல முத்திநிலைக்கட் சிவபோதவியாபகமாகிய நிட்டைகூடுதல் ஒரு தலையான் வேண்டப்படுமென்பார் உவமை யெடுத்துக்காட்டி அவ்வறிவெனச் சிவபோதம் விரிந்துதோன்று நெஞ்சுடைய வித்தகரே என்றும், இதுவே பரமுத்தியாகிய சாயுச்சியமென்பார் மேன்மையான் நீம்மெய்ப்பதமென்றும் கூறினார். ஈண்டு மெய்ப்பதம் பெறுதலென்றது அத்துவிதமாயினை தலை? அத்துவிதமாயினைதலாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முளிரண்டற ஒற்றுமைப்பட்டு நிற்றலாம். பிரமமும் ஆன்மாவுமெனப் பொருளிரண்டில்லை ஒன்றேயெனக் கூறுவர் மாயாவாதிகள். சிவமும் ஆன்மாவும் வேறுபொருளெனவும் அவ்விருபொருளே இரண்டெனா வேற்றுமைப்படாது அதுவிதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்குமெனவுங் கூறுவர் சைவசித்தாந்திகள். அத்துவிதமென்னுஞ் சொற்கு இரண்டின்மையெனப் பொருள்கொள்வர் மாயாவாதிகள். இரண்டன்மையெனப் பொருள்கொள்வர் சைவசித்தாந்திகள். வேதமுதலிய அறுபத்துநான்கு கலைகளாவன வேதம், புராணம், வியாகரணம், நீதிநூல், சோதிடம், கணிதம், தருமசாத்திரம், யோகசாத்திரம், மந்திரசாத்திரம், வைத்தியசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், நிருத்தம், பூமிபரீக்ஷை, ஆகருஷணம், பரகாயப்பிரவேசம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம் முதலியன. சிவாகமம் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம் வாதுளமென இருபத்தெட்டாம். இவற்றுட் காமிகமுதலிய பத்தும் விஞ்ஞானகலருட் பரமசிவனது அநுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர்முதலிய பத்துச் சிவன்களுக்கும் அருளிச்செய்யப்பட்டமையாற் சிவபேதமெனவும், விசயமுதலிய பதினெட்டும் இவ்வாறு பரமசிவன்பால் உபதேசம் பெற்ற அநாதி ருத்திரர்முதலிய பதினெட்டு ருத்திரர்களுக்கும் அருளிச்செய்யப்பட்டமையால் உருத்திரபேதமெனவுங் கூறப்படும். இச்சிவாகமங்கள் சித்தாந்தமெனவும், மாந்திரமெனவும், தந்திரமெனவும் பெயர் பெறும். இவற்றுட் காமிகத்துக்குப் பரார்த்தமும், யோகசத்துக்கும் சிந்தியத்துக்கும் மகுடத்துக்கும் முகவிம்பத்துக்கும் வாதுளத்துக்கும் தனித்தனி இலக்ஷமும், காரணத்துக்கும் நிச்சுவாசத்துக்கும் தனித்தனி கோடியும், அசிதத்துக்கும் தீப்தத்துக்கும் வீரத்துக்கும் தனித்தனி நியுதமும், சூக்குமத்துக்குப் பதுமமும், சகச்சிரத்துக்குச் சங்கமும், அஞ்சுமானுக்கு ஐந்திலக்ஷமும், சுப்பிரபேதத்துக்கும் விஜயத்துக்கும் சந்திரஞானத்துக்கும் தனித்தனி மூன்றுகோடியும், சுவாயம்புவத்துக்கும் சித்தத்துக்கும் தனித்தனி ஒன்றரைக்கோடியும், ஆக்கினேயத்துக்கு முப்பதினாயிரமும்,

ரௌரவத்துக்கு எட்டர்ப்புதமும், விமலத்துக்கும் புரோற்கீதத்துக்கும் மூன்றிலக்ஷமும், லளிதத்துக்கு எண்ணுயிரமும், சந்தானத்துக்கு ஆறுயிரமும், சர்வோக்தத்துக்கு இரண்டிலக்ஷமும், பாரமேசுரத்துக்குப் பன்னிரண்டிலக்ஷமும், கிரணத்துக்கு ஐந்துகோடியும் கிரந்தசங்கியைகளாம். சங்கியை-அளவு. இவை ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதமெனத் தனித்தனி நான்குபாதங்களுடையனவாயிருக்கும். இவற்றுள். ஞானபாதத்திலே பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரென்னுமான்மாக்களின் சொரூபமும், ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தியென்னும் பஞ்சபாசங்களின் சொரூபமும். சத்தியின்சொரூபமும், சிவதத்துவமுதற் பிருதிவித்தத்துவவரை முப்பத்தாறுதத்துவங்களதுற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம்புசிக்கைக்குக் கருவியாமுறைமையும் புவனங்கள் புவனேசர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், அதமப்பிரளயம் மத்தியமப்பிரளயம் மகாப்பிரளயங்களின் சொரூபமும், அந்தப்பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியாமுறைமையும், பாசுபதம் மகாவிரதம் காபாலமுதலிய மதங்களின் சொரூபமுங் கூறப்படும். கிரியாபாதத்திலே, மந்திரங்களினுத்தாரணம், சந்தியாவந்தனம், பூசை செப மோமங்களும், சமய விசேட நிருவாண ஆசாரியாபிடேகங்களும் புத்தி முத்திகளுக் குபாயமாகிய தீக்கையும் கூறப்படும். யோகபாதத்திலே, இந்த முப்பத்தாறுதத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும், சகத்துக்குக் காரணமாகிய மாயை மகாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமாதி சித்திகளுண்டாமுறைமையும், இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதிகளினுடைய முறைமையும், மூலாதாரமுதலிய ஆறுதாரங்களின் முறைமையுங் கூறப்படும். சரியாபாதத்திலே, பிராயச்சித்தவிதியும், பவித்திரவிதியும், சிவலிங்கலக்கணமும், உமாமகேசுர முதலி வியத்தாவ்வியத்த லிங்கங்களின் இலக்கணமும், நந்திமுதலிய கணநாதரிலக்கணமும், செபமாலை யோகபட்டம் தண்டம் கமண்டலம் முதலியவற்றின் இலக்கணமும், அந்தியேட்டி விதியும், சிராத்தவிதியுங் கூறப்படும். சிவபெருமானுக்குக் காமிகம் திருவடிகளும், யோகஜம் கணைக்கால்களும், சிந்தியம் திருவடிவிரல்களும், காரணம் கெண்டைக்கால்களும், அசிதம் முழந்தாள்களும், தீப்தம் தொடைகளும், சூக்குமம் குய்யத்தானமும், சகச்சிரம் கடித்தானமும், அஞ்சுமான் முதுகும், சுப்பிரபேதம் கொப்பூழும், விசயம் உதரமும், நிச்சுவாசம் நாசியும், சுவாயம்புவம் முலைகளும், ஆக்கினேயம் கண்களும், வீரம் கழுத்தும், ரௌரவம் செவிகளும், மகுடம் திருமுடியும், விமலம் கைகளும், சந்திரஞானம் மார்பும், முகவிம்பம் திருமுகமும், புரோற்கீதம் திருநாக்கும், லளிதம் கபோலங்களும், சித்தம் திருநெற்றியும், சந்தானம் குண்டலமும், சர்வோக்தம் உபவீதமும், பாரமேசுவரம்

ஆரமும், கிரணம் இரத்தினபரணங்களும், வாதுளம் திருப்பரிவட்டமும், காலோத்தரம் திருமேற்பூச்சும்; மற்றை உபாகமங்களெல்லாம் பரிமள திரவியங்களும் புஷ்பங்களும், சைவசித்தாந்தம் நைவேத்தியமுமாமென்க. இன்னும், ஆகமநூலென்றமையாது ஆகமநூற்பகுதியுமென்றதனானே உபாகமங்களும் அட்டப் பிரகரணங்கண் முதலியனவுமாகிய வழிநூல் சார்புநூல்களையுங் கொள்க. உபாகமங்கள் நாரசிங்கமுதல் விசுவான்மகம் ஈறாகிய இருநூற்றேழுமாம். இவற்றின்பெயர்களைக்காமிகமுதலியவற்றுட் காண்க. அட்டப்பிரகரணங்களாவன; தத்துவப்பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரயநிர்ணயம், போககாரிகை, மோக்ஷகாரிகை, நாதகாரிகை, பரமோக்ஷநிராசகாரிகை, இரத்தினத்திரயம் என்பனவாம். புறப்புறச்சமயம் உலோகாயதம், நால்வகைப்பௌத்தம். ஆருகதமென அறுவகைப்படும். நால்வகைப்பௌத்தம் சௌத்திராந்திகம், யோகசாரம், மாத்மீகம், வைபாடிகமென்பன. புறச்சமயம் தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரமென அறுவகைப்படும். இவற்றுள் ஏகான்மவாதம் மாயாவாதமும், பாற்கரியவாதமும், கிரீடாப்பிரமவாதமும், சத்தப்பிரமவாதமுமென நால்வகைப்படும். அகப்புறச்சமயம் சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என அறுவகைப்படும். அகச்சமயம் பாடாணவாத சைவம் சங்கிராந்தவாதசைவம், அவிகாரவாதசைவம், பரிணாமவாதசைவம், சுத்தசைவம், பேதவாதசைவமென அறுவகைப்படும். ஆசீவகம், பாட்டம், பிரபாகரம், துவிதவாதம், சாக்தேயம், காபாலிகம், சூரியவாதம், மிச்சிரவாதம், கருமவாதம், சிவசமவாதம் முதலிய ஏனைச்சமயங்களுந் தம்முட் சிறிதுசிறிது வேறுபாட்டோடு இந்நான்குகூற்றுச் சமயங்களுள் அடங்குமென்க. உலோகாயதமுதல் ஐக்கியவாதமீறாகிய புறப்புறம். புறம், அகப்புறமென்னு முக்கூற்றுச் சமயங்களெல்லாம் பூதமுதல் அசுத்த மாயாதத்துவமீறாயுள்ள ஒவ்வோர் தத்துவங்களிலே நிலைபெறும். அவ்வத்தெய்வங்கள் நிலைபெறுந் தத்துவமே அவ்வச்சமயங்களுக்கு முத்திநிலையாகும். இவற்றையெல்லாங் கடந்து நின்றது சைவசித்தாந்தமென்க. அது "அறுசமயத்திற் கடந்த சைவத்தினன்றிவீடிலதெனத் தெளிந்து" என்பதனானுமறிக. இச்சைவசித்தாந்த சமயசாத்திரம் விந்துவினின்றும் நாதந்தோன்றி விந்துவும் பிரணவமும் வன்னங்களுமாக முறையே பரிணமித்து, அநுட்டுப்புச் சந்தசாய்ச் செய்யப்பட்ட முற்கூறிய ஆகமங்கள் இருபத்தெட்டுமாம். உலோகாயதமுதலிய மற்றைச் சமயநூல்களெல்லாம் பொய்ந்நூல்களென்க. அது "பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும் பிழையேயன்றி, வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த வழிதேறி" என்பதனானுமறிக. இச்சமயநூல்களையெல்லாம் விளங்கிய வழியல்லது மெய்ச்சமயநூலுயர்வு தெற்றென விளங்காமையின் ஞானி இந்நூற்பகுதிகளையெல்லாம் அறிதல்வேண்டுமென்பார் பரந்தவான் கலைமுழுதுமாகம நூற்பகுதியும் பலசமயசாத்திரமுந்

தெரிந்தென்றூர். இதனனே புறத்தொழில் அகத்தொழிலிரண்டுமின்றி அறிவுத்தொழின்மாத்திரையானே அம்மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபிரானிடத்திற் செய்யும் வழிபாடு ஞானபாதமென அதனிலக்கணமும் பயனுங் கூறியவாறென்க, அது "சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து, பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம் பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு, நன்மார்க்க ஞானத்தா னுடி ஞான ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம், பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப் பெருமையுடை யோர் சிவனைப் பெறுவர் காணே" என்பதனுனுமுணர்க. (எஉ)

உருப்பொ லாதவ ரிழிகுலத் தவர்நல்
லொழுக்க மில்லவ ரென்றுநம் மளவில்
விருப்பி லாதவ ரெனினுமெய்ந் நீறு
மிக்க சாதன வேடமுங் கண்டாற்
றரிப்பி லாதுசென் றெதிருற வணங்கித்
தக்க போனக மளித்தவர்க் கெளிதா
யிருப்பர் தாமவர்க் கடியவர்க் கடியா
ரென்பர் யானென தெனுஞ்செருக் கறுப்பார்.

இ—ள்: உருப்பொல்லாதவர்-சரீரக்குற்றமுடையவர்,—இழிகுலத்தவர் - தாழ்ந்தவருணத்தவர்,—நல் ஒழுக்கம் இல்லவர் - துராசாரமுடையவர்,—என்றும் நம் அளவில் விருப்பு இலாதவர் எனினும் - எஞ்ஞான்றும் நம்மிடத்து அன்பில்லாதவர்களேயாயினும்,—மெய்ந்நீறும் மிக்கசாதன வேடமும் கண்டால் - அவருடைய சரீரத்திலே விபூதியையும் ஒழிந்த சமயசாதனத்தோடு கூடிய திருவேடத்தையுந் தரிசிக்கப்பெறின்.—தரிப்பு இல்லாது சென்று எதிர் உற வணங்கி - சிறிதுந் தடைப்படாதெதிர் கொண்டு வணங்கி,—அவர்க்குத் தக்க போனகம் அளித்து - அவர்களுக்குத் தம்மாலியன்ற திருவமுது படைத்து,—அவர்க்கு எளிது ஆ இருப்பர் தாம் அடியவர்க்கு அடியார் என்பர் - இங்ஙனமவருக்கடிமையாக வழிபட்டொழுகுபவரே நம்மடியவர்க் கடியவரென்று சிறப்பித்துச் சொல்லப்படுவர்,—யான் எனது என்னும் செருக்கு அறுப்பார் - அவர் யானென்னும் அகங்காரமாகிய தனுகரணங்களும் எனதென்னும் மமகாரமாகிய புவனபோகங்களுமாகிய மயக்கத்தை ஒழிப்பார். எ-று.

எனினுமென்பதனை ஏனையவற்றோடுந் தனித்தனி கூட்டிப் பொருள் கொள்க. அது, உருப்பெல்லாமை இழிகுலம் ஒழுக்கமின்மை விருப்பமின்மைகளின் இழிவையும், திருவேடத்தின் உயர்வையுங்காட்டிநின்றது. இந்நான்கையு மொருங்குடையராயினுந் திருவேடமுள்வழி ஒரு தலையான் வணங்கற்பாலரென்பதூஉம் போதர அவ்வேடமீண்டிறுதிக்கண்

வைக்கப்பட்டதென்க. ஒழிந்த சாதனம் உருத்திராக்கம், காஷாயவஸ்திரம் முதலாயின. சாதனம்-அடையாளம். எளிது எளிமை. ஆகவென்னுஞ் செயவெனெச்சம் ஆமெனக் குறைந்துநின்றது. இருப்பரென்பது ஈறுதிரியாத வினையாலணையும் பெயர். தாமென்பது தேற்றப்பொருட்கண் வந்தது; அவன்றானிவன் என்புழிப்போல. சரீரக்குற்றம் அங்கவீனத்துவம் முதலாயின. இழிகுலம் சண்டாளகுலம் முதலாயின. நல்லொழுக்கம் அன்னைதந்தையை வழிபடுதன் முதலாயின. திருவேடமகிமையை, "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுங் கண்டிகையுங் கண்டாலுள்கி, யுவராதேயவரவரைக் கண்டபோது முவந்தடிமைத்திறநினைந்தங் குவந்துநோக்கி" என்றற்றொடக்கத்துத் திருவாக்குக்களினும், உவர்மட்பொதிகரைந் துவரதூறிய, வண்ணான்மேனி வெண்ணிறம்படைத்தலு, மிவர்சிவனடியார் வேடமுமிதுவென, நகர்வலம்புரியும் புகர்முகக்களிற்றி, னெருத்தத்திருந்து குதித்துநனிவிரைந்து, கரகமலங்கள் சிரமிசைக்கூம்ப, நிலனுறவீழ்ந்தைம் புலனறவணங்கலும், ஆரெனநினைந்த தடிவண்ணானெனச், சேரலர்தாமு மடிச்சேரலனென, ஞாபகந்தந்த பேருதவியினீர், வருந்தாதேகுமி னெனவழிவிடுத்த, பெருந்தகைச்சேரமான் பெருமாணயனார் முதலிய உண்மைநாயன்மார்களிடத்தும் காண்க. திருவேடத்தை ஞாபகங்கூர்வித்தலிற் போலிவேடமும் வழிபடுவார்பாற் பயனுடைத்தென்பது பத்திமார்க்க வழக்காகலின், "வேட நெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்" என்பதுமுதலியன வேடநெறி நில்லார்கட்குப் பயனில்லாமையை விளக்குதலின் முரணாமையறிக. இதனானே திருவேடமகிமை கூறுமுகத்தாற் சிவனடியார்க் கடியவரிலக்கணமும் பயனுங் கூறியவாறென்க. (எங)

விரிந்த சஞ்சித வினைகளன் புடனாம்
  விழிக்க வெந்தன விரவுமிப் பிறப்பிற்
பொருந்தும் வல்வினை யுடலுட னகலும்
  புந்தி சேரருள் வருவினை போக்கு
மருந்து யர்ப்பொரு ளுயிருடம் புனவே
  யல்ல நம்மன வாகுமிங் குனைப்போ
லிருந்த நங்குரு வடிவைநின் கருத்தி
  லிருத்து வாய்பொரு ளிதுவென மொழிந்தார்.

இ—ள்: விரிந்த சஞ்சித வினைகள் அன்பு உடன் நாம் விழிக்க வெந்தன - புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே பரந்துகிடந்த நின் சஞ்சிதகன்மங்களெல்லாம் நாம் முன்னரே நின்னிடத்தன்புகொண்டு நயனதீக்ஷை செய்யவே ஞானக்கினியினாலே தகிக்கப்பட்டொழிந்தன,— விரவும் இப்பிறப்பில் பொருந்தும் வல் வினை உடல் உடன் அகலும் - எடுத்த இப்பிறப்பின்கண் முகந்துகொண்ட பிராரத்தகன்மங்கள் இச்சரீர

நீக்கத்து அதனோடு அநுபவிக்கப்பட்டுத் தொலையும்,—புந்தி சேர் அருள் வருவினை போக்கும் - உன் மனத்திற்பதிந்த நம்மருளானது இனி ஆகாமிய கன்மங்கள் ஏறவொட்டாது தடுக்கும்,—உடல் பொருள் உயிர் உனவே அல்ல நம்மன ஆகும் - உடல்பொருளாவியென்னு மிம்மூன்றும் இனி உன்னுடையவைகளல்ல, நம்முடையவனவாகும், அதுநிற்க.—இங்கு உனைப் போல் இருந்த நம் குரு வடிவை நின்கருத்தில் இருத்துவாய் - இங்கே உன்னைப்போல மானுடச்சட்டைசாத்தி யெழுந்தருளி வந்திருக்கின்ற நங் குருவடிவத்தை உன்மனத்திற் பதிப்பாய்,—இது பொருள் என மொழிந்தார்-இதுவே ஆகமங்களினறிந்து கோடற்கரிய சித்தாந்தப்பொருளாமென்று பரமாசாரியர் வாதவூரடிகளாகிய சீடருக்குப் போதித்தவெனப் படும் வாசிகதீக்ஷை செய்தருளினார். எ-று.

அருந்துயர்ப்பொருள் அநுபவித்தற்கரிய துன்பத்தையுடைய பொருள். அது "ஈட்டலுந் துன்பமற் றீட்டியவொண் பொருளைக் காத்தலுமாங்கேகடுந்துன்பங்—காத்தல், குறைபடிற்றுன்பங் கெடிற்றுன்பந்துன்பக், குறைபதி மற்றப் பொருள்" "இன்னறும் பொருளையீட்டுவதுந்துன்பமே, பின்னதனைப்பேணுவதுந்துன்பமே-யன்ன, தளித்தலுந் துன்பமே யந்தோபிறர்பா, விழத்தலுந் துன்பமேயாம்" என்பவற்றானுமறிக. ஆணவ கன்ம மாயை யென்னு மும்மலங்களுட் கன்மமாவன ஆன்மாக்கள் மனவாக்குக்காயமென்னுந் திரிகரணங்களினானும் செய்துகொண்ட புண்ணியபாவங்களாம். இவை, எடுத்தபிறப்பிலே செய்யப்பட்டபோது ஆகாமியமெனவும், பிறவிதோறு மிங்ஙன மீட்டப்பட்டுப் பக்குவப்படும்வரையும் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும்போது சஞ்சிதமெனவும், இச்சஞ்சிதகன்மங்களுள்ளே பக்குவப்பட்டவை, மேலெடுக்குமுடம்பையும் அதுகொண் டனுபவிக்கப்படும் இன்ப துன்பங்களையும் தந்து பயன்படும்போது பிராரத்தமெனவும் பெயர்பெறுமென்க. திருவருள் புந்தியிற்பதியவே, தற்போதங்கெட்டுச் சிவபோதம்மேலிட்டுச் சீவச்செயலெல்லாஞ் சிவச்செயலாய்விடுதலின், ஆகாமிய மேறமாட்டாவென்பார் புந்திசேரருள் வருவினை போக்குமென்றும், நின்மனம் பற்றுதற்குரிய வடிவென்பார் இங்குனைப்போலிருந்த நங்குருவடிவென்றும், அநாதியாயுள்ள மலவாதனை பயிற்சிவயத்தான் மீளவும்வந்து தாக்காமைப்பொருட்டுச் சிவோகம்பாவனை செய்யென்பார் நங்குருவடிவை நின்கருத்திலிருத்துவாயென்றும், பரந்தவாகமங்களினெல்லாம் முடிந்தமுடிபாகிய சித்தாந்தப் பொருள் இதுவேயென்பார் பொருளிதுவெனச்சுட்டி விதந்துங்கூறினார். ஈண்டுப் பரமாசாரியர் திருவாதவூரடிகளது உடல் பொருள் ஆவிமூன்றையும் ஒப்புக்கொண்டமையை, "அன்றேயென்றனுவியுமுடலுமுடைமையெல்லாமுங், குன்றேயனையா யென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ, வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண் முக்கணெம்

மானே, நன்றேசெய்வாய் பிழைசெய்வாய்நானோவிதற்குநாயகமே'' என அவ்வடிகளே கூறிய திருவாக்கானுமுணர்க. விரும்பிமுற்சென்னம், புரிந்தவல்வினை என்னும்பாடம் போலிப்பாடமெனவிடுக்க. (எச)

அத்த னார்திரு வாய்மலர்ந் தருளு
மமல வாசகங் கேட்டக மகிழும்
பத்த னார்தமக் கெழுபிறப் பறுக்கும்
பாத மீதுறப் பணிந்தெதி ரெழுந்து
பித்த னானவென் பிழைதனக் கிரங்கும்
பிஞ்ஞ காமிகப் பேதைமை யுடையேன்
முத்த னாகமெய் காட்டினை யெனவே
மொழிந்த ழிந்துகைம் முடிமிசைக் குவித்தார்.

இ—ள்: அத்தனார் திருவாய் மலர்ந்தருளும் அமலவாசகம் கேட்டு அகம் மகிழும் பத்தனார் - பரமபிதாவாகிய சிவபெருமான் இங்ஙனந் திருவாய்மலர்ந்தருளிய நிருமலமாகிய உபதேசவாக்கைக் கேட்டு மனமகிழுஞ் சிவபத்திமானாகிய திருவாதவூரடிகளானவர்,—தமக்கு எழு பிறப்பு அறுக்கும் பாதம் மீது உற எதிர் பணிந்து எழுந்து - தமக்கெழுவகைப் பிறப்பையும் பற்றறச்செய்து உபகரித்த திருவடிகளிற் சிரசுதோயச் சந்நிதியிலே வீழ்ந்து வணங்கி யெழுந்துநின்று,—பித்தன் ஆன என்பிழை தனக்கு இரங்கும் பிஞ்ஞகா - பிரபஞ்ச பிராந்தியையுடையேனாகிய தமியேனது குற்றத்திற்குத் திருவுளமிரங்கியருளுங் கருணாநிதியே,—மிகப் பேதைமை உடையேன் முத்தன் ஆக மெய் காட்டினை என மொழிந்து - மிகவும் அஞ்ஞானத்தையுடைய தமியேன் மலமுத்தனாகும்படி ஆகமங்களின் மெய்ப்பொருளாகிய சித்தாந்தநெறியைச் சந்தேகவிபரீதமறப் புலப்படுத்தி யருளினீரென்று விண்ணப்பஞ்செய்து,—அழிந்து - தம்வசமழிந்து,—கை முடிமிசைக் குவித்தார் - பயிற்சிவயத்தாற் கைகளைச் சிரசிலே குவித்துக் கும்பிட்டார். எ-று.

எழுவகைப்பிறப்பு மேலே காட்டப்பட்டது. பிழை முத்தியெய்துதற் கிதுகாறும் உன்முகஞ்செய்யாமை; உடல் பொருள் ஆவி மூன்றையும் இதுகாறும் என்னுடையவைகளென்றெண்ணி யிருந்தமை என்றுமாம். சந்திரன் கங்கைமுதலிய தலைக்கோலங்கள் ஆன்மாக்கண்மீது கொண்ட கருணைமிகுதியால் நேர்ந்தனவாகலிற் பிஞ்ஞகா என்பதற்குக் கருணாநிதியே எனப் பொருளுரைக்கப்பட்டது. மலமுத்தன் மலத்தால் விடுக்கப்பட்டவன்; சீவன்முத்தனாக எனினுமமையும். மெய்காட்டினை யென்பதற்குக் குருவடிவத்தைத் தரிசிப்பித்தருளினீரெனினும் பொருந்தும். உன்முகம் - மேன்முகம். அதுஈண்டு முயற்சியின்மேற்று. (எரு)

என்ன வாகமுன் னினைந்துள பொருளு
மில்ல தாகிய வுடலமும் யானு
நின்ன வாகநின் னருள்கொடு நினைந்தே
னின்மலாவென நின்றுநின் றுருகா
மன்னு தானைதம் மேலணி கலன்கண்
மதுரை மீனவன் வான் பொரு ளிறையோன்
முன்ன தாகவைத் திறைஞ்சின ரறஞ்சேர்
முதல்வ னூர்முக மலர்வுகொண் டிருந்தார்.

இ—ள்: முன் என்ன ஆக நினைந்து உள பொருளும் - தமியேன் பெத்தகாலத்து என்னுடையனவாகக் கருதியிருந்த பொருளும்,—இல்லது ஆகிய உடலமும்-யானல்லாததாகிய இந்தச்சரீரமும்,—யானும்-ஆன்மாவாகிய யானும்,—நின்மலா - மலரகிதரே,—நின்ன ஆக நின் அருள் கொடு நினைந்தேன் என - இதுபொழுது தேவரீருடையனவாகத் திருவருளானறிந்து சமர்ப்பித்தேனென்று விண்ணப்பஞ்செய்து,—நின்று நின்று உருகா - ஆன்மபோதமொழிந்துநின்று மனம் நெக்குநெக்குருகி,—தம் மேல் மன்னுதானை அணிகலன்கள் மதுரை மீனவன் வான் பொருள்-தம்முடம்பின்மீது புனைந்த வஸ்திராபரணங்களையும் மதுரையை இராசதானியாகவுடைய அரிமர்த்தனபாண்டியனது திரவியத்தையும்,—இறையோன் முன் ஆக வைத்து இறைஞ்சினர் - குருசந்நிதியிற் பொருந்தவைத்துத் திருவாதவூரடிகள் வணங்கினர்,—அறம் சேர் முதல்வனூர் முகம் மலர்வு கொண்டு இருந்தார் - ஈண்டுத் துறவறத்தைப்பொருந்திய யோகமூர்த்தியாகிய பரமாசாரியர் சீடரது பக்குவமுதிர்ச்சியைக் கண்டு முகமலர்ச்சி கொண்டு வீற்றிருந்தருளினர். எ-று.

உடல் பொருள் ஆவிமூன்றும் இனி உன்னுடையவைகளல்ல என்றதுணையானே அங்ஙனஞ் சமர்ப்பித்தாராகலிற் பக்குவமுதிர்ச்சி விளங்கிற்றென்க. சமர்ப்பித்தல்-ஒப்பித்தல். நின்றிரண்டனுண் முன்னையது ஒழிந்தென்னும் பொருட்டு அது "விரவுப்பெயரின் விரிந்துநின்று மன்னபிறவுமாகுமையுருபே" என்பதனானுமறிக. ஆன்மபோதமென்பது அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது. அடுக்கெனக்கொண்டு காலநீட்டமென்பதுமொன்று; ஒருகாலைக் கொருகால் அதிகமாகவுருகியெனக் கோடலுமாம். பக்குவான்மாக்கட்கு முத்தி கொடுக்கும்போது யோகியாதலை "போகியாயிருந்துயிர்க்குப்போகத்தைப்புரிதலோரார், யோகியாயிருந்து முத்தியுதவுதலதுவுமோரார்" என்னுந் திருவாக்கானறிக. அ, து என்பன சாரியை. (எசு)

வேறு.

பெருந்துறை யுறைவா ரன்பு பெறுந்திரு வடிய ராகி
யிருந்தவர் தம்மின் மேன்மை யெய்தினர் முகத்தை நாடித்

திருந்திய பொருளி தெல்லாந் திருப்பணிக் களியு மேலா
மருந்தவர்க் குதவு மில்லா தலந்தவர்க் கருளு மென்றார்.

இ—ள்: பெருந்துறை உறைவார் - இச்சமயத்துத் திருப்பெருந்துறையின்கண் வீற்றிருக்கின்ற கைலாசபதியானவர்,—அன்பு பெறும் திரு அடியர் ஆகி உறைந்தவர் தம்மின் மேன்மை எய்தினர் முகத்தை நாடி-அன்பையுடைய திருத்தொண்டர்களாகி அங்கேயிருக்கின்றவர்களுள் மகிமையையுடைய ஒருவரது முகத்தைப் பார்த்து,—திருந்திய பொருள் இது எல்லாம் திருப்பணிக்கு அளியும் - திருத்தமாகிய இப்பொருள்களை யெல்லாந் திருப்பணிக்குக் கொடுங்கள்,—மேலாம் அரும் தவர்க்கு உதவும்-மேலாகிய அரிய தவத்தையுடைய சற்பாத்திரங்கட்குக் கொடுங்கள்,—இல்லாது அலந்தவர்க்கு அருளும் என்றார் - நுகரப்படும்பொருள் ஒன்றுமின்றிச் சுழலுகின்ற வறியவர்களுக்குக் கொடுங்களென்று பணித்தருளினார். எ-று.

ஒருவர் முன்சொன்ன ஒருவர். இதெல்லாம் பன்மையொருமை மயக்கம். மேலாமருந்தவம் சரியை, கிரியை, யோகங்கள். திருப்பணி முதலியவைகளுக் குபயோகிக்கப்படுதற்கேற்ப நன்னெறியானீட்டிய பொருளென்பார் திருந்தியபொருளென்றார். பொருளைத் திருப்பணியின்பொருட்டு, அத்திருப்பணிசெய்வார்க்குக் 'கொடுக்கும் பலத்தை, "திருப்பணிசெய்வார்க்குஞ் சிவனையுன்னிச்செம்பொன், விருப்புடனீவார் பெறுகவீடு" என்பதனானும், மேலாமருந்தவர்க்குதவும் பலத்தை, "சிவஞானச்செயலுடையோர் கைப்பிற்றானந்திலமளவேசெய்திடினு நிலமலை போற்றிகழ்ந்து, பவமாயக்கடலிலழுந்தாதவகை யெடுத்துப்பரபோகந்துய்ப்பித்துப்பாசத்தையறுத்துத், தவமாரும் பிறப்பொன்றிற்சாரப்பண்ணிச் சரியை கிரியாயோகந்தம்மினுஞ்சாராமே, நவமாகுந்தத்துவஞானத்தை நல்கிநாதனடிக்கமலங்கணனுகுவிக்குந்தானே" என்பதனானும், நுகரப்படும் பொருளொன்றுமில்லா தலந்தவர்க் குதவும் பலத்தை "வறியார்க் கொன்றீவதேயீகைமற்றெல்லாங், குறியெதிர்ப்பைநீர துடைத்து"என்பதனானுமறிக. இவற்றுள் வறியவர்க்கீதல் இரக்கவயத்தானென்பது விளக்குதற் பொருட்டன்றே ஈண்டருளுமென்னும் வினைச்சொற் பிரயோகித்துக் கூறியதூஉமென்க. இது அருசீரடியாசிரியவிருத்தம். (எஎ)

தம்பெரு முதல்வர் சொல்லுந் தருமொழிப் படியே யுள்ள
செம்பொருள் யாவு மன்பின் றிறத்துளார் தொலைத்த பின்ன
ரம்பர னளித்த ஞான மருந்தினை யருந்திப் பாச
வெம்பிணி யகற்று மிந்த வித்தகர் முத்த ரானார்.

இ—ள். அன்பின் திறத்துளார் - பத்திவலியையுடைய திருத்தொண்டர்கள்,—தம் பெரு முதல்வர் சொல்லும் தரு மொழிப்படியே-தம்

முழுமுதலாகிய பரமாசாரியர் பணித்தருளிய திருவாக்கின் வண்ணமே,— உள்ள செம் பொருள் யாவும் தொலைத்த பின்னர் - அங்குள்ள செவ்விய பொருள்களையெல்லாங் கொடுத்து முடித்தபின்னர்,—அம்பரன் அளித்த ஞான மருந்தினை அருந்தி - தச்சிவபெருமானாகிய அநாதிவைத்தியர் கொடுத்தருளிய சிவஞானமாகிய பரமௌஷதத்தை உட்கொண்டு,—பாச வெம் பிணி அகற்றும் இந்த வித்தகர் முத்தர் ஆனார் - ஆணவமுதலிய பஞ்ச பாசமாகிய மகாரோகத்தை நிவிர்த்திசெய்த் சாதுரியராகிய இத்திருவாதவூரடிகள் சீவன்முத்தராயினார். எ-று.

"மிகுஞ் சுத்தனாகியே தொலைவிலாருயிர், முத்தியெய்தினன் முழு துணர்ந்துளான்" என்றதூஉம் இந்நிலையையென்க. அப்பரன் அம்பரனெனத் தொடைநோக்கி மெலிந்துநின்றது; சிதம்பரேசுவரர் என்றுமாம். அளித்தல் ஈண்டீயாதிதல். (எஅ)

திருத்திகழ் கவிகைக் கீழுஞ் சிறந்தபொற் சிவிகை மேலும்
வரத்திரு மேவு தானை மன்னவ னென்ன வந்தா
ருருத்தெரி யாத நீறுங் கோவண வுடையுங் குஞ்சி
விரித்துள சிரமுந் தூநீர் மிகப்பொழி விழியு மானார்.

இ—ள்: திரு மேவு தானை வர - வெற்றிபொருந்திய சேனை பக்கத்தே சூழ்ந்துவர,—திருத் திகழ் கவிகைக் கீழும் சிறந்த பொன் சிவிகை மேலும் மன்னவன் என்னவந்தார் - அழகுவிளங்குகின்ற தவளச்சத்திரத்தின் கீழும் அழகிய முத்துச்சிவிகையின்மேலும் பாண்டியராசனைப்போல மகாலங்காரத்தோடு முன்வந்த திருவாதவூரடிகள்,—உருத் தெரியாத நீறும் - இதுபொழுது திருமேனி மறையப்பூசிய விபூதியும்,—கோவண உடையும் - கௌபீனவுடையும்,—குஞ்சி விரித்துள சிரமும் - மயிர் விரிக்கப்பெற்ற சிரசும்,—தூ நீர் மிகப் பொழி விழியும் ஆனார் - ஆநந்த பாஷ்பம் மிகவும் பொழிகின்ற கண்களுமுடையராயினார். எ-று.

கீழும் மேலும் என்புழி இடைச்சொற்களிரண்டும் வந்தாரென்னும் வினைகொண்டன. பின்னையதிரு வீரலக்குமி. மன்னவனென்றது ஈண்டு நெடுநிலவரசன் என்னும்பொருட்டு. தவளச்சத்திரம் நிழற்ற முத்துச் சிவிகையின்மேலேறி வந்தாரென ஓதற்பாலது வேறோர்நயம்பற்றி இங்ஙனம் கூறப்பட்டது; இருபக்கமும் முன்னும் பின்னும் கீழு மேலுமாகிய அறுவகையிடத்தும் அதிபிரபுத்துவத்துடன் முன்வந்தாரென்பார் திருத்திகழ்கவிகைக்கீழும் சிறந்தபொற் சிவிகைமேலும் வரத்திருமேவுதானை மன்னவனென்ன வந்தாரென்றும், அவரே பின் அதற்குமாறாக அதிவிபுத்துவமுடையராயினார் என்பார் உருத்தெரியாதநீறுங் கோவணவுடையுங்குஞ்சிவிரித்துளசிரமுந்தூநீர்மிகப்பொழிவிழியுமானார் என்றுங்கூறினார். அரசனைப்போல வந்தவர் ஆண்டியைப்போலாயினார் என்பது கருத்து. வரத் திருமேவு மன்னவனென்றியைத்து வரத்தினாற்கிடைத்த மகைசுவரிய

சாமந்தவேந்தனென்னும்படி எனக்கோடலுமாம், திருத்திகழ்கவிகைமே லுஞ் சிறந்தபொற்சிவிகைமீதும், வரத்திருமேவுதானை மன்னவனென்ன வந்தார் எனவும் பாடம். இனித் திருத்திகழ்கவிகை என்பதற்கு அரூபியாகிய திருமகள் ரூபியாய்விளங்கும் குடை எனப் பொருள்கோடலுமொன்று. இக்கருத்து "இச்சையாங் கட்புலப் படாளென் றெண்ணினும்" என்னும் இரகுவம்மிசச் செய்யுளால் இனிது துலங்கும். (எக)

அன்புட னோக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வ
ரின்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்
நன்பகல் கங்குல் காணார் ஞானநல் லறிவே கண்டு
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர்தங் கொள்கை யானார்.

• இ—ள்: அன்பு உடன் நோக்கி நிற்பர் - திருவாதவூரடிகளாகிய சீடர் தமது ஞானதேசிகரை அன்போடு நெடிதுநோக்கி நிற்பார்,—அழுவர் - பின்னழுவார்,—கைதொழுவர் - கைகளைக்குவித்துக் கும்பிடுவார்,—வீழ்வர்-வீழ்ந்துவணங்குவார்,—இன்புற எழுவர் - இன்பம் மிகுமிதித்தெழுவார்,—பின்பால் ஏகுவர்-குருசந்நிதிக்குப் புறங்காட்டலாகாமையின் முன்காட்டிப் பின்னுக்கு நடப்பார்,—இரங்கி மீள்வர்-பிரிவாற்றாமையிற் பரிதபித்து மீண்டுவருவார்,—ஞான நல் அறிவே கண்டு நல் பகல் கங்குல் காணார் - இங்ஙனம் சிவஞானமாகிய நல்ல பேரறிவையே பார்த்து நல்ல பகலையும் இராவையும் பாராதவராகி,—கொன் புனை பித்தர் பாலர் பிசாசர் தம் கொள்கை ஆனார் - பிறர்க் கச்சத்தைமிகுவிக்கும் உன்மத்தர் பாலர் பிசாசரென்னு மிவரதுகோட்பாட்டை யுடையராயினார். எ-று.

பகலிரவு என்றது ஈண்டுச்சகலகேவலங்களாகிய அவத்தைகளையுமாம். "இராப்பகலற்றவிடத்தேயிருக்கையெளிதல்லவே" "இருப்பாிரவு பகலற்றவிடத்தி லொருப்பட்டமலத்துடன்" என்புழியும் இராப்பகலென்றது சகலகேவலங்களை. இராப்பகலற்றவிடமென்றது சுத்தாவத்தையை. "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமேபார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" என்பதனானுமறிக. கொள்கை - குணம். பித்தர்குணம் ஒருகாற்செய் தொருகாலொழிதற்கும், பாலர்குணம் அறவொழிதற்கும், பிசாசர்குணம் செயலிழப்பினின்று செய்தற்கு மூவமையாய்வந்தன. அது "பாலருன்மத்தர் பிசாசரிலெனவு, முறங்கினோன்கை வெறும்பாக்கெனவுந், தானேதவிராதானால்" "பாலருடனுன்மத்தர் பிசாசர்குணமருவிப் பாடலினொடாடலிவைபயின்றிடினும் பயில்வர்" என்பவற்றானுமறிக. ()

மன்னுமிந் நிலைமை யுற்றார் வன்படைச் சுற்ற மாகித்
துன்னின ரெல்லாம் வந்து தோன்றலைத் தொழுது நோக்கித்
தென்னவன் முனியா முன்னஞ் செழும்பரித் திரள்கொணர்
லென்னும தொன்றுந் தேரா திதுபழு தென்றி ரங்கி. [டேக

இ—ள்: மன்னும் இந் நிலைமை உற்றார் - திருவாதவூரடிகள் இவ்வாற்றானே பெத்தநிலையொழிந்து நித்தியமாகிய முத்திநிலையை அடைக்

தார்,—வன் படைச் சுற்றம் ஆகித் துன்னினர் எல்லாம் வந்து - வலிய சேனாவீரராகிய சுற்றமா யுடன்சென்றவரெல்லாம் அதிசமீபத்திற்சென்று,—தோன்றலைத் தொழுது நோக்கி - அவ்வடிகளைவணங்கி, அவரது நிலைமையை உற்றுநோக்கி,—தென்னவன் முனியா முன்னம் செழும் பரித் திரள் கொண்டு ஏகல் என்னும் அது ஒன்றும் தேரா இது பழுது என்று இரங்கி - பாண்டியராசன் நம்மைக் காலநீட்டம்பற்றி வெகுள்வதன்முன்னமே செழுமையாகிய குதிரைக்கூட்டங்களை நாங் கொண்டு போதலாகிய அச்செயலை நீர் ஒருசிறிதுஞ் சிந்தியாமையாகிய இது குற்றமாமென்று மிகவும் பரிதபித்து. எ-று.

முனியாமுன்னம் முனியாதமுன்னமெனப் பெயரெச்சமுடிபு. தேராமை என்பது தொழினிலையொட்டுந் தொழிற்பெயர்; விகுதி விகாரத்தாற்றொக்கது; "பொச்சாவாக்கருவி" என்புழிப்போல. குதிரைகொண்டு செல்லாமை மாத்திரையேயன்றித் திரவியத்தையு மொருங்கிழந்தமையிற் செழும்பரித்திரள்கொண் டேகலென்னுமதொன்றுந் தேராவிது பழுதென்று கூறினார். ஈண்டுச் சுற்றமென்ற தரசனது சுற்றமாகிய சேனாவீரரை என்பது "திரண்டுநின்றகாவலன்றமர்களைநேர்ந்தனர்நோக்கா" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானுமறிக. அரசற்குச் சுற்றமைவர். அவர் மந்திரி, புரோகிதன், சேனாபதி, தூதன், சாரணன் என்பவர். அது "மந்திரி புரோகிதன் சேனா பதியொடு, தந்துரை தூதன் சாரணனென்ன, அரசர்தஞ் சுற்றமிவ் வைவராகும்" என்பதனானறிக. (௮௧)

ஐயர்நீர் வருதல் வேண்டு மென்றவ ரழைத்த போதிற்
றெய்வநீ றணிவார் தானைத் திறத்தினர் தம்மை நோக்கி
மையலா முணர்வின் மிக்கீர் யாவர்நீர் மாயா பேதப்
பொய்யெலா முரைத்தல் வேண்டாம் போமினி யகல வென்றார்.

இ—ள்: ஐயர் நீர் வருதல் வேண்டும் என்று அவர் அழைத்த போதில் - சுவாமீ நீர் எம்மோடு வருதல்வேண்டுமென்று அவரழைத்தசமயத்தில்,—தெய்வ நீறு அணிவார் தானைத் திறத்தினர் தம்மை நோக்கி - தெய்வத்தன்மைபொருந்திய விபூதியை உத்தூளனமாகத் தரித்த திருவாதவூரடிகள் சேனாவீரரைப்பார்த்து,—மையல் ஆம் உணர்வின் மிக்கீர் நீர் யாவர் - மயக்கமாகிய அறிவான் மேம்பட்டவரே நாமும்மோடுவருதற்கு நீவிர் யாவர்,—மாயா பேதப் பொய் எலாம் உரைத்தல் வேண்டாம் - மாயாகாரியமாகிய இப்பலதிறப் பொய்களையெல்லாம் நீரிங்கே பிதற்றுதல் வேண்டாம்,—இனி அகலப் போம் என்றார் - இனி அகலப் போய்விடுமென்று கடிந்து கூறினார். எ-று.

பொய் ஈண்டு அநித்தியமுமாம். மயக்கவறிவையுடைய நும்மோடு வருதற்கு நமக்கும் நுமக்கும் ஓர் சம்பந்தமுமில்லையேயென்பார் மையலாமுணர்வின்மிக்கீர் யாவர்நீரென்றும், கழிகாமத்தராயினார்க்கு அத்தொ

டர்புடையாரதிணக்கம் அக்காமப் பைங்கூழை வளர்க்குநீராதல்பற்றி அதன்கட் கழிபேருவகையும், அல்லாதாரதிணக்கம் அதனைப் பாறச்செய்யுங் களையாதல்பற்றி அதன்கண் வெறுப்புமிகுதியும் உளவாமாறுபோலச் சிவானுபவச் செல்வராய் இறைவன் மலரடிக்கீ ழிருக்கப் பெறுந் தமக்கு அதனைவளர்க்கு நீர்மையராகிய அத்தொடர்புடையாரோ டிணங்குதற்கண் உவகைமிகுதியும், அதனைக் கெடுக்குநீர்மையராகிய இவ்வன்னியரோடிணங்குதற்கண் வெறுப்புமிகுதியும் இயல்பானுளவாகலின், மாயாபேதப் பெரிய்யெலாமுரைத்தல்வேண்டாம் போமினியகலவென்றுங் கூறினரென்க. வெகுளிபற்றிக் கடிந்து கூறினாரல்லரென்பது கருத்து. (அஉ)

என்னிவர் புகல்வ தென்றே யாவரு நின்றி ரங்கித்
துன்னுநற் றானை வீரர் தம்முளே துயர மெய்திப்
பன்னுநம் மொழியுங் கேளார் பரிவில ரென்று நீங்கித்
தென்னவற் கின்ன வாறு செப்புவோ மென்று சென்றார்.

இ—ள்: துன்னும் நல் தானை வீரர் யாவரும் - அதுகேட்ட நெருங்கிய நல்ல சேனைவீரர்களனைவரும்,—இவர் புகல்வது என் என்று நின்று இரங்கித் தம்முள் துயரம் எய்தி - நம்மொடு நீர்வருகவென்று நாம் வினையதற்கு இவர் உத்தரமாகக் கூறியது எத்தன்மையதென்று சிறிது நின்று பொருமித் திகைத்துத் தம்முள் அனுதாபப்பட்டு,—பன்னு நம் மொழியும் கேளார் பரிவு இலர் என்று நீங்கி - கூறுகின்ற நமது சொல்லையும் பொருட்படுத்துகின்றிலர் அதன்மேல் நம்மிடத்துப் பழையபற்றுமிலராயினர் என்று நொந்து அவ்விடத்தைவிட்டுநீங்கி,—தென்னவற்கு இன்ன ஆறு செப்புவோம் என்று சென்றார் - நமது பாண்டியராசனுக்கு இந்தச் சமாசாரத்தை விண்ணப்பஞ்செய்வோமென்று போனார். எ—று.

பரிவுமிலரென்னும் எச்சவும்மை வருவிக்கப்பட்டது. தம்வினவுக்கியைபின்மைமேலும் அன்பற்ற விடையளித்தாராகலின் என்னிவர்புகல்வதென்றென்றும், இதுபோலக்கடிந்துகூறும் விடையைத்தாம் இதுகாறும் இவர் சொல்லக் கேட்டறியாமையின் இதற்குக்காரண மென்னையோவென்று சிறிதுநேரம் நின்று ஆலோசித்தாரென்பார் அதுதோன்ற நின்றென்றும், தங்காதலமைச்சர்க்கெய்திய கேட்டிற்குத் தாங்கவலைகூர்தல் புறத்துப்பரவின் அதனை வெளிப்படுத்திய தாமாகலின், அது புறத்துப் பரவாமைக் காத்தாரென்பார் தம்முளேதுயரமெய்தி என்றுங் கூறினர். ()

சென்றவர் வைகை நாடன் றிருந்தவை முன்ன ரெய்தி
வன்றிறன் மன்ன போற்றி மாமது ரேச போற்றி
யென்றுபின் வாத வூர ரெய்திய செய்தி யெல்லா
மொன்றிய கவற்சி கூரு முளத்தொடு மோத லுற்றார்.

இ—ள்: சென்றவர் வைகை நாடன் திருந்து அவை முன்னர் எய்தி-இங்ஙனஞ்சென்றசேனவீரர்கள் வைகைநதி பிரவாகிக்குஞ் செந்தமிழ்நாட்டையுடைய பாண்டியனது நீதிதிருந்தியசபைக்கெதிரே போய்.—வன்றிறல் மன்ன போற்றி மா மதுரா ஈச போற்றி என்று - மிகுபராக்கிரமத்தையுடைய மகாராசாவே போற்றி, மதுரைக்கரசனே போற்றி என்றுதுதித்து,—பின் - அதன்பின்னர்,—வாதவூரர் எய்தியசெய்தி எல்லாம் - திருவாதவூரடிகளிடத்து நிகழ்ந்த விருத்தாந்தங்களை யெல்லாம், - ஒன்றிய கவற்சி கூரும் உளத்தொடும் ஓதல் உற்றார் - அவ்வடிகள்வாயிலாக வந்துதம்மாட்டுப்பொருந்திய கவலை ஒருகாலைக்கொருகால் மிகப்பெறும் மனத்தோடும் விண்ணப்பஞ்செய்வாராயினார். எ-று.

வன்றிறல் ஒருபொருட்பன்மொழி. இனித் திறல் யுத்தகளத்து விழித்தகண் வேல்கொண்டெறிய வழித்திமையாதுநிற்குந் தைரியமுமாம். போற்றி பரிகாரம்; "நீணிலமன்னபோற்றி நெடுமுடிக்குரிசில் போற்றி" என்புழிப்போல. திரவியமிழந்தமைக்கும் அதனாற் குதிரைவாராமைக்கும் பரிகாரமாக ஈண்டிருகாற் போற்றி என்றார். அடிகள்வாயிலாகத் தங்கட்கெய்தியகவலை யழுந்திய மனமென்பார் ஒன்றியகவற்சிகூரு முளமென்றார். (அ௪)

நின்பெயர் புனைந்தோ ராகி நின்னெடுங் கருமஞ் செய்வா [ம்
ரென்பவர் செய்கை தம்மை யெங்ஙனம் யாங்கள் சொல்வோ
பொன்பொலி மௌலி யாய்நின் புடைவிடைகொண்டு போந்
மன்பெருந் துறையா மந்த வளநகர் புகுந்த பின்னர். [து

இ—ள்: பொன் பொலி மௌலி ஆய் - பொன்னாற்செய்து, இரத்தின கசிதமாகிய ஐவகையுறுப்புக்களாற் பொலிந்த முடியையுடைய நம் மரசனே,—நின் பெயர் புனைந்தோர் ஆகி நின் நெடும் கருமம் செய்வார் என்பவர் செய்கை தம்மை யாங்கள் எங்ஙனம் சொல்வோம் - தென்னவன் பிரமராயனென்னும் நின் சிறப்புப்பெயர்பெற்றவராகி நின் முதன்மந்திரியாய உத்தியோகத்தைச் செவ்வே நடத்துபவரென்று நின்னால் விசுவசிக்கப்பட்டதிருவாதபுரேசரது செயல்களை யாமெவ்வாறு நினக்கு வாயாற் சொல்வோம்,—நின்புடை விடைகொண்டு போந்து மன்பெருந்துறை ஆம் அந்த வள நகர் புகுந்த பின்னர்-அவர் நின்மாட்டநுமதி பெற்றுக்கொண்டு சென்று திருப்பெருந்துறையாகிய வளவிய அந்நகரத்தை யடைந்தபின்னர். எ-று.

முடிக்கு ஐவகையுறுப்புக்களைத் "தாமம் பதும மகுடங் கிம்புரி, கோடர மிவைமுடிக் கைவே றுருவே" என்பதனானறிக. புடை ஏழனுருபு. பொன்பொலிதற்குக் காரணமான மௌலி என்றுமாம். (அ௫)

அந்நகர் மருங்கோர் காவி லணைந்துள குருந்தி லீசன்
றன்னடி யார்க ளாகுந் தாபதர் பலருஞ் சூழ

மன்னியங் கொருவர் மேலா மாதவ வேடம் பூண்டு
முன்னுற விருத்தல் கண்டு முடிவிலா மகிழ்ச்சி கொண்டு.

இ—ள்: அந்நகர் மருங்கு காவில் அணைந்துள் ஓர் குருந்தில்-அந் நகரத்தின் பக்கத்துள்ள சோலையின்கணிற்குமோர் குருந்தமரநீழலில்,—ஈசன் அடியார்கள் ஆகும் தாபதர் பலரும் சூழ - சிவனடியார்களாகிய சைவமுனிவர்களெல்லாம் பக்கத்தே சூழ்ந்துசேவிக்க,—மன் இயங்கு ஒருவர்-தலைமைப்பாட்டையுடைய ஒருபெரியவர்,—மேலாம் மாதவவேடம் பூண்டு முன் உற இருத்தல் கண்டு - அவர்களெவரினும்மிகமேலாகிய தவவேடங் கொண்டு எவரும் நன்குமதிக்க நடுநாயகமாக வீற்றிருத்தலைத் தாம் கண்டு,—முடிவு இலா மகிழ்ச்சி கொண்டு - முடிவற்ற பெருமகிழ்ச்சிகொண்டு. எ-று. (அ௬)

முன் முதன்மையுமாம்.

அங்கவர் தாமுந் தாமு மன்பொடு சிலசொற்கூறிச்
சங்கர சிவனே போற்றி யென்றவர் தாளில் வீழ்ந்து
செங்கரங் குவித்துச் சென்னி சேர்த்துவந் தனைகள் செய்து
பொங்கொளி மணிப்பூ ணுடை பொருளெலா முவந்து நல்கி.

இ—ள்: அங்கு அவர்தாமும் தாமும் அன்பு ஒடு சிலசொல் கூறி-அங்ஙனம் அப்பெரியவருந் தாமும் ஒருவர்மாட்டொருவர் அன்போடு சில சொற்களைக்கொண்டு சம்பாஷித்து,—செம் கரம் குவித்துச் சென்னிசேர்த்து அவர் தாளில் வீழ்ந்து வந்தனைகள்செய்து சங்கரசிவனே போற்றி என்று-பின்பு தாம் சிவந்த கைகளைக்கூப்பிச் சிரசின்மேல்வைத்துக் கும்பிட்டுஅவருடைய பாதங்களிற் சிரசுதோயும்படி நிலத்தில்வீழ்ந்து பலமுறை வணங்கிச் சங்காரசிவனே போற்றி என்று துதித்து,—பொங்கு ஒளி மணிப்பூண் ஆடை பொருள் எலாம் உவந்து நல்கி - மிக்க வொளியையுடைய இரத்தினாபரணம் வஸ்திரம் தின்றிரவியங்களை யெல்லாம் மன முவந் தவருக்குக் கொடுத்து. எ-று.

கூறியென்னுஞ்செய்தெனெச்சம்குவித்தென்னும் வினைமுதல் வினை கொண்டது. அடிகளாகிய ஒருவரது குவித்தென்னும் வினைதாமுந்தாமு மென்னும் இருவர் வினையாகிய கூறியென்னுஞ் செய்தெனெச்சத்திற்கு வினைமுதல்வினையாயவாறென்னையெனின்? அக்கூறுதலுள் அவ்வடிகளது வினையுமுண்மையின், அதுவினைமுதல்வினையேயாம்; "முதனிலைமூன்றும் வினைமுதன் முடிபின" என்புழி வினைமுதல் வினையென்னுந் துணையே யல்லது பிறிதொன்றற்குப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல் வேண்டுமென்னும் யாப்புறவின்மையினென்க. சேனவீரர் தமக்கு அவ் விருவரும் கூறிய விஷயாகாரந் தோன்றாமையின், விஷயத்தின்மேல் வைத்து இன்னது கூறியென்னாது சொன்மேல்வைத்துச் சிலசொற்கூறி யென்றெழிந்தார் என்க. விஷய ஆகாரம் விஷயசொரூபம். (அஎ)

குறைவிலா வாடை நீத்துக் கோவண முடுத்துச் சென்னி
நறைமயிர் விரித்து நீற்றை மெய்யெலா நயந்து பூசி [ரார்
முறைமையன் றிவைதாமென்று மொழிந்தவெம் முகமும் பா
நிறையழி பித்த ராஞர் நிருபவென் றிறைஞ்சி நின்றார்.

இ—ள்: குறைவு இலா ஆடை நீத்துக் கோவணம் உடுத்து-விலை யுயர்ந்த வஸ்திரத்தைக் களைந்து கௌபீனமாத்திரந் தரித்து,—சென்னி நறை மயிர் விரித்து-சிரசின்கணுள்ள நறுமணமூட்டிய மயிரைமுடித்த குடுமியை விரித்து,—நீற்றை மெய் எலாம் நயந்து பூசி - விபூதியை உடம்பெங்கும் விரும்பி உத்தூளனமாகப் பூசி,—இவை தாம் முறைமை அன்று என்று மொழிந்த எம் முகமும் பாரார்-இச்செயல்கடாஞ் சிரேட்ட மந்திரியாகிய உமக்கு நீதியன்றென்று கூறிய எம்முகத்தையும் நோக்காத வராய்,—நிறை அழி பித்தர் ஆஞர் நிருப என்று இறைஞ்சி நின்றார் - நிறையென்னு மாடேக்குணமழிந்த பித்தராயினர் மகாராசாவே அவரது விருத்தாந்தங்கள் இவைதாமென்று சேனவீரர்விண்ணப்பஞ்செய்து மறித்தும் வணங்கிநின்றார். எ-று.

அன்றென்பது பண்மையொருமை மயக்கம். முகமுமென்னுமும்மை எச்சவும்மை. சிறப்புடைப்பொருளைத் தானினிது கிளத்தலென்பதனல் ஆடேக்குணம் நான்கனுட் சிறந்தநிறையொன் றழிதன்மாத்திரையே ஈண் டெடுத்துக் கூறினரேனும், உரையிற்கோடலென்பதனற் பொறைமுதலிய ஏனை முக்குணங்களு மழிந்தாரென்பதூஉந் தழீஇக்கொள்க. தழுவவே, நிறைபொறை ஓர்ப்புக் கடைப்பிடி என்னும் ஆடேக்குணம் நான்குமழிந்த பித்தராயினரென்பது சேனவீரர் கருத்தாக்குக. வேறு வஸ்திரமின்றிக் கௌபீனமாத்திரையே உடையாகக்கொண்டார் என்பார் கோவணமுடுத் தென்றார். (அஅ)

கேட்டலு மதுரை மாறன் கிளர்ந்த மெய்ம் முழுதும் வேர்வு
காட்டிட வெகுளி பொங்கிக் கண்கனல் வடிவமாகி
வாட்டிறன் மன்னர்க் கின்ன வண்மைய ருளரேல் வைய
மீட்டுறு செல்வந் தானை யெவையில வென்று நக்கான்.

இ—ள்: மதுரை மாறன் கேட்டலும் - மதுரைமாநகரத்துக் கரசனுகிய பாண்டிய னிவற்றைக் கேட்டலும்,—கிளர்ந்த மெய்ம் முழுதும் வேர்வு காட்டிட வெகுளி பொங்கிக் கண் கனல் வடிவம் ஆகி - விளங்குகின்ற சரீரமெங்கும் வெயர்வை தன்னைப் பிறர்க்குக் காட்டுமாறு கோபம் மீறிக் கண்கள் அக்கினிமயமாய்ச் சிவந்து,—வாள் திறன் மன்னர்க்கு இன்ன வண்மையர் உளரேல் - வாள்வலியையுடைய அரசருக்கிப்படிப் பட்ட கொடையையுடைய மதிமந்திரிகள் உளராயின்,—வையம் ஈட்டுறு செல்வம் தானை எவை இல என்று நக்கான் - நாமும் ஈட்டப்படுஞ் செல்வ

மும் சேனையும் முதலிய ஆறங்கங்களுள் எவைதா முளவாகா என்று அட்டகாசஞ்செய்தான். எ-று.

கேட்டலுமென்பது உம்மீற்று வினையெச்சம். வாள் படைக்கலப் பொது எனினுமமையும். ஆறங்கம் அமைச்சு, நட்பு, பொருள், நாடு, அரண், தானை என்பன. அரசர்தாம் கருவிச்சிறப்புடையராயினும் தமது நீதியைநடத்துதற் கின்றியமையாத இவ்வாறங்கங்களுள் ஏனை யைந்தங்கங்களையு மோம்புமுதலங்கமாகிய அமைச்சே இங்ஙனம் உட்பகையாய் அறம்பார்த்துக் கேடுசூழுமாயின், இவ்வமைச்சையுடைய அரசற்கு ஏனையைந்தங்கங்களும் வேறு கெடுப்பாரின்றியுந் தாமே கெடுமென்பது குறிப்பாற்றோன்ற வாட்டிறன்மன்னர்க்கின்னவண்மையருள ரேல்லையை, மீட்டுறு செல்வந்தானை யெவையிலவென்று நக்கானென்றார். வண்மை என்பதனை இரட்டுறமொழிந்து, கொடையும் குணமுமெனப் பொருள்கொண்டு, மதியைக் குணத்தின்பாற்படுத்துக. இப்படிப்பட்ட கொடை ஒருவன்பொருளை அவனுடம்பாடின்றி மற்றொருவன் கொடுக்குங் கொடை. மாறன் மாறையென்னுமூரையுடையவன். (அகூ)

அடுபரி கொள்வா னீந்த வரும்பொருள் கவர்வ தாகக்
கெடுமதி யுரைப்பார் தஞ்சொற் கேட்டுமா லெய்தி னானைக்
கொடுமைகொ ளிந்த வோலை கொடுத்தொரு தினத்து நம்பாற்
கடுநடைத் தூத ரேகிற் கைக்கொடு வம்மி னென்றான்.

இ—ள்: அடு பரி கொள்வான் ஈந்த அரும்பொருள் கவர்வது ஆகக்கெடு மதி உரைப்பார் தம் சொல் கேட்டு மால் எய்தினானை-போரிலே பகைவரைக்கொல்லும் குதிரைகளைக் கொள்ளும்பொருட்டு நாங்கொடுத்த அரிய திரவியங்களைக் கவர்ந்துகோடலே கருத்தாகக் கெடுபுத்திகூறிய வேஷதாரிகளது கபடவார்த்தைகளைப் பொருட்படுத்துக் கேட்டு மதிமயங்கிய நம் மந்திரியை,—கடு நடைத்தூதர் ஏகிக் கொடுமை கொள் இந்த ஓலை கொடுத்து ஒருதினத்து நம்பால் கைக்கொடு வம்மின் என்றான்-வேகம்பொருந்திய நடையையுடைய தூதுவர்கள் சென்று காடின்னிய வசனங்களையுடைய இந்த ஓலையைக்கொடுத்து இவ்வொருதினத்தினுள்ளே நம்மாட்டு உடனழைத்துக் கடுகவருகவென் றரசன் ஆஞ்ஞாபித்தான். எ-று.

எய்தினானைக் கைக்கொடென உருபு முடிக்க. கொடுமை ஆகுபெயர். அரும்பொருளென்னும் அடையுரிமை கல்விப்பொருட்கே யுரியதாயினும், தான் அறநெறியானீட்டிய அருமையும் மிகுதியும் தோன்ற அரசனீண்டுச் செல்வப்பொருட்குக் கொடுத்தோதியது வழுவமைதியென்க. இக்கருத்தைச் "சொற்பயில்விப்பவனெப்படிச் சொற்றன, னப்படியொழுகியரும்பொருள்பெறுக" என்பதனுள்ளுங்காண்க. (கூ0)

ஏவலிற் சென்ற தூத ரெழிற்பெருந் துறையி லெய்தி
யாவலிற் சிவன்றா ளேத்து மண்ணலைக் கண்டி றைஞ்சி
மேவலர்க் குருமே றன்ன வெந்தொழில் வேந்தன் வாய்மைக்
காவலர்க் கதிபன் மாறன் றிருமுகங் காண்க வென்றார்.

இ—ள்: ஏவலில் சென்ற தூதர் எழில் பெருந்துறையில் எய்தி - அரசனது ஆஞ்ஞையினாலே சென்ற தூதுவர்கள் அழகிய திருப்பெருந்துறையை யடைந்து.—ஆவலில் சிவன் தாள் ஏத்தும் அண்ணலைக் கண்டு இறைஞ்சி - பேராவலினோடு சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித் துதித்து வழிபடும் பெருமையிற்சிறந்த திருவாதவூரடிகளைக் கண்டு வணங்கி,—மேவலர்க்கு உருமேறு அன்ன வெந் தொழில் வேந்தன் - பகைவர்களாகிய சர்ப்பங்கட் கிடியேறுபோலுங் கொடுந்தொழிலையுடைய நெடுநிலவரசனும்,—வாய்மைக் காவலர்க்கு அதிபன் மாறன் திருமுகம் காண்க என்றார் - சத்தியத்தையுடைய அரசர்க்கரசனுமாகிய அரிமர்த்தன பாண்டியனது திருமுகம் இதனைக் காணுக என்றனர். எ-று.

நீருமவ்வரசனோடு மாறுபடிற் றப்பாது தண்டிக்கப்படுவீர் அத்தண்டத்தொழிற்கு மற்றோரரசனது சகாயம்பற்றித் தப்புதலுங் கூடாதெனத் தூதுவர் தம்முள்ளுறையை முன்னர் அறிவுறுத்துவார் மேவலர்க் குருமேறன்ன வெந்தொழில்வேந்தன்வாய்மைக் காவலர்க்கதிபன் மாறன் என்றார். வேந்தனை உருமேறாக வருவகஞ்செய்ததற்கேற்ப மேவலரைச் சர்ப்பமாக வுருவகஞ் செய்யாமையின் இஃதேகதேச வுருவகமென்னு மலங்காரமெனக. (கூக)

அற்றமில் கொள்கை மிக்கா ரரன்றிரு முகம தன்றி
மற்றொரு முகமுங் காண மனமில ரிதன்மே லன்பு
பற்றிலர் பிறிதோ ரோலைப் படியெடுத் துரைமி னென்ன
வுற்றத னியல்பு வல்லா னெழுதிய துவந்து சொல்வான்.

இ—ள்: அற்றம் இல் கொள்கை மிக்கார் அரன் திருமுகம் அது அன்றி மற்று ஒரு முகமும் காண மனம் இலர் - பரமுத்திபெறுதற்கண் விடாமுயற்சியையுடைய திருவாதவூரடிகள் பக்குவான்மாக்களது பாசத்தையரிக்குஞ் சிவபெருமானது திருமுகமாகிய அஃதொன்றை யல்லது மற்றொரு திருமுகத்தையுங் காண மனமில்லாதவ ராகலின்,—இதன் மேல் அன்பு பற்றிலர் பிறிது ஓர் ஓலைப்படி எடுத்து உரைமின் என்ன -, இது அரசனது திருமுகமென் றொருசிறிதும் அன்புகூராதவராய்ச் சாமானியமாகிய பிறிதோர் முடங்கல் போலக் கொண்டு அதனை எடுத்து வாசியுங்களென்று கூறியருள,—அதன் இயல்பு வல்லான் உற்று எழுதியது உவந்து சொல்வான் - அவ்வாசித்தற்றொழிலில் வல்ல கரணனொருவன் சமீபத்திற் போய் அதன்கணெழுதிய பாசுரத்தை மகிழ்ந்து வாசிப்பானாயினன். எ-று.

பொதுவாக உரைமினென்ன. அதனியல்புவல்லாமெனுருவன் வாசிக் கின்றானாகலிற் பன்மை யொருமை மயக்கமாகாமையுணர்க. இஃதறியா தார் வல்லாரோதியதுவந்துசொல்வார் எனப் பாடத்தைப்பலர்பாற் படத் திரித்தோதுவர். ஒரு ஓலையைப் பலர்வாசித்துக் கேட்பித்தல் சுருதியுத்தி யநுபவங்கட்கு விரோதமாமெனை மறுக்க. அற்றமில்கொள்கை சோர்வற் றகுணம். திருமுகம் பத்திரம். இரட்டுறமொழிதலாற் றிருமுகம் என்ப தற்குத் திருமுகப் பாசுரமென்றும் திருவதனமென்றும் பொருள்கொள்க. இக்கருத்தும் இனிதுபோதருதற்கன்றே மற்றொருதிருமுகமென்னுது மற் றொருமுகமென விகாரவகையாற்கூறியதூஉமென்க. அரசனது திருமுகத் தைப் பிரதானமாகக் கொள்ளாது அப்பிரதானமாகக் கொண்டாரென் பார் இதன்மேலன்புபற்றிலர் பிறிதோரோலைப்படி யெடுத்துரைமின் என் றும், கரணன் வாசித்தற்றொழிலிற் கைவந்தவனாகலின் இப்பாசுரத்தை வாசிக்கின்றுழியே சொற்சுவை பொருட்சுவைகளை யறிந்து அதற்கு மன மகிழ்ந்து வாசிப்பானாயினுனென்பார் அதனியல்பு வல்லானெழுதியதுவந் துசொல்வானென்றுங் கூறினர். பாசுரம் - வசனம். கரணன் - வாசிப் போன். அது "இருண்மறைமிடற்றிறைன்கை யோலைகண்டவையோரேவ, வருள்பெறுகாணத்தானுமாவணந்தொழுதுவாங்கிச், சுருள்பெறு மடியை நீக்கிவிரித்தனன்றென்மைநோக்கித், தெருள்பெறுசபையோர்கேட்கவாச கஞ்செப்பலுற்றான்" என்பதனானுமறிக. (கூஉ)

தென்னவ னெழுது மோலை தென்னவன் பிரம ராய
னென்னுநம் மமைச்சர் காண்க வெல்லையி றனங்கொண்டேகிக்
கொன்னுறு பரிகொ ளாமற் கோவணங் கொண்டீ ரீது
மன்னர்தங் கருமஞ் செய்வார் வண்மையென் றுவகை யுற்றேம்.

இ—ள்: 'தென்னவன் எழுதும் ஓலை தென்னவன் பிரமராயன் என்னும் நம் அமைச்சர் காண்க - 'அரிமர்த்தனபாண்டியனாகியநானெழுது மிவ்வோலையைத் தென்னவன்பிரமராயன் என்னும் நம் முதன்மந்திரியா னவர் காணுக,—எல்லை இல் தனம் கொண்டு ஏகிக் கொன் உறு பரிகொ ளாமல் கோவணம் கொண்டீர் - நீர் எமது திரவியசாலையிலிருந்து அள வற்ற திரவியங்களைக் கொடுசென்று மாட்சிமைபொருந்திய குதிரைக ளைக் கொள்ளாமல் அதற்குப் பிரதியாக ஒரு கௌபீனம் கொண்டீர்,— ஈது மன்னர் தம் கருமம் செய்வார் வண்மை என்று உவகை உற்றேம் - இதுவே இராசதருமத்தை நடத்தும் பிரதான மதிமந்திரிகட் கிலக்கண மென்றறிந்து நாம் மனமகிழ்ச்சியடைந்தேம். எ-று.

அரசன் தன்குழுவையும் தன்னேடு சேர்த்து உவகையுற்றேமெனப் பன்மையாற் கூறினுகலின், தென்னவனென்னு மொருமையோடு அது ஒருமைப் பன்மைமயக்கமாகாமையறிக. இனித் தென்னவன் பிரமராய னென்பது அரசனாற் கொடுக்கப்பட்ட சிறப்புப்பெயராகலானும், அத

னுட் பின்னிற்கும் பிரமராயனென்பது முன்னிற்கும் தென்னவன் என்பதுபோல ஒருமைப்பாலாற் கூறப்படுவதல்லது பிரமராயரெனப் பன்மைப்பாலாற் கூறுதல் தகாமையானும், தென்னவன்பிரமராயனென்னு நம்மமைச்சர்என்றது ஒருமைப் பன்மை மயக்கமேயாமெனக், அது, "ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி, பன்மைக் காகு மிடனுமா ருண்டே" என்பதனாற் கொள்க. கொன் அச்சமுமாம். வண்மை ஆகுபெயர். தனக்கு அவர்மீது இதுபொழுது வெறுப்பு நிகழினும் அதுபற்றி அவரை நைச்சியவசனத்தாற் கூறாது பூச்சியவசனத்தாற் கூறுதலே நன்மகனாகிய தனக்கழகா மாகலின், தென்னவன்பிரமராயனென்னுநம் மமைச்சர்காண்க என்றும், நங்காரிய தரிசியாகிய நீர் நமக்குச்செய்த விசுவாசகாதகம். போலும் அபராதம் பிறிதொன்றின்மையின் அமைச்சியல்பழிந்த நும்மைப் பெரிதும் வெறுத்தொழிந்தோமென்பது குறிப்பாற்றோன்ற ஈது மன்னர் தங்கருமஞ்செய்வார் வண்மையென் றுவகையுற்றேமென்றுங் கூறினானெ ன்க. (கஙஙு)

வையக மன்ன ராகி வாழ்தலின் மனைக டோறு
மெய்திய வுதரத் தீயா லிரப்பது பெருமை யென்று
மெய்தகத் தம்மை யாண்ட வேந்தரைப் பிழைத்து வேறு
செய்வது பலிக்கு மென்றுந் தேர்ந்தநூற் றுணிவுங் கண்டேம்.

இ-ள்: வையக மன்னர் ஆகி வாழ்தலின்- இந்நிலவுலகவரசராகி மகிமையோடு நீர் வாழ்தலினும்,—எய்திய உதரத் தீயால் மனைகள் தோறும் இரப்பது பெருமை என்றும் - சுவாலிக்கின்ற உதராக்கினி தணிக்கும் பொருட்டு வீடுகடோறும் யாசிப்பது மகிமையென்றும்,—மெய் தகத் தம்மை ஆண்ட வேந்தரைப் பிழைத்து வேறு செய்வது பலிக்கும் என்றும் - உறுதிபெற உள்ளன்பானே தம்மைச் சம்ரக்ஷணைசெய்த அரசர்க்குத் துரோகஞ்செய்துவிட்டு அவர்க் கந்நியமாகிய பிறிதொன்றைச் செய்வது அநுகூலமாகுமென்றும்,—தேர்ந்த நூல் துணிவும் கண்டேம் - நீரோதிய நீதிநூற்றுணிவையும் நாங் கண்டேம். எ-று.

இன் உறழ்பொருட்டு. மெய் ஆகுபெயர். தக தகுதலினால். துணிவுமென்னுமும்மை எச்சத்தோ டிழிவுசிறப்புமாய்நின்றது. ஏனையவிரு ண்டு மெண்ணும்மை. ஒருவர்க்கு அரசராகி உலகபரிபாலனஞ் செய்து வாழ்தலின் மிக்க பெருமையும், பசிநிமித்தம் வீடுகடோறும் யாசித்தலின் மிக்க சிறுமையும் உலகநடையிலின்மையின், கல்விமானாகிய நீர் அதற்கு மாறாக அச்சிறுமையைப் பெருமையாக விபரீதக்கிரகணஞ் செய்துகொண்டமையும், தமக்கு முக்கியசகாயரா யெல்லாநன்மைகளையுஞ் செய்து பாதுகாத்த அரசர்க்கு அந்நன்றியை மறந்து துரோகஞ்செய்துவிட்டுப் பிறிதொன்றிற் பிரவேசிப்பது அநுகூலமாதலும் நூற்றுணிபல்லது நூற்றுணிபாகாவென்பது குறிப்பாற்றோன்ற இரப்பது பெருமையென்றும்,

வேறுசெய்வது பலிக்குமென்றுந் தேர்ந்தநூற்றுணிவுங் கண்டேமென்றும் அரசன் எழுதினனென்க. கல்விமானாகிய நமக் கிவையிரண்டும் ஒருசிறிதுந் தகாவென்பது கருத்து. (கச)

மன்னரை யடைந்து வாழ்தல் வஞ்சநஞ் சுமிழு நாகந்
தன்னுடன் மருவி வாழுந் தன்மையென் றுணர்தி ராயிற்
றன்னுமிவ் வோலை காணும் பொழுதுநந் தூதர் தம்மோ
டிந்நகர் வருக மாற னெழுத்தென வியம்பி நின்றான்.

இ—ள்: மன்னரை அடைந்து வாழ்தல் வஞ்ச நஞ்சு உமிழும் நாகம் தன்னுடன் மருவி வாழும் தன்மை என்று உணர்திர் ஆயின் - மன்னரைச் சேர்ந்தொழுகி அவர்கீழ் அதிகாரஞ்செய்தல் வஞ்சகம்பொருந்திய நஞ்சையுடைய பாம்போடு கூடிவாழுந் தன்மைபோலுமென்று நீரறிதிராயின்,—துன்னும் இவ் ஓலை காணும் பொழுது நம் தூதர் தம்மோடு இந்நகர் வருக - நம்மால் விடுக்கப்பட்டு வரும் இவ்வோலை நுங்கட்பொறிக்கு விடயமாகுமந்தக்கணமே நந்தூதுவர்களோ டிந்நகரத்தின்கட் கடுகவருக,— மாறன் எழுத்து என இயம்பி நின்றான் - இங்ஙனம் அரிமர்த்தனபாண்டியன்' என்று கையெழுத்தையும் வாசித்துக் கரணன் நின்றான். எ-று.

நஞ்சிற்கு வஞ்சகம் கடிவாயினன்றி அல்வழி உமிழப்படாமை. இனி வஞ்சகத்தை நாகத்திற் கடையாக்கி, அதற்கு மறைவெனப் பொருள்கொண்டு, மறைந்துறைதலையுடைய நாகமெனவுரைத்தலுமாம். அது "நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்" என்பதனானுமறிக. பாம்பு தன்னோடு பழகினோரையும் அப்பழக்கம்பற்றி விடாது மந்திரத்தானாய தடை தீர்ந்தவழித் தப்பாது கொலைசூழ்தல்போல அரசரும் தம்மோடு பழகினோரையும் அப்பழக்கம்பற்றி விடாது தமது ஆணைகடந்தவழித்தப்பாது தண்டிப்பர் என்பதறிக என்றதாம். இத்தூதுவரோடு கடிது வாராதொழியிற்றப்பாது தண்டிக்கப்படுவீர் என்பது தாற்பரியமென்க. (கரு)

மீனவ னெழுது மோலை கேட்டபின் மின்பா லன்ப
ரானவ ரடியா ரெம்மை யடிமையா வுடைய ரல்லாற்
றானெனக் கண்ண லென்றுந் தன்னையான்பிழைத்தேனென்று
மாநில மன்னன் சொன்ன தென்னென மனத்தி லெண்ணி.

இ—ள்: மீனவன் எழுதும் ஓலை கேட்டபின்-இவ்வாறரிமர்த்தன பாண்டியன் எழுதிய ஓலையின் பாசுரத்தைத் திருவாதவூரடிகள் கேட்ட பின்னர்,—மின்பால் அன்பர் ஆனவர் அடியார் எம்மை அடிமை ஆ உடையர் அல்லால் - துவளுகின்ற மின்போலும் உமாதேவிமாட் டன்புடைய சிவபெருமானுக் கடியவர் தமக் கெம்மை அடிமையாகவுடையரல்லது,— தான் எனக்கு அண்ணல் என்றும் தன்னை யான் பிழைத்தேன் என்றும் - தான் எனக்கதிபதியென்றும் தனக்கு யான் குற்றஞ்செய்தேனென்றும்,—

மாநில மன்னன் சொன்னது என் என மனத்தில் எண்ணி - இந்நெடு நிலவரசன் கூறிய தென்கொலோவென்று மனத்தின்கட் சிந்தித்து. எ-று.

எம்மையெனப் பன்மையாற் கூறியது ஏனையடியவர்க் கெளியாரையும் தழீஇயினாகலிற் பின்வரும் எனக்கு, யான் என்பவற்றோடு பன்மையொருமைமயக்க மாகாமையறிக: ஆக என்பது ஆ எனக் குறைந்து நின்றது. தன்னை என்பதுருபுமயக்கம். உலகநடைபற்றி அரசனெழுதிய வோலை வேதநடைபற்றிய தமக்கு வேறுபட்டுத் தோன்றுமாகலின் மாநில மன்னன்சொன்னதென்னென மனத்திலெண்ணி என்றார். பிழை - குற்றம். அரசனுக்குத் தாம் ஒருகுற்றமும் செய்யவில்லையென்பது கருத்து. அற்றேல், பாண்டியன் குதிரைகொள்ளும்பொருட்டுக் கொடுத்த திரவியங்களைத் திருவாதவூரடிகள் அவ்வரசனது கருத்துக்கு மாறாகப் பரமாசாரியரிடத் தொப்பித்தமை குற்றமாகாதோவெனின், ஆகாது. என்னை? அவர் ஆண்டுத் தஞ்செயலிழப்பினின்றங்ஙனஞ் செய்தாராகலினென்க. தஞ்செயலிழப்பினிற்றலாவது மோகனஞ் செயப்பெற்றானொருவன் தன்வசமின்றி அம்மோகன வித்தைக்காரன்வசமாய் நிற்றல்போலவும், பேய்பிடியுண்டவன் செயலெல்லாம் பேயின்செயலாவதல்லது அவன்செயலாகாதவாறுபோலவும் ஆண்டு இறைநிறைவில் அழுந்தித் தம்வசமின்றி நிற்கும் திருவாதவூரடிகள் செயலெல்லாம் இறைவன்செயலாவதல்லது அவ்வடிகள் செயலாகாதிருத்தலாமென்க. அவ்வடிகள் அங்ஙனம் பசுகரணமற்றுச் சிவகரணமுற்றுத் தஞ்செயலிழப்பினின்றதனை, "அன்புடனேக்கிநிற்பரழுவர்கைதொழுவர்வீழ்வ, ரின்புறவெழுவர்பின்பாலேகுவ ரிரங்கிமீள்வர், நன்பகல்கங்குல்காணார்ஞானநல்லறிவே கொண்டு, கொன்புனைபித்தர்பாலர்பிசாசர்தங்கொள்கையானார்." என ஆசிரியர் மேற்கூறியவாற்றானும், "முன்பணிந்தன ரணிந்தன ரஞ்சலிமுடிமே, லென்புநெக்கிடவுருகினரினியராயெளிவந், தன்பெனும்வலைப்பட்டவரருள் வலைப்பட்டார், துன்பவெம்பவ வலையறுத்திடவந்ததூயர்" "பார்த்தபார்வையாலிரும்புண்டநீரெனப்பருகுந், தீர்த்தன்றன்னையுங்குருமொழிசெய்ததுந்தம்மைப், போர்த்தபாசமுந்தம்மையுமறந்துமெய்ப்போத, மூர்த்தியாயொன்றுமறிந்திலர்வாதவூர்முனிவர்" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானுமறிக. அற்றேல், அங்ஙனம் பரமாசாரியர் கவர்ந்து கொண்டமைதான் குற்றமாகாதோவெனின், அதுவுங் குற்றமாகாது. என்னை? அங்ஙனமவர் கவர்ந்துகொண்டமை அப்பொருள்வாயிலாகவே அவ்வடிகளை அதிட்டித்துநின்று அவ்வரசனுக்கு முத்திகொடுத்தற்பயத்ததாகலினென்க. அது "அந்தரர்தம்பதியினிழிந்தருள் புனைமாத்தியர்குலத்தில், வந்தருளித்தமியேற்குமந்திரியாய் மகிழ்வெய்தி, யெந்தைவயப்பரியேறல்காட்டியெனக்கொழியாத, பந்தமறத்திருவுள்ளம்பற்றினைநற்றவத்தோனே" என ஈண்டுக் கூறுமாற்றானும், "ஆனமந்திரக்கிழார்பொருட்டன்றியும்வென்றி, மீனவன் பிறப்பறுக்கவும் வார்கழல்வீக்கி" "தித்திக்குமணிவார்த்தையின்னஞ் சின்னூட்டிருச்செவி

யினருந்தவுங்கைச்செம்பொனெல்லாம், பத்திப்பேரன்பளிச்துக்கவர்ந்து வேண்டும் பணிகொடுபாண்டியனையிவர்பண்புதேற்றி, முத்திக்கேவிடுத்திடவும்" "அம்மகனைமுடிசூட்டியரசாக்கிவாதவூரமைச்சர்சார்பான், மெய்ம்மைநெறிவிளங்கியிருவினையொப்பிலரன்கருணை விளைந்தநோக்கான், மும்மைமலத்தொடர்நீங்கிச் சிவானந்தக்கடற்படிந்து முக்கண்மூர்த்தி, செம்மைமலர்த்தாளடைந்தான் றிறலரிமர்த்தனனென் னுந்தென்பார்வேந்தன்" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானுமறிக. அற்றேல், பொருள்கவராது முத்திகொடுத்தாற் படுமிழுக்கென்னையெனின், பொருள் கவராதொழியிற் பக்குவம் முதிராதாகலின், அஃதொருதலையாற் கவர்தல்வேண்டுமென்பது அக்கருத்து, "அகரமாயிர மந்தணர்க்கீயினுஞ், சிகரகோபுரஞ்செய்துமுடிக்கினும், பரமஞானிபகலூண்பெறுவது, நிகரில்லைநிகரில்லை நிச்சயந்தானே" என்னும் திருமந்திரமுதலியவற்றாலும், மேலாமருந்தவர்க்குதவும் என்புழி ஆண்டுக் கூறியவாற்றானும் அறிக. அங்ஙனமாயினும், அவன் பொருளை அவனறியக் கவராது அறியாது கவர்ந்தமை குற்றமாகாதோவெனின், அறியாது கடாயினாய்! ஓர்சிறுவன் மடமையான் நஞ்சுண்டு சாவக்கருதி அந்நஞ்சு வாங்கிவரும்பொருட்டு மற்றொருவன் கைக்கொடுத்தனுப்பிய பொருளை, அஃதறிந்த அவன்றந்தை ஆண்டு மகனறியாதேதான் கவர்ந்துகொண்டு, அந்நஞ்சென் றமிர்தத்தை மறைத்துக் கொடுத்து அவனை இரக்ஷித்தல் அவன்மேற்கொண்ட அன்புபற்றி யல்லது அன்பின்மைபற்றி யன்றாகலின், அது குணமேயாவ தல்லது குற்றமாகாமைபோல அரசன்பொருளைப் பரமாசாரியர் அவனறியாது கவர்ந்துகொண்டமையும் அவன்மேற்கொண்ட திருவருள்பற்றி யல்லது அருளின்மைபற்றியன்றாகலின், அதுவும் குணமேயாவ தல்லது குற்றமாமாறுயாண்டையதென மறுக்க. கருணைபற்றிச்செய்யும் அகிதம்போல்வனவும் இதமே என்பது "மருளினையருளால்வாட்டிமன் னுயிர்க்களிப்பன்கண்கட், கிருளினையொளியாலோட்டுமிரவியைப்போலவீசன்" என்பதனானுமறிக. இன்னும் சுந்தரமூர்த்திநாயனாரைத் தடுத்தாட்கொண்டருளுங்காற் சிவபெருமான் அங்ஙனஞ் செய்தருளிய அகிதம்போல்வனவும் பின் இதமேயாய் முடிந்தமையானும் பிறவாற்றானு மிஃதுய்த்துணர்ந்துகொள்க. (கூரு)

அந்தக னெழுது மோலை கொண்டவன் றூதர் தாமும்
வந்தெமை யணுக மாட்டா ருடையவர் மதுகை யாலே
வெந்தொரு கணத்தில் வீழ மேவலர் புரங்கள் செற்றார்
தந்தம ரொருவர்க் கஞ்சத் தகுவரோ வென்று சாற்றி.

இ—ள்: உடையவர் மதுகையாலே - எம்மை அடிமையாகவுடைய சிவபெருமானது சர்வவல்லமையினாலே,—அந்தகன் எழுதும் ஓலை கொண்டு அவன் தூதர் தாமும் வந்து எமை அணுக மாட்டார் - யமனெழுதும் மரணவோலையைக் கொண்டு அவனது தூதுவர்தாமும் வந்தெம்மைச் சமீபிக்கமாட்டார்,—மேவலர் புரங்கள் ஒரு கணத்தில் வெந்து வீழச் செற்

றூர்தம் தமர் - தாரகாக்கன் கமலாக்கன் வித்தியுன்மாலி யென்னும் பகைவரது பொன் வெள்ளி இரும்பாலாய முப்புரங்களும் ஓர் கணப்பொழுதில் எரிந்து துகள்பட்டு விழும்வண்ணம் திருப்புன்னகையக்கினியினா லழித்த சிவபெருமானுடைய அடியவர்,—ஒருவர்க்கு அஞ்சத்தகுவரோ என்று சாற்றி - மற்றெத்திறத்தினர்க்கு மஞ்சற்பாலரோவென்று தம்முட்கூறி. எ-று.

சாற்றிப்போயென வருஞ்செய்யுளில் முடிக்க. உடைமைப்பொருள்களாகிய பசுக்களது கண்டிதவலிமையோடு உடையானாகிய பசுபதியினது அகண்டிதவலிமைக்கு வேற்றுமைதெரித்துக் காட்டுவார் உடையவர்மதுகையாலே என்றும், அவ்வகண்டிதவலிமைக் கநுபவங்காட்டுவார் வெந்தொருகணத்தில் வீழமேவலர்புரங்கள்செற்றார் என்றும், காப்பவரது வலிமைக்கஞ்சிக் காக்கப்படுவோரை மற்றொருவர் நலிதல்கூடாமையிற் றூமினியுலகத்தொருவர்க்கு மொருசிறிது மஞ்சவேண்டாமென்பார் செற்றார்தந் தமதொருவர்க் கஞ்சத்தகுவரோவென்றுங்கூறினார். "நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோநரகத்திலிடர்ப்படோ நடலையில்லோ, மேமாப்போம் பிணியறியோம்பணிவோமல்லோ மின்பமேயெந்நாளுந்துன்பமில்லை, தாமார்க்குங்குடியல்லாத்தன்மையான சங்கரனற்சங்க வெண்குழையோர்காதிற், கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சேவடியிணையே குறுகினோமே" "செங்கமலத்தாளிணைகள்சேரவொட்டாத்திரிமலங்களறுத்தீசனேசரொடுஞ்செறிந்திட், டங்கவர்தந்திருவேடமாலயங்களெல்லாமரனெனவேதொழுதிறைஞ்சி யாடிப்பாடி, யெங்குமியாமொருவர்க்குமெளியோமல்லோ மியாவர்க்குமேலானோமென்றிறுமாப்பெய்தித், திங்கண்முடியாரடியாரடியோமென்று திரிந்திடுவர் சிவஞானச்செய்தியுடையோரே" என்னும் திருவாக்குக்களும் இவ்விருசெய்யுட்கருத்தேபற்றிவந்தன. கண்டிதம் வரையறுக்கப்பட்டது. அகண்டிதம் வரையறுக்கப்படாதது. முப்புரத்தசுரர் வாணன்முதன் மூவர் என்பது ஒருசாராசிரியர் கருத்தென்க.

போயரன் றிருத்தா ளேத்திப் புண்ணிய வடிவே போற்றி
யாயிரஞ் சுடிகைப் பாம்பை யலரென முடித்தாய் போற்றி
மாயிரு ஞாலங் காக்கு மன்னவ னெழுது மோலைப்
பாயிர மிதுகே ளென்று மொழிந்தனர் பழுதி லாதார்.

இ—ள்: பழுது இலாதார் போய் அரன் திருத் தாள் ஏத்தி - நிர்த்தோஷராகிய திருவாதவூரடிகள் அதிசமீபத்திற்போய்த் தம்பாசங்களையரித்த பரமாசாரியரது திருவடிகளை வணங்கி,—புண்ணிய வடிவே போற்றி - தருமஸ்வரூபரே காத்தருளுக,—ஆயிரம் சுடிகைப் பாம்பை அலர் என முடித்தாய் போற்றி என்று ஏத்தி - ஆயிரந்தலைகளையுடைய பெரும் பாம்பை மலர்மாலைபோல இனிது சூடினவரே காத்தருளுக என்று துதித்து,—மா இரு ஞாலம் காக்கும் மன்னவன் எழுதும் ஓலை இது பாயிரம் கேள்

என்று மொழிந்தனர் - மிகவும் பெரியபூமியைப் பாதுகாக்கும் பாண்டிய னெழுதிய ஓலையாகிய இதனது வரலாற்றைத் திருச்செவிசாத்தியருளுக வென்று பிரார்த்தித்து அதனை வாசித்தனர். எ-று.

ஒருவர்கூறை எழுவருடுத்தென்றாற்போல ஆயிரமென்ப தநேகமென்னும் பொருட்டெனினுமமையும். எத்தியென்பதனால் வணங்கி என்பது உபலக்கணம்பற்றி வருவிக்கப்பட்டது. குருசந்நிதியினின்று பிறிதொன்றுசெய்வது குருநிந்தையாய் முடியுமாகலின், அதனைப் பரிகரிக்கும்பொருட்டு முன்னர்ச் சிறிதிடையிட்டுநின் றரசன்றூதுவர்க் கெதிர்ப்பட்டனர், பின்னர் அச்சேய்மைக்கணின்றாங்குநின் றரசனோலையைத் தாம் வாசித்துக் கேட்பித்தலுங் குருநிந்தையாய் முடியுமாகலின், அதனையும் பரிகரிக்கும்பொருட்டு அதிசமீபத்திற்சென்றென்பார் போய் என்றும், இங்ஙனம் குருசிஷ்யக்கிரமங்களிற் றவறுவாரல்லரென்பார் பழுதிலாதார் என்றுங் கூறினார். (கூஅ)

கேடிலா வியல்பி னாருங் கேட்டிள முறுவல் பூத்துப்
பாடலா லேத்துந் தெய்வப் பான்மையர்க் குவந்து சொல்வார்
பீடிலா தவர்போ லுள்ளம் பேதுற லொழிதி யிந்த
நாடெலா மதிக்க நாமே நற்பரித் திரள் கொண் டேகி.

இ--ள்: கேடு இலா இயல்பினாரும் கேட்டு இள முறுவல் பூத்து- நிர்விகாரமாகிய திருவருட்குணங்களையுடைய பரமாசாரியரும் அதனைக் கேட்டருளித் திருப்புன்னகைசெய்து,—பாடலால் ஏத்தும் தெய்வப்பான்மையர்க்கு உவந்து சொல்வார் - திருவாசகந் திருக்கோவையாராகிய செந்தமிழ்ப்பாடல்களினாலே தம்மைத் துதிக்குந் தெய்வப்புலமையையுடைய திருவாதவூரடிகளுக்குத் திருவுளமகிழ்ந்து அருளிச்செய்வாராயினார்,— பீடு இலாதவர் போல் உள்ளம் பேதுறல் ஒழிதி - அறிவாகிய உள்ளீடற்ற மக்கட் பதடிகளைப்போல மகனே நீ இனி மனமயங்குதலை யொழிவாயாக,—இந்த நாடு எலாம் மதிக்க நாமே நல் பரித்திரள் கொண்டு ஏகி - இத்தேசவாசிகளெல்லாம் நன்குமதிக்கும்படி இனி நாமே நல்ல குதிரைக்கூட்டத்தைக் கொடுசென்று. எ-று.

குணம் வாய்மைமுதலியன. கேடிலாவியல்பினார் நாசமின்றிய சுயம்பு. பீடு - தைரியமுமாம்; "மோடுடைநகரினீங்கிமுதுமரந்துவன்றியுள்ளம், பீடுடையவருமுட்கப் பிணம்பலபிறங்கியெங்கும், காடுடையெல்லை யெல்லாங்கழுகிருந்துறங்குநீழற், பாடுடையிலந்தோகைபயப்பயவீழ்ந்த தன்றே" என்பதனானும் அறிக. (கூகூ)

தென்னவற் களித்து மீள்வோஞ் செழுந்திறற் றாத ரோடு
மன்னனைக் குறுகி யென்பால் வரவிடு மோலை தன்னான்

முன்னுறக் கடிது வந்தே னாவணித் திங்கண் மூல
மென்னுமத் தினத்தி லிங்கே யெய்துநற் பரிக ளென்பாய்.

இ—ள்: தென்னவர்க்கு அளித்து மீள்வோம் - அரிமர்த்தனபாண்டியனுக்குக் கொடுத்துத் திரும்புவோம்,—செழும் திறல் தூதரோடு மன்னனைக் குறுகி - நீ இப்பொழுதே மிக்கவலியையுடைய இத்தூதுவர்களோடவ்வரசனையடைந்து,—என்பால் வரவிடும் ஓலை தன்னால் முன் உறக் கடிது வந்தேன் - அரசனே நீ என்மாட்டு வரவிடுத்த ஓலையினால் முன்னாக விரைந்துவந்தேன்,—ஆவணித் திங்கள் மூலம் என்னும் அத்தினத்தில் இங்கே நல் பரிகள் எய்தும் என்பாய் - ஆவணிமாசத்து மூலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் நக்ஷத்திரத்தையுடைய அவ்விசேடதினத்தில் இங்கே நல்லகுதிரைகள் வருமென்று சொல்லக்கடவை. எ-று.

செழுமை - வலிமை. ஒருகாதம் ஒருநாழிகையிற் கடக்குந் தூதரென்பார் செழுந்திறற்றூதரென்றார்; "காவதமோரொருகன்னலினகப், போவதுசெய்து" என்றார் பிறரும். (க00)

தொன்மதிக் குலத்து மன்னன் றுயர்செய்வா னென்று சற்று
நின்மனக் கவற்சி கொள்ளா தொழிகென நீறு சாத்திப்
பொன்மணிக் கலன்கண் மிக்க பூந்துகில் பிறவு நல்கி
மன்மனத் துவகை கூர மந்திரிப் பான்மை செய்து,

இ—ள்: தொல்மதிக் குலத்து மன்னன் துயர் செய்வான் என்று சற்றும் நின்மனக் கவற்சி கொள்ளாது ஒழிக என நீறு சாத்தி - பழைய சந்திரவம்மிசத் தரசனாகிய பாண்டியன் நின்னை வருத்துவானென்று நீ சிறிதும் மனத்தின்கட் கவலைகூராதொழிகவென்று பரமாசாரியர் தமதருமைத்திருக்கரத்தினாலே நெற்றியில் விபூதிசாற்றுதலெனப்படும் சிவகஸ்தமத்தகசம்யோகமாகிய பரிசதீக்ஷையுஞ் செய்தருளி,—பொன்மணிக் கலன்கள் மிக்க பூம் துகில் பிறவும் நல்கி - பொன்னாபரணம் இரத்தினாபரணம் விலைமிக்க பொலிவாகிய பீதாம்பரங்களோ டொழிந்தன பிறவற்றையுங் கொடுத்து,—மன் மனத்து உவகை கூர மந்திரிப்பான்மை செய்து - அரசனது மனத்தின்கண் மகிழ்ச்சிமிகும்படி மந்திரிக்கோலங் கொள்வித்து. எ-று.

ஒழிகவென்னும் வியங்கோளீறு விகாரமாயிற்று. செய்வித்தென்பது பிறவினையுணர்த்தும் விவ்விகுதி தொக்குச் செய்தெனநின்றது. செய்தெனத்தன் வினையாதலே கருத்தெனிற்பொன்மணிக்கலன் முதலியவற்றை நல்கியென்ற தெற்றுக்கெனமறுக்க. தமதுவாக்கை ஸ்திரப்படுத்துதற்கு நீறுசாத்தினாரெனக் கோடலுமாம். பரிசதீக்ஷையாவது பரிசனவேதியினாலே தாமிராதி லோகங்களைப் பரிசித்துக் களிம்பை நீக்கிப் பொன்னாக்குதல்போல ஆசாரியர் தமதுகையைச் சிவன்கையாகப் பாவித்து அங்

னமே அருச்சனைசெய்து அதனைச் சீடனுடைய தலையில்வைத்து எங்கும் பரிசித்து அவனது பாசத்திரயத்தை நீக்கி அவனைச் சிவனுக்குதலாம். ()

தென்றிசைக் கதிபன் றன்பாற் சென்றிது கொடுத்துக் காண்டி
யென்றுமா மணியு நல்கி யேகென விடுத்த பின்னர்க்
கன்றகல் புனிற்று வென்னக் கசிந்திரு கண்ணீர் வார
நின்றுநின் றிறைஞ்சி யையா நீத்தியோ வென்று நொந்து.

இ—ள்: தென் திசைக்கு அதிபன் பால் சென்று இது கொடுத்துக் காண்டி என்று மாமணியும் நல்கி - தெற்கின்கணுள்ள தமிழ்நாட்டுக் கரசனாகிய பாண்டியனிடத்துச் சென்று இதனைக் கையுறையாகக்கொடுத்துக் காண்பாயாகவென்று ஒருமாணிக்கமணியையுங் கொடுத்து,—ஏகு என விடுத்தபின்னர் - இனிச் செல்வாயாகவென்று விடைகொடுத்தருளியபின்னர்,—கன்று அகல் புனிற்று ஆ என்னக் கசிந்து இரு கண் நீர்வார நின்று நின்று இறைஞ்சி - இளங்கன்றைவிட்டு நீங்குந் தலையீற்றுப்பசுவைப்போல மனம் நெக்குநெக்குருகி இருகண்களினின்று நீரொழுக இடையிடையே நின்று நின்று அடிக்கடி வணங்கி,—ஐயா நீத்தியோ என்று நொந்து - சுவாமீ தமியேனைக் கைவிடுகின்றீரோவென்று மனம் வருந்தி. எ-று.

செய்யுளாகலிற் சுட்டு முன்வந்தது புனிற்றுவகல் கன்றென மாற்றிப் பொருள்கொள்வாருமுளர். கசிதல் ஆவுக்கல்லது கன்றுக்கின்மையின் அது போலியுரையென்க. அது "புனிற்றுக்கன்றை நீங்கியவாவெனக் கரைந்த சிந்தையராய்" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானுமறிக. அடுக்குப் பன்மைபற்றிவந்தது. முன் வருவதுமது. (க௰உ)

விழிப்புனல் சிந்தச் சிந்த விண்ணவன் விடைபெற் றேகிச்
சுழிப்புனல் கொழிக்கும் வாவி சூழ்பெருந் துறையைநீங்கி
வழிக்குறு துணையா யுள்ள வள்ளலைந் தெழுத்து மோதிப்
பழிச்சுறு தூத ரோடு மதுரையம் பதியிற் போனார்.

இ—ள்: விழிப் புனல் சிந்தச் சிந்த விண்ணவன் விடை பெற்று ஏகி - திருவாதவூரடிகள் இடையறாதொழுகுந் தைலதாரைபோலக் கண்களினின்றும் நீர் ஒழுகவொழுகச் சிதாகாசப்பொருளாகிய கைலாசபதியினது செலவுபெற்றுச்சென்று,—சுழிப் புனல் கொழிக்கும் வாவி சூழ்பெருந்துறையை நீங்கி - சுழிக்குமியல்புபொருந்திய நீர் முத்துக்களைக் கொழிக்குந் தடாகங்கள்சூழும் திருப்பெருந்துறையைவிட்டு நீங்கி,—வழிக்கு உறு துணை ஆய் உள்ள வள்ளல் ஐந்து எழுத்தும் ஓதி - வழிக்குயிர்த்துணையாயுள்ள சிவமூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரங்களையுஞ் செபித்துக்கொண்டு,—பழிச்சுறு தூதரோடு மதுரை அம்பதியில் போனார் - தம்மைத் துதிக்குந் தூதுவரோடும் மதுரைமாநகரத்திற் சென்றார். எ-று.

வள்ளல் - கொடையையுடையவர். ஐந்தெழுத்துமென்புழி உம்மை முற்றும்மை. (௧௦௫)

மதுரைமன் னவன்முன் னேகி மனமிலா வணக்கஞ் செய்து
கதிர்மதிச் சடையோ னீந்த கவின்கொண்மா மணிகைந் நல்கி
யெதிருற நின்ற போதி லின்புற வழுதி நோக்கி
விதிமுறை யிருமிங் கென்ன விருந்தனர் விரிந்த நூலார்.

இ—ள்: விரிந்த நூலார் - பரந்தநூல்களிலே மகா பாண்டித்திய த்தையுடைய திருவாதவூரடிகள்.—மதுரை மன்னவன் முன் ஏகி மனம் இலா வணக்கம் செய்து - அம்மதுரையை இராசதானியாகவுடைய பாண் டியனுக்கெதிரே போய்ப் பிரீதியற்ற வணக்கஞ்செய்து.—கதிர் மதிச் சடையோன் ஈந்த கவின்கொள் மாமணி கை நல்கி எதிர் உற நின்ற போ தில்.—ஒருகலையாகிய பாலசந்திரனையணிந்த சடையையுடைய சிவபெரு மான் கொடுத்தருளிய அழகிய மாணிக்கமணியைக் கையிற்கொடுத்தெதி ரே நிற்கும்போது.—வழுதி இன்பு உற நோக்கி விதிமுறை இங்கு இரும் என்ன இருந்தனர் - பாண்டியன் இனிதாகப் பார்த்து இங்கேயிருமென்று விதிப்படி சொல்ல இருந்தார். எ-று.

வணக்கமென்றது ஈண்டுக் கனஞ்செய்தலை; சிவஞானச்செல்வரும் ஆதிவருணத்தவருமாகிய அடிகள் அரசனை நமஸ்காரஞ்செய்தல் விதியன் மையினென்க. சிவபெருமான் சடையிலணிந்த மதி ஒருகலையாகிய மதி என்பது "வன்றிறற்றக்கன் முன்வழங்குதீச்சொலாற், றன்றிருங்கலையெ லாந்தொலைந்துபோந்திட, வொன்றிவணிருந்ததா லுதுவுந்தேய்ந்திடு, மின் றினிவினையினேன்யாதுசெய்வதே" "எஞ்சியவிக்கலையிருக்கத்தேய்தரு, விஞ்சியகலையெலா மேவநல்குதி, தஞ்சநின்னலதிலை யென்னத்தண்மதி, யஞ்சலையென்றன னருளினுழியான்" "தீர்ந்தனவன்றியே திங்கடன்னி டை, யார்ந்திடுகலையினை யங்கையாற்கொளா, வார்ந்திடுசடைமிசைவயங் கச்சேர்த்தினன், சார்ந்திலதவ்வழித் தக்கன்சாபமே" என்பனவற்றானறிக. சேனுவீரரும் பிறருந் தனக்குக்கூறிய தாபதவேடமாகவன்றி முன்போல வமைச்சுவடிவமாகவே காணப்பட்டமையானும், உயர்ந்த மாணிக்கமணியா கிய கையுறையானும் பாண்டியன வெறுப்பகன்றுவந்துநோக்கினனென் பார் இன்புறவழுதிநோக்கியென்றும், விதிக்கு அவிரோதமாகிய வழக்கம் விதியாதற் கிழுக்கின்மையிற் பண்டைவழக்கப்பிரகாரமென்பார் விதி முறையென்றுங் கூறினர். (௧௦௬)

விலைமதிப் பில்லா வந்த மேதகு மணியைப் பல்கா
ணிலையுற வியந்து நோக்கி நெஞ்சினு ளுவகை யெய்தித்
தலைவனைச் சிந்தை யுள்ளே தரிப்பவர் தம்மை நாடிச்
சிலைமுகக் கரத்து மன்னன் செய்ததே துரைமி னென்றான்.

இ—ள்: சிலை மூகக் கரத்து மன்னன் - விற்றழும்புபொருந்திய கையையுடைய பாண்டியராசன்,—விலை மதிப்பு இல்லா அந்த மேதகு மணியைப் பல்கால் நிலை உற நோக்கி - விலைமதித்தற்கரிய மகிமைபொருந்திய அம்மாணிக்கமணியைப்பலகால் உற்றுநோக்கி,—நெஞ்சினுள் வியந்து உவகை எய்தி - தன்மனத்தினுள்ளே அதிசயித்துமகிழ்ச்சிகூர்ந்து,—தலைவனைச் சிந்தை உள் தரிப்பவர் தம்மை நாடி - ஆன்மநாயகராகிய சிவபெருமானை இருதயத்து ஞானக்கண்ணுற் றரிசிக்குந் திருவாதவூரடிகளை நோக்கி,—செய்தது எது உரையின் என்ருன் - குதிரைகொள்ளுமாறு சென்றபின் இதுகாறும் நீர்செய்ததென்னை கூறுமென்ருன். எ-று.

இருதயத்திற் றரிசித்தல் சிவோகம்பாவனைபண்ணுதல். இனித் தரித்தல் தியானித்தலுமாம். மகாராசாவாகிய தான் மற்ருெருவரது மணியை வெளிப்பட வியக்கின் அது தன்பெருஞ் செல்வானுபவமுடைமைக் கிழுக்காய்முடியு மாகலானும் பிறர்மதித்துரைக்குமுன்ருன் மதித்துணரும் ரத்தினபரீக்ஷையுடைய ஞதலானும் வெளிப்படாது தன்னுள்ளே வியந்தென்பார் நெஞ்சினுள்வியந்தென்றும், சேனுவீரரது கூற்ருேடு மாறுபடுதலிற் குணமும், குதிரையோடுவாராமையிற் குற்றமுமாகிய இவ்விருநிலையினுளொன் றில்வைத்து இவரதியற்கையை இந்நிலைமைக்கட் டுணிதல் கூடாமையின் அவ்விருநிலைமைக்கும் பொதுவகையாற் செய்ததேதுரைமின் என வினவினனென்றுங் கூறினர். (கOரு)

மலக்கொடும் பகையை வெல்வார் மன்னவன் முகத்தைநோக்கி
நிலத்தொளிர் புகழின் மிக்காய் நீதரு நிதிகொண் டேகி
யிலக்கணக் குறைபா டின்றி யீரிரு கதியு முண்டாங்
குலப்பரி யினங்கள் யாவும் விலைக்குறக் கொண்ட பின்னர்.

இ—ள்: மலக் கொடும் பகையை வெல்வார் மன்னவன் முகத்தை நோக்கி - மும்மலமாகிய கொடியபகையைவெல்பவராகிய திருவாதவூரடிகள் இங்ஙனம் வினவிய அவ்வரசனது முகத்தை நோக்கி,—நிலத்து ஒளிர் புகழின் மிக்காய் நீ தரு நிதி கொண்டு ஏகி - தமிழ்நிலத்தின்கண் மிக்கொளிரும் புகழான் மேம்பட்ட அரசனே நீதருதிரவியத்தை நாங்கொண்டுசென்று,—இலக்கணக் குறைபாடு இன்றி ஈரிரு கதியும் உண்டாம் குலப் பரி இனங்கள் யாவும் விலைக்குறக் கொண்ட பின்னர் - அசுவலக்கணநூலிற் கூறிய இலக்கணங்களுளொன்ருனுங் குறைவற்று நான்குகதிகளையுமுடையனவாகிய உயர்ந்தசாதிக் குதிரைக்கூட்டங்களையெல்லாம் நாம் விலைக்குத்தகக் கொண்டபின்னர். எ-று.

அநாதியா யுடனின்று கெடுத்த உட்பகையாகலிற் கொடும்பகையென்றும், ஏனைத் தமிழ்நிலத்துச் சோழ சேரர்களது புகழினுமிக் கொளிரும் பெரும்புகழையுடையாயென்பார் நிலத்தொளிர் புகழின்மிக்காய் என்றும், அதிகவிலைக்குக் கொள்ளாமையும் நாற்பத்தொன்பதுகோடி பொன்னுக்

கெஞ்சாமைக் கொண்டமையும் விளக்குவார் விலக்குறக்கொண்டபின்னர் என்றுங் கூறினர். கதி நான்காவன மயூரகதி, சரகதி, சசகதி, வானரகதி என்பன. துரககதியை இந்நான்கென்பாரும், இந்நான்கனேடு மல்ல கதியையுஞ் சேர்த்து ஐந்தென்பாருமென இருதிறத்தராசிரியர். அது "மயிலிருஞ்சரமுயலொடயூகமற்றெழிலைப், பயில்பரித்தொகை யளப்பில வயின்றெறும் பரவும்" என்பதனுனுமறிக. (கoசு)

அரும்பரித் தொகுதி யெல்லா மணிதிகழ் மதுரைக் கேகப்
பொருந்திய தினமே தென்னப் பூசுரர் விதியிற் றேர்ந்து
திருந்துமா வணியாந் திங்கண் மூலநற் றினமா மென்ன
விருந்தன னதனை நாடிப் பெருந்துறை யென்னு மூரில்.

இ—ள்: அரும் பரித் தொகுதி எல்லாம் அணிதிகழ் மதுரைக்கு ஏகப் பொருந்து நல் தினம் ஏது என்ன - பெறுதற்கரிய குதிரைக்கூட்டங்களெல்லாம் அழகிய மதுரைமாநகரத்திற் செல்லுதற்கேற்ற சுபதினம் யாதென்று வினவ,—பூசுரர் விதியில் தேர்ந்து திருந்தும் ஆவணி ஆம் திங்கள் மூலம் நல்தினம் ஆம் என்ன - பூசுரராகிய கணிதர் சோதிட நூல் விதியா னாராய்ந்து திருத்தமாகிய ஆவணிமாசத்து மூலநக்ஷத்திரதினம் அதற்குத் தக்கதென்றுகூற,—அதனை நாடிப் பெருந்துறை என்னும் ஊரில் இருந்தனன் - அம்மூலநக்ஷத்திரதினத்தை எதிர்நோக்கித் திருப் பெருந்துறை யென்னுமூரில் இதுகாறுமிருந்தேன். எ-று.

ஈண்டுத் திருவாதவூரடிகள் பூசுரர் என்றது தங்கருத்துக்குப் பரமாசாரியரை. அற்றுகலினன்றே கணிதர் சோதிடரென்னுது பூசுரரென்றெழிந்ததூஉமென்க. (கoஎ)

நின்படைச் சுற்ற மெல்லா நீடுமிந் நகருக் கெய்து
மன்பினிற் கடிது மீண்டா ரவர்பெறும் படிறு கூற
மன்பெரு முனிவா லோலை வரைந்தனை யதனல் வந்தேன்
கொன்பரித் திரளிங் கெய்துங் கூறுமந் நாளி லென்றுர்.

இ—ள்: நின்படைச் சுற்றம் எல்லாம் நீடும் இந்நகருக்கு எய்தும் அன்பினில் கடிது மீண்டார் - அச்சமயத்து நின்சேனுவீரராகிய சுற்றத்தவரெல்லாரு முயர்வாகிய இவ்விராசதானிக்குத் தாம் வருதல்வேண்டு மென்னும் வேணவாவினுலே விரைவாக மீண்டுவந்தனர்,—அவர் பெரும் படிறு கூற - அவர் தம்மைத் தப்புவித்தற்பொருட் டென்னைக் குறித்துப் பெரும் பொய்களை வகுத்துக்கூற,—மன் பெரு முனிவால் ஓலை வரைந்தனை அதனல் வந்தேன் - அரசனே நீ பெருங் கோபங்கொண்டு திருமுக மெழுதி விடுத்தனை அதுபற்றி முன்வந்தேன்,—கொன் பரித் திரள்கூறும் அந்நாளில் இங்கு எய்தும் என்றுர் - மாட்சிமைபொருந்திய குதிரைக்கூட்டம் மேற்கூறிய மூலநக்ஷத்திரதினத்தில் இங்கே தப்பாது வருமென்று திருவாதவூரடிகள் கூறினர். எ-று.

மன் அண்மைவிளி; நிலைபேறுமாம். படிறு-பொய். அரசனுக்கிவ்வாறு பொய்கூறிய திருவாதவூரடிகள் மெய்கூறிய சேனுவீரர் கூற்றைப் பொய்யென்றது தப்பன்றேவெனின், அரசனுக் கங்ஙனங் கூறுமாறு பணித்தருளிய பரமாசாரியரது திருவாக்கை உண்மையென் றுள்ளபடி விசுவசித்த அவ்வடிகட்கு அதற்கு மாறாகக்கூறிய சேனுவீரர் கூற்று ஒருதலையாகப் பொய்யாகவே தோன்றுமாகலின், அப்பொய்யைப் பொய்யென்றது தப்பன்றென்க. அல்லதூஉம், சிவஞானச்செல்வராகிய திருவாதவூரடிகளுக்குத் தீமைபயக்குஞ் சேனுவீரர் சொல் மெய்போலத் தோன்றினும். "வாய்மையெனப்படுவதியாதெனின்யாதொன்றுந், தீமையிலாதசொலல்" என்பவாகலின், அது எவ்வாற்றானும் பொய்யேயாமென்க. அற்றேற் பரமாசாரியர் அங்ஙனம் பொய்கூறுவித்தது தப்பன்றேவெனின், அஃதவ்வரசனுக்குப் பின்னர் ஒருதலையாற் புரைதீர்ந்த நன்மையேபயக்குஞ் சிறப்புடைமையின் மெய்யெனவே படுமாகலின், அம்மெய்யை மெய்யெனக் கூறுவித்ததூஉந் தப்பன்றென்க. அதனைப் "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்" என்பதனானுமறிக. (க0அ)

என்பது கேட்டு மாற னும்மிடை யெமக்குண் டான
மன்பெரு நண்பு நீங்க நினைத்துள மனத்தார் சொல்லா
லன்பிலர் போல வோலை யெழுதின மதுகொண் டின்னே
துன்புற லொழிவீ ரென்று நன்மையாத் தொன்மை கூறி.

இ—ள்: என்பது மாறன் கேட்டு - என்றிங்ஙனந் திருவாதவூரடிகள் கூறுவதைப் பாண்டியன் கேட்டு,—உம்மிடை எமக்கு உண்டானமன் பெரு நண்பு நீங்க நினைத்துள மனத்தார் சொல்லால் - உம்மிடத்தெமக்குளதாகிய நிலைபெற்ற அந்தரங்கநட்புத் தானே நீங்கும்வண்ணம் உபாயஞ் சூழும் மனத்தையுடைய சிலர் வார்த்தையை விசுவசித்தலினால்,—அன்பு இலர் போல ஓலை எழுதினம் - உம்மிடத் தன்பில்லாதவர்போலத் தீட்சண்ணியவசனங்களைப் பிரயோகித்து உமக்கோரோலை யெழுதியனுப்பினேம்,—அதுகொண்டு இன்னே துன்பு உறல் ஒழிவீர் என்று நன்மை ஆத் தொன்மை கூறி - அதுபற்றி இங்ஙனந் துன்புறுதலை யொழிதிரென்று சமாதானமாகப் பழைய நட்புரிமைகளை யெடுத்துப்பாராட்டி. எ-று.

அதுகொண்டென்னே என்பது பாடமாயின் அதுபற்றி ஈண்டுவந்த குற்றமென்னை எனப் பொருள்கூறுக. நன்மை தொன்மை என்பன ஆகுபெயர். சமயம்பார்த்து நண்புபிரிய நினையும் மாற்சரியமனம் முன்னுட்டுச்சிலர்க் குளதாமென்பது விளக்குதற்கே நினைந்த மனமென்னாது நினைந்துளமனமென்றதென்க. (க0க)

கொன்னெடுங் கோயி லூடு கொடுபுகுந் துரிமை கூரத்
தன்னரு கிருத்தி மேன்மை தக்கநற் கலைக ணல்கிப்

பொன்மணிக்கலன்கள் யாவும் புனையுமென்றளித்து முன்போ
மன்னுள கருமங் கூறி மனையிடை யேகு மென்றான். [ன்

இ—ள்: கொன் நெடும் கோயில் ஊடு கொடு புகுந்து உரிமை கூரத் தன் அருகு இருத்தி - பிரக்கச்சந்தரும் மற்றோர் நெடிய அந்தரங்க மாளிகையின்கண் உடனழைத்துக் கொடுசென் றுரிமைமிகத் தன்பக்கத் திருத்தி,—மேன்மை தக்க நல் கலைகள் நல்கி - மாட்சிமைபொருந்திய நல்ல வஸ்திரங்களைத் தரித்துக்கொள்ளுமென்று கொடுத்து,—பொன் மணிக்கலன்கள் யாவும் புனையும் என்று அளித்து-வேண்டும் பொன்னாபரணம் இரத்தினாபரணங்களையெல்லாம் அணிந்துகொள்ளுமென்று கொடுத்து,—முன்போல் மன் உள கருமம் கூறி மனை இடை ஏகும் என்றான் - முன்னரேபோல இராசதருமங்களைக் குறித்துப் பேசி இனி நீர் நும்மில் லின்கட் செல்லுமென்று பாண்டியன் கூறினான். எ.-று.

புனையுமென்றென்பது மேலுங் கூட்டப்பட்டது. ஒருவர்க்கொன் றுபகரிக்குமிடத்தும் அந்தரங்க சூழ்ச்சிகளைக் குறித்துப் பேசுமிடத்தும் அதற்கு வேண்டப்படு மவருடன் மற்றையர் பிரவேசித்தற்கரிய இரகசிய தானத்தை அடையவேண்டுதல் அரசர்க்கு நீதிநூற்றுணிபாகலின், அங்ஙனமே செய்தானென்பார் கொன்னெடுங்கோயிலூடுகொடுபுகுந்தென்றும், தன்காடின்னிய பத்திரிகையாற் பங்கமுற்ற பழைய நட்புரிமைகளெல்லாம் முன்போல வளருமாறு தன்னோடு சமமாகவே யிருத்திப் பீதாம்பரங்களையும் உயர்ந்த ஆபரணங்களையுந் தன்கண்ணெதிரே இப்பொழு தணியுமென்று ஒவ்வொன்றாகக் கொடுத்தானென்பார் உரிமை கூரத்தன்னருகிருத்தி மேன்மைதக்க நற்கலைகணல்கிப் பொன்மணிக்கலன்கள் புனையுமென் றளித்தென்றும், ஒருமகற்கு ஆபாதசூடபரியந்தம் வேண்டப்படும் வஸ்திராபரணங்களெல்லா மென்பார் யாவுமென்றும், முன்போலவே தம்மை அரசன் விசுவசித்தனனென் றடிகள் துணியும்வகை அந்தரங்க வார்த்தைகளைப் பேசினானென்பார் முன்போன் மன்னுள கருமங்கூறி என்றும், பராமுகமின்றித் தானே விடைகொடுத்தனுப்பினானென்பார் மனையிடையேகுமென்றானென்றுங் கூறினார். கடினசம்பந்தம் காடின்னியமென்க. (ககo)

தம்பெரு மனையிற் சென்று தாபதர் வைகப் பின்னர்
நம்பரிச் சமூக மெய்து நாளிரண் டென்னு முன்னர்
வெம்படைச் சுற்ற நீங்கி யிருந்துழி விரிந்த நேமி
யம்புவிக் கரசன் றன்மு னமைச்சரி லொருவன் சென்று.

இ—ள்: தாபதர் தம் பெரு மனையிற் சென்று வைக-சைவமுனிவராகிய திருவாதவூரடிகள் தந்திருமாளிகையின்கட் சென்று தங்க,—பின்னர்-அதன்பின்னர்,—நம் பரிச் சமூகம் எய்தும் நாள் இரண்டு என்னும் முன்னர் - நமது குதிரைக்கூட்டம் வருமென் றவ்வடிகள் அரசனுக்கு

வரையறுத்துக் கூறிய தினத்துக்கு இன்னுமிரண்டு தினங்களுள வென்று சொல்லப்படுவதன்முன்னர்,—விரிந்த நேமி அம் புவிக்கு அரசன் வெம் படைச் சுற்றம் நீங்கி இருந்துழி - பரந்த சமுத்திரஞ்சூழ்ந்த அழகிய பூமிக் கரசனாகிய பாண்டியன் வெவ்விய படைஞராகிய தன்பரிவாரத்தைத் தவி ர்ந்து ஏகாந்தஸ்தானத்தில் இருக்கும்பொழுது,—அமைச்சரில் ஒருவன் முன் சென்று-மந்திரிகளுள் ஒருவன் அவ்வரசனுக் கெதிர்சென்று. எ-று.

* நம்மென்பது உளப்பாட்டுத் தன்மைப்பன்மைப் பெயர். எய்துநாள் எய்துமென்ற நாளென வருவித்துமுடிக்க. நாளுக்கென நான்காவது விரிக்க. அந்நாளென்பது இரண்டுநாளெனப் பின்னுங் கூட்டப்பட்டது. உளவென்னும் பயனிலை அவாய்நிலையான் வந்தது. நாளிரண்டென்னு முன்னரெனவே மூன்றாநாளிலென்பது பெற்றாம். ஈண்டு நாளென்றது ஆவணிமூல நக்ஷத்திரதினத்தை. இருந்த என்னும் பெயரெச்சவீறு விகாரமாயிற்று. ஏகாந்தஸ்தானம் - தனியிடம். அம்மந்திரி தம்முதன்மந் திரி ஒரு சிறிதுமறியாதபிரகாரம் தான் இதனை அரசனைத் தனியிடத்துச் சென்று கண்டறிவிக்க எண்ணினனென்பார் அரசன் வெம்படைச்சுற்ற நீங்கியிருந்துழி யமைச்சரிலொருவன் சென்றெனன்றார். இனி, நம்பரிச்ச மூகம் என்பதனை நம்பு அரிச்சமூகம் எனக் கண்ணழித்து, விரும்பத்தகுங் குதிரைக்கூட்டமெனப் பொருள்கோடலு மொன்று. இப்பொருட்கு நம்பு - விருப்பம். அரி - குதிரை. இனி நன்பரிச்சமூகமென்பது பாட மாயின், மகரத்துக்கு னகரம் இனவெதுகையாய் வந்ததென்று கொள்க; "வருக்கநெடிலினம் வந்தாலெதுகையுமோனையுமென், றொருக்கப்பெய ரானுரைக்கப்படும்" என்பதோத்தாகலின். அது "அத்தமும் வாழ்வுமக த்துமட்டேவிழியம்பொழுக, மெத்தியமாதரும் வீடுமட்டேவிம்மிவிம்மி யிரு, கைத்தலமேல்வைத்தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே, பற்றித்தொடரு மிருவினைப்புண்ணியபாவமுமே" என்பதனுள்ளுங் காண்க. இனி மூத லடிமுதலைத் தன்பெருமனையெனப் பாடங்கொள்வாருமுளர். அது முன் வரும் தாபதர் என்பதனோடு நிரேதுவான்முரணி; ஒருமைப்பன்மைமயக் கம்பெறுதன் முதலிய குற்றமுறுதலின், அது இலக்கணநுட்பங் கூரா தார் பாடமென விடுக்க. (கககு)

போற்றியெம் பொருநை நாட போற்றியென் றிறைஞ்சிக் கூறு
மாற்றமுண் டொன்று நின்பேர் புனைந்துள வரிசை பெற்றோர்
சாற்றருந் துரகங் கொள்ள நேரியன் றலத்திற் சார்ந்து
நீற்றின னடியார் கையி னின்பொருள் யாவு மீந்தார்.

இ—ள்: எம் பொருநை நாட போற்றி போற்றி என்று இறை ஞ்சி - தாமிரபர்ணிநதி பிரவாகிக்கும் நாட்டையுடைய எமதரசனே பாது காக்கப்படுக பாதுகாக்கப்படுக வென்று வணங்கி,—கூறும்மாற்றம் ஒன்று உண்டு-இங்ஙனந் தமியேன் விண்ணப்பஞ் செயத் தகும் வார்த்தையொன்

றுள்ளது. அதுதான் யாதெனின்,—நின் பேர் புனைந்துள வரிசை பெற்றோர் - தென்னவன் பிரமராயனென்னு நின் சிறப்புப்பெயர் புனையப் பெற்ற மதிப்பையுடைய முதன்மந்திரியானவர்,—சாற்றரும் துரகம் கொள்ள நேரியன் தலத்திற் சார்ந்து - சொல்லுதற்கரிய குதிரைகளைக் கொள்ளும்பொருட்டுச் சோழதேசத்தையடைந்து,—நீற்றினன் அடியார் கையில் நின் பொருள் யாவும் ஈந்தார் - விபூதியையணிந்த சிவபெருமானுடைய அடியார்கள் கையிலே உன்றிரவியங்களையெல்லாங் கொடுத்தார். எ-று.

போற்றி ஈண்டும் பரிகாரம். திரவியங் கைகடந்தமையும் குதிரை வாராமையுமாகிய இரண்டிற்கும் பரிகாரமாக ஈண்டும் இருகாற்போற்றியென்றானென்க. இனி, இவ்விரகசியத்தை யான் நினக்கு வெளிவரச் செய்தமைபற்றி அச்சிரேட்டமந்திரியால் எனக்கு யாதாயினுந்தீங்கு சம்பவிக்குமாயின், அதனை நீயே நேர்நின்று நீக்கி என்னைப் பாதுகாக்கவென்னுங்கருத்தையுட்கொண்டு அதற்குப்பரிகாரமாகப் போற்றியெம்பொருளை நாடபோற்றியென் றிறைஞ்சினானெனக் கோடலுமொன்று. இப்பொருட்குப் போற்றிய என்னும் வியங்கோள் ஈறுகுறைந்து போற்றி என நின்றதாகவுரைக்க. அது நினக்குப்பெரிதும்பயன்படும் வார்த்தையென்பான் கூறுமாற்றமொன்றுண்டென விதந்து கூறினானென்க. (ககஉ)

நின்பெருந் தூத ரேகி யெழுதுநின் னோலை காட்டும்
பின்புவந் துனது சீற்ற மொழித்துயிர் பிழைக்க வெண்ணி
யன்பினர் போல நின்முன் குறுகி யாவணி மூலத்தி
னன்பரித் திரளிங் கெய்து நானுனக் களிப்ப னென்றார்.

இ—ள்: நின் பெரும் தூதர் ஏகி எழுதும் நின் ஓலை காட்டும் பின்பு-நின் விசேடதூதுவர் சென்று நீயெழுதிய உன்றிருமுகத்தைக்காட்டிய பின்னர் (அச்சங்கொண்டு),—வந்து உனது சீற்றம் ஒழித்து உயிர்பிழைக்க எண்ணி - இங்கேவந்து உன்வெகுளியைத் தணித்துத் தாமுயிருய்யக்கருதி,—அன்பினர் போல நின் முன் குறுகி - நின்மாட்டன்புடையவர்போல நடித்து நினக்கெதிர்வந்து,—ஆவணி மூலத்தின் நன் பரித் திரள் இங்கு எய்தும் - ஆவணிமாசத்து மூலநக்ஷத்திரதினத்திலே நல்ல குதிரைக்கூட்டங்கள் இங்கேவரும்,—நான் உனக்கு அளிப்பன் என்றார் - நானே யுனக்கவற்றைத் தருவேனென் றுறுதிகூறினார். எ-று.

ஈண்டுத் தூதுவருக்கு விசேடம் கடுநடையினையுடையராதல். (ககங)

மற்றவர் மொழிந்த வெல்லாம் பொய்யுரை மன்ன வென்னச்
சொற்றமிழ் வைகை நாடன் றாதரைச் சுழித்து நோக்கி
யற்றமில் சுருதி வல்லா ரருட்பெருந் துறையி லெய்தி
யுற்றவெம் பரிக ளுண்டே லொல்லைவந் துரைமி னென்றான்.

இ—ள்: மன்ன அவர் மொழிந்த எல்லாம் பொய் உரை என்ன - அரசனே அவ்வமைச்சர் இங்ஙனங் கூறியவைகளெல்லாம் பொய்வார்த்தையென் றம்மந்திரி விண்ணப்பஞ்செய்ய,—சொல் தமிழ் வைகை நாடன் தூதரைச் சுழித்து நோக்கி - மதுரை முச்சங்கத்தாசிரியர்களாலும் ஆராய்ந்து வழுஉக்களை நீக்கஞ்செய்துகொள்ளப்பட்ட செந்தமிழ்மொழியோடு வைகைநதி பெருகுந் தென்னாட்டையுடைய பாண்டியன் அதுகேட்டுச் சமீபத்தில் நிற்குந் தூதுவரை வெகுண்டு நோக்கி,—அற்றம் இல் சுருதி வல்லார் அருள் பெருந் துறையில் எய்தி - திருவாணதீக்ஷைபெற்றுச் சிவாகமங்களைப் போதப்பிரகாரநெறியானே குருமுகமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மகான்களுக்கு மறைப்பற்ற வேதங்களிலே மகா பாண்டித்தியத்தையுடைய பெரியோர்கள் வசிக்குந் திருப்பெருந்துறையின் நீவிர்போய்,—உற்ற வெம் பரிகள் உண்டேல் ஒல்லை வந்து உரைமின் என்றான் - சமுத்திரதீரத்தினின் றங் கொடுவரப்பட்ட வேகத்தையுடைய குதிரைகளுளவாயின் விரைவாகவந்தெங் கெமக்கறிவியுங்களென்று பணித்தான். எ-று.

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நால்வகைச் சொற்களையுடைய தமிழென்றுமாம். போதப்பிரகாரம் அறியும்வகை. அது உத்தேசம், இலக்கணம், பரீக்ஷை என மூவகைப்படும். இவற்றின் விரிவைத்தர்க்கநூல்களுட் காண்க. திருவாணதீக்ஷை பெற்றுச் சிவாகமங்களை ஓதியுணர்ந்தவர்களுக்கல்லது வேதத்தின் ஞானகாண்டத் துண்மைப்பொருள் ஒருவாற்றானும் விளங்காதென்பது "திருவாண தீக்ஷை செயப்பெற்றுச் சிவாகமத்தை ஓதியுணர்ந்தார்க்கன்றி வேதாந்தத் துண்மைப்பொருள் ஒருவாற்றானும் விளங்குதல் கூடாமையானும்" என நங்குருமூர்த்திகள் சைவசமயநெறியுரையிற் கூறியருளியவாற்றானுமறிக. அற்றம் - மறைவு. இனி அற்றமில்சுருதி என்பதற்கு மறவியையுடைய பசுக்களாற் செய்யப்பட்ட ஏனைநூல்கள்போலன்றி, அம்மறவியின்றிப் பதியாற் செயப்பட்ட சுருதி என்றுமாம். இப்பொருட்கு அற்றம் - சோர்வு. (கக௬)

அருந்திறற் றூத ரேகி யத்தினங் கடிது மீண்டு
வருந்திமுன் புகுந்து மன்னர் மன்னனை வணங்கி நின்று
பெருந்துறை யென்னு மூரும் பிறவுள பதியுந் தேடிக்
கருந்தடங் களிற்று வேந்த கண்டிலம் பரிக ளென்றார்.

இ—ள்: அரும் திறல் தூதர் ஏகி அத்தினம் கடிது வருந்தி மீண்டு - அரிய வேகத்தையுடைய தூதுவர் உடனே திருப்பெருந்துறைக்குப் போய் அத்தினமே விரைவாக மனவருத்தத்தோடு திரும்பிவந்து,—மன்னர் மன்னனை முன்புகுந்து வணங்கி - மகாராசாவாகிய பாண்டியனை அபிமுகத்திற் புகுந்து வணங்கிநின்று,—கரும் தடம் களிற்று வேந்த -

கரியமலைபோலும் யானைப்படையையுடைய அரசனே.—பெருந்துறை என்னும் ஊரும் பிற உள பதியும் தேடிப் பரி கண்டிலம் என்றார் - திருப்பெருந்துறையென்னு மூரினு மடுத்த பிறவூர்களினுந் தேடியுங் நாங்குதிரைகளைக் கண்டிலமென்று விண்ணப்பஞ்செய்தார். எ-று.

திறல் ஆகுபெயர். தடம் - மலை; பெருமையுமாம். அபிமுகம் - எதிர்முகம். திருப்பெருந்துறையினும் பிறபதிகளினுந் தேடியுங் குதிரைகளின்மையின் அதுபற்றி இனித்திருவாதவூரடிகளுக் கரசனால் யாதுசம்பவிக்குமோவெனத் தூதுவர் மீண்டு செல்லும்போது மனவருத்தத்தோடு சென்றாரென்பார் வருந்திமீண்டென்றார். போனவுடன் திரும்பி வந்தமைபற்றிச் சரீரம் வருந்திமீண்டென்றுமாம். (ககரு)

பாங்குநின் றின்ன வாறு பகர்தலும் வெகுட்சி யெய்தி
யீங்குநங் கருமஞ் செய்வ னென்றிடர் செய்வான் றன்னைத்
தாங்கருந் துயரஞ் செய்து தகைந்துநந் தனத்தை யெல்லாம்
வாங்குமின் றண்ட லாள ரென்றிகன் மன்னன் சொன்னான்.

இ—ள்: பாங்கு நின்று இன்னவாறு பகர்தலும் - தூதுவர்கள் ஒருமருங்கொதுங்கிநின் றிந்தப்பிரகாரம் விண்ணப்பஞ்செய்தலும்.—இகல் மன்னன் வெகுட்சி எய்தி - மாறுபாட்டையுடைய அரசன் கோபங்கொண்டு.—தண்டலாளர் - தண்டத்தலைவர்களே.—ஈங்கு நம் கருமம் செய்வன் என்று இடர் செய்வான் தன்னை - இங்கே நங்காரியங்களை அநுகூலஞ்செய்வேனென் றுடம்பட்டுப் பிரதிகூலஞ்செய்து நமக்குத் துன்பம் விளைக்குந் திருவாதபுரேசனை,—தாங்கு அரும் தண்டம் செய்து தகைந்து நம் தனத்தை எல்லாம் வாங்குமின் என்று சொன்னான் - சகித்தற்கரிய கொடுந் தண்டனைகளைச் செய்துஞ் சிறைசெய்தும் நந்திரவியங்களையெல்லாம் வாங்குங்களென் றாஞ்ஞாபித்தான். எ-று.

தூதுவர் நாமிதனை விண்ணப்பஞ்செய்யுங்கால் நமக்கும் யாதுசம்பவிக்குமோவென்னு மச்சத்தான் எதிர்முகமாகநில்லாதொருமருங்கொதுங்கிநின்று விண்ணப்பஞ்செய்தாரென்பார் பாங்குநின்றின்னவாறுபகர்தலுமென்றும், நந்திரவியாபகாரக்குற்றத்தின்மேலும் நங்காரியத்தைச்செய்வேனென் றுடம்பட்டுப் பின்பு செய்யாமை ஒப்பிப்பணி செய்யாமையென்னுங் குற்றமாகலின் இவ்விருகுற்றங்கட்குந் தகப் பெருங்கொடுந் தண்டனை செய்கவென் றரசன் கூறினனென்பார் ஈங்குநங்கருமஞ் செய்வனென்றிடர் செய்வான் றன்னைத் தாங்கருந்தண்டஞ்செய்துதகைந்தென்றும் கூறினார். இனித் தாழ்ந்தோ ருயர்ந்தோர்க் கொன்றனை விண்ணப்பஞ்செய்யுங்கால் வஸ்திரத்தை யொதுக்கி வாய்புதைத்தொல்கிநின்று, அவரை உயர்த்தியுந் தம்மைத் தாழ்த்தியும் மெல்ல விண்ணப்பஞ்செய்தல் வேண்டுமாகலிற் றூதுவரங்ஙனமே விண்ணப்பஞ்செய்தாரென்பது விளக்குவார் பாங்குநின்றின்னவாறுபகர்தலு மென்றாரெனினுமமையும். இப்பொருட்குப் பாங்கென்பது உரிமை. (ககசு)

மன்பெருந் தண்ட லாளர் மறையவர் குலத்தின் மிக்கார்
முன்புநின் றினைய சொல்வார் முனிவுடை முகத்தராகி
நன்பரித் தொகுதி கொள்ள நயந்துமக் கந்நா ளீந்த
தன்பொரு ளெல்லாம் வாங்கச் சாற்றினன் சீற்ற மன்னன்.

இ—ள்: மன் பெருந் தண்டலாளர் மறையவர் குலத்தின் மிக்கார் முன்பு முனிவு உடை முகத்தர் ஆகி நின்று இனைய சொல்வார் - அரசனது பெரிய தண்டத்தலைவர் பிராமணகுல சிரேட்டராகிய திருவாதவூரடிகளுக்கெதிரே போய் அவ்வரசனது கோபக்குறிப்புப்பொருந்திய முகத்தையுடையவராய் நின்றிவைகளைச்சொல்வார்,—சீற்ற மன்னன் நன்பரித் தொகுதி கொள்ள நயந்து உமக்கு அந் நாள் ஈந்த தன் பொருள் எல்லாம் வாங்கச் சாற்றினன் - கோபத்தையுடைய பாண்டியராசன் நல்ல குதிரைகளைக் கொள்ளும்பொருட்டு விரும்பி உம்மிடத் தன்றுதந்த தன்றிரவியங்களையெல்லாம் வலாற்காரஞ்செய்து வாங்கும்படி இன்றெமக்கு ஆஞ்ஞாபித்தனன். எ-று.

உம்மிடத்து நாங்கொண்ட சீற்றம் அரசன்கொண்ட சீற்றமல்லது நமதுசீற்றமன்றென்பார் சீற்றமன்னனென விசேடித்துக்கூறினர். அக்கருத்தை வருஞ்செய்யுளானு முய்த்துணர்க. (ககஎ)

மற்றிதன் பயன்யா தென்னின் மன்னவன் விடுப்ப வென்றி
யுற்றவன் றூதர் வல்லை யொண்பெருந் துறையி னெய்திக்
கொற்றவெம் பரிகள் காணார் மீண்டனர் கோவு நம்பாற்
பற்றிய நேசம் விட்டான் பாரினி யாள வொட்டான்.

இ—ள்: இதன் பயன் யாது என்னின் - அரசனிங்ஙனங்கூறிய கருத் தென்னையெனின்,—மன்னவன் விடுப்ப - அவ்வரசன் ஐயுற்றனுப்ப,—வென்றி உற்ற வன் தூதர் வல்லை ஒண்பெருந்துறையின் எய்திக் கொற்ற வெம்பரிகள் காணார் மீண்டனர் - வெற்றியையுடைய வலிய தூதுவர்கள் விரைவாகத் திருப்பெருந்துறையிற்போய் வலிமைபொருந்திய வெவ்விய குதிரைகளைக் காணாதவர்களாய்த் திரும்பிவந்து கூறினர்,—கோவும் நம்பால் பற்றிய நேசம் விட்டான் - அரசனும் உம்மிடத்திறுகப்பற்றிய தன்னன்பை நீக்கிவிட்டான்,—இனிப் பார் ஆள ஒட்டான் - ஆகலின், முதன்மந்திரியாய் உத்தியோகநிலையோடு இனி நீர் பூமியை அரசாள ஒருபோதும் விடமாட்டான். எ-று. (ககஅ)

தனமினித் தருதல் வேண்டு மென்றுவன் றண்ட லாளர்
சினமுடன் புகல வாளா விருத்தலுந் தீமை கூரு
நினைவுட னமைச்சர் வாழ்வி னீக்கிமெய் வாக்கின் மன்னர்த்
தனியுற வலிதிற் காவற் சாலையி லாக்கி னார்கள்.

இ—ள்: வன் தண்டலாளர் தனம் இனித் தருதல் வேண்டும் என்று சினம் உடன் புகல - வலிய தண்டத்தலைவர்கள் இனி அரசனுடைய திரவியத்தை நீர் இப்பொழுதே தரல்வேண்டுமென்று சினக்குறிப்புடன் கேட்ப,—மெய் வாக்கின் மன்னர் வாளா இருத்தலும் - உண்மைவாக்குக்கரசாகிய திருவாதவூரடிகளானவர் அதற்குப் பிரதியுத்தரம் ஒன்றும் பேசாது வாளாவிருத்தலும்,—தீமை கூரும் நினைவு உடன் அமைச்சர் வாழ்வின் நீக்கி வலிதில் தனி உறக் காவல் சாலையில் ஆக்கினர்கள் - அவர்கள் தண்டனைசெய்யுமெண்ணத்துடன் அவ்வடிகளை ஆமாத்தியவாழ்வினின்று நீக்கிப் பிடர்பிடித் துந்திக்கொடுபோய்த் தனித்திருக்கும்படி சிறைச்சாலையில் அடைத்தார்கள். எ-று.

அமைச்சர்வாழ்வு மந்திரிக்கோலம். அக்கோலத்தோடவரைத் தண்டித்தல் அரசநீதிக்கடாமையின் அமைச்சர்வாழ்வினீக்கி என்றார். அமைச்சர்க்கு மெய்வாக்கியல்பானுளதாயினும், அவர் முன்னோதிய மூலநாளிற் பரிகள் வருதல் நிச்சயமாதல்பற்றி மெய்வாக்கின் மன்னரென ஈண்டு விசேடித்தார். இவ்வியல்பினரைச் சிறைசெய்த நகாதென்பது கருத்து. மெய்வாக்குத் திருவாசகமெனினுமாம். வலிது வலாற்காரம். சிவஞானச் செல்வராகிய திருவாதவூரடிகளைப் பிடர்பிடித்துந்திக்கொடுபோய்க் காவற்சாலையி லடைத்தார்களெனக் கூற ஆசிரியர்க்கு நாவெழாமையின் வலிதிற் காவற்சாலையிலாக்கினர்களெனப் பிறிதோர் வாய்பாட்டாற் கூறினார்; "முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான்" எனப் பிறருமிங்ஙனங் கூறுதல்காண்க. மற்றிதன்பயன் யாதென்னும் முற்செய்யுள் இடைப்பிறவரலாய் வந்தமையின் அதன் முற்செய்யுளோ டிச்செய்யுளை இயைத்துப் பொருள்கொள்க. (கககூ)

சற்றுமுட் டளர்வி லாத தன்மையின் வாத வூரர்
மற்றவர் செலுத்தச் சென்று வன்சிறைச் சாலை யெய்த
நற்றவர் வருத்தங் காண நாணமுற் றொளிப்பான் போன்று[ன்.
பொற்றடந் தேரின் வெய்யோன் போய்க்குட பான்ம றைந்தா

இ—ள்: வாதவூரர் அவர் செலுத்தச் சற்றும் உள் தளர்வு இலாத தன்மையின் சென்று - திருவாதவூரடிகளானவர் அத்தண்டத்தலைவர் இங்ஙனஞ் செலுத்தாநிற்ப, அதற்குத் தாமொருசிறிதும் மனந்தளராத உதாசீனத்தன்மையோடு சென்று,—வன் சிறைச் சாலை எய்த - வலிய சிறைச்சாலையையடைய, அத்தருணத்திலே,—தடம் பொன் தேரின் வெய்யோன் - விசாலமாகிய அழகிய தேரையுடைய சூரியன்,—நல் தவர் வருத்தம் காண நாணம் உற்று ஒளிப்பான் போன்று போய்க் குடபால் மறைந்தான் - நல்லதவத்தையுடைய அவ்வடிகட்கெய்திய துன்பத்தைத் தான் காணுதற்கு வெட்கமுற்றொளிப்பவன்போலப் போய்ப் பச்சிமதிக்கின்கணுள்ள அஸ்தமயனகிரியிலே மறைந்தான். எ-று.

திருவாதவூரடிகள் இருவினையொப்புடையராகலின் அத்தண்டத்தலை வர்களது தீவினைக்குத் தாமொருசிறிதும் நாணி வருந்ாது சமபுத்திபண்ணிச் சென்றாரென்பார் சற்றுமுட்டளர்விலாததன்மையின் வாதவூரர் மற்றவர் செலுத்தச்சென்றென்றாகூறினார். உலகத்து நல்லவர்க் கோர்தாழ்வுவந்துழி அவரை அந்நிலைமைக்கட்காணுதற் கேனைப்பெரியோர் நாணித் தவிர்வாரன்றே, அதுபோலத் திருவாதவூரடிகட்கெய்திய தாழ்வைக்காண நாணி யொளிப்பவன்போலச் சூரியன் அஸ்தமயனமாயிற்றென்பது கருத்து. தன்னியல்பான்மறையுஞ் சூரியனைச் சிறைச்சாலையையடைந்த திருவாதவூரடிகளைக் காண நாணி ஒளித்ததாக ஆசிரியர் குறித்தமையின், இது தற்குறிப்பேற்றமென்னுமலங்காரமென்க. இச்சூரியனைப் பெயர்பொருளாகக் குறிக்குங்காற் பெயர்பொருட் டற்குறிப்பேற்றமும், அல்பொருளாகக் குறிக்குங்கால் அல்பொருட் டற்குறிப்பேற்றமுமாம். உதாசீனம் விருப்பு வெறுப்பின்மை. (கஉ௦)

கள்ளுலா மிதழி மாலை கவின்பெற முடித்த வேணி
வள்ளலா ரேவச் சென்று வழுதிமேல் வெகுட்சி கொண்டு
வெள்ளைவான் பிறைப்பற் றோன்ற விழுங்கவங் காந்த பேயின்
கொள்ளிவா யனைய வண்ணங் கொண்டது செக்கர் வானம்.

இ—ள்: செக்கர் வானம் - சூரியாஸ்தமயனகாலத்திலே தோன்றிய செவ்வானம்,—கள் உலாம் இதழி மாலை கவின் பெற முடித்த வேணி வள்ளலார் வழுதி மேல் ஏவ - தேனொழுகுங் கொன்றைமாலிகையை அழகுபெறமுடித்த சடையையுங் கொடையையுமுடைய சோமசுந்தரக்கடவுள் தம்மெய்யன்பராகிய திருவாதவூரடிகளைச் சிறைசெய்து வருத்தும் பாண்டியனைக் கொல்லும்படி அவன்மேல்விடுக்க,—சென்று வெகுட்சி எய்தி - அவ்வேவலின்வழிச்சென் றரசன்மேற் கோபங்கொண்டு,—வெள்ளை வான் பிறைப் பல் தோன்ற விழுங்க அங்காந்த பேயின் கொள்ளி வாய் அனைய வண்ணங் கொண்டது - வெண்மையாகிய பெரிய பிறையென்னும் வக்கிரதந்தம் வெளியேதோன்ற அவ்வரசனை விழுங்கும்படி திறந்த கொள்ளிவாய்ப்பேயினது வாய்போலும் செந்நிறத்தையுடையது எ-று.

உலாவுமென்னுஞ் செய்யுமெனெச்சவீற்றுயிர் மெய்கெட்டது. சென்றென்னுமெச்சம் அங்காந்த என்பதனோடும், கொண்டென்னுமெச்சம் விழுங்கவென்பதனோடும் முடிந்தன. (கஉக)

தெண்டிரை யுலகி னல்ல திறத்தினர்க் குற்ற தீங்கு
கண்டுணர் சிறியோர் போல நகைத்தன கவின்கொண் முல்லை
யொண்டமிழ் வாத வூரர்க் குற்றதை யுணர்ந்து துன்பங்
கொண்டவ ரிதயம் போலக் குவிந்தன கமல மெல்லாம்.

இ—ள்: கவின் கொள் முல்லை - அம்மாலைக்காலத்தின்கண் அழகையுடைய முல்லைக்கொடிகளானவை.—தெள் திரை உலகின் நல்ல திறத்தினர்க்கு உற்ற தீங்கு கண்டு உணர் சிறியோர் போல நகைத்தன - சமுத்திரஞ்சூழ்ந்த இந்நிலவுலகத்துள்ள நன்மக்கட்கெய்திய தீவினையை நேரே கண்டறிந்து நகைத்து மகிழுங் கீழ்மக்களைப்போல அரும்புகள் விரிந்து விளங்கின.—கமலம் எல்லாம் - தாமரைமலர்களெல்லாம்.—ஒள் தமிழ் வாதவூரர்க்கு உற்றதை உணர்ந்து துன்பங்கொண்டவர் இதயம் போலக் குவிந்தன - செந்தமிழ்க் கொருவராகிய திருவாதவூரடிகளுக்கு எய்திய சிறைத்துன்பத்தைக் கேட்டறிந்து வருந்துகின்ற பெரியோர்களது வாடுகின்ற இதயபங்கயங்களைப்போலக் கூம்பின. எ-று.

தெண்டிரை வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. தெள்ளல் - கொழித்தல். தெள்ளுதல்வினைக்குச் சங்கு ஒக்கோலை முதலியவற்றுள் ஏற்குஞ் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. இக்கருத்தைத் "திரைகொழித்திடுஞ்சிந்துவின்சூழல்" என்றற்றொடக்கத்தனவாகப் பரந்துவரும் ஆன்றோரிலக்கியங்களானுமறிக. இனித் தெளிவாகிய திரைகளையுடைய சமுத்திரமெனப் பொருள்கொண்டு, பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையென்பார், திரைக்கு அத்தெளிவுடைமை யாண்டுஞ் செல்லாமையின், அவ்வியாத்திக்குற்றந்தங்குமாகலின், அது போலியுரையென்றொழிக. நிகழ்ச்சியறிபொறிகளுட் கண்காதிரண்டுமேசிறந்தமையிற் சிறியோரைக்கண்டுணர் சிறியோரென விசேடிக்கவே, பெரியோர்க்கு உணர்தல் கேட்டுணர்தலென்பது பாரிசேடத்தாற்பெற்றாம். நேரேகண்டறிந்தும் நகுதலிற்சிறியோரது சிறுமையும், பிறர்சொல்லக் கேட்டறிந்தும் பரிதலிற் பெரியோரது பெருமையும் அறியப்படுமென்பார் இங்ஙனம் விதந்துகூறினார். பிறர்கேட்டிற் கிரங்குதலும் இரங்காமையுமே முறையே நல்லோர் அல்லோர்க் கிலக்கணமாதலமையுமென்பது கருத்தென்க. சாதுக்கடம் பருவரல்கண்டுழிச் சிறியோர் மகிழுதலும், பெரியோர் துன்பங்கொள்ளுதலுமே அவ்வவர்க்குக் கூடு மியற்கையாகலின், இது கூடுமியற்கை தெரிதரவந்த மறுபொருளுவமாலங்காரமென்க. (கஉஉ)

தென்னவன் வைத்த காவற் சிறையினி லுறையுந் தெய்வ
மன்னவ ரொருவர் காணி னுணமுற் றயர்வா ரென்றே [ற்
பின்னல்கொண் மனத்தாள் போல விருட்கரங் கொண்டு கூட
பொன்னக ருள்ளார் கண்கள் புதைத்தனள் கங்குன் மங்கை.

இ—ள்: கங்குல் மங்கை - இராக்காலமாகிய பெண்ணானவள்,—தென்னவன் வைத்த காவல் சிறையினில் உறையும் தெய்வம் அன்னவர் - பாண்டியனால் வைக்கப்பட்ட காவலையுடைய சிறையின்கண்வைகும் ஒரு தெய்வத்தை யொத்தவராகிய திருவாதவூரடிகள்,—ஒருவர் காணின் நா

ணம் உற்று அயர்வார் என்று இன்னல் சொள் மனத்தாள்போல - ஒருவர் தம்மைக் காணப்பெறின் வெட்கமுற்று வருந்துவரென்று, அதற்குத்தான் மனத்திலே துன்பங்கொள்பவள்போல,—இருள்கரம் கொண்டு கூடல் பொன் நகர் உள்ளார் கண்கள் புதைத்தனள் - இருளாகிய கைகளைக்கொண்டு நான்மாடக்கூடலாகிய அழகிய மதுராநகரத்தின் கணுள்ளவர்களது கண்களைப் பொத்தினள். எ-று.

‘தைவதம் என்னும் வடமொழி தெய்வம் என்றாயிற்று. முன், திவ்வியமென்னும் வடமொழி தெய்வமென்றாயதென்றது பிறர்மதம். வடமொழி வழக்குப்பற்றி இராக்காலம் பெண்ணாக உருவகிக்கப்பட்டது. மாலைக்காலத்து மயங்கிருணீங்கி அந்தகாரமாயிற்றென்பது கருத்து. தன்னியல்பிற் றங்குமிருளை மாணிக்கவாசகசுவாமிகளைக் காணாதிருக்குமாறு மதுரைமாநகரத்துள்ளாரது கண்களைப் புதைத்ததாகக் குறித்தலால் இதுவுந் தற்குறிப்பேற்றமென்னு மலங்காரமென்க. (கஉ௩)

மன்பகை துரப்ப திந்த மந்திரித் தலைவர்க் குண்டா
மென்பது முளதோ வந்தோ வென்செய்து மென்றி ரங்கி
யன்பரை யகன்று நெஞ்சா லழலெழ வுயிர்த்து மாழ்குந்
துன்புடை மடவார் போலத் துயின்றிலர் மதுரை யுள்ளார்.

இ—ள்: மதுரை உள்ளார் - மதுரைமாநகரவாசிகளாகிய நன்மக்களெல்லாம்,—இந்த மந்திரித் தலைவர்க்கு மன் பகை துரப்பது உண்டாம் என்பதும் உளதோ - சூழ்ச்சித்தலைவராகிய இந்தத் திருவாதவூரடிகளுக்கு அரசனது பகைமையைநீக்கிக் கோடலுண்டென்பதும் இனியுளதோ,—அந்தோ என் செய்தும் என்று இரங்கி - ஐயகோ இதற்கு எளிவந்த யாங்கள் யாதுசெய்வோமென்று மனமிரங்கி,—அன்பரைப் பிரிந்து அழல் எழ உயிர்த்து நெஞ்சு மாழ்கும் துன்புடை மடவார் போல-தங்காதலரைப் பரத்தையிற் பிரிவுமுதலிய பிரிவின்கட் பிரிய விட்டிழந்து செய்வதொன்றுமறியாது அக்கினிப்பொறிசிதறத் தம்முள் நெட்டுயிர்ப்பெறிந்து மனமறுகுந் துன்பத்தையுடைய மகளிரைப்போல,—துயின்றிலர் - நித்திரை செய்யாதவராயினர். எ-று.

என்பதென்பது ஈண்டெழுவாயுருபின் பொருள்படநின்றது; எழுத்தென்ப தாவி என்புழிப்போல. ஓகாரம் எதிர்மறை. ஆல் அசை; ஈண்டு உருபென்றல் பொருந்தாது. அந்தோ என்பது சிங்களச்சொல்; இதனை “ஹந்த” என்னும் வடசொல்லின் சிதைவென்பர் ஒருசாரார். அரசனறியாது மனமாழ்குதலிற்றலைவரறியாது மனமாழ்கும் மகளிரையுவமையாக்கி நெஞ்சுமாழ்குமென்றார். எனவே, திருவாதவூரடிகள் அனைவர்க்கும் கண்ணுமிடுகவசமும்போல் உயிர்த்துணையாய் இருந்தாரென்பது பெறப்பட்டது. தம்மின் மிக்காரிருவரையுஞ் சமாதானஞ்செய்துகோடல் தமக்கொருவாற்

ரூனுங் கூடாமையின் வேறு செய்வதொன்றுமின்றி மனமிரங்கினரென்பது விளக்கிய அந்தோவென் செய்துமென்றிரங்கி என்றும், எல்லாரும் இங்ஙனமே என்பார் உள்ளாரென்றுங்கூறினர். (கஉ௪)

செம்மனப் புனிதர்க் குண்டாந் தீங்குதங் கிழமை யாலே
யைம்முகக் கடவு ளீன்ற வறுமுகற் குரைக்கு மாபோல்
விம்முசெஞ் சூட்டு முட்டாள் வியன்சிறைச் சேவ லெல்லாந்
தம்மனை யிடங்க டோறுந் தழங்கின புலரிக் காலை.

இ—ள்: புலரிக்காலை - அவ்விரவு விடியற்காலையில்.—விம்முசெம் சூட்டு முள் தாள் வியன் சிறைச் சேவல் எல்லாம் - விம்முகின்ற சிவந்த சூட்டினையும் முட்பொருந்திய கால்களையும் பெரிய சிறகுகளையுமுடைய சேவற்கோழிகளெல்லாம்.—செம் மனப் புனிதர்க்கு உண்டாம் தீங்கு - செவ்விய சித்தசுத்தியையுடைய திருவாதவூரடிகளுக் குளதாகிய சிறைத்துன்பத்தை.—ஐம்முகக் கடவுள் ஈன்ற அறுமுகற்குத் தம் கிழமையால் உரைக்குமா போல் - ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதமென்னு மைந்துதிருமுகங்களையுடைய சிவபெருமான் றந்தருளிய ஆறுதிருமுகங்களையடைய சுப்பிரமணியக்கடவுட்குத் தம்முரிமையினாலே விண்ணப்பஞ்செய்யுமாறுபோல.—தம் மனை இடங்கள் தோறும் தழங்கின - தமது வாசஸ்தானமாகிய இல்லங்கடோறுங் கூவின. எ-று.

உரைக்குமாறு உரைக்குமா எனச் செய்யுண்முடிபெய்திநின்றது. அவ்வைம்முகங்களோ டதோமுகமுஞ்சேர்ந் தாறுமுகமாயினவென்க. அது "ஐந்துமுகத்தோடதோமுகமுந்தந்து, திருமுகங்களாறுகி" என்பதனுனுமறிக. விம்முதல் இறுகிப்பொலிதல். இயற்கையானே ஐம்புலன்வழியன்றி விவேகத்தின்வழிச் செல்லும் நன்மனமென்பார் செம்மனமென்றும், தலைமைபற்றியவழக்காற் சித்தசுத்திகூறவே எனைத் தேகசுத்தி கூறுதேயமைதலின் அதனை வேறுவைத்தெண்ணுது மனப்புனிதரென்றும், சிவனடியாரது தீங்கைச் சிவகுமாரரதடிமை அவருக்கு விண்ணப்பஞ்செய்தற் குரிமையுடைமையிற் றங்கிழமையால் என்றுங் கூறினர். இதுவுந் தற்குறிப்பேற்றமென்னு மலங்காரம். (கஉ௫)

சிற்பர முணர்ந்து ஞானச் செந்தமி ழோது நீதிப் [போல
பொற்பினை யுடையோ ரின்னல் பொறுது சென் றுரைப்ப
விற்பொலி சடிலன் சூல வேலவ னுலவ வாயி
லற்புதன் கோயின் முன்றி லார்த்தன சங்க மெங்கும்.

இ—ள்: சிற்பரம் உணர்ந்து-சுக்குமசித்தாகிய பரமசிவத்தை அநுபூதியிற் கண்டுணர்ந்து,—ஞானச் செந் தமிழ் ஓதும் நீதிப் பொற்பினை உடையோர் இன்னல் பொறுது சென்று உரைப்ப போல - அவ்வனுபவஞானமே பொருளாகச் செந்தமிழ்மொழியினாலே திருவாசகத்தைப் பாடியருளு முறைமையினையே தமக் கணிகலமாகவுடைய திருவாதவூரடிக

னது துன்பத்தைக் கண்டு சகிக்கலாற்றாது சமீபத்திற் சென்று விண்ணப் பஞ்செய்வனபோல.—வில் பொலி சடிலன் சூல வேலவன் ஆலவாயில் அற்புதன் கோயில் முன்றில் எங்கும் - செவ்வொளியாற் பொலிகின்ற சடையையுடையவரும் சூலப்படையையுடையவரும் திருவாலவாயில் வீற் றிருக்கின்ற ஞானமே திருமேனியாக வுடையவருமாகிய சோமசுந்தரக் கடவுளது திருக்கோயிற் றிருமுன்றிலெங்கணும்.—சங்கம் ஆர்த்தன - சங் குகள் சத்தித்தன. எ-று.

பொற்பினையென்னு மிரண்டனுருபைப் பிரித்து நீதியென்பதனோடு கூட்டி ஆக்கம் வருவித்துரைக்க. பொற்பு ஆகுபெயர். வேல் படைக் கலப்பொது. ஆலவாய் - மதுரை. முன்றில்-முற்றம்; என்றது சந்நிதியை. சங்கம் திருப்பள்ளியெழுச்சிக்கூதும் சங்கம். அது பிரணவவடிவாகலா னும், அப்பிரணவஞ் சிவபெருமானுக் கிருப்பிடமாகலானும், அச்சிவபெரு மான் திருவாதவூரடிகளுக் கதிதெய்வமாகலானும், அத்திருவாதவூரடிகள் பிரணவத்துக் குரியராகலானும், தம்முள் இயைபுடைமையின், அவ்வடிக ளதின்னலைப் பொருதுசென் றுரைப்ப போலவென்றார். வைகறையாயிற் றென்பது இவ்விருசெய்யுட்குங் கருத்தென்க. (கஉசு)

எம்மிறை பரியி லேறு நாளிதோ வென்று பார்க்குஞ்
செம்மலர் மடவா ளிட்ட திலகசிந் தூரம் போல
வம்மலை மிசையே வைகி யாடகக் கிரிசூழ் போந்து
மைம்மிகு கடன்மேல் வந்து முளைத்தது வால பானு.

இ—ள்: வால பானு - பாலசூரியன்,—அம் மலை மிசையே வைகி- அவ்வஸ்தமயனகிரியினின்று நீங்கி,—ஆடகக் கிரி சூழ் போந்து - பொன் மயமாகிய மேருகிரியைச்சுற்றிச் சென்று,—மை மிகு கடல் மேல் வந்து - கருமைமிகுந்த கிழக்குச்சமுத்திரத்தின்மீது வந்து,—எம் இறை பரியில் ஏறும் நாள் இதோ என்று பார்க்கும் செம் மலர் மடவாள் - எம்முழுமுத லாகிய சிவபெருமான் குதிரையிலேறியருளும் விசேடதினமிதுவோவென் றெட்டிநோக்கும் செந்தாமரைமலராசனியாகிய மகாலக்குமி.—இட்ட சிந் தூர திலகம் போல முளைத்தது - தன்னுதலின்கணிட்ட சிந்தூரதிலதத் தைப்போல உதித்தது. எ-று.

வைகல் - கழிதல். அது, "வைகலைவைத்துணராதார்" என்னும் நாலடியாரானறிக. திலதம்-பொட்டு. வால்-இளமை. அம்மலையெனச் சுட் டிக்கூறினர் வெய்யோன்போய்க்குடபான் மறைந்தான் என மேற்கூறிய அத்தொடர்புதோன்றுதற்கென்க. சிவபெருமானுக்குக் குதிரையேற்றம் பு திதாகலின் நோக்கல்வேண்டிற்றென்க. இதனனே புதிதுநோக்குதற்கண் மகளிர்க் கவா மிக்குடைமையும், மறைந்துநின்றெட்டி நோக்குதல் அவர்க் கியற்கையென்பதும் விளக்கியதாஉமாயிற்று. இங்ஙனங்கூறிய பொருள் வகைக்கேற்ப மகாலக்குமிக் கிடம் கடலாக வைத்துரைக்க. (கஉஎ)

மண்கெழு செங்கோல் வேந்தன் வைகறை யெழுந்து நீராற்
கண்கழல் விளக்கி மூழ்கிக் கண்ணுதல் பூசை செய்து
தண்கதிர் முத்த மாலை தரித்துநற் கலன்க டாங்கி
விண்கிளர் செம்பொற் கோயின் முகப்பினில் வீற்றி ருந்தான்.

இ—ள்: மண் கெழு செம் கோல் வேந்தன் - மண்ணுலகெங்குந் தடையின்றிச் செல்லுஞ் செங்கோலையுடைய பாண்டியராசன்,—வைகறை எழுந்து - இங்ஙனஞ் சூரியனுதிக்க, அதன்முன்னமே, பிராமிமுகூர்த்தத்தின்கண் நித்திரைவிட்டெழுந்து,—நீரால் கண் கழல் விளக்கி - நீரினாலே கண் கால் முதலிய அவயவங்களைச் சுத்திசெய்து சிவத் தியானாதிகளை முடித்து.—மூழ்கிக் கண்ணுதல் பூசை செய்து - விதிப்படி ஸ்நானம்பண்ணி உதயகால சந்தியாவந்தனத்தோடு சிவபூசைமுதலிய நித்தியகருமங்களை முடித்துப் போசனஞ்செய்து,—தண் கதிர் முத்த மாலைதரித்து நல் கலன்கள் தாங்கி - தண்ணிய ஒளியையுடைய முத்துமாலைகளைத் தரித்து ஒழிந்த நல்ல ஆபரணங்களையுந் தாங்கி,—விண் கிளர் செம்பொன் கோயில் முகப்பினில் வீற்றிருந்தான் - விண்ணின்கணுயர்ந்த செம்பொன்மயமாகிய அத்தாணியின் பூர்வபாகத்து வீற்றிருந்தான் (அதுநிற்க). எ-று.

பிராமிமுகூர்த்தம் சூரியோதயத்துக்கு முன் ஐந்துநாழிகைதொடங்கிச் சூரியோதயம்வரையுமுள்ள காலம். சிவத்தியானாதிகள் சிவத்தியானம், சிவமூலமந்திரசெபம், அருட்பாக்களினாலே உச்சவிசையோடுசெய்யுந் தோத்திரமென்னு மிம்மூன்றுமாம். மண்ணுலகெங்குந் தடையின்றிச் செல்லுஞ் செங்கோலென்பார் மண்ணுலகத்திவ்வுழிச்செல்லுஞ் செங்கோலென வரைந்து கூறாது வாளா மண்கெழுசெங்கோலென்றும், ஆதலின் நெடுநிலவரசனென்பார் வேந்தனென்றும், வைகறையி னித்திரைவிட்டெழுந்தவுடன் செய்யப்படுஞ் சிவத்தியானாதிகளி னிமித்தம் ஆண்டுச் சுத்திசெய்யத்தகு மவயவம் கண்முதற் காலீறாயவற்று ளேற்பனவென்பார் ஆதியந்த அவயவமிரண்டனு ளேனை யவயவங்களை யடக்கிக் கண்கழல் என்றும், வைகறையெழுந்து நீராற்கண்கழல்விளக்கி எனக்கிளந்து கூறவே. அதனதாற்றலான், அங்ஙனமெழுந்து சுத்திசெய்வது ஆண்டொருதலையாற் செய்யவேண்டுஞ் சிவத்தியானாதிகளின் பொருட்டென்பது தானே விளங்குதலின். அச்சிவத்தியானாதிகளை விரியாது தொகுத்தும், நித்தியகருமங்களுள் விசேடகருமங்களை விதந்து கூறவே. உபலக்கணத்தான் ஏனையவுந் தழுவப்படுதலின். அவசியகருமம், சௌசம், தந்தசுத்தி என்னுமிம்மூன்றையும் ஸ்நானத்துளடக்கி மூழ்கி என்றும், சிவபூசைக்கு முன் செய்யப்படும் உதயகால சந்தியாவந்தனத்தையும் பின் செய்யப்படும் சிவாலயதரிசனம், சிவசாத்திரபாராயணம், போசனம்முதலியவைகளையும் சிவபூசையுளடக்கிக் கண்ணுதல்பூசைசெய்தென்றும், நவரத்தினங்களுண் முத்துப் பாண்டிநாட்டின்கண்ணதாகலின் அப்பாண்டிநாட்டை விசேடவுரிமையானாளும் பாண்டியனுக்கு அம்முத்துமாலை விசேடாபரணமென்பார்

அதனை ஏனையாபரணங்களினின்றும் பிரித்து முன் வேறுவைத்தெண்ணித் தண்கதிர்முத்தமாலை தரித்தென்றுங் கூறினர். இன்னும், உதய காலத்தணிதற்கு முத்தாபரணம் விசேடமுடைத்தென்பது இரத்தினபரீக்ஷை நூலுடையாரது துணிவாகலின், அதுபற்றி அம்முத்துமாலையை விசேடித்து விளக்கிய, அதனை இங்ஙனம் வேறுபிரித்து முன்வைத்தாரெனக் கோடலுமாம். (கஉஅ)

வன்றிற லாள ரெல்லாம் வாம்பரித் திரள்கள் கொள்வான்
சென்றர னடியார்க் கீந்த செழும்பொரு டாரீ ராகி
லின்றுமை வருத்தஞ் செய்து மென்றெறி வெயிலி னூடு
நின்றிடு மென்ன நின்றார் நீள்பெரும் புகழி னிற்பார்.

இ—ள்: வல் திறலாளர் எல்லாம் வாம்பரித் திரள்கள் கொள்வான் சென்று - சூரியோதயத்தின்பின் வலிய தண்டத்தலைவர்களெல்லாஞ் சிறைச்சாலையிலிருக்குந் திருவாதவூரடிகளை நோக்கி நீர் தாவுகின்ற குதிரைக் கூட்டங்களைக் கொள்ளும்பொருட்டிம்மதுரையைவிட்டுச் சென்று,—அரன் அடியார்க்கு ஈந்த செழும் பொருள் தாரீராகில் - திருப்பெருந்துறையிலே சிவனடியார்களுக்குக் கொடுத்த அரசன் றிரவியங்களை இதுபொழுது தாராதொழிதிராயின்,—இன்று உமை வருத்தம் செய்தும் என்று - இன்றைக்கும்மைத் தப்பாது தண்டிப்பேமென்று முன்னரச்சுறுத்தி,—எறி வெயிலின் ஊடு நின்றிடும் என்ன - பின்னர் எறிக்கின்ற இவ்வெய்யிலின்கண் அசைவற நில்லுமென்று கூற,—நீள் பெரும் புகழின் நிற்பார் நின்றார் - நெடிதாகிய பெரிய புகழுடம்பான் எஞ்ஞான்றும் நிலைபெறுந் திருவாதவூரடிகள் அவ்வாறே நின்றார். எ-று.

வாவும் என்னுஞ் செய்யுமென் வாய்பாட்டெச்சவீற்றுயிர்மெய் கெட்டது. பூதவுடம்புபோல விரைந்தழிதலின்றிப் புகழுடம்பு தனக்காதாரமாகிய வுலகம் பொன்றுந்துணையுமாதேயமா யழிவின்றி நிற்றலின் அதனை நீள்பெரும்புகழெனை விசேடித்தார். புகழ் ஆகுபெயர். (கஉகூ)

அங்குநின் றிளைப்பார் தம்மை யாண்டவாண் டகையை யுன்னி
யிங்குணர்ந் திலையோ நாயே னிடும்பையென் றிரக்க மெய்திச்
சங்கவெண் குழையாய் மன்னன் றனக்குவாம் பரிக ளீத
னங்கட னருகு மென்று நவின்றசொற் பொய்ம்மை யாமோ

இ—ள்: அங்கு நின்று இளைப்பார் தம்மை ஆண்ட ஆண்டகையை உன்னி - அங்கே வெய்யிற்கணின்று சூடுண்டிளைக்குந் திருவாதவூரடிகள் தம்மை ஆட்கொண்டருளிய சர்வவல்லமையினையுடைய பரமாசாரியரைத் தியானித்து,—இங்கு நாயேன் இடும்பை உணர்ந்திலையோ என்று இரக்கம் எய்தி - இங்கே புழுத்தநாயினுங் கடையேனாகிய தமியேன்படுந் துன்பத்தைச் சர்வஞ்ஞதையுடைய தேவரீர் அறிந்திலீரோவென்று தம்முளிரக்கங்கொண்டு,—வெண் சங்கக் குழையாய் - வெண்மையாகிய சங்கக்

குண்டலத்தையுடையவரே.—மன்னன் தனக்கு ஆம் பரிகள் ஈதல் நம் கடன் ஆகும் என்று நவின்ற சொல் பொய்ம்மை ஆமோ - இனிப் பாண்டியராசனுக்குத் தாவுகின்ற குதிரைகளைக் கொடுத்தல் நமது கடமையாகு மென்று தேவரீர் தமியேனுக் குறுதிகூறியருளிய திருவாக்குப் பொய்ப் படுமோ. எ-று.

திருவாதவூரடிகள் பரமாசாரியரைநோக்கித் தம்மையிழித்துக்கூறுதல் "நாயிற்கடைப்பட்டநம்மையுமோர்பொருட்படுத்து" "நாயிலாகியகுலத்தினுங்கடைப்படுமென்னைநன்னெறிகாட்டி" "உடையானேநின்றனையுள்கியுள்ளமுருகும்பெருங்காத லுடையாருடையாய்நின்பாதஞ்சேரக் கண்டிங்கூர்நாயிற் கடையானேனெஞ்சுருகாதேன் கல்லாமனத்தேன்கசி யாதேன், முடையார்புழுக்கூடிதுகாத்திங்கிருப்பதாகமுடித்தாயே" என் பவற்றானுணர்க. அவ்வடிகளி னிழிம்பையைநீக்க வல்லவரென்பார் ஆண்டகையென்றார். இவ்விழிம்பையை அறியவல்ல சர்வஞ்ஞத்துவமுடையார் அறியாரல்லர் அறிந்தே நீக்காதிருக்கின்றாரென வுட்கொண்டு பகைத்தாரென்பார் இங்குணர்த்திலையோநாயே னிழிம்பையென்றிரக்கமெய்தி என்றும், எஞ்ஞான்றும் பிறழாமெய்ம்மைசெறிந்த பரிசுத்தவாக்குடையாயென்பார் சங்கவெண்குழையாயென்றுங் கூறினார். (கஙo)

ஊனுடம் புடைய வாழ்க்கை யொழித்துனக் கடிமை யென்று
மாநிலம் புகலா நிற்ப வந்துனை யடைந்தேன் றன்னை
மீனவன் றன்பால் மீள விடுத்தனை வேலை நீரு
ளானபி னந்நீ ராற்று நீரென வாவ துண்டோ.

இ—ள்: ஊன் உடம்பு உடைய வாழ்க்கை ஒழித்து - தசைப்பொதியாகிய இந்தவுடம்போடு கூடிவாழும் பிரபஞ்சவாழ்க்கையைப் பொய்யென்று கண்டுகழித்து.—மா இம் நிலம் உனக்கு அடிமை என்று புகலா நிற்ப வந்து உனை அடைந்தேன் தன்னை - பெரிய இந்நிலவுலகத்தவர் தேவரீருக்குத் திருவாதவூரன் அடிமையென்று தம்முட் பேசாநிற்பத் திருப்பெருந்துறையின்கண் வந்து தேவரீரையே புகலிடமென்று சரணடைந்த தமியேனை.—மீள மீனவன் தன்பால் விடுத்தனை - மீளவும் பாண்டியனிடத் தனுப்பியருளினீர்,—ஆற்றுநீர் வேலைநீர் உள் ஆனபின் அந் நீர் என ஆவது உண்டோ - அணைகோலித்தடுக்க ஆண்டுத் தடையுண்டு தேங்கிநின்ற ஆற்றுநீரானது அவ்வணைமுறிந்தவழிச் சமுத்திரநீருட் சென்று கலந் தொன்றுபட்டபின்னர் அது அச்சமுத்திரநீராவதல்லது ஆற்றுநீரெனப்பட்டு வேறுபிரிந்து மீளுவதுமுண்டோ. எ-று.

மீளாதென்பது "சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ், சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட், டலைகடலிற் சென்றடங்குமாறு போன் மீளா, தலைவிலரன் பாதத்தை யுற்று" "முன்னிறைநீர் சிறைமுறிய முடுகியோடி முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல்"

எனவருஞ் சுருதிகளானும், அனுபவத்தானுந் துணியப்பட்டமையிற் சரணடைந்தபடியே நிற்கவொட்டாது அரசன்பால் மீளுவித்த தேவரீர்மேலதே அவனால் வருந் துன்பங்களை நீக்கிக் காக்குங்கடமை என்பது கருத்தென்க. உடம்புடையவாழ்க்கை உடம்பையே முதற்காரணமாகவுடைய வாழ்க்கை. ஊனுடைய வுடம்புவாழ்க்கையென மாற்றிப்பொருள்கோடலுமாம். புகலாநிற்ப அடைந்தேனென முடிக்க. இக்கருத்து "எசாநிற்பனென்னையுனக்கடியானென்று பிறரெல்லாம், பேசா நிற்பரியானுநும் பேணாநிற்பனினதருளே, தேசாநேசர் சூழ்ந்திருக்குந்திருவோலக்கந்சரிசிக்க, வீசாபொன்னம்பலத்தாடு மெந்தாயினித்தானிரங்காயே" என்னுந் திருவாக்கினுள்ளுங் காண்க. புகலாநிற்ப என்புழி ஆநில் நிகழ்கால இடைநிலை. (கநக)

அறத்தனிச் செல்வி பாக வன்பிலே னின்பா லென்று
வெறுத்திடி னடியேற் கிங்கு வேறொரு துணையு மில்லை
செறுத்தவர் புரங்க ளெல்லாஞ் செற்றவ ரடியான் றன்னை
நிறுத்தினர் வெயிலி னென்றா னின்புகழ்க் கேற்ற மாமோ.

இ—ள்: அறத் தனிச் செல்வி பாக-தருமபரிபாலனத்தையே தமக்கோர் செல்வமாகவுடைய பெருங்கருணைப் பிராட்டியாகிய உமையம்மையை வாமபாகமாக வுடையவரே,—நின்பால் அன்பு இலேன் என்று வெறுத்திடின் - தேவரீர்மாட்டுத் தமியேன் அவபத்தியுடையேனென்று தேவரீர் அடியேனை வெறுத்தல் செய்தொழியின்,—அடியேற்கு இங்கு வேறு ஒரு துணையும் இல்லை-தமியேனுக்குத் துணையாவார் வேறொருவருமிங்கில்லை (அதுவுமன்றி),—செறுத்தவர் புரங்கள் எல்லாம் செற்றவர் அடியான் தன்னை வெயிலின் நிறுத்தினர் என்றால் - உலகையொறுத்த பாசண்டதருமிகளது முப்புரங்களையுந்திருப் புன்னகையக்கினியினாலே எளிதினழித்த முடிவிலாற்றலையுடைய சிவபெருமானுக்கடியானொருவனை அரசன்றமர் வெயிலின்கணிறுத்தினர்களென்று லோகவதந்தி நிகழுமாயின்,—நின் புகழ்க்கு ஏற்றம் ஆமோ - தேவரீரது பிரபல்லிய மகாகீர்த்திக்குப் பெருமையாகுமோ. எ-று.

ஓகாரம் எதிர்மறையாகலின், ஆகாதென்க. நிறுத்தல் - நிற்கச்செய்தல். அறம் முப்பத்திருவகைத்தருமம். அவற்றுட் பிறர்துயர்காத்தலுமொன்றாகலின் அவ்வறத்தையோம்புஞ் சத்தியையுடைய தேவரீருக்கல்லது அஃதிலாத பிறர்க்கதின்மையிற் காப்பவரொருவருமில்லை என்பார் அறத்தனிச்செல்விபாக வன்பிலேனின்பாலென்று, வெறுத்திடினடியேற்கிங்குவேறொருதுணையுமில்லையென்றும், சர்வவல்லமையையுடைய தேவரீர் தமரை அரசன்றமர் ஒறுத்தல் அச்சர்வவல்லமைக் கிழுக்காமென்பார் செறுத்தவர்புரங்களெல்லாஞ் செற்றவரடியான்றன்னை நிறுத்தினர் வெயிலினென்றானின்புகழ்க்கேற்றமாமோ என்றுங் கூறினர். வதந்தி-பேச்சு. உலோகவதந்தி உலகப்பேச்சு. (கநஉ)

வானநா டவர்க்கு மேலோய் வந்துனக் கடிமை யிப்போ
தானநா னிடும்பை யுற்று லாருனக் கடிமை யாவார்
நானெனு மனத்தார் சொல்லு நல்லுரை யன்றி நின்ற
வீனனு மொருவன் சொல்வ தேறுமோ வுளத்தி லென்றார்.

இ—ள்: வானநாடவர்க்கும் மேலோய்-விண்ணுலகவாசிகளாகிய அரிபிரமேந்திராதி தேவர்கட்கும் மேலானவரே,—இப்போது வந்து உனக்கு அடிமை ஆன நான் இடும்பை உற்றால் - இதுபொழுது திருப்பெருந்துறையின்கண் வந்து தேவரீருக்குப் புத்தடிமையாகிய தமியேன் அதுநிமித்த மித்துன்பத்தை அநுபவித்தால்.—உனக்கு ஆர் அடிமை ஆவார் - இனித் தேவரீருக்கார்தா மடிமையாவார்.ஒருவருமாகார்,—நான் எனு மனத்தார் சொல்லும் நல் உரை அன்றி - யானெனதென்னுஞ் செருக்கற்ற சித்தசுத்தியையுடைய மகான்கள் உண்மையுணர்ந்து செய்யு மினிய விண்ணப்பவாசகமல்லது,—நின்ற ஈனன் ஆம் ஒருவன் சொல்வது உளத்தில் ஏறுமோ என்றார்-அவ்விருசெருக்கு மொருங்கு நிகழப்பெற்ற இழிவினனாகிய தமியேன் கூறு மினிமையற்ற விண்ணப்பமுந் தேவரீரது திருவுள்ளத்தில் ஏறுமோவென் றிவ்வாறு திருவாதவூரடிகள் குறையிரந்து பிரார்த்தித்தார். எ—று.

என்றுத என்னும் பெயரெச்சம் எனுவென இடை கடை யிரண்டும் குறைந்து நின்றது. ஏறுதல் பொருட்படுத்தப்பெறுதல். புத்தடிமையைக் காப்பவர் குறிக்கொண்டு பாதுகாப்பரன்றே, தமியே னவ்வாறு காக்கப் படாமைபற்றி இனியொருவருந் தேவரீருக் கடிமையாகாரென்பார் வந்துனக்கடிமையிப்போ தானநானிடும்பையுற்று லாருனக்கடிமையாவாரென்றும், சித்தசுத்தியையுடையார் மனவாக்குக்காயமென்னுந் திரிகரணங்களுமொன்றுபட்டுக் கூறுதலின், அது இனிதுகேட்கப்படுமென்பார் நானெனுமனத்தார்சொல்லுநல்லுரையன்றி என்றும், தமக்கு அச்சுத்தியெய்தாமைக்குக் காரணம் அவ்விருசெருக்கு மொருங்குநின்ற இழிவே பிறிதில்லையெனத் தம்மை யுபசாரத்தான் ஈண்டிழித்துக்கூறுவார் நின்றவீனனுமொருவனென்றும், இவ்வாறாகலின் இது இனிதுகேட்கப்படாது போலுமென்பார் ஒருவன்சொல்வ தேறுமோவுளத்திலென்றுங் கூறினர். திருவாதவூரடிகளுக் கவ்விருசெருக்கு மொழிந்தமை "நான்கெட்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" "நாமொழிந்து, சிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ" "என்னுடைய, செயன்மாண்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ" எனவருந் திருவாக்குக்களானறிக. (௧௯௯)

அவத்தொழில் புரியா மேன்மை யன்பருக் கன்பு செய்து
பவக்கட லிடைவீ. ழாமற் பரிந்தருட் பார்வை நல்கித்
தவப்பெரு வடிவங் கொண்டு தாளளித் தாளு மையர்
செவிப்புலன் புகுந்த வன்பர் செப்பிய மாற்ற மெல்லாம்.

இ—ள்: அன்பர் செப்பிய மாற்றம் எல்லாம் - மெய்யன்பராகிய திருவாதவூரடிகள் இங்ஙனஞ்செய்த விண்ணப்பவாசகங்களெல்லாம்.—அவத்தொழில் புரியா மேன்மை அன்பருக்கு பரிந்து அன்பு செய்து - பூர்வசன்மங்களிலே தமக்கும் பிறர்க்கும் நன்கு பயன்படாத பாவச்செயல்களிற் பிரவேசியாத மேம்பாட்டையுடைய அத்திருத்தொண்டர்பொருட்டிரங்கி யன்புகூர்ந்து.—பவக் கடல் இடை விழாமல் நல்கி தலைப்பெருவாழ்வம் கொண்டு - அவர் பிறவியாகிய கடலின்கண் வீழ்ந்தழுந்தாவண்ணந் திருவுளத்தடைந்து மிகவு மாட்சிமையையுடைய ஞானதேசிக மூர்த்தம் கொண்டெழுந்தருளிவந்து.—அருள் பார்வை தான் அளித்து ஆரும் ஐயர் செவிப்புலன் புகுந்த - சாக்ஷுதீக்ஷையோடு திருவடிதீக்ஷை செய்தருளிய பரமாசாரியரது திருச்செவியின்கட்புக்கு நுழைந்தன. எ-று.

நல்கல் - விரும்பல். மேம்பாடு அறிவொழுக்கங்களாலுய மேம்பாடு. ஞானதேசிகமூர்த்தமென்பது விளக்குதற்குத்தலைப்பெருவாழ்வெனவிசேடிக்கப்பட்டது. பரமாசாரியர் முன்னைத்தொடர்புபற்றித் திருவாதவூரடிகளது விண்ணப்பங்களை உன்முகமாகத் திருச்செவி சாத்தியருளினரென்பார் இவ்வாறு பரிந்து, அன்புசெய்து, நல்கி, கொண்டு பார்வையோடு தானளித்தாரருமைபட என முன்னையருட்செயல்களை யெல்லாம் கிளந்தெடுத்தடையாக்கிக் கூறினர். புலன் ஈண்டுப் பொறி. (கடுச)

காம்படு தோளி பாகன் கண்ணுத லண்ண லென்பார்
தாம்படு துயர மெண்ணி யத்துயர் தணிக்க வேண்டித்
தேம்படு மலங்கன் மார்பிற் றென்னவன் றனக்குத் தெய்வ
வாம்பரி யளித்தல் சொல்வாம் வல்வினைப் பகையை வெல்வாம்

இ—ள்: காம்பு அடு தோளி பாகன் கண் நுதல் அண்ணல்-பசிய இளைய மூங்கிலையும் வென்ற திருத்தோள்களையுடைய மீனாக்ஷியம்மை பாகரும் நெற்றிக்கண்ணையுடைய எப்பொருட்கு மிறைவருமாகிய சொக்கலிங்கமூர்த்தியானவர்.—அன்பர் தாம் படு துயரம் எண்ணி அத்துயர் தணிக்க வேண்டி - தம்மெய்யன்பராகிய திருவாதவூரடிகள்படுந் துன்பத்தையறிந்து அதனை நீக்கியருளத் திருவுளங்கொண்டு.—தேம் படு அலங்கல் மார்பில் தென்னவன் தனக்குத் தெய்வ வாம் பரி அளித்தல் சொல்வாம் - தேன்பொருந்திய வேப்பமாலையையணிந்த மார்பையுடைய அரிமர்த்தனபாண்டியனுக்குத் தெய்வத்தன்மைபொருந்திய தாவுகின்ற குதிரைகளைக் கொடுத்தருளிய திருவிளையாடலை யாமினிக் கூறுவாம்.—வல் வினைப் பகையை வெல்வாம் - அங்ஙனங் கூறுதலாகிய சிவபுண்ணியவலத்தானே இதுகாறும் வென்று கோடற்கரிய வலிய இருவினையாகிய பகையையும் இனி வெல்வாம். எ-று.

காம்பென வாளாகூறினும் பச்சிளங்காம்பென்ப தேற்புழிக் கோடலாற் பெற்றும்; ஒருசிறிதுவமிக்கப்பட் டெதிருன்றற்பால ததுவேயாகலின்.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தாமென்பது கட்டுரைச்சுவைக்கண் வந்தது. எப்பொருட்கு மிறைவனாதல் உலகமுடிவின்கண் அகிலபிரபஞ்சங்களையுந் தகிக்கவல்ல அக்கினியை அடக்கிய கண்ணுதலால் இனிது விளங்குமென்பார் கண்ணுதலன்னனென்னும். சிவாஞ்ஞையினாலுருத்திரிந்தமைபற்றி நரிப்பரியைத் தெய்வவாம்பரி என்றுங் கூறினார். கண்ணுதலன்னனை உம்மைத்தொகையென்றலுமாம். வென்றிவாம்பரி என்பது பாடமாயின் வென்றியை இனவடையாகக்கொள்க. நுதலியபொருளாகிய அடிகளது சரித்திரங்கூறவே, அவரை ஆட்கொண்ட கடவுளது சரித்திரமாகிய வழியும் உடன்கூறப்படுதலின், அவ்விரண்டன்பயனுந் தமக்கொருங்குண்டென்பார் மேல் உற்பவமொழிந்தமை மொழிந்திடவொழிப்பாமென நுதலியபொருட்குக் கூறினாற்போல ஈண்டுத் தென்னவன் றனக்குத் தெய்வவாம் பரியளித்தல் சொல்வாம் வல்வினைப்பகையை வெல்வாமென வழிக்குங் கூறினார். ஈண்டு வழியென்றது குதிரையிட்ட திருவிளையாடலை.

பெருந்துறையென்னும் பெயர்க்காரணம்:—தமிழ்நாட்டரசர்களாகிய பாண்டியர்களுட் சுகுண பாண்டியன் காலத்திலே, சிவபுரத்தில் எழுந்தருளியிருக்கும், ஆன்மநாதசுவாமிக்கும் சிவயோகாம்பிகை யம்மைக்கும் நித்தியபூசை முதலியவை செய்யும் பொருட்டு, இறக்க முத்திதருந் தலமாகிய காசியினின்றும் முந்நூறு பிராமணர் அவ்வரசனால் வருவிக்கப்பட்டனர். அவர்கள் வந்து சேர்ந்தவுடன் அரசனும் சிவபுரத்தையடைந்து அவர்களுக்குச் சன்மானஞ் செய்யக் கருதி, முந்நூறு சுவர்ண தட்டங்களில் முந்நூறு பீதாம்பரம் வைத்து, ஒவ்வொருவர்க்கொவ்வொன்றாகக் கொடுத்துக்கொண்டு வரும்பொழுது ஒரு பீதாம்பரம் ஏற்பவரின்றி விஞ்ச, அரசனும் அந்தணரும் திகைத்துப் பலகாலெண்ணியும் ஒருவர் குறையக்கண்டு மயங்கினார்கள். அப்பொழுது பரம கருணாநிதியாகிய ஆன்மநாத சுவாமி குருந்தமரத்தினின்றும் ஓர் பிராமணவடிவங்கொண்டுதோன்றி அரசனுக்கு முன்வந்து, எம்முடன் முந்நூறென்னுந்தொகை நிரம்பிற்றன்றோவென்று மயக்க நிவிர்த்திசெய்து, எஞ்சிய பீதாம்பரமும் பெற்று, அவரோடு தாமுமொருவராய் வீற்றிருந்து விளங்கினார். அதனால் அவ்வான்மநாதசுவாமிக்கு "மூவாயிரத்தொருவர்" என்பதுபோல, முந்நூற்றொருவர் என்னுந் திருநாமமுண்டாயிற்று. அதன்பின் சுகுணபாண்டியன், அம்முந்நூற்றுவர்க்கும் முந்நூறு அக்கிராகாரங் கட்டுவித்துக் கொடுத்து, அச்சிவபுரத்தை அவர்களுக்குச் சர்வமானியமாகப்பத்திரமும் பிறப்பித்துக்கொடுத்துவிட்டு, மதுரையையடைந்தான். அவ்வருச்சகர்கள் சுவாமிகோயிற்றொண்டுகளையும் அம்மை கோயிற்றொண்டுகளையும் இராப்பகலிடையறாது செய்துகொண்டுவருதலினாலே தம்புத்திரர்களுக்கு வேதாத்தியயனஞ்செய்துவைப்பதற்குச் சமயமின்றித் துயரமுற்றுச் சுவாமியைப் பிரார்த்தித்திருந்தனர். அப்பொழுது தம் மெய்யடியார் வேண்டியவேண்டியாங்கீயும் பரங்

கருணைத்தடங்கடலாகிய ஆன்மநாதசிவம் ஓர்வயோதிகப் பிராமணவடிவங் கொண்டு அவ்வந்தணர்களுக்குமுன் எழுந்தருள, அதுகண்ட அவ்வந்தணர் அவரை எதிர்கொண்டழைத்துக்கொடுவந்திருத்தி உபசரித்து, அவரது வேதாத்தியயனவல்லமையைப் பரீக்ஷித்தறிந்து மகிழ்ந்து தம்புதல்வர்களுக்கு வேதாத்தியயனஞ் செய்துவைக்கும் உபாத்தியாயராக அவரை நியோகித்து, அதற்கு வேதனமாக வீட்டுக்கொவ்வொருநாண் முறையே மூந்நூறு வீட்டுக்காரரும் அன்னபானாதிகள் கொடுத் துபசரித்துவர, உபாத்தியாயர். அப்பார்ப்பனப் பிள்ளைகளுக்கு வேதபாராயணத்தில் வேறொருவரும் நிகரில்லை என்னும்படி வேதமோதிக் கொடுத்துக் கொண்டு வந்தார். அதனால் அவ்வான்மநாதசுவாமிக்குச் சத்தநாதருபாத்தியாயர் என்னும் திருநாமமுண்டாயிற்று. அப்பால் கௌமாரபாண்டியன் காலத்திலே, இச்சிவபுரத்துக் கயலூரில் வசிப்பவனாகிய லுண்டாக்கனென்னும் குறுநிலமன்னனொருவன் இளம்பிராயமுடைய நெடுநிலவரசனாகிய அக்கௌமாரபாண்டியனது நட்புப்பெற்று, அதனால் வலிமையடைத்து வாழ்பவன் அசசிவபுரத்தைத் தான் கவர்ந்து கொள்ளும்படி கருதி, அம்மூந்நூற்றுவரது சன்மானபத்திரத்தோடும் சிவபுரத்தை மெல்ல மெல்லக் கவர்ந்துகொண்டான். அப்பொழுது பிராமணர்கள் வருந்தித் தங்கள் உபாத்தியாயர்களோடும் கௌமாரபாண்டியனிடஞ் சென்று முறையீடுசெய்ய அவ்வரசன் பிராமணர்களை நோக்கி அச்சிவபுரம் உம்முடையதென்பதற்கு ஆட்சி, சாட்சி, சாதனம் என்னுமிம் மூன்றனுள் ஒன்றேனும் இங்கே காட்டித் தாபிக்கக்கடவீர்கள் என்றான். அதற்குப் பிராமணர் ஆட்சி இப்பொழுது இவனதாயிற்று; சாட்சியுண்டு; ஆயினும் இவன் கொன்றுவிடுவான் என்னும் அச்சத்தினாலே ஒருவருஞ் சாட்சியம் சொல்லமாட்டார் சாதனம் முன்னமே இவனால் உபாயமாகக் கவர்ந்துகொள்ளப்பட்டது. இனிநாம் செய்வதென்னை என்றார். அப்பொழுது பாண்டியன், பக்கத்திருந்த லுண்டாக்கனைப் பார்த்து இதற்கு நீ சொல்வது யாது? என்று வினவ, அவன் இவர்கள் சிவபுரம் தம்முடையதென்று சாதிப்பார்களாயின், உலகில் முயலுக்குங் கோடுண்டுபோலுமென்றான். அப்படியாயின் அச்சிவபுரம் உன்னுடையதென்பதற்கு நீ ஆதாரங்காட்டென்று வினவ, அதற்கவன் தொன்றுதொட்டுள்ள ஆட்சியே எனக்காதாரமென்று கூறினான். அதற்கு அநுபவம் சொல்லென்றரசன் கேட்க, அவன் இரண்டுபனையளவு ஆழமாக வெட்டினாலும், சிவபுரத்திலே தண்ணீரூறாது. இதுவே என்னநுபவமென்றான். அரசன் பிராமணர்களை நோக்கி இனி நீங்கள் உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்களென்று வினவ, மற்றை அந்தணர் அதற்கு அநுபவஞ்சொல்ல முடியாமல்மயங்கும் போது, உபாத்தியாயராகிய கிழப்பிராமணர் அச்சிவபுரநிலத்தில் மண்வெட்டிகொண்டு வெட்டினால் அவ்வெட்டுவாய்தோறும் நீரூறும், இதுவே நான்சொல்லும் அநுபவமென்று கையுயர்த்திக் கூறினார். கூறவே, தன்னெண்ணம்முழுதும் நிறைவேறிற்றென்று லுண்டாக்கன் சிரித்தான்.

பிராமணர்களெல்லாம் நெடுநாளாக நமது வீடுகடோறும் விலாப்புடைக்க உண்டுதிரிந்த இந்தத் தடுமாறுகிழவன் யாதுசொன்னான். வெட்டுவாய்தோறும் நீர்காட்ட வல்லனோவென்று பதைபதைத்தார்கள். அப்பொழுது கௌமாரபாண்டியன் ஐயரே நீர்சொன்னது உண்மையா என்று மீளவும் கேட்க, அவ்வையர் இது சத்தியம்! சத்தியம்!! முக்காலுஞ் சத்தியம்!!! என்றனர். அதுகேட்ட பாண்டியன் லுண்டாக்கனைப்பார்த்து இவர் சொல்வது உண்மையேயானால் அப்பாற் சிவபுரம் ஆருக்குரியதென்று வினவ, இவ்வந்தணர்களுக்கே உரியது என்றான். பின்பு பாண்டியன் பிராமணர்களை முன்னே அனுப்பிவிட்டுத் தானும், லுண்டாக்கன் பின்னே வரச் சென்று சிவபுரத்தையடைந்து, லுண்டாக்கனை மண்டொடுகருவியினால் வெட்டும்படி பணிக்க, அவன் மேட்டுநிலத்தைச்சார்ந்து வெட்டும்போது உபாத்தியாயராகிய சிவப்பிராமணர் அறுபத்தாறுகோடி தீர்த்தங்களையும் அங்கேவரும்படி நினைத்தருளினார். அங்ஙனமே தீர்த்தங்கள் வந்தமையினால், அவ்வெட்டுவாயிலே நீர்தோன்றி அவன் முகங்கலங்கும்படி மோதிற்று. லுண்டாக்கன் மீளவும் வேறோரிடத்து வெட்டுதலும் முன்னையினும் மிகநீரூறிக் குதிகொண்டது. இப்படி அவன் வெட்டும்பொழுதெல்லாம் ஒருகாலைக்கொருகால் நீர்மிக்குப் பெருகுதலும், அவன் ஓய்வின்றி மேலும்மேலும் அச்சிவபுரமெங்கும் ஓடிஓடிவெட்டினான். அவ்வெட்டுவாய்கடோறும் ஊறியநீர் பெருகி ஒன்றுபட்டு எங்கும்பரந்து ஓர்பெருந்துறையாய்நின்ற காரணத்தினாலே அச்சிவபுரத்துக்குப் பெருந்துறையென்னும் காரணப்பெயர் உளதாயிற்றெனவறிக. இப்படி விப்பிரர்கள்பொருட்டு வழக்காடிவென்று நாயகத்தன்மையடைந்ததனால் ஆன்மநாதசுவாமிக்கு விப்பிரநாதர் என்னுந் திருநாம முண்டாயிற்று. மேல் வெம்பிறவிவேலைதனில் என்னுஞ்செய்யுளிற் கூறியபெயர் ஞானார்த்தம்பற்றிப் புனைந்துரைவகையான் வந்தபெயர் எனவறிக. அது, "பூணொணாதொரன்புபூண்டு பொருந்திநாடொறும்போற்றவும், நாணொணாதொர்நாணமெய்திநடுக்கடலுளழுந்திநான், பேணொணாதபெருந்துறைப்பெருந்தோணிபற்றியுகைத்தலுங், காணொணாத்திருக்கோலநீவந்துகாட்டினாய்கழுக்குன்றிலே" என்னுந் திருவாக்கினுட் குறிப்பித்தவாற்றானுமறிக. இன்னும், இத்திருப்பெருந்துறைக்கு அநாதிமூர்த்தஸ்தலம், சிவபுரம், ஞானகேத்திரம், குருந்தவனம், யோகவனம், தென்கயிலாயம், வேதபுரம், பவித்திரமாணிக்கபுரம், யோகபீடபுரம், பராசத்திபுரம், தேசுவனம், ஆதிகைலை, திரிமூர்த்திபுரம், உபதேசபுரம், சோடசாந்தஸ்தலம் என்றற்றொடக்கத்துப் பலதிருநாமங்களுள. இவற்றின் காரணங்களை ஈண்டு விரிப்பின் மிகவும் பெருகுமாகலின், அமைக. இனி இங்கே வீற்றிருக்கும் ஆன்மநாதசுவாமிக்கும் அநாதிமூர்த்ததலேசர், பெருந்துறையீசர், சிவபுரேசர், ஞானகேத்திரேசர், குருந்தவனேசர், யோகவனேசர், தென்கயிலாயநாதர், வேதபுரேசர், பவித்திரமாணிக்கபுரவாசர், யோகபீடபுரவாசர், பராசத்திபுரவாசர், தேசுவ

னேசர், ஆதிகைலாசநாதர், மும்மூர்த்திபரவாசர், உபதேசபுரநாதர், முன்னூற்றொருவர், பரமசுவாமி, சகுரு, விப்பிரநாதர், சத்தநாதருபாத்தியாயர், அச்சுவநாதர், மும்மூர்த்திதேசிகர், என்றற்றொடக்கத்துப் பல திருநாமங்களுள. இவற்றின்காரணங்களையும் ஈண்டு விரிக்கின் மிகவும் பெருகுமாகலின், அமைக. (கஙடு)

திருப்பெருந்துறைச்சருக்கம் முற்றிற்று.

ஆ •திருவிருத்தம் கஅரு.

திருச்சிற்றம்பலம்.

உ

குதிரையிட்டசருக்கம்.

தந்தை யென்பவர் மைந்தர் வாதை தவிர்ப்ப தேகட னாதலா
லந்த மின்றிய காத லன்ப ரழுங்கல் கண்டபி னரியெலாம்
வந்து வெம்பரி யாக வும்பரி வீரர் வானவ ராகவுஞ்
சிந்தை கொண்டன ரந்த மால்விதி தேடு வார்மதி சூடுவார்.

இ—ள்: தந்தை என்பவர் மைந்தர் வாதை தவிர்ப்பது கடனே ஆதலால் - பிதாவென்பவர்க்குத் தம்புதல்வரது துன்பத்தைநீக்கிக் காப்பது முக்கியகடமையே யாகலான்,—அந்த மால் விதி தேடுவார் மதி சூடுவார் - அவ்விஷ்ணு பிரமாக்களான் முறையே அடிமுடிதேடி அறியப்படாதவரும் தக்கனலிட்டுற்றுவந்த சந்திரனை அவ்விடர்நீக்கிச் சூடினவருமாகிய சிவபெருமான்,—அந்தம் இன்றிய அன்பர் காதல் அழுங்கல் கண்ட பின் - முடிவற்ற சிரத்தையன்புடைய திருவாதவூரடிகளாகிய தம்புதல்வர் அரசனால் வருந்துதலைக் கண்டருளியபின்னர்,—நரி எலாம் வந்து வெம் பரி ஆகவும் வானவர் (எலாம் வந்து) பரி வீரர் ஆகவும் சிந்தை கொண்டனர் - வனத்தின்கணுள்ள குறுநரிகளெல்லாம் வந்து வெவ்விய குதிரைகளாகவும் தேவர்களெல்லாம் வந்து குதிரைவீரர்களாகவுந் திருவுளங்கொண்டருளினர். எ-று.

தந்தையென்பவர் மைந்தர்வாதை தவிர்ப்பதேகடனாதலால் என்றது ஏது. தேற்றவேகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. காதல் - மகன். வந்து என்பதனால் வனத்தின்கணுள்ள என்பதும், வெம்பரி என விசேடித்ததனாற் குறுநரி என்பதும் பெறப்பட்டன. அ என்னும் பண்டறிசுட்டு அந்த என மரீஇயிற்று. அத்துவசுத்தியாகிய நிருவாணதீக்ஷை செயப்பெற்ற சிவபத்தர் சிவகுமாரரென்ப தாகமநூற்றுணிபாகலின், அவ்வியல்புடைய

அடிகளைக் காதல் என்றும், யானெனதென்னுஞ் செருக்குற்று, அக்கினிப் பிழம்பாகிய சிவபெருமானை நடிமுடிகளைத் தேடி அறியாது தண்டிக்கப் பட்டவரெனப் பண்டெல்லாராலுமறியப்பட்ட விஷ்ணு பிரமாக்களென் பார் அந்தமால்விதி என்றும், அன்பரல்லார்க்குத் தூரியரென்பார் தேடுவா ரென்றும், சரணடைந்தாரைத் தப்பாது காக்கும் பரமதயாளுவென்பார் மதிசூடுவாரென்றுங் கூறினர். தேடுவார் மதிசூடுவாரென்னுங் கோபப்பிர சாதத்துள்மதிசூடுவாரென்றதும் அன்பரென்றொழியாது காதலென்றதும் எதுகை வலியுறுத்தி நிற்றலின், அவையிரண்டும் உதாரணமென்க. வெம் பரியாகவுமென்பது அவ்வேதுவான்வந்தகாரியமாகலின், அதுபயனென்க. கோபப்பிரசாதம், துட்டநிக்கிரக சிட்டபரிபாலனம், நிக்கிரகாநுக்கிரகம், சிகைத் ரகைத என்பன ஒருபொருட் டொடர்மொழிகள். இது எழுசீரடி யாசிரியவிருத்தம். (க)

தேசி லாநரி வந்து வந்து திரண்டு வெம்பரி யானபின்
ஆசி லாவிமை யோர்க டாமு மமைந்த சேவக ராயினர்
மாசி லாமணி மன்ற ராரிய வாசி வாணிகர் போலவே
யேசி லாவுரு மாறினர் மறை யிவுளி யின்புற மேறினர்.

இ—ள்: தேசு இலா நரி வந்து வந்து திரண்டு வெம்பரி ஆனபின்- அழகற்ற குறுநரிகளெல்லாஞ் சிவ சங்கற்பத்தான் மேன்மேல்வந்தொரு ங்குதிரண்டு வேகத்தையுடைய குதிரைகளாக உருத்திரிந்தபின்னர்,— ஆசு இலா இமையோர்கள் தாமும் அமைந்த சேவகர் ஆயினர் - குற்றமற்ற தேவர்களும் அழகமைந்த குதிரைவீரராயினர்,—பின் மாசு இலா மணி மன்றர் ஆரிய வாசி வாணிகர்போல ஏசு இலா உரு மாறினர் - அதன் பின்பு களங்கமற்ற அழகையுடைய வெள்ளியம்பலத் திருக்கூத்தராகிய சோமசுந்தரக்கடவுளானவர் ஆரியதேசத்துக் குதிரைவர்த்தகரைப்போலப் புகழப்படுந் தந்திருமேனி பிறிதுபட்டவராகி,—மறை இவுளியின் புறம் ஏறினர் -வேதமாகிய குதிரையின் மீதிவர்ந்தருளினர். எ-று.

அடுக்குப் பன்மைபற்றிவந்தது. ஏசு முதனிலைத் தொழிற்பெயர். மணிமன்று திருக்குற்றாலத் திரத்தினசபையெனினு மமையும்; அதுவும் பாண்டிநாட்டின் கண்ணதாகலினென்க; கனகசபையுமாம். மாறி என் னும் வினையெச்சம் மாறினரென முற்றாய்த்திரிந்தது. சேவகர்க்கழகு தம்மதிபதியின்கீழமையும் குணவழகும் குதிரைவீரராகும் வடிவழகுமாம். சிவபெருமான் குதிரைவீரர்க்கதிபராகத், தாம் குதிரைவீரராய் அவரை நேரே சேவித்துடன் செல்லும் பெரும்பேறுடையவர் என்பார் ஆசிலா விமையோர்களென்றும், அருட்டிருமேனியென்பார் ஏசிலாவுருவென்றுங் கூறினர். (உ)

சேடு கொண்டு திரண்டு வீர ரிரண்டு ஞாங்கர் சிறக்கவே
யூடெ ழூந்துக ளிம்ப ரெங்கணு மும்ப ருங்கிளர் வெய்தவே

கோடு டன்றுடி விம்ம நீடிய கூடல் சூழ்மதில் வாயில்வா
யாடல் வெம்பரி கொண்டு சென்றன ராதியா ருமை பாதியார்.

இ—ள்: ஆதியார் உமை பாதியார் - முதல்வரும் அர்த்தநாரீசுவரருமாகிய சிவபெருமானனவர்,—வீரர் சேடு கொண்டு திரண்டு இரண்டு ஞாங்கர் சிறக்க - குதிரைவீரர்கள் கையிற் சவுக்கைக்கொண்டு கூடி இருமருங்கிலும் வரிசையாகச் செல்லவும்,—ஊடு எழும் துகள் இம்பர் எங்கணும் உம்பரும் கிளர்வு எய்த - குதிரைக்குளம்புகளினிடையே யெழும் பூதூளிகள் இவ்வுலகெக்கும் மேலுலகெங்குங் கிளராநிற்பவும்,—கோடு உடன் துடி விம்ம-கொம்புகளோடு உடுக்குகளொலிப்பவும்,—நீடிய கூடல் சூழ் மதில் வாயில் வாய் ஆடல் வெம் பரி கொண்டு சென்றனர் - நெடிய மதுரையைச்சூழ்ந்த மதிலின்கணுள்ள கோபுரவாய்தலிலே வெற்றியையுடைய வெவ்விய குதிரைகளைக் கொடுசென்றருளினர். எ-று.

சேடு திரட்சி. அஃதாகுபெயராய்ச் சவுக்கையுணர்த்திற்று. சேடு சவுக்குக் கியற்பெயரெனப் பிரமாணமின்றிச் சாதிப்பாருமுளர். சிறக்கச் சேறலைச் சிறக்கவென்ற துபசாரம். மதிலாலவாய் எனவும் பாடம். கிளர்வு ஈண்டுப்பெருக்கம். பாதியார் ஆதியாரென்பது இணையியைபுத் தொடை. (௩)

அங்கு நின்றவர் சென்று நிம்ப வலங்க லானை வணங்கியே [வே
யெங்க ணுந்துகள் பொங்கி விம்ம வெழுந்து காகாள மார்ப்ப
திங்கள் வெண்குடை மன்ன வாரிய தேச வெம்பரி யின்றுநந்
துங்க வன்மதி லின்பு றத்த துவன்றி வந்த வெனச்சொனார்.

இ—ள்: அங்கு நின்றவர் சென்று நிம்ப அலங்கலானை வணங்கி- அங்கேநின்றவர்கள் சென்று செம்பொற்கோயின் முகப்பினில் வீற்றிருக்கும் வேப்பமாலையையணிந்த பாண்டியனைக் கண்டு வணக்கி,—திங்கள் வெண் குடை மன்ன - பூரணசந்திரன்போலும் வெண்கொற்றக்குடையையுடைய அரசனே,—எங்கணும் துகள் பொங்கி விம்ம காகளம் எழுந்து ஆர்ப்ப - எவ்விடங்களினும் பூதூளிகளெழுந்து நெருங்கவும் எக்காளங்கண் மிக்கொலிப்பவும்,—ஆரிய தேச வெம் பரி இன்று நம் துங்கவல் மதிலின் புறத்த துவன்றி வந்த எனச் சொனார் - ஆரியதேசத்து வெவ்விய குதிரைகள் இத்தினத்து நமதுயர்ச்சிபொருந்திய வலிய மதிலின் புறத்தனவாய் நெருங்கி வந்தனவென்று விண்ணப்பஞ்செய்தார். எ-று.

புறத்த என்னும் அன்பெறு அகரவீற்று வினைக்குறிப்புமுற்று ஈண்டெச்சப்பொருட்டுநின்றது. காகளம் ஓர்வித ஊதுகுழல். (௪)

வாசி யின்றிரள் வந்த வென்றலும் வாத வூருறை யையர்மே
னேசம் வைத்தவர் தம்மை முன்ன ரழைத்து நீள்கலை யாதிதந்
தாசில் வெம்பரி காண வம்மினெ னுவெழுந் தெதிரடையலார்
கூசு தன்படை சூழ வேயிறை கோயி லின்புற மெய்தினன்.

இ—ள்: வாசியின் திரள் வந்த என்றலும் - குதிரைக்கூட்டங்கள் வந்தனவென்று கண்டோர் கூறுதலும்.—இறை வாதவூர் உறை ஐயர் மேல் நேசம் வைத்து - அதுகேட்ட பாண்டியராசன் திருவாதவூரடிகள் மீது பழைய அன்புரிமைகொண்டு, அவர் தம்மை முன்னர் அழைத்து நீள் கலை ஆதி தந்து - அவ்வடிகளைத் தனக்குமுன் வருவித்து உயர்வாகிய வஸ்திரமுதலியவைகளைக் கொடுத்துபசரித்து,—ஆசு இல் வெம் பரி காண வம்மின் எழு எழுந்து - குற்றமற்ற வெவ்விய குதிரைகளைக்காணும் பொருட்டு நீர்வருகவென்று கூறிக்கொண்டெழுந்து. எதிர் அடையலார் கூசு தன் படைசூழ கோயிலின் புறம் எய்தினன் - மேலெதிரும் பகைவர்களும் முன்னெதிர்த்தார்வாய்க் கேட்டஞ்சுதற்குக் காரணமாகிய தன் சேனைகள்சூழ அவ்வரசன் கோயிலின்புறத்தே சென்றான். எ-று.

என்றலுமென்ப உம்மீற்றுவினையெச்சம். அது வைத்தென்னும் பிறவினைகொண்டது. உபசரித்தென்பது சொல்லெச்சம். வாதவூருறை யையர் முன் வாதவூரிலே யுறைந்தவையர். கூறிக்கொண்டு விரைந்தெழுந்தென்பார் வம்மினெனவெழுந்தென்றார். (ரு)

வேறு.

வண்டுபடி யலங்கனெடுந் தடந்தோண் மாறன்
மணிச்சிவிகை மீதேறி மதுரை மூதூர்
கண்டிருகண் களிக்கும்வகை யால வாயிற்
கடவுளிடும் பரிவரவு காண்பா னெண்ணிச்
செண்டுவெளி தனிற்போந்து பனிநீர் தோய்ந்த
செங்கழுநீர் மதுமாலை சிறந்து தூங்குந்
தண்டரள மணிப்பந்தர் நிழற்கீ ழம்பொற்
றவிசின்மிசை யினிதிருந்தான் றானைசூழ.

இ—ள்: வண்டு படி அலங்கல் நெடும் தடந் தோள் மாறன் - வண்டுகள் மொய்க்கின்ற வேப்பமாலையையணிந்த நெடிய அகன்ற புயங்களையுடைய பாண்டியராசன்,—ஆலவாயில் கடவுள் இடும் பரி வரவு காண்பான் எண்ணி - துவாதசாந்தபுரமாகிய திருவாலவாயில் வீற்றிருக்குஞ் சோமசுந்தரக்கடவுள் கொடுவரும் குதிரைகளின் வரவைக் காணும்படி கருதி, மதுரை மூது ஊர் கண்டு இரு கண் களிக்கும் வகை மணிச்சிவிகை மீது ஏறிச் செண்டு வெளி தனில் போந்து - மதுரையாகிய பழையநகரவாசிகளெல்லாங் கண்டு தத்தம் இருகண்களுங் களிகூரும்வண்ணம் முத்துச்சிவிகையின்மீதேறி வையாளி வீதியின்கட் சென்று,—பனிநீர் தோய்ந்த மது செங்கழுநீர் மாலை சிறந்து தூங்கும் தண் தரள மணிப்பந்தர் நிழல் கீழ் - பனிநீரிலே தோயப்பெற்ற தேனையுடைய செங்கழுநீர் மாலை வரிசையாகத் தூங்குந் தண்ணிய முத்துப்பந்தரின்கீழே,—அம் பொன் தவிசின் மிசை தானை சூழ இனிது இருந்தான் - அழகிய சுவர்ணாசனத்தின்மீது சேனைகள்சூழ இனிதாகவிருந்தான். எ-று.

களிக்கும்வகை போந்திருந்தான் எனமுடிக்க. களிக்கும்வகை இடு யென முடிப்பாருமுளர். ஈண்டுப் பகற்போதுங் பாண்டியனாகலானும், குதிரைப்பேறு மன்னவைப்பருடனென்னுந் திருவிருத்தத்தால் முன்னர் விசேடிக்கப்படுதலானும் அது பொருடன்றெனக. வையாளிவீதி குதிரையேற்றும்வீதி. திருவாதவூரடிகள் குதிரைகொள்ளாது தன்றிரவியத்தைக் கொண்டே கோயிற்றொழிற்றாமென் றுட்கொண்டு கோயின் முகத்துக் கோபவீறுடன் முன்னிருந்தவரசன் இதுபொழுது மனமகிழ்ச்சியோ டிருந்தானென்பார் இனிதிருந்தானென்றார். இது எண்சீரடியாசிரியவிருத்தம். (சு)

முத்தமிழின் றிறநவிலும் புலவர் சூழ
  முதுமறையோர் மங்கலச்சொன் முறையிற் கூறக்
கைத்திகழும் வளைபுலம்பக் கலன்கண் மின்னக்
  கன்னியர்க ளிருமருங்குங் கவரிவீசக்
கொத்துலவும் பலமலரின் வாசந் தோய்ந்து
  குலவுமிளந் தென்றல்வர மாதர்பாட
மெத்துமணி முத்தமெனும் பணிகள் பூண்டு
  வெண்மதியின் றோற்றம்போல் வீற்றிருந்தான்.

இ—ள்: முத்தமிழின் திறம் நவிலும் புலவர் சூழ - இயலிசைநாடகமென்னும் முத்தமிழின் றிறத்தைக் கூறும் புலவர்கள் தற்சூழவும்,—முது மறையோர் மங்கலச் சொல் முறையின் கூற - பழைய வேதபாரகர்களாகிய பிராமணர்கள் மங்கலவாழ்த்துக்களை முறையானே கூறவும்,—கன்னியர்கள் கைத் திகழும் வளை புலம்பக் கலன்கள் மின்ன இருமருங்கும் கவரி வீச-நடனஸ்திரீகள் கையின்கண் விளங்கும் வளையல்களொன்றோடொன் றுராய்ந் தொலியாநிற்ப ஒழிந்த ஆபரணங்கள் பிரகாசியாநிற்ப இருமருங்கினும் வரிசையாக நின்று சாமரங்களை இரட்டவும்,—கொத்து உலவும் பல மலரின் வாசம் தோய்ந்து குலவும் இளந்தென்றல் வர - கொத்தின்கண்மலர்ந்த பலவகைப் புஷ்பங்களின் வாசனையோடளாவித் தவழும் மந்தமாருதம் வீசவும்,—மாதர் பாட - மதங்கியர் பாடவும்,—மெத்து முத்தம் எனும் மணிப் பணிகள் பூண்டு வெண் மதியின் தோற்றம்போல் வீற்றிருந்தான் - அந்நாட்டின்கண் மிக்க முத்தென்னுமிரத்தினுபரணங்களைத் தரித்துத் தன்குலமுதல்வனுகிய வெள்ளிய பூரண சந்திரனது தோற்றத்தைப்போலப் பாண்டியராசன்வீற்றிருந்தான். எ-று.

திறம் இலக்கணம், பாகுபாடு. (எ)

மங்குல்படி தடம்புரிசை வாதவூரர்
  மனங்களிப்ப விழிகளிப்ப மறுவிலாத
திங்களெனுந் தன்மரபு விளங்க வென்றுந்
  திருநீறு மஞ்செழுத்துஞ் சிறந்து மல்கச்

சங்கி னுடன் காகளங்கண் முழவ மார்ப்பத்
தயங்கியெழுந் துகளுயர்வான் றன்மேற் செல்லத்
துங்கநெடுங் கடல்பரந்து வருதல் போலத்
துவன்றிவரு பரித்திரளின் றோற்றங் கண்டான்.

இ—ள்: மங்குல் படி தடம் புரிசை வாதவூரர் மனம்களிப்ப விழி களிப்ப - முகில்கள்படிகின்ற விசாலமாகிய மதில்சூழ்ந்த திருவாதவூரில் அவதரித்த மாணிக்கவாசகசுவாமிகளது மனமுங்கண்ணும் களிகூரவும்,—மறு இலாத தன் திங்கள் எனும் மரபு விளங்க - மறுவற்ற தனது சந்திர வம்மிசம் ஏனையிருவம்மிசங்களினும் பிரகாசிக்கவும்,—என்றும் திருநீறும் அஞ்செழுத்தும் சிறந்து மல்க - என்றும் சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களும் சிவமூலமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமும் ஏனைச் சமய சின்னங்களினும் கடவுணாமங்களினும் சிறந்தபிவிருத்தி யடையவும்,—வெண் சங்கின் உடன் காகளங்கள் முழவம் ஆர்ப்ப - வெண்மையாகிய சங்குகளும் எக்காளங்களும் மிருதங்கங்களு மொலிப்பவும்,—தயங்கி எழும் துகள் உயர் வான் மேல் செல்ல - பிரகாசித்தெழும் தூளிகள் உயர்ந்த ஆகாயத்தின்மீது செல்லவும்,—துங்க நெடுங் கடல் பரந்து வருதல்போலத் துவன்றி வரு பரித் திரளின் தோற்றம் கண்டான் - முன்வந்த உயர்ச்சிபொருந்திய நெடிய கடற்றிரை ஈண்டுப் பரந்துவருகின்றமைபோல ஒன்றோடொன் றிடையீடின்றி நெருங்கிவருகின்ற குதிரைக்கூட்டங்களின் றோற்றத்தை அரசன் கண்டான். எ-று.

இல்லாதவென்னும் பெயரெச்சம் மரபென்னும் பெயர்கொண்டது. மறுவுடைய குலமுதல்வனாகிய சந்திரன்போலன்றி மறுவின்றி மேம்பட்ட குலமென்பது கருத்து. தன்னென்றது பாண்டியனை. கடல் முன்மதுரைமேல் வருணன்விட்ட கடல். அஃது விடாதவாகுபெயராய்த் திரையையுணர்த்திற்று. ஏனைவம்மிசம் சூரியாக்கினிகள் வம்மிசம். (அ)

வே று.

அங்கிளர் மதுரையம் பதியி லாவணித்
திங்களின் மூலநாள் செறிதி னத்தினி
லெங்கணு நீறுமஞ் செழுத்து மோங்கிடச்
சங்கர னிடும்பரிச் சமூகம் வந்தவால்.

இ—ள்: அம் கிளர் மதுரைப் பதியில் ஆவணித் திங்களில் மூலநாள் செறி தினத்தினில் - அழகுவிளங்காநின்ற மதுரையாகிய இராசதானியிலே ஆவணிமாசத்து மூலநக்ஷத்திரதினத்திலே,—எங்கணும் நீறும் அஞ்செழுத்தும் ஓங்கிட - எவ்விடங்களினும் விபூதி பஞ்சாக்ஷரங்களிரண்டும் தழைத்தோங்கும்படி,—சங்கரன் இடும் பரிச் சமூகம் வந்த - சுகஞ்செய்பவராகிய சோமசுந்தரக்கடவுள் கொடுவரும் குதிரைக்கூட்டங்கள் வந்தன. எ-று.

அம் சாரியை. ஆல் அசை. தம்மெய்யன்பராகிய திருவாதவூரடிகளுக்கு வாக்குத்தத்தஞ் செய்தருளிய பிரகாரமே மதுரைச் சோமசுந்தரக்கடவுள் குதிரைசெலுத்திக் கொடுவந்தமையின், அவரே அடியவர்க்கெளிய மெய்க்கடவுளென்பதும் அவரை வழிபடுஞ் சைவசமயமே சற்சமயமென்பதும் உலகிற் கெளிதில் விளங்குதற்கும், விளங்கியவழியல்லது அச்சமய சாதனங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களும் அவரது திருநாமமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமும் எங்கும் பரவாமையின் அவை பரவுதற்கும், அவ்வரவே காரணமென்பார் எங்கணுநீறுமஞ்செழுத்து மோங்கிடச் சங்கரனிடும்பரிச் சமுகம்வந்த என்றார். இடுதல்-கொடுத்தல். அது "இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்" என்பதனானுமறிக. இது கலிவிருத்தம். (கூ)

தூத்திரண் மணிகெழு சோதி மாமுடிப்
பார்த்திபன் விழிநலம் பருக வீதியிற்
கூத்தினர் செயலெனக் குலாவு வாம்பரிச்
சாத்தினர் வரும்பெருந் தன்மை கூறுவாம்.

இ—ள்: தூத்திரள் மணிகெழு சோதி மா முடிப் பார்த்திபன் விழி நலம் பருக - சுத்தமாகிய திரண்ட ரத்தினங்குயிற்றிய பிரபையை வீசும் பெரிய மகுடத்தையுடைய பாண்டியராசனது கண்கள் நன்கு விருந்தயர,—வீதியில் கூத்தினர் செயல் எனக் குலாவு வாம் பரிச் சாத்தினர் வரும் பெரும் தன்மை கூறுவாம் - வையாளிவீதியிலே நாடகரது நடனத்தைப்போலத் தாளகதிக்கேற்ப விநோதநடைநடக்குந் தாவுகின்ற குதிரை ராவுத்தர்கள்வரும் பெருந்தகைமையைச் சிறிதுகூறுவாம். எ-று.

யாமென்னுமெழுவாய் வருவித்துரைக்க. வாயின்றொழிலைக் கண்ணிற்கேற்றிப் பருகவென்றார்; "கட்கோராரமுதெய்திற்றென்ன வன்னதுகண்டேயார்த்தார்" என்றார் பிறரும். மணிக்குச் சுத்தம் ஐவகைக் குற்றங்களின்மை. அவைகளை "பிறநிறச்சார்பு புள்ளிபுள்ளடிபிறங்கு கீற்று, மறுவறுதராசமென்ன வகுத்தவைங்குற்றம்" என்பதனானுமறிக. பருகுதலாகிய வாயின்றொழிலை விழிக்காரோபித்தலின், இது சமாதி யென்னும் குணவலங்காரமென்க. என்னை? "உரியபொருளன்றி யொப்புடைப் பொருண்மேற், றரும்வினை புணர்ப்பது சமாதியாகும்" என்பவாகலின். (க0)

வேறு.

கட்டிய சுரிகையர் கவின்கொள் வாளினர்
பொட்டணி நுதலினர் பொலன்செய் மேனியர்
பட்டுடை மருங்கினர் பவள நீள்வளம்
விட்டொளி விளங்கிய வியன்கொண் மார்பினர்.

இ—ள்: கட்டிய சுரிகையர் - அரையிலே தொங்கக் கட்டப்பட்ட உடைவாளையுடையவர்,—கவின் கொள் வாளினர் - கையிலே அழகிய

வாட்படையையுடையவர்,—பொட்டு அணி நுதலினர்-சிறுபொட்டணிந்த நெற்றியையுடையவர்,—பொலன் செய் மேனியர் - பொன்மயமாகிய சரீரத்தையுடையவர்,—பட்டு உடை மருங்கினர் - பட்டுவஸ்திரமுடுத்த அரையையுடையவர்,—நீள் பவள வடம் விட்டு ஒளி விளங்கியவியன் கொள் மார்பினர் - நெடிய பவளமாலைகள் விட்டுவிட் டொளிவிளங்குகின்ற பரந்த மார்பையுடையவர். எ-று.

பொன்னென்னும் சொற் பொலமென்றாய், அது பின்னர்ப் பொலனெனப் போலியாயிற்று. அது "பொன்னென் கிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ் செய்யுண் மருங்கிற் றொடரிய லான" "மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த, னகரத் தொடர் மொழியொன்பஃ தென்ப, புகரறக் கிளந்த வஃறிணை மேன" என்புனவற்றானறிக. கட்டியசுரிகையர் என்பதை உறங்கிவாய் பிளந்தானென் பதுபோலச் சுரிகை கட்டியவர் என விகுதிபிரித்துக் கூட்டிப் பொருளுரைத்தலுமொன்று. இதுவும் கலிவிருத்தம். (கக)

புன்மயிற் பீலியர் புலியின் றோலினர்
பின்மலர்ப் பாசிலை பிணைத்த குஞ்சியர்
வன்மொழிக் குரலினர் வயங்கு தூணியர்
வின்மலி கரத்தினர் வெறித்த பார்வையர்.

இ—ள்: மயிற் புன் பீலியர்-மயிலினது நொய்தாகிய பீலிக்குடையையுடையவர்,—புலியின் தோலினர் - புலித்தோற்சட்டையை யுடையவர்,—மலர்ப் பாசு இலை பிணைத்த பின் குஞ்சியர் - பூக்களோடு பச்சிலைகளை வைத்துப் பின்னிய பின்றாங்குங் குடுமியையுடையவர்,—வன்மொழிக் குரலினர் - அதிரப்பேசும் உரத்தகுரலையுடையவர்,—வயங்கு தூணியர் - முதுகில்விளங்கும் அம்புக்கூட்டையுடையவர்,—வில் மலி கரத்தினர் - விற்பொருந்திய கைகளையுடையவர்,—வெறித்த பார்வையர் - கண்டோரை அச்சுறுத்தும் கூர்த்தநோக்கையுடையவர். எ-று.

பீலியுந் தோலு மாகுபெயர். மயிர்ப்பீலியர் எனவும் பாடம்; "வான் மயிர்ச்செய்கேடகம்" என்றார் பிறரும். (கஉ)

பொன்னியல் குழையினர் பொலன்கொண் மாலையர்
பன்னிறச் சாத்தினர் பணைத்த தோளினர்
சென்னியிற் கதிர்மணி யிலங்கு சேடனைப்
பின்னிவிட் டனதெனப் பிணைத்த குஞ்சியர்.

இ—ள்: பொன் இயல் குழையினர் - பொற்குண்டலங்களையுடையவர்,—பொலன் கொள் மாலையர் - பொன்னரிமாலைகளையுடையவர்,—பல்நிறச் சாத்தினர்-பலநிறம்பொருந்திய தலைச்சாத்துக்களையுடையவர்,—பணைத்த தோளினர் - பருத்த புயங்களையுடையவர்,—கதிர் சென்னியில்

மணி இலங்கு சேடனைப் பின்னி விட்டுளது என - ஒளியையுடைய சிரோ ரத்தினம் விளங்குகின்ற சேஷனைப் பின்னித் தூங்கவிட்டதுபோல,— பிணைத்த குஞ்சியர் - தூங்கும்படி விட்ட பின்னிய மயிர்க்கயிற்றையுடையவர் எ-று.

தலைச்சாத்தைச் சாத்தென்றது முதற்குறை. தலைச்சாத்து, தலைச்சீரா, தலைப்பாகை என்பன ஒருபொருட்சொற்கள். குஞ்சி-மயிர்; கயிற்றுக்காகுபெயர். இயலல்-செய்தல். (கங)

தூங்கிய சுரிகையுந் தயங்கு வேல்களும்
வாங்கிய சிலைகளுங் கணையும் வாளுமாய்
ஞாங்கரி லிவர்வர நாப்பட் டோன்றினார்
தேங்கிய நதிமதிச் சென்னி யண்ணலார்.

இ—ள்: தூங்கிய சுரிகையும்-அரையிலேதூங்குகின்ற உடைவாள்களும்,—சுடர் செய் வேல்களும் - ஒளிசெய்கின்ற வேற்படைகளும்,— வாங்கிய சிலைகளும் - வளைக்கப்பட்ட விற்களும்,—கணையும் - அவ்விற்களிலே அநுசந்திக்கப்பட்ட அம்புகளும்,—வாளும் ஆய் - கைகளிலே தாங்கிய வாட்படைகளுமாகி,—ஞாங்கரில் இவர் வர - பக்கங்களிலே இக்குதிரைவீரர்கள் வர,—தேங்கிய நதி மதிச் சென்னி அண்ணலார் நாப்பண் தோன்றினார் - ததும்புகின்ற கங்காநதியையும் பாலசந்திரனையும் அணிந்த திருமுடியையுடைய சிவபெருமானானவர் இவர்கட்கு மத்தியிலே தோன்றியருளினார். எ-று. (கச)

வேறு.

நச்சுரக வுச்சிமணி நண்ணுமொரு வண்ணக்
கச்சிடை விசித்துள கவின்கொளுடை வாளும்
பச்சைமுழு நீலமொடு பன்னிற வடஞ்சேர்
செச்சைநிற மன்னிய திரண்டவிரு தோளும்.

இ—ள்: உச்சி மணி நண்ணும் நச்சு உரக வண்ணக் கச்சு இடை விசித்துள கவின் கொள் ஒரு உடைவாளும் - சிரோரத்தினம்பொருந்திய நஞ்சுகாலும் பாம்பாகிய அழகிய கச்சின்கண் இறுகக்கட்டித் தூங்கும் விசித்திரமாகிய ஒரு உடைவாளும்,—பச்சை முழு நீலம் ஒடு பல் நிறவடம் சேர் - பச்சையும் முழுத்த நீலமுமாகிய இவற்றோடு ஒழிந்த பலநிறங்களுமுடைய ரத்தினமாலைகள்பொருந்திய,—செச்சை நிறம் மன்னிய திரண்ட இருதோளும் - செந்நிறம்பொருந்திய திரண்ட இரண்டு திருப்புயங்களும். எ-று.

சேர் தோள் திரண்டதோளெனத் தனித்தனிமுடிக்க. பசுப்பாலின் கட்பெய்யின், அதனையும் தன்னிறமாக்கும் இலக்கணம் நிரம்பிய நீலமென்பார் முழுநீலமென்றார். கலிவிருத்தம். (கரு)

ஒப்பரிய சட்டையு முடுத்திலகு பட்டுந்
தொப்பியு முகத்திடை துலக்கமுள ராகிச்
செப்பரு நலங்குலவு செண்டொருகை கொண்டே
யிப்படி யிலெப்படிவம் யாவருள ரென்ன.

இ—ள்: ஒப்பு அரிய சட்டையும் - உவமைகூறுதற்கரிய சட்டையும்,—உடுத்து இலகு பட்டும் - திருவரையின்கணுடுத்து விளங்கும் பட்டுவஸ்திரமும்,—தொப்பியும் - திருமுடிச்சாத்தும், — முகத்து இடை துலக்கம் உளர் ஆகி - திருமுகத்திற் பிரபையு முடையவராகி,—செப்பு அரு நலம் குலவு செண்டு ஒரு கை கொண்டு - இத்தன்மைத்தென்று நாங்கூறுதற்கரிய அழகுபொருந்திய சவுக்கை ஒரு திருக்கரத்திற்கொண்டு,— இப்படியில் இப்படிவம் யாவர் உளர் என்ன - இந்தப்பூமியில் இவ்வழகிய வடிவம் வேறியாவருளரென்று கண்டோர் தம்முள் வியந்து பேச எ-று.

தொப்பி திசைச்சொல். துலக்கமுமென்னு மெண்ணும்மை விகாரத்தாற் றொக்கது. (கசு)

கட்டுபடி மீதின்மணி கச்சைமணி முன்பி
னிட்டவிரு பக்கமணி யின்னொலி புலம்பப்
பட்டிலகு பக்கரை பணிக்கவரி யெட்டும்
விட்டொளி விளங்குமொரு வெண்பரி யிலேறி.

இ—ள்: படி மீது கட்டு மணி - அங்கவடியின்மீது கட்டிய மணியும்,—கச்சை (மீது கட்டு) மணி - கச்சையின்மீது கட்டிய மணியும்,— முன் பின் இட்ட மணி - முன்னும் பின்னுமிட்ட மணிகளும்,—இரு பக்கம் (இட்ட) மணி - இருபக்கங்களினு மிட்ட மணிகளுமாகிய இவை,— இன் ஒலி புலம்ப - செவிக் கின்னிசையாகவொலிப்ப,—பட்டு இலகு பக்கரை பணிக் கவரி எட்டும் விட்டு ஒளி விளங்கும் ஒரு வெண் பரியில் ஏறி - பட்டினாற்செய்து விளங்குகின்ற கலணையின்சூழ லெட்டினு நிறீய குளிர்ச்சிபொருந்திய சாமரங்களெட்டும் அசையுந்தோறும் விட்டுவிட்டொளி விளங்கப்பெறும் வெண்மையாகிய ஒரு குதிரையின்மீ தேறியருளி. எ-று.

படி மிதித்தேறுங் குதிரையங்கவடி. கச்சை இடைக்கட்டுவார். பக்கரை - சேணம். சூழல்-சுற்றிடம். எட்டும் எட்டுத்திக்கினு மென்பாருமுளர். (கள)

வீசுகவ ரித்திரண் மிடைந்தொளிர மீதே
தேசொடு கவித்துள செழுங்குடை வயங்கப்
பூசல்புரி வெம்பரி பொருந்துபடை யூடே
மாசில்குல வாரியரின் மன்னனென வந்தார்.

இ—ள்: வீசு கவரித்திரள் மிடைந்து ஒளிர - இரட்டுகின்ற சாமரக்கூட்டங்கள் நெருங்கி விளங்க,—மீது தேசு ஒடு கவித்துள செழும்குடை

வயங்க - திருமுடியின்மீது அழகோடு கவிக்கின்ற செழுமையாகிய குடை பிரகாசிக்க,—பூசல் புரி வெம் பரி பொருந்து படை ஊடே - யுத்தஞ்செய்கின்ற வெவ்விய நரிக்குதிரைகள்பொருந்திய சேனைகளின் மத்தியிலே,— மாசு இல் குல ஆரியரின் மன்னன் என வந்தார் - குற்றமற்றுயர்ந்த ஆரிய தேசவாசிகளது தலைவனைப்போல வந்தருளினர். எ-று.

இல்லென்னும் பண்படி இன்றியென வினையெச்சப்பொருடந்து நின்றது. குலம்-உயர்ச்சி. தாங்கிய சுரிகை என்னுஞ் செய்யுளினின்றும் அண்ணலாரென்னு மெழுவாயை வருவித்துக்கொண்டு, அண்ணலார் ஆகி, கொண்டு, ஏறி, வந்தாரென ஒருதொடராக வைத்து முடிக்க. (கஅ)

மன்னவனு மிங்கிவர் வருந்தகைமை கண்டே
தன்னுள மகிழ்ந்திரு தடங்கணிமை யாமே
யன்னமெனுமூர்திநெடு மாலரனை யல்லா
தின்னவெழில் யாவருள ரென்றதி சயித்தான்.

இ—ள்: மன்னவனும் இங்கு இவர் வரும் தகைமை தன் தடம் இரு கண் இமையாமே கண்டு உளம் மகிழ்ந்து - பாண்டியராசனும் இங்ஙனம் இவர்வருந்தன்மையைத் தனது பெரிய இருகண்களுமிமையாமற் பார்த்து மனமகிழ்ந்து,—அன்னம் எனும் ஊர்தி நெடு மால் அரனை அல்லாது இன்ன எழில் யாவர் உளர் என்று அதிசயித்தான் - அன்னவாகனத்தையுடைய பிரமாவும் நெடிய விஷ்ணுவும் அரனென்னுந் திருநாமத்தையுடைய சிவபெருமானுமல்லது இப்பேரழகை வேறியாவருளரென்றற்புதமடைந்தான். எ-று.

ஊர்தி என்பது வினைமுதலுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டு நின்றது; 'நேமியோ குலிசியோ நெடுங்கணிச்சியோ' என்புழிப்போல. இமையாமே என்பது மேயீற்றுவினையெச்சம். இவரென்றது சோமசுந்தரக்கடவுளை. இங்கிவர் ஈண்டு ஒருசொன்னீர்மைத்தன்று. (கக)

பண்ணிய தவத்துள பயன்பரியின் மீதே
நண்ணிய தெனத்தமி னயந்தனர் வியந்தா
ரெண்ணிய முடித்தன ரெனக்கருதி நின்றார்
புண்ணிய மறைத்தமிழ் புகன்றதிரு வாயார்.

இ—ள்: புண்ணிய மறைத் தமிழ் புகன்ற திரு வாயார் - சுத்தமாகிய வேதத்தைச் செந்தமிழ்மொழியினாலே திருவாசகமெனப் பெயர்தந்து பாடியருளிய திவ்விய வாக்கையுடைய திருவாதவூரடிகளானவர்,— பண்ணிய தவத்து உள பயன் பரியின் மீது நண்ணியது என - அனந்தகோடி பூர்வசன்மங்களிலே நாம் சிவார்ப்பணமாகச் செய்துகொண்ட தவப்பயனே இப்பொழுது கரசரணாதி அவயவங்களோடு பொருந்தி ஒரு குதிரையின்மீ திவர்ந்தெழுந்தருளி வந்ததென்று,—தமில் நயந்தனர் வியந்தார் - தம்முட் சிந்தித் தருட்டிறத்தைத் துதித்து,—எண்ணிய முடித்த

னர் எனக் கருதி நின்றார் - நாமெண்ணிய இரண்டையும் நம்பரமாசாரியர் தப்பாது செய்து முடித்தருளினாரென உட்கொண்டு மகிழ்ந்துவாளா நின்றனர். எ-று.

நண்ணுதல் இரட்டுறமொழிதல். எண்ணிய என்பது அன்பெறா அகரவீற்றஃறிணைப் பன்மைப்பெயர். எண்ணியவிரண்டு சிவப்பேறும், குதிரையீடுமாம். வேதத்துள்ளும் ஞானகாண்டமென்பார் புண்ணியமறை என்றும், அரசனறியாது நயந்து வியந்தாரென்பார் தமினயந்தனர் வியந்தாரென்றும், தூரத்தேகாணினும் அத்திக்குநோக்கி வணங்கற்பாலர் அது செய்யாது வாளாநின்றனரென்பார் கருதிநின்றாரென நிற்றலை விதந்தும் கூறினார். (உ0)

தூயசுடர் வேல்பல சுழற்றியெதிர் செல்வார்
வாயொலி விளைப்பரிகல் வாளினை விதிர்ப்பார்
நேயமொடு தம்மிலணி நின்றுசமர் செய்வா
ராயின ரரன்புடையி லானபரி வீரர்.

இ—ள்: அரன் புடையில் ஆன பரி வீரர் - சிவபெருமானது திருமருங்கினுள்ள குதிரைவீரர்கள்,—தூய சுடர் வேல் பல சுழற்றி எதிர்செல்வார் - கறையற்ற ஒளியையுடைய வேற்படைகள் பலவற்றைச் சுழற்றி ஒருவர்க்கொருவர் எதிரேசெல்வாரும்,—வாய் ஒலி விளைப்பர்-வாயினாலே சிங்கநாதஞ்செய்வாரும்,—இகல் வாளினை விதிர்ப்பார் - வலிய வாட்படைகளை வீசுவாரும்,—நேயம் ஒடு தம்மில் அணி நின்று சமர் செய்வார் ஆயினர் - ஒருவர்மாட்டொருவர் அன்போடு தம்முளணிவகுத்து நின்று யுத்தஞ்செய்வாருமாயினர். எ-று.

சிங்கநாதம் வீராவேசத்தா லார்ப்பது. சாணைதீர்ந்தவேலென்பார் தூயசுடர்வேலென்றும், விநோதமாகவன்றி உள்ளபடி மாறுபட்டுநின்று யுத்தஞ்செய்வாரல்லர் என்பார் நேயமொடு தம்மிலணிநின்றுசமர்செய்வார் என்றுங்கூறினார். (உக)

நீறுசிவ நீதிநிலை நிற்கவுல காளு
மாறனு மகிழ்ந்துதவ மன்னரை யழைத்தே
கூறரிய வாரிய குலேசரொரு வீதி
யேறும்வகை சென்றுரையு மென்றினிது சொன்னான்.

இ—ள்: நீறு சிவ நீதி நிலை நிற்க உலகு ஆளும் மாறனும் மகிழ்ந்து - விபூதியும் நஞ்சைவசமயநீதியும் எஞ்ஞான்றும் நிலைபெற உலகத்தை அரசாளும் பாண்டியராசனும் மேன்மேன் மகிழ்ச்சியடைந்து,—தவமன்னரை அழைத்து - தவமுதல்வராகிய திருவாதவூரடிகளைத் தன்சமீபத்தில் வருவித்து, கூறு அரிய ஆரிய குல ஈசர் ஒரு வீதி ஏறும் வகை - தம்பெருமை கூறுதற்கரிய இவ்வாரியகுலாதிபர் ஒருவீதியிலே குதிரையேற்றஞ்செய்யுமாறு,—சென்று உரையும் என்று இனிது சொன்னான் - நீர் சென்றியம்புமென் றினிதாகக்கூறினான். எ-று.

கூறு முதனிலைத்தொழிற்பெயர். நீதி-முறைமை. கொடுவந்த குதிரைகளின் வேகபேதங்களையும் ஏனைப்பயிற்சி வன்மைகளையும் நேரே காணுமாறு ஒருவீதி ஏறும்படி கூறினனென்க. (உஉ)

என்னிவன் மொழிந்தன னெனத்தமி லிரங்கா
மன்னிய வருந்தவரும் வாண்முக மலர்ந்தே
கன்னலை நலங்கொள்கனி யைக்குறுகி நெஞ்சான்
முன்னுற வணங்கிவிழி முத்துதிர நின்று.

இ—ள்: மன்னிய அரும் தவரும் - (அதுகேட்ட) நிலைபெற்ற அரியதவத்தையுடைய திருவாதவூரடிகளும்,—இவன் என் மொழிந்தனன் எனத் தமில் இரங்கா வாள் முகம் மலர்ந்து - இவ்வரசன் எதனைக்கூறும்படி பணித்தானென்று தம்முள்ளுணர்ந்து புறத்தே முகமலர்ச்சிகாட்டி,—நலம் கொள் கன்னலைக் கனியைக் குறுகி நெஞ்சால் முன் உற வணங்கி - தம்மெய்யடியவர்க்குத் தித்திக்குங் கரும்பினது சாறும் முக்கனியுமாகிய பரமாசாரியரை அடைந்து மனத்தான் முன்னர் வணங்கி - விழிமுத்து உதிர நின்று - பின் கண்ணீராகிய முத்துச் சொரிதரநின்று. எ-று.

பரமாசாரியரை இன்னதுசெய்க என்றுதமியேனேவும்படி அரசன் பணித்தானே என்பார் என்னிவன்மொழிந்தனனென்றும், காயத்தான் வெளிப்பட ஈண்டு வணங்கலாகாமையின் மானசவணக்கமே செய்தனர் என்பார் நெஞ்சால்வணங்கி என்றும், அங்ஙனம் மறைக்கினும் உண்ணின்ற அன்பு ஒருவாறு வெளிப்படுத்திற்றென்பார் விழிமுத்துதிர என்றும் கூறினர். அன்பு வெளிப்படுத்துமென்பதை, "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூச றரும்" என்பதனானுமறிக. (உ௩)

மன்றன்மல ரோனுநெடு மாலுமுரு வேறாய்
யன்றுமுத லின்றுமறி யாதவகை நின்றாய்
வென்றிவிடை யன்றியுயர் வெம்பரியின் மீதே
யின்றுனை வணங்கமுன மெத்தவ முயன்றேன்.

இ—ள்: மன்றல் மலரோனும் நெடு மாலும் உரு வேறாய் - மணங்கமழுந் தாமரை மலரை யாசனமாகவுடைய பிரமாவும் நெடிய விஷ்ணுவும் தத்தம் விபரீதஞானத்தினின்றும் வேறுபடாது வடிவுமாத்திரம் வேறுபட்டு,—அன்று முதல் இன்றும் அறியாத வகை நின்றாய் உனை - தாம்மமதையுற்ற அன்றுமுதலின்றுவரையுந் தேடி அறியாதபிரகாரம் அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பாய் நின்றருளும் அத்துணை அரிய தேவரீரை,—வென்றி விடை அன்றி உயர் வெம் பரியின்மீது இன்று வணங்க - வெற்றியையுடைய விஷ்ணுவாகிய இடபவாகனத்தின் மீதன்றி அதனினு முயர்ந்த வேதமாகிய வெவ்விய குதிரையின்மீது தரிசித்து இத்தினம் வணங்குதற்கு,—முனம் எத்தவம் முயன்றேன் - பூர்வசன்மங்களி லென்ன அருந்தவஞ் செய்தேனோ. எ-று.

அவ்வருந்தவம் இனையவென்றீண்டறியப் பெறுவேனுயின் இன்னும வற்றையே செய்வேனெனன்பது குறிப்பெச்சம். நின்றுயாகிய வுனேயெனக் கூட்டுக. பிரமவிஷ்ணுக்களும் அறிதற்கரிய சிவபெருமான் விஷ்ணுவாகிய இடபவாகனத்தின்மீதன்றித் தம்பொருட்டாகவே இன்று புதிதாக வேதமாகிய குதிரையின்மீ திவர்ந்து வெளிவந் தெளிவந்தருளிப் பரிமேலழகியார் என்னுந் திருநாமம் படைத்தமையின், அடிகள் இங்ஙனந் திருவுளநைந்துருகிக் கூறினரென வுணர்க. இந்நிமித்தம்பற்றியே சோமசுந்தரக்கடவுட்குப் பரிமேலழகியார் என்னுந் திருநாமம் உளதாயிற்றென்பதினிது விளக்குதற்கன்றே ஆசிரியர் இச்சருக்கத்துட் குதிரையைக் கூறுகின்றுழியெல்லாம் வேறுபெயராற் கூறுது பெரும்பாலும் பரியென்னும் பெயராற் கூறிவருகின்றதூஉமென்க. இது தன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தலென்னுந் தந்திரவுத்திக்கினம். இன்னுமிதனே ''அண்ணலங்களிற்றுற் கருமறைப் பரிமே லழகியா ரடைவுற விரிப்பார்'' என வழிநூலாசிரியர் கூறியவாற்றுனுமறிக. (உச)

வந்தபடி யிவ்வுரு வணங்குமிது வல்லா
லந்தவடி வாகிலுனே யாரறிய வல்லா
ரிந்தவகை கண்டடி யவர்க்கெளியை யென்றே
சிந்தைதனி லன்பொடு தெளிந்தவுல கெல்லாம்.

இ—ள்: வந்த படி இவ் உரு வணங்கும் இது அல்லால் - ஈண்டெழுந்தருளிவந்த பிரகாரம் இவ்வுருவத்திருமேனியைத் தரிசித்து வணங்கு மிஃதொன்றல்லது,—அந்த வடிவு ஆகில் உனே ஆர் அறிய வல்லார் - அவ்வுருவத்திருமேனியைத் தேவரீர் மேற்கொள்ளின், அங்ஙனம் தேவரீரை யாவரறியவல்லுநர்,—உலகு எல்லாம் இந்த வகை கண்டு - இவ்வுலகத்தினரெல்லாம் இப்பெருங்கருணைத்திறத்தை நேரே ஈண்டுக் கண்டறிந்து,—அடியவர்க்கு எளியை என்று சிந்தை தனில் அன்பு ஒடு தெளிந்த- தேவரீரை அடியவர்க் கெளியீரென்று முன்னேயினுந் தம்மனத்தின் மிக அன்புகொண்டு நிச்சயித்தறிந்தனர். எ-று.

ஒடுவுருபு வேறுவினையுட னிகழ்ச்சிப்பொருட்கண் வந்தது. தெளிந்தவுலகெல்லாமென்பது பாடமாயிற் பன்மையொருமை மயக்கமாகக் கொள்க. ஏனே முக்கூற்றுப் புறச்சமயிகடாமுந் தெளிந்தாரென்பார் உலகெல்லாமென்றுர். (உடு)

என்றுமுக மன்பல வியம்பியரு ளாலே
வென்றிபுனே மீனவன் விளம்புமொழி சொன்னர்
கொன்றைமுடி யாருமதி சைந்துகொடை மாற
னன்றியொடு காணும்வகை நற்பரியு கைத்தார்.

இ—ள்: என்று முகமன் பல இயம்பி - என்றிவ்வாறு திருவாதவூரடிகள் சற்காரவசனங்கள் பலவற்றைக் கூறி,—அருளால் - பரமாசாரிய

ரது திருவருளினாலே,—வென்றி புனை மீனவன் விளம்பு மொழி சொன்னார் - வெற்றிமாலையையணிந்த பாண்டியன் கூறியவார்த்தையை மெல்ல விண்ணப்பஞ்செய்தார் —கொன்றை முடியாரும் அது இசைந்து - கொன்றைமாலிகையைத் தரித்த திருமுடியையுடைய சிவபெருமானும் அதற்குடம்பட்டு,—கொடை மாறன் நன்றி ஒடு காணும் வகை நல் பரி உகைத்தார் - கொடையையுடைய பாண்டியராசன் பூர்வசன்மங்களிலே செய்து கொண்ட நல்வினையாகிய சிவபுண்ணிய வலத்தினாலே நேரே காணும்படி வேதமாகிய நல்ல குதிரையைச் செலுத்தியருளினார். எ-று.

பரமாசாரியர் கூறுகவென்று பணித்தருளியபின் கூறினாரென்பார் அருளால் என்றும், தங்கூற்றாகக் கூறிற் குருசிஷ்யக்கிரமத் தவறுமாகலின் அரசன் கூற்றாகவே கூறினாரென்பார் பொருள்பற்றாது சொல்லேபற்றி மீனவன் விளம்புமொழி சொன்னாரென்றும், ஈண்டுக் குதிரையேற்றந் தரிசித்தற்குப் பூர்வசன்ம நல்வினையேயன்றி இம்மையிற் கொடையும் காரணமாமென்பார் கொடைமாறனென விசேடித்துங் கூறினார். நன்றி நன்மை; ஆகுபெயர் ஒடுவுருபு கருவிப்பொருட்கண் வந்தது. (உசு)

மன்னரவ பந்தமுடன் வட்டநெடு வீதி
யென்னுமிவ் வித்தொழில்கள் யாவுமினி தேறி
யுன்னுமன வேகமென வோடுமுயர் பாய்மா
நன்னட மிடும்படி நடாத்தியெதிர் வந்தார்.

இ—ள்: மன் - பதியாகிய சோமசுந்தரக்கடவுள்,—அரவ பந்தம் உடன் வட்டம் நெடு வீதி என்னும் இவ்வித் தொழில்கள் யாவும் இனிது ஏறி - நாகபந்தம், விருத்தம், தீர்க்கவீதி என்னும் பாகுபாட்டையுடைய குதிரையேற்றங்களையெல்லாம் இனிதாக வேறிக்காட்டி,—உன்னும் மன வேகம் என ஓடும் உயர் பாய்மா நல் நடம் இடும் படி நடாத்தி எதிர் வந்தார் - நினைத்தற்கருவியாகிய மனவேகம்போல விரைந்தோடும் வேதமாகிய குதிரை தாளகதிக்கேற்ப நல்ல நடனமிடும்படி செலுத்திக்கொண்டரசனுக் கெதிர்வந்தருளினார். எ-று.

வீதி-நேரோடல். இனிமன்னை அரவபந்தத்தை விசேடித்ததாகக் கோடலுமொன்று. (உஎ)

வெம்பரியி னண்ணலை வியந்துதமிழ் மாறன்
கம்பமுடி யெய்தவொரு கைவிரல் சுழற்றா
வம்பொன்விலை யில்லதொ ரருங்கலை யளித்தா
னெம்பரமர் செண்டினிசை யேற்றுநகை செய்தார்.

இ—ள்: தமிழ் மாறன் வெம் பரியின் அண்ணலை வியந்து - அப்பொழுது தமிழையுடைய பாண்டியராசன் அவ்வச்சுவபதியைப் புகழ்ந்து,—முடி கம்பம் எய்த ஒரு கை விரல் சுழற்றா - சிரகம்பஞ்செய்தொரு கைவிரலைச் சுழற்றி,—விலை இல்லது அரும் அம் பொன் ஓர் கலை அளித்

தான் - விலைமதித்தற்கரிய அருமையாகிய அழகையுடைய பீதாம்பரமொன்றைப் பரிசாகக் கொடுத்தான், —எம் பரமர் சென்னியின் மிசை ஏற்று நகை செய்தார் - எம்முடைய சிவபெருமான் அதனைத் தமது சவுக்கின் மீதேற்றுப் புன்னகை செய்தருளினார்.

சிரகம்பமுங் கைவிரற்சுழற்சியும் உவகைச்சுவையின் விறல்பற்றி வந்த மெய்ப்பாட்டுத் தொழிற்குறிப்புக்களென்க. (உஅ)

வேறு.

ஏற்றவொண் கலையை நேச மெய்தினு னொருவன் சென்று
காற்றென விரைவி னெய்திக் கடிதுதன் கரத்தில் வாங்கிப்
போற்றிலன் முடியின் மீது புனைந்தில னென்று மாற [ன்.
னீற்றினன் மறைப்பி னாலே நெஞ்சிடை வெகுட்சி கொண்டா

இ—ள்: மாறன்-அரிமர்த்தனபாண்டியன், —ஒருவன்-மிக ஏழையாகிய இக்குதிரைராவுத்தன், —ஏற்ற ஒண்கலையை - தான் ஏற்ற பீதாம்பரத்தை, —நேசம் எய்தினன் - விருப்பங்கொண்டு, —காற்று என விரைவில் சென்று எய்தி - காற்றைப்போல விரைந்துவந்து சமீபித்து, —கடிது தன் கரத்தில் வாங்கிப் போற்றிலன் - விரைவிலே தன்கையில் வாங்கிப் பேணிலன், —முடியின் மீது புனைந்திலன் என்று - சிரசின்மீ தணிந்திலனென்று கருதி, —நீற்றினன் மறைப்பினாலே நெஞ்சு இடை வெகுட்சி கொண்டான் - சிவபெருமான் தம்மை மறைத்தெழுந்தருளினமையினாலே தன்மனத்தின்கட் கோபங்கொண்டான். எ று.

எய்தினனென்ப தெச்சமுற்று. அச்சுவபதி முன் சென்னியிலேற்றமையிற் பின்பரசன் கரத்தில்வாங்கிப் பேணிலனென்றானென்க. மறைப்பினாலென்பதற்குத் திரோதானசத்தியினாலென்றலுமொன்று. அது வருஞ்செய்யுளான் விளக்குப. மகாராசாவாகிய தான்கொடுத்த பரிசினை அச்சுவபதி அவமதித்தமையினாலே அரசனுக்குக் கோபமுண்டாயிற்றென்ப தாம். அற்றேல், "வாசிவா ணிகர்க்குத் தென்னன் வெண்டுகில் வரிசையாக, வீசினன் பாணற்கேவல் செய்தவர் வெள்கு வாரோ. கூசிலாநேசர்க் காப்பான் குதிரையி னிழிந்தேற் றந்தத், தூசினை யிரண்டாங் கங்கையெனமுடி சூடி நின்றார்" என வழிநூல் கூறியவாறென்னையெனின், "இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித், திரிபுவே றுடையது புடைநூலாகும்" என்பவாகலின், அது கடாவன்றென்க. பிறவுமன்ன. ஆலாசியமான்மியம் முதனூலும், திருவிளையாடற்புராணம் வழிநூலும், இவ்வாதவூரடிகள் புராணம் சார்புநூலுமாமென்க. இது அறுசீரடியாசிரிய விருத்தம். (உகூ)

வெளிப்பட வரிய மேனி விண்ணவன் கண்ணு நெஞ்சுங்
களிப்புற வருதல் கண்டுங் கண்டிலன் கன்னி நாட

னொளித்துல கெங்கு நிற்போ னுறுபவ மொழித்து ஞான
மளித்திடி னன்றி யாவ ரவன்றிற மறிய வல்லார்.

இ—ள்: மேனி வெளிப்பட அரிய விண்ணவன் கண்ணும் நெஞ்சும் களிப்புற வருதல் கண்டும்-தந் திருமேனி, ஊனக்கண்ணினாலே வெளிப்படக் காணுதற்கரிய சிதாகாச வடிவமாகவுடைய சிவபிரானானவர், கண்ணுமனமுங் களிகூர ஈண்டு வெளிப்படவெழுந்தருளிவருதலை ஊனக்கண்ணால் நேரேகண்டுவைத்தும்,—கன்னி நாடன் கண்டிலன் - கன்னிநாட்டையுடைய பாண்டியராசன் ஞானக்கண்ணின்மையினால் உள்ளபடி காணப்பெற்றிலன்,—உலகு எங்கும் ஒளித்து நிற்போன் உறு பவம் ஒழித்து ஞானம் அளித்திடின் அன்றி - உலகெங்கும் விறகிற்றீயைப்போல மறைந்துநின்றருளும் அம்முதல்வன் அநாதியாய்வரும் பிறவிக்கு நிமித்தமாகிய அஞ்ஞானத்தைப் பற்றறக் கழித்துத் தமது திருவடிஞானத்தைப் பிரசாதிக்கினல்லது,—யாவர் அவன் திறம் அறிய வல்லார் - யாவர்தாம் அக்கடவுளது உண்மைத்தன்மையைக் கண்டுணரவல்லவர். எ-று.

மேனிவிண்ணவன் மேனியாக விண்ணையுடையவன். ஊனக்கண்ணால் உணரப்படாமையை "ஊனக்கண்பாசமுணராப்பதியை, ஞானக்கண்ணினிற்சிந்தைநாடி" என்பதனானுமறிக. பவம் ஆகுபெயர். உண்மைத்தன்மை சொரூபலக்கணம். இது புராணிகர்கூற்று. (௩0)

எண்டிசை மன்ன ரன்பா லீந்தமென் கலைகள் யாவுஞ்
செண்டிடைக் கோட லன்னோர் தேயநல் லியற்கை யென்றே
வண்டமிழ் வாத வூரர் மாமது ரேச னெஞ்சிற்
கொண்டிடு முனிவு தீரக் குறைந்துமுன் னின்று சொன்னார்.

இ—ள்: வண்தமிழ் வாதவூரர் முன் நின்று - அரசனது வெகுட்சியைக் கண்ட செந்தமிழ்மொழிக்கதிபராகிய திருவாதவூரடிகள் அவ்வரசனுக் கெதிர்சென்று செவ்வேநின்று,—எண் திசை மன்னர் அன்பால் ஈந்த மென் நல் கலைகள் யாவும் செண்டு இடைக்கோடல் அன்னோர் தேய இயற்கை என்று - அட்டதிக்கினுமுள்ள அரசர்களெல்லாம் தம்மிட்டம் பற்றிப் பரிசுகொடுக்கும் மென்மையாகிய நல்ல வஸ்திரங்களையெல்லாஞ் சவுக்கின்மீ தேற்றுக்கோடல் அவரது தேசாசாரமென்று,—மாமதுரா ஈசன் நெஞ்சில் கொண்டிடு முனிவு தீரக் குறைந்து சொன்னார் - பெருமைபொருந்திய மதுரையை இராசதானியாகக்கொண் டரசுவீற்றிருக்கும் அரிமர்த்தனபாண்டியன் மனத்தின்கட்கொண்ட கோபந் தணியுமாறு குறையிரந்து கூறினார். எ-று.

குறையிரந்தது அரசன்கோபம் தம்மாசாரியசுவாமிகட் கியாதானுமேதம் பயக்குமோவென்னும் அச்சம்பற்றியுளதாய் தடுமாற்றத்தாலென்க. அவ்வாசாரியசுவாமிகண்மீது தம்மை விழுங்கி முறுகியெழுந்த பேரன்பே அவ்வச்சத்திற்குக் காரணமென்க. இனிச் "செல்லா விடத்துச்சினந்தீது"

என்பதனால் அரசன்கோபம் அவ்வரசனையே கெடுக்குமென்பது பற்றி அவன்பொருட்டுப் பரிந்திரங்கிக் குறையிரந்தாரெனக் கோடலுமா மென்க. (ருக)

நலத்தகு மிந்த நீர்மை கேட்டபி னயந்து மன்னன்
கலக்கமி லிவுளி நன்னூல் கற்றவர் தம்மை நோக்கி
யிலக்கண விதியா னுள்ள விரும்பரி யிழிவு மேன்மை
துலக்குற நும்மி னாடி யெம்முடன் சொல்லு மென்றான்.

இ—ள்: நலத்தகும் இந்த நீர்மை கேட்டபின் மன்னன் நயந்து - விரும்பத்தகும் இந்தச் சமாதானத்தைக் கேட்டபின்பு பாண்டிய ராசன் கோபந்தணிந்து.—நல் இவுளி நூல் கலக்கம் இல் கற்றவர் தம்மை நோக்கி - நல்ல அசுவலக்கண நூல்களைக் கலக்கமின்றிக் கற்றவர்களை நோக்கி.—உள்ள இரும் பரி மேன்மை இழிவு இலக்கண விதியால் துலக்குற நும்மில் நாடி - இங்குள்ள மகிமைபொருந்திய குதிரைகளின் குறைகுணங்களை அசுவலக்கண நூல் விதிப்படி விளங்க நீவிர் பரீக்ஷித்து,—எம் உடன் சொல்லும் என்றான்-எமக்குக் கூறுமினென்று பணித்தான். எ-று.

நலத்தகுமென்பது வியத்தகுமென்பதுபோல நின்றது. கலக்கம் சந்தேகவிபரீதம். எமக்கென்ப தெம்முடனென மயங்கிற்று. பிறரொடு கலவாது பரீக்ஷித்து எமக்கே கூறுகவென்றானென்பார் நும்மினாடியெம்முடன் சொல்லுமென்றானென்றார். (ருஉ)

சொற்றிகழ் துரக நூலின் றுணிபொரு ளுணர்ந்து ளோருங்
கொற்றவெம் பரிகட் குள்ள குற்றமுங் குணமு நாடிப்
பொற்றடங் கிரியின் மீது பொருகயல் பொறித்து மீண்ட
வெற்றிகொண் மன்னர் மன்னன் முன்னிவை விளம்ப லுற்றார்.

இ—ள்: சொல் திகழ் துரக நூலின் துணி பொருள் உணர்ந்துளோரும் - பொருள்செறிந்த சொற்கள் விளங்கும் அசுவலக்கண நூல்களின் நிச்சயப்பொருளையறிந்த பரீக்ஷகர்களும்,—கொற்ற வெம் பரிகட்கு உள்ள குணமும் குற்றமும் நாடி - வெற்றியையுடைய வேகம்பொருந்திய குதிரைகளிடத்துள்ள குறைகுணங்களைப் பரீக்ஷித்தறிந்து,—பொன் தடம் கிரியின் மீது பொரு கயல் பொறித்து மீண்ட வெற்றி கொள் மன்னர் மன்னன் முன் இவை விளம்பல் உற்றார் - பொன்மயமாகிய பெரிய மேரு கிரியின்மீது போருக்குரிய கயலை எழுதிய கொடியையெழுதித் திக்கு விசயஞ்செய்து முடித்த அத்துணை வெற்றியையுடைய அரசர்க்கரசனாகிய பாண்டியன் முன்னின் றிவ்வார்த்தைகளை விண்ணப்பஞ் செய்வாராயினார். எ-று.

அரசன் மேருகிரியின்கட் கயல்பொறித்தமை அதனைத் தன்னரசாட்சிக் குத்தரதிக்கின் எல்லையாக யாவருங் கோடற்கென்க. பொருவென்னுமடைமொழிகொடியென்னுமாகுபெயர்ப்பொருளைவிசேடித்தது. (ருரு)

வேறு.

தாவிஜனச்சசந் திரசுழியா மண்டா வர்த்தந்
 தண்டையடி யிற்சுழியா முடலின் பக்க
மேவுசுழி கௌவகமாங் காகா வர்த்த
 மேன்மைதிகழ் முன்வளையச் சுழிதா ஞரும்
பாவுசெழுங் கேதாரி யடியிற் சேர்ந்த
 பயனில்கொடுஞ் சுழிகேசா வர்த்த மாகும்
பூவமருங் கச்சையிற்பட் டடையே யாகப்
 புகன்றசுழி யிச்சுழிகள் புணரா வாகி.

இ—ள்: தண்டையடியிற்பொருந்திய கேட்டினைத்தரும் சந்திர சுழி அண்டாவர்த்தசுழிகளும் உடம்பின்பக்கத்துப் பொருந்திய கௌவக சுழிகாகாவர்த்தசுழிகளும் மகிமைவிளங்கும் முன்வளையச்சுழி பரந்த செழு மையாகிய கேதாரிச்சுழிகளும் அடியிற்பொருந்திய பயனற்ற கொடிய கேசாவர்த்தசுழியும் அழகமரும் கச்சைநிலையிற்பொருந்திய பட்டடைச் சுழியுமென அசுவலக்கண நூலுடையார் கூறிய இவ்வெண்வகைச்சுழிகளும் பொருந்தப்பெருதனவாகி, எ-று.

தண்டை-வால். இது எண்சீரடியாசிரியவிருத்தம். (நச)

கொம்புகன்னந் திருகுகன்ன நஞ்ச பாதங்
 கொள்ளிக்கால் வெள்ளிக்கண் டீனி குன்று
வெம்புதமுற் சுடலை முகம் பரனேர் கண்ட
 மண்டப்பாழ் விலங்கிபல வண்ட மாதல்
செம்பொறியா மக்கினிசித் திரங்கண் மூன்று
 சிறந்தினிய மட்டிற்பா லறுபா லென்றே
யம்புவியோர் மொழிந்தபழு திவையு மின்றி
 யடிநாவிற் குரமிரட்டை யாகா வாகி.

இ—ள்: கொம்புபோல நீண்ட செவிகளும் முறுகிய செவிகளும் நஞ்சபாதமும் கொள்ளிக் காலும் வெள்ளிய கண்களும் தீனிகுன்றுத சுடு கின்ற அக்கினிசுவாலிக்கும் சுடலைபோலும் அழகற்ற முகமும் நீலகண்ட மும் பீசமின்மையும் ஒன்றற்கொன் றேற்றக் குறைவாகிப் பருத்த பீச முடைமையும் செவ்விய பதுமையும் அக்கினியும் சித்திரமுமாகிய இம்மூன் றையும்போலச் சிறந்து முகம் வால் நான்குகால்களாகிய இனிய இவ்வுறு ப்புக்களிற் சுழியின்மையுமென் றிங்ஙன மழகிய பூமியின்கணுள்ள அறி ஞர் கூறிய இக்குற்றங்களும் இவைபோல்வன பிறவுமின்றிக் கழுத்தடி யின் மார்க்கண்ட மிரட்டையாகப் பொருந்தப் பெருதனவாகி. எ-று.

நஞ்சபாதம் மூன்றுகால் விளர்த் தொருகால் கறுத்திருப்பது. கொ ள்ளிக்கால் மூன்றுகால் கறுத் தொருகால் விளர்த்திருப்பது. தீனி தின்னப்படுவது. வெம்புதழற்சுடலை முகப்பரனேர் கண்டமென்பது

பாடமாயின் மயானருத்திராது கண்டம்போலும் கரியகண்டமென்றுரைக்க. (ருடு)

சிரமதனி லிரண்டுசெழுந் துளைப்பி னான்கு
சிறந்தவுரந் தனிலிரண்டு நுதன்மே லொன்று
குரவமிசை நின்றசுழி யொன்றி னோடு
குலவிய வீரைந்துசுழி குறையா வாகி
நரிவெருகு கருங்காக மலகை யோரி
ஞாளிசெழுங் கேழலெனுங் குரலின் றாகி
விரவுபெருந் திரைவேலை மங்குல் சங்கம்
விடைமுழவம் போன்முழக்க மிகவுண் டாகி.

இ—ள்: சிரமதனில் இரண்டு - தலையில் இரண்டுசுழிகளும்,—செழும் துளைப்பின் நான்கு - செழுமையாகிய நாபியின்பின் நான்குசுழிகளும்,—சிறந்த உரந்தனில் இரண்டு - அழகிய மார்பில் இரண்டுசுழிகளும்,—நுதல் மேல் ஒன்று - நெற்றியில் ஒருசுழியும்,—குரவமிசை நின்றசுழி ஒன்றினோடு - உதட்டின்கணுள்ள சுழியொன்றுடனே,—குலவிய ஈர் ஐந்து சுழி குறையா ஆகி - விளங்காநின்ற இப்பத்துச்சுழிகளும் குறையப்பெறாதனவாகி,—நரி வெருகு கரும் காகம் அலகை ஓரி ஞாளி செழும் கேழல் எனும் குரல் இன்று ஆகி - நரியும் வெருகும் கரியகாகமும் பேயும் ஓரியும் நாயும் கொழுத்த பன்றியுமென்னு மிவற்றின்சத்தமில்லாதனவாகி,—விரவு பெரும் திரை வேலை மங்குல் சங்கம் விடைமுழவம் போல் முழக்கம் மிக உண்டு ஆகி - ஒன்றன்பின்னொன்றாக வரும் பெரிய திரைகளையுடைய சமுத்திரமும் முகிலும் சங்கும் இடபமும் மிருதங்கமும்போல மிகவுஞ் சத்தமுடையனவாகி. எ-று.

குரங்கினுண் முசுப்போல, ஓரி நரியினுள் ஒருசாதியென்க (ருசு)

உருத்திகல்செய் புலியுளியங் கழுதை செந்நா
யொண்பூனை நரியினுடன் கரிய காகந்
தரித்தவழற் புகைநிறமும் புனையா வாகித்
தருக்கிமருத் தெனுங்கவனத் தன்மை யெய்தி
விரித்தகதிர் வெண்டரளந் திங்க ணீல
மென்கமலத் தாதுசெழுங் கனகங் காயா
வரத்தமலர் நல்லபசுங் கிள்ளை போல
வமைந்தவொளி தயங்கிய வங்கத்த வாகி.

இ—ள்: உருத்து இகல் செய் புலி உளியம் கழுதை செந் நாய் ஒண் பூனை நரியின் உடன் கரிய காகம் அழல் தரித்த புகை நிறமும் புனையா ஆகி - வெகுண்டு யுத்தஞ்செய்யும் புலியும் கரடியும் கழுதையும் செந்நாயும் அழகிய பூனையும் நரியும் கரியகாகமும் அக்கினியின்கணுள்ள புகையுமாகிய இவற்றினிறம் பொருந்தாதனவாகி,—தருக்கி - வீராவேசங்

கொண்டு,—மருத்து எனும் கவனத் தன்மை எய்தி - வாயுவேகம்பொருந்தி.—விரித்த வெண் கதிர்த் தாளம் திங்கள் நீலம் மென் கமலத் தாது செழும் கனகம் காயா அரத்த மலர் நல்ல பசும் கிள்ளைபோல - பரப்புகின்ற வெள்ளொளியையுடைய முத்தும் சந்திரனும் நீலரத்தினமும் மெல்லிய தாமரைப்பூவின் மகரந்தமும் செழுமையாகிய பொன்னும் காயாம்பூவும் செவ்வரத்தமலரும் நல்ல பசிய கிளியுமாகிய இவற்றைப்போல,—அமைந்த ஒளி தயங்கிய அங்கத்த ஆகி - பொருந்திய ஒளி விளங்காநின்ற உடம்பையுடையனவாகி. ஏ-று.

நீலம் நீலோற்பலமெனினுமமையும். (ருஎ)

நெற்றியகன் றுயர்குரவம் படைத்து வெண்மை
நிறைந்துதமி லொத்திலகு மெயிற்ற வாகித்
துற்றநறுங் கந்தமிகச் சிறந்து நாவுஞ்
சூதவிளந் தளிர்போலு மருணந் தோய்ந்தே
யுற்றவிரண் டிமைமயிருந் தொகையுண் டாகி
யுக்கிரமாம் விழிப்பார்வை யுடைய வாகி
முற்றுமெயிற் றசையின்றி யுள்வ ளைந்து
முக்கோண மெனத்திகழு முகத்த வாகி.

இ—ள்: நெற்றி அகன்று - நெற்றி விசாலித்து.—உயர் குரவம் படைத்து - உயர்ந்த மேலுதட்டைப் பொருந்தி,—வெண்மை நிறைந்து தமில் ஒத்து இலகும் எயிற்ற ஆகி - வெண்ணிறமிகுந்து தம்முட் கடையொத்து விளங்கும் பற்களையுடையனவாகி.—துற்ற நறும் கந்தம் மிகச் சிறந்து - இடையறுது கமழும் நறுமணத்தான் மிகவு மேம்பட்டு,—நாவும் சூத இளம் தளிர் போலும் அருணம் தோய்ந்து-நாக்கும் மாவினது இளந்தளிர்போலும் செந்நிறம்வாய்ந்து,—உற்ற இரண்டு இமை மயிரும் தொகை உண்டாகி - பொருந்திய இரண்டிமைமயிரும் தம்முளடரப்பெற்று,—உக்கிரம் ஆம் விழிப் பார்வை உடைய ஆகி - கண்டோரஞ்சி மெய்விதிர்க்கத்தகும் கொடிய கட்பார்வையை யுடையனவாகி,—மெயில் முற்றும் தசை இன்றி - உடம்பின்கண் மிகவுந் தசைப்பற்றின்றி,—உள் வளைந்து முக்கோணம் எனத் திகழும் முகத்த ஆகி - உள்வளையப்பெற்று முக்கோணமாகி விளங்கும் முகத்தையுடையனவாகி. எ-று.

நறுங்கந்தமென்றது குங்குமம், கருப்பூரம், அகிற்குழம்பு, மிருகமதமென்னு மிவற்றின் கந்தம்போலும் கந்தத்தை என்க. அது "குங்குமங் கருப்புரங் கொழுந்திண் காரகிற், பங்கமான் மதமெனக்கமழும்பாலதாய்" என்பதனுனுமறிக. இன்னும் இவ்விலக்கணங்களுட் சிலவற்றை, "அகலியநுதலின" "நெய்த்திடுமொந்தளிர்நிறத்தநாவின" "வார்ந்துநே ரொத்திடுமெயிற்றின" "புகரறுகோண்மூன்றுகிப்பொற்புறு, முகமுடையன" என்பவற்றானுமறிக. (ருஅ)

உளையினுடன் றலைமயிரு நிறமொன் றாகி
யுரத்தினுடன் கழுத்துரக படமே போன்று
வளைசிறந்த தொனிபரந்து குவிந்துள் வாங்கி
மண்டலமுண் டாயுரங்கொள் குரங்கள் சேர்ந்து
கிளைகொணரம் புகள்கரந்து தசைதா னொன்றிக்
கிளர்முழந்தா ணெளித்தபதங் கெழும லின்றி
நெளிமுதுகு புனைந்துதொடை திரண்டு தண்டை
நீண்டுடல நெய்த்தநிற நீர்மை யாகி.

இ—ள்: உளையினுடன் தலை மயிரும் நிறம் ஒன்று ஆகி - பிடர் மயிருந் தலைமயிரும் ஒரேநிறமாகி;—உரத்தினுடன் கழுத்து உரக படம் போன்று - மார்புங்கழுத்தும் ஆகிருதியாற் சர்ப்பபடம்போன்று;—வளை சிறந்த தொனி பரந்து - அவை சங்கைப்போலச் சிறந்த உள்ளொலி விரவப்பெற்று;—குவிந்து உள்வாங்கி மண்டலம் உண்டாய் உரங்கொள் குரங்கள் சேர்ந்து - குவிந் துட்சுழித்து வட்டாகாரமாய் வலிமைபொருந்திய குளம்புகளையுடையனவாகி;—கிளை கொள் நரம்புகள் மறைந்து - கிளைத்த நரம்புகளெங்கும் மறையப்பெற்று;—தசை தான் ஒன்றிக் கிளர் முழந் தாள் நெளித்த பதம் கெழுமல் இன்றி - முன்னர் ஏனைய அவயவங்கட்கா காவென்று விலக்கிய அத்தசைப்பற்றுத் தான் செறிந்தொன்றிப் பருத்துக் கிளராநின்ற முழந்தாள்கள் உள்வளையப்பெற்ற கால்கள் பொருந்துதலின்றி.—நெளி முதுகு புனைந்து-நெளித்த முதுகுபொருந்தி;—தொடை திரண்டு - தொடைகள் கடைந்தெடுத்தாற்போலத் திரண்டு,—தண்டை நீண்டு - வால் நீண்டு,—உடலம் நெய்த்த நிற நீர்மை ஆகி - உடம்பு நெய்ப்புப்பொருந்திய நிறம்வாய்ந்த மெருகையுடையனவாகி. எ-று.

குவிதல் குமிழ்வடிவாதல். முழந்தாணெளியாமையும் முதுகுநெளித்தலும் இலக்கணமாமென்பார் முழந்தாணெளித்த பதங் கெழுமலின்றி நெளிமுதுகு புனைந்தென்றார். இச்செய்யுளிற்கூறிய இலக்கணங்களுட் சிலவற்றை "ஆய்ந்தகுஞ்சிபோ, ணிகராறு கொய்யுளைநிறமொன்றாயின" "உரமுங்கண்டமும், பைத்திடுமராப்படம்போன்ற" "நாலுகால்களுங் கடைந்தெடுத்து நாட்டினாற், போல்வதாய்" என்பவற்றானுமறிக. (௫௯)

மிக்கசெழு மறைநாவிற் கமல நாதன்
விழிப்புனலில் விண்ணோர்க ளெண்மர் தம்பான்
மைக்கடன்மே லமிர்தத்தி லங்கி மீதின்
மல்குகருப் பையிலுலூக வண்டந் தன்னிற்
றொக்கவெழு பேதமெனு மிவற்றிற் றோன்றுந்
தொன்மையவா யீரிரண்டு துணைத்தா ணெற்றி
யொக்கவெளுக் கும்பரிக ளுளவாய் வானி
லொண்புனலிற் செல்லுநெறி யுளவு மாகி.

இ—ள்: கமல நாதன் மிக்க செழு மறை நாவில் - செந்தாமரை மலரை யாசனமாகவுடைய பிரமாவினது வேதங்களுட் சிறந்த செழுமை யாகிய சாமவேதங் கூறும் நாவிலும்,—விழிப் புனலில் - அவர் யாகஞ்செய் கின்றுழிக் கண்களினின்று மொழுகிய நீரிலும்,—அங்கி மீதில் - அவரது யாகாக்கினியிலும், விண்ணோர்கள் எண்மர் தம்பால் - இந்திரன்முதலிய திக்குப்பாலக ரெண்மரிடத்திலும்,—மைக் கடல் மேல் அமிர்தத்தில்-கரிய சமுத்திரத்திற்றோன்றிய அமிர்தத்திலும்.—மல்கு கருப்பையில் - உரிய மாசம்நிரம்பிய கருப்பையிலும்,—உலூக அண்டம் தன்னில் தொக்க எழு பேதமெனும் இவற்றில் தோன்றும் தொன்மைய ஆய் - இலக்குமிசாபத் தாற கோட்டான்வடிவமைந்த பிரமா இட்ட முட்டையிலுந் தோன்றிய எழுவகையாகிய இக்குதிரைகளின் மரபிற்பிறந்த பழைய உற்பத்திக்கிர மத்தை யுடையனவாய்.—ஈர் இரண்டு துணைத் தாள் நெற்றி ஒக்க வெளு க்கும் பரிகள் உள ஆய் - நான்குகால்களும் முகமும் ஒருசேர வெண்ணிறம் வாய்ந்திருக்கும் பஞ்சகல்யாணியென்னுங் குதிரைகளை இக்குதிரைச் சேனைசமூகங்களுடையனவாய்,—வானில் ஒண்புனலில் செல்லும் நெறி உளவும் ஆகி - ஆகாயத்திலும் அழகிய நீரினுஞ்செல்லும் விசித்திரவிகற்ப கதிகளை உடையனவுமாகி. எ-று.

மைக்கடல் இனவடை. நான்குகால்களுள் இவ்விரண் டொவ்வோ ரிணையாகலிற் றுணைத்தாளென்றார். பஞ்சகல்யாணியென்னுங் குதிரையி னிலக்கணத்தை "முகமார்புச்சிவால்காலென் றுரைத்த வெட்டுறுப்பினும் வெண்மை. விரவியதட்டமங்கலந் தலைவால்வியனிறமென்ற விம்மூன்று, மொருவியவுறுப்போரைந்தினும்வெண்மையுள்ளது பஞ்சகல்யாணி" என் பதனானறிக. (சு௦)

மங்காளன் சாரங்கன் கங்கா நீலன்
  மௌவழகன் கொங்காளன் சன்ன சம்பான்
குங்குமச்சோ ரன்கரியா னீலன் சாரன்
  குலவுமள்ளா னுரஞ்சிவந்தா னல்லான் பொல்லான்
றங்குகருங் காற்சம்பா னென்று கூறுந்
  தன்மையுள பன்னிறமும் புனைந்த சாதித்
துங்கமிகும் பரியிவையென் றவற்றின் றன்மைத்
  தொன்மையுரைத் தரசனைமுன் றொழுது நின்றார்.

இ—ள்: மங்காளன் ... ... தன்மை உள - மங்காளனும் சாரங்க னும் கங்காநீலனும் மௌவழகனும் கொங்காளனும் சன்னசம்பானும் குங் குமச்சோரனும் கரியானும் நீலனும் சாரனும் விளங்குகின்ற மள்ளானும் உரஞ்சிவந்தானும் நல்லானும் பொல்லானும் பொருந்திய கருங்காற்சம்பா னுமென்று கூறப்படும் பதினைந்து பாகுபாடுபொருந்திய இலக்கணங்களை யுடைய,—பல் நிறமும் புனைந்த சாதித் துங்க மிகும் பரி இவை என்று -

பலசிறவேறுபாடுகளையுமுடைய உயர்ந்தசாதிக்குதிரைகள் இவையென்று,- அவற்றின் தொன்மைத் தன்மை உரைத்து அரசனை முன் தொழுது நின்றார் - அவைகளின்பழைய வரலாற்றுமுறைமைகளை விண்ணப்பஞ்செய்து பாண்டியராசனை எதிரேவணங்கிப் பரீக்ஷகர் நின்றனர், எ-று.

தாவினை என்னும் செய்யுண் முதல் இதுகாறுமுள்ள குளகமாகிய எட்டுச்செய்யுள்கட்கும் சொன்முடிபு பொருண்முடிபுகளை வரையறுத்து அசுவலக்கணங்களை விரித்துரைசெய்தற்கு மேற்கோள் யாண்டு மகப்படா மையின், சிறுவர்பொருட்டு, அவற்றின் பழையவுரையினையே பெரும்பான் மையும் ஈண்டுத் தந்து, இனி அப்பாற் செல்லுதுமென்க. (சக)

நற்பரியி னியல்புணர்ந்தோ ரின்ன வாறு
நவின்றமொழி கேட்டுமிக நயந்து வெள்ளி
வெற்பனைய விடையேறி யளிக்குந் தெய்வ
வெம்பரிகள் யாவும்விலை மதித்த பின்னர்ப்
பொற்புடைய தன்பொருண்மே லெண்ம டங்கு
போதுதலாற் பொங்குமகிழ் வெய்தி மாறன்
றற்பரனை முகநாடிக் கயிறு மாறித்
தருகதுர கத்தொகுதி தம்மை யென்றான்.

இ—ள்: நல் பரியின் இயல்பு உணர்ந்தோர் இன்னவாறு நவின்ற மொழி மாறன் கேட்டு - நல்ல அசுவலக்கண நூலை ஓதியுணர்ந்த பண்டிதர்களாகிய பரீக்ஷகர் இந்தப்பிரகாரங் கூறிய வார்த்தைகளைப் பாண்டியன் கேட்டு,—மிக நயந்து - முன்னையினும் மிக விருப்பங்கூர்ந்து,—வெள்ளி வெற்பு அனைய விடை ஏறி அளிக்கும் தெய்வ வெம் பரிகள் யாவும் விலை மதித்த பின்னர் - வெள்ளிமயமாகிய கைலாசகிரியைப்போலும் இடபத்தை வாகனமாகவூரும் சோமசுந்தரக்கடவுளாகிய அச்சுவபதி கொடுக்கும் வெவ்விய குதிரைகளெல்லாம் விலைமதிக்கப்பட்டபின்னர்,—பொற்பு உடைய தன் பொருள் மேல் எண் மடங்கு போதுதலால்-பொலிவையுடைய தன்றிரவியத்தின்மேல் எண்மடங்கு விலைமிகுதலினால்,—பொங்கு மகிழ்வு எய்தி- பெருமகிழ்ச்சியடைந்து,—தன் பரனை முக நாடி - ஆன்மாவுக்கு மேற்பட்ட சோமசுந்தரக்கடவுளாகிய அவ்வச்சுவபதியை முகத்திற்பொருந்தப் பார்த்து,—துரகத் தொகுதி தம்மைக் கயிறுமாறித் தருக என்றான் - குதிரைக்கூட்டங்களை இனிக் கயிறுமாறித் தருகவென்று கூறினான். எ-று.

கயிறுமாறுதலாவது அக்குதிரைக்கூட்டத்துள் ஒருகுதிரையை அலங்கரித்துப் பூசித்து, அதன்கயிற்றைப்பற்றி விற்போர் வாங்குவோர்கையிற் கொடுத்தலாம். (சஉ)

வேறு.

காத்துல கனைத்து முய்யக் கண்ணருள் செய்யு நீதிப்
பார்த்திவன் கருமஞ் செய்வார் பற்றியங் கரத்தில் வாங்கச்

சாத்தவர் தம்மி லாங்கோர் சால்பினர் கயிறு மாறி
யீத்தனர் பந்தி யூடு சேர்த்தன ரிவுளி யெல்லாம்.

இ—ள்: உலகு அனைத்தும் உய்யக் காத்துக் கண் அருள் செய்யும் நீதிப் பார்த்திவன் கருமம் செய்வார் அம் கரத்தில் பற்றி வாங்க - உலகங்களெல்லா முய்யும்வண்ணம் அவற்றைப் பாதுகாத்துக் கண்மருந் தருள் செய்யு மனுநீதியையுடைய பாண்டியராசனது காரியதரிசிகள் அழகிய கையிற்பற்றி வாங்க,—சாத்தவர் தம்மில் ஆங்கோர் சால்பினர் கயிறுமாறி ஈத்தனர் - குதிரைராவுத்தர்களுக்குள்ளே தகுதியையுடைய ஒருவர் கயிறு மாறிக் கொடுத்தனர்,—இவுளி எல்லாம் பந்தி ஊடு சேர்த்தனர் - அப்பொழுது குதிரைகளையெல்லாம் அவர்கள் அரசனது பந்தியின்கட் கொடுசென்றுய்த்தனர். எ று.

வாங்க ஈத்தனரென முடிக்க. ஈந்தனர் எனற் பாலது ஈத்தனர் என வலிக்கும்வழி வலித்தல். இது அறுசீரடியாசிரியவிருத்தம். (சரு)

திண்டிறல் கெழுவு நேமித் தென்றிசைக் கிறையுஞ் செய்ய
வண்டமிழ்க் கிறையுங் காண வந்திடு திசையி னேகிப்
பண்டைநற் படிவ மாகிப் பணிந்துவிண் ணவர்கள் சூழக்
கொண்டலைப் பொருவு கண்டர் குலவுதங் கோயில் புக்கார்.

இ—ள்: கொண்டலைப் பொருவு கண்டர் - முகிலையொக்குங் கரிய கண்டத்தையுடைய சோமசுந்தரக்கடவுளானவர்,—திண் திறல் கெழுவும் நேமித் தென் திசைக்கு இறையும் வண் செய்ய தமிழ்க்கு இறையும் காண வந்திடு திசையின் ஏகி - திண்ணிய வலிமைபொருந்திய ஆஞ்ஞாசக்கிரத்தையுடைய தென்றிசைக்கதிபனாகிய பாண்டியராசனும் வளவிய செந்தமிழ்க்கதிபாகிய திருவாதவூரடிகளுந் தரிசித்துநிற்பத் தாம் முன்னெழுந்தருளிவந்த பூருவதிக்கைநோக்கிப் போய்,—பண்டை நல் படிவம் ஆகி விண்ணவர் பணிந்து சூழக் குலவு தம் கோயில் புக்கார் - பழைய நல்ல திருமேனிகொண்டு தேவர்கள் வணங்கிச் சூழத் தமது விண்ணிழி விமானமாகிய கோயிலின்கட் சென்றருளினார் எ-று.

விண்ணவர்கள் ஏகி, ஆகி, பணிந்து, சூழ; கண்டர் ஏகி, ஆகி, புக்காரென முடிக்க. (சச)

வாய்ந்தன பரிக ளும்மா லென்றெழில் வாத வூரின்
வேந்தரை மனையி லேக விடுத்துள மகிழ்ச்சி கூர்ந்து
சார்ந்தமெய்த் தகைமை யோருந் தானையுஞ் சூழ வேகி
யாய்ந்தநற் றமிழில் வல்ல வரசனுங் கோயில் புக்கான்.

இ—ள்: ஆய்ந்த நல் தமிழில் வல்ல அரசனும் - முதலிடைகடையென்னு முச்சங்கங்களா லாராயப்பட்ட அந்நன்மையினையுடைய தமிழ்மொழியில் வல்ல பாண்டியராசனும்,—எழில் வாதவூரின் வேந்தரை உள

மகிழ்ச்சி கூர்ந்து-அதன்பின்பு திருவாதவூரடிகளை மனமகிழ்ந்து பார்த்து,—நும்மால் பரிகள் வாய்ந்தன என்று மனையின் ஏக விடுத்து - நும்மாலெமக்குக் குதிரைகள் இனிது வாய்த்தனவென்று பிரியவசனங்களைக் கூறி அவரைத் தந்திருமாளிகையிற் செல்லும்படி அனுப்பி,—சார்ந்த மெய்த் தகைமையோரும் தானையும் சூழ ஏகிக் கோயில் புக்கான்-தன்னைச் சார்ந்த உண்மைத்தன்மையுடைய பெரியோர்களுஞ் சேனையுஞ்சூழச் சென்று தன்மாளிகையிற் பிரவேசித்தான். எ-று.

வாய்த்தன எனற்பாலது வாய்ந்தன என மெலிக்கும்வழி மெலித்தல். உம்மை இறந்தது தழீஇயிற்று. மெய்த்தகைமையோர் புரோகிதர் முதலாயினோர். தமிழ்மொழியின தாராய்ச்சிநன்மையை, "கண்ணுதற்பெருங் கடவுளுங் களகயோ டமர்ந்து, பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப்பசுந்தமிழேனை, மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ, லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ" என்பதனானுமறிக. (சரு)

அத்தின மகல மாலை யணைதலும் பரிக ளெல்லா
நித்தன தருளி னாலே நெடுங்குர னரிக ளாகி
மெய்த்தமிழ் மதுரை மூதூர் விழித்துயி லொழிந் திரங்கத்
தத்தமி லுடன்று கூடித் தனித்தனி களித்து நின்று.

இ—ள்: அத்தினம் அகல மாலை அணைதலும் - அப்பகற்காலநீங்க இராக்காலம் வருதலும்,—பரிகள் எல்லாம் நித்தனது அருளினாலே நெடும் குரல் நரிகள் ஆகி - அக்குதிரைகளெல்லாம் அநாதிநித்தியராகிய சிவபெருமானுடைய திருவருளினாலே உச்சவிசையினூளையிடுங்குறுநரிகளாகி,— மெய்த்தமிழ் மதுரை மூதூர் விழித் துயில் ஒழிந்து இரங்க - மெய்ம்மையாகிய தமிழையுடைய பழைய மதுரைமாநகரவாசிகளெல்லாம் கண்மூகிழ்த்து நித்திரைசெய்தலையொழிந் திரங்காநிற்க,—தத்தமில் கூடி உடன்று தனித் தனி களித்து நின்று - தம்மிற்றாமே சூழ்இப்பகைகொண்டு தனித் தனி செருக்குற்றுநின்று. எ-று.

குரலை நெடுங்குரலென விசேடித்தமையின் நரிக்குக் குறுமை வருவிக்கப்பட்டது. தமிழினது மெய்ம்மையை "தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்தது முதலை, யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண்ணுருவாக், கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித், தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்." என்பதனானுமறிக. தினம்-பகல். மாலை-இரா. (சசு)

வேறு.

நின்ற நின்ற நெடும்பரி யாளர்மேற்
சென்று வெம்பகை செய்து வெருட்டியே
துன்று கின்ற துரங்க மொருங்கொடு
கொன்று நின்றுயர் கூவிளிக் கொண்டவால்.

இ—ள்: நின்ற நின்ற நெடும் பரியாளர் மேல்சென்று வெம்பகை செய்து வெருட்டி - அந்நரிகளெல்லாம் ஆங்காங்கு நிற்கின்ற நெடிய குதிரைப்பந்திக் காவலாளர்மீ தெதிர்த்துச் சென்று வெவ்விய பகைவிளைத் தவரை யஞ்சுவித் தோட்டி,—துன்றுகின்ற துரங்கம் ஒருங்கு கொன்று நின்று உயர் கூவிளிக் கொண்ட - நெருங்கிய பழைய குதிரைகளையெல்லா மொருசேரக் கொன்று, பின்பு கொல்லப்படுதற்குக் குதிரைகளின் மையினலே வாளாநின்று பெருங்கூச்சலிட்டன. எ-று.

அடுக்குப் பன்மைபற்றிவந்தது. ஒடு இசைநிறை. இது கலிவிருத்தம். (சஎ)

வரைசெய் கோபுர மாட நெருங்கிய
வரச வீதியு மாவண வீதியு
முரச வோசை முழக்கொழிந் தேமிகக்
குரைசெய் வாய்நரிக் கூக்குர லானதால்.

இ—ள்: வரை செய் கோபுரம் மாடம் நெருங்கிய அரச வீதியும் ஆவண வீதியும் - மலைபோலும் தோற்றப் பொலிவையுடைய கோபுரங்களும் மண்டபங்களுந் தம்முணெருங்கிய இராசவீதிகளினுங் கடைவீதிகளினும்,—முரச ஓசை முழக்கு ஒழிந்து குரை செய் வாய் நரிக் கூக்குரல் ஏ மிக ஆனது - மும்முரசுகளின் பேரொலி அடங்கக் குரைக்கின்ற வாயையுடைய நரிகளின் கூக்குரலே மிக்கது. எ-று.

செய்யென்ப துவமவாசகம். ஓசை முழக்கென்பன தம்முட் சிறிது வேறுபாடுடைய ஒருபொருட் பன்மொழிகள். ஒழிய என்ப தொழிந்தெனத் திரிந்துநின்றது. மும்முரசு கொடைமுரசு, வெற்றிமுரசு, மணமுரசு என்பன. ஓசையுமேனைமுழக்கமுமெனப் பொருள்கோடலுமொன்று. (சஅ)

பாடி யாரணம் போற்ற மன்றிற்பயின்
றாடி யார்விளை யாட்டின் புதுமையா
லோடி யாரு மொளித்திட வென்றொரு
கோடி யானது கூவு நரிக்குழாம்.

இ—ள்: ஆரணம் பாடிப் போற்ற - வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிஷத்துக்கள் தம்புகழைப் பாடிநின்று எட்டாமையினலே துதிக்க,—மன்றில் பயின்று ஆடியார் விளையாட்டின் புதுமையால் - வெள்ளியம்பலத்தின்கணின்று இராசசேகரபாண்டியன்பொருட்டுத் திருவடிமாறியாடியருளிய சோமசுந்தரக்கடவுளது திருவிளையாட்டின் விசேடத்தினலே,—கூவும் நரிக் குழாம்-ஊளையிடுகின்ற நரிக்கூட்டம்,—ஓடி யாரும் ஒளித்திட வென்று ஒரு கோடி ஆனது - ஓடியெவருமொளிக்கும்படி அவரை வென்று ஒருகோடியாகப் பெருகிற்று. எ-று.

புதுமையால் வென்றொருகோடி யானதென வுருபுமுடிக்க. அல்லுழித் தாமெவர்க்கு மஞ்சியோடி யொளிக்குங் குறுநரிகள் திருவிளையாட்

டின் விசேடத்தான் ஈண்டுத் தமக்கெவரு மஞ்சியோடி யொளிக்கும்வண் ணம் வெல்வனவாய் அபிவிருத்தியுமாயினவென்பது கருத்து. ஆரணம் வேதத்தின் ஞானபாகை. எவருமென்றது அந்நகரவாசிக ளெவர்களையு மென்க. இனி ஒளித்திட என்று எனக் கண்ணழித்து, என்றென்பதை உண்ணவென்று ஊடுக்கவென்று வந்தான் என்புழிப்போலக் கொண்டு, ஓடியெவருமொளிக்குமாறு ஒருகோடியாகப் பெருகிற்று எனக் கோடலு மாம். கோடி மிக்க பலவற்றிற்கொன்று காட்டியவாறு. (சுக)

துங்க மாறன் றொகுபடை வெங்கொலை
தங்கு மாயுதந் தாங்கி யெதிர்க்கவே
யெங்கு மான நரிகளெல் லாங்கொடுஞ்
சிங்க மாயமர் செய்யத் தொடங்குமால்.

இ—ள்: துங்க மாறன் தொகு படை வெம் கொலை தங்கும் ஆயுதம் தாங்கி எதிர்க்க - உத்துங்கம்பொருந்திய அரிமர்த்தனபாண்டியனது தொகுதியாகிய சேனைகள் வெவ்விய கொலைத்தொழில் குடிபுகும் பலவகைப் படைக்கலங்களைத் தாங்கி யெதிர்க்க,—எங்கும் ஆன நரிகள் எல்லாம் கொடும் சிங்கம் ஆய் அமர் செய்யத் தொடங்கும் - அந்நகரெங்கும் பரந்த குறுநரிகளெல்லாம் கொடிய மிருகராசனாகிய சிங்கம்போன்று அச் சேனைகளோடு யுத்தஞ்செய்யத் தலைப்படும். எ-று.

ஆக்கம் உவமைகுறித்துநின்றது. எங்குமான நரிகளென்பதற்கு முன் வனமெங்குந்திரிந்த குறுநரிகள் என இழிபுதோன்றப் பொருள்கூறினும் பொருந்தும். உத்துங்கம்-உயர்ச்சி. (ருo)

நீடு வாடை யிடந்தொறு நின்றணி
கூடு வார்மிகக் கூவி வெருட்டுவா
ரோடு வாரொளித் தோடிப் புகுமிடந்
தேடு வாரெதிர் சென்றமர் செய்குவார்.

இ—ள்: கூடல் உளோர் எலாம் - நான்மாடக் கூடலாகிய மதுரைமாநகர வாசிகளெல்லாம்,—நீடு வாடை இடம் தொறும் நின்று அணி கூடுவார்-நெடிய வீதிகடோறு நின்றுநின் றணியணியாகக் கூடுவாரும்,—மிகக் கூவி வெருட்டுவார் - அந்நரிகளினுந் தாமிகக் கூச்சலிட் டச்சுறுத்த வற்றை யோட்டுவாரும்,—ஒளித்து ஓடுவார் - தாமவற்றிற்கஞ்சி யொளித் தோடுவாரும்,—ஓடிப் புகும் இடம் தேடுவார் - அங்ஙன மொளித்தோடிப் புகல்புகுமிடந் தேடுவாரும்,—எதிர் சென்று அமர் செய்குவார் - அவற்றிற் கெதிர்சென்று யுத்தஞ்செய்வாரும். எ-று.

எழுவாய் நற்றவச்செயனன்கிலதானதோ என்னும் பிற்செய்யுளினின்றும் வருவிக்கப்பட்டது. அணி அணிவகுப்பு. வாடை-வீதி. (ருக)

எங்க ளாருயிர் காத்தரு ளின்றணி
திங்க ளாயெனத் தெய்வம் பராவுவா
ரங்க பாட மடைத்தரண் செய்குவார்
மங்கு லாடு மதிற்றலை யேறுவார்.

இ—ள்: அணி திங்களாய் - திருமுடியின்கணணிந்த புனிற்றிளம் பிறையையுடையவரே.—இன்று எங்கள் ஆர் உயிர் காத்தருள் எனத் தெய்வம் பராவுவார் - இத்தினம் அடியேங்களது அரியவுயிரைப் பாதுகாத்தருளுமென்று தங்குலதெய்வமாகிய சோமசுந்தரக்கடவுளைப் பிரார்த்தித்து.—அம் கபாடம் அடைத்து அரண்செய்குவார் - அழகிய கபாடபந்தனஞ்செய்து தம்மைக் காத்துக்கொள்வாரும்.—மங்குல் ஆடும் மதில் தலை ஏறுவார் - முகிலியங்கு மதிலுச்சியி லேறிக்கொள்வாரும். எ-று.

முன்னொருநாள் தக்கன விடருற்றுவந்த சந்திரகலையைத் திருமுடியின்கணணிந்து பாதுகாத்தமைபோல இத்தினம் நரிகளா லிடருற்றுவந்த அடியேங்களைத் தேவரீர் பாதுகாத்தருளுமெனப் பிரார்த்தித்தாரென்பார் எங்களாருயிர்காத்தருளின்றணி திங்களாயெனத்தெய்வம்பராவுவார் என்றார். கேட்க முத்திதருந்தலமாகிய திருவாலவாயிற் பிறக்கவும் வசிக்கவும் பெற்ற அத்துணையரிய உயிரென்பது விளக்குதற்கு ஆருயிரென விசேடிக்கப்பட்டது. திருவாலவாய் கேட்க முத்திதருந்தலமென்பது "அறந்தழையுந் திருவால வாய்கேட்ட வுடன்போக மளிக்கு மீண்டு, பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கும்" என்பதனானுமறிக. கபாடம்-கதவு. உட்புகுந்தோரை இடருறாது காக்கும் வலியையுடைய கபாடமென்பார் அங்கபாடமென்றார். பராவுவாரென்னும் முற்றை எச்சமாக்கி ஈண்டும் முற்செய்யுளினுந் தனித்தனி கூட்டுக. (௫உ)

நற்றவச் செய னன்கில தானதோ
கொற்றவன் செய்ய கோல்கொடி தானதோ
விற்றிதன் பய னென்னென வின்னண
முற்றிரங் கினர் கூடலு ளோரெலாம்.

இ—ள்: நல் தவச் செயல் நன்கு இலது ஆனதோ - நல்ல தவத்தொழிலானது நந்தேயத்து மிகவுமில்லாதொழிந்ததோ,—கொற்றவன் செய்ய கோல் கொடிது ஆனதோ - அல்லது வெற்றியையுடைய நம்மரசனது செங்கோல் கொடுங்கோலாயிற்றோ,—இற்றிதன் பயன் என் என இன்னணம் உற்று இரங்கினர் - பரி நரியாக உருத்திரிந்த இதனது தாற்பரிய மென்னையோ வென்று வியாகுலமுற் றிரங்கினார்கள். எ-று.

இற்றிதென்ப தொருசொன்னீர்மைத்து. இன்னவண்ணமென்பது இன்னணமென மரீஇயிற்று. நன்கு-மிகுதி. மிகவு மின்மை முழுவது மின்மை. (௫௩)

தூயவன் றுரகத் தொழி லாளர்கள்
கோயிலின் கடைக் கூக்குரல் செய்துபோய்
மாயவெம் பரி வந்தவெ லாநரி
யாயவென் றர சற்கெதிர் கூறினர்.

இ—ள்: தூய வன் துரகத் தொழில் ஆளர்கள் கோயிலின்கடைக் கூக்குரல் செய்து போய் - சுத்தமாகிய வலிய குதிரைகளைக் காக்குங் காவலாளர் அப்பொழுதிராசமாளிகையின் வாய்தலில் அரசனை விளித்தார வாரஞ்செய்து போய்,—மாய வந்த வெம் பரி எலாம் நரி ஆய என்று அரசற்கு எதிர் கூறினர் - பகலில் இங்ஙனம் மாயமாகவந்த வெவ்விய குதிரைகளெல்லாம் இப்பொழுது நரிகளாயினவென் றரசனுக் கெதிர்சென்றுநின்று விண்ணப்பஞ்செய்தார். எ-று.

குதிரைக்குச் சுத்தம் அசுவலக்கணநூலில் விதிக்கப்பட்டன வுண்மையும் விலக்கப்பட்டன வின்மையுமாம். இதுபொழுது நரிகளானமையினுலே முன் மாயமாகவந்த குதிரைகளென்பது அறியப்படுமென்பார் மாயவெம்பரிவந்தவெலாமென்றார். (ருச)

மாக்க ளோசையும் வாம்பரி யோசையுங்
கூக் குலாவு குறுநரி யோசையு
மீக்கொண் மாமுடி மீனவன் றன்செவித்
தீக்கொள் வேலைச் செருகிய தொத்தவே.

இ—ள்: மாக்காள் ஓசையும் - அந்நகரத்து மனிதர்களது ஆரவாரமும்,—வாம் பரி ஓசையும் - தாவுகின்ற குதிரைகளின் ஆரவாரமும்,—கூக் குலாவு குறு நரி ஓசையும் - ஊளையிடுகின்ற குறுநரிகளினது ஆரவாரமும்,—மீக்கொள் மாமுடி மீனவன் செவித் தீக் கொள் வேலைச் செருகியது ஒத்த - சிரசின்மீது கவிக்கின்ற பெரிய முடியையுடைய பாண்டியனது செவித்துவாரங்களிலே அக்கினியிற் பழுக்கக்காய்ச்சிய வேலைச் செருகியதுபோல மிகவருத்தின. எ-று.

கூக்குரல்குலாவுமெனற்பாலது கூக்குலாவெனக் கடைக்குறைந்து நின்றது. மீ ஆகுபெயர். மாக்களோசையெனவே மேலைச்செய்யுளிற் கூறிய காவலாளரோசையு மடங்கிற்று. ஈண்டு வாம்பரி என்றது நரிகளாற் கடியுண்டு கொல்லப்படா தெஞ்சிநின்ற பழையகுதிரைகளை; முன்னர்த் துன்றுகின்ற துரங்கமொருங்கொடு கொன்றென்றது கமுகந்தோட்டமென்றாற்போல மிகுதிபற்றிக் கூறிய கூற்றாகலின் மாறுகொளக் கூறலன்றென்க. அவ்வோசைகண் மூன்றுஞ் செவிவாயிலாக உட்சென்றரசனை மிகவும் வருத்தினவென்பார் மீனவன்றன் செவித் தீக்கொள் வேலைச்செருகிய தொத்த என்றுவமைமுகத்தான் விளக்கியொழிந்தார். மீக்கொண்மாமுடி என்பதற்கு இராசசின்ன மிருபத்தொன்றினுள்ளும்

மேற்பட்ட முடியெனினு மமையும். அவை மேலே காட்டப்பட்டன. குறுநரி சாதியடை. (ருரு)

இந்த வாறொலி கேட்டிரு கண்டழல்
சிந்த வாகஞ் சிறுவெயர்ப் பெய்திட
வந்த மாறன் வெகுட்சிகண் டண்ணலார்
வந்த மாய நரிப்படை மாற்றினார்.

இ—ள்: இந்த ஆறு ஒலி கேட்டு - இந்தப்பிரகாரம் அவ்வொலி களைக்கேட்டு,—இரு கண் தழல் சிந்த ஆகம் சிறுவெயர்ப்பு எய்திட அந்த மாறன் வெகுட்சி அண்ணலார் கண்டு - இருகண்களும் அக்கினிப்பொறி சிதறச் சரீரம் குறுவெயர்வைகொள்ள அவ்வரிமர்த்தனபாண்டியன் பெருங்கோபமுறுதலைச் சோமசுந்தரக்கடவுள் திருக்கண்சாத்தி,—மாயம்வந்த நரிப் படை மாற்றினார் - வனத்தினின்று மாயமாகவந்த நரிப்படைகளை மாற்றியருளினார். எ-று.

இந்தவாறென ஈண்டுச் சுட்டியது மேலைச்செய்யுளிற் பெறப்பட்ட செவித் தீக்கொள் வேலைச் செருகியதொப்ப வருத்தியவாற்றையென்க. ஆகம் மார்பெனினுமமையும். இந்நரிகள் முன் குதிரையாய்வந்தமையின் அவற்றைப் படையென்றார். (ருசு)

பொன்கொ ணாடன் புனைந்த நலந்திகழ்
மின்கொ ளாரம் விளங்கிய மார்பினான்
றன்க ணாகி நடப்பவர் தண்டல்செய்
வன்க ணாளரை வம்மெனக் கூவினான்.

இ—ள்: பொன் கொள் நாடன் புனைந்த நலம் திகழ் மின் கொள் ஆரம் விளங்கிய மார்பினான் - சுவர்க்கலோகாதிபனாகிய இந்திரன் ஓர் வினையம்பற்றிக் கொடுவந்து தரித்த அழகுவிளங்கும் ஒளிசெறிந்த பதக்கம் அவ்வினையமற்றுப் பிரகாசியாநின்ற மார்பையுடைய பாண்டியனானவன்,—தன் கண் ஆகி நடப்பவர் தண்டல் செய் வன்கணாளரை வம்மெனக் கூவினான் - தனக்குத் தன்கண்போன் றின்றியமையா தொழுகுபவராகிய வன்கண்மையையுடைய தண்டலாளரை ஈண்டு வம்மின்களென் றழைத்தான். எ-று.

வம்மினெனக் கூவினானெனற்பால தீண்டு முன்னிலைப்பன்மை விகுதி புணர்ந்து கெட்டு வம்மெனநின்றது. அது "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொற், செய்யென் கிளவி யாகிட னுடைத்தே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்து மொழிந்தபொருளோடொன் றவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தலென்னுந் தந்திரவுத்தியாற்கொள்க. நலம்-அழகு. வினையம்-உபாயம். அஃதாவது:—முந்தொர்நாண் மூவிரு முகமுடைமுதல்வன், வந்துதென்பாண்டி மதுரைமாநகர்வயி, னுக்கிரபாண்டிய னெனுந்திருநாமமெண், டிக்கினும்வானினுஞ் சிவணவீ

ற்றிருந்துழிக், கோணிலைதிரிதலிற் கொண்மூநிலைதிரிந், தாண்டுபன்னிர
ண்டுகா றவனிநீந்தழலெழ, மாண்டகுசிறப்பின் மாமழைமறுத்தலும், புவி
யுறுமுயிர்பசி பொறாதுநொந்திறுவது, செவியுறயாதுநாஞ் செய்வதிங்கி
னியெனாத், தத்தமிற்சாலவுந் தளர்வுறுநிலைமைகொண், மூத்தமிழ்நாட்டு
மூவேந்தருங்குழீஇ யருந்தமிழ்க்கிலக்கண மமலனன் றருளப், பொருந்திய
முனிவரன் பொன்னடிவணங்கி, மாமுகில்வறங்கூர் வண்ணமும் புகன்
றிது, தீர்திறமெந்தை தெரித்தருள்செய்யென, மாகநாயகமொடு மகநாய
கமு, மேகநாயகமுமிம் மேதினியரசர்க், கேகநாயகமு மிந்திரனுடைமை
யிற், போகநாயகனும் புரந்தரற்காணுமா, றேகநுங்கவலைவிட் டேகுமேகு
வதுஞ், சோமவாரவிரதநீர் தொடங்குறிற், சோமசுந்தரன் றொல்பேரருளி,
னாகுமென் றவ்விர தத்தையாகமநெறி, நோற்றிடுமாறு நுவன்றிடுகுறுமுனி,
பாற்பெறுவிடைகொடு படருமுப்பதிகளு, முப்பெருஞ்சங்க வைப்பிடைக்
குறுகி, யம்பலத்தமுதின் செம்பொனாரடிதொழு, தவாவொடவ்விரதந்
தவாதநுட்டித்தலும், விண்டலத்தும்பரவ் விரதநற்பலமாஞ், சண்டமாரு
தந்தமைக் கொண்டுபுக்கெறிதலின், போகிமுன்போகிப் புகுமுன்புரந்த
ரன், றன்னரியணையிற் றாழ்வுறத்தவிசுமூன், றன்னவர்க்கிடுவித் தாங்கி
னிதிருப்பவச், சேரனுஞ்சோழனுஞ் சென்றரிசுட்டிய, சீரியவாசனந் திகழ
வீற்றிருந்துழி, யுக்கிரபாண்டிய னுவன்கீழிருப்பது, தக்கதன்றெனக்
கெனாத் தானவன் றவிசிடைப், புக்கவனொடுசமம் பொலியவீற்றிருந்தனன்,
கௌசிகனுங்கது கண்டுகேட்பொறிதீச், சிதறமற்றிருவரைச் செவ்விதினோ
க்கினீர், வந்ததென்வேண்டும் வரமென்வழங்குது, நொந்துளங்கவல்கிலீர்
நுவலுமென் றுசவலு, முச்சுடர்க்குலத்து முதலிருகுலத்தரும், வச்சிரக்
கரன்சொல் வாசகம்வினவி, யாறிருவற்சரங் கோள்வழுக்குறுதலின், மாரி
பொய்த்துலக மம்மருற்றயருங், காரியம்யாவதுங் கழறிநின்கண்ணருட்,
பேறலாதிலையெம் பெருமநம்வரனெ, முடிவயின்மூன் றுகொண் முப்ப
துகோடி, வடிவமைசுரர்க்கொரு வாழ்வெனும்வலாரிகேட், டடைந்தவர்
க்குதவலி னறம்பிறி திலாமை, சிறந்திடுதநீசிபாற் றூன்மூனந்தெளிதலி,
னிங்கிவர்க்குதவ லினிதெனமதித்துநும், மல்லனீர்மலைநாட் டெல்லைசூழ
கவயின், மாதமும்மாரி வழாதுவான்பிலிற்றுமென், றோதலுஞ்செலவுபெற்
றொருவியவ்விருவரும், பூதலம்மழைவளந் தம்மொடும்புக்கனர், ஈதுநின்
றிடவிருந் தவிசிருந்தவனுயிர், காதலேபொருளதாக் கடவுளர்க்கரசனு,
மணிதரின்னெவரைய மாருயிர்கவருமோர், திணிதரும்மாரமே திண்ணி
திற் கைக்கொளா, வந்துநம்முக்கிர வழுதிகந்தரமதிற், றந்துசன்மானியிற்
றானவணிற்றலு, மீரமொன்றின்றியவ் விந்திரன்னணிதரு, மாரமோவெந்
தையை யடுவதாரறிகிலார், விண்டுநீள்சக்கரம் வீரமார்தாரகன், கண்டமே
கொண்டவா கவினொடுங்குற்றதாற், காரணம்மதுகொடெங் கட்வுணீருல
கிடை, யாரமேதாங்கு பாண்டியனெனலாயினு, னங்கவன் றன்வழித்
தோன்றலாய்மர்தலி, னிங்கிவன்னங்கவன் னியல்புகோட்பட்டனன்,

வினையுமிங்கிஃதெனு விடுகவின்மீனள, வினையதொன்ருவதோ வரு முகன்னுடலே. (ருள)

வே று.

நரியினிற் ருெகுதி யெல்லா நற்பரித் திரள்க ளாக்குஞ்
சரிதியைக் கொணர்தி ரென்னத் தாடொழு தவர்க ளோடி
யிருபிறப் புடைய ராகி யினிப்பிறப் பில்லார் தம்மை
விரைவினிற் குறுகி நும்மை யழைத்தனன் வேந்த னென்ருர்.

இ—ள்: நரியினில் தொகுதி எல்லாம் நல் பரித்திரள்கள் ஆக்கும் சரிதியைக் கொணர்திர் என்ன - அவ்வரசன் அத்தண்டலாளரைநோக்கி நரியினது கூட்டங்களையெல்லாம் நல்ல குதிரைக்கூட்டங்களாகத் திரித்தபடிற்ருெழுக்கத்தையுடைய நம்முதன்மந்திரியை ஈண்டழைத்துக் கொடுவருகவென்று பணிப்ப,—அவர்கள் தாள் தொழுது ஓடி இரு பிறப்பு உடையர் ஆகி இனிப் பிறப்பு இல்லார் தம்மை விரைவினில் குறுகி - அவர்கள் அவ்வரசனது பாதங்களை வணங்கி விரைந்துசென்று, உபநயனத்துக்குமுன்ஞெருபிறப்பும் பின்ஞெருபிறப்புமாகிய இருபிறப்புடையராகி இனி ஒருபிறப்புமில்லாத திருவாதவூரடிகளை விரைவினடைந்து,—வேந்தன் நும்மை அழைத்தனன் என்ருர் - நம்மரசன் நும்மை அழைக்கின்ருனென்று விண்ணப்பஞ்செய்தனர். எ-று.

சரிதம்-ஒழுக்கம். அஃது ஈண்டுப் படிற்ருெழுக்கின்மேற்றென்பது விளக்குதற்கு நரியினிற்ருெகுதியெல்லாநற்பரித்திரள்களாக்குஞ்சரிதிஎன விசேடிக்கப்பட்டது. நரியினிற்ருெகுதி என்புழி ஆறனுருபின் கிழமைப் பொருள் ஏழனுருபோடு தகுதிபற்றிவந்தது; உயிரினுணர்வென்புழிப் போல. இது அறுசீரடியாசிரியவிருத்தம். (ருஅ)

சித்தருக் கன்பு பூண்ட சித்தரு முறுவல் செய்து
நித்திலத் தொளிபோன் மின்னு நீறெனுஞ் சாந்து பூசிப்
பத்தருக் கேவல் செய்வார் பதமலர் முடியிற் சூடி
முத்தமிழ்ப் பொருநை நாடன் முன்பு சென் றருகு நின்ருர்.

இ—ள்: சித்தருக்கு அன்பு பூண்ட சித்தரும் முறுவல் செய்து - எல்லாம்வல்ல சித்தராகிய சோமசுந்தரக்கடவுண்மாட் டன்புபொருந்துஞ் சித்தத்தையுடைய திருவாதவூரடிகளும் அதுகேட்டுத் திருப்புன்முறுவல் செய்து,—நித்திலத்து ஒளி போல் மின்னும் நீறு எனும் சாந்து பூசி - முத்தின தொளியைப்போல வெண்ணிறம் பிரகாசிக்கும் விபூதியாகிய அங்கராகத்தைப் பூசி,—பத்தருக்கு ஏவல் செய்வார் பத மலர் முடியில் சூடி - தம்மெய்யன்பருக் கெளியராகி அவர் பணிசெய்வாராகிய சோமசுந்தரக் கடவுளினுடைய பாததாமரைகளைச் சிரசில்வைத்து வணங்கி,—முத்தமிழ்ப் பொருநை நாடன் முன்பு சென்று அருகு நின்ருர் - முத்தமிழ்வழங்கும் தாமிரபர்ணிநதி பிரவாகிக்கும் நாட்டையுடைய அரிமர்த்தன பாண்டியனுக் கெதிர்சென்று பக்கத் தொதுங்கிநின்ருர். எ-று.

முத்தமிழ்நாடு பொருநைநாடெனத் தனித்தனி கூட்டுக. சித்தரென்
பவற்றுட் பின்னையதற்குச் சேதனரெனப் பொருள்கொள்வாருமுளர்.
தம்பொருட்டு நரி பரியாக்கிய சிவபெருமானால் மீளப் பரி நரியாக்கப்படு
மெனவும், அதுபற்றி அரசனுக்குத் தம்மாட்டு வெகுளி நிகழுமெனவும்,
அவ்வெகுளிபற்றித் தண்டத்தலைவரைத் தம்மாட்டனுப்புவனெனவும்,
அதுபற்றித் தமக்குவருவதோர் கேடின்றெனவும், வரினும் விரைந்தெதிர்
நின் றவரே நீக்கியருளுவாரெனவும் தாம் முன்னுரோடர்புபட உத்தேசித்தி
ருந்தபிரகாரமே பின் நிகழ்கின் றனவெனத் திருவாதவூரடிகள் தம்முட்
சிரித்து மகிழ்ந்தாரென்பார் சித்தருக்கன்புபூண்ட சித்தருமுறுவல் செய்
தென்றும். கருநிறவிபூதியுஞ் செந்நிறவிபூதியும் புகைநிறவிபூதியும்
பொன்னிறவிபூதியுந் தரிக்கத் தகாவென விலக்கப்பட்டமையின், வெண்
ணிறவிபூதியொன்றே தரிக்கத் தகுமென்பதுபற்றி அதனை நித்திலத்தொ
ளிபோன்மின்னுநீறென விசேடித்தும், புறத்தே செல்வார் விபூதிதரித்தே
செல்லவேண்டுமென்பது சமயசம்பிரதாயமாகலின் அங்ஙனமே செய்தா
ரென்பார் நீறுபூசியென்றும். அந்நீறே இவ்வடிகட்கு இராசசமூகஞ் செல்
வோர் தரிக்கும் பரிமளதிரவியமுமெனக் கொள்ளற்பாலதென்பார் அதனை
நீறெனுஞ்சாந்தென உருவகித்தும், சிவபெருமான் தம் மெய்யன்பருக்
கெளியராய் அவர்க்குத் தம்மையின்றியமையாத ஏவல்கள்செய் தொழுகுப
வராகலின் அவ்வாறே இனித் தமக்கரசனாற் றண்டநிகழும்வழித் தமக்
கெளியராய்வந்து தம்மைத் தவறாது பாதுகாப்பாரெனச் சிந்தித் தவரை
முன்னர் ஆலயத்து வணங்கிக்கொண்டே பின் அரசன் முன் சென்று
ரென்பார் பத்தருக்கேவல்செய்வார் பதமலர்முடியிற்சூடி முத்தமிழ்ப்பொ
ருநைநாடன் முன்புசென்றென்றும், அரசனுக்கெதிரே சபைக்கு மத்தியி
னில்லாது சபைக்கேற்ப ஒருபக்கத்தொதுங்கிநின்றார் என்பார் முன்பு
சென் றருகுநின்றாரென்றுங் கூறினர். இனித் திருவாதவூரடிகள் சட்கா
லத்தும் அந்தரியாகபூசைசெய்பவராகலின், அதுபற்றிப் பத்தருக்கேவல்
செய்வார் பதமலர்முடியிற்சூடி என்றாரெனினுமமையும். அடிகள் என்றும்
சட்காலபூசை செய்தமையை, "எழுதரு மறைக டேறா விறைவனை யெல்
லிற் கங்குற், பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்தே,
தொழுதகை தலைமேலேறத் துளும்புகண் ணீருண்மூழ்கி. யழுதடி யடை
ந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம்" என வழிநூலாசிரியர் கூறியவா
ற்றானுமறிக. அங்கராகம் பூசும் பரிமளதிரவியம். (ருக)

மூட்டெழு மழல்போன் மன்னன் முனிவுடை முகத்த னாகி
யீட்டுநம் பொருள்க ளெல்லா மிரப்பவர் தமக்கு நல்கி
நாட்டுள நரிக ளெல்லா நற்பரி யாக்கி நம்முன்
காட்டின னிவர்செய் மாயங் கண்டிரோ வமைச்ச ரென்றான்.

இ—ள்: மன்னன் மூட்டு எழும் அழல் போல் முனிவு உடை
முகத்தன் ஆகி - அப்பொழுது பாண்டியராசன் சுவாலித்தெழுகின்ற அக்

கினிபோலக் கோபம்பொருந்திய முகத்தையுடையவனாகி,—ஈட்டு நம் பொருள்கள் எல்லாம் இரப்பவர் தமக்கு நல்கி - நாமும் நம்முன்னோரும் வருந்திச் சம்பாதித்த நந்திரவியங்களையெல்லாம் நங்கருத்திற்கு மாறாகத் திருப்பெருந்துறையிலே யாசகர்க்குக் கொடுத்தொழித்து.—நாட்டு உள நரிகள் எல்லாம் நல் பரி ஆக்கி நம்முன் காட்டினர் - இந்நாட்டின்கணுள்ள குறுநரிகளையெல்லாம் நல்ல குதிரைகளாக உருத்திரித்து நம்முன்கொடு வந்தின்று பகற்பொழுது வஞ்சித்துக் காட்டினர்.—அமைச்சர் இவர்செய் மாயம் கண்டிரோ என்றான் - நம்மந்திரிகளே இவர்செய்த மாயவித்தையை நீங்கள் கண்டீர்களா என்று கடிந்து கூறினான். எ-று.

மூண்டெழுமழலெனற்பாலது மூட்டெழுமழலென வலிந்துநின்றது; மூட்டப்பட்டெழு மழல்போலென்றுமாம். அமைச்சர் அண்மைவிளி. அமைச்சிர் எனவும் பாடம். (கூ௦)

தன்றொழில் வழுவி னோர்க டமக்குறு துயரஞ் செய்தல்
வன்றிற லரசர் நீதி யாயினு மறைவல் லாளர்
சென்றுயர் தவத்தி னிற்பார் தெரிவையர் விருத்தர் பால
ரென்றிவர்க் குறுகண் செய்வ தெம்மனோ ரியல்பன் றென்று.

இ—ள்: தன் தொழில் வழுவினோர்கள் தமக்கு - தமதுத்தியோக தருமத்தினின்றும் தவறிய அதிகாரிகட்கு,—உறு துயரம் செய்தல் வன்திறல் அரசர் நீதி ஆயினும் - பெருந்தண்டஞ்செய்தல் மிக்கவலிமையை யுடைய அரசருக்கு நீதிநூற்றுணிபாயினும்,—மறைவல்லாளர் சென்று உயர் தவத்தில் நிற்பார் தெரிவையர் விருத்தர் பாலர் என்ற இவர்க்கு - வேதத்தில்வல்ல பிராமணரும் வனத்தின்கட்சென்றுயர்வாகிய தவவொழுக்கத்தினிற்கும் முனிவரும் பெண்களும் சிறுவரும் என்று சொல்லப்படும் இவர்கட்கு.—உறுகண் செய்வது எம்மனோர் இயல்பு அன்று என்று - அப்பெருந்தண்டஞ்செய்வது நம்மனோர்க்குத் தகுதியன்றென் றவ்வரசன் விதந்துகூறி. எ-று.

தந்தொழில் எதுகைநோக்கித் தன்றொழிலெனப் பன்மையொருமை மயக்கமாயிற்று. அது முன்னர் வழுவினோர்கடமக்கென்பதனானுமறிக. ஈண்டுத் தம்மென்ற தரசரை. நம்மனோர் இவர்கட்கு அதிகதண்டஞ் செய்யாரெனவே அற்பதண்டஞ் செய்வரென்பதூஉம் நாமும் அங்ஙனமேசெய்வேம் என்பதூஉம் பெறப்பட்டன. இங்ஙனம் திருவாதவூரடிகளுக்கு அற்பதண்டமே செய்யப்படுமாறு வருஞ்செய்யுளிற் காண்க. இவ்வாறு ஆற்றொழுக்காக ஆக்ஷேபத்திற் கிடனின்றிப் பொருள்கொள்ள. வறியாதார் மறைவல்லாளர் சென்றுயர்தவத்தினிற் பார்தெரிவையர் விருத்தர் பாலரென்றிவர்க்குறுகண் செய்வதெம்மனோரியல்பன்று ஆயினும் தன்றொழில்வழுவினோர் கடமக்குறுதுயரஞ்செய்தல் வன்றிறலரசர்நீதி எனக் கொண்டுகூட்டிப் பொருள்கொண்டு, இடர்ப்படுப. அங்ஙனங் கொள்ளின்,

அரசனுக்குத் தம்மவர்நீதியோடு தன்னீதி முரணுதலானும், வருஞ்செய்யுள் திருவாதவூரடிகளுக்கு அற்பதண்டமேயல்லது அதிகதண்டம் விதியாமையானும் துயரமென்றது உறுதுயரமென்றது நின்றவற்றுதலானும் பிறவாற்றானும் அது பொருளன்றென்க. அதிகதண்டம் விலங்குபூட்டிச் சிறைசெய்தன்முதலியன. அற்பதண்டம் உபாத்தியாயர்கள் மாணாக்கர்களுக்குச்செய்யும் தண்டம்போல்வன. அதனை வருஞ் செய்யுளிற் காண்க. ஈண்டுக்கூறிய ஐவருள்ளும் திருவாதவூரடிகள் மறைவல்லாளராகலின். அவரை முன்வைத்தார் என்க. (சுக)

தண்டல் செய் வன்க ணாளர் தங்களை நோக்கி நங்கண்
கண்டிட முன்னில் லாமற் கடிதினி விவர்க்கொண் டேகி
மண்டழல் வெயிலி னூடு வளைப்பினி னிறுத்தி நம்பாற்
கொண்டுள தனங்க ளெல்லாங் குறைவற வாங்கு மென்றான்.

இ—ள்: தண்டல் செய் வன்கணாளர் தங்களை நோக்கி - வன்கண்மையையுடைய தண்டத்தலைவர்களை அரசனோக்கி,—நம் கண் கண்டிட முன் நில்லாமல் கடிதினில் இவர்க் கொண்டு ஏகி - நங் கண்காணுமாறு நம்முன்னில்லாமல் விரைவாக இவரை அப்பாற்கொடுசென்று,—மண்டு அழல் வெயிலின் ஊடு வளைப்பினில் நிறுத்தி - சுவாலிக்கின்ற அக்கினி போலும் வெய்யிலிலே கோட்டின்கணிறுத்தி,—நம்பால் கொண்டுள தனங்கள் எல்லாம் குறைவு அற வாங்கும் என்றான் - நம்மாட்டபகரித்த திரவியங்களையெல்லாம் முழுவதும் வாங்குங்களென் றாஞ்ஞாபித்தான். எ-று.

முன் இல்லாமலெனக் கண்ணழித்துரைப்பினு மமையும், கண்கண்டிட முன்னிற்கின் முன்னைப் பயிற்சிபற்றியும் வருணம்பற்றியும் கண்ணோடி இடையே பரிகரித்தல்வேண்டும், வேண்டவே, திரவியமொருங்கிழத்தல் பயனுமாகலின் நங்கண்கண்டிட முன்னில்லாமற் கடிதினிவிவர்க் கொண்டேகி என்றானென்க. (சுஉ)

வன்றிற லேவ லாளர் மற்றவர் தமைக்கொண் டேகி
யொன்றிய வளைப்பி னூடு நிறுத்தலு முலகோர் போற்று
நன்றிகொள் வாத வூரர் நரியெலாம் பரிக ளாக்கித்
தென்றிசை நிருபற் கீந்த சித்தரை நினைந்து சொல்வார்.

இ—ள்: வன் திறல் ஏவலாளர் அவர்தமைக் கொண்டு ஏகி ஒன்றிய வளைப்பின் ஊடு நிறுத்தலும் - மிக்க வலியையுடைய ஏவலாளர்கள் அத்திருவாதவூரடிகளைக் கொடுசென்று இருதலையுந் தம்முளொன்றிய கோட்டினுண்ணிற்பச்செய்தலும்,—உலகோர் போற்றும் நன்றிகொள் வாதவூரர்-இந்நிலவுலகத்தவர் துதிக்கும் நன்மையையுடைய திருவாதவூரடிகள்,—நரி எலாம் பரிகள் ஆக்கித் தென் திசை நிருபற்கு ஈந்த சித்தரை நினைந்து சொல்வார் - வனத்தின்கணுள்ள நரிகளையெல்லாங் குதிரைகளா

க்கித் தென்றிசைக் கரசனுகிய அரிமர்த்தனபாண்டியனுக்குக் கொடுத்த மாயவித்தையையுடைய சோமசுந்தரக்கடவுளைத் தியானித்து இங்ஙனம் விண்ணப்பஞ்செய்வாராயினர். எ-று.

மற்று அசை. உலகோர்போற்று நன்றி சமயகுருத்துவம். அது ஏனைச்சமயிகளாலுந் துதிக்கற்பாலதொன்ருகலின் உலகோரெனப் பொதுப்படக் கூறினர். (கூ௩)

தொல்லையோ ரிருவர் தேடுஞ் சோதியே யாது செய்வேன்
றில்லையோர் பரவ நின்ற தெய்வமே யாது செய்வே
னில்லையோ கருணை நின்பா லின்றெனை யடிமை கொண்டா
யல்லையோ தமியே னின்ன லறிதியோ வறிந்தி லாயோ.

இ—ள்: தொல்லையோர் இருவர் தேடும் சோதியே யாது செய்வேன் - பிரமவிஷ்ணுக்களாகிய பழையோரிருவராலுந் தேடியறியப்படாத செஞ்சோதிவடிவையுடையவரே தமியேனிதற்கு யாதுசெய்வேன்,—தில்லையோர் பரவநின்ற தெய்வமே யாது செய்வேன்-தில்லைவாழ்ந்தணர் வழிபடச் சதாகாலமும் நிருத்ததரிசனங் கொடுத்துக் கனகசபையின்கணின்றருளுகின்ற சுவாமீ தமியே னிதற்கு யாதுசெய்வேன்,—கருணை இன்று நின்பால் இல்லையோ -தேவரீரோடு அபின்னமாகிய திருவருள் இன்று தேவரீர்மாட் டில்லாதொழிந்ததோ,—எனை அடிமைக் கொண்டாய் அல்லையோ-அல்லது தமியேனை அடிமைக்கொண்டீரல்லீரோ,—தமியேன் இன்னல் அறிதியோ அறிந்திலாயோ - சர்வஞ்ஞதையுடைய தேவரீர் தமியேனது இத்துன்பத்தை அறிந்தீரோ அல்லது அறியாதொழிந்தீரோ. எ-று.

எத்துணைப்பெரியராயினும் அன்பரல்லாதார்க் கரியராய் மிகச் சேய்மைக்கண்ணும், அஃதுடையார் எவராயினும் அவர்க்கெளியராய் மிக அணிமைக்கண்ணும் நிற்பவர் என்பதுபோதரத் தொல்லையோரிருவர்தேடுஞ்சோதியே என முன்விளித்தவர் பின் றில்லையோர்பரவநின்ற தெய்வமே என விளித்தாரென்க. தேடுமென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய்த் தேடியறியப்படாமை யுணரநின்றது. "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, யுடம்போ டுயிரிடை நட்பு" என்புழிநட்பென்பதுபோல. இனித்தொல்லையோர் என்பதைத் தொல்லை ஓர் எனக் கண்ணழித்து முன்னொருகாலத்திலென் றுரைத்தலுமாம். இன்னும் ஓரிருவர் என்புழி ஓரென்பது இருவரென்பதன் பகுதியை விசேடித்துநின்றதென்றலுமொன்று. (கூ௪)

பரித்திர ணரியே யான பான்மைகண் டடியேன் றன்னை
வருத்தின ரிதனை மாற்ற வல்லநீ வாரா யென்னிற்
றரித்தனை விடத்தை யென்னுந் தன்மையும் புரங்கண் முன்னா
ளெரித்தது மென்கொ லோவென் றிரங்கின ரெவர்க்குமிக்கார்.

இ—ள்: பரித் திரள் நரியே ஆன பான்மை கண்டு அடியேன் தன்னை வருத்தினர் - தேவரீர் கொடுவந்துநல்கிய குதிரைக்கூட்டங்கள் பின் நரிகளாய்ப் பிறிதுபட்டதன்மையைக்கண் டரசனையுள்ளிட்டோர் தமியேனை வருத்துகின்றனர்,—இதனை நீக்க வல்ல நீ வாராய் என்னில் - இவ்வருத்தத்தை நீக்கவல்ல தேவரீர் எழுந்தருளிவந்து திருவருள்சுரவாதொழிதிராயின்,—விடத்தை முன்னாள் தரித்தனை என்னும் தன்மையும் புரங்கள் எரித்ததும் என்கொலோ என்று - ஆலகாலவிஷத்தைத் திருக்கண்டத்திலே முன் றரித்தருளினீரென்னும் விசேடமும் முப்புரதகனஞ் செய்ததும் அடியாரைப் பாதுகாக்கும்பொருட் டல்லது வேறெதன்பொருட்டோவென்று விண்ணப்பஞ்செய்து,—எவர்க்கும் மிக்கார் இரங்கினர்- நால்வகைப் பக்குவிக ளெவரினுமிக்க திருவாதவூரடிகள் புலம்பினார்.எ-று.

ஏனைத் திருத்தொண்டர்கட்குப் போல வேறுவேறு பிரகாரமாகவன்றிக் கைலாசபதி நேரே ஆகமவிதிப்பிரகாரம் ஞானதேசிகவடிவங்கொண்டெழுந்தருளிவந்து ஞானோபதேசஞ் செயப்பெற்ற மகானுகலின் நால்வகைப்பக்குவிகளுள்ளுந் திருவாதவூரடிகள் சிறந்தவரென்பார் எவர்க்கு மிக்காரென்றார். நால்வகைப்பக்குவம் மேலே காட்டப்பட்டன. (௬௫)

நன்றிகொள் கடவுட் கங்கை நதியினை வைகை யூடு
சென்றெழில் வாத வூரர் பேரிடர் தீரென் றேவி
யன்றொரு மடந்தைக் காளா யடியவர்க் கெளியார் கொன்றை
துன்றிய முடியின் மேன்மண் சுமந்தது முரைத்தல் செய்வாம்.

இ—ள்: அடியவர்க்கு எளியார் - திருவாதவூரடிகளது பிரலாபசுரத்தைத் திருச்செவி சாத்தியருளிய அடியவர்க்கெளியவராகிய சோமசுந்தரக்கடவுளானவர்,—கடவுள் நன்றி கொள் கங்கை நதியினை வைகை ஊடு சென்று எழில் வாதவூரர் பேர் இடர் தீர் என்று ஏவி - தெய்வத்தன்மை பொருந்திய நன்மையினையுடைய கங்காநதியை வைகைநதியின்கட் சென்று திருவாதவூரடிகளது பெருந்துன்பத்தை நீக்கக்கடவையென்று முன்னர் அனுப்பிவிட்டு,—அன்று ஒரு மடந்தைக்கு ஆளாய் கொன்றை துன்றிய முடியின் மேல் மண் சுமந்ததும் உரைத்தல் செய்வாம் - அத்தினத்து வந்தியென்னு மொருபெண்ணுக்குக் கூலியாளாகிக் கொன்றைமாலை பொருந்திய திருமுடியின்மீது மண்சுமந்த சரித்திரத்தையும் யாமிங்ஙனங் கூறுவாம். எ-று.

கங்கைக்குத் தெய்வத்தன்மைபொருந்திய நன்மையாவது அது தன்கட்பதிந்த சிவசத்திவலத்தான் விதிப்படி தன்னிடத்து ஸ்நானஞ்செய்தவரது பாவத்தை விமோசனஞ்செய்து புண்ணியபுருஷராக்கி மறுமையிற் றேவகதியின்கட் செலுத்தலும், வீடுபேறு பயத்தலுமாம். பேரிடர் அநுபவிப்பவரது மென்மைக்குப் பெரிதாயுள்ள இடர். நின்றேற் பெயர்க்கத் தகு மிடரென்றுமாம். இம்மண்சுமந்த திருவிளையாடல் மேற்பாயிரத்துக்

கூறிய வழியினது ஒழிபாய், வந்தியின்பேற்றையு மினிதுவிளக்கி, நுதலிய பொருட் கின்றியமையாது நிற்றலின், இதுவும் இங்ஙனம் ஒருதலையாற் சொல்லற்பாலதாயிற்றெனத் தோற்றுவாய்செய்வார் அது தோன்ற இற ந்ததுதழீஇய வெச்சவும்மைகொடுத்து மண்சுமந்தது முரைத்தல்செய் வாம் என்றார். இது புராணிகர் கூற்றென்க. (சுசு)

குதிரையிட்டசருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் உசசு.

உ

மண்சுமந்தசருக்கம்.

தங்கிய வருளின் மிக்கார் தாம்படு மிடும்பை யுன்னி
யங்கண ரவன்பா லுற்ற வருந்துய ரகற்று கென்று
கங்கையை விடுப்ப வேகிக் கடும்பெருக் கெடுத்து வைகைப்
பொங்கலைப் புனலா யெங்கும் புரண்டது புணரி யேபோல்.

இ—ள்: அங்கணர் தங்கிய அருளின் மிக்கார் படும் இடும்பை உன்னி - அருட்கண்ணையுடைய சிவபெருமானவர் பொதுத்தருமங்களு ளொன்றாகப்பொருந்திய கிருபையினுன் மேம்பட்ட திருவாதவூரடிகள் அனுபவிக்குந் துன்பத்தைத் திருவுளத்தடைத்து,—அவன் பால் உற்ற அரும் துயர் அகற்று கென்று கங்கையை விடுப்ப - அத்திருவாதவூரனிடத் துப் பொருந்திய சகித்தற்கரிய பெருந்துன்பத்தை நீக்கக்கடவையென்று பணித்துக் கங்காநதியையனுப்ப,—ஏகிக் கடும் பெருக்கெடுத்து வைகைப் பொங்கு அலைப் புனலாய் - அதுசென்று மிகப் பெருக்கெடுத்துத் திரை மறிகின்ற நீரையுடைய வேகவதியாய்,—புணரிபோல் எங்கும் புரண்டது- முன்னொருஞான்று வருணன் மதுரைமேல்விட்ட கடலைப்போல எங்கும் புரட்டெடுத்தது. எ-று.

தாமென்பது கட்டுரைச்சுவைக்கண் வந்தது. குச் சாரியை; தன்மை யொருமை விகுதியெனக்கொண்டு, நீக்குவேனெனப் பொருளுரைத்தலு மொன்று. முடிவில் எவ்வாற்றானும் சமுத்திரமாகிய தங்கணயகனிடத் துச் சென்று வைகும் ஏனைநதிகள்போலாகாது என்றும் நிலவலயத்து வைகுவதொன்றாகலின் வைகையெனப் பெயர்பெற்றதென்க; வேகத்தை யுடையதாகலின் வைகையாயிற்றென்பாருமுளர். பொதுத் தருமங்கள் கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின்மகளிர்நயவாமை, கிருபை, வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தந்தை தாய் முதலிய பெரியோரை வழிபடுதன் முதலியன. (க)

சேர்ந்தவெண் முத்த மூரல் செய்துநீர்க் கலைமே லார்த்துக்
காந்தளஞ் செங்கை வீசிக் கனதனக் குரும்பை காட்டி
மாந்தளிர்ப் பதங்கண் மீது வருதிரை ஞெகிழ மார்ப்பப்
போந்துள கணிகை மாதர்ப் போன்றது வைகை யாறு.

இ—ள்: வைகை ஆறு-அவ்வேகவதிநதியானது,—சேர்ந்த வெள் மூத்த மூரல் செய்து - தன்கட்சேர்ந்த வெள்ளிய முத்துக்களாகிய பற்க டோன்றச் சிரித்து,—நீர்க்கலை மேல் ஆர்த்து - நீராகிய வஸ்திரத்தை மேலேகட்டி,—காந்தள் அம் செங்கை வீசி - செங்காந்தண்மலராகிய அழ கிய சிவந்தகைகளைவீசி,—குரும்பைக் கன தனம் காட்டி - தெங்கின் குரு ம்பைகளாகிய கனத்ததனங்களை இடையிடையே காட்டி,—மாந்தளிர்ப் பதங்கள் மீது வரு திரை ஞெகிழம் ஆர்ப்ப - மாந்தளிராகிய கால்களின் மீது ஒன்றன்பின்ஒன்றாய் ஒழியாது வருந் திரைகளாகிய சிலம்புகள் சத் திக்க,—போந்துள கணிகை மாதர்ப் போன்றது - ஒய்யாரமாக நடக்கும் பொதுமகளிரை ஒத்தது. எ-று.

வியாபகம் நீரும், வியாப்பியம் ஆறுமாகலின், நீர்க்கலைமேலார்த்தெ ன்றார். மூரல் பல்லுக்கும் நகைக்கும் பொதுப்பெயராகலின் ஈண்டவ்வி ருபொருளும் கொள்ளப்பட்டன. சேர்ந்த என்பதற்கு இரட்டுறமொழி தலென்பதனாலே தம்முளிளையைந்த எனவும் பொருள்கொண்டு பன்மேலே ற்றுக. இது உருவகமடியாகவந்த உவமாலங்காரம். (உ)

திரைப்பெரு மருப்பி னாலே செழுங்கரை யிருபாற் குத்தி
மரத்திரண் முறித்துச் சாலி வயலெலா மழித்து வாயா
னுரைத்திரள் சிந்தி மீதே நுண்மண லிறைத்து வண்டு
நிரைத்தலின் மதத்த வேழ நிகர்த்தது வைகை யாறு.

இ—ள்: திரைப் பெரு மருப்பினாலே செழும் இரு பால் கரை குத்தி - திரையாகிய பெரிய கொம்புகளினாலே செழுமையாகிய இருகரை களினுங் குத்தி,—திரள் மரம் முறித்து - கூட்டமாகிய மரங்களை முறி த்து,—வயல் சாலி எலாம் அழித்து - வயலின்கணுள்ள நெற்களையெல் லாம் அழித்து,—வாயால் நுரைத் திரள் சிந்தி - வாயினாலே நுரைக்கூட் டங்களைச் சிதறி,—மீதே நுண் மணல் இறைத்து - மேலே நுண்ணிய புழு தியைத் தூற்றி,—வண்டு நிரைத்தலின் - வண்டுகள் வரிசையாக மொய்க் கவருதலின்,—வைகை ஆறு மதத்த வேழம் நிகர்த்தது - வைகைநதி மத யானையை நிகர்த்தது. எ-று.

ஆற்றின்மேற்செல்லுங்கால் வாய் கால்வாய்; வண்டுசுரும்பேயன்றி இரட்டுறமொழிதலாற் சங்குமாம். இதுவு மேலை அலங்காரமென்க. (௩)

மைத்திகழ் குழலா ளந்த மலைமகண் முலையிற் றோய
வத்தனை வருத்து மேன்மை யனங்கவா யுதமென் றெண்ணி

யொத்தெழுந் தொளிருங் கன்ன லுயங்குசெங் கழுநீர் கஞ்சம்
புத்தவை யழிக்க வேண்டிப் புரண்டது பழன மெல்லாம்.

இ—ள்: மைத் திகழ் குழலாள் அந்த மலைமகள் மூலையில் தோய அத்தனை வருத்தும் மேன்மை அநங்க ஆயுதம் என்று எண்ணி - கருமை விளங்குங் கூந்தலையுடைய அப்பார்ப்பதியினது தனங்களிற் புணரும்படி பரமபிதாவாகிய சிவபெருமானை வருத்தும் அம்மகிமையையுடைய மன்மதனது போர்க்கருவிகளென்று கருதி,—ஒத்து எழுந்து ஒளிரும் கன்னல் உயங்கு செங்கழுநீர் கஞ்சம் புத்தவை அழிக்க வேண்டி - தம்முளொன்றையொன்றொத்து வளர்ந்தொளிருங் கரும்பு காமுகரைவருத்தும் அழகிய நீலோற்பலம் தாமரைமலர்களாகிய இப்புதியவற்றை அழிக்க விரும்பி,—பழனம் எல்லாம் புரண்டது - வைகைநதி வயல்களினெல்லாம் புரட்டெடுத்தது. எ-று.

சுட்டுப் பண்டறிசுட்டு. கழுநீர் காமுகருக்குச் சாக்காடென்னுமவத்தையைச் செய்தலின், உயங்குசெங்கழுநீரென்றார். உயக்கென்பது மெலிந்து நின்றது மதன் பஞ்சபாணங்களுள் முதலிறுதிகளினுள்ள இரண்டையுமே யெடுத்துக்கூறினார் ஏனையவற்றையு மகப்படுத்துத் தழீஇக் கோடற்கென்க. பஞ்சபாணங்களை, "நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ, வனைத்திடருண் டாக்கு மசோகு - வனத்திலுள, முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங், கொல்லுமத னம்பின் குணம்" என்பதனானறிக. பழனங்களிலுள்ளன அவையிரண்டுமே யாகலின், அதுபற்றி அவ்விரண்டையுமே ஈண்டெடுத்து விதந்தாரெனக் கோடலுமொன்று. இளங்கரும்பும் நாண்மலர்களுமல்லது முதுகரும்பும் பழம்பூக்களும் மதன் போர்க்கருவிகளாகாமையிற் புத்தவை என்றார். புய்த்தவை எனப்பாடங் கொள்வாருமுளர். புய்த்தல்-பறித்தல். புய்த்தலும் அழித்தலு ளடங்குதலின், அது நின்றுவற்றுமென்க. மலைமகளுங் கங்கையும் சிவபெருமானுக்குத்தேவியர்களாதலானும், அவருண் மலைமகண்மீது வேட்கைமிகும்படி அச்சிவபெருமானை வருத்திய மன்மதனது போர்க்கருவிகளை அழித்தல் அக்கங்கைக்கு உவப்புடையதொன்றாகலானும், கங்கைக்கும் வைகை நதிக்கும் ஈண்டு வேறுபாடின்மையானும், வைகைநதி அப்போர்க்கருவிகளை அழிக்கவேண்டிற்றென்க, புரட்டெடுத்தல் குதிகொண்டுபோய்தல். தன்னியல்பிற் பரந்தநீரை அவைகளை அழிக்கவேண்டிப் புரண்டதாகக் குறித்தலால் இது ஏதுத்தற்குறிப்பென்னும் அலங்காரமென்க. (௪)

வடம்படைத் துடைய பார வனமுலை முகத்து மாத
ரிடுந்துகில் கடுகி வீழ்வ தென்னநின் றழகு செய்து
தடம்படக் கிடந்த தெங்கின் றயங்குசெங் குரும்பை மீது
நெடும்புனற் றிரைபோய் மீள நிவந்தது வைகையாறு.

இ—ள்: வடம் படைத்துடைய பார வன முலை முகத்து மாதர் இடும் துகில் கடுகி வீழ்வது என்ன - முத்துவடந் தங்கப்பெற்ற கனத்த

சந்தனக்கோலமெழுதிய தமது முலைமுன்றில்களின்கண் மகளிரிடும் வஸ்திரங் கடுகிநழுவி விழுவதுபோல.—தடம் படக் கிடந்த தெங்கின் தயங்கு செம் குரும்பை மீது நெடும் புனல் திரை போய் மீள - தனது கரையிற் பொருந்த நிற்குந் தெங்குகளின் விளங்குகின்ற செவ்விய குரும்பைகளின் மீது நெடிய நீர்த்திரைகள்போய் மூடிக் கடுகி வடிய,—வைகைஆறு அழகு செய்து நிவந்து நின்றது - வைகைநதி அலங்காரஞ்செய் துயர்ந்து நின்றது. எ-று.

விகுதிபிரித்துக் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. முத்துவடங்கடம்மழகினும் பேரழகுபெற இனிது தங்கப்பெறு முலையென்பார் வடம் படைத்துடைய முலை என்றும், வஸ்திரத்துண் மறையாது வெளியே தோன்றுந் தனங்கள்போலன்றி, அதனுண்மறைந்து ஒரோவழி வெளியே தோன்றுந் தனங்கள் அழகுசெய்தலின் இடுந்துகில்கடுகி வீழ்வதென்ன வழகுசெய்தென்றும் கூறினர். வைகைநதி தெங்கினளவுயர்ந்து நெடிதுபாய்ந்ததென்பது கருத்து. (௫)

மீதெழு பரிதி கையால் விடுங்கதிர் வெம்மை தீரப்
பூதல மடவாள் போர்க்கும் புதியவெண் டுகிலே போல
யாதலர் பழனஞ் சோலை யாதெனப் பரந்து கஞ்ச
மாதுறை மதுரை மூதூர் மதிற்புறஞ் சென்று சேர்ந்து.

இ—ள்: மீது எழு பரிதி கதிர்க் கையால் விடும் வெம்மை தீரப் பூதல மடவாள் போர்க்கும் புதிய வெண் துகிலே போல-மேலாகவெழுஞ் சூரியன் கிரணமாகிய கைகளால்வீசும் வெம்மை தன்மீதுதாக்காது நீங்கப் பூமிதேவியாகிய பெண் போர்க்கும் வெண்மையாகிய புதியவஸ்திரத்தையே போல,—அலர் பழனம் யாது சோலை யாது எனப் பரந்து - அகன்ற வயல் யாது சோலையாது என்றங்குள்ளார் வினவித் தடுமாற அவைகளை மூடிப் பரந்து,—கஞ்ச மாது உறை மதுரை மூது ஊர்சென்று மதிற் புறஞ் சேர்ந்து - செந்தாமரையாசனியாகிய இலக்குமி வசிக்கும் மதுரையாகிய பழைய இராசதானியிற் சென்று மதிலின்பக்கத்தையடைந்து. எ-று.

போலப் பரந்தெனை முடிக்க. குளகம். (௬)

தாங்கிய துவச வாயிற் றடமதி லிடியத் தள்ளி
யாங்கெழின் மதுரை மூதூ ரழிப்பது போன்று செல்லப்
பாங்குள விடங்க ளெல்லாம் பரந்தது வைகை நன்னீ
ரீங்கினிச் செய்வ தென்னென் றியாவருங் கவற்சிகொண்டார்.

இ—ள்: துவசம் தாங்கிய வாயில் தட மதில் இடியத் தள்ளி ஆங்கு எழில் மதுரை மூதூர் அழிப்பது போன்று செல்ல - கொடிகளைத் தாங்கிய வாயிலையுடைய பெரிய மதிலிடியுமாறு அதனை மோதிச் சாய்த்து அப்பொழுதே அழகிய பழைய மதுரைமாநகரை நாசஞ்செய்வதுபோன்று வைகைநதி குதிகொண்டு பெருக,—பாங்கு உள இடங்கள் எல்லாம்

வைகை நல்நீர் பரந்தது இனி ஈங்குச் செய்வது என் என்று யாவரும் கவற்சி கொண்டார் - நம்பக்கத்துள்ள இடங்களிலெல்லாம வைகையினது நல்லநீர் பரவிற்று. நாமிதற்கினி ஈண்டுச் செயற்பால தென்னையோ வென்று மதுரைமாநகரவாசிகளெல்லாம் மனக்கவலைகொண்டார். எ-று.

வைகைநதி சிவாஞ்ஞையினுலே திருவாதவூரடிகளது சிறைத்துன் பத்தைநீக்கி அரசன்முதலாயினேரை அச்சுறுத்தன்மாத்திரமல்லது அழிவு செய்ய வாராமையின் அழிப்பதுபோன்றென்றும், அதனது பிரவாகத் தைத் தடுத்தற்குத் தம்மாற் செயற்பாலதொன்றுமின்மையின் ஈங்கினிச் செய்வதென்னென்றுங் கூறினர். (எ)

மைக்கடுங் களிற்றுத் தானை வழுதியுங் கடிது நண்ணித்
தொக்கபொன் மலரு முத்துந் துகின்மணிப் பணியு நல்கித்
தக்கவண் புவியி னுள்ளோர் தமக்குயி ரென்னு மன்னே
மிக்கநின் கோப மாறல் வேண்டுமென் றிறைஞ்சி நின்றான்.

இ—ள்: மைக் கடும் களிற்றுத் தானை வழுதியும் கடிது நண்ணித் தொக்க நன் மலரும் முத்தும் துகில் மணிப்பணியும் நல்கி - அப்பொழுது கொடுமையாகிய கரிய யானைச்சேனையையுடைய பாண்டியராசனும் விரை வாகச்சென்று தொகுதியாகிய நல்ல மலர்களையும் முத்துக்களையும் வஸ்தி ரங்களையும் இரத்தினபரணங்களையுமிட்டு,—தக்க வண் புவியில்உள்ளோர் தமக்கு உயிர் என்னும் அன்னே மிக்க நின் கோபம் ஆறல் வேண்டும் என்று இறைஞ்சி நின்றான் - தகுதியாகிய வளவிய பாண்டிநாட்டு மக்க ளுடம்புகட் குயிரென்று சிறப்பித்துச் சொல்லப்படுந் தாயே மிகுதி யாகிய நின்கோபந்தணிதல் வேண்டுமென்று பிரார்த்தித்து வணங்கி நின்றான். எ-று.

ஈண்டுப் புவியென்றது பாண்டிநாட்டையென்பது விளக்குதற்குத் தக்கவண்புவியென விசேடிக்கப்பட்டது. பாண்டிநாட்டினை, "வெள்ளாற் றின் றெற்கு விளங்குகன் னிக்குவடக், குள்ளார் பெருமலைக் கொண்கிழ க்குத்—தள்ளாத, வாழ்ந்த கடல்கிழக் கைம்பத் தறுகாதம், பாண்டிநாட் டெல்லையெனப் பார்" என்பதனனறிக. சிறப்புடைப் பொருளைத்தானி னிது கிளத்தலென்பதனற் பாண்டிநாட் டுயர்திணைப்பொருள்கட்குயிரெ ன்றெழியினும், ஏனை அஃறிணைப்பொருள்கட் குயிரென்பதூஉங் கொள் ளப்படுமென்க. நதியைப் பெண்பாற்படுத்துக் கூறுதல் வடமொழி வழக் கென்பது மேலுங் காட்டினும். வழுதியுமென்னு மும்மை எச்சத்தோடு சிறப்புமாய்நின்றது. தானுள்ளதுணையும் சலியாது வேண்டுவன கொடு த்துப் பாதுகாத்தலிற் பிறழாமையின் அன்னேயென்றனென்க. ஓர் கான் மறந்தும் அஞ்சாநெஞ்சனகிய பாண்டியனும் அஞ்சிக் கடிது போந் தானென்பது போதர மைக்கடுங்களிற்றுத்தானைவழுதியுங்கடிது நண்ணி என்றார். (அ)

கலைமதிக் குலத்து மன்னன் கன்னிநன் ளுடன் கூறுந்
தலைமைமிக் குடைய சொல்லாற் றன்முனி வொழிதலின்றி
மலையெனத் திரைகண் மேன்மேல் வருதல்கண் டிதுவென் னென்
நிலையுறச் சிந்தை யுள்ளே நேடினு னெடிப் பின்னர். [னு

இ—ள்: கலை மதிக் குலத்து மன்னன் கூறும் தலைமை மிக்கு உடைய சொல்லால் - சோடசகலைகளையுடைய சந்திரகுலத்தரசனுகிய பாண்டியன் இங்ஙனம் இரந்து பிரார்த்தித்துக் கூறும் மிக்க தலைமைப் பாட்டையுடைய சொற்களினுற்றானும்,—தன் சினம் தணிதல் இன்றிமலை எனத் திரைகள் மேல் மேல் வருதல் கண்டு-தன்கோபந்தணியாது மலைப்பிரமாணமாகத் திரைகள் மேலுமேலும் அடர்ந்து வருதலைக் கண்டு,—நல் கன்னி நாடன் இது என் என்று சிந்தை உள் நிலை உற நேடினுன் - நல்ல கன்னிநாட்டையுடைய அவ்வரசன் இது அடர்தற்குக் காரணமென்னை யோவென்று தன்மனத்தின்கட்பதிய நெடிதுசிந்தித்தாராய்ந்தான்.— நேடிப் பின்னர் - அங்ஙனமாராய்ந்து அதன்பின்னர். எ-று.

கன்னிநாடனென்பதனைச் சுட்டின்பாற்படுத்தி இங்ஙனம் கொண்டு கூட்டாது நின்றுங்குநிறுத்திப் பொருளுரைப்பினுமமையும். கன்னிநாடு கன்னியா லரசுசெய்யப்பட்ட நாடு. கன்னி தடாதகைப்பிராட்டி. அது "வரைசெய் பூண்முலைத் தடாதகை மடவரற் பிராட்டி, விரைசெய் தார் முடி வேய்ந்துதண் குடைமனு வேந்த, னுரைசெய் நூல்வழிக் கோல் செலக் கன்னியாம் பருவத், தரசு செய்தலாற் கன்னிநாடாயதந் நாடு" என்பதனுனுமறிக. தலைமைமிக்குடையசொல் நதிக்கு முதன்மைமிக்கு டையசொல். அதனை முற்செய்யுளிற் காண்க. தன்னென்றது நதியை. (க)

ஆதியாங் கடவு ளெந்தை யாலவா யமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்த துண்டோ
நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேற்
றீதியாஞ் செய்த துண்டோ செப்புமி னமைச்ச ரென்முன்.

இ—ள்: ஆதி ஆம் கடவுள் - முதற்கடவுளும்,—எந்தை எம்பரமபிதாவும்,—ஆலவாய் அமலன் - திருவாலவாயில் வீற்றிருக்கு மலவிநினைரும்,—மங்கை பாதியான் சிறந்த பூசை பண்டையில் குறைந்தது உண்டோ - அர்த்தநாரீசுவரருமாகிய சொக்கநாதசுவாமிக்குச் சைவாகம விதிப்படி செய்யும் நித்திய மகாபூசை முன்னிலைமையிற் சுருங்கிய துண்டோ,—நீதி ஆம் தவத்தில் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண் மேல் தீது யாம் செய்தது உண்டோ - அல்லது நீதியாகிய தவத்தான் மேம்பட்ட பெரியோர்களது மனம்புழுங்க ஈண்டவர்க்கு நாங் கொடுமைசெய்த துண்டோ,—அமைச்சர் செப்புமின் என்முன் - மந்திரிகளே இவ்விரண்டனுள் இதற்குக் காரணம் யாது சொல்லுங்களென் றரசன் வினவினுன். எ-று.

"முன்னவனூர்கோயிற் பூசைகண்முட்டிடின், மன்னர்க்குத்தீங்குள" வாகலின், ஆலவா யமலன் பூசை பண்டையிற் குறைந்ததுண்டோ எனவும் அடியார்க்குச் செய்ததீங் காண்டார்க்குச்செய்த தீங்கென்பது இடைக்காடர் சரித்திரமுதலியவற்றான் விளங்குதலின், தவத்தின்மிக்கார் நெஞ்சகம்புழுங்கத் தீதியாஞ் செய்ததுண்டோஎனவும் வினவவேண்டிற்றென்க. அமைச்சர் அண்மைவிளி. நீதி மெய்ம்மை; என்றது ஈண்டு மனத்தொடு பொருந்துதலை. 'மந்திரிக் கழகு வருபொரு ளுரைத்தல்' என்பவாகலின், அரசன் மந்திரிகளை வினவினனென்க. இது ஒப்புமைக்கூட்டமென்னு மலங்காரம். "கருதிய குணத்தின் மிகுபொரு ளுடன்வைத், தொருபொரு ளுரைப்ப தொப்புமைக் கூட்டம்" என்பதோத்தாதலின். இதனை வடநூலார் துல்லியயோகிதாலங்காரமென்பர். விகினர்-மூழுதுமில்லாதவர், விடப்பட்டவர். (கO)

விளங்கிள மதிசேர் சென்னி வித்தகர் பத்த ரான
வளந்திகழ் வாதவூரர் வருந்திய வளைப்பி னீக்கி
யுளங்கொள மகிழ்ச்சி செய்யி னுறுபுன லூர்கொ ளாதென்
றளந்தறி வறிந்து கூறி யாங்கவர் தொழுது நின்றார்.

இ—ள்: விளங்கு இள மதி சேர் சென்னி வித்தகர் பத்தர் ஆன வளம் திகழ் வாதவூரர் வருந்திய வளைப்பின் நீக்கி - பிரகாசிக்கின்ற இளம் பிறை பொருந்திய திருமுடியையுடைய அகிலசாதுரியராகிய சிவபெருமானுக் கன்பராயுள்ள அருட்செல்வம் விளங்குந் திருவாதவூரடிகளை அவர் துன்பமுறுங் கோட்டினின்று நீக்கி,—உளம் கொள மகிழ்ச்சி செய்யின் உறு புனல் ஊர் கொளாது என்று - மனங்கொள்ளுமாறவரை மகிழ்விக்கின் மிக்க நீர் நம் மதுரையை அழியாதென்று,—அளந்து அறிவு அறிந்து கூறி அமைச்சர் கை தொழுது நின்றார் - காரியநிகழ்ச்சியாற் காரணத்தையுள்ளவாறளவைசெய் துய்த்துணரு மறிவானறிந்து கூறி அம்மந்திரிகள் அஞ்சலிசெய்து நின்றனர். எ-று.

தக்ஷப்பிரசாபதியின் சாபஞ் சந்திரனை அணுகப்பெறாது அவனைக் காத்த சாதுரியந்தோன்ற விளங்கிள மதிசேர்சென்னிவித்தகர் என்றார். (கக)

மன்னனு மவர்க டம்மேன் மகிழ்ந்தருட் பார்வை நல்கி
யென்னுள மதித்த வாறே யிங்கினி துரைத்தீ ரென்று
கொன்னுறு வளைப்பி னூடு நிற்குநற் குணத்தி னோரை
முன்னுற வழைத்து நட்பான் முகமலர்ந் திதுமொ ழிந்தான்.

இ—ள்: மன்னனும் மகிழ்ந்து அவர்கள் மேல் அருள் பார்வை நல்கி - பாண்டியராசனும் அதுகேட்டு மனமகிழ்ந்து தம் மந்திரிகண்மீது கிருபாநோக்கஞ்செய்து,—என் உளம் மதித்த ஆறே இங்கு இனிது உரைத்தீர் என்று - என் மன முத்தேசித்த பிரகாரமே நீங்களும் ஈண்டினி

தாகக் கூறினீர்களென்று.—கொன் உறு வளேப்பின் ஊடு நிற்கு நல் குண த்திறைை முன் உற அழைத்து நட்பால் முகமலர்ந்து இது மொழிந்தான்- அச்சந்தருங் கோட்டின்கணிற்கும் குணக்குன்ருகிய திருவாதவூரடிகளைத் தன்முன் வருவித்துப் பழைய நட்புரிமைகளோடு முகமலர்ச்சி கொண் டிதனைக் கூறினன். எ-று.

உண்மையுணர்ந்த அப்பொழுதே நீசபங்கமாகிய நட்புரிமைகளாற் பெரிது நன்குமதித்து மகிழ்ந்து கூறினனென்பார் நட்பான் முகமலர்ந் திது மொழிந்தானென்ருர். (கஉ)

பாம்பணி செய்ய வேணிப் பரம்பர னடியார் கையி
லாம்பொரு ணமதே யானு லறம்பிறர்க் காவ துண்டோ
தேம்படு மலங்கன் மார்பிர் செயலிதற் குமது மேனி
சாம்பிய தவமே யான்செய் தண்டமே தகவி லாமை.

இ—ள்: பாம்பு அணி செய்ய வேணிப் பரம் பரன் அடியார் கையில் ஆம் பொருள் நமதே ஆனல் - பாம்பையணிந்த சிவந்த சடையை யுடைய சுத்த மாயாதீதராகிய சிவபெருமானது உத்தமோத்தம சற்பாத் திரமாகிய அடியார்கையிற் கொடுக்கப்பட்ட திரவியம் நம்முடையதேயா னல்,—அறம் பிறர்க்கு ஆவது உண்டோ-அக்கொடையால் வருஞ் சிவபுண் ணியம் அப்பொருட் கர்த்தியராகிய பிறர்க்காகுமோ ஆகாது,—தேம்படும் அலங்கல் மார்பிர் செயல் இதற்கு உமது மேனி அவமே சாம்பியது - வாச னைபொருந்திய தாமரைமலர் மாலையை அணிந்த மார்பையுடையவரே நீதி யாகிய இச்சற்கருமத்தின்பொருட்டு உமதுதிருமேனி இதுகாறுங் கொன்னே வருந்திற்று,—யான் செய் தண்டமே தகவு இலாமை - அங்ங னம் வருந்தும்படி பொறியிலியாகிய யானுமக்கிழைத்த இத்தண்டமே அநீதியுடையது. எ-று.

நம்மென்றது சந்திரகுலத் தேனையரசரையுந் தன்னேடுளப்படுத்தி யாகலிற் பின்னர் யானென்பதனேடு பன்மையொருமை மயக்கமாகாமை யறிக. ஓகாரம் எதிர்மறையாகலின், அவ்வறம் நமக்கேயாகுமென்பதாம். தண்டமேயென்னு மேகாரம் நுங்கொடை குற்றமுடைத்தன்று என்றண் டமே குற்றமுடைத்தெனப் பிரித்தலிற் பிரிநிலே. தகவு-நீதி. தகவிலாமை- அநீதி. தகவிலாமையுடையதைத் தகவிலாமையென்ருெழிந்தது உப சாரம். அவமேயென்னு மேகாரம் தேற்றம். சிவகாருண்ணியம் நிறைந்த உள்ளமுடைய நீர் எவ்வாற்ருனுந் தண்டிக்கப்படும் பாலீ ரல்லீரென்பான் நெஞ்சின் றண்ணளிவிசேடத்தை மாலேக்கேற்பதோர் விசேடத்தானேற் றித் தேம்படு மலங்கன்மார்பிரென விளித்தான் என்க. இதனை வீரக் கழல் என்பதுபோற் கொள்க. (கங)

உற்றவித் தகைமை முன்னே யுணருமிவ் வுணர்வி லாமை
குற்றமித் துணையு நம்மேற் கொண்டனங் குறை கொளாமன்
மற்றினிப் புகலு மாறென் வைகைநம் மூர்கொ ளாது
நற்றவத் தலைவர் நீரே யடைப்பியு மெனந வின்றான்.

இ—ள்: உற்ற இத்தகைமை முன்னே உணரும் இவ் உணர்வு இலாமை குற்றம் இத்துணையும் நம் மேல் கொண்டனம் - நிகழ்ந்த இக்குறைகுணங்களை முன்னரே பகுத்தறியும் அறிவின்மை குற்றமே, அது முழுவதையும் நம்மேலதாகவேகொண்டனம்,—குறை கொளாமல் மற்று இனிப் புகலும் ஆறு என் - நீர் மனக்குறைகொள்ளா தொழியும்படி நாமினி அகலப் பேசவேண்டியதென்னை,—வைகை நம் ஊர் கொளாது நல் தவத் தலைவர் நீரே அடைப்பியும் என நவின்றான் - வைகைநதி நம் மதுரையை அழியாதபிரகாரம் நல்ல தவமுதல்வர் நீரே அதற்கு இனி அணைகட்டுவியுமென் றரசன்கூறினான். எ-று.

ஈண்டு மரசன் நம்மேற்கொண்டனமெனத் தன்மைப் பன்மையாற் கூறியது தன்குழுவினரையு முள்ளிட்டென்க. இது புத்திபூர்வகமாக வன்றி அபுத்திபூர்வகமாகவந்த குற்றமென்பான் முன்னேயுணரு மிவ்வுணர்விலாமை குற்றமென உணர்வின்மேல்வைத்துக் கூறினானென்க. உணர்விலாமைக் குற்ற மெனவும் பாடம். (௧௪)

அருட்பெரு வழுதி யிவ்வா றன்புரை பகர்ந்த போதுந்
தரிப்பரி தென்ன முன்னந் தழலென வெகுண்ட போதும்
விருப்பொடு வெறுப்பிலாத மெய்ம்மையார் தம்மை யாண்ட
திருப்பத நினைந்தார் வைகைச் செழும்புன லூர்கொ ளாமல்.

இ—ள்: அருள் பெரு வழுதி இவ் ஆறு அன்பு உரை பகர்ந்த போதும் - அருளையுடைய நெடுநிலவரசனாகிய பாண்டியன் இந்தப்பிரகாரந் தன்னன்பை வெளிப்படுத்துங் கலப்புரைகளைக் கூறியதருணத்தும்,—தரிப்பு அரிது என்ன முன்னம் தழல் என வெகுண்ட போதும் - இது சகித்தற் கரிதரிதென்று கண்டோர்கூற முன்னரே அக்கினிபோலக் கோபங்கொண்டதருணத்தும்,—விருப்பு ஒடு வெறுப்பு இலாத மெய்ம்மையார் வைகைச் செழும் புனல் ஊர் கொளாமல் தம்மை ஆண்ட திருப்பதம் நினைந்தார் - அவ்வரசன்மாட்டு முறையே விருப்புவெறுப்புக்களில்லாத இருவினையொப்பும் மலபரிபாகமுமாகிய உண்மைநிலையையடைந்த திருவாதவூரடிகள் வைகைநதியினது செழுமையாகிய நீர் அம்மதுரையைக் கவளீகரியா திருக்கும்பொருட்டுத் தம்மை அடிமைகொண்டருளிய திருவடிகளைத் தியானித்தார். எ-று.

நிரனிறை. ஒடு எண்ணொடு. சிவபுண்ணியமுதிர்ச்சியாற் சுகதுக்கங்கடருதற் கேதுவாகிய கன்மமலம் ஒன்றற்கொன்றேறாது துலைபோலத் தம்முளொத்தல் இருவினையொப்பும், தன்சத்தி கெடுதற்குரிய காரணங்க

ளோடு கூடிப் பதனழியும் பருவமுண்மையே மலபரிபாகமுமென்க. அது "நீடு மிருவினைக ணேராக நேரொத்தல், கூடு மிறை சத்திகொளல்" என்றற்றொடக்கத் தான்றோர் திருவாக்குக்களானறிக. (கரு)

சுந்தரப் பரிமேல் வந்த தோற்றமே மனத்தி லுன்னி
யந்தரத் திறைஞ்ச நன்னீ ரடங்கியுள் வாங்கிச் செல்ல
வெந்துயர்ப் பிறவி யான விடங்கிளர் வேலை நீந்தி
வந்தருட் கரையிற் சேர்வார் வைகையங் கரையிற் சென்றார்.

இ—ள்: பரிமேல் வந்த சுந்தரத் தோற்றமே மனத்தில் உன்னி அந்தரத்து இறைஞ்ச - மேற்கூறியபிரகாரம் சோமசுந்தரக்கடவுள் பரிமேலழகரா யெழுந்தருளிவந்த திருவுருவத்தையே தியானித்து அவர் அந்தர்த்தானமாகிய ஆகாயத்தை நோக்கி மனத்தால்வணங்க,—நல் நீர் அடங்கி உள் வாங்கிச் செல்ல - அப்பொழுது நல்ல வைகைநதிநீர் பிரவாகங்குறைந்துள்வாங்கி வடிந்தடங்க,—பிறவி ஆன விடம் கிளர் வெந்துயர் வேலை நீந்தி வந்து அருள் கரையில் சேர்வார் - பிறவியாகிய நஞ்செழும் கொடிய துக்கசாகரத்தைத் திருவடிப்புணையா னீந்திவந்து முத்திக்கரை சேர்பவராகிய திருவாதவூரடிகள்,—வைகை அம் கரையில் சென்றார் - அழகிய வைகைநதிக்கரையின்கட் சென்றார். எ-று.

நோக்கியென்பது சொல்லெச்சம். இனி அந்தரத்திறைஞ்ச என்பதற்குத் தனியிடத்து வணங்க எனவும், இரகசியமாக வணங்க எனவும் பொருளுரைப்பினு மமையும். அருளாணையதை அருளென்ற துபசாரம். ஈற்றிற் றரிசித்த திருவுருவம் பரிமேல்வந்த திருவுருவமாகலின் அதுவே ஈண்டுத் தியானஞாபகமாயிற்றென்க. (கசு)

முறைமுறை வணங்கி நின்ற வாரியர் முகத்தை நோக்கி
யறைதிரை நெடுநீர் வைகை யணைகடி தடைத்தல் வேண்டு
முறையுமிம் மாந்த ரெல்லா மொல்லையில் வம்மி னென்று
பறையறை வித்து நம்மூர்க் கிவ்வுரை பரப்பு மென்றார்.

இ—ள்: முறை முறை வணங்கி நின்ற ஆரியர் முகத்தைநோக்கி - திருவாதவூரடிகள் தம்மைப் பலமுறை வணங்கியெழுந்து நிற்கின்ற காரியதரிசிகளது முகத்தைப் பார்த்து,—அறை திரை நெடுநீர் வைகை அணை கடிது அடைத்தல்வேண்டும் - கரையோடு மோதுகின்ற திரைகள் மறியு மிக்கநீரையுடைய வைகைநதி அணையை அதிசீக்கிரத்திற் கட்டுதல்வேண்டும், ஆகலின்,—உறையும் இம்மாந்தர் எல்லாம் ஒல்லையில் வம்மின் என்று பறை அறைவித்து நம் ஊர்க்கு இவ்வுரை பரப்பும் என்றார் - ஈண்டுவசிக்கும் பிரசைகளெல்லாம் அதன்பொருட்டு விரைவாக அந்நதிக்கரையிலே கடுகவருகவென்று பறையறைவித்து நம்மதுராபுரிக் கிவ்வார்த்தையைப் பிரசித்திசெய்யுங்களென்று பணித்தருளினர். எ-று.

அமைச்சரோடொருபுடையொப்ப அறிவுடையராகலிற் காரியதரிசிகளை ஆரியரென்றும், திருவாதவூரடிகள தடிமைத்திறத்தை ஈண்டை நிகழ்ச்சிபற்றி ஒருவாறநுமிதித்தறிந்து பலமுறைவணங்கினரென்பார் முறைமுறை வணங்கி என்றுங் கூறினார். ஒருவர்பின் னொருவராக வணங்கியென்றுமாம். இனி ஆரியர் என்பதற்கு மிலேச்சர் எனப் பொருள் கோடலுமொன்று. அக்கருத்தை, "செங்கட் புன்மயிர்த் தோறிரை செம்முக, வெங்க ணேக்கிற் குப்பாய மிலேச்சனை" என்றற்றொடக்கத்துப் பண்டை இலக்கியங்களா னுய்த்துணர்க. (கஎ)

ஆரியர் கடிதி னோடி யகன்பறை யறைவித் தம்பொற்
றேரியல் வீதி தோறுஞ் சென்றுரை பரப்பு முன்னே
கூரிய கொட்டு மண்சேர் கூடையுங் கொண்டு வைகை
நீரியல் கரைமேல் வந்து நின்றனர் மதுரை யுள்ளார்.

இ—ள்: ஆரியர் கடிதின் ஓடி அம் பொன் தேர் இயல் வீதி தோறும் சென்று அகன் பறை அறைவித்து உரை பரப்பு முன்னே - காரியதரிசிகள் வல்விரைந்தோடி அழகிய பொற்பொடிசெறிந்த தேரோடும் வீதிகடோறுஞ் சென்று பெரிய பறையறைவித் திவ்வுரையைப் பிரசித்தி செய்யுமுன்னரே,—மதுரை உள்ளார் கூரிய கொட்டும் மண்சேர் கூடையும் கொண்டு வைகை நீர் இயல் கரை மேல் வந்து நின்றனர் - மதுரைமாநகரவாசிகளெல்லாம் வாய்கூரிய மண்டொடுகருவிகளையும் மண்சுமக்கும் கூடைகளையுங் கொண்டு வைகைநதியினது நிரையுடைய கரையின்கண் வந்துநின்றனர். எ-று.

பரப்பியபின் வந்துநின்றவரைப் பரப்புமுன் வந்துநின்றனரென்றது விரைவுபற்றிவந்த காலவழுவமைதி. சேய்மைக்கண்ணிற்பார் செவிக்கும் விடயமாம் ஓசைதரும் பெரும் பறை என்பார் அகன்பறை என்றும், எல்லாருமென்பார் மதுரையுள்ளாரென்றுங் கூறினார். மண்டொடுகருவி மண்வெட்டி. கொட்டு கிராமியச்சொல். (கஅ)

நீறுகொண் டிலங்கு மேனி மறையவர் நியமஞ் செய்த
வீறுகொண் டிடங்க டோறு மாரியர் விரைவிற் சென்று
கூறுகொண் டெவர்க்கும் வேறு கோலறை யளந்து செங்கை
மாறுகொண் டுறுக்கி வைகை வன்கரை யடைக்க லுற்றார்.

இ—ள்: ஆரியர் நீறு கொண்டு இலங்கும் மேனி மறையவர் நியமம் செய்த வீறு கொண்டு இடங்கள் தோறும் விரைவில் சென்று - காரியதரிசிகள் விபூதியைத் தன்கட்கொண்டு விளங்குந் திருமேனியையுடைய வேதபண்டிதராகிய திருவாதவூரடிகள் தமக்கு நியோகித்த அதிகாரத்தை மேற்கொண்டு, நதிதீரங்கடோறும் விரைவாகச் சென்று,—கோல் அறை அளந்து எவர்க்கும் வேறு கூறு கொண்டு - கோலான் வரையறுத்தளந் தனைவர்க்கும் தனித்தனி பகிர்ந்து கொடுத்து,— செங்கை மாறுகொண்டு

உறக்கி வன் வைகைக் கரை அடைக்கலுற்றார் - சிவந்த கைகளிற் பிரம்பைக்கொண் டுறக்கி வலிய வைகைநதிக்கரைக் கணைகட்டுவிப்பா ராயினர். எ-று.

அடைப்பிக்கலுற்றாரென்னும் பிறவினை பிவ்விகுதிதொக்கு அடைக் கலுற்றாரெனத் தன்வினையாய்நின்றது. இனிக் கொண்டென்பதை மூன்றாவதன் சொல்லுருபெனக் கொண்டு நீற்றினால் விளங்குந் திரு மேனி யென்றலு மொன்று. (கசு)

கண்பெறு கழையின் முத்துங் கடகரி மருப்பின் முத்தும்
வெண்பணி லத்தின் முத்து மேதகு கரும்பின் முத்தும்
வண்புனற் றிரைகள் வீச வரையெனக் குவைகள் செய்து
பண்படப் பொருத்தி நீருட் பதித்துயர் வரம்பு செய்வார்.

இ—ள்: கண் பெறு கழையின் முத்தும் - கணுக்களையுடைய மூங்கின் முத்துக்களையும்,—கடகரி மருப்பின் முத்தும் - மதத்தையுடைய யானைக்கோடுகளின் முத்துக்களையும்,—வெண் பணிலத்தின் முத்தும் - வெண்மையாகிய சங்குமுத்துக்களையும்,—மேதகு கரும்பின் முத்தும் - மாதுரியச்சுவையான் மேன்மைபொருந்திய கரும்பின்முத்துக்களையும்,—வண் புனல் திரைகள் வீச - அழகிய நீர்த்திரைகள் கொடுவந்தொதுக்க,—வரை எனக் குவைகள் செய்து - அவற்றை மலைபோல வாரிக்குவித்து,—பண் படப் பொருத்தி நீர் உள் பதித்து உயர் வரம்பு செய்வார் - தம் முளி யைபுபடப் பொருந்தி நீரின்கீழ்ப்படுத்து உயர்ந்த அணைகட்டுவோராயி னர். எ-று.

அத்திபாரஞ் செய்கின்றுழி ரத்தினநியாசஞ் செய்தன் முறையாக லின் முத்தை நீருட்பதித்தென்றார். "பூழியர்கோன், றென்னாடு முத்து டைத்து" என்பவாகலின், அவ்வியைபுபற்றி இங்ஙனங் கூறினரென் றலுமொன்று. செல்வவீறுதோன்றக் கூறினமையின், இது வீறுகோள ணியாம். இதனை வடநூலார் உதாத்தமென்பர்; "வியத்தகு செல்வமு மேம்படு முள்ளமு, முயர்ச்சி புனைந்துரைப்ப துதாத்த மாகும்" என்பத னைஅறிக. முற்கவி கட்டுவிப்பார் செய்தியும், இது கட்டுவார்செய்தியும் கூறின. நீருட்பதித் துயர்வரம்பென்பதற்கு நீரை உள்ளே பதியச்செய் துயரும் வரம்பென்றலு மொன்று. (உ0)

பரித்திர ணிறுத்து மென்பார் பாம்புக ளுருட்டு மென்பார்
திரைப்புனன் மிகுத்த தென்பார் தேவர்கட் கபய மென்பார்
கிரைப்படு மகிலோ டார நெறிப்பட வொதுக்கி நீடு
வரைப்பிடைக் குவித்து நிற்பா ராயினர் மதுரை யுள்ளார்.

இ—ள்: மதுரை உள்ளார் - மதுரைமாநகர வாசிகளெல்லாம்,—பரித்திரள் நிறுத்தும் என்பார் - குதிரைப்பாய்ச்சலாக மரங்களை நிறுத்து

மென்பாரும்,—பாம்புகள் உருட்டும் என்பார்-நீர்த்திரை அணையைக் கரைக்காதபிரகாரம் வைக்கோற்பழுதைகளை உருட்டுமென்பாரும்,—திரைப் புனல் மிகுத்தது என்பார் - திரைகளையுடைய நீர் அதிகரித்ததென்பாரும்,—தேவர்கட்கு அபயம் என்பார் - நங்குலதெய்வங்கட்கு நாமடைக்கலமென்பாரும்,—நிரைப்படும் அகிலோடு ஆரம் நெறிப்பட துக்கி நீடுவரைப்பு இடைக் குவித்து நிற்பார் ஆயினர் - தொகுதியாகிய அகின்மரங்களோடு சந்தனமரங்கள் மேன்மேல் அள்ளுண்டொழுகிவர, அவற்றை ஒருசாரோர தூக்கி நெடிய கரையின்கட் குவித்துநிற்பாருமாயினர். எ-று.

இவற்றை யல்லது பிறிதொன்றை முயல்வாரில்லை யென்பது கருத்து. பரித்திரள் பாம்பென்பன ஆகுபெயர். அது நிறுத்தல், உருட்டலென்னும் வினைவகைபற்றியுமுய்த்துணர்க. பரித்திரளை இக்காலத்தார் கத்தரிக்கைக்காலென வழங்குப. பாம்பு ஆகுபெயராய் வைக்கோற்பழுதையாமாறு "பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின் பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும் பாம்பென்னக், கறையொழுகு படவரவம் படரும் வேணிக் கண்ணுதலார் கமலையிற் பைங் கமலை போல்வீர்" என்பதனுமறிக. மிகுந்தது மிகுத்தது என வலிந்துநின்றது. (௨௧)

ஏருடைப் புதுநீர் வைகை யிவ்வகை யடைக்கு மெல்லை
நீருடைப் பொலிந்த வேணி நின்மலற் கன்பு மிக்காள்
சீருடைத் தவத்தின் மிக்காள் செம்மனச் செல்வி யென்னும்
பேருடை நரைமூ தாட்டி பிட்டுவிற் றுணவு கொள்வாள்.

இ—ள்: ஏர் நீர் உடைப் புது வைகை இவ்வகை அடைக்கும் எல்லை - அழகிய நீரையுடைய புதுப்பிரவாகமாகிய வைகைநதிக் கிந்தப்பிரகாரம் அணைகட்டும்பொழுது,—நீர் பொலிந்த வேணி உடை நின்மலற்கு அன்பு மிக்காள் - கங்காசலம் பொலிதற் கேதுவாகிய சடையையுடைய மலரகிதராகிய சிவபெருமானிடத்துப் பேரன்புடையவள்,—சீருடைத்தவத்தின் மிக்காள் - புகழையுடைய தவத்தான் மேம்பட்டவள்,—செம்மனச் செல்வி என்னும் பேர் உடை நரை மூதாட்டி - செம்மனச்செல்வி யென்னும் காரணப்பெயரையுடைய மயிர்நரைத்த வயோதிகப் பெண்ணொருத்தி,—பிட்டு விற்று உணவு கொள்வாள் - பிட்டுவிற்றுச் சீவனஞ்செய்பவள். எ-று.

உடைய என்பது நான்கிடத்து மீறு குறைந்துநின்றது. ஆட்டி-பெண். செம்மனச்செல்வி சுத்தமாகிய மனச்செல்வத்தையுடையவள். மனச்செல்வம் பாவசிந்தையின்மை, உள்ளதுபோதுமென்னு மனவமைதி என்பன. இவட்கு வந்தியென்றும் பெயர். அது "அளவி லாண்டு, மன்னிய நரை மூதாட்டி யொருத்தி பேர்வந்தி யென்பாள்" என வழிநூலாசியர் கூறியவாற்றானுமறிக. (௨௨)

ஆங்கவட் களந்து நீக்குங் கோலறை யடைப்ப தின்றி
யோங்கலைப் புதுநீர் வைகை யுடைப்பெலா மடைக்கு மெல்லை
தீங்குள தறுக ணாளர் சென்றவட் குறுகண் செய்ய
வீங்கெனக் குறுதி யாவார் யாவரோ வென்றி ரங்கி.

இ—ள்: ஆங்கவட்கு அளந்து நீக்கும் கோல் அறை அடைப்பது இன்றி - அவ்வந்தியென்னும் வயோதிகப்பெண்ணுக்குக் கோலாலளந்து வரையறுத்துவிடப்பட்டபங்கொன்றுமாத்திரம் அடைக்கப்படுவதின்றி,—ஓங்கு அலைப் புது நீர் வைகை உடைப்பு எலாம் அடைக்கும் எல்லை - உன்னதமாகிய திரைகளையுடைய புதியநீர் பிரவாகிக்கும் வைகைநதியின் ஏனையுடைகரைகளெல்லாம் அடைக்கப்படும்பொழுது,—தீங்கு உள தறுகணாளர் சென்று அவட்கு உறுகண் செய்ய - கொடுமையையுடைய வன்கண்ணர்களாகிய காரியதரிசிகள் சென்றவ்வம்மைக்குத் துன்பஞ்செய்ய,—ஈங்கு எனக்கு உறுதி ஆவார் யாவரோ என்று இரங்கி - அவ்வம்மை இவ்வாபத்தின்கட் டடியேனுக் குறுதுணையாவார் யாவரோவென்று சிந்தித்து மனமிரங்கி. எ-று.

ஆங்கவள் ஒரு சொன்னீர்மைத்து. ஆங்கு வைகைநதிக்கரை என்றுமாம். அறை வரையறுக்கப்பட்டது. உடைப்பெலாமடைக்கு மெல்லை என்புழிச் செயப்படுபொருள் செய்ததுபோலக் கூறப்பட்டது. (உ௩)

பிட்டினைக் கூலி கொண்டு பெருங்கரை யடைப்பா ரின்றி
நெட்டிலைச் சூல மேந்து நின்மலன் கோயி லெய்தி
மட்டறத் தளர்ந்த கொங்கை மார்பினிற் கண்ணீர் வார
வெட்டுருத் திரண்ட பாத மிறைஞ்சிநின் றிதனைக் கூறும்.

இ—ள்: பிட்டினைக் கூலி கொண்டு பெரும் கரை அடைப்பார் இன்றி - சிற்றுணவாகிய பிட்டினையே கூலியாக ஏற்றுக்கொண்டு பெரிய வைகைநதிக்கரைக்கு அணைகட்டுங் கூலியா ளொருவருமில்லாமையான்,—நெட்டு இலைச் சூலம் ஏந்தும் நின்மலன் கோயில் எய்தி - அவ்வந்தி ஐமை வடிவாகிய நெடிய சூலவேலைத் தாங்கும் நிருமலராகிய சோமசுந்தரக்கடவுள் வீற்றிருக்கும் விண்ணிழி விமானமென்னுங் கோயிலை அடைந்து,—மட்டு அறத் தளர்ந்த கொங்கை மார்பினில் கண் நீர் வார - அளவிறப்பச் சாய்ந்த தனங்களையுடைய தன்மார்பிலே கண்ணீரொழுக,—எட்டுருத் திரண்ட பாதம் இறைஞ்சி நின்று இதனைக் கூறும் - அஷ்டமூர்த்தந் திரண்ட அக்கடவுளுடைய திருவடிகளைத் தரிசித்து வணங்கி யெழுந்து நின்றிதனை விண்ணப்பஞ்செய்வாளாயினள். எ-று.

கூலி முற்கூலி; பிற்கூலியாயின் அதனை விற்றுக்கொடுத்தல் கூடுமாகலினென்க. மட்டறத்தளர்தல் சாயுமளவெல்லாஞ் சாய்தல். மட்டு-அளவு. அட்டமூர்த்தமாவன "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்"

என்னுந் திருவாக்கானுமறிக. உயிர் வாயு. மைந்தன் ஆன்மா. இனி மட்டறத்தளர்ந்த கொங்கை என்பதனை, "கைபரந்து வண்டிசைக்குங் கூந்தல்" என்புழிப்போல் வெகுபத வெகுவிரீகி என்றலுமொன்று. வெகு விரீகி அன்மொழி. (உ௪)

வேறு.

நெட்டரவக் கச்சுடையாய் நீலநிறத் திருமாதின்
வட்டமுலைத் தழும்புபட வந்தணையுந் திருமார்பா
கட்டியசெஞ் சடையாயுன் கண்ணருள்கொண் டெப்பொழு
பிட்டினைவிற் றுண்பேற்கும் பேரிடும்பை யுளதாமோ. [தும்

இ—ள்: நெட்டு அரவக் கச்சு உடையாய் - நெடிய சர்ப்பக்கச்சை யுடையவரே,—நீல நிறத் திருமாது இன் வட்ட முலைத் தழும்பு பட வந்து அணையும் திருமார்பா-பசிய திருமேனியையுடைய—காமாக்ஷியம்மை இனிமையாகிய பர அபர ஞானமாகும் வட்டவடிவையுடைய ஸ்தனங்களினாலே தழும்புண்டாக வந்தணையுந் திருமார்பையுடையவரே, கட்டிய செம் சடையாய் - மகுடரீதியாகக் கட்டப்பட்ட சிவந்த சடையை யுடையவரே,— நின் கண் அருள் கொண்டு எப்பொழுதும் பிட்டினை விற்று உண்பேற்கும்- தேவரீரது கிருபாநோக்கத்தைக் கொண்டு அன்றன்று பிட்டினைவிற் றாதியங்கொண்டு சீவிக்குந் தரித்திரசிரோமணியாகிய தமியேனுக்கும்,—பேர் இடும்பை உளது ஆமோ - அரசனாற் பெருந்துன்பம் சம்பவிக்குமோ. எ-று.

மிக்க வறுமையால் உலகத்தோடு தொடர்பில்லாத தமியேனுக்கு அவ்வுலகையோம்பும் அரசனால் இடும்பையுறுதற் கியாது மியைபில்லை யென்பது கருத்து. சிற்றின்பநுகர்ச்சிக் கேதுவாகிய மகளிர் முலைபோலன்றிப் பேரின்பநுகர்ச்சிக் கேதுவாகிய பர அபர ஞானங்களே ஈண்டு முலையாக உருவகிக்கப்படுமென்பார் அவ்விசேடந்தோன்ற முலையெனவாளா கூறாது இன்முலை என விதந்துகூறினார். பரஞானம் அநுபவஞானம். அபர ஞானம் சாத்திரஞானம். இன்முலை, வட்டமுலை எனக்கூட்டுக. இரீதி- ஒழுங்கு. உம்மை இழிவு சிறப்பு. இது கொச்சகக்கலிப்பா. (உ௫)

யாருடனா னினிப்புகல்வே னென்னுடையாய் வைகையின்ன
னீருடையா தடைக்கும்வகை நீசிறிதின் றருளாயேற்
சீருடையா யுனக்கடிமை செய்யுமவர்க் கெளியையெனும்
பேருடையா யெனப்பலரும் பேசுமொழி பழுதாமே.

இ—ள்: என் உடையாய் நான் இனி யார் உடன் புகல்வேன் - என்னை யடிமையாகவுடையவரே தேவரீரோடல்லது தமியேன் வேறினி ஆரோடு முறையிடுவேன்,—வைகையின் நல் நீர் உடையாது அடைக்கும் வகை நீ சிறிது இன்று அருளாயேல் - வைகைநதியின் நல்நீர் உடையா தடைக்கப்படும்வண்ணந் தேவரீர் சிறிதிப்பொழுது அடியேற் கநுக்கிரகஞ் செய்யா தொழிவீராயின்,—சீருடையாய்-சுத்தசாட்குண்ணியமாகிய சிறப்

பியல்பையுடையவரே.—உனக்கு அடிமை செய்யும் அவர்க்கு எளியை எனும் பேர் உடையாய் எனப் பலரும் பேசும் மொழி பழுது ஆமே - தேவரீருக் காட்செய்யுந் திருத்தொண்டர்களுக்கெல்லாம் தேவரீ ரெளிவந்தருள்செய்விரென்னும் புகழுடையீரென்று நம்மவர் பலரும் பேச மூலோகவதந்தி இன்று என்னளவிற் பிழைபட்டுவிடுமன்றோ. எ-று.

நீ சிறிதின்றருளாயேல் யாருடனினிப் புகல்வேனென மேலே கூட்டிமுடிக்க. சுத்தசாட்குண்ணியம் மேலே விளக்கப்பட்டன. உலோகவதந்தி உலகப்பேச்சென்பது மேலுமுரைத்தாம். இனிப் பேருடையாயென்பதற்குத் தாற்பரியம்பற்றித் தீனரக்ஷகரென்னும் பேருடையீர் என்றும், அடிமைசெய்யும் அவர்க்கெளியீரென்னும் பெருமை உடையீரென்றும் உரைப்பினுமமையும். யாவர் யாரெனக் கெட்டது. இது விதியின்றி வரும் புணர்ச்சியில் விகாரக்கேடென்க. (உசு)

தாயுமிலே தந்தையிலே தமருமிலே தமியேனைப்
பேயினுட னின்றாலும் பிரித்தறிய வொண்ணாது
தீயதென திலம்பாடென் சிந்தையில்வெந் துயர்தீர
நீயருளா தொழியினுயிர் நீப்பேன்மற் றென்செய்கேன்.

இ—ள்: தாயும் இலே தந்தை இலே தமரும் இலே - எனக்கு மாதாவுமில்லை, பிதாவுமில்லை ஞாதிகளுமில்லை,—தமியேனைப் பேயினுடன் நின்றாலும் பிரித்து அறிய ஒண்ணாது - இவ்வாறு தனித்தவளாகிய யான் பேயோடொருங்குநிற்பினும் பேய் இது, வந்தி இவள் என்று என்னை வேற்றுமைதெரித்துணர ஒருவர்க்குங் கூடாது,—எனது இலம்பாடு தீயது - என் வறுமை இங்ஙன மிகக்கொடியது,—என் சிந்தையில் வெம் துயர்தீர நீ அருளாது ஒழியின் உயிர் நீப்பேன் - இவ்வியல்புடைய நிராதாரசகிதையாகிய என் மிக்க மனத்துயர் என்னைவிட்டகலக் கருணாநிதியாகிய தேவரீர் சிறிதநுக்கிரகஞ் செய்யாதொழியிற் பிராணத்தியாகஞ் செய்வேன்,—மற்று என் செய்கேன் - அஃதொழிந்து வேறியாது செய்வேன். எ-று.

இல்லை என்பது மூவிடத்தும் இடைக்குறைந்து நின்றது. நீ என்பதற்குக் கருணாநிதியாகிய நீ என்பது இசையெச்சத்தான் வருவிக்கப்பட்டது; "அந்தாமரை யன்னமே நின்னை யானகன் றாற்றுவனோ" என்புழி நின்னென்பதுபோல. தாயின்றியுந் தந்தையின்றியுந் தமரின்றியுந் தான் றனித்தமையிற் பேயினுடனின்றாலும் பிரித்தறிய வொண்ணாமற் றன்னை நிராதாரஞ்செய்தது தன்வறுமையேயென்பாள் தீயதெனதிலம்பாடென்றாள். இலம்பாடு-வறுமை. ஒருவற்குத் தாயின்மை முதலியன நிராதார நிமித்தமாமென்பதை, "தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோஞ், சேயோடு தான்பெற்ற செல்வம்போந்—தூயபுக, ழூற்றாரொடுபோ முடன்பிறப்பாற் றோள்வலிபோம், பொற்றாலி யோடனைத்தும்

போம்'' என்பதனுணர்க. பேய் கிராதார சீர்மையதாகலிற் பேயினுட னின்றாலும் பிரித்தறியவொண்ணாதென்றுணர்க. (உஎ)

வேறு.

இன்றெனக் குறுதி யாகி யானிடும் பிட்டு வாங்கி
வன்றிறற் கூலி யாளாய் வன்கரை யடைப்பா ரில்லை
யுன்றனக் கபயம் யானென் றுரைப்பவ டன்மே லன்பு
சென்றவட் காளா மாறு துணிந்தனர் தேவ தேவர்.

இ—ள்: இன்று எனக்கு உறுதி ஆகி யான் இடும் பிட்டு வாங்கி- இத்தினமெனக் குறுதுணையாகி யான்கொடுக்கும் பிட்டினையே கூலியாகப் பெற்று.—வன் திறல் கூலி ஆளாய் வன் கரை அடைப்பார் இல்லை-மிக்க வலியையுடைய கூலியாளாகிப் பெரிய அணைகட்டுவார் ஒருவருமில்லை ஆகலான்,—யான் உன்றனுக்கு அபயம் என்று உரைப்பவள் மேல் அன்பு சென்று - தமியேன் இனித் தேவரீருக் கடைக்கலமென்று பிரார்த்திக்கும் வந்தியினிடத்துத் திருவருண்மிக்குச் சேறலான்,—தேவதேவர் அவட்கு ஆளாமாறு துணிந்தனர் - மகாதேவராகிய சோமசுந்தரக்கடவுள் அவ்வந் திக்குத் தாங் கூலியாளாகும்படி திருவுளங்கொண்டருளினர். எ-று.

சேறலான் என்பது சென்றெனத் திரிந்துநின்றது. வன்கரை பேரணை. பிட்டினையே கூலிகொள்ளப்பெறுதலும் அதன்பொருட் டுற்று நின்று வன்கரையடைத்தற் காளாரை இவ்வொருதினத்துட் பெறுதலும் நின்றிருவருளா னல்லது என்செயலால் ஒன்றுமின்றெனம் பிரார்த்தித் தாளென்பார் உன்றனக்கபயம் யானென்றும், எத்துணையுமரிய தாம் எத் துணையு மெளிய இதனை விடாதுசெய்யத் திடசித்தங்கொண்டருளின ரென்பார் அவட்காளாமாறு துணிந்தனர் தேவதேவரென்றுங் கூறினர். இது அறுசீரடி யாசிரியவிருத்தம். (உஅ)

ஆடையுந் துணிந்த சீரை யாகியே கூலி யாளாய்க்
கூடையுந் தலைமேல் கொண்டு கொட்டுடைத் தோள ராகிப்
பீடைகொண் டயர்வாள் காணப் பெரும்பசி யுடையார் போல
வேடைகொண் டொல்லைவந்தார் வேண்டிய வடிவங்கொள்வார்.

இ—ள்: வேண்டிய வடிவம் கொள்வார் - ஆங்காங்குத் தமக்கு வேண்டிய திருவுருவங் கொண்டருளுஞ் சிவபெருமானவர்—கூலி ஆளாய் - மண்டுக் கூலிக்காரராகி,—ஆடையுந் துணிந்த சீரை ஆகி - வஸ் திரமுங் கந்தைவஸ்திரமாகப்பெற்று,—கூடையும் தலை மேல் கொண்டு - மண்சுமக்குங் கூடையையுஞ் சிரமேற்கொண்டு,—கொட்டு உடை தோளர் ஆகி - மண்வெட்டிதங்குந் தோளையுடையவராகி.—பெரும் பசி உடையார் போல வேடை கொண்டு - மிக்க பசியுடையார்போல உணவின்மேல் வேணவாக்கொண்டு,—பீடை கொண்டு அயர்வாள் காண ஒல்லை வந்தார்- மேற்கூறியபிரகாரந் துன்பங்கொண்டயரும் வந்தி காண விரைவாக வீதியின் கண் வந்தருளினர். எ-று.

துணிதல்-கிழிதல். ஆடையுந்துணிந்த சீரையாகி எனச்சினை வினை முதன்மேலேறிற்று. அது வேற்றுமைச்சினையாயினும் ஒற்றுமைச்சினை போல உடற்கின்றியமையாமையின். இஃதுணராதார் ஏனைத் தன் வினை வினையெச்சங்களாநி மாறுபடப் பிறவினை வினையெச்சமாக ஆக்கி எனத் திரித்துரைப்பர். பெரும்பசியுடையார்போல வேடைகொண்டென்பத ற்கு மிக்க பசியுடையவரைப்போல உதராக்கினி வெம்மைகொண்டென் றும், மிக்க பசியுடையவரைப்போலச் சோர்வுகொண்டென்றும் பொருள் கூறினும் பொருந்தும். பசுக்கட்குரிய பரதந்திரம் சிற்றுணர்வு சிறுசெயல் கள் விருப்பு வெறுப்புக்களாகிய உபாதிகளொன்றுமின்றி, ஆணவநீங்கிய அறிவையுந் தொழிலையுங்கொண்டு நிற்றலிற் றமக் காங்காங்கு வேண்டப் படுந் திருமேனிகோடற்கோ ரிழுக்கின்றென்பார் வேண்டிய வடிவங் கொள்வார் என்றார். அது "குறித்ததொன் றாக மாட்டாக்குறைவில ளுதலானு, நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும், வெறுப்பொடு விருப்புத் தன்பா னேவுத லிலாமை யானு, நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி னாலே" என்பதனானுமறிக. தலைமேல் கொண் டென்புழி ளகாரவியல்பு மண்புகுந்தும் விண்பறந்து மென் புழிப்போல ஏழாம்வேற்றுமையில் எதிர்மறுத்துவந்தமை புறநடையாற் கொள்க. (உ௯)

வந்தெனை யேவல் கொள்வா ருளர்கொலோ மற்றிங் கென்று
புந்தியின் மகிழ்ந்து கோயில் வாயிலிற் புகன்ற போதி
லந்தநன் மொழியைக் கேளா வன்னைதன் னயர்ச்சி கூருஞ்
சிந்தனை யொழிந்து கூலி யாளரைச் சென்று சேர்ந்தாள்.

இ—ள்: வந்து எனைப் புந்தியின் மகிழ்ந்து ஏவல் கொள்வார் இங்கு உளர் கொலோ என்று கோயில் வாயிலின் புகன்ற போதில்-கூலி யாளர் அங்ஙனம்வந்து என்னை மனமகிழ்ந்து வேலைகொள்வா ரிங்குள ரோவென்று கோயில்வாய்தலினின்று விளித்ததருணத்து,—அன்னை அந்த நல் மொழியைக் கேளா அயர்ச்சி கூரும் தன் சிந்தனை ஒழிந்து - அவ்வம்மை தன் செவிக்கினிய அவ்வசனத்தைக் கேட்டு மயக்கமிகும் பல தலையாய வெண்ணங்களையெல்லாம் விட்டு,—கூலியாளரைச் சென்று சேர்ந்தாள் - அக்கூலியாளரை விரைந்துசென்று சமீபித்தனள். எ-று.

மனமுவந் தின்முகங்காட்டி யேவல்கொள்வார்க் கல்லது வெறுத்து வெகுளிமுகங்காட்டி யேவல்கொள்வார்க்குத் தாமுடம்படாமை விளக்கு தற்குப் புந்தியின்மகிழ்ந்தென விசேடித்தார். வந்தி மனமுவந் தின்முகங் காட்டி யேவல்கொள்ளுமாறும், காரியதரிசிகள் வெறுத்து வெகுளி முகங் காட்டி யேவல்கொள்ளாமையும் முன்னர் விளக்குப. (௩0)

புடையின்மே லுலகோரின்றிப் புனைந்துள புலித்தோ லாடை
யுடையின்மே லசைக்குங் கச்சா யோங்குநச் சுரக மின்றிச்

சடையின்மேன் மதிய மின்றித் தாங்கிய மழுமா னின்றி
விடையின்மே லின்றி நின்ற வெளியனை வெளியிற் கண்டாள்.

இ—ள்: புடையின் மேல் உலகோர் இன்றி - இருமருங்கினும் முறைமையேநின்று சேவிக்கு மேலுலகவாசிகளாகிய அரிபிரமேந்திராதி தேவர்களென்னும் பரிசனங்களின்றியும்,—புனைந்துள புலித்தோல் ஆடை உடையின் மேல் அசைக்கும் நச்சு உரகமாய் ஓங்கு கச்சு இன்றி - திருவரையிலே புனையப்பெற்ற புலித்தோலாகிய வஸ்திரவுடையின்மீதே இறுகப் பிணிக்கு நஞ்சையுடைய பாம்பாய் விளங்கும் உதரபந்தனமின்றியும்,—சடையின்மேல் மதியம் இன்றி - திருச்சடையின்மீதே பாலசந்திரனாகிய தலைக்கோலமின்றியும்,—தாங்கிய மழு மான் இன்றி - திருக்கரங்களிலே தாங்கியருளிய மழுவு மானுமாகிய படைக்கலமும் புறக்கலவாத்தியமுமின்றியும்,—விடையின் மேல் இன்றி நின்ற வெளியனை - அறக்கடவுளாகிய இடபவாகனத்தின்மேல் இவர்தலின்றியும் வறிதே நிற்கின்ற சிதாகாச வடிவையுடைய சிவபெருமானாகிய கூலியாளனை,—வெளியில் கண்டாள் - வந்தி வாய்தலின் வெளியேநிற்பக் கண்டாள். எ-று.

புடையிலின்றியென முடிக்க. ஆடை யுடை என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. தோலாடையுடை என்பது பன்மொழித்தொடர். கச்சு மதியமுமாகிய ஆதேயங்களோடு முறையே புலித்தோலாடையுஞ் சடையுமாகிய ஆதாரங்களை உடம்பொடு புணர்த்துக் கூறினார் அவற்றினது அபாவமு மீண்டுக் கொள்ளப்படுதற்கென்க. புறக்கலவாத்தியம் உயிர்ப்பொருள் வாத்தியம். அது "மற்றதன் பின்னை யெந்தை மான் பிணை யதனை நோக்கித், தெற்றென விளித்து நந்தஞ் செவியினுக் கணித்தாய் மேவி, நிற்றலுங் கூவு கென்றே நீடருள் செய்து வாமப், பொற்றடங் கையிற் பற்றிப் பொருக்கென வேந்தி நின்றான்" என்பதனாலுமுய்த்துணர்க. நின்ற எளியனையெனக் கண்ணழித்து ஈண்டைக்கேற்ப அடியவர்க் கெளியவரையென் றுரைத்தலுமொன்று. (௬௧)

மைந்தநீ யெனக்கிங் காளாய் வருகென முன்னர்க் கூலி
தந்தியேல் வருவ னென்று சாற்றலு நுகர விப்போ
திந்தவா ரமுதம் போலு மினியபிட் டளிப்பே னல்லா
லந்திவா யிதனை விற்றே யளிப்பனின் கூலி யென்றாள்.

இ—ள்: மைந்த நீ எனக்கு இங்கு ஆளாய் வருகென - மகனே நீ யெனக் கிப்பொழுது கூலியாளாய் வரக்கடவையென்று வந்திகேட்ப,—முன்னர்க் கூலி தந்தியேல் வருவன் என்று சாற்றலும் - அதற்கவர் முற் கூலி தருவாயாயின் வருவேனென்று கூறுதலும்,—நுகர ஆர் அமுதம் போலும் இனிய இந்தப் பிட்டு அளிப்பேன் - அதற் கவ்வம்மை நீ யுண்ணும்பொருட்டு அரிய அமிர்தம்போலு மினிய பிட்டை யுனக்கு முற்கூலியாகத் தருவேன்,—அல்லால் இதனை விற்று அந்திவாய் நின் கூலி அளிப்

பன் என்றாள் - அது நினக்குக் கருத்தன்றாயின் இப்பிட்டை விற்று அஸ்தமயனகாலத்தில் நின்கூலியைக் கைப்பொருளாகத் தருவேனென்று கூறினாள். எ-று.

வருகவென்னும் வியங்கோளீறு குறைந்துநின்றது. வியம்-ஏவல். அது 'வியவனே யேவுவான்பேர்' என்பதனுனுமறிக. அல்லால் என்பது வினையெச்சக்குறிப்பு. சாற்றலுமென்பதும் மீற்றுவினையெச்சம்; வாய்பாடின்மையிற் புதியன புகுதலாற் கொள்க. அது என்றாளென்னும் பிறவினை முதல்வினைகொண்டது. பிட்டை யீபகாரமாகத் தந்து பின்னர் அந்தியிற் கூலியுந் தருவேனென்றுமாம். அந்தி சாயரக்ஷை. அந்திவாவெனவும் பாடம். (நூஉ)

இரும்பசி யுடையே னன்னே யினியபிட் டளிப்பை யாகிற்
குரம்புகொண் டடைப்பன் யானே கோலறை முழுது மென்
கரும்புறத் துகின்மே லிட்ட பிட்டினைக் கரத்தா லள்ளி [னக்
விரும்பியிங் கிதனைக் கொள்வா யென்றனள் விருப்ப மிக்காள்.

இ—ள்: அன்னே இரும் பசி உடையேன் இனிய பிட்டு அளிப்பை ஆகில் - தாயே நான் இதுபொழுது பெரும்பசியுடையேன், ஆகலின் இனியபிட்டினைத் தருவாயானுல் அதனையுண்டு பசிதீர்ந்து,—கோல் அறை முழுதும் யானே குரம்புகொண்டு அடைப்பன் என்ன - கோலால் வரையறுக்கப்பட்ட நின்பாகமுழுவதையும் யானே வரம்புயர்த்துக் கட்டுவேன் என்றுகூற,—விருப்ப மிக்காள் விரும்பி - ஆதரவுமிக்க வந்திகேட்டு முன்னையினும் மிகவிரும்பி,—கரும் புறத் துகில் மேல் இட்ட பிட்டினைக் கரத்தால் அள்ளி இங்கு இதனைக் கொள்வாய் என்றனள் - கறுத்த புறத்தையுடைய வஸ்திரத்தை மேலே இட்டு மூடிய பிட்டைக் கைகளாலள்ளி மகனே நீ இதனை வாங்கிக்கொள்ளென்று கூறினாள். எ-று.

இறக்கிக் கொட்டியவுடன் மூடுகின்றுழிப் பிட்டி னுவிபட்டுக் கறுத்த வஸ்திரமென்பார் கரும்புறத்துகிலென்றார். வஸ்திரத்தை மேலே இட்டு மறைத்தல் ஈனசாதியாருஞ் சமயத்தாருங் காணுமைப்பொருட்டும் ஈ முதலியன அதன்மேல் வீழாமைப்பொருட்டுமென்க. (நூங)

கூற்றடுங் கமல பாதர் குறுந்துணிக் கரிய சீரை
யேற்றிடும் பிட்டு வாங்கி யின்புற வமுது செய்து
மாற்றரும் பசியை யன்னே மாற்றினை யினிப்போய் வைகை
யாற்றினின் கூற்றி னுண்டா மருங்கரை யடைப்ப னென்றார்.

இ—ள்: கூற்று அடும் கமல பாதர் - யமனைக் கொன்றருளுந் திருவடித் தாமரையினையுடைய சிவபெருமானாகிய கூலியாளர்,—குறும் கரிய துணிச் சீரை ஏற்று - குறுத்த கரிய கந்தைவஸ்திரத்தை விரித்தேந்தி,—இடும் பிட்டு வாங்கி இன்பு உற அமுது செய்து - வந்தி இடும்

பிட்டை வாங்கி இன்பமிகத் திருவமுதுசெய்தருளி,—மாற்று அரும் பசியை அன்னே மாற்றினை - தன்னையுடையாரது மானமுதலிய பத்தையு மொருசேர மாற்றுகின்ற பொறுத்தற்கரிய பசியைத் தாயே நீ மாற்றினாய்,—இனி வைகை ஆற்றிற் போய் நின் கூற்றில் உண்டாம் அருங்கரை அடைப்பன் என்றார் - இனி நான் வைகைநதிக்கரையிற் சென்று நின் பங்குக்குளதாகிய பெரிய அணையைக் கட்டுவேன் என்று கூறியருளினார். எ-று.

உமையம்மை வருடப்பொருது சிவக்கும் மென்மையதாயினும் யமனை யுதைத்துக் கோறற்கேற்ற வன்மையதென்பார் கூற்றடுங்கமலபாதர் என்றார். தன்னையுடையாரது மானமுதலிய பத்தையும் பசி தப்பாது மாற்றுமென்பது, "மானங் குலங் கல்விவண்மை யறிவுடைமை, தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்பறந்து போம்" என்பதனானுமறிக. நீக்குதற்கரிய பசியென்றுமாம். அது "பசித்துண்டு பின்னும் பசிப்பானை" என்பதனானுமறிக. பசியை யின்னே மாற்றினை எனவும் பாடம். (௫௪)

நன்றுநன் றின்னு மன்னே நயந்துபிட் டளித்தல் வேண்டு
மென்றுதந் துணிந்த சீரை யேற்றது நிறைய வாங்கித்
தின்றுதின் றலைநீர் வைகைச் செழுங்கரை யதனிற் சென்று
குன்றெனுந் தவத்தா யுன்றன் கோலறை காட்டு கென்றார்.

இ—ள்: அன்னே பிட்டு நன்று நன்று நயந்து இன்னும் அளித்தல்வேண்டும் என்று தம் துணிந்த சீரை ஏற்று அது நிறைய வாங்கி - தாயே இப்பிட்டு மிகவு நன்று, ஆகலின் என்மேல் விருப்பங்கொண் டின்னுந் தரல்வேண்டுமென்று தமது கந்தைவஸ்திரத்தை விரித்தேந்தி அது நிறையவாங்கி,—தின்று தின்று அலை நீர் வைகைச் செழும் கரை அதனில் சென்று - அதனைத் தின்றுதின்று அலைமறிகின்ற நீரையுடைய வைகைநதியின தழகிய கரையின்கட் போய்,—குன்று எனும் தவத்தாய் உன்றன் கோலறை காட்டு கென்றார்-மலையென்று சொல்லத்தகுந் தவத்தையுடைய தாயே இனி உன்பங்கைக் காட்டுக என்று கூறியருளினார். எ-று.

அடுக்கிரண்டனுள் முன்னையது மிகுதியினும், பின்னையது ஒரு தொழில் பலகாலினிகழ்தற்கண்ணும் வந்தன. வியங்கோளீறு தொக்கது. சலியாமையும் பெருமையும்பற்றித் தவம் குன்றாக உருவகஞ்செய்யப் பட்டது. கோலறை கோலால் வரையறுக்கப்பட்டது. தன், குச் சாரியை. (௫௫)

மெய்த்தவம் புரிவார் தம்மின் விழுப்பமிக் குடைய வன்னை
யித்தடங் கரையை வல்லே யெம்பிநீ யடைப்பா யென்னப்
பைத்தவெம் பகுவாய் நாகம் பனிமதிப் பாதி கொன்றைக்
கொத்துடன் முடிக்க வல்லார் கோலறை யடைக்க லுற்றார்.

இ—ள்: மெய்த் தவம் புரிவார் தம்மின் விழுப்பம் மிக்குடைய அன்னை - மெய்ம்மையாகிய தவத்தைச் செய்பவர்களுள் மிகவும் மகிமையையுடைய நம்மாதாவாகிய வந்தியானவள்;—இத் தடம் கரையை வல்லை எம்பி நீ அடைப்பாய் என்ன - இவ்விசாலமாகிய கரையினை விரைவாக என்றம்பி நீ யடைப்பாயாகவென்று கூற,—பைத்த வெம் பகுவாய் நாகம் பனி மதிப் பாதி கொன்றைக் கொத்து உடன் முடிக்க வல்லார் - படத்தையும் நஞ்சுகக்குங் கொடிய பகுவாயையுமுடைய பாம்பையும் குளிர்ச்சி பொருந்திய பாலசந்திரனையும் பகைதீர்த்துக் கொன்றைப்பூங்கொத்தோடொருதன்மையவாகச் சூட்டவல்ல சிவபெருமானாகிய கூலியாளர்;— கோலவறை அடைக்கல் உற்றார் - அவ்வம்மையின் பங்கை அடைத்தல் செய்வாராயினார். எ-று.

பைத்த நாகம் பகுவாய் நாகம் எனத் தனித்தனிமுடிக்க. பகுவாய்- பேழ்வாய். பாம்பினது தோற்றக்கொடுமையும் விழுங்கியுமிழும் வாயினது வெம்மையும், மதியினது தண்மையும் அதனது தோற்றத் தெளிமையும் விளக்குமுகத்தால் அவையிரண்டிற்குந் தம்முள் வேறுபாடின்மை சாதித்தற்குப் பைத்த வெம்பகுவாய் நாகம் பனிமதிப்பாதி என விசேடித்தார். பாதி-பங்கு; ஈண்டொருகலையென்றதாம். ஏனைத் தவந் தானம் கன்ம யோக முதலிய பசுபுண்ணியங்கள் பயக்குஞ் சுவர்க்கபோகப் பயன் அநுபவிக்கப்பட்டு விரைவிற் றொலைந்தவழி அவ்வான்மா மீண்டும் பிறப்பிறப்புக்களிற் பட்டு முன்போலத் துயருறுதல் தப்பாமையின் அவற்றைப் பொய்த்தவமென்பார், எவ்வாற்றானும் ஞானம்வாயிலாகப் பரமுத்தியைப் பயந்தேவிடுஞ் சரியை கிரியை யோகங்களாகிய சிவபுண்ணியங்களை ஈண்டு மெய்த்தவம் என்றும், அரிபிரமேந்திராதி தேவருங் கனவிலுங் காண்டற்கரிய முழுமுதலாகிய சிவபெருமான் கூலியாளராகி வந்து தன் பிட்டை அமுதுசெயப் பெறுதலின்மேற், கரையடைக்கவும் பெறுதலின் இவ்வம்மை அவரினு மற்றெவரினு மிக மகிமையுடையளாதன்மேல், அக்கடவுட்குப் பிட்டமுதருத்தித் தாயாகி நிற்றலின், அக்கடவுளை வழிபடு நமக்கும் அரும்பெருந் தாயேயாமென்பார் தவம்புரிவார்தம்மின் விழுப்பமிக்குடைய வன்னையென்றுங் கூறினார். (௫௬)

பேர்ப்பர்மண் கூடை பெய்வர் பிறைமுடி மேற்சும் மாடு
சேர்ப்பர்பின் சுமந்து சென்றச் செய்கரை சிந்தி மீள்வர்
வேர்ப்பர்மெய் யிளைப்பார் போல மென்றுபிட் டிரத நாவிற்
பார்ப்பரவ் வன்னை தன்மேற் பரிந்தருட் பார்வை செய்வார்.

இ—ள்: மண் பேர்ப்பர் - மண்ணை வெட்டுவர்,—கூடை பெய்வர்- அதனைக் கூடையின்கணிடுவர்,—பிறை முடி மேல் சும்மாடு சேர்ப்பர் - பிறையையுடைய திருமுடியின்மேற் சுமையடைகோலி வைப்பர்;—பின் சுமந்து சென்று அச் செய் கரை சிந்தி மீள்வர் - பின்னர் அதனைச் சுமந்து

சென்று கட்டப்படும் அவ்வுடைகரையிற் கொட்டித் திரும்புவர்.—மெய் இளைப்பார் போல வேர்ப்பர் - அவ்விடாமுயற்சியினாற் சரீரம்வருந்தி இளைப்பார்போலக் குறுவெயர்வைகொள்வர்.—பிட்டு மென்று இரதம் நாவிற் பார்ப்பர் - அவ்விளைப்பு நீங்கும்வண்ணங் கந்தையிலுள்ள பிட்டை அள்ளி வாயிலிட்டு மென்று தின்று அதன்சுவையை நாவினாலுணர்வர்.—அ அன்னை மேல் பரிந்து அருள் பார்வை செய்வார் - அப்பிட்டமுதைத் தமக்குக்கொடுத்த அவ்வம்மைமீது முன்னையினுமிக அன்புகூர்ந்து கிருபா நோக்கஞ் செய்வார். எ-று.

செய்கரை சிந்தி என்புழி இயல்பு வேற்றுமைப் புறனடையாற் கொள்க. பின் என்பதனைப் பேர்ப்பர் மண் என்னு முதற்றொடரொழிந்த ஏனை யைந்தொடரோடுங் கூட்டிப் பொருள்கொள்க. அம்முதற்றொடர் முதலிய வேழுதொடரும் ஒன்றன்பின்னொன்று காரணகாரிய முறையாகத் தொடர்ந்துநிற்றலின் இது காரணகாரியத் தொடர்புநவிற்சியென்னு மலங்காரமென்க. (ஙஎ)

பிட்டுநன் றென்று கூறிப் பிறைமுடி யசைப்பார் வேட
னிட்டமென் றசையிற் சால வீசனுக் காமி தென்பார்
கொட்டுடன் கவிழ்த்த கூடை கொண்டுநின் றாடல் செய்வார்
வெட்டிமண் குவிப்பா ரோடி விரைந்தடிப் பாய்ந்து மீள்வார்.

இ—ள்: பிட்டு நன்று என்று கூறிப் பிறை முடி அசைப்பார் - இப்பிட்டு வரவாமிக நன்றாகவிருக்கின்றதென்று சற்காரங்கூறிப் பிறையையுடையசிரசை மகிழ்ச்சியினால் அசைப்பர்.—வேடன் இட்டமென் தசையின் ஈசனுக்கு இது சால ஆம் என்பார் - கண்ணப்பநாயனாராகிய வேடுவர் திருக்காளத்தி யீசுரருக்குப் படைத்த மென் றசையமுதினும் இப்பிட்டமுது இம்மதுரைச் சோமசுந்தரக்கடவுட்குப் பூரண பிரீதியாகுமென்பர்.—கொட்டு உடன் கவிழ்த்த கூடை கொண்டு நின்று ஆடல் செய்வார் - தோளின்கணிட்ட மண்வெட்டுங்கருவியுடன் சிரசிற் கவிழ்த்த கூடையையுங் கொண்டுநின்று ஆனந்தக்கூத்தாடுவர்.—மண் வெட்டிக் குவிப்பார்- மண்ணைவெட்டிக் குவித்து,—ஓடி விரைந்து அடிப் பாய்ந்து மீள்வார்- அடியளந் தெல்லை குறித்துவிட்டுப் பின்னுக்கோடிச்சென்று மீள முன்னுக்கு விரைந்தோடி வந்து அம்மணற்குன்றைக் கடந்து அவ்வெல்லைக் கப்பாற் குதித்துத் திரும்புவர். எ-று.

கண்ணப்பநாயனார் பக்குவம் பரீக்ஷித்துப் படைத்த தசையமுதென்பார் மென்றசையென முடித்தார். கண்ணப்பநாயனாரது பத்திவிசேடத்தை; "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின், னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி" என்பதனானுமுணர்க. பிறைமுடி இயற்கையடை. (ஙஅ)

பரிவுடை மனத்தி ஞளும் பரமர்தஞ் செய்தி கண்டு
கரையினை யடைத்தல் வேண்டு மென்றுதன் கருமங் கூறு
ஞரனுடை வழுதி தூதர் காண்பரே லுறுகண் செய்வா [ள்.
ரிருவினை யுடையேன் மற்றிங் கென்செய்வே னென நினைந்தா

இ—ள்: பரிவு உடை மனத்தினளும் பரமர் தம் செய்தி கண்டு - சீவ காருண்ணியம் பொருந்திய மனத்தையுடைய வந்தியுஞ் சோமசுந்தரக் கடவுளினது திருவிளையாடலைக் கண்டு,—கரையினை அடைத்தல் வேண்டும் என்று தன் கருமம் கூறாள் - அணைகட்டுதல் செய்யவேண்டுமென்று தன் காரியத்தைக் குறித் தொன்றும் பேசாதவளாய்,—உரன் உடை வழுதி தூதர் காண்பரேல் உறுகண் செய்வார் - வலியையுடைய பாண்டியனது தூதுவர் காண்பாராயின் எமக்குத் துன்பஞ்செய்வார்,—இரு வினை உடையேன் மற்றிங்கு என் செய்வேன் என நினைந்தாள் - இருவினையையுடைய பாவியாகிய தமியேன் இதற்கு யாதுசெய்வேனென்று பலவற்றையு மெண்ணினாள். எ-று.

இங்ஙனந் தானொன்று கருதத் தன்வினைவயத்தான் அதற்குமாறாகப் பிறிதொன்று சம்பவித்தமையின், இருவினையுள்ளதுணையும் அவ்வினைவய த்தா னல்லது தன்வயத்தா னொன்று நிகழாதென இன்னோரன்ன பலவற் றையும் நினைந்தாளென்பார் மற்றிங்கென்செய்வேனென நினைந்தா ளென் றார். ஈண்டுக் கூலியாள் கிடைத்தல் நல்வினைவயத்தானும், அவன் உற்று நின்று வேலைசெய்யாமை தீவினைவயத்தானும் நிகழ்ந்தன என்பது வந்தி யின் கருத்தென்க. (ரு௧)

மற்றவ ணிலைமை வெள்ளி மன்றுணின் றாடு கின்ற
கொற்றவ ரறிந்து பின்னுங் கூடைமண் கரைமேற் கொட்டி
யுற்றவிக் கரையை யன்னே யொல்லையி லடைப்ப னின்னே
சற்றிதற் கிரங்கா தேகுன் றகவுடை மனையி லென்றார்.

இ—ள்: அவள் நிலைமை வெள்ளி மன்றுள் நின்று ஆடுகின்ற கொற்றவர் அறிந்து - அவ்வந்தியினது அந்நிலைமையை வெள்ளியம்பலத் தின்கணின்று திருநடனஞ்செய்தருளும் பசுபதியாகிய சோமசுந்தரக்கடவு ளென்னுங் கூலியாளர் திருவுளத்தடைத்து,—பின்னும் கூடை மண் கரை மேல் கொட்டி - பின்னரும் ஒரு கூடைமண்ணைக் கரையிலே கொட்டி விட்டு,—உற்ற இக்கரையை அன்னே யான் ஒல்லையில் அடைப்பன் - உன க்காக விடப்பட்ட இக்கரையை மாதாவே நான் விரைவாக அடைப் பேன்,—நீ சற்று இதற்கு இரங்காது உன் தகவு உடை மனையில் இன்னே ஏகு என்றார் - நீ சிறிது மிதன்பொருட்டு மனமிரங்காது உன்றகுதியை யுடைய வீட்டிற்கு இப்பொழுதே செல்வாயென்று கூறியருளினார். எ-று.

அந்தரியாமியாய் எவற்றையு முண்ணின் றுணர்பவராகலின் மற்றவ ணிலைமை வெள்ளிமன்று ணின்றாடுகின்ற கொற்றவரறிந்தென்றும், சிவ

பிரான் முன்னர்ப் பிட்டமுதருந்தப்பெற்ற திருமனையாகலிற் றகவுடைமனையென்றுங் கூறினர். இனி வந்தி வறியளாகலின், தகவுடைமனை என்புழி, உடை மனை என்பதனை வினைத்தொகையாகக் கொண்டு தகவற்ற மனையென்றலுமொன்று. "சங்குதரு நீணிதியஞ் சாலவுடைநாய்கன்" என்புழி உடைநாய்கன் என்பது வினைத்தொகை என்றார் நச்சினார்க்கினியாருமெனக. (௪௦)

நீறணி புனித மேனி நின்மலன் விடுப்ப வேகித்
தோறிரை முகத்தி னாடன் றொன்மனை புகுது மெல்லைக்
கூறருந் தவத்தின் மிக்காள் கோலறை யடைப்ப வஞ்சி
மாறிடு திரைக்கை தன்னாற் றொழுதனள் வைகை மங்கை.

இ—ள்: நீறு அணி புனித மேனி நின்மலன் விடுப்ப - விபூதியை யணிந்த நிஷ்களங்கமாகிய திருமேனியையுடைய சோமசுந்தரக்கடவுள் அனுப்ப,—தோல் திரை முகத்தினாள் ஏகித் தன் தொல் மனை புகுதும் எல்லை - தோல்திரைந்த முகத்தையுடைய வந்தி சென்று தன் பழைய வீட்டிற் புகும்பொழுது,—கூறு அரும் தவத்தின் மிக்காள் கோல் அறை அடைப்ப-விதந்து கூறுதற்கரிய தவத்தான் மேம்பட்ட வந்தியினது பாகமாகிய செய்கரையைச் சிவபெருமான் அடைக்கும்பொழுது,—வைகை மங்கை மாறிடு திரைக் கை ஆல் தொழுதனள் - வைகைநதியாகிய பெண் வேகந்தணிகின்ற திரைகளாகிய கைகளினாலே சுவாமியை அஞ்சலிசெய்தனள். எ-று.

சத்திகாரியமாகிய திருமேனியாகலிற் புனிதமேனியென்றும், முன்னன்னீரடங்கி யுள்வாங்கிச்செல்ல என்றாராகலின், அதற்கேற்ப ஈண்டு மாறிடுதிரைக்கை என்றுங் கூறினர்; ஒன்றன்பினொன்றாக மாறிவீசுந் திரையென்றுமாம். நீறிடுபுனிதமேனி எனவும், கூறிடுதவமெனவும் பாடம். (௪௧)

சிறந்தமண் கூடை வேணித் திருமுடிக் கொட்டை யாக
நிறந்திகழ் கொன்றை நீழ னிறைமண லணையதாக
வுறுந்தொழின் முயற்சி யாலே யுயங்கிமெய் யிளைத்தார்போல
மறைந்துல கெங்கு மான வள்ளலார் பள்ளி கொண்டார்.

இ—ள்: மண் கூடை வேணித் திருமுடிச் சிறந்த கொட்டை ஆக-மண்சுமக்குங் கூடை சடையையுடைய திருமுடிக்கழகிய தலையணை யாகவும்,—நிறம் திகழ் கொன்றை நீழல் நிறை மணல் அணை ஆக-பொன்னிறம்விளங்கும் பூவையுடைய கொன்றைமரநீழலிலே நிறைந்த மணல் சயனமாகவும்,—உறும் தொழில் முயற்சியால் உயங்கி மெய் இளைத்தார் போல,—மிகுந் தொழின் முயற்சியாலே அறவருந்திச் சரீர மிளைத்தார் போன்று,—உலகு எங்கும் மறைந்து ஆன வள்ளலார் பள்ளிகொண்டார்-

உலகெங்கும் விறகிற் றீயைப்போல வியாபித்து மறைந்துநிற்கும் வள்ளலாகிய சோமசுந்தரக்கடவுள் பள்ளிகொண்டருளினார். எ-று.

நீழலிலே பள்ளிகொண்டாரென முடிக்க; நீழல் என்பதை நிறை என்னும் வினைத்தொகையோடு முடிப்ப தாசிரியர்கருத்தாயின் நிறந்திகழ் கொன்றையின்கீழ் நிறைமணலெனத் தம்முடிபினிதுவிளங்கக் கூறுவர், அங்ஙனங் கூறாது கொன்றைநீழலெனக் கூறுதலின் அவர்க்கது கருத் தன்றென்க. மண்கூடையைத் தந்திருப்பள்ளியறைச் சித்திரப்பூம் பட்டாடைத் தலைக்கொட்டைபோலக் கொண்டருளினமைதோன்றச் சிறந்த கொட்டையாக என்றும், மணலணையை, அதன்மீ துதிர்ந்துகிடக்கும் பூவான் மலரணையென்று குறிப்பித்தற்கு நிறந்திகழ்கொன்றை என்றும், உலகெங்கு மறைந்துநிற்பினும் தம் மெய்யன்பர்க் கெளிவந்து வெளி நின்று, அவர் வேண்டியவேண்டியாங்கீயுங் கொடைமடந்தோன்ற மறைந் துலகெங்குமான வள்ளலென்றுங் கூறினார். (சஉ)

ஆங்கவர் துயிலு மெல்லை யருட்பெரு வாழ்வின் மிக்கா
ரோங்கிய கருமஞ் செய்வா ராகியொண் பிரம்பு தாங்கிப்
பாங்குநின் றவரை நாடிப் பகிர்ந்தகோ லறையி லுள்ள
நீங்குநன் குணர்வீ ரென்னச் சென்றகன் கரையிற் சேர்ந்தார்.

இ-ள்: ஆங்கு அவர் துயிலும் எல்லை - அங்ஙனமவர் ஆனந்த நித்திரை செய்தருளுஞ் சமயத்து,—அருள் பெரு வாழ்வின் மிக்கார் - திருவருளாகிய பேரானந்தப் பெருவாழ்வின் மிக மகிழ்பவராகிய திருவாதவூரடிகள்,—ஓங்கிய கருமம் செய்வார் ஆகி ஒண் பிரம்பு தாங்கிப் பாங்கு நின்றவரை நாடி - உயர்வாகிய இராசகாரியங்களைத் தங்கீழ்நின்று நடத்துபவராகிக் கையில் அழகிய பிரம்பைக்கொண்டு பக்கத்தே நிற்கும் காரியதரிசிகளைப் பார்த்து,—பகிர்ந்த கோலறையில் உள்ள நன்கு தீங்கு உணர்வீர் என்ன - அவரவர்க்கு வகுத்துக் கொடுக்கப்பட்ட உடைகரைப்பாகங்களினுள்ள குணகுணங்களைப் பார்த்தறிமினென்று பணிக்க,—சென்று அகன் கரையில் சேர்ந்தார் - அவர்சென்று விசாலமாகிய அச்செய்கரையையடைந்தார். எ-று. (சங)

நன்குற வடைத்தல் செய்தா ரியாவரு மென நயந்து
சங்கர னடைக்கு நீடு தடங்கரை யவர்க ளெய்தி
யெங்கணு முயர்ந்து தாழ்ந்த திவ்விடம் யார்க்கு நேர்ந்த
பங்கிது மொழிமி னென்ன நின்றவ ரிவை பகர்ந்தார்.

இ-ள்: அவர்கள் யாவரும் நன்கு உற அடைத்தல் செய்தார் என நயந்து - அக்காரியதரிசிகள் பங்காளரனைவரும் உடைகரையைச் செவ்விதாகக் கட்டினார்களென்று மனமகிழ்ந்து,—சங்கரன் அடைக்கும் நீடு தடம் கரை எய்தி - சுந்தரேசராகிய கூலியாளர் நின்றடைக்கு நெடிய விசாலமாகிய கரையை யடைந்து,—எங்கணும் உயர்ந்து இவ்விடம் தாழ்ந்தது-

இவ்வணை மற்றெவ்விடங்களு மூயர்ந் திவ்விடமாத்திரந் தாழ்ந்திருக்கின்றது.—இது யார்க்கு நேர்ந்த பங்கு மொழிமின் என்ன - இஃது யார்க்கு வகுத்துவிடப்பட்ட பங்கு சொல்லுங்களென்று வினவ,—நின்றவர் இவை பகர்ந்தார் - அங்கே நிற்கின்றவர்கள் இவைகளைக் கூறினார். எ-று. (சச)

பெருவள நீடு கூடற் பிட்டுவிற் றுணவு கொள்வா
ளொருமுது மடந்தைக் காளா யொருவன்வந் திங்ங னெய்தி
யிருநில மகழ்ந்து கூடை யுட்சொரிந் திரங்கி நிற்பன்
சிரமிசை யெடுப்பன் மீள்வன் சிந்துவ னகுதல் செய்வான்.

இ—ள்: பெருவளம் நீடு கூடல் பிட்டு விற்று உணவு கொள்வாள் ஒரு முது மடந்தைக்கு ஆளாய் ஒருவன் வந்து இங்ஙன் எய்தி-பெருஞ்செல்வம் அபிவிருத்தியடையும் இம் மதுரைமாநகரத்திலே பிட்டுவிற்றுண்பவளாகிய வந்தியென்னுமொரு வயோதிகப்பெண்ணுக்குக் கூலியாளாய் ஒருகாலைவந் திவ்விடத்தையடைந்து.—இரு நிலம் அகழ்ந்து கூடையுள் சொரிந்து இரங்கி நிற்பன் - பெருமைபொருந்திய மண்ணைவெட்டிக் கூடையின்கணிட்டு இதனைத் தனித்தெடுப்ப தெங்ஙனமென்று மனமிரங்கிச் சிறிது வாளாநிற்பன்,—சிரமிசை எடுத்து மீள்வன் - பின்பு தலைமீதெடுத்துவைத்து மண் கொட்டப்படுமிடத்திற் கெதிர்ப்பக்கஞ்செல்வான்,-சிந்துவன் - அப்பக்கத்தணை காணப்படாமையினால் இஃது மிகுபாரமாயிருக்கின்றதென்று அம்மண்ணைச் சிதறுவான்,—நகுதல் செய்வான் - இஃதென்னை திசை மயக்கமாயிற்றென்று சிரிப்பான். எ-று.

ஈண்டு நிலத்திற்குப்பெருமை தன்னையகழ்வாரையுந் தானுதாரமாய் நின்று தாங்கும் பொறுமை. சிரமிசையெடுத்துச் செல்வனென்னுது மீள்வனென்றமையா னெதிர்ப்பக்கஞ் செல்வானென்பது பெற்றும். ஈண்டுச் சிந்துதல் அணையின்கணன்றி வேற்றிடத்துச் சிதறுதலென்பது வருஞ்செய்யுளில் ஓர்கூடைமண்ணை நீடுதிண்கரையிலேறச் சொரிகுவனென்பதனானு மறிக. ஙனம் என்பது கடைக்குறைந்துநின்றது. (சரு)

பாடுவ னாடல் செய்வன் பையவோர் கூடை மண்ணை
நீடுதிண் கரையி லேறச் சொரிகுவ னெடிது நிற்ப
னோடுவ னோடி மீள்வ னொருகைமண் கரையி லேறப்
போடுவன் போக வென்னில் வருவன்வா வென்னிற் போவன்.

இ—ள்: பாடுவன் ஆடல் செய்வன் - பொழுதுபோக்குதற்பொருட்டுக் கொன்னேநின்று பாடுவான் கூத்தாடுவான்,—பைய ஓர் கூடை மண்ணை நீடு திண் கரையில் ஏறச் சொரிகுவன் - பின்பு மெல்லநடந்து ஒருகூடைமண்ணை நெடிய திண்ணிய கரையில்விழக் கொட்டுவான்,—நெடிது நிற்பன் - அதனான் மிக மெலிந்தவன்போன்று நெடுநேரம் அசையாதுநிற்பான்,—ஓடுவன் ஓடி மீள்வன் - பின்னர் விரைந்தோடுவான்

ஓடிக் கடிதுதிரும்புவான்,—ஒருகை மண் கரையில் ஏறப் போடுவன் - ஒரு கைப்பிடிமண்ணை மறித்துங் கரையில் விழப் போடுவான்,—போக என்னில் வருவன் - நீ போவென்றால் வருவான்,—வா என்னில் போவன் - நீ வாவென்றாற் போவான். எ-று.

ஏற என்பதற்கு உயர எனப் பொருள்கூறினும் பொருந்தும். இயல்புக்கு விரோதமானவன் என்பது கருத்து. (௪௯)

பிட்டினை நுகர்வ னையா பெரிதுநன் றென்று கையைக்
கொட்டுவன் செய்கை காணி லரசிளங் குமர னொப்பா
னெட்டலர்க் கொன்றை நீழ னெடுந்துயில் கொள்கின் றானங்
கட்டுரை சிறிதுங் கேளா னவன்றனைக் காண்மி னென்றார்.

இ—ள்: பிட்டினை நுகர்வன் - பின்னர் வந்தியாகிய எசமாட்டி கொடுத்த பிட்டையள்ளி உண்பான்,—ஐயா பெரிதும் நன்று என்று கையைக் கொட்டுவன் - ஐயா இப்பிட்டு மிகவு நன்றென்று கூறிக் கையோடுகையைக் கொட்டுவான்,—செய்கை காணில் அரசு இளம் குமரன் ஒப்பான் - அவனது இன்னோரன்ன செல்வச்செயல்களை நாமுற்று நோக்குமிடத்து அரசிளங்குமரனையே ஒக்கின்றான்,—நெட்டு அலர்க் கொன்றை நீழல் நெடும் துயில் கொள்கின்றான்-அவன் நெடிய பூங்கொத்துக்களையுடைய கொன்றைமரநிழலிலே நெடுநேரம் நித்திரைசெய்கின்றான்,—நம் கட்டுரை சிறிதும் கேளான் - கூலியாளாகிய உனக்கு இவை நன்மையவல்லவென்று நாங்கூறு முறுதிமொழிகளு ளொன்றையு மொரு சிறிதும் பொருட்படுத்துகின்றிலன்,—அவனைக் காண்மின் என்றார் - அவனை இதோ பாருங்களென்று சுட்டிக்காட்டிக் கூறினார். எ-று.

ஆர்ய என்னும்வடமொழி தமிழில் ஐயாவென்றாயிற்று. மாலைபோலத் தொடர்ந்து பூத்தலின் நெட்டலர் என்றார். (௫௰)

என்றலு மவனை யிங்கே கொணர்மினென் றவரு ணின்ற
வன்றிற லொருவன் கூற வாரியன் வல்லை யோடிச்
சென்றலு ஞான யோகச் செழுந்துயி லொழிந்து மூன்று
துன்றிய புரங்கள் செற்றார் துண்ணென விழித்தெ ழுந்தார்.

இ—ள்: என்றலும் - என்றிவ்வா றவர்கள் கூறுதலும்,—அவருள் நின்ற வன் திறல் ஒருவன் அவனை இங்கே கொணர்மின் என்று கூற - அக்காரியதரிசிகளுள் நிற்கின்ற மிக்க வலிமையுடைய ஒரு அதிகாரி அக் கூலியாளனை இங்கே எம்முன் கொடுவருகவென்று பணிக்க,—ஆரியன் வல்லை ஓடிச் சென்றலும் - அதுகேட்ட காரியதரிசிகளு ளொருவன் விரைந்தோடிச் சென்று சமீபித்தலும்,—மூன்று துன்றிய புரங்கள் செற்றார் ஞான யோகச் செழும் துயில் ஒழிந்து துண்ணென விழித்து எழுந்தார் - சிவபெருமானாகிய கூலியாளர் ஞானயோகமாகிய ஆனந்த நித்திரைசெய்தலை நீங்கித் திடுக்கெனக் கண்களைவிழித் தெழுந்தார். எ-று.

என்றலும் சென்றலு மென்பன உம்மீற்று வினையெச்சங்கள். மூன்று துன்றியபுரம் மூன்றென்னு மெண்பொருந்திய புரம். தம தேசமாட்டியாகிய வந்திக்கு முற்கூலிவாங்கிய தம்மாற் செயப்படவேண்டுங் கடன்மையாகிய கூலிவேலை முடிவதன்முன் இடையே நித்திரைவந்து தம்மைக் கெடுத்ததென்றும், அதன்பொருட் டினிக் காரியதரிசிகளாலே தமக்கென்ன தண்டம் சம்பவிக்குமோவென்றும் அஞ்சியெழுபவர்போலக்காட்டியெழுந்தாரென்பார் துண்ணென விழித்தெழுந்தாரென்றார். (சஅ)

விழித்தலுங் கடிது சென்ற வாரியன் வெருவ நோக்கி
மொழிக்கனல் சிந்தி யந்த முன்னவன் றன்னை யெய்த
வழைத்தலும் வருதல் செய்யா தஞ்சிநின் றிரங்கல் கண்டு
பழித்தவர் செங்கை பற்றி யீர்த்தனன் பரிவி லாதான்.

இ—ள்: விழித்தலும் - மேற்கூறியபிரகாரம் அவர் நித்திரைவிட்டெழுதலும்,—கடிது சென்ற ஆரியன் வெருவ நோக்கி - விரைந்து சென்ற அக்காரியதரிசி அவர் அஞ்சும்படி வெகுண்டு பார்த்து,—மொழிக்கனல் சிந்தி - கொடுஞ்சொற்களாகிய அக்கினியைச் சிதறி, அந்த முன்னவன்றன்னை எய்த அழைத்தலும் - அவ்வதிகாரியிடத்து வரும்படி அழைத்தலும்,—வருதல் செய்யாது அஞ்சி நின்று இரங்கல் கண்டு - அவரங்ஙனம் வாராது பயந்துநின் றழுதலைக் கண்டு,—பரிவு இலாதான் பழித்து அவர் செம் கை பற்றி ஈர்த்தனன் - சீவகாருண்ணியமில்லாத அக்காரியதரிசி இவ்வளவுதானோ நின்குறும்பென்று இழிமொழிகளால் வைது அவருடைய சிவந்த கையைப்பிடித் திழுத்தான். எ-று.

அவரஞ்சும்படி வெகுண்டு வெருட்டி நோக்கினனென்பார் வெருவ நோக்கி என்றும், அக்கினிபோல வருத்தவல்ல கொடுஞ்சொற்களை மிகவும் பேசினனென்பார் மொழிக்கனல் சிந்தியென்றுங் கூறினார். அக்காரியதரிசிகள் பலருள் விசேடித்த ஒருவனே கூலியாளரைத் தன்முன் கொடுவருகவென்று மற்றொரு காரியதரிசிக்கு முன் பணித்தானாகலின் அவனை அந்த முன்னவனென்றார். இது ரௌத்திரமும், அச்சமுங்கலந்துவந்த உபயரசாலங்காரமென்க. (சகூ)

ஆங்கவன் கடிதிற் றள்ளி யண்ணலை யெண்ணி லாத
தீங்கினன் முன்னர்க் கொண்டு சேறலும் வெகுட்சி யெய்திப்
பாங்குநின் றவரு ணின்ற பாவியைப் பாவி நோக்கி
யீங்குவெங் குருதி சோர வடித்திடு மிவனை யென்றான்.

இ—ள்: ஆங்கவன் அண்ணலை எண் இலாத தீங்கினன் முன்னர்க்கடிது தள்ளிக்கொண்டு சேறலும் - அக்காரியதரிசி கூலியாளாக எழுந்தருளிவந்த சோமசுந்தரக்கடவுளை முடிவற்ற தீமையையுடைய அவ்வதிகாரிக்குமுன் விரைவாகப் பிடர்பிடித் துந்திக்கொடு செல்லுதலும்,—பாவி

வெகுட்சி எய்தி - பாவியாகிய அவ்வதிகாரி கண்டு கோபங்கொண்டு,—பாங்கு நின்றவருள் நின்ற பாவியை நோக்கி-தன்பக்கத்து நிற்பவர்களுள் ஒருபெரும் பாவியைப் பார்த்து.—ஈங்கு வெம் குருதி சோர இங்கு இவனை அடித்திடு என்றான் - இங்கே கொடிய இரத்தமொழுகும்படி நீ இவனுக்குத் தப்பாது அடியென்றான். எ-று.

அபுத்திபூர்வமாக நிகழினும், அடிக்கும்படி ஏவினோனும் ஏவப்பட்டோனுமாகிய இருவரும் பெரும்பாவிகளேயென்பார் எண்ணிலாத தீங்கினனென்றும் பாவியைப் பாவிநோக்கியென்றும், உடம்பில் நன்கழுந்தும்படி விசைத்தடியென்றேவினனென்பார் வெங்குருதிசோர வடித்திடிங்கிவனையென்றுங் கூறினார். (௫0)

கடுத்தசொல் வன்க ணாளன் கதத்துடன் மாறு கையி [கை
லெடுத்தனன் முனிவர் விண்ணோ ரெடுத்தனர் தொழுது செங்
யடித்தன னடித்த போதி லன்புடை யரிவை பாகங்
கொடுத்திலர் துணுக்க மெய்த மறைந்தனர் குறைவி லாதார்.

இ—ள்: கடுத்த சொல் வன்கணாளன் கதத்துடன் மாறு கையில் எடுத்தனன் - கடுஞ்சொல்லைப் பேசும் அத்தறுகண்ணன் அடிக்கும்படி கோபத்துடன் கையிற் பிரம்பை எடுத்தான்,—முனிவர் விண்ணோர் செம் கை எடுத்துத் தொழுதனர் - அத்துராகிருதத்தைக் கண்ட இருடிகளுந் தேவர்களுந் தமது சிவந்தகைகளை உயர்த்திக் கூப்பிச் சிரசில்வைத்துக் கும்பிட்டனர்,—அடித்தனன் - அப்பொழுது அத்துரான்மா கிஞ்சித்தும் கிருத கிருத்திய பரியாலோசனையில்லாதவனாய் அடித்தான்,—அடித்த போதில் - அவ்வாறவ னடிக்கக்ஷணத்தில்,—குறைவு அலாதார் அன்பு உடை அரிவை பாகம் கொடுத்திலர் - அதனாற் றமக்கொரு குறைவுமில்லாத சிவபெருமானனவர் தம்மாட்டபரிமித அன்பையுடைய சத்தி பாகமாகிய வாமபாகத்தை அவ்வடி படும்படி கொடுத்தாரல்லர்,—துணுக்கம் எய்த மறைந்தனர் - அங்குள்ளவரெல்லாந் திடுக்கிட அந்தர்த்தானமாயினார். எ-று.

அரிவைபாகங் கொடுத்திலரெனவே தங்கூறாகிய வலப்பாகங் கொடுத்தாரென்ப தருத்தாபத்தியாற் பெற்றாம். தம்மைச் சரணடைந்தோர்க்குக் களைகணாய்நின்று, அவரைக் குறிக்கொண்டு காத்தலே தமக்குக் கடப்பாடென்பதனைப் பிறரறிந்தீடேறுமாறு அன்புடையரிவைபாகங்கொடுத்திலரென்க. குறைவிலாதாரென்பதற்கு எங்கும் நிறைந்தவரெனப் பொருளுரைப்பினு மமையும். துராகிருதம்-துர்ச்செய்கை. கிஞ்சித்து-அற்பம். கிருத கிருத்திய பரியாலோசனை செய்தொழிலின் பயனீது ஆராய்ச்சி. அரசனடித்ததை ஆரியனடித்ததென்றார் சார்புநூலிலக்கணம் பாதுகாத்தற்கென்க. (௫௧)

வேறு.

தார்மேனின் றிலங்குபுய வழுதி மேலுந்
தன்மனைமங் கையர்மேலு மமைச்சர் மேலு
மார்மேலுஞ் சென்றுபொருஞ் சேனை மேலு
மயன்மேலு மான்மேலு மறவோர் மேலுந்
தேர்மேல்வெம் பகன்மேலு மதியின் மேலுஞ்
சிறந்துளவிந் திரன்மேலுந் தேவர் மேலும்
பார்மேலுங் கடன்மேலு மரங்கண் மேலும்
பட்டதரன் மெய்யிலடி பட்ட போதே.

இ—ள்: அரன் மெய்யில் அடிபட்ட போது - சங்காரகருத்தாவாகிய சிவபெருமானது திருமேனியில் அடிபட்டதருணத்து, அவ்வடி,—தார் மேல் நின்று இலங்கு புய வழுதி மேலும் - மாலையானது மேனின்று விளங்குதற்குக் காரணமாகிய புயங்களையுடைய பாண்டியராசன்மீதும்,—தன் மனை மங்கையர் மேலும் - அவ்வரசனது இல்வாழ்க்கைத் தருமபத்தினிகண்மீதும்,—அமைச்சர் மேலும் - அவனது மந்திரிகண்மீதும்,—ஆர் மேலும் சென்று பொரும் சேனை மேலும் - எத்துணை வலிமையுடைய பகைவர்மாட்டு மஞ்சாது சென்று யுத்தஞ்செய்யு மவனுடைய சேனைகளின்மீதும்,—அயன் மேலும் - பிரமாவின்மீதும்,—மால் மேலும் - விஷ்ணுவின்மீதும்,—அறவோர் மேலும் - சனகர்முதலிய துறவிகண்மீதும்,—தேர் மேல் வெம் பகல் மேலும் - ஒருருளையினையுடைய தேரின்கணிவர்ந்துசெல்லும் உஷ்ணத்தையுடைய சூரியன்மீதும்,—மதியின் மேலும் - சந்திரன்மீதும்,—சிறந்துள இந்திரன்மேலும் - முப்பத்துமுக்கோடிதேவர்களுக்கும் நாயகமாகிய சிறப்பையுடைய இந்திரன்மீதும்,—தேவர் மேலும் - ஒழிந்த அத்தேவர்கண்மீதும்,—பார் மேலும் - பூமியின்மீதும்,—கடல் மேலும் - சமுத்திரத்தின்மீதும் - மரங்கள் மேலும் பட்டது - மரங்களின் மீதும் ஒருங்கே பட்டது. எ-று.

மாலை வேப்பமாலை. மகாசங்காரகருத்தாவே உலகத்துக்கு முதற்கடவுளென்பதுண்மைநூற்றுணிபாகலானும், இக்கடவுளின்மீது பட்ட அடி அவ்வுலகெங்கும் படுதலானும், இவரே அம்மகாசங்காரகருத்தாவாகிய முதற்கடவுளென்பார் அது குறிப்பாற்றோன்ற அரன் என்றார். சிவபெருமான் விச்சுவரூபியாகலின் அவர் மீது பட்ட அடி உலகெங்கும் பட்டதென்பது கருத்து. முன் ஓர் ஞான்று அருச்சுனனுக்கு அருள்புரிவான் கிராதவுருக்கொடு சென்று விநோதார்த்தமாக அவனுடன் சமர்விளைத்தவழி அவ்வருச்சுனன் வெகுண்டு தன் கைக்கொண்ட வில்லாற் சிவபிரானது அருமைத்திருமேனியிற் புடைத்தலும் இங்ஙனமே உலகின்கணுள்ள ஆன்மாக்களனைத்தினும், அவ்வடிபட்டுறைத்ததென்பது "விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர் விரிஞ்சனரியே முதலினோர், மண்ணி

றுறை மானவரில் யாரடி படாதவர் மனுக்கண் முதலோர்களதலக், கண்ணிலுறை நாகர்களில் யாரடி படாதவர்கள் கட்செவி மகிபன் முதலோ, ரெண்ணில் பலயோனியிலும் யாவடி படாதன விருந்துழி யிருந்துழியரோ." "வேதமடியுண்டன விரிந்தபல வாகம விதங்களடி யுண்டனவோரைம், பூதமடி யுண்டன விநாழிகை முதற்புகல் செய்பொழுதொடு சலிப்பில் பொருளின், பேதமடியுண்டன பிறப்பிலி யிறப்பிலி பிறங்கலரசன் றன்மகளார், நாதனமலன் சமரவேட வடிவங்கொடு நரன்கை யடியுண்டபொழுதே." என்னும் வில்லிபுத்தூரர் வாக்குக்களானுமறிக. இது எண்சீரடியாசிரியவிருத்தம். (௫௨)

தந்தமுரு வொழிந்துபிறி துருவ மாகிச்
சதுர்முகனுஞ் சங்காழி தரித்த மாலு
மந்தமுத றெரிவரிதாய் வெளியே நின்ற
வண்ணலார் வடிவிலடி பட்ட போதி
லெந்தவுல கங்களினு மிருந்து ளோர்க
ளெம்முடலி லடியுறைத்த தென்று கூற
முந்தியெழும் பன்மொழிக ளுகாந்த வெல்லை
மோகரிக்கு மெழுகடலின் முழக்கம் போன்ற.

இ—ள்: சதுர்முகனும் சங்கு ஆழி தரித்த மாலும் தம் தம் உரு ஒழிந்து பிறிது உருவம் ஆகி - நான்கு முகங்களையுடைய பிரமாவுஞ் சங்கு சக்கரங்களைத் தாங்கும் விஷ்ணுவுந் தத்தம் நிசரூபங்களைவிட்டு முறையே அன்னமும் பன்றியுமாகிய வேற்றுருக்கொண்டு தேடி,—அந்தம் முதல் அறிவு அரிது ஆய் வெளியே நின்ற அண்ணலார் வடிவில் அடி பட்ட போது-முடிவு முதலு மறிதற்கரிதாகி மறைந்துநிற்பினும் தம்மெய்யடியார்க் கிங்ஙனம் வெளிப்பட்டு நின்றருளு மெய்பொருட்கு மிறைவராகிய சோமசுந்தரக்கடவுளினது திருமேனியில் அவ்வடிபட்டதருணத்து,— எந்த உலகங்களினும் இருந்துளோர்கள் எம் உடலில் அடி உறைத்தது என்று கூற முந்தி எழும் பல் மொழிகள் - எல்லாவுலகங்களினும் வசிப்பவர்களும் எங்கள் சரீரத்தில் அடிபட்டதென்று தனித்தனி ஒருங்கு கூறுதலான் முற்பட்டெழும் பலதிறச்சொற்களி னொலிகள்,—உக அந்த எல்லை மோகரிக்கும் எழு கடலின் முழக்கம்போன்ற - உகமுடிவின்கட் கொந்தளிக்குஞ் சத்த சமுத்திரங்களின் பேரொலிபோன்றன. எ-று.

பிறிது தனித்தனி சென்றியையும். அரிது பண்புப்பெயர்; "உரை செயற்கரிதுமாகி யெளிதுமா யொழுகி நின்றான்" என்புழிப்போல. பிரம விஷ்ணுக்கள் வருந்தித் தேடியவழியும் அடிமுடி அறியப்படாது மறைந்து நிற்பினும்,தம்மெய்யடியவர்க்குத்தாமேவந்துவெளிப்பட்டுநிற்பதன்மேலும் அவர்பொருட்டடிபட்டெளிவந்தவரென்பார் தந்தமுருவொழிந்துபிறிதுருவமாகிச் சதுர்முகனுஞ்சங்காழிதரித்தமாலு, மந்தமுதறெரிவரிதாய் வெளியேநின்ற வண்ணலார் என்றார். சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

விஷ்ணு பிரமாக்கள் அடிமுடி தேடி அறியாவண்ண நீண்ட திருவுருவி னிலே அவரே முதற்கடவுளாமாற்றைச் சாதிப்பதொன்றென்பது "ஆதி யரியயற் கறிய வொண்ணு, மேவுரு நிலையு மோரார்" என்பது முதலிய திருவாக்குக்களா னினிது விளங்குதலின், அப்பெற்றியையுடைய முதற் கடவுண்மீது பட்டமையின், அவ்வடி உலகெங்கும் பட்டதென்பது கருத்து. எதுகைநோக்கி அந்தம் முன் பிரயோகிக்கப்பட்டது. சதுர்முக னும் மாலுமென்பவற் றும்மை எண்ணொடு சிறப்புமாய்நின்றன. (௫௩)

மாயையெனுங் கரும்பெரிய புனன்மேன் மொக்குள்
வண்ணமெனு மெண்ணிலா வண்டத் துள்ளு
மேயவகை யெண்பத்து நான்கு நூறு
யிரமான பலயோனி யெவற்றி னுள்ளு
மாயவுயிர்க் குயிராகி நிற்குந் தன்மை
யவனிதலத் தஞ்ஞான ரறிந்து பாதச்
சேயமலர் வழுத்துதற்கோ கூலி யாளாய்ச்
சென்றுமுடி மண்சுமந்தார் தில்லை நாதர்.

இ—ள்: மாயை எனும் கரும் பெரிய புனல் மேல் மொக்குள் வண்ணம் எனும் எண் இலா அண்டத்து உள்ளும் ஏய - மாயையென்று சொல்லப்படுங் கருமையாகிய பெரிய கடலிலே தோன்றும் குமிழிகள் போலும் அளவற்ற அண்டங்கடோறுமுள்ள,—பல எண்பத்து நான்கு நூறுயிர யோனி வகை ஆன எவற்றின் உள்ளும் ஆய உயிர்க்கு உயிர் ஆகி நிற்குந் தன்மை - மிகுதியாகிய எண்பத்துநான்குநூறுயிர யோனிபேதத் தையுடைய ஆன்மவர்க்கங்கட்கெல்லாம் பரமான்மாவாகி உண்ணின்றியக் குந்தமதுசூக்குமத்தன்மையை,—அவனி தலத்து அஞ்ஞானர் அறிந்து பாதச் சேய மலர் வழுத்துதற்கோ - இந்நிலவுலகத்துள்ள அஞ்ஞானிகளும் பிரத்தியக்ஷமாக அறிந்து தமது சிவந்த திருவடித்தாமரைகளை வணங்கித் துதித்துக் கடைத்தேறும்பொருட்டேயோ,—தில்லை நாதர் கூலியாளாய்ச் சென்று முடி மண் சுமந்தார் - சிதம்பரசபாநாயகர் வந்திக்குக் கூலியா ளாகிச் சென்று தந்திருமுடியில் மண்சுமந்தருளினார். எ-று.

அஞ்ஞானருமென்னு மிழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. புனல் ஆகுபெயர். வழுத்துதற்கோவென்னு மோகாரஞ் சிறப்பின்கண் வந்தது; "சிலமோ வுலகம்போலத் தெரிப்பரிது" என்புழிப்போல. அவ னிதலத் தஞ்ஞானிகளும் அகிலகாரணர் சிவபெருமானே என்ப தறிந்து கோடற்கு இதுபோலும் பிரத்தியக்ஷப்பிரமாணம் பிறிதொன்றில்லை என் பது கருத்து. அது "ஏகநாயக னெவ்வுயிர்களுந் தானே யென்பது மன் பினுக் கெளிய, ஞகிய திறனுங் காட்டுவா னடிபட்டு" என வழிநூலாசிரி யர் கூறியவாற்றானுமறிக. ஈண்டஞ்ஞானிகளென்றது சிவபெருமானே உலகிற்கு முதற்கடவுளென்னு முண்மையை யறியாத பொய்ச்சமயிகளை வரையுமென்க. இது கவிகூற்று. (௫௪)

வேறு.

மையணையுந் திருமிடற்றார் மெய்யிலடி வாதவூ
ரையருடம் பினுங்கடிது படுதலுமே யயர்வெய்தி
யுய்யவெனை யாட்கொள்வா னுவந்தொருவர்க் காளாகி
மெய்யரெழுந் தருளினரோ வென்றென்று மிகநொந்து.

இ—ள்: மை அணையும் திரு மிடற்றார் மெய்யில் அடி வாதவூரை யர் உடம்பினும் கடிது படுதலும் அயர்வு எய்தி - நஞ்சக்கறைபொருந்திய திருக்கண்டத்தையுடைய சிவபெருமானது திருமேனியின்கட்பட்ட அவ் வடி திருவாதவூரடிகளுடைய திருமேனியிலும் அப்பொழுதே படுதலும் அவர் அறிவழிந்து பின்னர்த் தேறி,—மெய்யர் உய்ய எனை ஆட்கொள் வான் உவந்து ஒருவர்க்கு ஆள் ஆகி எழுந்தருளினரோ என்று என்று மிக நொந்து - மெய்ப்பொருளாகிய நஞ்சிவபெருமான் தமியே னுய்யும்பொரு ட்டு என்னை யாட்கொண்டருளும்படி நாயேனை யுவந்து தாமொருவர்க்குக் கூலியாளாகி ஈண்டெழுந்தருளினாராக வேண்டுமென்றென்று சிந்தித்து மனம் மிகவுமிரங்கி. எ-று.

திருவாதவூரடிகளுக்கு அடிப்பா ரொருவருமின்றித் தம்மீதடிபட்ட மையானும்; சிவஞானமுடைமையானும், தம்பொருட் டரசனுக்குக் குதிரைகொடுத்தன்முதலிய முன்னைநிகழ்ச்சிகளானும், இதுவும் அவரது திருவிளையாட்டென்பது தெற்றெனவிளங்கிற்றென்க. ஒருவர்க்குக் கூலியாளாயவழி யல்லது அவர் அடிபடுதற்கு ஏதுவின்மையின் ஒருவர்க் காளாகி மெய்ய ரெழுந்தருளினரோ என்றார். ஓகாரம் கழிவிரக்கப்பொ ருட்கண் வந்தது. இது நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா. (௫௫)

தம்பெருமை யறியாத தம்மிறைவர் தமக்கிரங்கிக்
கம்பிதமுங் கண்ணீரும் வரக்கவற்சி யுறும்போதில்
வெம்பிறவி தொலைத்தார்முன் னாரியர்கள் விரைந்தோடி
யும்பர்பிரான் றிருவிளையாட் டெல்லாமங் குரைத்தார்கள்.

இ—ள்: தம் பெருமை அறியாத தம் இறைவர் தமக்கு இரங்கி - திருவாதவூரடிகளானவர் தம்பெருமையைத் தாம் அறியாத தங்கடவு ளாகிய சிவபெருமான்பொருட்டு மனமிரங்கி,—கம்பிதமும் கண்ணீரும் வரக் கவற்சி உறும் போதில் - அச்சத்தாற் சரீரநடுக்கமும் அன்பாற் கண் ணீருமுண்டாக மனம் கவலைமிகுஞ்சமயத்தில்,—ஆரியர்கள் வெம் பிறவி தொலைத்தார்முன் விரைந்து ஓடி-காரியதரிசிகள் கொடிய பிறவியைநீக்குந் திருவாதவூரடிகளுக்கு முன் விரைந்தோடிச் சென்று,—உம்பர் பிரான் திருவிளையாட்டு எல்லாம் அங்கு உரைத்தார்கள் - தேவநாயகராகிய சிவ பெருமானுடைய திருவிளையாடல்களையெல்லாம் அங்கே ஒன்றொழியாது விண்ணப்பஞ்செய்தார்கள். எ-று.

விளையாட்டெல்லா மென்றது கூலியாளாதல் எழுவாய் அடிபுண்ட மை இறுவாயாயுள்ள எல்லாவற்றையுமென்க. தம்பெருமை சுட்டறிவானறி யப்படுதலும் தாம் சுட்டறிவுடையராதலும் தமக்கிலக்கணமாகவுடைய பசுக்களைப்போலன்றித் தம்பெருமை சுட்டறிவானறியப்படாமையும் தாம் சுட்டறிவுடையரல்லராதலும் தமக்கிலக்கிணமாகவுடைய பதியாகலின், அவரைத் தம்பெருமையறியாத தம்மிறைவரென்றார். இக்கருத்தை, "பேதைமை யொருகுண மவன்கட் பேசுதல்" என்றற்றொடக்கத் தான்றோர் திருவாக்குக்களானு முய்த்துணர்க. "தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலே" "முழுதுந், தானுங் காண்கில னின்னமுந் தன்பெருந் தலைமை" என்பனவு மிக்கருத்தேபற்றிவந்தன. இனி உலகத்துப் பெருஞ்செல்வனொருவனை அவன் தன்செல்வத்தைத் தானும் அறியான் என உபசாரம்பற்றிக் கூறுதல்போலப் பெருந்தலைமையை யுடைய கடவுளை அவர் தந்தலைமையைத் தாமுமறியாரென உபசாரம் பற்றிக் கூறியதாகக்கோடல் இத்துணைச் சிறப்பின்றென்க. இன்னும் சிவாகமங்கள் விதந்துகூறும் பரசிவனது பெருந்தலைமையைப் புராணங்கள் விதந்துகூறும் கைலாசபதியாகிய ஸ்ரீகண்டருத்திரர் இன்னமும் முழுது மறியமாட்டாரென் றுரைத்தலுமொன்று. தம்மிறைவரென்றார் திருவருளை முன்னிட்டுகில்லாத எம்போலு மன்பிலிகளது அந்நியமுடைமை போதருதற்கென்க. (ருசு)

வேட்டுருகும் பெருங்காதல் வித்தகரித் தன்மையெலாங்
கேட்டுமனந் தளர்ந்துமிகக் கிளர்ந்துவிழிப் புனல்பெருக
வாட்டிகழுஞ் சடையண்ணன் மண்சுமந்தவிடங்கொடுபோய்க்
காட்டுமென மொழிந்தவரோ டவ்விடநேர் கடிதெய்தி.

இ—ள்: வேட்டு உருகும் பெரும் காதல் வித்தகர் இத் தன்மை எலாம் கேட்டு - தரிசிக்கவிரும்பி மனம் நெக்குநெக்குருகும் பேராசையை யுடைய சாதுரியராகிய திருவாதவூரடிகள் இச்சம்பவங்களையெல்லாங் கேட்டு,—மனம் மிகத் தளர்ந்து விழிப் புனல் கிளர்ந்து பெருக - மன மிக மெலிந்து கண்ணீர்ததும்பிப் பெருக,—வாள் திகழும் சடை அண்ணல் மண் சுமந்த இடம் கொடு போய்க் காட்டும் என மொழிந்து-செவ்வொளி விளங்குஞ் சடையையுடைய சொக்கநாதசுவாமி தம தருமைத்திருமுடியில் வைத்து மண்சுமந்தருளிய பெரும்பேற்றையுடைய ஸ்தானத்தை என்னைக்கொடுசென்று நீவிர் காட்டுங்களென்று,—அவரோடு அவ்விடம் நேர் கடிது எய்தி - அக்காரியதரிசிகளோ டவ்விடத்து நேர்வழியால் அதி சீக்கிரத்திற் சென்று. எ-று.

இனி வான் என்பதனை ஆகுபெயராகக்கொண்டு இளம்பிறை விளங்குஞ் சடையெனினுமமையும். மனம் மிகத்தளர்தற்கும் கண்ணீர் மிகப் பெருகற்கும் காரணம் முன்னர்க் கூறுப. (ருஎ)

அழுங்கியரும் பெருநரகி லடியேனும் வீழாம
லெழுந்தருளும் பெரியோனே யெங்கணுளா யென்றென்று
தொழுங்கரமுங் கண்ணீருந் துளங்கியமெய்ப் புளகமுமாய்
விழுந்துபுரண் டிவ்வாறு புலம்பினர்மெய் யன்பாளர்.

இ—ள்: மெய் அன்பு ஆளர்-மெய்யன்பையாளுந் திருவாதவூரடிகள்,—அடியேனும் அரும் பெரு நரகில் அழுந்தி வீழாமல் எழுந்தருளும் பெரியோனே-புழுத்தநாயினும் கடையேனாகிய தமியேனும் ஏறுதற்கரிய பெரிய நிரயமாகிய படுகுழியின்கண் வீழ்ந்து வருந்தி அமிழ்ந்தாவண்ணம் முன்னர்க் குருமூர்த்தங்கொண்டெழுந்தருளிவந்த பெருந்தகைமையையுடைய சுவாமீ,—எங்கண் உளாய் என்றென்று-இப்பொழுது தமியேனுக்கெவ்விடத் தொளித்தருளினீரென்று பன்னிப்பன்னி,—தொழும் கரமும் கண்நீரும் துளங்கிய மெய்ப்புளகமும் ஆய்-கும்பிடுங்கைகளும் மார்பில் வண்டலாடுங் கண்ணீரும் நடுங்குகின்ற சரீரத்தில் அரும்பிய புளகமுமாகி,—விழுந்துபுரண்டு இவ்வாறு புலம்பினர்-அந்தத்திவ்விய ஸ்தானத்தில்வீழ்ந்து தமது திருமேனியில் அப்புழுதி திவளும்படி பலதரம் புரண்டுகீழ்க்கூறும் இந்தப்பிரகாரம் வியாகுலங்கொண்டு புலம்புவாராயினர். எ-று.

அடியேனுமென்னுமும்மை இழிவுசிறப்பின்கண் வந்தது. (௫அ)

நீறுபடும் பொன்மேனி நின்மலனே நெடுங்கங்கை
யாறுபடுஞ் சடைமுடியா யடியவர்கட் கெளியானே
மாறுபடும் புரமெரித்தாய் மாறுபடும் போதுடலிற்
கூறுபடுஞ் சிவஞானக் கொம்பினுளங் குழையாதோ.

இ—ள்: நீறு படும் பொன் மேனி நின்மலனே - விபூதிதரிக்கப் படும் பொன்போலுந் திருமேனியையுடைய மலரகிதரே,—நெடும் கங்கை ஆறு படும் சடைமுடியாய் - நெடிய கங்காநதி பிரவாகிக்குஞ்சடாமுடியையுடையவரே,—அடியவர்கட்குஎளியானே - அடியவர்கட் கெளியவரே,—மாறு படும் புரம் எரித்தாய் - வேதநடையோடு மாறுபட்ட திரிபுரங்களை எரித்தவரே,—உடலில் மாறு படும் போது - தேவரீருடைய திருமேனியிற் பிரம்படி படும்போது,—உடலில் கூறுபடும் சிவஞானக்கொம்பின் உளம் குழையாதோ - அத்திருமேனியின்கட் கூறுபட்டசிவஞானக் கொம்பாகிய உமையம்மையினது திருவுளம் வருந்திற்றில்லையோ. எ-று.

வருந்துமே என்பதாம். மாறு ஆகுபெயர். உடலிற் கூறுபடுதல் வாமபாகமாயிருத்தல். (௫௧)

கொங்கையான் மணிமார்பிற் குறியிடுமவ் வீறுடைய
மங்கையாள் பெருமானை மண்சுமக்க மதித்தாளோ
கங்கையா ளலைக்கரத்தாற் கரைத்திலளோ புள்ளுருவாம்
பங்கையா சனனறியாப் பணிமுடியென் றறியாளோ.

இ—ள்: கொங்கையால் மணி மார்பில் குறி இடும் அவ் வீறு உடைய மங்கையாள் பெருமானை - தந்தனங்களான் மாணிக்கமணிபோலுந் திருமார்பிலே தழும்புபடுத்திய அவ்வெற்றிப்பாட்டையுடைய காமாக்ஷியம்மைக்குப் பிராணநாயகராகிய சிவபெருமானை,—கங்கையாள் மண் சுமக்க மதித்தாளோ - கங்கையாகிய மாற்றாண் மண்சுமப்பிக்கும்படி கருதினாளோ,—அலைக் கரத்தால் கரைத்திலளோ - அக்கங்கை தான் வைகுமம்முடிமண்ணைத் திரையாகிய கைகளாற் பின்பு கரைத்தழித்தாளில்லையோ,—புள் உருவாம் பங்கையாசனன் அறியாப் பணி முடி என்று அறியாளோ - அன்னப்புள் வடிவாகிய பிரமாவும் அறிந்துகோடற்கரிய அதிவிசேடத்தையுடைய திருமுடியென்று அவள் அறியாளோ. எ-று.

அரசனெடுத்தவாலயமென்புழிப்போல மண்சுமப்பிக்க எனற்பாலது ஈண்டுப் பிறவினைவிகுதி தொக்கு மண்சுமக்கவென்றாயிற்று. பங்கையாசனன் என்புழி, அகரம் நின்றுழி ஐகாரமொத்துவந்தது போலி. உமை கங்கை என்னுமிருவருஞ் சிவபெருமானுக்கு மனைவியரென்பது நூல்வழக்காதலானும், அவ்விருவருள் உமையம்மை தந்தனங்களான் ஒருமுங்கத் தழுவி வசீகரிப்ப அவர் திருமேனி குழைந்து வசீகரிக்கப்பட்டமையானும், அதுபற்றி அப்பெருமானை அவ்வம்மைக் கதிப்பிரிய நாயகரெனக்கோடலமைவுடைத்தென்பது பெறப்படுதலின், அக்கடவுளைக் கொங்கையான் மணிமார்பிற்குறியிடுமவ்வீறுடைய மங்கையாள் பெருமானென்றும், அச்செற்றம்பற்றி மாற்றாளாகிய கங்கை அவ்வுமாபதியைப் பணிகொள்ளும் பொருட் டிங்ஙனம் எண்ணிச் செய்தாளென்பார் பெருமானைக் கங்கையாள் மண்சுமக்க மதித்தாளோ என்றும், கற்புடைமகளிர் நாயகரோ டேடினும் அது மிகுதுனியாதன்முன் இணங்கி இரங்குவரென்பது பொருணூற்றுணிபாகலின் அதுபற்றி அம்மண்சுமையை அக்கங்கை பின் கரைத்தழித்தலும் அமைவுடைத்தென்பார் கங்கையாளலைக் கரத்தாற் கரைத்திலளோவென்றும், அங்ஙனமிரங்காதொழியினும் அம்முடிவிசேடம்பற்றி அதுசெய்தல்வேண்டுமென்பார் புள்ளுருவாம் பங்கையாசனனறியாப் பணிமுடியென்றறியாளோ வென்றுங் கூறினர். பணிமுடி என்பதற்குத் தேவதாருவனத்து இருடிகளது அபிசார ஓமாக்கினியிற் றோன்றிய பாம்புகளையுடைய முடியெனினுமமையும்.

இதற்கின்னுமோருரை:—கொங்கையால் மணி மார்பில் குறியிடும் அவ் வீறு உடைய மங்கையாள் - தந்தனங்களான் மாணிக்கமணிபோலும் திருமார்பிலே தழும்புபடுத்திய அவ்வபின்னையாகிய உமையம்மையானவர்,—பெருமானை மண் சுமக்க மதித்தாளோ - தம்பிராணநாயகரைக் கொண்டு மண்சுமப்பிக்கத் திருவுளமிசைந்தாரா,—கங்கையாள் அலைக்கரத்தால் கரைத்திலளோ - மற்றைக் கங்கையாகிய அதிப்பிரியை திரையாகிய கைகளால் அம்மண்ணைக் கரைத்தழித்தாளில்லையோ,—புள் உருவாம் பங்கையாசனன் அறியாப் பணி முடி என்று அறியாளோ - அம்முடி அன்னப்

புள்வடிவாகிய பிரமாவும் அறிந்துகோடற்கரிய அதிவிசேடத்தையுடைய திருமுடியென்று அவள் அறியாளோ என்க.

அறிந்தாற் கரைத்தழியாதொழியாளென்பது கருத்து. சத்தியையின்றிச் சத்திமான் ஒன்றுஞ் செய்யலாகாமையின், இதுவும் அச்சத்திக்குடம்பாடுபோலுமென்பார் மங்கையாள் பெருமானை மண்சுமக்க மதித்தாளோஎன்றும், உடம்பாடின்றேல் அபின்னையாதலும் மண்சுமக்கவிடாமைக்கோ ரேதுவென்பார் அபின்னையாதற்குத் தவஞ்செய்த காமாக்ஷியம்மையின தியல்பை ஈண்டு விதந்தெடுத்துக் கொங்கையான் மணிமார்பிற் குறியிடுமெவ் வீறுடைய மங்கையாளென்றுங் கூறினர். வீறு அன்பின்வீறு· சத்திமானுக்குச் சத்தி இன்றியமையாமையை, "அருளது சத்தியாகு மரன்றனக் கருளையின்றித், தெருள்சிவ மில்லையந்தச்சிவமின்றிச் சத்தியில்லை" என்னுந் திருவாக்கானுமறிக. (௬0)

பிரமனுடன் றிருமாலும் பிறப்பகலப் பலகாலும்
பரிவினுடன் றருமலரோ பத்தரிடும் பச்சிலையோ
புரிதருசெஞ் சடையோநற் புதுமதியோ வாயிரவாய்
வரியரவின் பலபடமோ மண்சுமக்குஞ் சும்மாடு.

இ—ள்: மண் சுமக்கும் சும்மாடு-தேவரீர் மண்சுமந்தருளிய சுமையடையானது,—பிரமனுடன் திருமாலும் பிறப்பு அகலப் பலகாலும் பரிவு உடன் தரு மலரோ - பிரமவிஷ்ணுக்களாகிய இருவருந் தம் பிறவியறும்படி பலமுறையு மன்போடு சாத்திய பூக்களோ,—பத்தர் இடும் பச்சிலையோ - அல்லது அன்பர்கள் அருச்சித்த பச்சிலைகளோ,—புரிதருசெம் சடையோ - அல்லது முறுக்கைத்தருஞ் சிவந்தசடையோ, நல் புது மதியோ-அல்லது நல்ல ஒரு கலையாகிய புதியசந்திரனோ,—வரி அரவின் ஆயிர வாய்ப் பல படமோ - அல்லது ரேகையையுடைய சர்ப்பத்தினது ஆயிரம் வாய்களையுடைய பலபடங்களோ. எ-று.

இவற்றுள் இன்னதென்றும், அல்லது இவையனைத்துமென்றும் அல்லது இவையல பிறவென்றும், அல்லது ஒன்றுமின்றென்றும் துணிதல் கூடாதென்பது கருத்து. ஓகாரங்கள் வினுப்பொருட்கண் வந்தன. (௬௧)

கலையறியும் புகழ்வைகைக் கரைதிருவம் பலமாக
வலையெறியும் புனலோசை யந்தரதுந் துபியாகத்
தலைவனடங் கண்டார்க ளரவமெனுந் தவமுனியுங்
கொலைதவிரும் புலியென்னுங் குலமுனியு மானுரோ.

இ—ள்: கலை அறியும் புகழ் வைகைக் கரை திரு அம்பலம் ஆக - நூல்களானறிந்து பேசப்படும் புகழையுடைய வைகைநதிக்கரை அழகிய வெள்ளியம்பலமாக,—அலை எறியும் புனல் ஓசை அந்தரதுந்துபி ஆக-திரைமறிகின்ற நீரினொலி தேவதுந்துபிகளாக,—தலைவன் நடம் கண்

டார்கள் - பசுபதியாகிய சோமசுந்தரக்கடவுளினுடைய மண்சுமக்குந் திருவிளையாட்டாகிய திருநடனத்தை நேரே தரிசித்த ஏனைக் கூலியாளர்களுங் காரியதரிசிகளும் பிறருமெல்லாம்,—அரவம் எனும் தவமுனியும் கொலை தவிரும் புலி என்னும் குல முனியும் ஆனுரோ - பதஞ்சலியென்னுந் தவத்தையுடைய முனிவரும், ஒருயிரையுங் கொலைசெய்யாத வியாக்கிரபாதரென்னும் உயர்ந்த முனிவருமாயினர்களோ. எ-று.

கலை நூல். மதுரையின்கணிருந்த முச்சங்கப்புலவர்களும் தாமியற்றிய நூல்களான் விதந்துபேசப்பட்ட புகழையுடைய வைகை என்பார் கலையறியும்புகழ் வைகை என்றார். இனிக் கலையறியும்புகழ் வைகை என்பதற்குத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருவாய்மலர்ந்தருளிய "வாழ்க வந்தணர் வானவ ரானினம்" என்னும் திருப்பாசுரத்தின் மகிமையையறிந்த புகழையுடைய வைகைநதியென் றுரைப்பாருமுளர். ஈண்டுக் கலையறியும்புகழ் வைகைக்கரை திருவம்பலமாக என்றது கவிகூற்றன்றித் திருவாதவூரடிகள் கூற்ருகலானும், திருவாதவூரடிகள் அரிமர்த்தனபாண்டியன் காலத்தினும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் கூன்பாண்டியன் காலத்தினும் இருந்தவர்களென்பதும் அரிமர்த்தனபாண்டியனுக்குக் கூன்பாண்டியன் வழித்தோன்றலென்பதும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனுரும், திருநாவுக்கரசுநாயனரும் ஒருகாலத்துள்ளவர்களென்பதும் புராணநூற்றுணிபாகலானும், திருவாதவூரடிகள்பொருட்டு நிகழ்ந்த நரி பரியாக்கிய திருவிளையாடலையும் மண்சுமந்த திருவிளையாடலையும் முறையே திருநாவுக்கரசுநாயனர் "நரியைக் குதிரைசெய்வானு நரகரைத் தேவுசெய்வானும்" எனவும், "அணியார் வைகைத் திருக்கோட்டினின்றதோர் திறமுந் தோன்றும்" எனவும் வரும் தந்தேவாரத் திருப்பதிகங்களில் நன்கெடுத்தருளிச்செய்தமையின், மாணிக்கவாசகசுவாமிகள் முன்னும் திருஞானசம்பந்தசுவாமிகள் பின்னும் உள்ளவர்களென்பது தெற்றென விளங்குதலானும், ஆலாசியமான்மியமாகிய முதனூலும், திருவிளையாடற்புராணமாகிய வழிநூலும் அங்ஙனமே கூறுதலானும் அது பொருந்தாதென்க. கண்டார்கள் வினையாலணையும் பெயர். கொலைதவிரும் புலியென்றது கொலைபுரியும் சுபாபமுடைய வனத்தின்கட் புலியை நீக்கி வியாக்கிரபாதமுனிவரை யுணர்த்தலாற் குறிப்புமொழியாய்ப் பிறிதினியைபுநீக்கிய விசேடணத்தின் பாற்படுமென்க. சோமசுந்தரபாண்டியர் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ்செய்தருளியபின்னர் விவாகபோசனநிமித்தம் வருவிக்கப்பட்ட தேவர் முனிவர்களுட் பதஞ்சலிமுனிவரும் வியாக்கிரபாதமுனிவரும் அடியேமிருவரும் விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாகிய சிதம்பரத்துள்ள பொன்னம்பலத்திலே தேவரீர்செய்தருளும் திருநடனத்தைத் தரிசித்தல்லது ஒன்றையு முட்கொள்ளாத நியமமுடையேமென்று விண்ணப்பஞ்செய்தவழிச் சிவபெருமான் அந்நடனத்தைத் துவாதசாந்த ஸ்தலமாகிய இம்மதுரையிலுள்ள வெள்ளியம்பலத்திலே செய்வேம்

தரிசியுங்களென்று திருவாய்மலர்ந்து, நடித்தருள, அம்முனிவரிருவரும் நேரே தரிசிக்கப்பெற்றார்களாகலின், தலைவனடங்கண்டார்களரவமெனுந் தவமுனியுங், கொலைதவிரும்புலியென்னுங்குலமுனியுமானாரோ என்றுங் கூறினர். அது "பன்ன கேசனு மபுலிப் பாதனும் பணிய, மின்னு வார்சடை மன்னவன் வெள்ளிமன் றுடல், சொன்ன வாறிது" என்பத னுமறிக. (௬௨)

மீனேறுங் கொடித்தென்னன் விழிக்கேற விரைதுரகந்
தானேறு வதுகண்டு தருங்கலைபொற் செண்டேறத்
தேனேறு மலர்க்கொன்றைத் திருமுடிமேன் மண்ணேற
யானேறுஞ் சிவபதமு மெனக்கேற வின்றாது.

இ—ள்: மீன் ஏறும் கொடித் தென்னன் விழிக்கு ஏற - மீனை எழுதும் கொடியையுடைய பாண்டியராசனது கண்களுக்குப் புலப்பட,—விரை துரகம் தான் ஏறுவது கண்டு தரும் கலை பொன் செண்டு ஏற - விரைந்துநடக்கு மியல்பையுடைய குதிரையின்மீது தாமிவருதலைக்கண்டு அவ்வரசன் பரிசாகக்கொடுக்கும் பீதாம்பரம் அழகிய சவுக்கின்மீது தங்கு தலானும்,—தேன் ஏறு கொன்றைமலர்த் திருமுடிமேல் மண் ஏற - தேன் பொருந்திய கொன்றைப்பூமாலையைத் தரித்த திருமுடியின்மீதே மண் சுமையேறுதலானும்,—யான் ஏறும் சிவபதமும் எனக்கு ஏற இன்றாது- யான் எய்தக்கடவதாகிய இனிய சிவபதப்பேறும் இனி எனக்கின்றாமை யையுடையதாயிற்று. எ-று.

மீன் தானாகவே கொடியைச்சார்ந்து மேன்மைபெறுமாறு விரும்பி ஏறியதென அக்கொடியுடையோனை இறப்ப உயர்த்துவார் மீனேறுங் கொடித் தென்னனென்றார். செண்டேற, மண்ணேற என்புழி ஏறலான் என்பன ஏற எனத் திரிந்துநின்றன. தருங்கலைபொற் செண்டேறலும் பெருங்கொடும்பாவமென்பது அழுக்காடையண்டர்தொழும், பெருமானுக் களித்தேனென் பிழைசெய்தேன் என அரசன் முன்னர்க்கூறுமாற்றா னறிக. இன்றாமை இனிமையின்மை; எனவே, துன்பந் தருமென்பதா யிற்று. ஆக்கம் வருவித்துரைக்கப்பட்டது. என்பொருட் டிங்ஙனங் குருமூர்த்தியைக்கொண்டு தம்பெருமைக்குத் தகாதெனச் செய்வித் தெய்துஞ் சிவபதப்பேறு எனக்கு இறப்பத் துன்பமே மற்றில்லை என் பது கருத்து. (௬௩)

பொன்னுலகத் துள்ளோரும் புரந்தரனுந் திருமாலு
மன்னுமறைக் குரியோனும் வழியடிமைத் தொழில்செய்ய
வன்னைதனக் காளாகி யணிவைகை யடைத்தடியுண்
டென்னையருட் பணிகொள்ள விசைந்தனையோ விறையோனே.

இ—ள்: பொன் உலகத்து உள்ளோரும் - சுவர்க்கலோகவாசிக ளாகிய தேவர்களும்,—புரந்தரனும் திருமாலும் மன்னும் மறைக்கு உரி

யோனும் வழி அடிமைத் தொழில் செய்ய - இந்திரனும் விஷ்ணுவும் நிலை பெறும் வேதங்கட்குரிய பிரமாவுந் தேவரீருக்கு வழித்தொண்டுசெய்யா நிற்பவும்,—இறையோனே அன்னை தனக்கு ஆள் ஆகி அணி வைகை அடைத்து அடி உண்டு என்னை அருள் பணி கொள்ள இசைந்தனையோ - சுவாமீ ஈண்டுத் தேவரீர் மாதாவாகிய வந்திக்குக் கூலியாளாகி அழகிய வைகைநதிக்கரையை மண்சுமந்தடைத்துப் பிரம்படியுண்டு, புழுத்த நாயி னுங் கடையேனாகிய தமியேனையும் திருவுளத்து மூகிழ்த்த பெருங் கருணைத்திறத்தினாலே புத்தடிமைகொண்டருளத் திருவுளம் பொருந்தி னீரோ. எ-று.

வைகை ஆகுபெயர். எத்துணையும் பெரிய தேவரீர் எத்துணையுஞ் சிறிய தமியேனைத் தொண்டு கொண்டருளும்பொருட் டெளிவந்த பெருங் கருணைத்திறம் இருந்தபடி என்னை என்பதாம். (சுச)

கட்டுமரைத் துணிச்சீரைக் கச்சையுமத் திருத்தோளிற்
கொட்டுமுடித் தலைமீது கவிழ்த்ததொரு கூடையுமாய்ப்
பிட்டிடுநற் றவமுடையாள் பின்புவருந் திருக்கோல
மிட்டமுறத் தொழும்படி நான் கண்டிலனே யிறையோனே.

இ—ள்: அரைக் கட்டும் துணிச் சீரைக் கச்சையும் - திருவரை யிற் கட்டிய கந்தையாகிய வஸ்திரக்கச்சையும்,—அத் திருத் தோளில் கொட்டும்-அந்த அழகிய திருப்புயத்தின் கட்கொண்டமண்வெட்டியும்,—முடித்தலை மீது கவிழ்த்தது ஒரு கூடையும் ஆய் - சடையே முடியாகக் கட்டிய சிரசின்மீது கவிழ்க்கப்பட்டதொரு கூடையுமாகி,—பிட்டு இடு நல் தவம் உடையாள் பின்பு வரும் திருக்கோலம் - பிட்டமுதுபடைத்த நல்லதவத்தையுடைய வந்தியாகிய எசமாட்டியின்பின் வந்தருளிய கூலித் திருக்கோலத்தை,—இட்டம் உறத் தொழும்படி இறையோனே நான் கண்டிலனே - எனதிச்சைப்படியெல்லாம்தரிசித்துவணங்குதற்குச் சுவாமீ தமியேன் அத்தருணத்துத் தேவரீரைத் தரிசிக்கப்பெற்றேனில் லையே. எ-று.

கச்சை கொடுக்கு. கண்டபிறர்சொல்லக் கேட்ட கோலத்தைத் தாங் காணாமைக்குத் தம்மைநொந்து கூறுகின்றாராகலின் இட்டமுறத் தொழும்படி நான் கண்டிலனேயிறையோனே என்றார். தமியேன் காணப் பெறிற் கண்ணுற்ற பிறரைப்போலத் தொழாது விடமாட்டேனென்பது கருத்து. (சுரு)

தாரூருஞ் சடைமுடியாய் தவம்பெரிது முயன்றவர்க
ணீரூரும் புகழ்வைகை நெடுங்கரைமே னின்றாரோ
சீரூருங் கனகமுடித் தென்னவனோ மதுரையெனும்
பேரூரி லிருப்பவரோ பிட்டமுதிட் டருள்வாரோ.

இ—ள்: தார் ஊரும் சடைமுடியாய் - கொன்றைமாலைபெயருஞ் சடாமுடியையுடையவரே,—தவம் பெரிதும் முயன்றவர்கள் - தேவரீர் மண்சுமத்தலாகிய திருவிளையாட்டைச் செய்தருளுதற்குக் காரணமாகிய சிவபுண்ணியங்களைப் பூர்வசன்மங்களிலே மிகவுஞ் செய்தவர்கள்,—நீர் ஊரும் புகழ் வைகை நெடுங் கரைமேல் நின்றாரோ - நீர்பிரவாகிக்கும் புகழையுடைய இவ்வைகைநதியினது நெடிய கரையின்கண் எய்திநின்றவர்களோ,—சீர் ஊரும் கனகமுடித் தென்னவனே - அழகொழுகும் பொன்முடியையுடைய பாண்டியராசனே,—மதுரை எனும் பேர் ஊரில் இருப்பவரோ - மதுரையென்னும் பெயரையுடைய இவ்விராசதானியின்கணுள்ளவர்களோ,—பிட்டு அமுது இட்டருள்வாளோ - தேவரீருக்குப் பிட்டமுதிட்டருளிய அவ்வம்மையோ, பணித்தருளுக. எ-று.

தற்புகழ்ச்சியின்பாற்பட்டுக் குற்றமாய்முடியு மாகலின், தம்மையொழித்து ஏனையோர்மேல் வைத்து வினவினரென்க. இனையரென்று குறித்தலருமையின் யாவருமேயென்பது குறிப்பெச்சம். இனையரென்றறியின் அவர்க்கடிமைசெய்வேனென்பது குறிப்பெச்சமென்றலுமொன்று. (சுசு)

பொன்மௌலித் தலைமீது புண்ணியர்மண் சுமந்தேறுங்
கொன்மலியுங் கோலறையுங் குளிர்வைகைப் பேராறுங்
கன்மமெனும் பகைநீங்கக் கண்ணுதல்வெம் பரியேறுந்
தென்மதுரை மூதூரு மல்லவோ சிவலோகம்.

இ—ள்: புண்ணியர் பொன் மௌலித் தலை மீது மண் சுமந்து ஏறும் கொன் மலியும் கோலறையும் - அறவியல்பினராகிய சோமசுந்தரக் கடவுள் பொன்போலுஞ் சடாமுடியையுடைய திருமுடியின்மீது மண் சுமந்தேறியருளப்பெறும் பெருமைமிகுந்த வந்தியினது இப்பங்கு நிலமும்,—குளிர் வைகைப் பேர் ஆறும் - குளிர்ச்சிபொருந்திய வேகவதியென்னும் பெயரையுடைய இந்நதியும்,—கண்ணுதல் கன்மம் எனும் பகை நீங்க வெம் பரி ஏறும் தென் மதுரை மூது ஊரும் அல்லவோ சிவலோகம் - அக்கடவுளானவர் தரிசித்த தம்மெய்யன்பரைக் கன்மமுதலிய மும்மலங்களும் விட்டு நீங்கும்படி வெவ்விய குதிரையின்மீ திவர்ந்தருளப்பெறுந் தெற்கின்கணுள்ள மதுரையாகிய பழைய இந்நகரமுமன்றோ சிவலோகமாவது. எ-று.

சிவபெருமான் திருமுடிமீது மண்சுமந்து இடப்பெற்ற பெருமைமிக்க கோலறை என்பார் கொன்மலியுங்கோலறை என்றார். "ஒருமொழியொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பதனாற் கன்மமுதலிய மூன்று மெனப்பொருளுரைக்கப்பட்டது. சிவலோகத்திற்போல இம்மூவிடங்களினும் சிவபெருமான் உருவத்திருமேனிகொண்டு நேரே வெளிவந்து நின்றனுக்கிரகித்தமையின், இவை அச்சிவலோகமாக உருவகிக்கப்படுதற்கிழுக்கென்னை என்பதாம். இக்கருத்து "அப்பாண்டி நாட்டைச் சிவலோக

மாக்குவித்த, வப்பார் சடையப்பன்" என்னுந் திருவாக்கானுமுணர்க. புண்ணியர் என்றூர் நஞ்சுண்டும், திரிபுரமெரித்தும், நமனையுதைத்தும் பல்லுயிர்களைக்காத்த பரமதயாளு என்பது போதருதற்கென்க. (சுஎ)

இன்னவகை யன்புடையா ரிரங்கினரா யிடைவைகைத்
துன்னுதிரைப் பேராறுந் தொலையவடிந் ததுபின்னர்த்
தென்னவனுஞ் சிவன்செயலா மெனத்தெளிந்து வாதவூர்
மன்னவர்தம் பால்வந்து வணங்கியிது கூறுவான்.

இ—ள்: இன்னவகை அன்பு உடையார் இரங்கினர் - இந்தப்பிரகாரம் சிவபத்திமானாகிய திருவாதவூரடிகள் இரங்காநின்றனர்,—ஆயிடை துன்னு திரைப் பேர் வைகை ஆறும் தொலைய வடிந்தது - அப்பொழுது நெருங்கிய அலைகளையுடைய பெரிய வைகைநதியும் முழுதும் நீர்வடிந்தது,—பின்னர்த் தென்னவனும் சிவன் செயலாம் எனத் தெளிந்து - அதன்பின்னர்ப் பாண்டியராசனும் இவை சோமசுந்தரக்கடவுளினுடைய திருவிளையாடலேயாமென்று நிச்சயித்தறிந்து,—வாதவூர் மன்னவர் தம் பால் எய்தி வணங்கி இது கூறுவான் - அத்திருவாதவூரடிகளை அடைந்து தான் அரசனும் அவர் அமைச்சருமென்னும் அபிமானபரித்தியாகஞய் அவ்வடிகளை வணங்கி இதனை விண்ணப்பஞ்செய்வானாயினன். எ-று.

பேராறுந் தொலையவடிந்ததென இடத்துநிகழ் பொருளின்றொழில் இடத்தின்மேலேற்றிக் கூறப்பட்டது. இவையென்றது தான் முன் அமைச்சரது செயலென்றெண்ணியிருந்த தன்றிரவியாபகார முதலியவற்றை. தொலையவடிந்தது என்பதற்கு மதுரையினுள்ளாரதிடர்கெட வடிந்ததெனினுமமையும். (சுஅ)

அந்தரர்தம் பதியினிழிந் தருள்புனைமாத் தியர்குலத்தில்
வந்தருளித் தமியேற்கு மந்திரியாய் மகிழ்வெய்தி
யெந்தைவயப் பரியேறல் காட்டியெனக் கொழியாத
பந்தமறத் திருவுள்ளம் பற்றினைநற் றவத்தோனே.

இ—ள்: நல் தவத்தோனே-நல்ல தவத்தையுடையவரே,—அந்தரர் தம் பதியின் வந்து-சிதாகாசரூபராகிய சிவபெருமானது முக்கியஸ்தானமாகிய கைலாசகிரியினின்றும் வந்து,—அருள் புனை மாத்தியர் குலத்தில் இழிந்தருளி - அருளையுடைய ஆமாத்தியரது குடியின்கண்ணே திருவவதாரஞ் செய்தருளி,—தமியேற்கு மந்திரி ஆய் மகிழ்வு எய்தி - தமியேனுக்குச் சிரேட்டமந்திரியாகி மகிழ்ச்சியைத்தந்து,—எந்தை வயப்பரி ஏறல் காட்டி - எம்பரமபிதாவாகிய சோமசுந்தரக்கடவுள் சின்மயமாகிய இடபத்தின்கணன்றி வேதமாகிய குதிரையின்மீ திவர்ந்தருளுதலைத் தரிசிப்பித்து, இவ்வாறெல்லாம்,—எனக்கு ஒழியாத பந்தம் அறத்திருவுள்ளம் பற்றினை - தமியேனுக் கிதுகாறுமறாத பாசக்கட்டறும்படி தேவரீர் திருவுள்ளம்பற்றியருளினீர். எ-று.

தம்மென்பது ஈண்டு ஆறாவதனுரிமைப்பொருளுணர நின்றது. எய்துவித்தெனற்பாலது விவ்விகுதிதொக்கு எய்தி என்றாயிற்று. எந்தை மகிழ்வெய்தி யைப்பரியேறல் காட்டியெனக் கொண்டுகூட்டுவாருமுளர். அது தனக்கவர்செய்தநன்றியை விளக்காமையின் நின்றவாற்றுமென்க. எய்திக் காட்டியெனத் தன்வினையாக்கியவழியும் பொருட்சிறப்பின்மை தெளிக. திருக்கைலாசகிரியிலே ஸ்ரீகண்ட பரமசிவனை அங்குள்ள தீவிதர பக்குவிகளாகிய ஆயிரஞ் சிவகணநாதர்கள் ஒருநாள் வணங்கிச் சுவாமீ சைவாகமங்களின் உண்மைப்பொருளை அவைகளை ஆக்கியோராகிய தேவரீர் அடியேங்கட்கு உபதேசித்தருளவேண்டுமென்று குறையிரந்து பிரார்த்திக்க, அக்கடவுள் திருவுளமிரங்கி அவர்களை நோக்கி அன்பர்களே நீங்கள் பாண்டிநாட்டிலுள்ள திருவுத்தரகோசமங்கையென்னும் நமது திவ்விய க்ஷேத்திரத்திலே போய் நமக்குத் தொண்டு செய்துகொண்டிருங்கள். நாம் அங்கேவந்து உங்களுக்குச் சைவாகமோபதேசம் செய்வேமென்று திருவாய்மலர்ந்தருளினார். கணநாதர்கள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு திருவுத்தரகோசமங்கையை அடைந்து சிலகாலஞ் சிவாலயத்திலே திருத்தொண்டு செய்துகொண்டிருப்பக் கைலாசபதி அவர்களது திருத்தொண்டின் மனவுறுதியைக்கண்டு, பிராமணவடிவங்கொண்டு அங்கே எழுந்தருளினார். அப்பொழுது கணநாதர்கள் வணங்கச் சிவபெருமான் அவர்களை ஓரிடத்திருத்தித் தாமும் வீற்றிருந்து ஆகமங்களின் உண்மைப்பொருளை உபதேசிக்கத் தொடங்கினார். அப்பொழுது சுவர்க்கலோகாதிபதியாகிய இந்திரன் அநேக ஆடம்பரங்களுடன் ஆகாயமார்க்கமாகப் பவனிவர, அவ்வாயிரவருள் ஒருவர் அதனைக்கண்டு மகிழ்ந்து உடனே அப்பவனியை மறந்தார். அதனைச் சிவபெருமான் திருவுளத்தடைத்து. அக்கணநாதரை நோக்கி நாம் ஆகம உண்மையை உபதேசிக்கத் தொடங்கும்போது நீ பிறிதோர்விஷயத்தில் மனஞ்செலுத்தினை யாகலின், இப்பூமியிற் பிறந்து இந்திரசம்பத்தை யனுபவித்துப் பின்பு நம்மை யடையக்கடவையென்று ஆஞ்ஞாபித்தருளினார். கணநாதர் அதுகேட்டுச் சரீரம் நடுநடுங்கி இதற்கினி யாது செய்வேன் என்று மிகவுருகிப் பிரலாபித்து வணங்கச் சிவபெருமான் அக்கணநாதரை நோக்கி நீ சிறிதும் அஞ்சற்க. நாம் அப்பொழுது வந்து தடுத்துத் திருவடிதீக்ஷைசெய்து பாசக்ஷயம்பண்ணி உனக்கு முத்திதந்தருளுவோமென்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே அவர் சிவபெருமானிடத்து அநுமதிபெற்றுக்கொண்டு திருவாதவூரையடைந்து, அக்காலத்தில் எங்கும் பரந்திருந்த புத்தசமய கண்டனமும் சைவசமய ஸ்தாபனமும் செயவல்ல ஓர்சற்புத்திரரைச் சிவானுக்கிரகத்தினாலே பெறக்கருதி, அங்கே சிவாலயத்தில் விரதம்பூண்டு நெடுங்காலம் நியமமாகச் சுவாமியை வழிபட்டுவரும் ஆமாத்தியகுல திலகராகிய சம்புபாதாசிருதர் என்னும் திருநாமத்தையுடைய பிராமணோத்தமருக்கு, அவரது நற்குண நற்செய்கைகளையுடைய இல்வாழ்க்கைத்துணைவியாகிய சிவஞானவதியென்னும் திருநாமத்தையுடைய பதிவிரதாசிரோ

மணியினது திருவயிற்றினின்றும் திருவவதாரம்செய்தா ராகலின் அந்தார் தம்பதியினிழிந்தருள்புனைமாத்தியர்குலத்தில் வந்தருளி என்றார். முன், வரமுடன்புவியிற்றோன்றுமறையவர்க்கிறைவர் என்றதும் இக்கருத்தே பற்றிவந்தது. இச்சம்பந்தம்பற்றியே திருக்கைலாசபதி ஞானதேசிகத் திருமேனிகொண்டு திருவாதவூரடிகளுக்குத் தீக்ஷிக்கும்பொருட்டுத் திருப்பெருந்துறைக் கெழுந்தருளியபொழுது இக்கணநாத ராயிரவருள் இவரொருவரையொழிந்த ஏனைக் கணநாதர்களாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மர்களோடு எழுந்தருளியதூஉமென்க. (௬௯)

கருமாளத் திருமேனி காட்டினனென் றுணராமற்
றிருமாலும் பரவரியான் றேவருடன் பரியேறு
மருமாயச் சூழலினா லழுக்காடை யண்டர்தொழும்
பெருமானுக் களித்தேனென் பிழைசெய்தேன் பெரியோனே.

இ—ள்: திருமாலும் பரவு அரியான் தேவர் உடன் பரி ஏறும் அருமாயச் சூழலினால் - விஷ்ணுவாலும் இத்தன்மையரென்றறிந்து துதித்தற்கரிய சிவபெருமான் தேவர்களோடு குதிரையின்மீதிவர்ந்தருளிவந்த அறிதற்கரிய மாயாசூழ்ச்சியினால் மயங்கி,—கருமாளத் திருமேனி காட்டினன் என்று உணராமல் - தமியேனது பிறவியறும்படி உருவத்திருமேனி கொண்டு தம்மைத் தரிசிப்பித்தருளினாரென் றறிந்துகொள்ளமாட்டாமை மேலும்,—அண்டர் தொழும் பெருமானுக்கு அழுக்கு ஆடை அளித்தேன் - தேவர்களுந் தொழும் பெருந்தகைமையினையுடைய அக்கடவுட்கு அழுக்கு வஸ்திரமொன்றைப் பரிசுகொடுத்தேன்,—பெரியோனே என் பிழை செய்தேன் - எம்பெருமானே எத்துணைப்பெருங் குற்றத்தைச் செய்தேன். எ-று.

பரவென்னும் முதனிலைத்தொழிற்பெயர் எச்சப்பொருடந்துநின்றது. வருஞ்செய்யுளிற் செப்பென்பதுமது. முன்னையதினும் பின்னையது உய்தியில் குற்றமென்பது கருத்து. வருஞ்செய்யுட்கு மீதொக்கும். எட்டவுஞ் சுட்டவும்படாத பெருமையையுடைய இறைவர்சந்நிதியிற் பொன்னாடையும் அழுக்காடையென்னுந் தரத்ததாதலி னிங்ஙனம் கூறினான். திருமாலுங்காண்பரியான் எனவும் பாடாந்தரம். (௭௦)

அப்பணிசெஞ் சடையானை யரும்பரிமே லாளாக்கு [டிச்
மெய்ப்பொருளென் றுணராமல் வெய்யவினைப் பொருள்வேண்
செப்பருமித் தறுகண்மை செய்வித்தேன் சிறுமையுளே
னெப்பிழையும் பொறுத்தருளா யானரகிற் புகுதாமல்.

இ—ள்: அப்பு அணி செம் சடையானை அரும் பரி மேல் ஆள் ஆக்கும் மெய்ப் பொருள் என்று உணராமல் - கங்காசலத்தைத் தரித்த சிவந்த சடையையுடைய சிவபெருமானை அரிய குதிரையின்மேல் மனிதவடிவாக வரச்செய்யும் மெய்ப்பொருள் தேவரீரென்ப துணரமாட்டாமை மேலும்,—

வெய்ய வினைப் பொருள் வேண்டி - கொடிய பொய்ப்பொருளையே விரும்பி,—சிறுமை உளேன் செப்பு அரும் இத் தறுகண்மை செய்வித்தேன் - சிறுமையையுடைய பாவியேன் வாயாற் சொல்லுதற்கரிய இக் கொடுந் தண்டங்களைச் செய்வித்தேன்,—யான் நரகில் புகுதாமல் எப்பிழையும் பொறுத்தருளாய் - அபுத்திபூர்வமாகச் செய்தமையின், யானிரயத்தின்கட் பிரவேசியாதொழியும்பொருட் டிந்த எவ்வகைக் குற்றங்களையுந் தேவரீர் பொறுத்தருளுவீர். எ-று.

தறுகண்மை ஆகுபெயர். மெய்ப்பொருள்-மெய்யை உபதேசிக்கும் பொருள். வினைப்பொருள் வினையையீட்டுதற்குக் காரணமாகிய பொருள்; என்றது குதிரைகொள்ளும்பொருட்டுக் கொடுத்த திரவியத்தை; ஒருவனுழைவருங்காற் றீவினையோடு கூடிவரும் பொருளென்றலுமொன்று. வேதமாகிய குதிரையென்பது விளக்குதற்கு அருங்குதிரையென்றும், சிவனடியார்க்குச் செய்த தீங்கு தப்பாது நிரயத்துன்பத்து ளுறுத்துமென்பதுண்மைநூற்றுணிபாகலின் யானரகிற்புகுதாமலெப்பிழையும் பொறுத்தருளாய் என்றுங் கூறினன். சிறியோர்செய்த தீப்பிழையனைத்தும், பெரியோராயிற் பொறுப்பதுகடனே என்பது கருத்து. (௭௬)

தூநாக மணிந்தபிரான் றுங்கமிகும் பரியேறிப்
பூநாறுஞ் சடைமேன்மண் சுமந்தபுகழ் போதாதோ
யானுளு நின்பணியே செய்தொழுக விவ்வுலகந்
தானுள வேண்டுமினி யென்றிரந்தான் றமிழ்மாறன்.

இ—ள்: தூ நாகம் அணிந்த பிரான் துங்க மிகும் பரி ஏறி - சுத்தமாகிய பாம்பையணிந்த சிவபிரான் உத்துங்கமிகுங் குதிரையின்மீ திவர்ந்தருளி வரப்பெற்றதன்மேலும்,—பூ நாறும் சடைமேல் மண் சுமந்த புகழ் போதாதோ - கொன்றைப்பூமணங் கமழுஞ் சடாமுடியின்மேன் மண்சுமந்தருளிய கீர்த்தி ஒன்றும் எனக்குப் போதாதோ,—யான் நாளும் நின் பணியேசெய்து ஒழுக - தமியேன் நாடோறுந் தேவரீரது பணிகளையே செய்துகொண்டுதிரிய,—இனி இவ்வுலகம் ஆள வேண்டும் என்று தமிழ் மாறன் இரந்தான் - இனி இவ்வுலகத்தைத் தேவரீரே அரசாளுதல் வேண்டுமென்று தமிழையுடைய அரிமர்த்தனபாண்டியராசன் குறையிரந்து விண்ணப்பஞ்செய்தான். எ-று.

துங்கமிகும்பரி என்பதற்கு மேல் அரும்பரியென்புழி உரைத்தாங் குரைக்க. சிவபெருமானுக்குக் குண்டலிசத்தியே நாகமாக உருவகிக்கப் படுதலின் தூநாகமென்றும், பரியேறுதலும் மண்சுமத்தலுமாகிய புகழ்க் காரணமிரண்டனுள் முன்னையதினும் பின்னையதே சிறந்ததாகலின் சடைமேன் மண்சுமந்தபுகழ் போதாதோ என்றும், தேவரீர் செய்த நன்றிக்கு எதிர்நன்றியாக ஒரு சிறிதேனுமெதிருன்ற வல்லது இஃதொன்றல்லது

பிறிதொன்றில்லையென்பான் யானொரு நின்பணியே செய்தொழுக விவ் வுலகந் தானாளவேண்டுமினி யென்றிரந்தான் என்றுங்கூறினர். (எஉ)

வேறு.

வன்றிறன் மன்ன னிவ்வா றிரத்தலும் வாதவூரர்
தென்றிசை புரக்கு நீதித் தென்னவன் றன்னை நோக்கிப்
பின்றிகழ் சடையான் மன்னும் பெருந்துறை நகரி லேக
வின்றெனை விடுப்ப தேமற் றிவ்வுல களிப்ப தென்றார்.

இ—ள்: வன் திறல் மன்னன் இவ்வாறு இரத்தலும் - மிக்க வலிமையையுடைய பாண்டியராசன் இவ்வாறு குறையிரந்துகூறுதலும்.—வாதவூரர் தென் திசை புரக்கும் நீதித் தென்னவன் தன்னை நோக்கி-திருவாதவூரடிகள் தென்றிசையைக்காக்கும் நீதியையுடைய பாண்டியராசனது முகத்தைப் பார்த்து,—பின் திகழ் சடையான் மன்னும் பெருந்துறை நகரில் ஏக - பின்றாழ்ந்து விளங்காநிற்குஞ் சடையையுடைய கைலாசபதி வீற்றிருக்கப்பெறுந் திருப்பெருந்துறையாகிய ஸ்தலத்திற் செல்லுமாறு;—இன்று எனை விடுப்பதே மற்று இவ்வுலகு அளிப்பது என்றார்-இத்தின மிவ்வுத்தியோகத்தினின்று நெகிழ்த்தெனதிச்சைப்படி என்னைச் செல்லவிடுத்தலே இவ்வுலகைத் தருதலாமென்று கூறினர். எ-று.

மற்று வினைமாற்று. பின்றிகழ்சடை பின்னுதல்விளங்கும் சடையென்றுமாம். இப்பொருட்குப் பின் முதனிலைத்தொழிற்பெயர். தென்றிசைபுரக்குந்தென்னவன் என்பது "கருங்கண்ணன்" என்பதுபோல நின்றது. தொழிலுருவகம். இது அறுசீரடி யாசிரியவிருத்தம். (எ௩)

தென்புலத் தலைவன் றானுஞ் சிந்தையி னொந்து முன்னோ
னன்பருக் கரசர் வாழ்வி லாசையிங் குளதோ வென்று
மென்பதத் திறைஞ்சி யையா வேண்டிய செய்க வென்று
தன்புகழ்க் கூடன் மூதூர் புகுந்தனன் றானை சூழ.

இ—ள்: தென்புலத் தலைவன் தானும் - தென்றிசைக்கரசனாகிய பாண்டியனும் அதுகேட்டு,—முன்னோன் அன்பருக்கு இங்கு அரசர் வாழ்வில் ஆசை உளதோ என்று சிந்தையில் நொந்து - சிவபத்தருக்கு இம்மைக்கண்ணதாகிய அரசர்வாழ்க்கையில் இன்பம் சனிக்குமோவென்று மனநொந்து;—மென் பதத்து இறைஞ்சி ஐயா வேண்டிய செய்க என்று-மெல்லிய திருவடிக்கீழ் வணங்கிச் சுவாமீ திருவுளப்பிரகாரம் செய்தருளுக என்று விண்ணப்பஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு;—தானை சூழத் தன் புகழ்க் கூடல் மூதூர் புகுந்தனன் - சேனைகள்சூழத் தனது புகழையுடைய நான்மாடக்கூடலாகிய பழைய இராசதானியுட் பிரவேசித்தான். எ-று.

உடன்சென்று வழிவிடுதலும் பிறவும் சுருங்கியநூலாகலின் விரிக்கப்பட்டில. தன்கருத்தநுகூலமாகாமையிற் சிந்தைநொந்தானென்க. (எச)

சற்றவத் தொழில்செய் யாத தானைமன் போன பின்ன
ரற்றவர்க் கற்ற சோதி யருட்பெரு வாழ்வு வேண்டிக்
கொற்றவர்க் குற்ற கோலங் குறையென நீத்து மேலா
நற்றவக் கோலங் கொண்டார் நம்பனுக் கன்பு மிக்கார்.

இ—ள்: சற்று அவத் தொழில் செய்யாத தானை மன் போன பின்னர் - ஒருகாலுமறந்துங் கேடுபயக்குமுயற்சிகளிற் சிறிதும் பயிறல் செய்யாத சேனைகளையுடைய பாண்டியராசன் தன்னகருட்சென்றபின்னர்,—நம்பனுக்கு அன்பு மிக்கார் - அதிபரமார்த்தராகிய சிவபெருமானிடத்துச் சிரத்தையுடைய திருவாதவூரடிகள்,—அற்றவர்க்கு அற்ற சோதி அருள் பெரு வாழ்வு வேண்டி - இருவகைப் பற்றுமற்றவர்கட்கிரண்டற்ற சுயஞ்சோதியாகிய சிவபெருமானது திருவருளினாலே பேரின்பவாழ்வைப் பெற விரும்பி,—கொற்றவர்க்கு உற்ற கோலம் குறை என நீத்து - அரசர்கட்குரிய அமைச்சுவேடம் குற்றமுடையதென்றதனை ஒழித்து,—மேலாம் நல் தவக் கோலம் கொண்டார் - உயர்வாகிய நல்ல தவவேடத்தை மேற்கொண்டருளினர். எ-று.

குறையுடையதனைக் குறையென்றொழிந்த துபசாரம். இரண்டறுதல் கண்ணொளியும் ஞாயிற்றினொளியும்போலச் சிவமு மான்மாவும் சுத்தாத்துவிதமாயிசைதல். இருவகைப்பற்று அகங்கார மமகாரங்கள். நம்பன் பழையோனென்றுமாம். அவத்தொழில் செய்யாமையாவது அழியுநர் புறக் கொடையயில்வேலோச்சாமை முதலியன. (எரு)

அத்தனை யால வாயி லண்ணலை யிறைஞ்சி யந்த
மைத்தவழ் சோலை நீடு மதுரையம் பதியை நீங்கி
வித்தகர் தம்மை யாண்ட மேனிகண் டிறைஞ்ச வேண்டும்
பித்தினர் கடிது சென்றார் பெருந்துறை பொருந்த வெண்ணி.

இ—ள்: அத்தனை ஆலவாயில் அண்ணலை இறைஞ்சி - திருவாதவூரடிகள் உயிர்கட்குப் பரமபிதாவும், திருவாலவாயின்கண் வீற்றிருக்கும் சகலலோக நியந்தாவுமாகிய சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்து வணங்கி அனுமதிபெற்றுக்கொண்டு,—மைத் தவழ் சோலை நீடு அந்த மதுரையம் பதியை நீங்கி - முகில்கடவழுஞ் சோலைகளுயர்ந்த அம்மதுரையாகிய இராசதானியைவிட்டு நீங்கி,—வித்தகர் தம்மை ஆண்ட மேனி கண்டு இறைஞ்ச வேண்டும் பித்தினர் - சர்வசாதுரியராகிய கைலாசபதி மார்ச்சாரசம்பந்தமாக வந்து தம்மை ஆட்கொண்டருளிய ஞானதேசிகத்திருமேனியைத் தரிசித்து வணங்கவேண்டுமென்னும் பிராந்தியையுடையவராய்,—பெருந்துறை பொருந்த எண்ணிக் கடிது சென்றார் - திருப்பெருந்துறையை அடையும்படி கருதி வல்விரைந்து சென்றனர். எ-று.

வித்தகரென்றது வாதவூரடிகளை என்பாருமுளர். அது மேனியென்பதனோ டியையாமையை அவர் நோக்கிற்றிலர். இங்ஙனம் மயங்கு

வார் மயங்காமைப்பொருட்டன்றே வருஞ்செய்யுளின் ஆசிரியர் மிடை கெடவைத்தபாத வித்தகரென அநுவதித்ததூஉமென்க. நியந்தா-நடத்து பவன். (எசு)

மிடைகெட வைத்த பாத வித்தக ரூரை நோக்கி
நடையிடு மெல்லை தன்னி னன்மன விரைவுங் காற்றுந்
தடைபடு கன்றை நாடுங் கபிலையுந் ததும்பி நின்று
மடையினை யுடைக்கு நீரு மாயினர் வாதவூரர்.

இ—ள்: வாதவூரர் மிடைகெட வைத்த பாத வித்தகர் ஊரை நோக்கி நடை இடும் எல்லை தன்னில் - திருவாதவூரடிகள் தமது முத்தி வறுமைகெடத் திருவடிதீக்ஷை செய்தருளிய பரமாசாரியர் வீற்றிருக்குந் திருப்பெருந்துறையைநோக்கி நடக்கும்பொழுது.—நல் மன விரைவும் காற்றும் தடைபடுகன்றை நாடும் கபிலையுந் ததும்பி நின்று மடையினை உடைக்கும் நீரும் ஆயினர் - நல்லமனோவேகமும் வாயுவேகமும் பிறரா னெடிது தடையுண்டு காணுதநின்ற தன்புனிற்றிளங்கன்றைப் பின்னர் நிற்புழியறிந்து நாடி யோடிச்செல்லுங் தலையீற்றுப்பசுவினது வேகமும் நிறைந்துநின்று பின் அணையை யுடைத்தோடும் நீர்வேகமும்போலாயி னர். எ-று.

விரைவை ஏனையவற்றோடுங் கூட்டுக. மிடை-வறுமை. அஃதிக் காலத்து முடையென மரீஇயிற்று. முத்திவறுமை முத்தியைப்பெறுமை யாகிய வறுமை. மனோவேகமுங் காற்றும் அதிவேகசெலவிற்கும், நாடுங் கபிலை கதியொடு பிரிவாற்றுமை அன்புமிகுதிகட்கும், மடையினையுடை க்குநீர் கதியொடு மீளாமைக்கும் உவமையாய் வந்தன. (எஎ)

கண்ணுழை யாத கானும் பதிகளுங் கடிது நீங்கி
யெண்ணறு முனிவர் மேவு மெழிற்பெருந் துறையி லெய்திப்
புண்ணிய வினத்தர் சூழ முன்புபோ லிருந்த போதில்
விண்ணவ ரதிபன் பொற்றாள் வீழ்ந்திது தாழ்ந்து சொல்வார்.

இ—ள்: கண் நுழையாத கானும் பதிகளும் கடிது நீங்கி எண் அறு முனிவர் மேவும் எழில் பெருந்துறையில் எய்தி - திருவாதவூரடிகள் கண்ணினது பார்வையும் நுழைதற்கரிய செறிவுபொருந்திய காடுகளை யும் ஊர்களையும் அதிசீக்கிரத்திற் கடந்துபோய் அநேகஇருடிகள் வசிக்கும் அழகியதிருப்பெருந்துறையையடைந்து,—விண்ணவர் அதிபன் புண்ணிய இனத்தர் சூழ முன்பு போல் இருந்த போதில் பொன் தாள் வீழ்ந்து தாழ்ந்து இது சொல்வார் - தேவநாயகராகிய சிவபெருமான் அப்புண்ணிய புருஷர்களாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரென்னும் குழுவினர் பக்கத்தேசூழ்ந்து சேவிப்ப முன்னரேபோலச் சபாநாயகமாக மத்தியில் வீற்றிருந்தருளுஞ் சமயத்து, அவரது பொன்போலுந் திருவடி

களிலே சிரசுதோயும்படி சந்நிதியிலே வீழ்ந்து வணங்கி இங்ஙனம் விண்ணப்பஞ்செய்வாராயினர். எ-று.

கண் ஆகுபெயர். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. எய்தி வீழ்ந்து தாழ்ந்து சொல்வாரென முடிக்க. (எஅ)

தீண்டுதற் கரிய மார்பிற் சேயிழை தனத்தி னாலு
மீண்டொரு மாற்றி னாலு மெய்திய தழும்ப போற்றி
வேண்டிய வடிவ மாகி வெம்பரி மேல்கொண் டெம்மை
யாண்டருள் செய்ய வந்த வண்ணலே போற்றி போற்றி.

இ—ள்: தீண்டுதற்கு அரிய மார்பில் சேயிழை தனத்தினாலும் ஈண்டு ஒரு மாற்றினாலும் எய்திய தழும்ப போற்றி - முன்னொருஞான்று சத்தபுரிகளுள் ஒன்றாகிய காஞ்சீபுரத்தின்கண்ணே அகிலலோகசெனனியாகிய காமாக்ஷியம்மை விசேடசுருதியாகிய ஆகமவிதிப்படி பரமாணுப்பிரமாணமேனும் வழுவாது சிவபூசைசெய்து வருகின்றுழி ஒருநாள் நித்த முத்த சுத்த சித்தாகிய ஏகாம்பரநாதசுவாமி அச்சிவபூசாபத்திமையினுறுதியை உலகிலர்பொருட்டுப் பரீக்ஷித் தநுக்கிரகஞ்செய்யுமாறு கம்பாநதியிலே சர்வதீர்த்தங்களையும் வருவிக்க, அது ஆகாயத்தையளாவிப் பிரவாகித்து வருதலும் இஃதிச்சிவபூசைக் கிடையூறாய் வருகின்றதென்றஞ்சி அவ்வம்மை சிவலிங்கப்பெருமானை ஞெமுங்கத் தழுவிக்கொள்ளுதலால் மற்றொருவராலு மொருகாற் றீண்டுதற்குமரிய திருமார்பிலே செவ்விய இழையினையுடைய அவ்வம்மையினது இருதனங்களினாலும் இம்மதுராபுரியின்கணொரு பிரம்பினாலும் முதுகிற்பொருந்திய தழும்பையுடைய தேவரீர் தமியேனைப் பாதுகாத்தருளுக,—வேண்டிய வடிவம் ஆகி வெம் பரி மேல் கொண்டு எம்மை ஆண்டு அருள் செய்ய வந்த அண்ணலே போற்றி போற்றி - ஆங்காங்கு வேண்டியவேண்டிய வடிவங்கொள்ளுதலை மேற்கொண்டு ராவுத்தராகி வெவ்விய குதிரையின்மேலிவர்ந்து அடியேங்களை ஆட்கொண்டனுக்கிரகஞ்செய்யும்பொருட்டு எழுந்தருளிவந்த எப்பொருட்குமிறைவரே தமியேனைப் பாதுகாத்தருளுக, பாதுகாத்தருளுக. எ-று.

போற்றிய என்னும் வியங்கோள் ஈறுகுறைந்து போற்றி என நின்றது. அது "வாழிய வென்னும் சேயென் கிளவி, யிறுதி யகரங் கெடுதலு முரித்தே" என்னு முயிர்மயங்கியற் சூத்திரத்து மொழிந்தபொருளோடொன்ற வவ்வயின்மொழியாததனையு முட்டின்று முடித்தலென்பதனற்கொள்க. எம்மென்ற தாசனையுமுளப்படுத்தி. அது "வென்றி, மன்னவன்பிறப்பறுக்கவும் வார்கழல்வீக்கி" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானுமறிக. சத்திகாரியமாகிய திருமார்பென்பார் தீண்டுதற்கரிய மார்பென்றும், காஞ்சீபுரம், அருட்சத்தியாகிய காமாக்ஷியம்மையினது பரவபரஞானமாகிய இருதனங்களின் முயக்கத்தாற் சிவபெருமான் றழும்பெய்து

தற்குத் தான் இடமாகப் பெற்றுக்கொண்டமையினும், ஒருவனது வெறும் பிரம்படிமாத்திரையிற் சிவபெருமான் றழும்பெய்துதற்குத் தான் இடமாகப் பெற்றுக்கொண்டமை மதுரைக்கு விசேடமுடைத்தென்பார் மாற்றிஞெலென்றமையாது ஈண்டொருமாற்றிஞெலென்றும் கூறினர். தம்பொருட்டு வைகைநதியடைத்தற்கு வந்துபட்ட அடித்தழும்பாதலினுலும் உடனிகழ்ந்தமையானும், அவ்வபராதந் தம்மாற் சகிக்கலாற்ருது எய்திய தழும்பபோற்றியென் றிப்புதியதழும்பே எடுத்துக்கொண்ட விஷயமாயினும், இது பேசுதற்கண் தழும்புவார்க்க வொப்புமைபற்றிப் பழைய தழும்பும் நினைக்கப்படுமாதலின் தழும்பு ஒன்றன்று இரண்டேயென்பார் தனத்திஞெலுமெய்திய தழும்பவென்றுங் கூறினர். முன்வடுவும் பின்வடுவுமுள்ளவரென நிந்தாஸ்துதிகூறியதென்றலுமொன்று. வைகைநதியடைத்தது வந்திபொருட்டாயிருக்கத் திருவாதபுரேசர்பொருட்டென்றதென்னையெனின்? நதி அடைக்கப்படுதலாகிய காரியநிகழுமாறு பெருகுதலாகிய காரணம் அவ்வடிகள்பொருட்டு நிகழ்ந்தமையினென்க. (எக)

அண்டருக் கரியாய் போற்றி யடியவர்க் கெளியாய் போற்றி
வண்டமிழ்ப் பாண்டி நாடு வாழமண் சுமந்தாய் போற்றி
கண்டனக் கினிய மேனி காட்டியென் சென்னி மீது
முண்டகத் திருத்தாள் வைத்த முத்தனே போற்றி போற்றி.

இ—ள்: அண்டருக்கு அரியாய் போற்றி - தேவர்களுக்கரியவரே பாதுகாத்தருளுக,—அடியவர்க்கு எளியாய் போற்றி - அடியவர்கட் கெளியவரே பாதுகாத்தருளுக,—வண்தமிழ்ப் பாண்டிநாடுவாழ மண் சுமந்தாய் போற்றி - செந்தமிழையுடைய பாண்டிநாடு வாழும்படி திருமுடிமேன் மண்சுமந்தருளினவரே பாதுகாத்தருளுக,—என்கண் தனக்கு இனிய மேனி காட்டிச் சென்னி மீது முண்டகத் திருத்தாள் வைத்த முத்தனே போற்றி போற்றி - என் கண்களுக்கினிய ஞானதேசிகத்திருமேனியைத் தரிசிப்பித்தென் புன்றலைமீது செந்தாமரைமலர்போலு மும்மலமற்ற திருவடிகளைச் சூட்டியருளிய அநாதிமலமுத்தரே தேவரீர் அடியேனைப்பாதுகாத்தருளுக, பாதுகாத்தருளுக. எ-று.

எழுவகைத்தோற்றத்துட் சிறந்த தேவர்கட்காயினும் அடிமையில் வழி அவர்கட்கெளிவந் தனுக்கிரகஞ் செய்யாதவரென்பார் அண்டருக்கரியாய்போற்றி என்றும், அத்தேவரிற்ருழ்ந்த மக்கட்கேனும் அடிமையுள்வழி எளிவந்தனுக்கிரகஞ் செய்வாரென்பார் அடியவர்க்கெளியாய்போற்றி என்றும், வேதசிரசுகளாகிய உபநிஷத்துக்களும் அறிந்து கோடற்கரிய அருமைத்திருமுடிமேன் மண்சுமந்தருளிய பெரும்பேற்றைப் பெற்றுள்ளது பாண்டிநாடொன்றுமே யாகலின், அந்நாட்டின்கணுள்ளவரே பதிப்பொருணிச்சயம் பூண்டு நிரதிசயவின்பவாழ்வடைதற்குரியவராவரென்பார் வண்டமிழ்ப்பாண்டிநாடுவாழமண்சுமந்தாய்போற்றி என்றும், திருமேனியழ

கான் முன்வசீகரித்துப் பின்னர்த் திருவடிதீக்ஷைசெய்தாட்கொண்டருளினவரென்பார் கண்டனைக்கினிடமேனிகாட்டியென் சென்னிமீது முண்டகத்திருத்தாள் வைத்தமுத்தனேபோற்றி என்றுங் கூறினர். திருமேனியழகான் முன்வசீகரித்தாரென்பது "முத்தாவுன்றன் முகவொளிநோக்கி முறுவலன்னகைகாண வந்தாசாலவாசைப்பட்டேன் கண்டாயம்மானே" என்பதனுமறிக. (௬௦)

போற்றியென் றின்ன வாறு புகன்றவர் முடிமேற் செங்கை
யேற்றியங் கினிய கூறி யெழுகென வெழுந்த பின்னர்
நீற்றையும் புனைந்து ஞான நிறையருட் பார்வை நல்கி
வீற்றிருந் தன்பர் கூட்டம் விளங்கினர் களங்க மில்லார்.

இ—ள்: போற்றி என்று இன்னவாறு புகன்றவர் முடிமேல் செங்கை ஏற்றி-அடிமையைத் தேவரீர் பாதுகாத்தருளுகவென் றிந்தப் பிரகாரம் ஸ்தோத்திரஞ்செய்த திருவாதபுரேசராகிய சீடரது சிரசின்மீதே ஞானாசாரியர் தமதருமைத்திருக்கரத்தை வைத்து அஸ்தமத்தக சம்யோகமாகிய பரிசதீக்ஷையுஞ் செய்தருளி—நீற்றையும் புனைந்து ஞான நிறை அருள் பார்வை நல்கி - தமதருமைத்திருக்கரத்தினலே விபூதியையுந் தரித்து ஞானத்தை முறுகுவிக்கும் பூரண கிருபாநோக்கமுஞ்செய்து:—அங்கு இனிய கூறி எழுகென எழுந்த பின்னர் - அங்கே சற்காரவசனங்களைத் திருவாய்மலர்ந்து அன்பனே நீ எழுந்திரு என்று அருளிச்செய்ய எழுந்தபின்பு,—களங்கமில்லார் - நிர்த்தோஷராகிய திருவாதவூரடிகள்,—அன்பர் கூட்டம் வீற்றிருந்து விளங்கினர் - தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பதின்மரென்னுந் தொகையினையுடைய திருத்தொண்டர்கூட்டத்திலினிருந்து துலங்கினர். எ-று.

சிவஹஸ்தமத்தகசம்யோகமாகிய பரிசதீக்ஷையாவது பரிசனவேதியினலே தாமிராதி லோகங்கள் களிம்புநீங்கிப் பொன்னாதல்போல ஆசாரியர் தமதுகையைச் சிவன்கையாகப் பாவித்து அங்ஙனமே அருச்சனை செய்து அதனைச் சீடனுடையசிரசில்வைத்துப் பாசத்திரயத்தை நீக்கி அவனைச் சிவனாக்குதலாம். இவ்வாற்றானே பரமாசாரியர் சைவாகமங்கள் விதந்துகூறும் எழுவகைத் தீக்ஷைகளும் திருவாதவூரடிகளாகிய தமது சீடருக்குச் செய்தருளியவாறுய்த்துணர்ந்துகொள்க. எழுவகைத் தீக்ஷைகளை, "நயனத்தருள் பரிசவாசகமானதமு, மலகில்சாத்திர மியோகமௌத்திராதி" என்பதனானறிக. ஒருதீக்கையை இருகாற்செய்தல் சீடரது பக்குவமுதிர்ச்சிபற்றி வந்த ஆதரவாலென்க. அன்பர்கூட்டத்தொருவராய் விளங்குதற்குக் களங்கமில்லாரென்று தகுதிகூறியவாறு. களங்கமில்லார் பாசபந்தவலியாகிய தோஷநமுவுஞ் சுத்தராகிய திருவாதபுரேசர். சிவபெருமான் அடியார்க்கெளிவந்து மண்சுமத்தல் பிரம்படிபடன் முதலியன செய்தருளின்மை அவ்வடிகடிருவுள்ளத்துக்குப் பாங்கன்றென்பார்

களங்கமில்லார் என்றார் எனக்கோடலுமொன்று. களங்கமில்லாரென்றது பரமாசாரியரையேயென்றுரைப்பாருமுளராலோவெனின், வீற்றிருந்தெனவே முன்னர் நின்றாரென்று கொள்ளப்படும். அங்ஙனம் பரமாசாரியர் நின்றனரென யாண்டுங்கூறப்படாமையானும், முன் இருத்தலையே பின்னுங் கூறுதல் புனருத்தமாதலானும், வீழ்ந்து வணங்கிய திருவாதவூரடிகள் எழுகென எழுந்தபின்னர் யாதுசெய்தனரென்பதொருதலையாகக் கூறவேண்டுதலானும் அது போலியுரையென்க. திருவாதவூரடிகளுக்குப் பரமாசாரியர் செய்த தீக்கை சிவதருமிணி தீக்கையென்பது சிவாகமம்வல்லார்வாய்க் கேட்டுணர்க. (அக)

அந்தமு முதலு மில்லா ரடியவர் தம்மை நாடி
வந்துள கரும மெல்லா முடித்தன மகிழ்ச்சி கூர
நந்திகழ் வடிவங் காண வேண்டிநற் கயிலை யுள்ளார்
சிந்தனை செய்தார் வல்லே யாண்டுநாஞ் சேறல் வேண்டும்.

இ—ள்: முதலும் அந்தமும் இல்லார் அடியவர் தம்மை நாடி—ஆதிமத்தியாந்தரகிதராகிய பரமாசாரியர் அதன்பின்பு தம்மடியார்களை நோக்கி.—வந்துள கருமம் எல்லாம் முடித்தனம்—நாமுத்தேசித்துவந்த தீக்ஷாகருமங்களையெல்லா மினிதுமுடித்துக்கொண்டேம்,—நல்கயிலைஉள்ளார் நம் திகழ் வடிவம் காண வேண்டிச் சிந்தனைசெய்தார்—நல்ல கைலாசகிரியில் வசிக்கும் நம்மன்பர்களெல்லாம் நமது விளங்காநின்ற உருவத்திருமேனியை நேரே தரிசிக்கவிரும்பி நம்மை அன்போடு தியானிக்கின்றார்கள் ஆகலின்,—மகிழ்ச்சி கூர நாம் ஆண்டு வல்லே சேறல் வேண்டும்—அவர்கட்கு மகிழ்ச்சிமிக நாமினி அவ்விடத்துத் தவறாது விரைந்துசெல்லுதல் வேண்டும். எ-று.

வேண்டுமென்பது தேற்றப்பொருட்டாகுவதோர் தொழிற்பெயராகலிற்றவறாது என உரையில் விசேடிக்கப்பட்டது. கருமமெல்லாமென்பதற்குக் குதிரையிடுதன் மண்சுமத்தன்முதலிய கருமங்களென்பாருமுளர்; முடித்தனமென்பதற்கு விசேஷணமாக்கினும் அமையும். (அஉ)

வாழ்ந்திரு மின்பின் யாமு மேகுவ மென்ன வந்து
சூழ்ந்தரு ளுருவா மன்பர் தோத்திரம் பலவுஞ் செய்து
தாழ்ந்தெதி ரிறைஞ்சி யையா தரிப்பரி தென்றுமண்மேல்
வீழ்ந்தயர்ந் தழுதா ரெம்மை விடுதியோ வென்று நொந்தார்.

இ—ள்: இன்பின் வாழ்ந்து இரும் யாமும் ஏகுவம் என்ன—நீங்கள் இன்பத்தோடிங்ஙனம் வாழ்ந்திருங்கள் நாமும் கைலாசகிரிக்குச் செல்வேமென்று பரமாசாரியர் திருவாய்மலர்ந்தருள,—அருள் உருவாம் அன்பர் எதிர் வந்து தாழ்ந்து இறைஞ்சிச் சூழ்ந்து தோத்திரம் பலவும் செய்து—அன்புருவாகிய திருத்தொண்டர்கள் அதுகேட்டுச் சந்நிதியில்வந்து வீழ்ந்து

வணங்கி வலம்வந்து பலதோத்திரங்களையுஞ் சொல்லித்துதித்து,—ஐயா தரிப்பு அரிது என்று மண்மேல் வீழ்ந்து அயர்ந்து அழுதார் - சுவாமீ அடியேங்கள் தேவரீரது பிரிவைச்சகித்திருப்பதரிதரிதென்று விண்ணப்பஞ்செய்து மறித்தும் பூமியில்வீழ்ந்தழுதறிவழிந்தார்,—எம்மை விடுதியோ என்று நொந்தார் - மீள அறிவுவந்தழித் தேவரீர் அடியேங்களைக் கைவிடுகின்றீரோவென்று வருந்தினர். எ-று.

அயர்ந்தழுதாரென்பதனை அழுதயர்ந்தார் என விகுதிபிரித்துக் கூட்டிப் பொருள்கொள்க. அருள் அன்பாமாறு மேலுங் காட்டப்பட்டது. (அங)

பரிந்தழு மடியார் தம்மேற் பரமனு மன்பு கூர்ந்து
வருந்துவ தொழிமி னிந்த மணமலி குருந்த நீழற்
பொருந்திய தெய்வ பீடம் பொலிவொடு குயிற்றி மீதே
திருந்திய மறையுந் தேடு நம்பத மாகச் செய்து.

இ—ள்: பரிந்து அழும் அடியார் தம்மேல் பரமனும் அன்பு கூர்ந்து - இவ்வாறு மனம்வருந்தி மேலுமேலும் அழுந் தம்மடியார்மீதே பரமாசாரியரும் முன்னையினுமிக அன்புகூர்ந்து,—வருந்துவது ஒழிமின் - நீவிர் வருந்துதலை இனி ஒழியுங்கள்,—மணமலி இந்தக் குருந்த நீழல் தெய்வம் பொருந்திய பீடம் பொலிவு ஒடு குயிற்றி - மணமிகுந்த இந்தக் குருந்தமர நீழலிலே தெய்வத்தன்மை பொருந்திய பீடிகையொன்றை அழகோடு செய்து,—மீதே திருந்திய மறையும் தேடும் நம் பதம் ஆகச் செய்து - அப்பீடிகையின்மீதே திருத்தமாகிய வேதங்களுமின்னுந் தேடும் நம்முடைய பாதங்களை நிருமித்து. எ-று.

ஆக்கம் பிறிதொன்றாற்செய்வதுணரநின்றது. உபநிஷத்துக்களுந் தேடு நம்பதமென்பார் திருந்தியமறையுந்தேடு நம்பதமென்றார். (அச)

தாங்கரு மரந்தை நீங்கி யாமெனுந் தன்மை கண்டு
நீங்கரு மன்பி னாலே நித்தலு நயந்தி றைஞ்சி
யீங்கருண் மனத்த ரெல்லா மமர்ந்திரு மொருநா ளிந்தத்
தீங்ககல் பொய்கை யூடு செழுந்தழல் வந்து தோன்றும்.

இ—ள்: தாங்கு அரும் அரந்தை நீங்கி - சகித்தற்கரிய இத்துன்பத்தினின்று நீங்கி,—யாம் எனுந் தன்மை கண்டு - அவற்றை நாமேயென்னும் பாவனைபண்ணி,—நீங்கு அரும் அன்பினாலே நித்தலும் நயந்து இறைஞ்சி - நீங்குதற்கரிய அன்பினாலே நாடோறும் விரும்பி வணங்கி,—அருள் மனத்தர் எல்லாம் ஈங்கு இனிது இரும் - நம்மாட்டன்புபொருந்திய மனத்தையுடைய நீவிரெல்லாம் இங்கே இனிதிருங்கள்,—தீங்கு அகல் பொய்கை ஊடு ஒருநாள் செழுந்தழல் வந்து தோன்றும் - தீங்கற்ற இப்பொய்கையின்கண்ணே ஒருதினம் செம்மையாகிய அக்கினிவந்து தோன்றும். எ-று.

நீங்ககல் பொய்கைக்கு ஞானக்கினி தீர்த்தமெனவும் திருத்தமாம் பொய்கை எனவும் பெயர். இவற்றைப் பின்னையதைத் திருவாசகத்துள் விதந்தெடுத்தோதிய வாற்றானுமறிக. பூதாக்கினியோ டிதனிடை வேற் றுமை தோன்றச் செழுந்தழலென்றார். (அ௫)

எழுந்தழல் விளைந்த போதில் யாவருந் தடத்தி னூடு
விழுந்துபின் னெய்தி நம்பால் விடுகனுங் கவற்சி யென்று
தொழுந்தவ மியற்றுந் தொண்டர் சூழ்ந்துபின் செல்ல மெல்
செழுந்திருக் கயிலை நாடிச் சென்றனர் தில்லை நாதர். [லச்

இ—ள்: தடத்தின் ஊடு எழும் தழல் விளைந்த போதில் யாவரும் விழுந்து - அப்பொய்கையின்கண்ணே தோன்றும் அக்கினிசுவாலிக்கும் சமயத்தில் நீவிரெல்லாம் அதன்கண்வீழ்ந்து,—நம்பால் எய்தி - நம்மை யடைந்து,—பின் நும் கவற்சி விடுக என்று - அதன்பின் நம்பிரிவாலுறையு நுந் துன்பத்தை முழுவதும் விடக்கடவீர்களென்று திருவாய்மலர்ந்து,— தொழும் தவம் இயற்றும் தொண்டர் சூழ்ந்து பின் செல்ல-எவருந் தொழ த்தகுந் தவத்தை இயற்றுந் திருத்தொண்டர்கள் ஒருங்குதிரண்டு தம்பின் னுகவர,—தில்லை நாதர் செழும் திருக் கயிலை நாடி மெல்லச் சென்றனர்- சபாநாயகர் செழுமையாகிய திருக்கைலாசகிரியைநோக்கி மெல்லச்சென் றருளினார். எ-று.

என்று நாடிச் சென்றனர் எனமுடிக்க. அத்திருத்தொண்டருக்குப் புலப்படுமாறு சென்றருளினரென்பார்மெல்லச் சென்றனரென்றார். ()

நீங்கரு மன்ப ரெல்லா நில்லுமி னென்று கூற
வாங்கவ ரிறைஞ்சி யெந்நா ளையநிற் காண்ப தென்று
தாங்கரு மயக்க மெய்தித் தாயகன் மகவு போலப்
பூங்கழல் வணங்கி நின்றார் போயினர் மாயை வல்லார்.

இ—ள்: நீங்கு அரும் அன்பர் எல்லாம் நில்லுமின் என்று கூற- பிரிதற்கரிய நம்மன்பர்களெவரும் இனி நில்லுங்களென்று சிவபெருமான் பணித்தருள,—ஆங்கவர் இறைஞ்சி ஐய நின் காண்பது எந்நாள் என்று - அத்திருத்தொண்டர்கள் வணங்கிச் சுவாமீ அடியேங்கள் தேவரீரை இனிக் காணப்பெறுவது எந்நாளென்று பிரலாபித்து,—தாய் அகல் மகவுபோலத் தாங்கு அரும் மயக்கம் எய்தி - தாயைநீங்குங் குழந்தைகளைப்போலச் சகித்தற்கரிய மயக்கமடைந்து,—பூங் கழல் வணங்கி நின்றார் - அழகிய திருவடிகளை வணங்கி அவரது பணிமறுக்க அஞ்சிநின்றனர்,—மாயை வல்லார் போயினர் - அப்பொழுது மாயங்களில்வல்ல சிவபெருமான் சென்றருளினார். எ-று.

திருவாதவூரடிகளையொழித் தொழிந்த திருத்தொண்டர்களுக் கெல்லா மறைந்து சென்றருளினரென்பார் மாயைவல்லார் போயினர்

என்றார். ஈண்டு மாயமென்றது ஓர்குழுவினுள் ஒருவருக்குமாத்திரம் புலப்பட்டு ஏனையோருக்குப் புலப்படாது மறைதலையென்க. (அஎ)

இங்கிவர் நின்ற பின்னு மின்னருள் வாத வூரர்
தங்கிளை வாழ வந்த தலைவர்பின் சென்ற போதிற்
பொங்கிள முலையாள் பாகர் புரிந்திவர் வரவு காணு
வங்கொரு கொன்றை நீழ லிருந்தன ரரந்தை நீக்க.

இ—ள்: இங்கு இவர் நின்ற பின்னும் - இங்கே இவ்வடியார்கள் செல்லாது நின்றபின்னரும்,—இன் அருள் வாதவூரர் தம் கிளை வாழவந்த தலைவர் பின் சென்ற போதில் - இனிய திருவருளையுடைய திருவாதவூரடிகளானவர் தமதுசுற்றம் வாழும்படி குருமூர்த்தங்கொண் டெழுந்தருளிவந்த சிவபெருமானுக்குப் பின்னுகச் செல்கின்றசமயத்தில்,—பொங்கு இள முலையாள் பாகர் புரிந்து இவர் வரவு காணு - பொலிவு பொருந்திய இளையதனங்களையுடைய உமையம்மையினது வலப்பாகராகிய சிவபெருமான் திரும்பி இவரது வரவைக்கண்டு,—அரந்தை நீக்க அங்கு ஒரு கொன்றை நீழல் இருந்தனர்- இவரது துன்பத்தை நீக்கும் பொருட்டு அங்கே ஓர்கொன்றைமரநிழலிலே வீற்றிருந்தருளினர். எ-று.

ஓர்சிவஞானியின் சுற்றம் இருபத்தொருதலைமுறைகாறும் பேரின்ப வாழ்வடையுமென்னும் நூற்றுணிபுபற்றித் திருவாதவூரடிகளைச் சிவஞானியாக்கியருளிய சிவபெருமானை வாதவூரர் தங்கிளைவாழவந்ததலைவர் என்றார். அது "மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை, யாழாமே யரு ளரசே போற்றி" என்னுந் திருவாக்கானுமறிக. இனி வாதவூரராகிய தலைவ ரெனக் கோடலுமொன்று. நித்தியகன்னிகையாதலின் என்றுஞ் சாயாத தனங்களென்பது விளக்குவார் பொங்கிளமுலை என விசேடித்தார் (அஅ)

தன்புடைக் கவடு கொண்டோர் தடங்கிரி நிரந்த மாலை
பொன்படைத் தனைய கொன்றை பொலிவுற விருந்த போதின்
மென்பதத் திறைஞ்சிக் கண்ணீர் விழவிழத் தொழுது நிற்கு
மன்பரைப் பரிவா லைய ரருகுவைத் தருளிச் செய்வார்.

இ—ள்: ஓர் தடம் கிரி தன்புடைக் கவடு கொண்டு - ஓர்பெரிய மலையானது தன்பக்கத்தே பெருங் கொம்பர்களைக்கொண்டு,—நிரந்த பொன்மாலை படைத்து அனைய கொன்றை பொலிவு உற இருந்தபோதில்- அக்கொம்பர்களிலே நிறைவுபொருந்தப் பொன்னரிமாலைகள் தூங்கப் பெற்று நின்றாற்போன்ற அக்கொன்றைமரமானது பொலிவுமிகப் பரமாசாரியர் அதன்நிழலிலே வீற்றிருக்குஞ்சமயத்தில்,—மெல் பதத்து இறைஞ்சிக் கண் நீர் விழ விழத் தொழுது நிற்கும் அன்பரை - மென்மையாகிய திருவடிகளிலே சிரசுதோயும்படி சந்நிதியில் வீழ்ந்து வணங்கியெழுந்து கண்ணீரானது தைலதாரைபோல இடையறுதொழுக அஞ்சலிசெய்து கொண்டு நிற்கும் மெய்யன்பராகிய திருவாதவூரடிகளை,—பரிவால் ஐயர்

அருகு வைத்து அருளிச்செய்வார் - அவரது அன்புகாரணமாகப் பரமாசாரியர் தம்பக்கத்திருத்தி வைத்துக்கொண் டிங்ஙனந் திருவாய்மலர்ந்தருளுவாராயினர். எ-று.

படைத்தது எனற்பாலது படைத்தீ என விகாரமாயிற்று. இல்பொருளுவமை. அடுக்குப் பன்மைபற்றிவந்தது. (அகூ)

அவ்விய மில்லார் தங்கட் கருடர முன்னு மன்னுந்
திவ்விய தலமா மிந்தச் சிறந்துள குருந்த நீழ
லெவ்வுல கெங்கு முள்ளே மாயினு மிங்கு ளோர்கள்
வெவ்வினை யகற்றி யாள வேண்டியீண் டுறைவோ மென்றும்.

இ-ள்: எவ் உலகு எங்கும் உள்ளேம் ஆயினும்-நாம் சர்வலோகங்களின் அகத்தும் புறத்தும் பாலின்கணெய்போல வியாபித்திருப்பினும்,--இங்கு உளோர்கள் வெவ்வினை அகற்றி ஆள வேண்டி - இத்திருப்பெருந்துறையின்க ணுள்ளவர்களது கொடிய இருவினைகளையு நீக்கி அவர்களை ஆட்கொள்ளும்படி கருதி,—அவ்வியம் இல்லார் கட்கு அருள் தர முன் நாம் மன்னும் இந்தத் திவ்விய தலம் ஆம் சிறந்துள குருந்த நீழல் ஈண்டு என்றும் உறைவோம் - சித்தசுத்தியையுடைய நன்மக்கட் கநுக்கிரகஞ் செய்யும்பொருட்டு முதற்கண் நாம் கோயில்கொள்ளப்பெறும் இந்தக்ஷேத்திரத்தின்கணுள்ள இக்குருந்தமர நீழலாகிய இவ்விடத்துத் தயிரின்கணெய்போல எஞ்ஞான்றும் விசேட வியாபகமாக வசிப்பேம். எ-று.

தம் சாரியை. இந்தச் சிறந்துளகுருந்தநீழல் திவ்வியதலமாமென முடிப்பாருமுளர். (௯0)

பொங்கொளிச் சுழுனை யூடு புலம்பிசைக் குறியே யான
மங்கல சங்க மல்லால் வாய்ந்தபல் லியங்கள் யாவு
மிங்கெமக் காகா வோசை யடங்கிட மாத லானு
நங்குலக் கவுரி காண நடநவி லுதலி னாலும்.

இ-ள்: ஓசை அடங்கு இடம் ஆதலாலும் - இஃது நாதலயஸ்தானமாதலினாலும்,—நம் குலக் கவுரி காண நட நவிலுதலினாலும் - நங்குலமகளாகிய பார்ப்பதிகாண நாம் பஞ்சகிருத்தியநிருத்தஞ்செய்யுமிடமாதலினாலும்,—பொங்கு ஒளிச் சுழுனை ஊடு புலம்பு இசைக் குறியே ஆனசங்கம் அல்லால் வாய்ந்த பல்லியங்கள் யாவும் இங்கு எமக்கு ஆகா - மேனோக்கிக் கிளராநிற்கு மொளியையுடைய சுழுமுனாநாடியிலே சத்திக்கும் சூக்குமநாதத்திற்குப் பிரதிநாதசின்னமாகிய சங்கவாத்தியமொன்றல்லது செவிப்புலங்கட் கின்பஞ்செய்து மனத்தைப் புறத்தேயிழுக்குமேனை வாத்தியவர்க்கங்கள் அனைத்தும் இந்தஸ்தலத்தின்கண்ணே நமக்காகாவாம். எ-று.

திருப்பெருந்துறை 'சோடசாந்தத் தலமும், துரியாதீதத்தலமும், ஞானக்ஷேத்திரமும், யோகவனமுமாகலின் இங்ஙனம் கூறப்பட்டதென்க. சுழுமுனையூடு புலம்பிசைகளை நிஷ்டாநுபூதிநூலிற் காண்க. உமையம்மை அக்கினிக்குச் சூடுபோலத் தமக்கபின்னமாகிய தந்திருவருளேயாகலின், அவ்வம்மையை நங்குலக்கவுரி என்றார். நவிலல் - செய்தல். மங்கலசங்கம் மங்கலகரமாகிய சங்கம். சுழுமுனை சுழுனை என மரீஇயிற்று. (௯௧)

ஒழுங்குட னின்ன வாறிங் குணர்ந்துநற் குருந்த நீழற்
செழுந்தவக் குழுவி னீயு நங்கழல் சேவை செய்தே
யெழுங்கனன் மடுவிற் காணில் யாவரு மதனிற் சென்று
விழும்பொழு துடன்வீ ழாம லவ்வுழை விரைவி னீங்கி.

இ—ள்: ஒழுங்கு உடன் இன்னவாறு உணர்ந்து - கிரமமாக இத்தன்மைகளை நீ யறிந்து,—இங்கு நல் குருந்த நீழல் செழும் தவக் குழுவில் நீயும் நம் கழல் சேவை செய்து - இங்கே நல்ல குருந்தமரநிழலிலே செழுமையாகிய தபோதனர்கூட்டத்தோடு நீயும் நம்முடைய பாதங்களை வழிபட்டுக்கொண்டிருந்து,—மடுவில் எழும் கனல் காணின் யாவரும் அதனில் சென்று விழும் பொழுது உடன் வீழாமல் - நாமேற்கூறியபிரகாரம் பொய்கையின்கட் சுவாலிக்கும் அக்கினி நுங்கண்களுக்குப் புலப்பட்டுழி நம்மன்பர்களெல்லாம் அவ்வக்கினியிற் பிரவேசிக்கும்போது நீயுமவருடனதன்கட் பிரவேசியாமல்,—அவ் உழை விரைவின் நீக்கி - அவ்விடத்தை விரைவாகவிட்டுநீங்கி. எ-று. குளகம். (௯௨)

உத்தர கோச மங்கை யென்னுநம் மூரிற் சென்று
சித்தியங் கெவையு மெய்தித் தெய்விக லிங்க மேனி
வைத்தநம் பதிக டம்மி லிவையிவை வணங்கி லங்கே
யித்திகழ் வடிவே காண்டி காட்டுது மென வியம்பி.

இ—ள்: உத்தரகோசமங்கை என்னும் நம் ஊரில் சென்று அங்கு சித்தி எவையும் எய்தி - திருவுத்தரகோசமங்கையென்று தன்பெயர் கூறப்படும் நம்முடைய ஸ்தலத்திற்போய் அங்கே இட்டசித்திகளெவைகளையும்பெற்று,—தெய்விக லிங்க மேனி வைத்த நம் பதிகள் தம்மில் இவை இவை வணங்கில் - தெய்வத்தன்மைபொருந்திய நமது சகள நிஷ்களவடிவாகிய மகாலிங்கப்பிரதிட்டை செயப்பெற்ற நம்முடைய ஸ்தலங்களுள் இன்ன இன்ன ஸ்தலங்களையடைந்து நீ நம்மைத் தரிசித்துவழிபடின்,—அங்கே திகழ் இவ்வடிவே காண்டி - அவ்வஸ்தலங்களிலெல்லாம் விளங்காநின்ற இக்குருவடிவத்தையே நீ தரிசிப்பாய்,—காட்டுதும் - நாமுனக்குத் தரிசிப்பேம்,—என இயம்பி - என்று திருவாய்மலர்ந்தருளி. எ-று.

திருவாதவூரடிகள் திருவுத்தரகோசமங்கையைவிட்டு நீங்கி அப்பாற் சென்று தரிசித்து வணங்கும் ஸ்தலங்களையெல்லாம் ஆசிரியர் பின் தனித்

தனி விதந்தோதுபவாகலின், அதுபற்றிப் பின் உரைத்துமென்னு முத்தியான் அவற்றைப் பரமாசாரியர் கூறுகவே தாம் இவையிவையென ஈண்டுத் தொகுத்துச் சுட்டியொழிந்தாரென்பது. எனவே, பரமாசாரியர் ஆண்டு விரித்துரைத்தாரென்பது போதருமென்க. (௩௩)

இந்நகர் வணங்கி நீங்கி யெழுங்கழுக் குன்ற மென்னு
மந்நெடும் பதியி றைஞ்சி யாண்டுநின் றீண்டுப் போந்து
பொன்னினம் பலத்தி லெய்திப் புத்தரை வாதில் வென்ற
பின்னரெம் பதமே யான பெரும்பதம் பெறுதி யென்றார்.

இ—ள்: இந்நகர்வணங்கி நீங்கி - நீ இந்த ஸ்தலங்களையெல்லாந் தரிசித்து வணங்கி நீங்கி,—எழும் கழுக்குன்றம் என்னும் அந் நெடும் பதி இறைஞ்சி - உயர்வாகிய திருக்கழுக்குன்றமென்னும் அந்தப் பழைய ஸ்தலத்தைத் தரிசித்துவணங்கி,—ஆண்டு நின்று ஈண்டுப் போந்து - அவ்விடத்தினின்றுந் தெற்குநோக்கி இங்கே மீண்டுவந்து,—பொன்னின் அம்பலத்தில் எய்திப் புத்தரை வாதில் வென்ற பின்னர் - சிதம்பரத்திலே கனகசபையையடைந்து புத்தர்களைத் தருக்கத்திற் செயித்தபின்னர், எம் பதமே ஆன பெரும்பதம் பெறுதி என்றார் - நம்பாதகமலப்பாகிய சாயுச்சியத்தைப் பெறக்கடவையென்றருளிச்செய்தார். எ-று.

பொன்னினம்பலம் என்புழி இன் சாரியை தவிர்வழிவந்தமையின் விரித்தல்விகாரம். வருஞ்செய்யுளினு மீதொக்கும். பெரும்பதமென விசேடித்தார் பதமுத்திகளினீக்கிப் பரமுத்தியாகிய சாயுச்சியமென்பது விளக்குதற்கென்க. "இறுமாந்திருப்பன்கொலோ வீசன்பல்கணத்தெண்ணப்பட்டுச், சிறுமானேந்தி தன் சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன் கொலோ" என்னும் திருவாக்கானுமுணர்க. (௩௪)

மன்னுமன் புடையார் தெய்வ வாசகம் புகலு மாறும்
பன்னகம் புனைவோன் மேவும் பதிபல வணங்கு மாறும்
பொன்னினம் பலத்தி லெய்திப் புத்தரை வென்று மன்றன்
றன்னருங் கமல பாதஞ் சார்தலும் பகர்த லுற்றாம்.

இ—ள்: மன்னும் அன்பு உடையார் தெய்வ வாசகம் புகலும் ஆறும் - நிலைபெற்ற அன்பையுடைய திருவாதவூரடிகள் தெய்வத்தன்மை பொருந்திய திருவாசகம் பாடியருளுந்திறத்தையும்,—பன்னகம் புனைவோன் மேவும் பதி பல வணங்கும் ஆறும் - சர்ப்பத்தை ஆபரணமாகத் தரித்த சிவபெருமானுடைய ஸ்தலங்கள் பலவற்றைத் தரிசித்து வணங்குந்திறத்தையும்,—பொன்னின் அம்பலத்தில் எய்திப் புத்தரை வென்று - சிதம்பரத்திலே கனகசபையையடைந்து புத்தர்களைத் தருக்கத்திலே செயித்து,—மன்றன் அரும் பாத கமலம் சார்தலும் பகர்தல் உற்றாம் - சபாநாயகரது அருமையாகிய திருவடித்தாமரைகளையடையுந்திறத்தையும் யாம் கூறத்தொடங்கினோம். எ-று.

பதிகரணம்பற்றிநின்று செய்தமையிற் சிவவாக்கெனவே கொள்ளப் படுமென்பார் தெய்வவாசகமெனவும், விஷ்ணுவுக்கும் அடைதற்கருமை நோக்கி அருங்கமலபாதமெனவும் கூறினார். இச்செய்யுளிடைப்பிறவா லாய்வந்த புராணிகர்கூற்றென்க. (௧௫)

மண்சுமந்தசருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௩௪௪.

ட

திருவம்பலச்சருக்கம்.

வரந்தர விருந்தார் தம்மை வாதவூ ரிறைவர் போற்றிப்
பெருந்துறை நகரி லன்றிப் பிஞ்ஞகா புலியூர் மன்றிற்
பொருந்துவை முத்தி யென்று புகன்றதிங் கெவனோ வென்னத்
திருந்திய தவத்தாய் கேட்டி யென்றவர் செப்ப லுற்றார்.

இ—ள்: வரம் தர இருந்தார் தம்மை வாதவூர் இறைவர் போற்றி-அத்தருணத்துத் தமக்கு வரங்கொடுத்தருளும்பொருட் டங்ஙனம் வீற்றிருக்கும் பரமாசாரியரைத் திருவாதவூரடிகள் வணங்கித் துதித்து,—பிஞ்ஞகா - தலைக்கோலத்தையுடைய சுவாமீ,—பெருந்துறை நகரில் அன்றிப் புலியூர் மன்றில் முத்தி பொருந்துவை என்று இங்குப் புகன்றது எவனோ என்ன - திருப்பெருந்துறையாகிய இந்தப்புண்ணியக்ஷேத்திரத்தின் கணன்றிச் சிதம்பரத்துள்ள கனகசபையிலே நீ பரமுத்திபெறுவையென்று தேவரீர் அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருளியதற்குக் காரணம் என்கொலோவென்று அதிவிநயத்துடன் வினவ,—திருந்திய தவத்தாய் கேட்டி என்று அவர் செப்பல் உற்றார் - திருத்தமாகிய தவத்தையுடைய நம்மன்பனே அதனைக் கேட்கக்கடவையென்று பரமாசாரியர் இங்ஙனந் திருவாய்மலர்ந்தருளுவாராயினார். எ-று.

வரம்-விரும்பியது; வடமொழித்திரிபு எனைத்திருத்தொண்டரினும் இது கேட்டற்குப் பூர்வதவத்தாற் றிருந்தினை என்பார் திருந்தியதவத்தாய் கேட்டி என்றார். (௧)

இத்திலத் திடையே கீட மெடுத்துள விடத்தி லன்றி
வைத்துள விடத்தே யந்த வேட்டுவன் வடிவங் கொள்ளும்
வித்தக வுனக்கிங் கன்பான் மெய்யுணர் வுரைத்தே மேன்மை
யொத்திடுஞ் சிவாநு பூதி முத்தியம் பலத்தி லுண்டாம்.

இ—ள்: இத்தலத்து இடையே கீடம்எடுத்துள இடத்தில்அன்றி-இந்தப்பூமியின்கண்ணே புழுவானது தானெடுக்கப்பட்ட இடத்தின் கணன்றி,—வைத்துள இடத்தே அந்த வேட்டுவன் வடிவம் கொள்ளும்-வைக்கப்பட்ட இடத்தின்கண்ணேயே எடுத்த அவ்வேட்டுவனது வடிவத்தை அடையும், அதுபோல,—வித்தக-அநித்தியப்பொருளாகிய தனுகரணபுவனபோகமென்னும் பிரபஞ்சத்தானே நித்தியப்பொருளாகிய பரமுத்தியைச் சாதித்துப் பெறும் சதுரப்பாட்டையுடைய நன்மாணக்கனே,—இங்கு அன்பான் மெய்யுணர்வு உனக்கு உரைத்தேம்-நீ யெமக்கெதிர்ப்பட்ட இந்தஸ்தலத்தின்கண்ணே நின் அன்புகாரணமாக நாமுனக்கு மெய்ஞ்ஞானத்தை உபதேசித்தேம்,—மேன்மை ஒத்திடும் சிவாநுபூதி முத்தி அம்பலத்தில் உண்டாம்-மேன்மை பொருந்திய சிவாநுபூதியாகிய பரமுத்தி சிதம்பரத்தின்கணுள்ள கனகசபையிலே உனக்குளதாம். எ-று.

வேட்டுவன் பறந்துசஞ்சரிக்கு மோர்செந்துவின்பேதம். இதனை வேட்டைவாளி எனவும் வழங்குப. அநுபூதி அநுபவம். ஈண்டு வேட்டுவனுக்குப் பரமாசாரியரும், கீடத்துக்குத் திருவாதவூரடிகளும், வேட்டுவனெடுத்த இடத்துக்குத் திருப்பெருந்துறையும், வைத்த இடத்துக்கு அம்பலமுமாமென்க. "வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டுருவைத் தான் கொடுத்துக், கூட்டானே மண்போற் குளிர்ந்து." "மற்றோர்செந்து, பண்டைய வடிவந் தானே வேட்டுவ னுய்ப்பி றக்கும்" என்றார் பிறரும். இது வேற்றுப்பொருள்வைப்பென்னுமலங்காரம்; "முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப், பின்னொரு பொருளி னுலகறி பெற்றி, யேற்றிவைத்துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே" என்பதனுனறிக. (உ)

இடம்படு முடம்பின் மூலத் தெழுந்தநற் சுழுனை நாடி
யுடன்கிள ரொளியே யாகி யொளியிலஞ் செழுத்துமொன்றாய்
நெடுங்குழ லோசை யாகி நிலவுமவ் வோசை போயங்
கடங்கிய விடமே யென்று மாடுமம் பலம தாகும்.

இ—ள்: இடம் படும் உடம்பின் மூலத்து எழுந்த நல் சுழுனை நாடி உடன் கிளர் ஒளியே ஆகி-இடவிதாகிய இச்சரீரத்தின்கண் மூலாதாரத்தினின்று மெழுகின்ற நல்ல சுழுமுனாநாடியோ டொருங்கெழாநின்ற தேசோமயமாகியும்,—ஒளியில் அஞ்சு எழுத்தும் ஒன்றாய்-அவ்வொளியிலே ஸ்ரீபஞ்சாக்ஷரமும் ஏகாக்ஷராகாரமாகியும்,—நெடும் குழல் ஓசை ஆகி-நெடிய நாததாரையினியங்கு மொலியாகியும்,—நிலவும் அவ் ஓசை போய் அங்கு அடங்கிய இடமே-அதிசூக்குமமாய் விளங்கும் அவ்வோசை மேனோக்கிச்சென் றங்ஙனம் லயிக்குந்தானமே,—என்றும் ஆடும் அம்பலம் ஆகும்-நாம் அநவரததாண்டவஞ் செய்தருளுங் கனகசபையாகும். எ-று.

மூலாதாரம் ஆறுதாரத்துளொன்று. அது குதத்திற்கும் கோசத்திற்கும் மத்தி. அதற்கு வடிவு முக்கோணம். நிறம் மாணிக்கநிறம். அதிதெய்வம் கணபதி. சத்தி குண்டலி. அக்கரம் பிரணவம். அது நாலிதழ்க்கமலம்போல்வது. சுழுமுனை லலாடத்தானம். அதுவே புருவமத்தி. அதற்கு வடிவு வட்டம். நிறம் படிகநிறம். அதிதெய்வம் சதாசிவம். சத்தி மனோன்மனி. அக்கரம் யகாரம். அது மூன்றிதழ்க்கமலம்போல்வது. அஞ்செழுத்து மொன்றாதன் மேற்காட்டப்பட்டது; "நகார மகார சிகார நடுவாய், வகார யகார வாசி யெனவே, நகார மகார மிரண்டு மறுத்துச், சிகார முதல்வன் சிறந்து நின்றானே" என்பதனானுமறிக. ஓசைபோயடங்கியவிடம் சுத்தமாயை. இதுவே இறைவனுக்குப் பரிக்கிரகசத்தி. பரிக்கிரகசத்தி - வேண்டியபோது கைக்கொள்ளுஞ்சத்தி. இந்த லலாடஸ்தானமே பஞ்சகிருத்தியநடனத்திற்கிடமாகலின் ஓசைபோயடங்கிய விடமேயென்று மாடுமம்பலமதாகுமென்றார். இன்னும் இது உரைக்கிரமத்தானன்றி உபதேசக்கிரமத்தா னறியத்தகும் இரகசியப்பொருளாகலிற் குருமுகமாகக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்துகொள்க. முன்வரும் இன்னோரன்ன பிறவுமன்ன. (௩)

எண்டரும் பூத மைந்து மெய்திய நாடி மூன்று
மண்டல மூன்று மாகி மன்னிய புணர்ப்பி னாலே
பிண்டமு மண்ட மாகும் பிரமனா டைவ ராகக்
கண்டவர் நின்ற வாறு மிரண்டினுங் காண லாமே.

இ—ள்: எண் தரும் பூதம் ஐந்தும் - எண்ணத்தகு மைம்பூதங்களும்,—எய்திய நாடி மூன்றும் - பொருந்திய இடை பிங்கலை சுழுமுனையென்னும் நாடிகண்மூன்றும்,—மண்டலம் மூன்றும் ஆகி மன்னிய புணர்ப்பினாலே - சோமசூரியாக்கினிகளென்னும் மண்டலத்திரயங்களுமாகி ஈரிடமும் நிலைபெற்ற சம்பந்தத்தினாலே,—பிண்டமும் அண்டம் ஆகும் - பிண்டமும் அண்டமும் தம்முளொப்பனவாம்,—பிரமனாடு ஐவர் ஆகக்கண்டவர் நின்ற ஆறும் இரண்டினும் காணலாம் - பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவனெனப் பகுக்கப்பட்ட பஞ்சகர்த்தாக்களும் நிற்கின்ற முறைமையும் இவ்விரண்டிடத்தினுமொப்பக் காணலாம். எ-று.

ஐம்பூதம் வெளிப்படை. நாடிகள் மூன்றனுள் இடை இடமூக்கிலும், பிங்கலை வலமூக்கிலும், சுழுமுனை மத்தியிலும் நிற்பன. மண்டலமூன்றனுட் சந்திரமண்டலம் மூலாதாரந்தொடங்கி ஒவ்வோரக்கரத்தை முற்கொண்டு சிரமத்தியிற் கோடிசூரியப்பிரகாசமாய் விளங்கும். சூரியமண்டலம் இருதயகமலத்தில் அறுகோணமாய் எட்டிதழ்க்கமலம்போல விளங்கும். அக்கினிமண்டலம் பிருதிவியும் அப்புவுங்கூடின இடத்துச் சதுரமாயும் நடு முக்கோணமாயும் நாலிதழ்க்கமலம்போல விளங்கும். பிண்டம் சரீரம். அண்டம் பிரமாண்டமாகிய உலகம். பிரமனாடைவராகக்கண்ட

வர் பிண்டத்தின்கணின்றவாறுவது சுவாதிட்டானத்திலே பிரமாவும், மணிபூரகத்திலே விஷ்ணுவும், அநாகதத்திலே உருத்திரனும், விசுத்தியிலே மகேசுரனும், ஆஞ்ஞையிலே சதாசிவனுமாக நிற்றலாம். சுவாதிட்டானம் கோசத்திற்கும் நாபிக்கும் மத்தி. மணிபூரகம் நாபிக்கமலம். அநாகதம் இருதயகமலம். விசுத்தி கண்டஸ்தானம், ஆஞ்ஞை லலாடஸ்தானம். இது பிண்டதரிசனம். இனி அண்டத்தின்கண்ணே திருவாரூர் மூலாதாரஸ்தலமும், திருவானைக்கா சுவாதிட்டானஸ்தலமும், திருவண்ணாமலை மணிபூரகஸ்தலமும், சிதம்பரம் அநாகதஸ்தலமும், திருக்காளத்தி விசுத்திஸ்தலமும், காசி ஆஞ்ஞைத்தலமுமாம். இது வியஷ்டியபிமானமென்க. பிண்டத்தின்கண் மூலாதாரமும்பிறவுமுண்மைபோலப் பிரமாண்டத்தின்கண் மூலாதாரமும் பிறவுமுண்மைதெரித்துக்காட்டியவாறு. (௪)

ஆதலா லிந்த வண்டத் தறிவரும் பொருளா யென்றுந்
தீதிலா மூல நாடிற் றிகழ்சிவ லிங்க மேனி
மீதிலா மந்த நாத வெளியின்மே லொளிமன் றங்குக்
காதலான் மடவாள் காணக் கருத்துற நிருத்தஞ் செய்வேம்.

இ—ள்: ஆதலால் - இங்ஙனமாகலான்,—இந்த அண்டத்து - இப்பிரமாண்டத்தின்கண்ணே,—என்றும் அறிவு அரும் பொருள் ஆய்த் தீது இலா மூலம் நாடில் - எஞ்ஞான்று மெளிதினறிந்துகோடற்கரிய பொருளாய்த் தீதற்ற மூலத்தை ஆராயுமிடத்து,—திகழ் சிவலிங்க மேனி - அது பிரகாசியாநிற்குஞ் சிவலிங்கவடிவமேயாம்,—மீதில் ஆம் அந்த நாதவெளியின் மேல் ஒளி மன்று - மேலாகவுள்ள அந்தப்பரநாதவெளியிற் சுத்த மாயாமயமாகிய கனகசபை விளங்குகின்றது,—அங்குக் காதலான் மடவாள் காணக் கருத்து உற நிருத்தம் செய்வேம்.—அச்சபையின்கண்ணே ஆன்ம கோடிகளின்மீது மூகிழ்த்த பெருங்கருணைத்திறத்தினாலே சிவகாமி தரிசிக்கப் பக்குவிகளது கருத்தின்கட் பதியுமாறு நாம் அநவரத நடனஞ் செய்வேம். எ-று.

ஈண்டுச் சிவலிங்கமேனியென்றது நாதவிந்துக்களின் ஐக்கியத்தானமாகிய சாதாக்கியத்தையென்க. சிவகாமி சிற்சத்தி. மூலம் மன்றென இயைத்தலுமொன்று.

(௫)

அந்தநன் னடமே தென்னி னைந்தொழி னிகழ்த்த லாகும்
பந்தம தகற்று மிந்தப் படிவமு மதுவே யாகும்
வந்துல கத்தில் யாருங் காண்பரேல் வழுவா முத்தி
தந்தரு ளளிக்குந் தெய்வ தலமுமத் தலமே கண்டாய்.

இ—ள்: அந்த நல் நடம் ஏது என்னில் - அந்தத்திருநடனந்தான் யாதென்று நீ வினவின்,—ஐந்தொழில் நிகழ்த்தல் ஆகும் - சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியமுஞ் செய்தலேயாம்,—பந்தம் அகற்றும் இந்தப் படிவமும் அதுவே ஆகும் - பக்குவான்

மாக்களது பாசக்கட்டையவிழ்க்கும் இக்குருவடிவமும் அந்நடனகர்த்திரு த்துவ வடிவமேயாம்.—உலகத்தில் யாரும் வந்து காண்பரேல் வழுவா முத்தி தந்து அருள் அளிக்கும் தெய்வ தலமும் அத்தலமே கண்டாய் - இவ்வுலகின்கட் பக்குவிகள் யாவராயினும் வந்துதரிசிக்கிற்றவருறு முத்தியை அவர்கட்கீந்து திருவருள்சுரக்குந் தெய்வத்தன்மைபொருந்திய மகாக்ஷேத்திரமும் அந்தச்சிதம்பரமேயென்றறிவாயாக. எ-று.

பஞ்சகி[illegible] சிருட்டி ஆன்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களை முதற்காரணத்தினின்றுந் தோற்றுவித்தலும், திதி தோற்று விக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை நிறுத்தலும், சங்காரம் தனு கரண புவனங்களை முதற்காரணத்தில் ஒடுக்குதலும், திரோபவம் ஆன்மாக் களை இருவினைப்பயன்களாகிய போக்கியப்பொருள்களில் அமிழ்த்து தலும், அநுக்கிரகம் ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்கலுமென மேற்கூறியவைகளாம். முதற்காரணம் மாயை. பஞ்ச கிருத்திய நிருத்தநிலையை, "தோற்றந் துடியதனிற்றோயுந்திதியமைப்பிற், சாற்றியிடு மங்கியிலே சங்கார—மூற்றமா, யூன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி, நான்றமலர்ப் பதத்தே நாடு" என்பதனுனுமறிக. ஏனை லௌகிக நடனம்போலன்றி வைதிக நடனமாகலின் நன்னடமென்றும், முன் நங்குலக்கவுரிகாண நடநவிலுதலினுலும் என்றூராகலின் அதற் கேற்ப ஈண்டுப் பந்தமதகற்று மிந்தப்படிவமுமதுவேயாகுமென்றும், தரி சிக்க முத்திதருந்தலமாகலின் வந்துலகத்தில் யாருங் காண்பரேல் வழுவா முத்தி, தந்தருளளிக்குந் தெய்வதலமுமத்தலமே என்றும் கூறினுர். கர்த் திருத்துவம் செய்பவனதுதன்மை. (௬)

தாவரும் பணில நேமி தரிப்பவர் பிரம ரென்போர்
யாவரும் புலிபாம் பென்னு மிருவரும் புரத்தி னுள்ளார்
மூவருந் தெய்வ மூவா யிரவரு முனிவர் தாமுந்
தேவருந் தொழுது போற்று மெல்லையத் தில்லை மூதூர்.

இ—ள்: தா அரும் பணிலம் நேமி தரிப்பவர் பிரமர் என்போர் யாவரும் - கற்பங்கடோறுமுள்ள கேடற்ற சங்குசக்கரங்களைத் தாங்கிய விஷ்ணு பிரமாக்களனைவரும்,—புலி பாம்பு என்னும் இருவரும் - வியாக் கிரபாதர் பதஞ்சலியென்னு முனிவரிருவரும்,—புரத்தில் உள்ளார் மூவ ரும் - தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்னும் திரிபுரத்தசுரர் மூவரும்,—தெய்வ மூவாயிரவரும் - தெய்வத்தன்மைபொருந்திய தில்லை வாழந்தணர் மூவாயிரவரும்,—முனிவர் தாமும் - நாற்பத்தெண்ணுயிரமிரு டிகளும்,—தேவரும் தொழுது போற்றும் எல்லை - முப்பத்துமுக்கோடி தேவர்களும் தரிசித்து வணங்கித் துதிக்கப்பெறும் மகாக்ஷேத்திரமாயுள் ளது,—அத் தில்லை மூதூர் - அந்தப் பழைய தில்லைமாநகரம். எ-று.

இன்னுமெண்ணின்கணின்ற எச்சவும்மையானே உபமன்னியு இர ணியவன்மாமுதலாயினேரையுந் தழீஇக்கொள்க. எல்லை-இடம். (எ)

மற்றிவை தெளிவா யென்று பணிந்தெதிர் வணங்கி நிற்பார்
நெற்றியி னீறு சாத்தி நிற்றியென் றகல நில்லார்
சற்றிடஞ் சென்றார் பின்னு மிங்கிவர் தன்மை கண்டு
கற்றையஞ் சடையார் நின்று கண்ணருள் செய்து போந்தார்.

இ—ள்: இவை தெளிவாய் என்று - இச்சிதம்பர மகான்மியங்களை நீ நிச்சயித்தறிந்து கொள்வாயாகவென்று போதித்து,—எதிர் பணிந்து•வணங்கி நிற்பார் நெற்றியில் நீறு சாத்தி நிற்றி என்று அகல - தம்முது சந்நிதியிலே வணங்கி யெழுந்தொல்கிநிற்குந் திருவாதவூரடிகளது நெற்றியில் விபூதி தரித்து நமது வாற்சல்லிய குழந்தாய் இனி ஈண்டு நில்லென்று பரமாசாரியர் அக்கொன்றைமர நீழலை விட்டு நீங்குதலும்,—பின்னும் நில்லார் சற்று இடம் சென்றார் - திருவாதவூரடிகள் பின்னருமாண்டுப் பிரிந்து நிற்கமாட்டாதவராய்ச் சிறிது தூரம் பின்றொடர்ந்து சென்றனர்,—கற்றை அம் சடையார் இங்கிவர் தன்மை கண்டு நின்று கண் அருள் செய்து போந்து - அப்பொழுது தொகுதியாகிய சடையையுடைய சிவபெருமானனவர் இவரது தீவிரதாபக்குவத்தைக்கண்டு சிறிது தங்கிநின்று கிருபாநோக்கஞ்செய்துசென்று. எ-று.

மற்று அசைநிலை. இங்கிவர் ஒரு சொன்னீர்மைத்து. ஆசாரியரோடு சம்பாஷிக்கும்போது சீடர் சரீரம் ஒல்கி நிற்கவேண்டுமென்பது "கைகுவித்து மெய்வளைத்துக் கண்ணியருங் காரியமும், பையப் பகர்க பயந்து" என்பதனானுமறிக. (அ)

கண்ணெதிர் நடக்கு மாறு கண்டுளங் களித்து நிற்கும்
புண்ணியர் காண முன்னர் மறைந்தனர் புலியூ ரையர் [டு
துண்ணென விரக்க மெய்திக் தொழுதுகை தலைமேல் கொண்
நண்ணரு மன்பர் கூட்ட நணுகினர் வாத வூரர்.

இ—ள்: புலியூரையர் - சபாநாயகரானவர்,—கண் எதிர் நடக்கும் ஆறு கண்டு உளம் களித்து நிற்கும் புண்ணியர் காண முன்னர் மறைந்தனர் - தாம் அவரது கண்ணுக்கெதிரே நடக்குமாற்றைக்கண்டு களித்துப்பின்றொடர்தலைமறந்து நிற்கும் புண்ணியபுருஷராகிய திருவாதவூரடிகள் காண எதிரே அந்தர்த்தானமாயினார்,—வாதவூரர் துண்ணென இரக்கம் எய்திக் கை தலைமேல் கொண்டு தொழுது - அப்பொழுது திருவாதவூரடிகள் விரைவாகமனமிரங்கிக் கைகளைக்கூப்பிச் சிரசில்வைத்துக் கும்பிட்டு,—நண் அரும் அன்பர் கூட்டம் நணுகினர் - நம்போலும் அசத்தர்களால் நணுகுதற்கரிய சிவபத்தர்களது திருக்கூட்டத்தையடைந்தருளினார். எ-று.

மறந்தென்பது களித்தென்பதுபற்றி வருவிக்கப்பட்டது. தம்பிரிவாற்றாது பின்றொடர்ந்து செல்லுந் தமது வாற்சல்லிய குழந்தையாகிய திருவாதவூரடிகள் காணுநிருக்கத் தாமறைதல் தயாநிதியாகிய தமதிரக்க

மூடைமைக்குச் சிறிதுந்தகாமையின், அவரேகண்டு களித்தயர்ந்து நிற்கும் வண்ணம் நடந்தருளினார் என்பார் அந்நடையை விதந்து கண்ணெதிர் நடக்குமாறென்றும், அவர் காணுதிருக்கத் தாமறைதல் தம்மிரக்கமுடைமைக்கிழுக்காகலின் அநுசாராமைப்பொருட்டு அவர்க்கவ்வயர்ச்சி நீங்கி நினைவுகூருமவ்வெல்லைக்கண் முற்பிற்பாடற எதிரே மறைந்தருளினாரென்பார் புண்ணியர் காணமுன்னர் மறைந்தனர் என்றும், அதன்பின் அவர்காட்சிக்ககப்படாமைபற்றிச்சிறிதிரங்கினும் அன்னைநிகழ்ச்சிகளான் மற்றெவரினுந் தம்மாட்டருளுடையரென்பது தெற்றென விளக்குதலின், அதுவே பற்றுக்கோடாக அவ்விடைநெடிது நின்று பெரிதும் வருந்தாது திருவருடுணையாகச் சிவாஞ்ஞைப்படி திருத்தொண்டர் கூட்டத்தை விரைவினடைந்தாரென்பார் துண்ணெனவிரக்கமெய்தித் தொழுது கைதலை மேல்கொண்டு நண்ணருமன்பர்கூட்ட நணுகினர் என்றுங் கூறினார். (கூ)

அருந்தவ மகலா நெஞ்சத் தன்பருந் தாமு மந்தத்
திருந்திய குருந்தின் கீழோர் தெய்வபீ டிகையுஞ் செய்து
வரந்தரு செய்ய பாத மலர்வகுத் திறைஞ்சி யாங்க
ணிருந்தன ரிருந்த நாளி லெய்திய தியம்ப லுற்றும்.

இ—ள்: அருந் தவம் அகலா நெஞ்சத்து அன்பரும் தாமும் - அரியதவவொழுக்கம்நீங்காத மனத்தையுடைய திருத்தொண்டர்களுந் தாமுமாக,—திருந்திய அந்தக் குருந்தின்கீழ் ஓர் தெய்வ பீடிகையும் செய்து - மேலே விசேடசம்பவங்களெல்லாந் தன்மாட்டு நிகழப்பெறுதற் கேதுவாகிய பூர்விகதவத்தாற் றிருந்திய அக்குருந்தமரத்தின்கீழே தெய்வத்தன்மைபொருந்திய ஒருயோகபீடமுஞ்செய்து,—வரம் தரு செய்ய பாத மலர் வகுத்து இறைஞ்சி ஆங்கண் இருந்தனர் - அதன்மீதேதமக்கு வரத்தைத்தருஞ் செந்தாமரைமலர்போலுந் திருவடிகளை நிருமித்தருச்சனை செய்து வணங்கிக் கொண்டவ்விடத்தினிதிருந்தார்கள்,—இருந்த நாளில் எய்தியது இயம்பல் உற்றும் - அவ்வாறிருக்குங் காலத்து நிகழ்ந்த சரித்திரத்தையாம் கூறத்தொடங்கினோம். எ-று.

தவம் ஆகுபெயர். பீடிகையுமென்னுமும்மை எதிரதுதழீஇயிற்று. வரந்தருசெய்யபாதமென்றது பரமாசாரியரது திருவடிகளை. (கo)

வெண்பிறை முடித்த வேணி விண்ணவ ரன்பி லாத
பண்பின ரெனினுந் தம்மைப் பாடினர்க் கிரங்கு வாரென்
றெண்பெறு நமச்சி வாய வாழ்கவென் றெடுத்து நாதன்
வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகல லுற்றார்.

இ—ள்: (திருவாதவூரடிகளானவர்) வெண் பிறை முடித்த வேணி விண்ணவர் - வெண்மையாகிய பிறையைப் பிஞ்சுகமாக முடித்த சடையையுடைய சிதாகாசரூபராகிய நமதிறைவர்,—அன்பு இலாத பண்பினர் எனினும் தம்மைப் பாடினர்க்கு இரங்குவார் என்று - தம்மிடத்தன்

பற்ற அபக்குவர்களாயினும் தம்மைப் பாடித்துதிப்பவர்களுக்குத் திருவுள மிரங்கி யநுக்கிரகஞ் செய்தருளுவாரென்று கடைப்பிடித்து,—எண் பெறு நமச்சிவாய வாழ்கவென்றெடுத்து - பெரியோர்களால் நன்குமதிக் கப்படுகின்ற "நமச்சிவாய வாஅழ்க" என்று தொடங்கி,—நாதன் வண் பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகலல் உற்றார் - எப்பொருட்கு மிறைவ ராகிய சிவபெருமானது வண்மையையுடைய திருவடிகளைத் துதித்து ஞானபாதப்பொருளையுடைய சிவபுராணமாகிய திருவாசகத்தைப் பாடி யருளுவாராயினார். எ-று.

விண்ணவர் என்னும் பலர்பால் செய்யுமென்னும் முற்றுக்கொள்ளா தாகலின் இரங்குமென்பது பாடமன்றென்க. உம்மை "மறப்பினு மோத்துக் கொளலாகும்" என்புழிப்போல எதிர்மறைக்கண் வந்தது. தம்மை வழிபட்டார்க்கு வேண்டிய வேண்டியாங்கியும் பதமாகலின் வண் பதமென விசேடித்தார். (கக)

உ

சிவமயம்.

சிவபுராணம்.

சிவனதநாதிமுறைமையான பழமை.

(அஃதாவது சிவனது அருவநிலை கூறுதல்.)

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

கலிவெண்பா.

"நமச்சிவாய வாஅழ்க நாதன் றாள்வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
* * * * * * * * * * * * * *
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து."

திருச்சிற்றம்பலம்.

சொற்பதங் கடந்து நின்ற சோதிவந் தருளை நல்கு
மற்புத மறியே னென்று மதிசயங் கண்டா மென்று [றுஞ்
மெற்பொலி சடையாய் நெஞ்சங் குழைத்தனை யென்னையென்
சிற்பரன் றனது பாதஞ் சென்னியின் மன்னு மென்றும்.

இ—ள்: சொல் பதம் கடந்து நின்ற சோதி வந்து அருளை நல்கும் அற்புதமறியேன் என்றும் - சொல்லும்பொருளுமாகிய இருகூற்றுப் பிரபஞ்சங்கட்கும் அப்பாற்பட்டுச் சுத்த மாயாதீதமாய் நிற்கும் நின்மல வொளிவடிவாகியசிவம்தானேவந்து திருவருள்சுரந்த "அற்புதமறியேனே" என்று அற்புதப்பத்தும்,—அதிசயங்கண்டாம் என்றும் - "தன்னடியாரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே" என்று அதிசயப்பத்தும்,—எல் பொலி சடையாய் நெஞ்சம் என்னைக் குழைத்தனை என்றும் - செவ்வொளியாற் பொலிகின்ற சடையையுடையவரே மனம் "என்னைக் குழைத்தாயே" என்று குழைத்த பத்தும்,—சிற் பரன் தனது பாதம் சென்னியில் மன்னும் என்றும் - ஞானதீதராகிய சிவபெருமானுடைய "சேவடிக்கணஞ் சென்னி மன்னிச் சுடருமே" என்று சென்னிப்பத்தும். எ - று.

அற்புதப்பத்து முதலியவற்றைத் திருவாசகத்துட் காண்க; ஈண்டு விரிக்கின் மிகவும் பெருகுமாகலினமைக. (௧௨)

ஐயனே நின்னைக் காண வாசைப்பட் டேனு னென்று
முய்கிலேன் வாழே னென்று முனக்கடைக் கலமே யென்றுஞ்
செய்யுமா றறியே னந்தோ செத்திலே னென்றும் பொய்யர்
பொய்யனே நின்பொற் பாதம் புணருநா ளெந்நா ளென்றும்.

இ—ள்: ஐயனே நின்னைக் காண நான் ஆசைப்பட்டேன் என்றும் - சுவாமீ தேவரீரைத் தரிசிக்க அடியேன் "ஆசைப்பட்டேன் கண்டா யம்மானே" என்று ஆசைப்பத்தும்,—உய்கிலேன் வாழேன் என்றும் - தமியேனுயிருய்யேனும் "வாழ்கிலேன் கண்டாய் வருகவென் றருள்புரிவாயே" என்று வாழாப்பத்தும்,—உனக்கு அடைக்கலமே என்றும் - "அடியேனுன் னடைக்கலமே" என்றிறுதிதோறுந் தந்து அடைக்கலப்பத்தும்,—செய்யும் ஆறு அறியேன் செத்திலேனந்தோ என்றும் - இங்ஙனஞ் செயற்பாலது இன்னதென்றறியாது மயங்குகின்றேன் "செத்திலேனந்தோ" என்று செத்திலாப்பத்தும்,—பொய்யர் பொய்யனே நின் பொன்பாதம் புணரும் நாள் எந் நாள் என்றும் - நிரீச்சுரவாதிகட்கு நிரீச்சுரராய் நிற்பவரே தேவரீரது பொன்போலுந் திருவடிகளை அடியேன் "புணர்ந்து" இருப்பதினி யென்னாளோவென்று புணர்ச்சிப்பத்தும். எ - று.

ஈண்டுப் பொய்ச்சமயம் என்றது நிரீச்சுரவாதத்தோடு, ஏனை வைதிகப் புறச்சமயங்களை என்றலுமொன்று. (௧௩)

ஆதரித் தழைக்கி லிங்கே யதெந்துவென் றருளா யென்றும்
போதமிக் குடைய பாட லிவையிவை புகன்ற பின்னர்
மாதிரத் தெவரும் போற்ற வருந்திரு வார்த்தை யெண்ணந்
தீதறச் சிறந்த வெண்பாத் திகழ்மூ நான்கு மோதி.

இ—ள்: இங்கே ஆதரித் தழைக்கி லதெந்துவென் றருளாய் என்றும் போதம் மிக்கு உடைய பாடல் இவை இவை புகன்ற பின்னர் - இவ்

விடத்து "அடியே னுதரித்தழைத்தா லதெந்துவேயென் றருளாயே" என்றருட்பத்துமாகிய ஞானபாதப்பொருளை மிகவுமுடைய அத்தியற்புத அதிமதுர சுத்தச் செந்தமிழ் வேதமாகிய இவ்விவற்றைப் பாடியருளிய பின்னர்,—மா திரத்து எவரும் போற்ற வரும் திருவார்த்தை - மிகத்திட்பத்துடன் அட்டதிக்கின்கணுள்ள எவருந் துதிக்கத்தகும் திருவார்த்தையும்,- எண்ணம் - எண்ணப்பதிகமும்,—தீது அறச் சிறந்த வெண்பா ஏழும் நான்கும் ஓதி - குற்றமறச் சிறந்த வெண்பாப் பதினொன்றுமாகிய திருவாசகங்களையும் பாடியருளி. எ - று.

ஏழும் நான்குமென்ப திடைச்சொற்றொடர். ஏழுநான்கென்பது இருபத்தெட்டெனப்பொருள்படுவதல்லது ஏழும் நான்குமெனப் பொருள்படாமையின், அது பாடமன்றென்க. திகழ்வெண்பா என வியையும். மாதிரம் இரட்டுறமொழிதல். எந்துவென்பது மலைநாட்டுவழக்கு; என்னவென்னும் பொருட்டென்க. (கசு)

இயல்புடன் மொழியும் பள்ளி யெழுச்சி யேசறவு நெஞ்சத்
தயர்வற வுரைக்கு மின்னே ரனைய பூங்கழல் களொன்று
முயிருணி யெனுநற் செய்யுள் பிரார்த்தனை யோங்கு நீதி
வியனெடுங் கூடற் பாண்டி விருத்தமெய்த் தமிழுங் கூறி.

இ—ள்: இயல்பு உடன் மொழியும் பள்ளி எழுச்சி - விதிப்படி ஓதத்தகுந் திருப்பள்ளியெழுச்சியும்,—ஏசறவு - திருவேசறவும்,—நெஞ்சத்து அயர்வு அற என்றும் உரைக்கும் மின்னேரனையபூங்கழல்கள் - சிவபத்தர்களாயினோர் தம்மனத்தின்கணுள்ள பிறவித்துன்பநீங்க எப்பொழுதும் பாராயணஞ் செய்யத்தகும் "மின்னேரனையபூங்கழல்களடைந்தார் கடந்தார்வியனுலகம்" என்னும் சொற்றொடரை முதலாகவுடைய ஆனந்தமாலையும்,—நல் செய்யுள் எனும் உயிருணி - நல்ல பத்தியரூபமாகிய உயிருண்ணிப்பத்தும்,—பிரார்த்தனை-பிரார்த்தனைப்பத்தும்,-ஓங்கு நீதி வியல் நெடும் கூடல் விருத்தம் பாண்டி மெய்த்தமிழும் கூறி - உயர்வாகிய நீதியினாலே வியக்கற்பாலதாகிய நெடிய மதுரையைக்குறிக்கும் விருத்தமாகிய திருப்பாண்டிப்பதிகமுமென்னும் மெய்ப்பொருளையுடைய திராவிடவேதமாகிய திருவாசகங்களையுந் திருப்பெருந்துறையின்கண்ணே திருவாய்மலர்ந்தருளி. எ-று.

இவற்றுள் எண்ணப்பதிகமும் ஆனந்தமாலையுந் தில்லையிலருளிச்செய்யப்பட்டனவென்பர் திருவாசகக் கருத்துரை யாசிரியரென்க. உயிருண்ணி என்பது பசுபோதத்தைச் சிவபோதம் விழுங்குவதென்னும் பொருட்டாகலின் அது விளக்குதற்கு நற்செய்யுளென விசேடித்தார். பண்டாயநான்மறை என்னும் திருவாசகம் ஈண்டு ஆசிரியரால் எடுத்துரைக்கப்பட்டிலது. (கரு)

வேறு.

மருவுந் தொண்டருடன் கூடி வைகிச் சிலநாட் செல்லமுதற்
பரமன் சொல்லும் படியேபின் பயிலும் பொய்கைத் தழல்கண்டு
கருதுந் திருவஞ் செழுத்தோதிக் காணக் கிளருங் கனன்மீது
விரவும் பேரன் புடையார்க ளெல்லாஞ் சென்று வீழ்ந்தார்கள்.

இ—ள்: மருவும் தொண்டர் உடன் கூடி வைகிச் சிலநாள் செல்ல—மாணிக்கவாசகசுவாமிகள் அக்குருந்தின் கீழ்வசிக்குந் திருத்தொண்டர்களோடு கூடி வசிக்கப்பெற்றுச் சிலதினஞ்செல்ல,—முதல் பரமன் சொல்லும் படியே - முன்னரே பரமாசாரியர் அருளிச்செய்த பிரகாரமே,—பின் பொய்கைப் பயிலும் தழல் கண்டு - பின்பு தடாகத்திற்றோன்றும் ஞானக்கினியைக் கண்டு,—கருதும் திரு அஞ்செழுத்து ஓதி - உயிர்க்குறுதுணையாகக் கருதப்படும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்துக்கொண்டு,—காணக் கிளரும் கனல் மீதே - காணும்படி சுவாலிக்கும் அவ்வக்கினியிலே,—விரவும் பேர் அன்பு உடையார்கள் எல்லாம் சென்று வீழ்ந்தார்கள் - அக்கடவுளிடத்துச் சென்றுகலக்கும் பேரன்பையுடைய திருத்தொண்டர்களெல்லாருஞ் சென்று குதித்தார்கள். - எ-று.

இப்பொய்கையிலே மிகச்சுவாலிக்கும் அக்கினியின்மீது முன்னைச் சிவவாக்கை விசுவசித்து அதனால் ஒருசிறிதுமச்சமின்றிச் சிவத்தியானத்தோடு எல்லாரும்போய் வீழ்ந்தார்களென்பார் முன்னம் பரமன்சொல்லும் படியே பின் பயிலும் பொய்கைத்தழல்கண்டு, கருதுந் திருவஞ்செழுத்தோதிக் காணக் கிளருங் கனன்மீது, விரவும் பேரன்புடையார்களெல்லாஞ் சென்று வீழ்ந்தார்களென்றார். இத்தீர்த்தம் அக்கினிதீர்த்தமெனவும் சத்திதீர்த்தமெனவும் பெயர்பெறும். இது சிவாலயத்திற்குத் தென்மேற்கிலுள்ளது; சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணக்கினியினாலுண்டாக்கியது. இவ்வக்கினி சத்தபாதலங்களை ஊடுருவிநிற்கும். இன்னும் இந்தஸ்தலத்திலே சிவதீர்த்தம் முதலிய எட்டுத் தீர்த்தங்களுள்ளன. இந் நவதீர்த்தங்களும் சிவமுதற் பிரமா ஈறாகிய நவந்தருபேதமயமாமென்க. ஈண்டுச் சுவாலித்த அக்கினி ஞானக்கினி என்பது பரவருஞானவனல் சேர்வித்து என முன்வருவதனானுமறிக. (கசு)

வீழ்ந்த போதிற் புலியூரர் விடைமே லேறிக் கவுரியுடன்
சூழ்ந்த இமையோர் மலர்சிந்தித் தொழவிண் ணிடையே தோன்றுதலு
மாழ்ந்த தடத்துட் கனன்மூழ்கு மன்ப ரடங்கத் துயர் நீங்கி
வாழ்ந்து வணங்கிக் கணநாத வடிவாய்த் திருமுன் வந்தார்கள்.

இ—ள்: வீழ்ந்த போதில் - அக்கினிப்பிரவேசஞ் செய்தசமயத்தில்,—புலியூரர் கவுரி உடன் விடை மீது ஏறி - சபாநாயகர் சிவகாமியம்மையோடு இடபாரூடராகி,—அங்கு இமையோர் சூழ்ந்து மலர் சிந்தித் தொழ - அங்கே முப்பத்துமுக்கோடி தேவர்களும் தம்மைச்சூழ்ந்து புஷ்

பாஞ்சலிசெய்து வணங்க,—விண்ணிடையே தோன்றுதலும் - ஆகாயத்திலே பிரசன்னமாதலும்,—ஆழ்ந்த தடத்துள் கனல் மூழ்கும் அன்பர் அடங்கத் துயர் நீங்கி வாழ்ந்து வணங்கி - ஆழமாகிய அத்தடாகத் தக்கினியிற் பிரவேசித்த திருத்தொண்டர்களெல்லாம் பிரிவாற்றாமையான் வந்த துன்பத்தை விட்டுநீங்கிப் பேரின்பவாழ்வையடைந்து நமஸ்கரித்து,—கணநாத வடிவாய்த் திருமுன் வந்தார்கள் - பழைய சிவகணநாதர்களாகிச் சந்நிதியிலே வந்துசேர்ந்தனர். எ-று. (கஎ)

துரியத் தலையிற் பயில்வாருந் தொழுதங் கெழுவார் முகநாடி
யொருசற் றகலா தமர்நீரிங் கொழியத் தனிநா மெய்தியதுங்
கரையிற் றிரைபோய் விழவீசுங் கழுநீர் வாசங் கமழ்வாவி
யெரியிற் புகுவீ ரென்றதுவும் யாதோ வெனினிங் கிதுவாகும்.

இ—ள்: துரியத் தலையில் பயில்வாரும் அங்குத் தொழுது எழுவார் தம்மை நோக்கி-நின்மலதுரியமுடிவில் விளங்குஞ் சிவபெருமானும் அங்கே தம்மை வணங்கி யெழுகின்ற திருத்தொண்டர்களைப் பார்த்து,—ஒரு சற்று அகலாது அமர் நீர் இங்கு ஒழியத் தனி நாம் எய்தியதும் - ஒரு சிறிதுமெம்மைவிட்டகலாத நீரிங்ககன்றிருப்பத் தனித்துநாங் கைலாசத்திற்குச் சென்றமையும்,—கரையில் திரை போய் விழவீசும் கழுநீர் வாசம் கமழ் வாவி எரியில் புகுவீர் என்றதுவும் - கரையின்கண்ணே திரைபோய் விழும்படி வீசுகின்ற கழுநீரினது நறுமணங்கமழும் இத்தடாகத்திலே தோன்றும் அக்கினியிற் பிரவேசியுங்களென்று உமக்கு நாங்கூறியதும்,—யாதோஎனின் - யாதுகாரணம்பற்றியெனின்,—இங்கு இது ஆகும் - அது கீழ்க்கூறும் இதுவாகும். எ-று.

வீசும்வாவி கமழ்வாவியெனத் தனித்தனிசென்றியையும். இதுவாகும் என்பதை முன்வரும் விடைகளிரண்டோடுந் தனித்தனி கூட்டுக. துரியம் நான்காமவஸ்தை. அதன்முடிவெனவே ஐந்தாமவஸ்தையாகிய துரியாதீதமென்றதாயிற்று. துரியமாவது பிராணவாயுவும் புருடனுமாகிய இரண்டுகருவிகளுடன் ஆன்மா நாபித்தானத்துநிற்கும் அவசரம். துரியாதீதமாவது ஆன்மா புருடனோடு மூலாதாரத்து நிற்கும் அவசரம். இது கீழாலவத்தைக்கிரமமென்க. இனி மேலாலவத்தைக்கிரமத்திலே நின்மலதுரியமாவது ஆன்மா கேவலம்நீங்கித் திருவருளினாலே தன்னையும் அருளையுங்கண்டு அவ்வசத்ததாய் நிற்பதாம். நின்மலதுரியாதீதமாவது ஆன்மா சிவத்தைத் தரிசித்துச் சிவானந்தத் தழுந்தலாம். ஈண்டுத் துரியத்தலை என்றது இம்மேலாவத்தையில் நின்மலதுரியாதீதத்தையென்க. (கஅ)

வேறு.

உத்தம னென்னுந் திருவாத வூரனை மன்னும் புலியூரிற் [கிற்
புத்தரை வெல்லும் படிநாமிப் புவிமிசை வைத்தோம் யாமே
சித்த மயர்ந்தே துயர்கூருஞ் செய்திய துமென் பதுதேரா
வித்தல மீதே சின்னாளிங் கெம்முடன் வாரா திருமென்றோம்.

இ—ள்: உத்தமன் என்னும் திருவாதவூரனை மன்னும் புலியூரில் புத்தரை வெல்லும்படி நாம் இப் புவி மிசை வைத்தோம் - உத்தமபுருஷனாகிய திருவாதவூரனை நிலைபெற்ற சிதம்பரத்தின்கண்ணே புத்தரை வாதில் வெல்லும்படி உம்முடன் வாராது தவிர்த்து நாம் இப்பூமியின்கணிருத்தினேம்.—சித்தம் அயர்ந்து துயர் கூரும் செய்தியன் ஆம் என்பது தேரா - அங்ஙனம் யாமெல்லாம் பிரியின், அவன் மனநொந்து துன்பமிகுந்தன்மையை யுடையனுமென்னு முண்மையையறிந்து,—எம்முடன் வாராது இத்தலமீதே சில் நாள் இங்கு இரும் என்றேம் - எம்முடன் கைலைக்குவாரா தவனேடித் திருப்பெருந்துறையின்கண்ணே சிலதினமிங்கிருங்களென்று நாமுங்கட்கு முன்பணித்தேம். எ-று.

இச்செய்யுள் ஒருசற்றகலாதமர் நீரிங்கொழியத் தனிநாமெய்தியது யாதோ என்னும் முன் வினவுக்கு விடைகூறியவாறென்க. (கக)

மலமகல் பவரும் புவிமீதே மானுட வடிவந் தனையெய்திச்
சிலபக லெனினும் பயில்காலைச் சேர்தரு மலவா தனையென்றே
பலமலர் கமழுந் தடமீதிற் பரவரு ஞான வனல்சேர்வித்
திலதென நீடுஞ் சடம்வேவித் திவ்விட லீந்தோ மிந்நாளில்.

இ—ள்: மலம் அகல்பவரும் மானுட வடிவந்தனை எய்திச் சில பகல் எனினும் புவிமீது பயில் காலை - ஆணவம் மாயை கார்மியமென்னும் மலங்களும் நீங்கப் பெற்ற சிவஞானிகளும் எடுத்த மனித சரீரத்தோடு சிலதினமேனும் பூமியிற் சீவிக்கும்போது,—மலவாதனை சேர்தரும் என்று - அம்மலவாசனை மீளவந்து தாக்குமென்றுகருதி,—பல மலர் கமழும்தடமீது பரவு அரு ஞான அனல் சேர்வித்து - பலவிதமலர்கள் நறுமணங்கமழுமித்தடாகத்திலே சொல்லுதற்கரிய ஞானக்கினியை வருவித்து,—நீடும் சடம் இலது என வேவித்து இந் நாளில் இவ் உடல் ஈந்தோம் - மாயாகாரியமாகிய தூலசரீரத்தை இல்லையென்னும்படி தகித்து இப்பொழுது இந்தத்திவ்வியசரீரத்தை உமக்குத்தந்தேம். எ-று.

வாதனை அனுபவத்தாலுண்டாகிப் பின் ஞாபகத்திற் கேதுவான வுணர்வு. இச்செய்யுள் வாவியெரியிற் புகுவீரென்றது யாதோ வென்னும் பின் வினவுக்கு விடைகூறியவாறென்க. (உ0)

என்றுவி ளம்பிக் கணநாத ரெங்கணு மல்கப் புலியூரின்
மன்றுவி ளங்கப் பயில்வாரும் வானின் மறைந்தா ரவ்வெல்லைத்
துன்றிய ஞானச் சிவநாமச் சொற்றமிழ் வல்லார் வேறாகச்
சென்றொரு கொன்றைச் செழுநீழற் றிகழ விருந்தார் சிவயோகம்.

இ—ள்: என்று விளம்பிப் புலியூரின் மன்றுவிளங்கப் பயில் வாரும் கணநாதர் எங்கணும் மல்க வானின் மறைந்தார் - என்றிங்ஙனமருளிச்செய்து சிதம்பரத்திலே கனகசபையின்கண் வெளிப்படத் திருநடனஞ் செய்தருளுஞ் சபாநாயகரும் அக்கணநாதர்கள் எவ்விடத்தும்

பரவிவர ஆகாயத்தின்கண் மறைந்தருளினர்,—அவ்வெல்லைத் துன்றிய ஞானச் சிவநாமச் சொற்றமிழ் வல்லார் வேறாகச் சென்று - அப்பொழுது பூரண ஞானத்தைத்தரும் சிவநாமங்களினாலே திருவாசகமாகிய தமிழ் வேதத்தைப் பாடியருள வல்லவராகிய திருவாதவூரடிகள் தனியே சென்று,—ஒரு கொன்றைச் செழு நீழல் திகழச் சிவயோகம் இருந்தார் - ஒரு கொன்றைமரத்தினது செழுமையாகிய நிழலிலே விளக்கமுறச் சிவ யோகஞ் செய்துகொண்டிருந்தார். எ-று. (உக)

அன்ப ரழற்கே புகுமாறு மையர் விடைக்கே வருமாறு
முன்பு தமக்கா முருவெய்து முன்னவ னற்றா டொழு மாறும்
பொன்பொது விற்கே யன்பாளர் புகுவது மெல்லா மொருகாலத்
தின்புறு மெய்ப்போதக யோகத் தியல்பொடு கண்டா ரென்செய்தார்.

இ—ள்: அன்பாளர் - திருவாதவூரடிகள்,—அன்பர் அழற்கே புகும் ஆறும் - திருத்தொண்டர்கள் ஞானக்கினியிற் பிரவேசித்தமையும்,—ஐயர் விடைக்கே வரும் ஆறும் - அதுபொழுது சிவபெருமான் இடபா ரூடராயெழுந்தருளிக் காட்சி கொடுத்தமையும்,—முன்பு தமக்கு ஆம் உரு எய்தும் முன்னவன் நல்தாள் தொழும் ஆறும் - இனித்தம்மால் விரும்பப் படும் ஞானதேசிகத்திருமேனியை ஆங்காங்குக்கொள்ளும் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமானுடைய நல்ல திருவடிகளை ஸ்தலங்கடோறுஞ் சென்று தாம் தரிசித்து வணங்குந் தன்மையும்,—பொன் பொதுவிற்கே புகுவதும், கனகசபையிலே தாம் சபாநாயகரோ டத்துவிதமாயியைவதும்,—எல்லாம் - புத்தரை வாதில் வெல்லுதன் முதலியவுமாகிய இறந்தகால எதிர்கால வர்த்தமானங்களை யெல்லாம்,—ஒருகாலத்து - நிகழ்காலமொன்றிலே,—இன்பு உறு மெய்ப் போதகயோகத்து இயல்பு ஒடு கண்டார்,—இன்பமிகும் மெய்ஞ்ஞானத் தைத்தரும் சிவயோகப்பிரத்தியக்ஷத்தின்கண் உள்ளபடி கண்டறிந்தார்,— என்செய்தார் - அவர்பின்யாதுசெய்தாரெனின். எ-று.

உருபுமயக்கம். எனின் என்ப தெஞ்சிநின்றது. இனி முன்பு தமக்காமுருவெய்தி முன்னவனற்றாடொழுமாறும் என்பது பாடமாயின் முன்னரே தமக்குரிய கணநாதவடிவத்தைப் பொருந்திச் சிவபெருமானு டைய திருவடிகளை வணங்கியதன்மையுமெனக் கணநாதர்மேலேற்றிக் கூறுக. எனை இருகாலவர்த்தமானங்களையெல்லாம் நிகழ்காலமொன் றிலே சிவயோகத்தான் உள்ளபடியறிந்த பெருந்தகைமையினர் பின் யாது செய்தாரோவெனக் கேட்போரது மனம் அக்கேள்விக்கட் பெரிதுமவாவி மூழ்ந்துற்று நிற்குமாகலின் அது விளக்குதற்கு அச்சரித்திரத்தொடர் இடையீடுபட்டுச் சிதையாமல் இச் செய்யுளி னிறுதிக்கண் என்செய்தா ரென வினவி, வருஞ்செய்யுள்களான் ஆசிரியர் விடைகூறுவாராயின ரென்க. திரிகாலசம்பவங்களும் ஒருகாலத்து யோகப் பிரத்தியக்ஷத்தா

னுணரலாமென்பது "பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்க ளெல்லா, மிருந்துணர் கின்றஞான மியோகநற் காண்டலாமே" என்பத னானறிக.

(உஉ)

செங்கை குவித்தார் விழிநீரைச் சிந்தின ரெந்தாய் வந்தாய்பின்
னெங்க ணொளித்தா யெனமாலுற் றெய்தினர் பொய்கைக்கரைமீதே
கங்கை முடித்தார் விடையேறிக் கண்ணுற நண்ணுந் தலமோவென்
றங்க ணிலத்தே போய்வீழ்வுற் றழுதழு தந்தோவென நைந்தார்.

இ—ள்: செங்கை குவித்தார் - சிவந்த கைகளைக் கூப்பிக் கும்பிட்டார்,—விழி நீரைச் சிந்தினர் - கண்ணீர் சொரிந்தார்,—எந்தாய் வந்தாய் பின் எங்கண் ஒளித்தாய் என மால் உற்றுப் பொய்கைக் கரை மீது எய்தினர் - எம்பரமபிதாவே ஈண்டுவந்தருளினீர் பின்ன ரெங்கே யொளித்தீரென்று மனமயங்கி அத்தடாகக் கரையையடைந்தார்,—கங்கை முடித்தார் விடை ஏறிக் கண் உற நண்ணும் தலமோ என்று - கங்கையைத் தரித்த சிவபெருமான் இடபவாகனத்தின் மேலிவர்ந்து கண்களுக்குப் புலப்பட எழுந்தருளி வரப்பெறுந் தலமேயோவென்று விதந்து,—அங்கண் நிலத்தே போய் வீழ்வுற்று அழுது அழுது அந்தோ என நைந்தார் - அக் கீழ் நிலத்தின்கட்போய் விழுந்து தேம்பித்தேம்பி அழுதழுது அந்தோ அந்தோ வென்றிரங்கித் திருவாதவூரடிகள் வருந்தினர். எ-று.

கீழ்நிலம் சிவபெருமான் வெளிப்பட்ட ஆகாயத்துக்கு நேரே கீழுள்ள நிலம்.

(உங)

வேறு.

அன்னை நிகர்ப்பீ ரென்னை யொழித்தே யன்பாளர்
பொன்னடி பெற்றே பொய்கை யழற்கே புகலாமோ
மின்னுரு வத்தீர் நும்மருள் கூடா வினையேனுக்
கின்ன லளித்தீ ரெங்ங னொளித்தீ ரெனநொந்தார்.

இ—ள்: அன்னை நிகர்ப்பீர் - எனக்கென் மாதாவை ஒத்தவரே,—அன்பாளர் என்னை ஒழித்துப் பொய்கை அழல் பெற்றுப் பொன் அடிக்கே புகல் ஆமோ - அன்பையாளுந் திருத்தொண்டர்கள் தமியேனை இங்கே நீக்கிவிட்டுத் தடாகத்தக்கினியின் மூழ்கித் தேவரீருடைய பொன்போலுந் திருவடிகளை அடையலாமா,—மின் உருவத்தீர் - மின்னலைப்போலச் செவ்வொளி விளங்குந் திருமேனியையுடையவரே,—நும் அருள் கூடா வினையேனுக்கு இன்னல் அளித்தீர் எங்ஙன் ஒளித்தீர் என நொந்தார் - தேவரீருடைய திருவருளோடு கூடவிடாது தடுத்த தீவினையையுடைய தமியேனுக்குத் துன்பத்தைத் தந்து நீரெங்கே மறைந்தருளினீரென்று திருவாதவூரடிகள் பிரலாபித்து வருந்தினர். எ-று.

இது கலித்துறை; காப்பியக்கலித்துறை எனவும் வழங்குப. (உச)

வேறு.

அந்நிலை தெளிந்து பொய்கை யகன்றுயர் குருந்த நீழற்
பன்னரு மறைகள் காணுப் பதமலர் பற்றி வீழ்ந்து
மன்னிய நிலத்தி னுள்ளார் வல்வினைப் பிறவிமாள [ணர்.
வின்னருட் சதக மெய்தா னரும்பியென் றெடுத்துச் சொன்

இ—ள்: அந்நிலை தெளிந்து பொய்கை அகன்று-திருவாதவூரடிகள் அத்துக்கநிலையினின்று மொருபிரகாரம் மனந்தெளிந் தெழுந்து அத்தடாகக்கரையைவிட்டு நீங்கி,—உயர் குருந்த நீழல் பன் அரும் மறைகள் காணுப் பதமலர் வீழ்ந்து பற்றி-உயர்வாகிய குருந்தமரநிழலிலே துதித்தற்கரிய வேதங்களும் முடிவு காண்டற்கரிய பாததாமரைமலர்களைக் கீழே வீழ்ந்திறுகப் பற்றிக்கொண்டு,—நிலத்திலுள்ளார் வல்வினை மன்னிய பிறவி மாள - இப்பூமியின்கணுள்ளராதுவலியவினையால்வரும் நிலைபெற்ற பிறவிகெட்டொழிய,—இன் அருள் சதகம் மெய்தானரும்பி என்று எடுத்துச் சொன்னார் - இனிய திருவருளையுடைய திருச்சதகத்தை "மெய்தானரும்பி" என்று தொடங்கிப்பாடியருளினார். எ-று.

சதம் நூறு. சதகம் நூறுசெய்யுட்களையுடைய பிரபந்தம். குருந்து ஆன்மநாயகரது திருவருண்மயமாகலின் உயர்குருந்தென்றும், பிரவாகநாதியாய்த் தொடரும் வினையாகலின் வல்வினை என்றுங் கூறினார். இது அறுசீரடியாசிரியவிருத்தம். (உ௫)

இத்திறங் கூறி யாங்கே புலம்பிநின் றிரங்கு மெல்லை
சித்தனன் றுரைத்த நீர்மை நெஞ்சினு ணினைந்து பின்ன
ரத்தலத் திறைஞ்சி யெங்கோ னருட்பெரு விடைபெற் றேகி
யுத்தர கோச மங்கை யூர்தனி னொல்லை புக்கார்.

இ—ள்: இத்திறம் கூறி ஆங்கே புலம்பி நின்று இரங்கும் எல்லை-திருவாதவூரடிகள் இந்தப்பிரகாரம் பாடியருளி அங்ஙனம் புலம்பி நின்றிரங்குகின்றுழி,—சித்தன் அன்று உரைத்த நீர்மை நெஞ்சினுள் நினைந்து-சித்தியராகிய சிவபெருமான் அன்றருளிச் செய்ததனைத் தம்மனத்தின்கணினைந்து,—பின்னர் - அதன்பின்னர்,—அத்தலத்து இறைஞ்சி எம் கோன் அருள் பெரு விடை பெற்று ஏகி - அத்திருப்பெருந்துறையின்கண் வணங்கி நம்பசுபதியினது அருளையுடைய பிரியாவிடைபெற்று நடந்து,—உத்தரகோசமங்கை ஊர்தனின் ஒல்லை புக்கார் - திருவுத்தரகோசமங்கையென்னும் ஸ்தலத்திலே விரைவிற்சென்றார். எ-று.

அன்று முன்னொருநாள். அன்றுரைத்த நீர்மை உத்தரகோசமங்கையென்னுமூரிற்சென்று, சித்தியங்கெவையுமெய்தி என மேல்வந்தமை காண்க. (உ௬)

சடையவர் கோயி லெய்தித் தம்மைவந் தடிமைகொண்ட
வடிவது காணு ராகி மயங்கி வெய்துயிர்த்து வீழ்ந்து

விடுதிகொ லென்னை யென்று நீத்தல் விண்ணப்ப மென்னுந்
தொடை கெழு பாட லோதக் காட்டினர் தொல்லை மேனி.

இ—ள்: சடையவர் கோயில் எய்தித் தம்மை வந்தடிமைக் கொண்ட வடிவு காணார் ஆகி - திருவாதவூரடிகள் திருவுத்தரகோசமங்கையிலே சடையையுடைய சிவபெருமானது ஆலயத்தையடைந்து மார்ச்சாரசம்பந்தமாகத் தம்மை வலியவந்தடிமைக்கொண்ட பரமாசாரியவடிவத்தைத் தரிசிக்கப் பெறாதவராகி,—மயங்கி வெய்துயிர்த்து வீழ்ந்து - மயக்கமடைந்து நெட்டுயிர்த்துக் கீழேவிழுந்து,—என்னை விடுதிகொல் என்று நீத்தல் விண்ணப்பம் என்னும் தொடை கெழு பாடல் ஓத - இரண்டடிமடிக டோறும் "என்னை விடுதிகண்டாய்" என்று நீத்தல்விண்ணப்பமென்னுந் திருவாசகத்தைப் பாடித் துதிக்க,—தொல்லை மேனி காட்டினர் - சிவபெருமான் பழைய தேசிகத்திருமேனியை அவருக்குத் தரிசிப்பித்தருளினர். எ-று.

தொடை செய்யுளுறுப்பெட்டினுளொன்று. அது "தொடையே யடியிரண் டியையத் தோன்றும்" என்பதனுணர்க. (உ௭)

கன்னலை யமுதையங்கே கண்டுகொண் டிறைஞ்சிச் சின்னா
ளந்நக ரிருந்து தங்கோ னருண்மொழிப் படியே சென்று
தந்நிக ரில்லாத் தெய்வத் தலம்பல வணங்கி நீங்கிச்
சென்னிநன் னாட்டி லெய்தித் திருவிடை மருதூர் சேர்ந்தார்.

இ—ள்: கன்னலை அமுதை அங்கே கண்டு இறைஞ்சிக் கொண்டு சில் நாள் அந்நகர் இருந்து - திருவாதவூரடிகள் பரமாசாரியராகிய கரும்பை அமுதை அங்கே தரிசித்து வணங்கி வழிபட்டுக்கொண்டு அந்த ஸ்தலத்திலே சிலதினமிருந்து,—தம் கோன் அருள் மொழிப்படியே சென்று - அதன்பின்பு தம்மான்மநாயகராகிய சிவபெருமானருளிச்செய்த திருவாக்கின்படியே அப்பாற்சென்று,—தம் நிகர் இல்லாத் தெய்வத் தலம் பல வணங்கி நீங்கி - தமக்கொப்புயர்வில்லாத தெய்வத்தன்மை பொருந்திய ஸ்தலங்கள் பலவற்றையடைந்து தரிசித்து வணங்கி அவைகளையுங் கடந்து,—நல் சென்னி நாட்டில் எய்தித் திரு விடைமருதூர் சேர்ந்தார் - நல்ல சோழநாட்டிற்போய்த் திருவிடைமருதூரென்னும் ஸ்தலத்தை அடைந்தார். எ-று.

அங்கப்பிரத்தியங்க சாங்கோபாங்கமாகிய அனைத்தும் அருண்மயமாகலின் முழுவது மினிதாங் கன்னல் என்றும், கழிபெருஞ்சுவையோடுறதிபயத்தலின் அமுது என்றுங் கூறினர். அங்கம் சிரசு, முகம், இருதயம்; (௩.) பிரத்தியங்கம் வக்ஷஸ், கண்டம், தனம், தோள், நாபி, உதரம், குய்யம், நேத்திரம், நாசி, சுரோத்திரம், மஸ்தகம், பாதம், அங்குலி, ஊரு, முழந்தாள், கணைக்கால்; (௧௬.) சாங்கம் திரிசூலம், பரசு, கட்கம், வச்சிரம், அபயம், நாகம், பாசம், அங்குசம், கண்டை, அக்கினி; (௧௦.) உபாங்

கம் வஸ்திரம், உபவீதம், மாலை, கந்தம், ஆபரணம், ஆசனம், ஆவரணம்; (எ.) சோழநாட்டை, "கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு, குடதிசைக்குக் கோட்டைக் கரையாம் - வடதிசையி, லேணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதஞ், சோணாட்டுக் கெல்லையெனச் சொல்" என்பதனுமறிக. (உஅ)

அப்பதி தொழுத பின்ன ரன்புட னாரூ ரெய்திச்
செப்பரு மலர்த்தாள் போற்றித் திகழ்திருப் புலம்ப லோதி
யெய்ப்பற விறைஞ்சி யண்ண லியம்பிய பதிக ளெல்லாந்
தப்பற வணங்கி நீங்கித் தடமதிற் புகலி சார்ந்தார்.

இ—ள்: அப்பதி தொழுத பின்னர் - திருவாதவூரடிகள் அந்த ஸ்தலத்தைத் தரிசித்து வணங்கியபின்னர்,—அன்பு உடன் ஆரூர் எய்திச் செப்பு அரு மலர்த்தாள் போற்றித் திகழ் திருப்புலம்பல் ஓதி எய்ப்பு அற இறைஞ்சி - அன்போடு திருவாரூரையடைந்து அங்கே வீற்றிருந்தருளுந் தியாகராச சுவாமியினது துதித்தற்கரிய பொற்றாமரைமலர்போலுந் திருவடிகளைத் தரிசித்து வணங்கித் துதித்து, "பூங்கமலத்தயனொடுமாலறியாதநெறியானே" என்னுஞ் சொற்றொடரை முதலாகவுடைய திருப்புலம்பலென்னுந் திருவாசகத்தைப் பாடியருளிச் சனனமரண இளைப்புநீங்கும்வண்ணமறித்தும் வணங்கிச்சென்று,—அண்ணல் இயம்பிய பதிகள் எல்லாம் தப்பு அற வணங்கி நீங்கி - முன் பரமாசாரியர் கூறியருளிய ஸ்தலங்களையெல்லாந் தவறறத் தரிசித்துவணங்கி நீங்கி அப்பாற் சென்று,— தட மதில் புகலி சார்ந்தார்-பெரிய மதில்சூழ்ந்த சீர்காழியை யடைந்தார். எ-று.

திகழ் திருப்புலம்பல் சிவானந்தமுதிர்ச்சி விளங்காநின்ற திருப்புலம்பல். புகலி தேவர்களுக்குப் புகலிடமாயுள்ளது. (உகூ)

குன்றென வயங்கு கோயிற் கோபுர வாயி னீங்கிச்
சென்றுயர் கயிலை யான செய்திகண் டிறைஞ்சு மெல்லை
மன்றிடை நடித்தபாத மலரடி பிடித்துக் கொண்டு
பின்றிகழ் சடையோன் முன்னர்ப் பிடித்தபத் தருளிச்செய் [தார்.

இ—ள்: குன்று என வயங்கு கோயில் கோபுர வாயில் நீங்கிச் சென்று - திருவாதவூரடிகள் அங்கே மலையைப்போல விளங்காநிற்கும் சிவாலயத்தினது திருக்கோபுரவாயிலைக் கடந்துள்ளேசென்று,—உயர் கயிலை ஆன செய்தி கண்டு இறைஞ்சும் எல்லை - அஃது உயர்ச்சிபொருந்திய கைலாசகிரியாகிய பாவகம் பொருந்தக் கண்டு வீழ்ந்து வணங்குகின்றுழி,—மன்று இடை நடித்த பாத மலர் அடி பிடித்துக் கொண்டு - கனகசபையிலே திருநடனஞ் செய்தருளுகின்ற செந்தாமரைமலர்போலுந் திருவடிகளை இறுகப்பற்றிக்கொண்டு,—பின் திகழ் சடையோன் முன்னர்ப் பிடித்தபத்து அருளிச்செய்தார் - பின் றூங்கி விளங்காநிற்குஞ் சடையை

யுடைய தோணியப்பரது சந்நிதியிலே "உம்பர்கட்கரசேயொழிவற நிறைந்தயோகமே" என்றுதொடங்கி "உன்னைச் சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே" என்றிறுதிதோறு முடித்துப் பிடித்த பத்தென்னுந் திருவாசகத்தைப் பாடியருளினார். எ-று.

பின்றிகழ் சடை என்பதற்குப் பின்னுதல்விளங்குஞ் சடையென்றுரைப்பினு மமையும். (௩०)

தொல்வினைப் பகைமை யுள்ளார் யாவருந் தொழுதா லிங்கு
வெல்வரப் பகையை யென்று விருப்புடன் சிலநாள் வைகி
மல்குமத் தலத்தை நீங்கி வண்கழுக் குன்றி லன்பாற்
செல்வதற் கிசைந்து தில்லைத் திசைகுறித் திறைஞ்சி யேகி.

இ—ள்: தொல் வினைப் பகைமை உள்ளார் யாவரும் இங்குத் தொழுதால்-அநாதியாகவரும் வினைப்பகையினையுடையார் யாவரு மீண்டுவந்து சுவாமியைத் தரிசித்துவணங்கினால்,—அப் பகையை வெல்வர் என்று - அப்பகைமையைத் தப்பாது வெல்வரென்று திருவாதவூரடிகள் சிந்தித்து,—விருப்பு உடன் சில நாள் வைகி - விருப்பத்தோடு சிலதினமங்கிருந்து,—மல்கும் அத்தலத்தை நீங்கி அன்பால் வண்கழுக்குன்றில் செல்வதற்கு இசைந்து - திருவருள்சுரக்கும் அச்சீர்காழியைவிட்டு நீங்கி அப்பாலுள்ள வளவிய திருக்கழுக்குன்றமென்னுஞ் சிவக்ஷேத்திரத்தில் அன்போடு செல்வதற்கபேக்ஷித்து,—தில்லைத் திசை குறித்து இறைஞ்சி ஏகி - அதிசமீபத்திலுள்ள சிதம்பரத்தைத் திக்குநோக்கி வணங்கிச் சென்று. எ-று. (௩க)

வேறு.

உத்தர நெடுந்திசையி லேகியொளி குன்று
முத்தநதி சூழுமுது குன்றினை வணங்கி
யத்தல மகன்றுய ரருட்டுறையி தென்றே
மெய்த்தவர்க ளெண்ணியுறை வெண்ணெயை யடைந்தார்.

இ—ள்: நெடும்உத்தர திசையில் ஏகி - திருவாதவூரடிகள் நெடிய உத்தரதிக்கின்கட்சென்று,—ஒளி குன்று முத்த நதி சூழும் முது குன்றினை வணங்கி - வெள்ளொளிமிக்க மணிமுத்தநதிசூழ்ந்த திருமுதுகுன்றினைத் தரிசித்துவணங்கி,—அத்தலம் அகன்று - அந்தஸ்தலத்தை விட்டு நீங்கி,—மெய்த்தவர்கள் இது உயர் அருட்டுறை என்று எண்ணி உறை வெண்ணெயை அடைந்தார் - சாமுசித்தராகிய மெய்கண்டதேவர்முதலிய மகான்கள் இது சிவபெருமானது திருவருட்டுறையென் றுட்கொண்டு வீற்றிருக்கப்பெற்ற திருவெண்ணெய்நல்லூரை அடைந்தருளினார். எ-று.

திருமுதுகுன்று விருத்தாசலம். திருவருட்டுறை என்பது திருவெண்ணெய்நல்லூரிலுள்ள சிவாலயத்துக் கொருபெயர். இது கலிவிருத்தம். (௩௨)

அந்நகர் வணங்கியபி னன்புட னகன்றே
நன்னர்வதி சென்றுநடு நாடுமுயர் காடுங்
கொன்னிப மடங்கலுறை குன்றமு மிகந்தே
மன்னுமரு ணைபுரி மருங்கணைய வந்தார்.

இ—ள்: அன்பு உடன் அந்நகர் வணங்கிய பின் - திருவாதவூரடிகள் அன்போடு அத்திருவெண்ணெய்நல்லூரைத் தரிசித்து வணங்கியபின்னர்,—அகன்று நன்னர் வதி சென்று நடு நாடும் உயர் காடும் கொன் இபம் மடங்கல் உறை குன்றமும் இகந்து - அந்தஸ்தலத்தைவிட்டகன்று நல்ல நெறியின்கட்போய் நடுநாட்டையும் உயர்ந்த காட்டையும் அச்சத்தைத்தரும் யானைகளும் சிங்கங்களும் வசிக்கும் மலைகளையுங் கடந்து,—மன்னும் அருணைபுரி மருங்கு அணைய வந்தார்-விராட்புருடனுக்கு மணிபூரகஸ்தானமாகப்பொருந்திய திருவண்ணாமலைக்கு அதிசமீபமாகச் சென்றருளினர். எ-று.

நடுநாடு சோழநாட்டுக்கும் தொண்டைநாட்டுக்கும் நடுவேயுள்ளநாடு.

மாடமொடு கோபுரமு மன்னுமணி முத்தஞ்
சூடுமதி லும்பெரிய தோரண முகப்பு
நீடுகமு காடவி நெருங்கியுள தண்கா
வூடுயர்தல் கண்டுவகை கொண்டுதொழு துய்ந்தார்.

இ—ள்: மன்னும் மணி முத்தம் சூடும் மாடம் ஒடு கோபுரமும்,—அங்கே நிலைபெற்ற அழகிய முத்துமாலைகளைத் தம்மேற்கொண்ட மண்டபங்களுங் கோபுரங்களும்,—மதிலும் - மதில்களும்,—பெரிய தோரண முகப்பும் - மகரதோரணங்களையுடைய பெரிய உபரிகைகளுமாகிய இவைகளெல்லாம்,—நீடு கமுக அடவி நெருங்கி உள தண் கா ஊடு உயர்தல் கண்டு - நெடிய கமுகங்காடு தம்முணெருங்கிய குளிர்ந்த சோலையின் மத்தியிலே உயர்ந்து தோன்றுதலைக் கண்டு,—உவகை கொண்டு தொழுது உய்ந்தார் - திருவாதவூரடிகள் மனமகிழ்ச்சிகொண்டு வணங்கிக் கும்பிட்டுய்ந்தார். எ-று.

ஒடு எண்ணொடு. முகப்புமுயர்தல் கண்டெனமுடிக்க. கழிகாமத்தராயினோர்க்குத் தம்மால் விரும்பப்பட்ட கன்னிகைக்குரிய அசேதனமாகிய புறப்பொருள்களும் அவளாகவே கண்டு நன்குமதிக்கப்படுமாறு போலச் சிவபத்திமானாகிய திருவாதவூரடிகளுக்குத் தம்மால் விரும்பப்பட்ட சிவபெருமானுக்குரிய அசேதனமாகிய புறப்பொருள்களென்னுந் திருமண்டபம் முதலியவெல்லாம் அவராகவே கண்டு வழிபடப்பெற்றன என்பார் கண்டுவகைகொண்டு தொழுதுய்ந்தார் என்றார். இக்கருத்து "ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன் பில்லார்" என்பதனானுமறிக. மணிமுத்தம் என்பதனை உம்மைத் தொகையென்றலுமொன்று.

(௩௪)

அன்றிருவர் தேடவழ லானதொரு வெற்பாய்
நின்றவடி வோமன நிறைந்தபெரு வாழ்வோ
வென்றுமலை யண்ணலை யிறைஞ்சியருள் கொண்டே
சென்றருணை யாகிய செழும்பதி புகுந்தார்.

இ—ள்: அன்று இருவர் தேட அழல் ஆனது ஒரு வெற்பு ஆய் நின்ற வடிவோ - அக்காலத்துப் பிரமவிஷ்ணுக்களாகிய இருவரும் முடியையும் அடியையுந் தேட அகப்படா தக்கினிப்பிழம்பாகியதொரு மலையாய்நின்ற வடிவமோ அன்று,—மன நிறைந்த பெரு வாழ்வு என்று மலை அண்ணலை இறைஞ்சிச் சென்று - மனத்தின்கணிறைந்த பேரின்பவாழ்வேயாமென்று திருவாதவூரடிகள் துதித்துப் பெருமையிற்சிறந்த திருவண்ணாமலையைத் தரிசித்து வணங்கிச்சென்று,—செழுமை ஆகிய அருணைப்பதி புகுந்தார்-செழுமையாகிய திருவருணைமாநகரத்திற் பிரவேசித்தார். எ-று.

வெற்பாய்நின்ற வடிவு உண்மையானோக்குமிடத்து நிறைந்த பெருவாழ்வென்பது கருத்து. ஓகாரமிரண்டனுண் முன்னைய தெதிர்மறையினும், பின்னைய தசைநிலையினும் வந்தன. வெற்பாய்நின்றவடிவோ அன்றி மனநிறைந்த வாழ்வோ எனக்கோடலும் ஒன்று. (௩௫)

வேறு.

சோலையு மதிலும் பல்பூந் தோரண மறுகுந் தெய்வ
சாலைகள் பலவு நீங்கிச் சந்நிதி மறுகிற் சென்று
மாலையும் பாம்புந் திங்கண் மத்தமு முடியில் வைத்தோ
னாலய மிறைஞ்சிக் கண்டார் தம்மையன் றாண்ட மேனி.

இ—ள்: சோலையும் மதிலும் பல் பூந் தோரண மறுகுந் தெய்வ சாலைகள் பலவும் நீங்கிச் சந்நிதி மறுகில் சென்று-திருவாதவூரடிகள் சோலைகளும் மதில்களும் அழகிய பலதோரணங்களையுடைய திருவீதிகளும் தேவாலயங்களுமாகிய இன்னோரன்ன பலவற்றையுங் கடந்துட்பிரகாரத்திற் போய்,—மாலையும் பாம்பும் திங்கள் மத்தமும் முடியில் வைத்தோன் ஆலயம் இறைஞ்சி-கொன்றைமாலையையுஞ் சர்ப்பத்தையும் பிறையையும் பொன்னூமத்தமலரையுந் திருமுடியின்கணேநங்குதரித்த அருணாசலேசுவரரது ஆலயத்தைத் தரிசித்துவணங்கி,—தம்மை அன்று ஆண்ட மேனி கண்டார்-தம்மை முன்னடிமைகொண்ட ஞானதேசிகத் திருமேனியைப் பின்பு தரிசிக்கப்பெற்றார். எ-று.

திங்களுமெ்ன உம்மைவிரித்துரைக்க. ஆலயமென்னும் வடமொழி எதுகைநோக்கி ஆலையமென்றாயிற்று. இது அறுசீரடியாசிரியவிருத்தம். (௩௬)

மாலுடன் பிரமன் றேவர் வந்துனக் கடிமை யென்றென்
றோலிடும் பொழுதி லால முண்டிருள் கண்ட போற்றி

இனி உருவகஞ்செய்துகொண்டமைக்கேற்பக் கொடியிடம்கொண்ட செம்பொற் குன்றமென்பதற்குக் கொடியானது தனக்கிடமாகக்கொண்ட செம்பொற்குன்றமெனவுமுரைத்துக்கொள்க. (நஅ)

வென்றிடுங் கன்னி மேதிச் சென்னி விக்கிரமன் றன்னைக்
கொன்றதன் பாவந் தீரக் குறித்திட வருள்வாய் போற்றி
யன்றுவந் தென்னை யாளு மணியண்ணு மலையாய் போற்றி
யென்றுதம் பரிவா லேத்தி யிறைஞ்சியங் குறையு நாளில்.

இ—ள்: வென்றிடும் கன்னி - சயமிகளாகிய துர்க்கை,—மேதிச் சென்னி விக்கிரமன்றன்னைக் கொன்ற தன்பாவம் தீரக் குறித்து இட - மகிடாசுரனைக் கொன்ற தன் கொலைப்பாவந் தவிரச் சங்கற்பித்து வழிபட,—அருள்வாய் போற்றி - அத்துர்க்கைக் கநுக்கிரகஞ் செய்தவரே தேவரீர் அடியேனைப் பாதுகாத்தருளுக,—அன்று வந்து என்னை ஆளும் அணி அண்ணுமலையாய் போற்றி என்று தம் பரிவால் இறைஞ்சி ஏத்தி - அன்று பரமாசாரியராகத் திருப்பெருந்துறையின் கணெழுந்தருளிவந்து தமியேனை அடிமைக்கொண்டருளிய அழகிய அனலாசலநாதரே தேவரீர் அடியேனைப் பாதுகாத்தருளுகவென்று திருவாதவூரடிகள் தம்மெய்யன்பினாலே வணங்கித் துதித்து,—அங்கு உறையும் நாளில் - அங்கேவசிக்கும் காலத்தில். எ - று.

விக்கிரமன் - வீரன். இடுதல் ஈண்டு அருச்சித்தலின்மேற்று. அது "பத்தரிடும் பச்சிலையோ" வென மேற்கூறியவாற்றனுமறிக. (நகூ)

மாதர்கொண் மாத ரெல்லா மார்கழித் திங்க டன்னி
லாதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங்க டம்மின்
மேதகு மனைக டோறு மழைத்திருள் வடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றட மாடல் செய்வார்.

இ—ள்: மாதர்கொள் மாதர் எல்லாம் மார்கழித் திங்கள் தன்னில் ஆதிரை முன் ஈரைந்து ஆகிய தினங்கள் தம்மில் - அழகையுடைய எழுவகைப்பருவ மகளிரும் மார்கழிமாசத்துத் திருவாதிரை நக்ஷத்திரத்துக்கு முற்பத்துத்தினங்களிலெல்லாம்,—இருள் விடிவது ஆன போது மேதகு மனைகள் தோறும் அழைத்து இவர் தம்மில் கூடிப் புனல் தடம் ஆடல் செய்வார் - இருள்புலருகின்ற விடியற்காலத்திலே மேன்மைபொருந்திய வீடுகடோறும்போய் ஒருவரையொருவரழைத்துத் தம்முளொருங்குகூடி நீரையுடைய தடாகத்திலே ஸ்நாநஞ்செய்வார்கள். எ-று. (சo)

அன்னவ ரியல்பு கண்டா ராங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம் பாவை வாசகம் பேசிப் பின்னர்க்
கன்னியர் பாடி யாடுங் கவின்கொளம் மனைக டன்னூர்
பன்னிய பாட லாக வம்மனைப் பாடல் செய்தார்.

இ—ள்: அன்னவர் இயல்பு கண்டார் - அம்மகளிரது தன்மையைக் கண்ட திருவாதவூரடிகள்,—ஆங்கவர் புகன்றது ஆக மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி - அவர்கூறிய கூற்ருக நிலைபெற்ற திருவெம்பாவையென்னுந் திருவாசகத்தை "ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்சோதியை" என்றெடுத்துப் பாடி,—பின்னர் - அதன் பின்னர்,—கன்னியர் பாடி ஆடும் கவின் கொள் அம்மனை கண்டு - மங்கைப்பருவத்துமகளிர்பாடி விளையாடுகின்ற அழகையுடைய அம்மானைவிளையாட்டைக் கண்டு,—அன்னேர் பன்னிய பாடல் ஆக அம்மனைப் பாடல் செய்தார் - அம்மகளிர் கூறிய கூற்ருகத் திருவம்மானையென்னுந் திருவாசகத்தை, "செங்கணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய, பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி" என்றெடுத்துப் பாடியருளினர். எ-று. (சக)

விரவுமன் புடையா ரந்த மேதகு தலத்தை நீங்கிப்
பரிவுடன் கச்சி யேகாம் பரந்தனிற் பரனை யேத்தித்
தெரிவருங் காமக் கோட்டி சீறடி வணங்கித் தேவர்
வரநினைந் திறைஞ்சுந் தெய்வ வண்கழுக் குன்றிற் சென்ருர்.

இ—ள்: விரவும் அன்பு உடையார் மேதகு அந்தத் தலத்தை நீங்கி - பரமாசாரியர் மாட்டுச் சென்று கலக்கும் பேரன்பையுடைய திருவாதவூரடிகள் மாட்சிமைபொருந்திய அந்தத் திருவண்ணுமலையென்னும் ஸ்தலத்தைவிட்டு நீங்கிச்சென்று,—கச்சி ஏகாம்பரந்தனில் பரனைப் பரிவு உடன் ஏத்தி - தொண்டைநாட்டிலே காஞ்சீபுரத்தை யடைந்து திருவேகம்பமென்னுமாலயத்தில் வீற்றிருக்கின்ற ஏகாம்பரநாதசுவாமியை அன்போடு தரிசித்து வணங்கித் துதித்து,—தெரிவு அரும் காமக்கோட்டி சீறு அடி வணங்கி - இத்தன்மையின ரென்றியாவராலு மறிந்து கோடற்கரிய காமக் கோட்டமென்னுமாலயத்தில் வீற்றிருக்கின்ற காமாக்ஷியம்மையினது சிறிய திருவடிகளைத் தரிசித்து வணங்கித் துதித்து,—தேவர் வரம் நினைந்து இறைஞ்சும் தெய்வ வண் கழுக்குன்றில் சென்ருர்-அதன்பின்பு, அரிபிரமேந்திராதி தேவர்களெல்லாம் வரத்தைப்பெறும்பொருட்டெண்ணித் தம்பதங்களினின்றும் வந்தருச்சித்து வணங்கப்பெறும் தெய்வத்தன்மையையுடைய வளவிய திருக்கழுக்குன்றத்திற் சென்றருளினர். எ-று.

தேவர்களும் இவ்வுலகின்கண் வந்திறைஞ்சுதலை, "வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர்" என்னுந் திருவாக்கானுமறிக. தொண்டைநாட்டை, "மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்கா, மாற்குமூவரி யணிகிழக்கா—மாற்றரிய, தெற்குப் பிஞகி திகழிரு பதின்காத, நற்ருெண்டை நாடெனவே நாடு" என்பதனுனுமறிக. பிஞகி பெண்ணைநதி.

கோட்டிதழ் கமழுங் கொன்றைச் சென்னியன் குலவு மன்பர்
சூட்டிய மலர்த்தாள் போற்றித் துணைவநின் செய்ய மேனி
காட்டினை கலங்கா வண்ண மிக்கழுக் குன்றி லென்று [ந்தார்.
பாட்டினைப் பொழிந்து சின்னுட் பயின்றுபின் பணிந்து போ

இ—ள்: கோட்டு இதழ் கமழும் கொன்றைச் சென்னியன் குல வும் அன்பர் - கொம்பர்களிலே இதழ்கள் நறுமணங்கமழும் கொன்றை மாலிகையைத் தரித்த திருமுடியையுடைய சிவபெருமானுக்கு மெய்யன்ப ராகிய திருவாதவூரடிகள்,—சூட்டிய மலர்த்தாள் போற்றி - தஞ் சிரசின் முன்னரே சூட்டியருளிய செந்தாமரை மலர்போலுந் திருவடிகளைத் தரி சித்து வணங்கித் துதித்து,—துணைவ-உயிர்த்துணைவரே,—இக் கழுக்குன் றில் கலங்காவண்ணம் நின் செய்ய மேனி காட்டினை என்று பாட்டினைப் பொழிந்து-இத்திருக்கழுக்குன்றத்திலே தமியேன் மனங்கலங்காத பிரகா ரம் சிவந்தபரமாசாரியத்திருமேனியை நன்கு தரிசிப்பித்தருளினீரென்று; "பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன் னுமங்கள் பேசுவார்"என்று தொடங்கி, "வந்துகாட்டினாய்கழுக்குன்றிலே" என்றிறுதிகடோறும் முடித்துத் திருக்கழுக்குன்றப் பதிகமென்னுந் திருவாசகமாகிய மழை யை வருஷித்து,—சிலநாள் பயின்று-சிலதின மங்கே வசித்து,—பின் பணி ந்து போந்தார் - அதன்பின்பு சுவாமியைவணங்கி அனுமதிபெற்றுத் தெற்கு நோக்கித் திரும்பிச்சென்றருளினார். எ - று.　　(சகூ)

அத்தல முதலா நாப்ப ணடைந்துள தலமுங் கானு
மைத்தடங் கிரியுங் காவும் வாவியு நதியு நீங்கிப்
பைத்தவெம் பாம்பொ டாடி நரியெலாம் பரிக ளாக்குஞ்
சித்தர்தென் றில்லை மூன்று காவத மென்னச் சென்றார்.

இ—ள்: அத்தலம் முதலா நாப்பண் அடைந்துள தலமும் கானும் மைத்தடம் கிரியும் காவும் வாவியும் நதியும் நீங்கி - திருவாதவூரடி கள் அந்தஸ்தலம்முதலாக மத்தியிலெதிர்ப்படுகின்ற ஸ்தலங்களையும் காடு களையும் கரிய விசாலமாகிய மலைகளையும் சோலைகளையும் தடாகங்களையும் நதிகளையுங் கடந்து,—பைத்த வெம் பாம்பு ஒடு ஆடி - படத்தையுடைய வெவ்விய சர்ப்பாபரணத்தோடு நடிப்பவரும்,—நரி எலாம் பரிகள் ஆக் கும் சித்தர் தென் தில்லை மூன்று காவதம் என்னச் சென்றார் - குறுநரி களையெல்லாம் உத்தமலக்கணங்களையுடைய குதிரைகளாக உருத்திரித்த சித்துவித்தையையுடையவருமாகிய சபாநாயகரது தெற்கின்கணுள்ள தில்லைமாநகரம் இனி மூக்காவத தூரத்தினதென்று கண்டோர் தம்முட் கூறச் சமீபமாகச் சென்றருளினார். எ-று.

ஆகவென்பது ஆவெனக் கடைக்குறைந்து நின்றது. ஆடி பெயர். ()

வே று.

தாமூரன் மடப்பார்வையர் தோளாசையி லாளா
மாமூகரு மிட்டுண்டுயிர் வாழாதவர் தாமுந்
தீமூள்கர வரன்மேலருள் செய்யாதவர் பலரும்
போமூர்வழி போகாதவர் புலியூர்வழி போனார்.

இ—ள்: தாழூரல் மடப் பாவையர் தோள் ஆசையில் ஆள் ஆம் மாழூகரும் - சுத்தமாகிய முறுவலையுடைய இளமைபொருந்திய மகளிரது தோள்களைத் தழுவு மாதர வொன்றுனே அம்மகளிருக்குத் தாஞ் சதா காலமுமாட்படுகின்ற மூழூமூடரும்,—இட்டு உண்டு உயிர் வாழாதவர் தாமும்-பிறருக்குக் கொடுத்துத் தாமு முண்டுயிர் வாழாத லோபிகளும்.—தீ மூள் கர அரன்மேல் அருள் செய்யாதவர் பலரும் போம் ஊர்வழி போகாதவர் - அக்கினி சுவாலிக்குங் கையையுடைய சிவபெருமான் மாட்டன்பு செய்யாத பொறியிலிகளுமாகிய பாவிகள் மறுமைக்கட் செல்லு நிரய நெறிக்கட் செல்லாத திருவாதவூரடிகள்,—புலியூர் வழி போனர்-வியாக்கிரபுரமாகிய சிதம்பரத்துக்குச் செல்லும் அந்நெறிகட்சென்றருளினர். எ-று.

தூரலென்பது பல்லுக்கும் நகைக்கும் பொதுப்பெயராகலிற், சுத்தமென்னு முரைக்கு முறைமேய பரிசுத்தமும் வெண்மையுமெனப் பொருள் கொள்க. புணர்ச்சிக்காலத்து மகளிரதுறுப்புக்கள் சுத்தமுடையன வென்ப தின்ப நூற்றுணிபாகலின், அதுபற்றித் தூழூரலென விசேடித்தார். இனி நகைக்கியையப்பொருள்கொள்ளுங்கால் தூ என்பதற்குப் பற்றுக்கோடெனப் பொருள்கோடலுமொன்று; ஆசைக்குப் பற்றுக்கோடாகிய நகையென்க. இதனுனே பாவையர் மூகரைத் தமக்காளாக்குதற்குக் கருவிகூறியதூஉமாயிற்று. இது கலிவிருத்தம். (சரு)

செல்லுஞ்சுர மிருபாலொளி திகழ்கொன்றைகண் மலரா
வெல்லொன்றிய விமையோருல கெனநின்றன வெங்கும்
புல்லுஞ்சிவ நாமத்தமிழ் போல்வண்டிசை பாடச்
சொல்லும்பொருள் வல்லார்தம கைபோன்றன தோன்றி.

இ—ள்: செல்லும் சுரம் இரு பால் ஒளி திகழ் கொன்றைகள் மலரா எல் ஒன்றிய இமையோர் உலகு என எங்கும் நின்றன - இங்ஙனந் திருவாதவூரடிகள் செல்லும் வழியினிருமருங்கினும் செவ்வொளி விளங்காநின்ற பொற்கொன்றைகண் மலருதலினுல் அவ்வனம் பொற்பிரகாசத்தையுடைய தேவருலகென்று சொல்லும்படி அவைகளெங்கும் பரந்து நின்றன,—சிவ நாமம் புல்லும் தமிழ் போல் வண்டு இசை பாட - சிவநாமத்தோடு பொருந்துந் தமிழ்வேதமாகிய திருவாசகத்தைப்போல இனிதாக வண்டுகள் கீதம்பாட,—தோன்றி பொருள் சொல்லும் வல்லார் தமகை போன்றன - செங்காந்தண்மலர்கள் அவ்விசைப்பாட்டிற்குப் பொருள்சொல்லுஞ் சாதுரியத்தையுடைய நாடகமகளிரது அபிநயங்காட்டுங் கைகளையொத்தன. எ-று.

பொருள்சொல்லும் கை எனமுடிக்க. நாடகமகளிர் வாயாற்பாடு மிசைப்பாட்டிற்கு அவரபிநயக் கைகளே பொருள்கூறுமென்பது நாடக நூல்வழக்கென்க. அது "வாயுரைசெய் சொற்பொருண் மலர்க்கர

மூரைப்ப, மீயுயர் விசும்பினெழு மென்புளொலி யெல்லாம், பாயொளிய பஞ்சுறு பதத்துற மிதித்துப், பேயொடு நடித்த விறை பித்துற நடித்தாள்" என்னும் பிரபுலிங்கலீலை மாயை பூசனைசெய்கதிச் செய்யுளானுமறிக. இம்மந்தர்நாடகமகளிர்க்கல்ல தேனையர்க்கு வாராமையின் அவரை வல்லா ரென்றார். அவ்வனம் பொன்னுலகையும், அவ்வண்டுகளிசை அப்பொன் னுலகத்துமரிய திருவாசகத்தையும், அவ்வனத்தசைகின்ற செங்காந்தண் மலர்கள் அப்பொன்னுலகத்து நாடகமகளிரது அபிநயக்கைகளையு மொத் தனவென்பது கருத்து. பெருந்தகைமையையுடைய இவ்வடிகளது வீர வின்பொருட்டு அவ்வனம் அலங்கரிக்கப்பட்டுப் பாடியாடப்பெற்றிருந் தாற்போன்றதென்பது தாற்பரியமென்க. இனிச் சொல்லும் பொருள் வல்லார் தம் கைபோன்றன என்பதற்குப் பொருள்சொல்லும் வித்து வான்களது கைகளை ஒத்தன எனப்பொருள் கூறுவாருமுளர். அவர் பொருள்சொல்லுங்காற் கைகாட்டுதல் கூத்தாட்டுநீர்மைத்தாய்க் குற்றமா வதல்லது குணமாகாமையின் அதுபோலியுரையென்றொழிக. (சுசு)

தெள்ளுஞ்சிவ ஞானஞ்சிறி தில்லார்தவ வேடங்
கொள்ளுஞ்செய லெனவொண்மலர் குலவுங்கவி ரெல்லாம்
பள்ளம்படர் புனல்போற்புலன் வழியேபயில் சிறியோ
ருள்ளந்தமை யொக்குந்திகழ் மைக்கொண்டொளிர் காயா.

இ—ள்: தெள்ளும் சிவஞானம் சிறிது இல்லார் தவவேடம் கொள்ளும் செயல் என - தெளிவைத்தருஞ் சிவஞானஞ் சிறிதுமில்லாத கபடிகள் தவவேடத்தை மேற்கொள்ளுந் தன்மைபோல,—கவிர் எல்லாம் ஒள் மலர் குலவும் - முருக்குக்களெல்லாம் வாசனையற்ற செவ்வொளி மிக்க மலர்களாற் சிறந்து விளங்கும்,—திகழ் மைக்கொண்டு ஒளிர் காயா-மிகவிளங்காநின்ற கருநிறத்தைக் கொண்டு பிரகாசிக்குங் காயாமலர்க ளானவை,—பள்ளம் படர் புனல் போல் புலன் வழியே பயில் சிறியோர் உள்ளம் தமை ஒக்கும்,—பள்ளத்தைநோக்கித் தானே செல்லும் நீரைப் போலச் சத்தாதி யைம்புலன்வழியே தடையற்றுச் செல்லுங் கீழ்மக்களது கரிய மனங்களை நிகர்க்கும். எ-று.

சிறிதுமென்னு மிழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. மையென் னும் விசேடணம் மலராகிய ஆகுபெயர்ப்பொருளை விசேடித்துநின்றது. பாவத்துக்கு நிறம் கருமையாகலின், அப்பாவத்தையுடைய மனங்கள் கரிய காயாமலர்களுக் குவமையாயினவென்க. (சுஎ)

பாயுங்குல மந்தித்திரள் பயிலுந்தொறு மசையா
வீயின்குழு வெழுதேனி னிறுல்சேர் மலர்நாக
மாயந்திகழ் தாராகண மகல்வான்மிளிர் மதிய
மேயும்படி கிளர்பொங்கரி னிடைநின்றன வெங்கும்.

இ—ள்: பாயும் குல மந்தித் திரள் பயிலும் தொறும் அசையா ஈயின் குழு எழு தேனின் இருல் மலர் சேர் நாகம் - பாயுமியல்பையுடைய மிருகசாதியாகிய குரங்குக்கூட்டங்கள் சஞ்சரிக்குந்தோறு மசைதலான் ஈயினதுகூட்டங்கள் எழப்பெறுந் தேன்கூடும் மலர்களும் பொருந்தப் பெற்ற புன்னைமரங்கள்,—அகல் ஆயம் வான் திகழ் தாராகணம் மிளிர்மதியம் ஏயும்படி கிளர் பொங்கரின் இடை எங்கும் நின்றன - அகன்ற ஆகாயமும் அதன்கண் விளங்குகின்ற நட்சத்திரகூட்டமும் சோடசகலைகளோடு கூடி விளங்கும் பூரணசந்திரனு மொக்குமென்று கவிஞர்கூறும்படி கிளராநின்ற சோலைகளின் எவ்விடத்தும் நின்றன. எ-று.

ஆகாயம் ஆயமென இடைக்குறைந்துநின்றது. நாகமரத்தினிலைச் செறிவு ஆகாயத்திற்குவமை. மலர் விதந்துகூறப்பட்டமையின், இனம் பற்றி இலைவிதப்பும் கொள்க. புன்னைமரங்கள் ஆகாயத்தையும், மலர்கள் நட்சத்திரகூட்டத்தையும், தேன்கூடு பூரணசந்திரனையு மொக்குமென்பது கருத்தாகலின் எதிர்நிரனிறை. ஆயமென்பதற்குப் பிறிதுரைப்பாருமுளர். (சஅ)

பக்கங்கிளர் கமுகின்றிரள் பலசாமரை வீசக்
கொக்கின்றளிர் போதும்பல குயில்காகள மூதத்
தொக்கன்பொடு விண்ணாதிபர் சொரியும்பல பொற்பூ
வொக்கும்படி மலர்சிந்தின வொண்சண்பக சோலை.

இ—ள்: பக்கம் கிளர் கமுகின் திரள் பல சாமரை வீச - திருவாதவூரடிகள் செல்லுநெறியின் இருபக்கங்களினுங் கிளராநிற்கும் கமுகுகளினது கூட்டங்கள் தம் பூம்பாளையாகிய பலசாமரங்களை அவ்வடிகட்கிரட்டவும்,—கொக்கின் தளிர் கோதும் பல குயில்கள் காகளம் ஊத - மாவினது இளந்தளிர்களைக் குடையும் பல குயில்கள் தம்மலகுகளாகிய சிறுசின்னங்களை ஊதவும்,—பல விண் ஆதிபர் தொக்கு அன்பு ஒடு சொரியும் பொன் பூ ஒக்கும்படி - பல தேவத்தலைவர்கள் ஒருங்குதிரண்டு அன்போடுமுகந்தவ்வடிகண்மீது சொரியும் சுவர்ணபுஷ்பாஞ்சாலியையொக்குமென்று கூறும்படி,—சண்பக சோலை ஒண் மலர் சிந்தின - சண்பகச்சோலைகள் பொன்னிறம்பொருந்திய மலர்களைச் சிதறின. எ-று.

கொக்கு திசைச்சொல். திருவாதவூரடிகளது வழிவருத்தந் தீரும் பொருட்டுச் சாமரங்களை வீசியும், விநோதத்தின்பொருட்டு மங்கலவாத்தியகோஷஞ் செய்தும், அவரது தெய்வத்தன்மையின் பொருட்டுச் சொர்ணபுஷ்பாஞ்சாலி செய்தும் உபசரிப்பவரை ஒத்திருந்தன என்பது கருத்தென்க. (சகூ)

நீங்காவள மிவ்வாறுள நீள்சூத நரந்தந்
தேங்காரளி முரல்பாதிரி தெங்கின்றிரள் வகுளங்
கோங்காசினி கொந்தார்செழு மந்தார நெருங்கும்
பூங்காவை யகன்றூர் புலியூர்நன்னகர் கண்டார்.

இ—ள்: நீள் சூதம் நரந்தம் தேம் கார் அளி மூரல் பாதிரி தெங்கு வகுளம் கோங்கு ஆசினி கொந்து ஆர் செழும் மந்தாரம் நெருங்கும் - நெடியமாவும் நாரத்தையும் மதுபானஞ்செய்யுங் கரிய வண்டுகள் சத்திக்கின்ற பாதிரியும் தெங்கும் மகிழும் கோங்கும் பலாவும் கொத்தார்ந்த செழிய மந்தாரமுமாகிய மரங்கணெருங்கப்பெறும்,—இவ்வாறு நீங்கா வளம் உள பூங்காவை அகன்றார் நல் புலியூர் நகர் கண்டார் - மேலேகூறிய இந்தப்பிரகாரம் ஓர்காலும் நீங்காத வளங்களையுடைய பூஞ்சோலையைத் திருவாதவூரடிகணீங்கி நல்ல சிதம்பரமாகிய சிவக்ஷேத்திரதரிசனஞ் செய்தார். எ-று.

வளமிவ்வாறுள பூங்கா, நெருங்கும் பூங்காவெனத் தனித்தனிகூட்டுக. திரளென்பதைச் சூதமுதலியவற்றோடு தனித்தனி கூட்டிப் பன்மை செய்து கொள்க. ஆசினி பலாவினோர் விசேடம். (௱௦)

சேணொன்றிய மதிலும்பணி திகழ்கோபுர நிரையுஞ்
சோணந்தரு கும்பங்கிளர் துணைமாளிகை பலவுங்
காணுந்தொறு மெழில்செய்வது கண்டஞ்சலி கொண்டே
பூணுந்திரு வருளன்பர் புகழ்ந்தாருண் மகிழ்ந்தார்.

இ—ள்: சேண் ஒன்றிய மதிலும் - மேற்றளம் ஆகாயத்திலுயர்ந்த மதிலும்,—பணி திகழ் கோபுர நிரையும் - சிற்பத்தொழில் விளங்குந் திருக்கோபுரவரிசைகளும்,—சோணம் தரு கும்பம் கிளர் துணைமாளிகை பலவும் - பொற்கும்பங்கள் பிரகாசியாநின்ற இணைமாடங்கள் பலவும்,—காணும் தொறும் எழில் செய்வது கண்டு அஞ்சலி கொண்டு - பார்க்குந்தோறுங் கண்களுக்கழகுசெய்வதைக்கண்டஞ்சலிசெய்து,—திரு அருள் பூணும் அன்பர் புகழ்ந்தார் உள் மகிழ்ந்தார் - சபாநாயகரது திருவருளைப் பெறத் தகுமன்பையுடைய திருவாதவூரடிகள் அவற்றைத் தம்வாக்காற் புகழ்ந்து மனமகிழ்ச்சியுடையராயினர். எ-று.

சோணம்-செந்நிறம்; ஆகுபெயர். துணைமாளிகை அடுக்குமாளிகையுமாம். (௱க)

வேதந்தரு மொலியுந்தொழும் விண்ணோர்தம தொலியுங்
கீதந்தரு மொலியுங்கிளர் முழவங்களி னொலியும்
போதந்தரு சிவஞானிகள் புகலாகம வொலியு
மோதுந்தமி ழொலியுங்கட லொலிசெய்தன புலியூர்.

இ—ள்: புலியூர் - அந்தச்சிதம்பரத்திலே,—வேதம் தரும் ஒலியும் - வேதாத்தியயனஞ்செய்யுமொலியும்,—தொழும் விண்ணோர் தமது ஒலியும் - வழிபடுந் தேவர்களது தோத்திரவொலியும்,—கீதம் தரும் ஒலியும் - சங்கீதங்களினொலியும்,—கிளர் முழவங்களின் ஒலியும் - பெரிய மிருதங்கங்களி னொலியும்,—சிவஞானிகள் புகல் போதம் தரு ஆகம ஒலியும் - சிவஞானிகள் படனஞ்செய்கின்ற எம்போலிகட்கும் நல்லறிவுச்சுடர்

கொளுத்துஞ் சைவாகமங்களி னொலியும்,—ஓதும் தமிழ் ஒலியும் கடல் ஒலிசெய்தன - ஓதுகின்ற தமிழ்ப்பிரபந்தங்களினொலியும் சமுத்திரம் போல வொலித்தன. எ-று. (நஉ)

நிரையொன்றிய மணிமாளிகை நெடுவீதிக ளகலா
வரையொன்றிய வுயர்கோபுர மணிவாயில் புகுந்தே
யுரையொன்றிய சிவஞான முணர்த்துஞ்சிவ நன்னூற்
கரைகண்டவர் மணிமன்றெதிர் கண்டாரருள் கொண்டார்.

இ—ள்: உரை ஒன்றிய சிவஞானம் உணர்த்தும் நல் சிவநூல் கரைகண்டவர் - உயர்ச்சிபொருந்திய சிவஞானத்தை விளக்கும் நல்ல சைவாகம சமுத்திரத்தைக் கரைகண்ட திருவாதவூரடிகள்,—நிரை ஒன்றிய மணிமாளிகை நெடுவீதிகள் அகலா - வரிசையாகப் பொருந்திய திருமாளிகைகளையுடைய நெடியதிருவீதிகளைக் கடந்து,—வரை ஒன்றிய உயர் மணிகோபுர வாயில் புகுந்து - மலைபோலவுயர்ந்த அழகிய திருக்கோபுரவாய்தலின் வழியாக ஆலயத்தினுட் பிரவேசித்து,—மணி மன்று எதிர்கண்டார் அருள் கொண்டார் - அழகிய கனகசபையைநேரே தரிசித்து முன்னையினும் பத்தி மிக்குடையராயினர். எ-று.

கண்டாரென்ப தெச்சமுற்று. அருள்-அன்பு. அது "நீமூள் கரவுரன் மேலருள் செய்யாதவர்பலரும், போமூர்வழி போகாதவர்" என ஆசிரியர்மேற் கூறியவாற்றானுமறிக; காரணகாரிய வுபசாரமென்றலுமொன்று. இருபத்தெட்டாகமங்களும் அத்துணைக்கோடி கிரந்தங்களுடையனவாகலின் அவ்விரிவுடைமைதோன்றச் சிவநன்னூற்கரை என்றும், இடையறாது தானேமுறுகிவளரும் பத்திமையுடையார்க்குஞ் சந்நிதி காட்சிப்பட்டுழி இத்துணைத்தென்று கூறுதலாற்றாத அதிவிசேடபத்தி சனிக்குமாகலின் மணிமன்றெதிர்கண்டாரருள் கொண்டாரென்றுங் கூறினர். (நங)

பொன்னார்பொது நின்றாடிய புனிதன்றனை முடிமே
லந்நாளடி வைக்கும்பர னாகும்படி கண்டார்
மன்னாவுயி ரன்னாய்மணி மன்றாசர ணென்றே
சொன்னார்பல காலன்பொடு தொழுதார்மிக வழுதார்.

இ—ள்: பொன் ஆர் பொது நின்று ஆடிய புனிதன்றனை முடிமேல் அந்நாள் அடி வைக்கும் பரன் ஆகும் படி கண்டார் - திருவாதவூரடிகள் கனகசபையின்கணின்று திருநடனஞ் செய்தருளுகின்ற நிருமலராகிய சபாநாயகரை முன்னரே தஞ்சிரசின்மீது திருவடிதீக்கை செய்தருளிய பரமாசாரியசுவாமிகளாகத் தரிசிக்கப்பெற்றார்,—பலகால் அன்பு ஒடு தொழுதார் - பலதரம் அன்போடுவணங்கினர்,—மிக அழுதார் - பின் மிகவும் பிரலாபித்தார்,—மன்னா - முழுமுதலே,—உயிர் அன்னாய் - எனக்கென்னையொப்பவரே,—மணிமன்றா சரண் என்று பலகால் சொன்னார் -

அழகிய சபாநாயகரே அடியேன் தேவரீருக் கடைக்கல மடைக்கலமென்று பலமுறை தோத்திரஞ்செய்தார். எ-று.

தம்மினும் மிகத் தமக்கினிய சபாநாயகரைத் திருவாதவூரடிகள் தமக்குத் தம்மையொப்பவரென்றது, ஒருவர்க்குத் தம்முயிரினுஞ்சிறந்த பிறிதொரு பொருளில்லையென்னு முலகவழக்கின் வைத்தவரது அருமை எளிதில் விளக்குதற்பொருட்டென்க. "என்னில்யாருமெனக்கினியாரிலை, யென்னிலும்மினியாளொருவன்னுளன்" என்பதனானுமறிக. (ருஉ)

விண்டேயிரு கண்ணீர்விழ வீழ்ந்தின்னடி முடிமேற்
கொண்டேபி னெழுந்தன்பொடு குறையாவரு ணிறையா
வண்டேர்குழ லுமைபங்கனை வண்டில்லையு ளின்னே
கண்டேனென நற்பாடல் கருத்தார வுரைத்தார்.

இ—ள்: இரு கண் விண்டு நீர் விழப் பின் வீழ்ந்து இன் அடி முடி மேல் கொண்டு எழுந்து - திருவாதவூரடிகள் இருகண்களூ மிமையாது ஆனந்தபாஷ்பம்பொழியப் பின்னருஞ் சந்நிதியில் வீழ்ந்து தமக்குத் தம்மினுமினிய திருவடிகளைச் சிரசில் வகித்துக்கொண்டு வணங்கியெழுந்து நின்று,—குறையா அன்பு ஒடு அருள் நிறையா - தம்பேரன்பினாலே திருவருள் நிறையப்பெற்று,—வண்டு ஏர் குழல் உமை பங்கனை - வண்டுகள் மொய்க்கப்பெறும் அழகிய கூந்தலையுடைய சிவகாமியம்மை சமேதராகிய சபாநாயகரை,—வண் தில்லை உள் இன்னே கண்டேன் என நல்பாடல் கருத்து ஆர உரைத்தார் - "இந்திரியவயமயங்கி" என்றெடுத்து வளவிய தில்லைமாநகரத்திதுபொழுது "கண்டேனே" என்றிறுதிகடோறும் பெய்து நல்ல பாடலாகிய கண்டபத்தென்னுந் திருவாசகத்தை மனங்கொளப் பாடியருளினர். எ-று.

சபாநாயகரது திருவருளைப் பெறுதற்குத் திருவாதவூரடிகளதன்பு கருவியாகலின், ஒடுவுருபு கருவிப்பொருட்கண் வந்ததென்க. தேவமகளிர் கூந்தலிலேயே வண்டுவீழ்தலின்றாகவும், அகிலதேவநாயகியாகிய சிவகாமியம்மையினது கூந்தலில் வண்டுவீழ்வதாக ஈண்டாசிரியர் கூறியது கூந்தற்பொதுமைபற்றி என்க. தேவமகளிர் கூந்தலில் வண்டு வீழாமையை, "வண்டே யிழையே வல்லி பூவே, கண்ணே யலமர லிமைப்பே யச்சமென், றன்னவை பிறவு மாங்க ணிகழா, நின்றவை களையுங் கருவியாகும்" என்பதனானறிக. (ருங)

குன்றாவருண் மூலந்திகழ் குறியாகிய சுடரு
மன்றாகிய வெளியூடு மகிழ்ந்தாடிய வொளியு
மொன்றாகிய வநுபூதியி லுற்றார்செய லற்றார்
நின்றாரசை வில்லாவொரு நிலையேயவிய மானார்.

இ—ள்: குன்றா அருள் மூலம் திகழ் குறி ஆகிய சுடரும் மன்று ஆகிய வெளி ஊடு மகிழ்ந்து ஆடிய ஒளியும் ஒன்று ஆகிய அநுபூதியில்

உற்ருர் - திருவாதவூரடிகள் குறைவற்ற கிருபையையுடைய திருமூலஸ்தானத்தில் விளங்குஞ் சிவலிங்கப்பெருமாளுகிய சோதியும், கனகசபையாகிய சிதாகாசத்திலே மகிழ்ந்து திருநிருத்தஞ்செய்தருளுஞ் சபாநாயகராகிய சோதியுந் தம்முளிரண்டற்ற சிவாநுபூதியையடைந்து,—செயல் அற்ருர் - ஆன்மசேட்டைகளற்று,—அசைவு இல்லா ஒரு நிலை ஓவியம் ஆனுர் நின்ருர் - புருஷாகாரமாக எழுதிய ஒரு சித்திரம்போன்றவராய் அசைவறநின்ருர். எ-று.

அணுபக்ஷத்து நவந்தருபேதங்களை அதிட்டித்துநின்று பிரேரித்தன் மாத்திரைக்கே சம்புபக்ஷத்தும் நவந்தருபேதம் கொள்ளப்பட்டனவன்றிச் சிவஞானிகள் சம்புபக்ஷத்தில் மெய்யுணர்வாளுேக்குமிடத்து எல்லா மொன்றேயாகலிற் குன்ருவருண்மூலந்திகழ்குறியாகியசுடரு, மன்ருகிய வெளியூடுமகிழ்ந்தாடியவொளியு, மொன்று என்ருர். அது "சயம்புமாலரனேயீசன்சதாசிவன்விந்துநாதம், பயந்தருசத்திமேலாம் பரசிவனெடுங்குந் தானம், வியந்திடுநிருத்தானந்த மெய்ம்மைகொள்குருவுருப, முயர்ந்திடு வானிற்சாப முருகுநெய்க்கணமும்போலும்" என்பதனுனும், "நவந்தரு பேதமேகநாதனேநடிப்பன்கண்டாய்" என்பதனுனும், பிறவாற்ருனு முய்த்துணர்க. (௫௬)

மைகால்குழ லுமைபங்கினன் வழிபாடு மறந்தே
கைகாலசை விலவாயின கண்ணுஞ்சிறி திமையா
செய்காரிய மென்னுேவிது தெருளாமரு ளென்னு
மெய்காவலர் மணிமன்றை விடப்போமினி யென்ருர்.

இ—ள்: மை கால் குழல் உமை பங்கினன் வழிபாடும் மறந்து - அத்தருணத்துக் கருமைவிளங்கும் கூந்தலையுடைய சிவகாமிசமேதராகிய சபாநாயருக்கு மனவாக்குக் காயங்களிஞற் செய்யும் வழிபாட்டையுமறத்தலிஞலே,—கை கால் அசைவு இல ஆயின - கரசரணுதி அவயவங்களும் நிஷ்கம்பமாயின,—கண்ணும் சிறிது இமையா - கண்களுஞ் சிறிதுமிமைக்கின்றில,—செய் காரியம் என்னுே - இதற்குநாம் செய்யுங்காரியம் யாதோ,—இது தெருளா மருள் என்னு - இது மணி மந்திர ஔஷதங்களாலே தீராததொரு மயக்கமாமென்று கவலைகூர்ந்து,—மெய்காவலர் மணி மன்றை விடப் போம் இனி என்ருர் - மெய்காப்பாளர் அழகிய கனகசபையைவிட்டினியகலப்போமென்று கடிந்துகூறிஞர். எ-று.

செய்காரியமென்னுே என்பதைத் திருவாதவூரடிகண்மீதேற்றி இவர் செய்யுங்காரியம் யாதோ என்றலுமொன்று. (௫௭)

வேறு.

பூண்டருள் கொண்ட காவல் புரிபவ ருரைத்தல் கேளார்
தாண்டவ நிகழு ஞானத் தன்மையின் ருன்மை நாடிக்
காண்டகு துரியா தீதக் கழிபரத் தொளியின் மூழ்கி
நீண்டதோர் தம்ப மாகி நின்றனர் நெடிது போது.

இ—ள்: பூண்டு கொண்ட அருள் காவல் புரிபவர் உரைத்தல் கேளார் - தம்மதிகாரிகண்மாட்டுத் தாம் பெற்றுக்கொண்ட எவலையுடைய மெய்காப்பாளர் கூறிய வார்த்தையைத் திருவாதவூரடிகள் கேட்கப்பெறாத வராகி,—நிகழும் தாண்டவம் தொன்மைத் தன்மை ஞானத்தின் நாடி - அண்டத்தே சுத்தமாயாமயமாகிய கனகசபையினும் பிண்டத்தே தமது லலாடத்தானமாகிய புருவமத்தியினும் முறையே தூலசூக்குமமாக நிகழும் அநவரததாண்டவத்தைப் பழைய திவ்விய ஞானக்கண்கொண்டு தம்முள்ளாய்ப் பத் தரிசித்து,—காண் தகு துரியாதீதக் கழிபரத்து ஒளியில் மூழ்கி - அவ்வழிக் காணத்தக்க துரியாதீதமாகிய சுத்தசிவநின்மலவொளியின்கட் புக்கழுந்தி,—நெடிது போது நீண்டது ஓர் தம்பம் ஆகி நின்றனர் - நெடுநேரம் நீண்டதொருஸ்தம்பம்போல அசைவற நின்றார். எ-று.

சிவமூர்த்திபேதங்களைக்கடந்த சிவமென்பார் கழிபரமென்றார். கழிபரம் வினைத்தொகை; கரைகழிபந்தம் என்புழிப்போல. மேல் அசைவில்லாவொருநிலை யேயோவியமாய்நின்ற ஆரம்பநிலையோ டிதனிடை வேற்றுமைதெரித்துக்காட்டுவார் "நீண்டதோர் தம்பமாகிநின்றனர்நெடிதுபோது" என்றுகூறினர். "தாண்டவநிகழுஞானத்தன்மையின்றொன்மைநாடி" என்பதற்கு நிருத்தகாரியத் திருவுளக்குறிப்பின்மூலத்தை ஆராய்ந்தென்றுமாம். துரியாதீதக் கழிபரத்தொளியின்மூழ்குதலை, "தத்துவம்போய்க் கேவலம் போய்த்தான் போயருள்கழன்று, சுத்தபரையாய்த் தன் சுதந்தரம் போய்ச்—சத்தி, யொழிவிலேபோதம் போயொன்றாகவொன்றி, னழிவிலேயின்பவதீதம்" என்பதனானுமறிக. இது அறுசீரடியாசிரிய விருத்தம். (ருஅ)

போமெனப் போகா ரொன்றும் புகல்கிலர் பித்தங் கொண்டா
ராமெனக் காவ லாள ரஞ்சிநின் றழுங்கு மெல்லைச்
சாமுடற் குயிர்வந் தெய்துந் தன்மைபோற் குவிந்த கஞ்சத்
தேமலர்க் கரமேல் கொண்டு சிவசிவ போற்றி யென்றார்.

இ—ள்: போம் எனப் போகார் ஒன்றும் புகல்கிலர் - நாம் போமென்றுசொல்லவும் போகின்றிலர்; அதன்மேல் ஒன்று பேசுவதுஞ் செய்கின்றிலர்,—பித்தம் கொண்டார் ஆம் எனக் காவலாளர் அஞ்சி நின்று அழுங்கும் எல்லை - இவர் பித்தாதிக்கரோகங்கொண்டார்போலுமென்று மெய்காப்பாளர் அச்சமுற்றுநின்று வருந்துகின்றுழி,—சாம் உடற்கு உயிர் வந்து எய்தும் தன்மை போல் குவிந்த தேம் கஞ்ச மலர் மேல் கொண்டு சிவசிவ போற்றி என்றார் - இறந்தவுடம்பினுண் மீள அவ்வுயிர்வந்தெய்துமாறுபோலத் தாமே அஞ்சலியாகக் குவிந்த தேனையுடைய செந்தாமரை மலர்போலுந் திருக்கரங்களைச் சிரசின்மேல்வைத்து, "சிவசிவபோற்றி" என்றார். எ-று.

பித்தாதிக்கரோகம் வைத்தியம். தெளிந்தாரென்பதாம். (ருகூ)

முன்னவன் செம்பொன் மன்றை மும்முறை வலங்கொண் டங்
தன்னிக ரில்லா மூலத் தலைவனை வணங்கிப் பின்ன [குத்
ரன்னையம் பிகைதன் பாத மன்புட னிறைஞ்சி யந்தப்
பொன்னவிர் கோயின் மேல்பாற் புலீச்சரஞ் சென்று சேர்ந்து.

இ—ள்: முன்னவன் செம்பொன் மன்றை மும்முறை வலம் கொண்டு - முழுமுதலாகிய சபாநாயகரது மாற்றுயர்ந்த கனகசபையை மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்து அதன்பின்பு,—அங்குத் தன் நிகர் இல்லா மூலத் தலைவனை வணங்கி - அங்கே தமக்கு நிகரில்லாத சிவலிங்கப் பெருமானாகிய திருமூலட்டானேசுரரைத் தரிசித்து வணங்கி,—அன்னை அம்பிகைதன் பாதம் அன்பு உடன் இறைஞ்சி - அகிலலோகசனனியாகிய உமையம்மையினது திருவடிகளை அன்போடு தரிசித்துவணங்கி,—பின்னரிப் பொன் அவிர் அந்தக் கோவில் மேல் பால் புலீச்சரம் சென்று சேர்ந்து - அதன்பின்னர்ப் பொன்மயமாய் விளங்குகின்ற அவ்வாலயத்தின் மேலைத்திக்கிலுள்ள திருப்புலீச்சரத்திற் போய்ச்சேர்ந்து. எ-று. (சுo)

வரந்தர விருந்த நாதன் மலரடி வணங்கி நாகேச்
சரந்தனி லிருந்த வண்ண றன்பத மிறைஞ்சி நீங்கித்
திருந்திய மறையோர் வாழுந் தில்லையம் பலஞ்சூழ் வீதி
பொருந்துழி யமிர்த மான வாசகம் புகல லுற்றார்.

இ—ள்: வரம் தர இருந்த நாதன் மலர் அடி வணங்கி - அத்திருப் புலீச்சரத்திலே தம்மெய்யன்பர்களுக்கு வேண்டிய வரங்களைப் பிரசாதித் தருளும்பொருட்டுச் சிவலிங்கத்திருமேனிகொண்டு வெளிப்பட எழுந் தருளியிருக்கின்ற சிவபெருமானது செந்தாமரைமலர்போலுந் திருவடி களைத் தரிசித்து வணங்கி,—நாகேச்சரந்தனில் இருந்த அண்ணறன் பதம் இறைஞ்சி நீங்கி - திருநாகேச்சரத்தி லெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமா னுடைய திருவடிகளைத் தரிசித்து வணங்கி அவ்விடத்தினின்று நீங்கி,— திருந்திய மறையோர் வாழும் தில்லையம்பலம் சூழ் வீதி பொருந்துழி - திருத்தமாகிய தில்லைவாழந்தணர் வசிக்கின்ற கனகசபையைச்சூழ்ந்த திரு வீதியிலே தாம் செல்கின்றுழி,—அமிர்தம் ஆன வாசகம் புகலல் உற்றார் - கேட்போரது செவிப்புலங்கட் கமிர்தமயமாகிய திருவாசகங்களைப் பாடி யருளுவாராயினார். எ-று.

திருப்புலீச்சரம் வியாக்கிரபாதமுனிவர் ஆன்மார்த்தலிங்கபூசை செய்த தானம். திருநாகேச்சரம் சேஷனது அவதாரமாகிய பதஞ்சலிமுனிவர் ஆன்மார்த்தலிங்கபூசைசெய்த தானம். (சுக)

ஆடுமிக் குலாநற் றில்லை யாண்டவன் றனைக்கொண் டென்னும்
பாடலைப் புகன்று கோயி லிருவகைப் பதிகங் கூறி
நாடுமச் சிவ புராண மொழிந்தநல் லகவன் மூன்று
நீடுமெய்த் தமிழு மன்பா லோதினார் நீதி மிக்கார்.

இ—ள்: நீதி மிக்கார் - ஒழுக்கத்தின் மிக்க திருவாதவூரடிகள்,— ஆடும் குலாத் தில்லை ஆண்டவன் தனைக் கொண்டு என்னும் இந் நல் பாடலைப் புகன்று - "ஆடுங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே" என்னும் இந்நல்ல சொற்றொடரை ஈற்றடியாகவுடைய குலாப்பத்தென் னுந் திருவாசகத்தைப் பாடியருளி,—கோயில் இருவகைப் பதிகம் கூறி- கோயின் மூத்த திருப்பதிகம் கோயிற்றிருப்பதிகமென்னு மிவ்விருவகைத் திருவாசகங்களையும் பாடியருளி,—நாடும் அச் சிவபுராணம் ஒழிந்த நல் மூன்று அகவல் மெய் நீடு தமிழும் அன்பு ஆல் ஓதினர் - ஆராயத்தகும் அச்சிவபுராணமாகிய கலிவெண்பாவை யொழித்தொழிந்த நல்ல கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவலென்னும் ஆசிரி யப்பா மூன்றுமாகிய உண்மைமிக்க தமிழ்வேதங்களையும் சிரத்தையோடு பாடியருளினார். எ-று.

கோயில் சிதம்பரம். மூத்தல்-உயர்தல். அது "பேறிழவின்பமோடு பிணிமூப்புச்சாக்காடென்னு, மாறுமுன்கருவுட்பட்டது" என்பதனானும், "விண்ணோர்க்கெல்லா மூப்பாய்" என்பதனானுமறிக. (கூஉ)

கைவளை சிலம்பச் செம்பொற் கிண்கிணி கறங்கச் சூழ்ந்து
மைவளர் குழன்மேல் வண்டு மருண்டிசை திரண்டு பாட
மெய்வியர் வரும்ப வெம்போர் விழிக்கயல் புரட்டி ஞாங்க
ரிவ்வகை நின்று சுண்ண மிடித்தனர் மடந்தை நல்லார்.

இ—ள்: மடந்தை நல்லார் - மடந்தைப்பருவத்தையுடைய மகளிர் கள்,—கைவளை சிலம்ப - கைகளிற்றரித்த வளையல்களொன்றோடொன்று ராய்ந்து சத்திக்கவும்,—செம் பொன் கிண்கிணி கறங்க - மாற்றுயர்ந்த பொன்னாலாகிய சதங்கைகளொலிக்கவும்,—மை வளர் குழன் மேல் வண்டு மருண்டு திரண்டு சூழ்ந்து இசை பாட - கருமைவளராநின்ற கூந்தலின்மீது வண்டுகள் மயங்கி ஒருங்குதிரண்டு சூழ்ந்து கீதம்பாடவும்,— மெய் வியர்வு அரும்ப - சரீரத்திலே வெயர்வைபொடிக்கவும்,—வெம் போர் விழிக் கயல் புரட்டி - குழையோடுபொரும் வெவ்விய கண்களாகிய கயல்களைப் பிறழச்செய்து,—ஞாங்கர் இவ்வகை நின்று சுண்ணம் இடித்தனர் - அத்திருவீதியின்பக்கத்தே இந்தப்பிரகாரம் நின்று திருப்பொற்சுண் ணமிடித்தார்கள். எ-று.

விழிக்கயல் புரட்டி என்பதற்கு உலக்கை செல்லுமிடமெல்லாம் கட் பார்வையைச் செலுத்தியென்றுரைத்தலுமொன்று. மடந்தைப்பருவம் மகளிரெழுவகைப்பருவத்துளொன்று. அஃது பத்தொன்பதியாண்டுளவான பருவம். ஈண்டுச் சுண்ணமென்றது சுவாமிக்குச்சாத்தும் பரிமளப்பொடியை. மடந்தை பருவங்குறியாது நிற்றலுமொன்று. (கூந)

அத்திரு வனையார் பாடல் கேட்டவ ரிசைத்த தாக
மெய்த்தமி ழதனு ளன்கு மிகுதிருச் சுண்ண மோதி

மைத்திகழ் காவி னூடு வருதலு மாங்கே பொய்த
றத்தமின் முயலுங் காதற் சிறுமியர் தம்மைக் கண்டார்.

இ—ள்: அத் திரு அனையார் பாடல் கேட்டு - திருவாதவூரடிகள் இலக்குமிபோலும் அம்மகளிர்பாடுகின்ற வள்ளைப்பாட்டைக்கேட்டு,—அவர் இசைத்தது ஆக - அம்மகளிர் கூறியகூற்றாக,—மெய்த் தமிழ் அதனால் நன்கு மிகு திருச் சுண்ணம் ஓதி - மெய்ம்மையாகிய தமிழ்மொழியினாலே "முத்துநற்றாமம்பூமாலைதூக்கி" என்றெடுத்துப் "பொற்சுண்ணமிடித்துநாமே" என்றிறுதிதோறுமுடித்துநன்மைமிக்கதிருப்பொற்சுண்ணமென்னுந் திருவாசகத்தைப்பாடியருளி,—மைத் திகழ் காவின் ஊடு வருதலும் - கருநிறம் விளங்காநிற்கும் சோலையின்கட் செல்கின்றுழி,—மருங்கே பொய்தல் தத்தமில் முயலும் காதல் சிறுமியர் தம்மைக் கண்டார் - தம்பக்கத்தே பொய்தல்விளையாட்டைத் தம்முட்கூடித் தனித்தனிமுயலும் விருப்பத்தையுடைய சிறுபெண்களைக் கண்டார். எ-று.

பொய்தல் மகளிர்விளையாட்டு. தந்தமின் எனற்பாலது தத்தமினென வலிந்துநின்றது. வள்ளை மகளிர் பரிமளப்பொடி இடிக்கும்போது பாடும் உலக்கைப்பாட்டு". "கண்ணுதற்பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து, பண்ணுறத்தெரிந்தாய்ந்தவிப்பசுந்தமிழ்" ஆகலின் மெய்த்தமிழென விசேடிக்கப்பட்டது. (௯௪)

கண்டபின் வறிது கூறுங் கசட்டுரை சிறிது மற்றெ
மண்டனை யுரைமி னீரென் றவரவ ருரைத்த தாக [கம்
வெண்டரு திருத்தெள் ளேணந் திருவுந்தி யெழிற்றோ ணோக்
பண்டிகழ் திருப்பூ வல்லிப் பாடல்பொன் னூசல் சொன்னார்.

இ—ள்: கண்ட பின் - திருவாதவூரடிகள் அச்சிறுமியர்களைக் கண்டருளியபின்னர்,—நீர் வறிது கூறும் கசட்டு உரை சிறிதும் அற்று எம் அண்டனை உரைமின் என்று ஆங்கு அவர் உரைத்தது ஆக - நீவிர் கொன்னேபாடும் நரஸ்துதியாகிய குற்றமுடைய இப்பாடல்களை முழுவதுங்கைவிட்டு அண்டவடிவினராகிய நஞ்சிவபெருமானையே பாடுங்களென்றம்மகளிர் ஒருவர்க்கொருவர்கூறிய கூற்றாக,—எண் தரு திருத்தெள்ளேணம் - "திருமாலும்பன்றியாய்ச்சென்று" என்றெடுத்து "நாந்தெள்ளேணங்கொட்டாமோ" என்றிறுதிதோறுந் தந்து நன்குமதிப்பைத்தருந் திருத்தெள்ளேணமும்,—திருவுந்தி - "வளைந்ததுவில்லு" என்னும் சொற்றொடரை முதலாகவுடைய திருவுந்தியாரும், எழில் தோணோக்கம் - "பூத்தாரும்பொய்கைப்புனலிதுவேயெனக்கருதி" என்றுதொடங்கித் திருத்தோணோக்கமும்,—பண் திகள் திருப்பூ வல்லி - "இணையார் திருவடியென்றலைமேல்வைத்தலுமே" என்றுதொடங்கி, "பூவல்லிகொய்யாமோ" என்றிறுதிதோறும் பிரயோகித்துப் பண்விளங்காநிற்கும் திருப்பூவல்லியும்,—பொன்னூசல் பாடல் சொன்னார் - "சீரார்பவளங்கான்முத்தங்கயிறாக" என்று தொடங்கிப் "பொன்னூசலாடாமோ" என்றிறுதிதோறும் அந்தித்துத் திருப்பொன்னூசலுமாகிய திருவாசகங்களைப்பாடியருளினார். எ-று.

கசடு-குற்றம். கட்டுரை உறுதிமொழியாகலின் ஈண்டதுபாடமன் றென்க. கட்டுரை கற்பனுகதை என்பாருமுளர். மகாயுத்தத்தைவென்ற சுத்தவீரனொருவன் தன்றோள்களையும் மார்பையும் நோக்கிநோக்கிக் களித் தலியல்பு. அதுபோல ஈண்டுப் பிரபஞ்சப்போரைவென்ற களிப்பினுலே தோள்களை நோக்குதல் தோணோக்கமென்க. அது "ஏந்தெழிலாகத் தெம்முனிறந்தனனென்றுரீசின், சாந்தகன்மார்பந்திண்டோட்டலங்களு நோக்கிநோக்கிப், போந்தகைக்குரியாயல்லை போகலைபோகலென்னு, நாந் தகமின்னுவீசிநராந்தகனவின்றுவந்தான்" என்பதனுனுமறிக. (சுடு)

ஆங்கொரு சிறுமி தன்சீ ரன்னையை நோக்கிக் கூறுந்
தாங்கிசை மொழியே யாகத் தருமவை யீரைந்தோதி
ஞாங்கரின் முரலுந் தும்பி தன்னையு நயந்து நாதன்
பூங்கழல் வழுத்துகென்று புனிதர்கோத் தும்பி சொன்னூர்.

இ—ள்: புனிதர் - அதிசுத்தராகிய திருவாதவூரடிகள்,—ஆங்கு ஒரு சிறுமி தன் சீர் அன்னையை நோக்கிக் கூறும் மொழியே ஆக - அங் ஙனமொரு சிறுபெண் தன்னற்றுயைநோக்கிக் கூறுங்கூற்றாக,—தரு மவை ஈரைந்து ஓதி - "வேதமொழியர்வெண்ணீற்றர்செம்மேனியர்" என் றெடுத்துத் தகுதியையுடைய அன்னைப்பத்தைப்பாடியருளி,—ஞாங்கரில் முரலும் தும்பி தன்னையும் (நோக்கி) - தம்பக்கத்தே மலர்மீதூதிப் பாடு கின்ற தும்பியையும் விளித்து,—நாதன் பூம் கழல் நயந்து வழுத்துக என்று - சிவபெருமானது பொலிவாகிய திருவடிகளை விரும்பிப் பாடக் கடவையென்று,—கோத் தும்பி சொன்னூர் - "பூவேறுகோனும் புரந்தர னும் பொற்பமைந்த, நாவேறு செல்வியு நாரணனுநான்மறையு, மாவேறு சோதியும்வானவருந்தாமறியாச், சேவேறு சேவடிக்கே சென்றூதாய்கோத் தும்பீ" என்றெடுத்துத் திருக்கோத்தும்பி என்னுந் திருவாசகத்தைப்பாடி யருளினூர். எ-று.

தாங்கிசை ஏந்திசை. தருமவை வைவிகுதிபெற்ற அஃறிணைப்பன் மைப்பெயர்; தருமவைகளாகிய ஈரைந்தெனவிரிக்க. நோக்கி என்பது பின்னுங் கூட்டப்பட்டது. தன்னையுமென்னுமும்மை சிறப்பும்மை; எச் சமுமாம். பத்துச்செய்யுளுடைமையிற் பத்தென எண்ணுகுபெயராயிற் றென்க. (சுசு)

பொங்கரி னிடையே வாழும் பொற்பிளங் குயிலே கூவி
யிங்கழை யெம்பிரானை யென்பதுங் கிளியை நோக்கித்
திங்களஞ் சடையான் பாதஞ் செப்பெனத் தசாங்க மென்னுந்
தங்கிசைத் தமிழுஞ் சொன்னூர் தந்நிக ரொருவ ரில்லார்.

இ—ள்: தம் நிகர் ஒருவர் இல்லார் - தமக்குநிகரொருவருமில்லாத திருவாதவூரடிகள்,—பொங்கரின் இடையே வாழும் பொற்பு இளம் குயிலே - சோலையின்மத்தியில்வாழும் அழகையுடைய இளமையாகிய "ஈதமினியகுயிலே",—கூவி எம் பிரானை இங்கு அழை என்பதும் - நீ கூவி எம்முடைய சிவபெருமானை இங்கே அழையென்பதாகிய குயிற்பத்தும்,—கிளியை நோக்கித் திங்கள் அம் சடையான் பாதம் செப்பு என - அவ்வியல்பிற்றாகிய கிளியை "ஏராரிளங்கிளியே" என விளித்து நீ பிறை தவழும் அழகியசடையையுடைய சிவபெருமானது திருவடிகளைத் துதியென்று,—தசாங்கம் என்னும் தமிழும் சொன்னார் - திருத்தசாங்கமென்னும் திருவாசகமும் பாடியருளினார். எ-று.

பொங்கரினிடையே வாழும் பொற்பிளமையாகிய குயிலடை கிளிக்குங் கூட்டப்பட்டது. அவ்விருவகைப்புடைகளின் றன்மைவிளக்குதற்குப் பொங்கரின் வாழுமென்னாது பொங்கரினிடையே வாழுமென்றார். இடை என்பதனை ஏழனுருபென்றலுமொன்று. தங்கிசைத்தமிழ் ஏந்திசைச் செப்பலோசையுடைய தமிழ்வெண்பா. தசாங்கம்-பத்தங்கம். அவை பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, வாகனம், படை, வாத்தியம், மாலை கொடி என்பன. அது "புல்லு மலையாறு நாடூர் புனைதார்மா, கொல்லுங் களிறு கொடி முரசு—வல்லகோ, லென்றிவை நஞ்செழுத்தோ டேலாவகை யுரைப்ப, நின்ற தசாங்கமென நேர்" "நேருந் தசாங்கத்தை நேரிசை வெண்பாவா, லீரைம்பது தொண்ணூ றீண்டெழுபா-னேரைம்பான், றேர்ந்துரைக்கிற்சின்னப்பூ வீரைந்தாற்செப்பினு, னேர்ந்ததசாங்கநிலை" என்பவற்றானறிக. (கூஎ)

மண்ணிடத் தெம்மையாண்ட வாழ்வினை யன்றி மற்றோ
ரண்ணலைக் கடவு ளென்பார்க் கஞ்சுதும் வினையே மென்றும்
பண்ணுறச் சிறந்த பாடல் பகர்ந்துநற் பன்ன சாலை
யொண்ணகர்ப் புறம்பு செய்தாங் கிருந்தன ருண்மை மிக்கார்.

இ—ள்: உண்மை மிக்கார் - மெய்புணர்வின்மிக்க திருவாதவூரடிகள்,—மண்ணிடத்து எம்மை ஆண்ட வாழ்வினை அன்றி - இம்மண்ணுலகின்கண் வந்தெம்மை யடிமைக்கொண்ட பேரானந்தப் பெருவாழ்வாகிய சிவபெருமானையல்லது,—மற்று ஓர் அண்ணலைக் கடவுள் என்பார்க்கு வினையேம் அஞ்சுதும் என்று - மற்றொரு விசேடபுருடனைப் பதியென்னும் பாவிகட்கே தீவினையையுடைய தமியேமஞ்சுதல்செய்வேமென்று,—பண் உறச் சிறந்த பாடல் பகர்ந்து - "புற்றில்வாழரவுமஞ்சேன்" என்று தொடங்கி இறுதிதோறும் "அஞ்சுமாறே" என்று முடித்துப் பண்பொருந்தச் சிறந்த அச்சப்பத்தாகிய திருவாசகமும் பாடியருளி,—நல் பன்னசாலை ஒள் நகர்ப் புறம்பு செய்து ஆங்கு இருந்தனர் - நல்ல பன்னசாலையை அழகிய அந்நகரின்புறத்தே அமைத்து அதன்கண் வீற்றிருந்தருளினார். எ-று.

ஈண்டும் எம்மையெனப் பன்மையாற் கூறியது பாண்டியனையுமுளப் படுத்தற்கென்க. எச்சவும்மை பிரித்துக் கூட்டப்பட்டது. பன்னசாலை என்புழிப்பன்னம் - இலை. ஈண்டுண்மைமிகுதியென்றது ஞானபூசைசெய் யும் விசேடவுணர்வை. ஞானபூசையாவது பிருதுவிமுதலிய தத்துவங்களை யெல்லாம் சடமெனக்காணும் பூதசுத்தியும், அவ்வாறுகாணுதல் திருவருளா லெனக்கருதும் ஆன்மசுத்தியும். அக்கருத்தானே கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுநிலை அத்திருவருளெனநிற்கும் திரவியசுத்தியும். ஸ்ரீபஞ்சாக்கரங் களை ஐந்துமுகலாகக்கருதும் மந்திரசுத்தியும், சிவபெருமான் யாண்டும் நிறைந்திருக்கின்றாரெனவுணரும் இலிங்கசுத்தியுமாகிய இவ்வைந்தானும் கடவுளை வழிபட்டுத் துதிப்பதாம். அது "மண்முதல் கரணமெல்லா மறு வசத் தாக்கிஞானக், கண்ணினி லூன்றியந்தக் கருத்தினு லெலையுநோ க்கி, யெண்ணியஞ் செழுத்துமாறி யிறைநிறை வுணர்ந்துபோற்றல், புண் ணியன் றனக்குஞான பூசையாப் புகலுமன்றே" என்பதனானுமறிக. திரு வாதவூரடிகள் சிதம்பரத்தில் இங்ஙனம் பூசைசெய்துகொண்டிருந்தாரென் பதை, 'மாசறுமணிபோற்பன்னுள் வாசகமாலைசாத்திப், பூசனைசெய்து பின்னர்ப் புண்ணியமன்றுளாடு, மீசனதடிக்கீழெய்தி யீறிலாவறிவானந்த, தேசொடுகலந்துநின்றார் சிவனருள்விளக்கவந்தார்" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானறிக. சிதம்பரத்தினது திருவெல்லைக்குள்வசித்தல் ஆன்றோ ராசாரமன்றென்பது திருத்தொண்டர்பெரியபுராணமுதலிய உண்மைநூல் களுட்காண்க. (௯௮)

பரம்பரப் பொருளா மிந்தப் பைந்தமி ழோதி வையம்
பெரும்பிறப் பகல வந்து பிறந்தவர் செய்தி யெல்லா
மிருந்தநற் றொகுதி தோறு மியம்பிநன் மகிழ்ச்சி யெய்தி
யரும்புகழ்த் தில்லை யுள்ளா ரியாவரு மதிச யித்தார்.

இ—ள்: வையம் பரம்பரப்பொருள் ஆம் இந்தப் பைந்தமிழ் ஓதிப் பெரும் பிறப்பு அகல வந்து பிறந்தவர் செய்தி எல்லாம் - உலகமானது முதனூல்களாகிய வேதசிவாகமங்களின் பாரம்பரியப் பொருளையுடைய இத்திருவாசகத்தைப் பாராயணஞ்செய்து அநாதியாயுள்ளபிறவிநீங்கவந்து திருவவதாரஞ்செய்த சென்மசாபல்லியராகிய திருவாதவூரடிகளது இவ் வத்தியற்புத சமாசாரங்களையெல்லாம்;—அரும் புகழ்த் தில்லை உள்ளார் யாவரும் இருந்த நல் தொகுதி தோறும் இயம்பி நல் மகிழ்ச்சி எய்தி அதி சயித்தார் - அரிய புகழையுடைய தில்லைமாநகரவாசிகளெல்லாம் தாமொரு ங்குகூடியிருக்குஞ் சபைகடோறுமெடுத் தினிதுபாராட்டி நல்ல மனமகி ழ்ச்சியோடதிசயமடைந்தார்கள். எ-று.

பரம்பரன் கடவுளாகலிற் கடவுளையே பொருளாகவுடைய பைந்தமி ழென்றுமாம். பைந்தமிழ் செந்தமிழ். (௯௯)

தத்துவ முடிவி லாடுந் தாண்டவந் தம்முட் கண்டு
நித்தலுஞ் சென்று மன்றி னிமலனை யிறைஞ்சி யன்பா

வித்திற மையர் தில்லை யெல்லையி லிருந்தா ரிப்பாற்
புத்தரை வாதில் வென்ற புகழினை யுரைத்தல் செய்வாம்.

இ—ள்: தத்துவ முடிவில் ஆடும் தாண்டவம் தம் உள் கண்டு - முப்பத்தாறு தத்துவங்களின்முடிவில் நிகழும் சூக்குமநடனத்தைத் தம்முளே தரிசித்தும்,—நித்தலும் சென்று மன்றில் நிமலனை அன்பு ஆல் இறைஞ்சி - நாடோறுஞ்சென்று புறத்தே கனகசபையின்கணிகழும் நிருமலராகிய சபாநாயகரது தூலநடனத்தையுந் தரிசித்து அன்பினாலே வணங்கித் துதித்தும்,—இத்திறம் ஐயர் தில்லை எல்லையில் இருந்தார் - இந்தப்பிரகாரம் திருவாதவூரடிகள் சிதம்பரத்தினது திருவெல்லையின்மருங்கே வில்வாரணியத்து வீற்றிருந்தருளினார். அதுநிற்க,— இப்பால் புத்தரை வாதில் வென்ற புகழினை உரைத்தல் செய்வாம் - இனி இவ்வடிகள் புத்தரைவாதில்வென்ற புகழையுடைய சரித்திரத்தை யாங் கூறுவாம். எ-று.

கண்டு, இறைஞ்சி என்னும் செய்தென்வாய்பாட்டு வினையெச்சங்களிரண்டும் எண்ணுப்பொருட்கண்வந்தன; "வினையொடுவரினுமெண்ணினையவேற்பன"என்பதோத்தாகலின். தில்லையெல்லையிலிருந்தாரென்றது விட்டலக்கணை; கங்கைக்கணிடைச்சேரி என்புழிபோல. அது, ஒன்றிடையிட்ட மேலைச்செய்யுளில் "நற்பன்னசாலை யொண்ணகர்ப்புறம்பு செய்தாங்கிருந்தனர்" என்றதனானுமுணர்க. வில்வாரணியம் சிதம்பரத்துக்குக் கிழக்கே நான்குமைல்தூரத்துள்ளது. இது பிற்காலத்தில் பித்தர்புரம்என வழங்கப்பட்டுத் தற்காலத்திற் பிச்சபுரம் என மருவி வழங்கப்படுகின்றது. பித்தர் மாணிக்கவாசகசுவாமிகள் அது "பித்தன்வருமாலென் றிங்கெனைக் கண்டா, ரோடாவண்ணம் மெய்யன்பையுடையாய் நல்கவேண்டுமே" என்றற்றொடக்கத்தவ்வடிகடிருவாக்குக்களானுமறிக. தத்துவாதீதமாயுள்ளது பராசத்தியும், பராசத்தியின் மத்தியில் விளங்குவது பரானந்தமும், பரானந்த மத்தியில் விளங்குவது சிவானந்தமும், சிவானந்தத்தை விளைவிப்பது ஆனந்ததாண்டவமும், ஆனந்ததாண்டவஞ் செய்பவர் ஹரப்பிரபுவுமேயாகலின் தத்துவ முடிவிலாடுந் தாண்டவம் என்றார். அது "தத்துவாதீதே பராசத்தி" என்னும் சிவாகமவசனத்தானும், "தத்துவமாடச் சதாசிவந்தானாடச், சித்தமுமாடச் சிவசத்திதானாட, வைத்தசராசரமாட மறையாட, வத்தனுமாடினா னானந்தக்கூத்தே"என்பதனானுமறிக. பிண்டத்தினிகழும் சூக்குமநடனமாகலின் தரிசித்து வணங்கித் துதித்தென்னாது உளா கண்டென்றும், ஏனையது அண்டத்தின்கணிகழும் தூலநடனமாகலின் தரிசித்துவணங்கித் துதித்தென்பதுபட இறைஞ்சிஎன்றுங்கூறினார். (எ௰)

திருவம்பலச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௪௪௧.

உ

புத்தரை வாதில்வென்ற சருக்கம்.

தாழுநீடு வேணியண்ண றாள்விடாவொர் மாதவ
னாழிஞால வண்மையுண்மை யாயுநேய நெஞ்சினன்
சோழநாடு கண்டுதில்லை தொழுதபின்பு பழுதிலா
வீழநாடு தன்னைநாட வெண்ணியங்கு நண்ணினன்.

இ—ள்: தாழு நீடு வேணி அண்ணல் தாள் விடா ஓர் மாதவன் - தாழ்ந்த நெடிய சடையையுடைய முழுமுதலாகிய சிவபெருமானது திருவடிகளை ஒருபோதும் மறவாத பெருமைபொருந்திய ஒருதபோதனர்,—ஆழி ஞால வண்மை உண்மை ஆயும் நேய நெஞ்சினன் - சமுத்திரஞ்சூழ்ந்த பூமியின்கண் நானாதேசவளவிகற்பங்களை ஆராய்ந்தறியும் விருப்பம் பொருந்திய மனத்தையுடையவர்,—சோழ நாடு கண்டு தில்லை தொழுத பின்பு - அவர், சோழநாட்டுவளங்களைக் கண்டறிந்து தில்லைமாநகரைத் தரிசித்து வணங்கியபின்னர்,—பழுது இலா ஈழ நாடு தன்னை நாட எண்ணி அங்கு நண்ணினன் - குற்றமற்ற ஈழநாட்டுவளங்களைக் கண்டறியும்படி கருதி அந்நாட்டையடைந்தார். எ-று.

தாழுநீடென்னும் காலங்கரந்த பெயரெச்சங்களடுக்கி வேணியென்னும் பெயர்கொண்டன. வண்மையுண்மை வளமுடைமை. தேவாரம் பெற்ற திருக்கேதீச்சரம் திரிகோணாசலம் என்னும் சிவஸ்தலங்களிரண்டும், திருப்புகழ்பெற்ற கதிர்காமமென்னும் சுப்பிரமணிய ஸ்தலமொன்றுமுடைமையின் ஈழநாட்டைப் பழுதிலா ஈழநாடென விசேடித்தார். அக்கருத்து, "திருக்கோயிலில்லாத திருவிலூருந் திருவெண்ணீறணியாத திருவிலூரும், பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும் பாங்கினொடுபலதளிகளில்லாவூரும், விருப்போடுவெண்சங்கமூதாவூரும் விதானமும் வெண்கொடியுமில்லாவூரு, மருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூருமவையெல்லா மூரல்லவடவிகாடே" என்பதனானுமறிக. ஈழநாட்டை, "நாற்றிசையுமாழ்கடலா நற்செந்தமிழ்வடக்காந், தேற்றமிகுசிங்களந்தென்கிழக்கா—நீற்றழகர், வாழுந்தளியிரண்டாமற்றெண்பதின்காத, மீழநாட்டெல்லையிதென்றெண்" என்பதனானுமறிக. இது கலிவிருத்தம். (க)

நண்ணுமாதி மாதவ னலங்கொளீழ நாடனா
மண்ணலா னிருந்தவூ ரடைந்துசே ரிடந்தொறு
மெண்ணிலாத காலம்வாழி தில்லைமன்ற மென்றுகூ
றுண்ணிலாவு மன்பினா லுரைக்குமா தொடங்கினன்.

இ—ள்: நண்ணும் ஆதி மாதவன் - அங்ஙனம் வந்தடைந்த அத்தபோதனர்,—நலம் கொள் ஈழ நாடன் ஆம் அண்ணல் இருந்த ஊர்

அடைந்து - பலதிறநன்மைகள்பொருந்திய ஈழநாட்டையுடைய அரசனிருக்கும் இராசதானியையடைந்து,—சேர் இடம் தொறும் தில்லை மன்றம் எண் இலாத காலம் வாழி என்று கூர் உள் நிலாவும் அன்பினுல் உரைக்குமா தொடங்கினன் - தாம்போயிருக்கு மிடங்கடோறும் சிதம்பரத்துள்ள பொன்னம்பலம் நீடூழிவாழுக என்று மிகத் தம்மனத்தின்கணிகழும் பேரன்பினுலே சொல்லும்படி தொடங்கினர். எ-று.

உரைக்குமாறென்பது உரைக்குமா எனச் செய்யுண்முடிபெய்திநின்றது. திரிலோகராச பூசிதனுகிய இந்திரனுக்காக விசுவகர்மா என்னும் தேவதபதியினு லுண்டாக்கப்பட்டமையும், இருநிதிக்கிழவனுகிய குபேரனுக்கு நெடுங்கால மிராசதானியாயிருந்தமையும், குற்றமற்ற மாணிக்கம் உயர்வாகிய முத்துமுதலிய ரத்தினங்களுடைமையும், தன்மாட்டுள்ள பதார்த்தங்களின் சுவைமிகுதியும், தன்கண்வாழ்வார்க்கு மிகவும் சரீராரோக்கியம் கொடுத்தலும், இன்னேரன்ன பிறவும்பற்றி நலங்கொளீழநாடென விசேடித்தார். முன் எனப்பொருள்படும் ஆதி என்பது தாற்பரியத்தாற் சுட்டுப்பொருண்மேலதாயிற்று; முதன்மை என்றுமாம். (௨)

சென்றுசேரி டந்தொறுஞ் சிறந்தசெம்பொ னம்பல
மென்றுகூறி வைகுநாளி லீழநாடன் முன்புபோய்
நன்றிலாத மூகர்தா நயந்திறைஞ்சி மன்னகே
ளொன்றியா முரைத்துமென் றுவந்திவ்வாறு கூறினர்.

இ—ள்: சென்று சேர் இடம் தொறும் சிறந்த செம் பொன்னம்பலம் என்று கூறி வைகு நாளில் - அத்தபோதனர் தாம்போயிருக்கு மிடங்கடோறும் அழகிய மாற்றுயர்ந்த "பொன்னம்பலம் நீடூழிவாழுக" வென்றிங்ஙன முச்சரித்துக்கொண் டிருக்கப்பெறு மிந்நாட்களில் ஒருநாள்,—நன்று இலாத மூகர் ஈழ நாடன் முன்பு போய் நயந்து இறைஞ்சி - நல்வாக்குக்கு ஊமர்களாகிய புத்தர்கள் சிலர் அவ்வீழதேயத்தரசன்முன்னரே போய் அவனைவிரும்பிவணங்கி,—மன்ன யாம் ஒன்று உரைத்தும் உவந்து கேள் என்று இவ்வாறு கூறினர் - நம்மரசனே யாமொன்று கூறுதும் அதனை நீ மனமகிழ்ந்து கேட்பாயாகவென்று இவ்வாறு கூறுவாராயினர். எ-று.

நன்று ஒன்று என்பன ஆகுபெயர். நன்றிலாதமூகர் என்பதற்கு நல்வாக்குக்கு ஊமர்களென்றது தாற்பரியப்பொருள் என்க. ஊமர்-ஊமைகள். (௩)

ஒற்கமில்க ருத்தனு மொருத்தனிந் நகர்க்குளா
னற்கலன்க ளக்குமாலை நாளுமுண்ப தையமே
நிற்கினும்மி ருக்கினுந் நிலாவுசெம்பொன் மன்றெனுஞ்
சொற்கிளந்து ரைக்குமென்று சொல்லிமுன் வணங்கினர்.

இ—ள்: ஒற்கம் இல் கருத்தனும் ஒருத்தன் இந் நகர்க்கு உளான்-மிக்க வொழுக்கத்தையுடைய ஒருசைவன் இந்நகரத்தின்கண் வந்திருக்கின்றான்.—நல் கலன்கள் அக்குமாலை - அவனுக்கு நல்ல ஆபரணங்கள் உருத்திராக்ஷமாலிகைகள், நாளும் உண்பது ஐயமே - அவன்நாடோறு முண்பது பிக்ஷையே.—நிற்கினும் இருக்கினும் நிலாவு செம் பொன்மன்று எனும் சொல் கிளந்து உரைக்குமென்று முன் சொல்லி வணங்கினர் - அவன் நிற்கும்போதுமிருக்கும்போதும் விளங்காநின்ற "பொன்னம்பலம் நீடூழிவாழுக" என்னுஞ்சொல்லை விதந்துரைக்குமென்றெதிரேகூறி மறித்தும் வணங்கினர். எ-று.

ஒற்கம் ஈண்டொடுக்கம். கருத்தன்-செய்பவன். தலைமைபூற்றிய வழக்கான், அது நல்லொழுக்கத்தின் மேலதாயிற்று. (௪)

வேறு.

இன்றிங் கவனைக் கொணர்வீரென் றிசைத்தா னிருப னுங்கவருஞ், சென்றன் புடையாய் வருகவுனை யழைத்தான் றிறன்மன் னவனென்ன, நன்றென் பதுவுந் தீதுமின்றி நாளும் பலியேற் றுண்பதொழிந், தொன்றுங் கருதா ரொடுங்கரும முளதோ வேந்தற் கெனவுரைத்தான்.

இ—ள்: நிருபன் இன்று அவனை இங்குக் கொணர்வீர் என்று இசைத்தான் - அரசனதுகேட்டு இத்தினமவனை இங்கே அழைத்துக் கொடுவருகவென்று பணித்தான்,—ஆங்கு அவரும் சென்று அன்பு உடையாய் திறன் மன்னவன் உனை அழைத்தான் வருக என்ன - அவ்விடத் தவர்களும் சென்றன்பையுடையவரே வலியையுடைய நம்மரசன் உம்மை அழைக்கின்றான் வருக என்றுகூற,—நன்று என்பதுவும் தீதும் இன்றி நாளும் பலி ஏற்று உண்பது ஒழிந்து ஒன்றும் கருதார் ஒடும் வேந்தற்குக் கருமம் உளதோ என உரைத்தான் - அதற்கவர் இது நல்லது இது தீயது என விஷயங்களில்வரும் விருப்புவெறுப்புக்கள் சிறிதுமின்றி நாடோறும் பிச்சையேற்றுண்ணு மிஃதொன்றல்லது பிறிதொன்றுஞ் சிந்தியாத சர்வ சங்கபரித்தியாகிகண்மாட்டும் நும்மரசனுக்கு லௌகிகசம்பவமுண்டோ என்று கூறினர். எ-று.

பிறர் கடத்தற்கரிய ஆணையையுடைய அரசனென்பார் திறன்மன்னவனென்றார். அரசன் பரசமயியாகலின், அவனுழைச்சென்று காணும் விருப்புமற்ற தபோதனர் தம்மைச் சர்வசங்கபரித்தியாகநிலையில்வைத் தோதி மறுத்தாரென்பது கருத்தென்க. "துறவிக்கு வேந்தன் றுரும்பு" ஆகலின் அதுபற்றி இங்ஙனம் கூறினரென்பது கருத்தென்றலுமொன்று. இது மூன்றாஞ்சீரும் ஆறாஞ்சீரும் காய்ச்சீரும் ஏனைநான்கும் மாச்சீருமாய் வந்த அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தமென்க. (௫)

ஊரிற் பலிகொண் டுண்கினுமற் றொன்றுங் கரும மில்லெனினு பாரிற் பயில்வா ருயிர்புரத்தல் பரமா நிருபர்க் காதலினால் [ம்

வேரிற் கமழ்தா ரெம்மரசன் றன்பால் வருதல் வேண்டுமெனச்
சீரிற் றிகழ்வேற் றூதருடன் சென்றா னொன்றுந் தீமையிலான்.

இ—ள்: ஊரில் பலி கொண்டு உண்கினும் - ஊரிலே பிக்ஷையேற் றுண்கினும்,—மற்று ஒன்றும் கருமம் இல் எனினும் - உலகத்துப் பிறிதோர் காரியமுமில்லையெனினும்,—பாரில் பயில் வார் உயிர் புரத்தல் நிருபர்க்குப் பரம் ஆம் ஆதலினால் - தமது நாட்டின்கட் சஞ்சரிக்கும் பிரஜைகளதுயிரைப் பாதுகாத்தல் அதனையாளும் அரசருக்கு முக்கியகடன்மையாமாதலினாலே,—வேரில் கமழ் தார் எம் அரசன் தன் பால் வருதல் வேண்டும் என - வெட்டிவேரினாற் கட்டப்பட்டு நறுமணங்கமழு மாலையையுடைய நம்மரசன்மாட்டு நீர் தப்பாது வருதல்வேண்டுமென்று தூதுவர் கடிந்துகூற,—ஒன்றும் தீமை இலான் சீரில் திகழ் வேல் தூதர் உடன் சென்றான் - ஒருதீமையுமில்லாத அத்தபோதனர் அழகுடன் விளங்கும் வேலையுடைய அத்தூதுவரோடு சென்றார். எ-று. (௬)

முந்தும் பிடக மூன்றுணர்ந்து செயிர்நான் கொழிந்து முதுசீல, மைந்தும் புனைந்து பாரமிதை யாறைந் தடக்கு மியல்புடையோன், கந்தங் கெடுதன் முத்தியெனக் காட்டுங் குரவ னுடனிருப்பச், சந்தஞ் சிறந்த புயநிருப னிருந்தான் றானை புடைசூழ.

இ—ள்: முந்தும் பிடகம் மூன்று உணர்ந்து - ஆதியான பிடகநூன்மூன்றையுஞ் சந்தேகவிபரீதமறக் கற்றுத் தெளிந்து,—செயிர் நான்கு ஒழிந்து - குற்றங்களுனான்கையுந் தவிர்ந்து,—முது சீலம் ஐந்தும் புனைந்து - பழைய சீலங்களைந்தையும் மேற்கொண்டு,—பாரமிதை ஆறைந்து அடக்கும் இயல்புஉடையோன் - பாரமிதைமுப்பதையுமடக்கும் இயல்புடையனாகிய,—கந்தம் கெடுதல் முத்தி எனக்காட்டும் குரவன் உடன் இருப்ப - பஞ்சகந்தமும் தீரக்கெடுவதே முத்தியெனச் சாதிக்கும் பௌத்தாசாரியனொருங்கிருப்பவும்,—தானை புடைசூழ - சேனைகள் பக்கத்தே சூழவும்,—சந்தம் சிறந்த புய நிருபன் இருந்தான் - உத்தமலக்கணஞ்சிறந்த புயங்களையுடைய புத்தராசா வீற்றிருந்தான். எ-று.

இயல்புடையோனாகிய குரவன், காட்டுங்குரவன் எனத்தனித்தனி முடிக்க. பிடகநூன்மூன்றாவன விம்மாயபிடகம், அபிதன்மபிடகம்,சூத்திரபிடகமென்பன. இவற்றுள் விம்மாயபிடகத்தைநீக்கி அபிநயபிடகமென்பதொன்றுசேர்த்து மூன்றென்பாரும், அதனையுநீக்கி வினயபிடகமென்பதொன்றுசேர்த்து மூன்றென்பாருமுளர். செயிர்நான்காவன ஜராத்மவாதம், கர்த்திருத்துவபாவவாதம், ஆகாசகாலதிக்கான்ம அரூபத்திரவியபாவவாதம், அவயவகுணபதார்த்தபாவவாதமென்பன. இவற்றுள் ஜராத்மவாதமாவது கொலையையுடன்படல். கர்த்திருத்துவபாவவாதமாவது கர்த்தாவையுடன்படல். ஆகாசகாலதிக்கான்ம அரூபத்திரவியபாவவாத

மாவது ஆகாசமுதலிய அரூபத்திரவியங்களை உடன்படல். அவயவகுண பதார்த்த பாவவாதமாவது அவயவம் குணம் என்னும் பதார்த்தங்களைத் திரவியங்களுக்கு வேறென உடன்படல். இந்நான்கும் அவர்மதத்துக்குக் குற்றங்களாகலின் செயிர் எனப்பட்டன. சீலமைந்தாவன அகிம்ஸை, பிரமசரியம், அஸ்தேயம், சங்கிரகம், சத்தியம், என்பன. சீலமைந்தினு மொருபிரகாரம்வருமாறு:—கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, களவாமை, காமமின்மை என்பன. இவற்றோடு தரையிற்றுயிலாமை, சுகந்தவர்க்கந்தரியாமை, இரவிலுண்ணாமை என்னும் மூன்றையும் சேர்த்துச் சீலம் எட்டென்றலும் அவர்மதசித்தாந்தமென்க. பாரமிதையாறைந்தாவன:—தானம், சீலம், பொறை, நிஷ்கர்மம், பிரக்ஞை, வீரியம், சத்தியம், துணிவு, மயித்திரி, ஆசையறுதி என்னும்தசபாரமிதைகளும் உயிருறுப்புப் பொருணேர்ச்சியான்வரும்முப்பதுமாம். அது "அருணெறியாற்பாரமிதையாறைந்து முடனடக்கிப், பொருண்முழுதும்போதிநிழலான் குணர்ந்தமுனிவரன்ற, னருண்மொழியா னல்வாய்மையறிந்தவரே பிறப்பறுப்பார், மருணெறியாம்பிறநூலுமயக்கறுக்குமாறுளதோ" என்னும் அம்மத சித்தாந்தத்தொகையானுமறிக. பாரம்-கரை. இதை—அடைந்தது. இனிப்பார்மீதேயாறைந்தடக்குமியல்புடையோன் எனப்பாடமோதி, இந்நிலவுலகின்கண்ணே உட்பகைகளாறனையும் பொறிகளைந்தையும்சேர அடக்குமியல்புடையவன் எனப்பொருளுரைத்தலுமொன்று. உட்பகை ஆறாவன காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. பொறிகளைந்தாவன சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்கிராணம் என்பன. இனி ஐந்தென்பதற்குச்சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களாகிய அவற்றின் புலனெனக்கொள்ளினுமமையும். பஞ்சகந்தங்களாவன உருவம், வேதனை, குறிப்பு, பாவனை. விஞ்ஞானமென்பன. இவற்றுள் உருவகந்தமாவது, பூதவுருநான்கு உபாதாயவுருநான்கென்னுமெட்டின் கூட்டமாம். பூதவுரு நான்காவன பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்பன. உபாதாயவுருநான்காவன கடினம், ரசம், உருவம், கந்தம் என்பன. வேதனாகந்தம் குசலவேதனை, அகுசலவேதனை, குசலாகுசலவேதனை எனமூன்றும். இவைமுறையே சுகவறிவு, துக்கவறிவு, சுகதுக்கவறிவு என்னும் பொருளன. குறிப்புக்கந்தமாவது பொறி ஐந்தும் சித்தம் ஒன்றுமாகிய ஆறுமாம். பாவனாகந்தமாவது புண்ணியம்பத்தும் பாவம்பத்துமாகிய இருபதுமாம். இவற்றுட் புண்ணியம்பத்தாவன அருள், அவாவின்மை, தவவிச்சை, இனியவைகூறல், உண்மைகூறல், பயனுளகூறல், அறங்கூறல், வணக்கம், ஈகை, தவஞ்செயல் என்பன. இவற்றுண் முதன்மூன்றும் மனத்தானும், இடைநான்கும் வாக்கானும், கடைமூன்றும் காயத்தானும் நிகழ்வன. பாவம் பத்தாவன தீச்சிந்தை, ஆசை, கோபம், கடுஞ்சொல், பொய்யுரை, பயனிலகூறல், குறளைகூறல், களவு, கொலை, பயனில செயல் என்பன. இவற்றுள்ளும் முதன்மூன்றும் மனத்தானும், இடைநான்கும் வாக்கானும், கடைமூன்றும் காயத்தானும் நிகழ்வன. விஞ்ஞான

கந்தமாவது புலனைந்தும் சிந்தனையொன்றுமாகிய முன்னைய ஆறுனுமறியு மாறறிவுமாம். உருவகந்தமெட்டு, வேதனைகந்தம் மூன்று, குறிப்புக்கந்தம் ஆறு, பாவனைகந்தம் இருபது, விஞ்ஞானகந்தம் ஆறு. ஆகப் பஞ்சகந்த விரி இந்நாற்பத்துமூன்றுமென்க. அது "எட்டவையுருவமூன்றுவேதனை யாறுஞான, மொட்டியகுறிப்போராறுசெய்கையுமிருபதாகக், கட்டிய பஞ் சகந்தங்கணத்தினிற்பங்கமாகித், தொட்டநாற்பத்துமூன்றுஞ்சுத்தநூற்று ணிவதாமே" என்பதனுனுமறிக. கந்தம் சமூகம் என்னும்பொருட்டு. கந்தங்கெடுதன் முத்தியெனக்காட்டுங் குரவனென்றார்; இப்பஞ்சகந்த முங்கெடக் கூடும்முத்தி கந்தவீடென்பதும், இவை கெடாதுகூடும் முத்தி குற்றவீடென்பதும் அம்மதசித்தாந்தமாகலினென்க. இனிப்பௌத்தமத உற்பத்தி எங்ஙனமெனின்? முன்னோர்காலத்துத் திரிபுரத்தசுரர்செய்யும் கொடுமைக்காற்ருது இந்திரன்முதலிய தேவர்கள் விஷ்ணுவைச்சரண டைந்து விண்ணப்பஞ்செய்ய, அவர் மேருவின்வடபாற்சென்று ஓரியா கஞ்செய்து, அவ்வியாகத்தினின்றும் பல பூதகணங்களை எழுப்பி, அவர்க ளோடு யுத்தஞ்செய்யும்படி அனுப்பினர். அப்பூதகணங்கள்சென்று யுத் தஞ்செய்து சிவபத்தியிற்சிறந்த அவ்வசுரர்க் காற்ருதுடைந்துமீண்டன. அதனை அறிந்தவிஷ்ணு இனி உபாயத்தால் இவரை வெல்லவேண்டு மென்றுகருதிப் புத்தசமயமெனப்பெயரிய ஓர்சமயத்தை உண்டாக்கித் தாமும் புத்தகுருவுருக்கொடுசென்று அதனைப்போதித்துப் பரப்பிச் சைவ மதக்கொள்கையைநீக்கினர். இதனனே திருமால் உபவவதாரம் பதினை ந்தனுட் பௌத்தாவதாரமு மொன்ருயிற்று. இதுவே அதனதுற்பத்தி யென்க. அது "மாயனிடம் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர், சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார்" என வழிநூலாசிரி யர் கூறியவாற்ருனும், "சாக்கிய குருவின் மாய னுங்கவர் புரத்திற் சார் ந்து, கோக்களிற்றுரிவை போர்த்த கொன்றைவே ணியன்மே லன்பு, நீக் கியவ் வசுரர் தம்மை நிகழ்த்துபுன் சமயந்தன்னி, லாக்கிநல் லிலிங்க பூசை யறிவொடு மகற்றி னுனே" என்னுங் கூர்மபுராணச்செய்யுளானும், விஷ்ணுபுராணத்தானுமறிக. இனிப் பௌத்தமதக்கொள்கையைச் சங்கி ரகமாக ஒருவாறு விளக்குதும்:—பௌத்தர் தண்ணங்காரன், மகாவீரன் என்றிவர் முதலாக இருபதிற்றொருவர். இவர்யோனிவாய்ப்பட்டுப்பிறத் தல் குற்றமென்று தாயரதுவயிற்றின்விலாப்புற இடைபிளக்கப்பிறந்தனர். பௌத்தர்க்குப் பிரமாணம் பிரத்தியக்ஷம், அநுமானமென்னும் இரண்டு மே. ஆகமப்பிரமாணம் அவர்களுக்கின்று. இவ்விருபிரமாணமுங்கொண் டறியப்படும்பொருள் ஞானமும், ஞேயமுமென இருவகைப்படும். இவை யிரண்டும் கணந்தோறும் சந்தானத்தேபங்கப்படுதலாகிய கணபங்கமுறும் சந்தானம்-தொடர்ச்சி. கணமாவது எட்டுத்தாமரையிதழை ஊசி ஊடறு க்குங்காலம். பங்கம்-சிதைவு. இக்கணபங்கம் வாயுசந்தானம், தீபசந் தானம், தாராசந்தானம், பிபீலிகாசந்தானம் என நான்குவகைப்படும். இவற்றுள் வாயுசந்தானம் வாயுவினெழுக்கம். தீபசந்தானம் தீபத்தின்

சுடரழிவு. தாராசந்தானம் நீரொழுக்கம். பிபீலிகாசந்தானம் எறும்பி னொழுக்கம். இவற்றைக் கெட்டுக்கெட்டேபோதல், கெட்டுக்ஷயித்தல், கெட்டுவர்த்தித்தல், கெட்டொத்துநிற்றல் எனவும்வழங்குப. இவற்றாற் போந்தபொருள் உலகம் கணந்தோறும் வேறுபாடுற்றுக்கொண்டேயிருக் குமென்பதாம். இனி மேற்சுட்டியஞானமாவது அவ்விருபிரமாணமு மாம். ஞேயமாவது அவ்விருபிரமாணங்கொண்டறியப்படும் பதார்த்த மாம். அவை உருவம், அருவம், வீடு, வழக்கு எனநான்குவகைப்படும். அவற்றுள் உருவம் மேலேகாட்டியபூதவுரு, உபாதாயவுரு என்னும் இரு திறத்தனவுமாம். அருவம் சித்தருவம், கணவீருவமென இருவகைப்படும். சித்தருவமாவது மேலேகாட்டிய குறிப்புக்கந்தமாம். கணவருவமாவது மேலேகாட்டியவிஞ்ஞானகந்தமாம். வீடு குற்றவீடு, கந்தவீடு என இரு வகைப்படும். குற்றவீடாவது பஞ்சகந்தமுங்கெடாது கூடும் முத்தியாம். கந்தவீடாவது அவைகெடக்கூடும் முத்தியாம். அது "வீட்டின்மருவியல் குற்றங்கந்தமெனவழங்கிடும்" என்னும் பரபக்கச்செய்யுளானுமறிக. வழக்கு உள்வழக்கு, இல்வழக்கு என இருதிறப்படும். இவற்றுள் உள்வழக் கானது தொகையுண்மைவழக்கு, மிகுத்துரையுண்மைவழக்கு, தொடர்ச்சி யுண்மைவழக்கு உள்ளதுசார்ந்தவுள்வழக்கு, இல்லதுசார்ந்த உள்வழக்கென ஐந்துபிரகாரமும்; இல்வழக்கானது தொகையின்மைவழக்கு, மிகுத்துரை யின்மைவழக்கு, தொடர்ச்சியின்மைவழக்கு, உள்ளதுசார்ந்த இல்வழக்கு, இல்லதுசார்ந்த இல்வழக்கு என ஐந்துபிரகாரமுமாம். உள்ளதை உண் டென்றல்உள்வழக்கு. உள்ளதை இன்றென்றல் இல்வழக்கு. இவ்விர ண்டனுள் இல்வழக்குமுன்னர்வாதத்துட்போதருமென்க. (எ)

உடுக்குந் தனிவெண் கோவணமு மொளிர்பொக் கணமு
மாத்திரையு, மெடுக்குஞ் சதங்கை நெடும்பிரம்பு மிலகுந் தில
தத் திருமுகமு, மடுக்குஞ் சிறுபுன் முறுவலுநின் றசையுஞ்
சடையுங்கண்டரசன், றிடுக்கங் கொளவந் தருகாக விருந்தான்
றிருவம் பலமென்று.

இ—ள்: உடுக்கும் தனி வெண் கோவணமும் - அப்பொழுது அத்தபோதனர் அரையிற்கட்டிய சுத்தவெண்மையாகிய ஒரு கௌபீன மும்,—ஒளிர் பொக்கணமும் - தோண்மேல் விளங்காநின்ற பிக்ஷைப்பை யும்,—மாத்திரையும் - காதுகளிலேதூங்கும் ஆறுகட்டிசுந்தரவேடமும்,— எடுக்கும் சதங்கை நெடும் பிரம்பும் - கையிலேதாங்கும் சதங்கை ஒலிக் கும் நெடியபிரம்பும்,—இலகும் திலதத் திருமுகமும் - நெற்றியிலே பிரகா சிக்குந் திலதப்பொட்டையுடைய திருமுகமும்,—அடுக்கும் சிறு புன் முறு வலும் - பதிப்பொருட்டியான சுகத்தால் இடையிடையே வாயின்கணரும் புங் குறுமுறுவலும்,—நின்று அசையும் சடையும் கண்டு அரசன் திடுக்கம் கொள வந்து - பின்றாழ்ந்துநின்றசையுஞ் சடையுமாகிய இவைகளைப் புத் தராசன்கண்டு மனமுஞ் சரீரமு மொருங்கே அஞ்சிக் கம்பிக்கும்படி

வந்து,—திருவம்பலம் என்று அருகாக இருந்தான் -"பொன்னம்பலம் நீடூழிவாழுக" என்றுச்சரித்துக்கொண்டு சமீபமாக இருந்தார். எ-று.

சிறுபுன்முறுவல் நாகிளங்கமுகென்புழிப்போல ஒருபொருட் பன்மொழி. ஆறுகட்டிசுந்தரவேடம் துறவிகளது காதணிவிசேடம். அது "வேடங்காதணிகுழையின்சீரும்" என்பதனானுமறிக. ஈண்டச்சமென்றது அருளச்சத்தை. (௮)

இருக்குந் தலைவன் றனைநோக்கி யிப்போ தேயம் பலமென் றிங், குரைக்குந் தகைமை யெவன்கொலென வுலகாள் பவனுக்க வனுரைப்பான், பெருக்கும் புகழாற் றிகழ்வளவன் பிரியா விருகட் பேரருளாற், புரக்குந் திருநாட் டறந்தழைக் கும் புலியூ ரென்ப தொன்றுளதால்.

இ—ள்: இருக்கும் தலைவன்றனை நோக்கி - இங்ஙனம் வந்திருக்குஞ் சைவதபோதனரை அரசன் நேர்நோக்கி,—இப்போது அம்பலம் என்று இங்கு உரைக்கும் தகைமை எவன் கொல் என - இத்தருணத்து நீர் "பொன்னம்பலம்" என்றிங்குச்சரித்தமை என்கொலோவென்று வினவ,—உலகாள்பவனுக்கு அவன் உரைப்பான் - அவ்வரசனுக்கவர் விடைகூறுவாராயினர்,—பெருக்கும்புகழால் திகழ் வளவன் பிரியா இரு கண் பேர் அருளால் புரக்கும் திரு நாட்டு அறம் தழைக்கும் புலி யூர் என்பது ஒன்று உளது - தன்குலத்தோர் பெருகச்செய்த புகழான்விளங்குஞ் சோழராசா தம்மினின்று மெஞ்ஞான்றும் பிரிதலில்லாத இருகண்களின் பூரணகிருபாநோக்கத்தாற் பாதுகாக்கின்றகாவிரிநாட்டின்கண்ணே தன் கண்வாழ்வார்செய்யுந் தருமம் ஒன்று பலவாக விருத்தியெய்தப்பெறும் சிதம்பரமென்றொரு சிவஸ்தலம் இருக்கின்றது. எ-று.

குலத்தோர் பெருக்கிய புகழென்றது புக்கடைந்த புறவின்பொருட்டுத் துலைபுகன்முதலாயினவற்றை. "குழுவின்வந்த குறுநிலவழக்குச் சான்றோர் செய்யுட்கண்ணும் வழக்கின்கண்ணும் வாராது" என ஆசிரியர் சேனாவரையர் விலக்குதலின், இப்போ என்பது சான்றோர் செய்யுட் சொல்லும் வழக்குச் சொல்லும் ஆகாமையின், இப்போ திருவம்பலம் என்பது பாடமன்றெனமறுக்க. (௯)

அந்தப் பதிமுன் றில்லைவன மஃதே புவன மனைத்தினுக்கு
முந்தக் கிளருந் தெய்வதல மதனான் மூலத் தானமதா [னிற்
மிந்தப் புவிக்கு நாப்பணெனு விலங்கும் பொதுவா மிடமத
சந்தத் தனத்தா னுமைகாணத் தலைவன் றிருத்தாண் டவம்புரியும்.

இ—ள்: அந்தப்பதி முன் தில்லை வனம்-அந்தஸ்தலம் முன்னரே தில்லைவனம்,—அதுவே புவனம் அனைத்தினுக்கும் முந்தக் கிளரும் தெய்வதலம் - அதுவே சகலபுவனங்களுக்கும் முதற்கணுண்டாகிய சிவஸ்தலம்,—அதனால் அது மூலத்தானம் ஆம் - அந்தக்காரணத்தால் அது

மூலஸ்தானமென்று சொல்லப்படும்,—இந்தப் புவிக்கு நாப்பண் எனப் பொது இலங்கும் - இப்பூமிக்குநடுவாகக் கனகசபை அங்கே யிளங்குகின்றது,—அதனில் சந்தத் தனத்தாள் உமை இடம் காணத் தலைவன் திருத்தாண்டவம் புரியும் - அந்தக்கனகசபையிலே சந்தனக்குழம்புதிமிர்ந்த ஸ்தனங்களையுடைய சிவகாமியம்மை வாமபாகத்திநின்று தரிசிக்கச் சபாநாயகர் பஞ்சகிருத்தியத்துக்குக் காரணமாகிய அநவரததாண்டவஞ் செய்தருளுவர். எ-று.

திருமூலஸ்தானம் திருமூலட்டானமெண இக்காலத்துமரீஇயிற்று. டானம்-நிலையானது எனினுமாம். பொன்னம்பலம் கனகசபை என்பன ஒருபொருட்சொற்கள். பொதுவாமிடமதனில் என்றிருந்தவாறுவைத்துப் பொருள்கொள்ளினுமமையும். (௧௦)

மன்னுந் திறலான் மனுமைந்தன் வடிவிற் றொழுநோய்
மாற்றிநெடும், பொன்னங் கிரிபோ லுருநல்கும் புனிதத் தட
முண் டதின்மூழ்கி, முன்னம் புவியிற் றவமொன்று முயலா
தவரு மைந்துதொழி, லென்னுந் திருத்தாண் டவம்புரிதல்
கண்டா லுலகி லினிப்பிறவார்.

இ—ள்: மன்னும் திறலான் மனுமைந்தன் வடிவில்தொழு நோய் மாற்றி நெடும் பொன்னம் கிரிபோல் உரு நல்கும் புனிதத் தடம் உண்டு - நிலைபெற்றவலியையுடைய சிங்கவன்மனென்னுமனுகுமாரனது சரீரத்தின்கணுள்ள குட்டநோயைநீக்கி நெடியமேருவைப்போலும் பொன்மயமாகிய திருமேனியைக்கொடுத்து அவரை இரணியவன்மன் ஆக்கிய பரிசுத்தம்பொருந்திய சிவகங்கையென்னும் ஒருதீர்த்தமங்கே இருக்கின்றது,—முன்னம் புவியில் தவம் ஒன்றும் முயலாதவரும் அதில் மூழ்கி ஐந்து தொழில் என்னும் திருத்தாண்டவம் புரிதல் கண்டால் - பூர்வசென்மங்களிலே இப்புண்ணியபூமியில் ஒருசிறிதுந் தவஞ்செய்யாத பாவிகளும் அத்தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து பஞ்சகிருத்தியத்துக்கு நிமித்தமாகிய திருநிருத்தத்தை அங்கே தரிசிக்கப்பெற்றால்,—உலகில் இனிப் பிறவார்-அவர்களிவ்வுலகின்கண்வந்தினியொருபோதும்பிறவார்கள். எ-று.

பரமுத்தியடைவரென்பதாம். ஐந்துதொழிலென்னுந் திருத்தாண்டவம் என்றது காரணகாரியவுபசாரம். (௧௧)

நண்ணும் பிறவி யொழித்துயிர்க்கு நலஞ்சேர் முத்தி
கொடுப்பதற்கிங், கெண்ணுஞ் சமயக் கடவுளரில் யானேவல்ல
னெனப் பதமேல், வண்ணந் திகழ்பொற் கழலணிந்து மது
கைக் கொடியுங் கட்டியருட், பெண்ணம் பிகைகண் காண
நடஞ் செய்வானந்தப் பெருந்தருக்கால்.

இ—ள்: நண்ணும் பிறவி ஒழித்து உயிர்க்கு நலம் சேர் முத்தி கொடுப்பதற்கு இங்கு எண்ணும் சமயக் கடவுளரில் யானே வல்லன் என-

அநாதியாகவரும்பிறவியைநீக்கி ஆன்மாக்கட்குப்பரமுத்தியைக்கொடுத்தற் கீண்டு நன்குமதிக்கப்படும் பலசமயகருத்தாக்களுள் நாமேவல்லேமென்ப தற் கறிகுறியாக,—பதமேல் வண்ணம் திகழ் பொன் கழல் அணிந்து மதுகைக்கொடியும் கட்டி - தந்திருவடியின்மீதழகுவிளங்காநின்ற பொன்னாலாகிய வீரக்கழலைத்தரித்து விருதுக்கொடியையுங் கட்டி,—அந்தப் பெரும் தருக்கால் - அவ்வதுல சாமர்த்தியத்தினால்,—அருள் பெண் அம்பிகை கண் காண நடம் செய்வான் - அருட்சத்தியாகிய சிவகாமியம்மை தரிசிக்க அங்ஙனஞ் சபாநாயகர் பஞ்சகிருத்திய நிருத்தஞ்செய்தருளு வார். எ-று.

பொற்கழல் இனவடை. சுட்டு முதன்மூன்றடிப்பொருளையும் சுட்டிற்று. ஈண்டுமுத்தியென்றது பரமுத்தியென்பார் நலஞ்சேர்முத்தியென்றும், சமயக்கடவுளரென்றது புறப்புறச்சமயமும் புறச்சமயமும் முதலியவற்றாற் பிரதிபாதிக்கப்படுங் கடவுளரை என்பார் இங்கெண்ணுஞ் சமயக் கடவுளரென்றும், அக்கடவுளரும் சனனமரண துக்கத்துட்படுதலின் அஃதற்ற தாமே சுத்தசாட்குண்ணியங்களையுடைய பரமபதியென்பதும், பரமுத்தியைக்கொடுக்க வல்லவரென்பதும் ஆகமப்பிரமாணத்தானுய்த்துணரும் நன்மக்கட்கன்றி ஏனைமந்தமதிகட்குங் காட்சிப்பிரமாணத்தானினிது விளங்குதற்பொருட்டென்பார் யானேவல்லனெனப்பதமேல் வண்ணந் திகழ் பொற்கழலணிந்து மதுகைக்கொடியுங்கட்டி என்றும், அந்நடனத்தை என்றும் உள்ளபடி தரிசித்தற்குரியவர் அவ்வம்மையேயென்பார் அருட்பெண்ணம்பிகை கண்காண என்றும், இன்னோரன்னவை ஏனைச் சமயக்கடவுளர்க்கின்றென்பார் அந்தப்பெருந்தருக்காலென்றுங் கூறினார். மதுகை-வலி. கண்காண எனவேண்டாகூறினார் அவ்வம்மையது காட்சியே தஞ்சிறுவர்களாகிய பக்குவான்மாக்களது நடனகாட்சிக்கும் நிமித்தமாய், இன்றியமையாப் பெருஞ்சிறப்பினதென்னுந் தந்துணிவுமுடித்தற்கென்க. (௪௨)

தேக்குஞ் சடில முடிக்கட வுளிருதாள் கருதாத் தீமனமும், வாக்குஞ் செயலுங் கொடியோரு மொருகாற் பொன்
னம் பலமென்னி, லாக்கந் தருமஞ் செழுத்திருபத் தோரா
யிரத்தோ டறுநூறு, நாக்கொண் டுரைக்கு மதற்குநிக ரென்
றூன் குன்று நற்புகழான்.

இ—ள்: தேக்கும் சடில முடிக் கடவுள் இருதாள் கருதாத் தீமனமும் வாக்கும் செயலும் கொடியோரும் ஒருகால் பொன்னம்பலம் என்னில் - கங்காசலநிறையப்பெற்ற சடாமுடியையுடைய சிவபெருமானது உபயதிருவடிகளைத் தியானியாத நன்மையற்ற மனமும் வாக்குஞ் செய்கையும் கொடியபாவிகளும் ஒருதரம் "பொன்னம்பலம்" என்றுச்சரிக்கப் பெறின்,—நாக் கொண்டு ஆக்கம் தரும் அஞ்செழுத்து இருபத்தோராயிரத்தோடு அறுநூறு உரைக்கும் அதற்கு நிகர் என்றான் - நாக்கினாலேமோக்ஷ

சாம்பிராச்சியத்தைத்தரும் சிவமூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை இருபத்தோராயிரத்தறுநூறுதரம்செபிப்பதற்கு நிகராகுமென்றார்,-குன்றாநல்புகழான்-இன்றுங்குறையாத நல்லகீர்த்தியையுடைய அத்தபோதனர். எ-று.

தேங்குமென்பது வலிந்துநின்றது. மனம் வாக்குச் செயல் கொடியாரென்புழி உயர்திணைதொடர்ந்தசினை அதனொடுசார்த்தப்பட்டு அம்முடி பேற்றுநின்றது. தரமென்பதவாய்நிலையான் வருவிக்கப்பட்டது. ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஒருநாண்முழுதும் செபிக்கும் பலத்திற்கு ஒருகாற் "பொன்னம்பலம்" என்றுச்சரிக்கும்பலம் ஒக்குமென்பார். "ஒருகாற் பொன்னம்பலமென்னி, லாக்கந்தருமஞ்செழுத் திருபத்தோராயிரத்தோ டறுநூறு, நாக்கொண்டுரைக்கு மதற்குநிகரென்றான் என்றார்; ஒருநாண்முழுவதும் சுவாசிக்கும் சுவாசம் இருபத்தோராயிரத்தறுநூறேயாகலின், அத்தொகையால் அந்நாண்முழுவதையும் குறிப்பித்தது தொகைக்குறிப்பின் பாற்படுமென்க. இந்தச் சுவாசம் இருபத்தோராயிரத்தறுநூற்றுள் மூன்றிலிருகூறாகிய பதினாலாயிரத்துநானூறு சுவாசம் மீளவும் அகத்தேசென்றடங்க,மூன்றிலொருகூறாகிய ஏழாயிரத்திருநூறு சுவாசம் நாடோறும் புறத்தே கழியுமென்க. இங்ஙனம் நாடோறும் ஏழாயிரத்திருநூறு சுவாசம் புறத்துக் கழிதலினாலேயே நமக்கு மரணஞ் சம்பவிப்பதூஉம், அங்ஙனங் கழியவிடாது தடுத்து யோகநெறியாற் பிராணாயாமஞ் செய்தலினாலேயே நரைதிரைமூப்பின்றி நெடிதுகாலம் சீவிப்பதூஉமென்க. (௧௩)

நீறுந் திருவஞ் செழுத்துமிலா நிருபா திருவம் பலமென்று, கூறும்பொருளிங் கிதுவாகு மென்றான் குன்றா மெனுங் குணத்தான், றேறும் பிடக மூன்றுமுரை செய்யுந் தலைவ னல்லாது, வேறுங் கடவு ளொன்றுளதோ வென்றே புத்தன் வெகுண்டுரைப்பான்.

இ—ள்: குன்று ஆம் எனும் குணத்தான் - மலையென்றுசொல்லத்தகும் குணத்தையுடையதபோதனர்,—நீறும் திரு அஞ்செழுத்தும் இலா நிருபா - மகிமைபொருந்திய விபூதி பஞ்சாக்ஷரங்களில்லாத புத்தராசனே,—திருவம்பலம் என்று இங்குக் கூறும் பொருள் இது ஆகும் என்றான் -பொன்னம்பலம் என்றிங்கே நாங்கூறியபொருள் இதுவேயாகுமென்றனர்,—புத்தன் வெகுண்டு-அப்போதரசனோடொருங்கிருந்து இது கேட்ட புத்தகுருகோபங்கொண்டு,—தேறும் பிடகம் மூன்றும் உரை செய்யும் தலைவன் அல்லாது வேறும் கடவுள் ஒன்று உளதோ என்று உரைப்பான் -தெளிவுபொருந்திய பிடகநூன்மூன்றையுமருளிச்செய்த நங்கடவுளே யல்லது உலகத்திற்கு வேறுமொருகடவுளுண்டோவென் றிங்ஙனங் கூறுவானாயின். எ-று.

திருவை நீற்றுக்குங்கூட்டுக. சலியாமையும் பெருமையும்பற்றிக் குணம் குன்றாகவிசேடிக்கப்பட்டது. ஈண்டுக்குணமென்றது துறவு மெய்யுணர்வு அவாவின்மைமுதலிய நற்குணங்களையாகலிற் சாதியொருமை.

பொருள்-காரணம். கடவுள் என்பது ஈண்டுத்தெய்வமென்னுந் துணையாய் இருதிணைக்கும் பொதுப்பெயராகநின்று உளதோ என்னும் அஃறிணைப் பயனிலைகொண்டது. (௧௪)

சென்றே தில்லை யெனும்பதியிற் சேர்வேன்வாது செய்தவன்றா
னின்றே நடிக்குங் கழலீடு நீடுங் கொடியு மீங்கறுப்பே
னொன்றே கடவுள் புத்தனென வுலகோ ரறிய வுரைத்தந்த
மன்றேபோதிநிழற்பெருமான்பள்ளியென்னவழங்குவிப்பேன்.

இ—ள்: சென்றே தில்லை எனும் பதியில் சேர்வேன் - நானிது பொழுதே சென்று சிதம்பரமென்னும் ஸ்தலத்தையடைவேன்,—வாது செய்து அவன்றான் நின்றே நடிக்கும் கழலீடும் நீடும் கொடியும் ஈங்கு அறுப்பேன் - அங்குள்ள சைவர்களோடு வாதஞ்செய்து அக்கடவுளானவர் அனவரதநடனஞ்செய்கின்ற பாதத்திற் பிணித்த வீரக்கழலையும் உயர்த்துப்பிடிக்கின்ற விருதுக்கொடியையும் விரைந்தறுப்பேன்,—கடவுள் ஒன்றே - உலகத்துக்குப் பதி ஒன்றே,—புத்தன் என உலகோர் அறிய உரைத்து - அப்பதியும் புத்தகடவுளே என எவருமறியப் பிரதிபாதித்துத்தாபித்து,—அந்த மன்றே போதி நிழல் பெருமான் பள்ளி என்ன வழங்குவிப்பேன் - அக்கனகசபையினையே அரசமரநீழலிலிருக்கும் நம்புத்தகடவுளது பள்ளியென்று சொல்லும்படி வழங்கச்செய்வேன். எ-று.

பரமதகண்டனமும், சுவமத ஸ்தாபனமும் முறையே செய்வேன் என்பது கருத்தென்க. (௧௫)

இந்தக் கருமந் தினமூன்றில் யானே முடிப்ப னெனவெழுந்து
தந்தச் சிவிகை மேல்கொண்டு தன்றாள் வணங்குங் கணஞ்சூழ
நந்தக் கிளருந் திரைக்கடலு நாடுங் காடு மகன்றேகிப்
புந்தித் துயரங் கொண்டொல்லை சென்றான் புத்தன் புலியூரில்.

இ—ள்: புத்தன் இந்தக் கருமம் தினம் மூன்றில் யானே முடிப்பன் என எழுந்து - புத்தகுருவானவன் இக்காரியத்தை இன்றுமுதன் மூன்றுதினங்களுள் யானே முடிப்பேனென்று பிரதிஞ்ஞைசெய்தெழுந்து,—தந்தச் சிவிகை மேல்கொண்டு தன் தாள் வணங்கும் கணம் சூழ ஏகி - யானைத்தந்தத்தினாற்செய்த சிவிகைமேலிவர்ந்து தன்பாதங்களை வழிபடும் சீடவர்க்கம் சூழச்சென்று,—நந்தக் கிளரும் திரைக் கடலும் நாடும் காடும் அகன்று - ஒன்றடங்க ஒன்றெழுந் திரைகளையுடைய கடலையும் நாட்டையுங் காட்டையுங் கடந்து,—புந்தித் துயரம் கொண்டு ஒல்லை புலியூரில் சென்றான் - என்சமயத்தைச் சிதம்பரமுதலிய இடங்களில் இதுகாறும் பரப்பாது வாளா இருந்தேனே என்று மனவியாகுலங்கொண்டு விரைவாகச் சிதம்பரத்திற் சென்றான். எ-று.

இந்தக்கருமமென்றது மேலைச்செய்யுளிற் கூறிய பரமதகண்டனம் சுவமதஸ்தாபனமென்னு மிரண்டையும். மேல்கொள்ளல் ஒருசொல்.

௩ந்தங்கிளரும் என்பது வலிந்துநின்றதெனினுமமையும். கடலும் நாடுங் காடுங் கடத்தலாற் புந்தித்துயரங் கொண்டென்றுமாம். (௧௬)

வேறு.

மன்னனுந் தனது செல்வ மகட்குள மூமைகை நீங்கப்
பொன்னினம் பலத்தி லேக வென்பது பொருந்த வுன்னித்
தன்னெடுந் தானை சூழத் தனிப்பெருஞ் சிவிகை யேறிச்
சென்னிநன் னாடுசேர்ந்து தில்லையி னெல்லை புக்கான்.

இ—ள்: மன்னனும் தனது செல்வ மகட்கு உள மூகை நீங்கப் பொன்னின் அம்பலத்தில் ஏக என்பது பொருந்த உன்னி - புத்தராசனுந் தனது செல்வமகட்குளதாகிய ஊமைத்தன்மைநீங்கச்சிதம்பரயாத்திரை செய்க என்று சைவநூல்கள் விதிப்பதை யுத்தியினும் பொருந்த நினைந்து போலும்,—தன் நெடும் தானை சூழத் தனிப் பெரும் சிவிகை ஏறி நல் சென்னி நாடு சேர்ந்து தில்லையின் எல்லை புக்கான் - தனது மிக்கசேனைகள்சூழ ஒப்பற்ற பெரிய சிவிகையின்மீதிவர்ந்து நல்ல சோழநாட்டிற் சென்று சிதம்பரத்தினெல்லையை யடைந்தான். எ-று.

மன்னனுமென்னு மிறந்ததுதழீஇய வெச்சவும்மை புக்கானென்னும் இறந்தகாலவினைமுற்றுக்கொண்டது. செல்வமகளென்பது செல்வமாகிய மகள் செல்வம்போலும் மகள் செல்வத்துக்குநிமித்தமாகிய மகள் செல்வத்தையுடையமகள் என நான்குபொருளான் மயங்கும். போலுமென்பது சொல்லெச்சம். அம்மகளையுமுடன்கொண்டு சென்றான் என்பதாம். (௧௭)

இங்கிவன் செல்லு முன்ன ரெய்திய புத்த னங்கிச்
செங்கரன் றில்லை யெல்லைச் சிவிகையி னிழிந்து சென்று [யிற்
பொங்குதண் புனல்சேர் சென்னிப் புலீச்சர வரன்பொற் கோ
றங்குசெங் கனக சாலந் தயங்குமண் டபத்தி லானுன்.

இ—ள்: இங்கிவன் செல்லு முன்னர் எய்திய புத்தன் - இப்புத்தராசன் செல்வதற்குமுன் சென்ற புத்தகுருவானவன்,—அங்கிச் செங்கரன் தில்லை எல்லைச் சிவிகையின் இழிந்து சென்று - அக்கினியைத்தரித்த சிவந்த திருக்கரத்தையுடைய சிவபிரானது தில்லைமாநகரத்தெல்லையிலே சிவிகையைவிட்டிறங்கிச்சென்று,—பொங்கு தண் புனல் சேர் சென்னி அரன் புலீச்சரப் பொன் கோயில் தங்கு செம் கனக சாலம் தயங்கு மண்டபத்தில் ஆனுன - தீர்த்தங்களுண்மிக்க தண்ணியகங்காநதி பொருந்திய திருமுடியையுடைய சிவபெருமானது திருப்புலீச்சுரமாகிய அழகிய ஆலயத்துள்ள நானுவிதமாகிய செம்பொன்மயமாகி விளங்கும் ஓர் மண்டபத்தை யடைந்திருந்தான். எ-று.

இங்கிவன் இருசொல்லுமாம். சாலம்-விகற்பம். அது ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதமென நான்கு. இப்பதிதன் திருமண்ட

பத்தை அடைந்தமை அதிபாதகமாதலின் அதனைக்கூறுதற்கு மனம்பொரு ந்தாமையின் மண்டபத்தைச் சார்ந்தானெனச் சிறப்புச்சொல்லாற்கூறுது மண்டபத்திலானுன் எனப் பொதுச்சொல்லாற் கூறினர். (கஅ)

ஆங்கவ னிருப்பச் சென்ற வரசனு மிறைஞ்சி யேத்தி
யோங்கிய மகிழ்ச்சி யெய்தி யமர்ந்துழி யுரக ராசி
தாங்கிய சடிலன் கோயி றன்னினுட் கருமஞ் செய்வோ
ரீங்கிவர் வரவு கண்டே யாவரு மொருங்கு சேர்ந்தார்.

இ—ள்: ஆங்கு அவன் இருப்பச் சென்ற அரசனும் இறைஞ்சி ஏத்தி ஓங்கிய மகிழ்ச்சி எய்தி இருந்துழி - அங்ஙனம் புத்தகுருவிருப்பப் பின்சென்ற புத்தராசனும் அவனைச் சமீபித்து வணங்கித் துதித்து மிக்க மகிழ்ச்சியடைந்திருக்கின்றுழி,—உரக ராசி தாங்கிய சடிலன் கோயிறன்னில் உட் கருமம் செய்வோர் ஈங்கு இவர் வரவு கண்டு யாவரும் ஒருங்கு சேர்ந்தார்-சர்ப்பக்கொத்தைத் தாங்கிய சடையையுடைய சிவபெருமானது ஆலயத்திலே உட்பணிசெய்பவர்களாகிய திருத்தொண்டர்கள் ஈண்டிவர்களது வரவைக்கண்டு அனைவரு மொருங்குதிரண்டார்கள். எ-று. (கசு)

வேறு.

தத்தமன நொந்துகன ருனென வெகுண்டே
சித்தமயர் வெய்தும்வகை சின்மொழிகள் கூறு
வத்தனுறை தில்லைநக ரெல்லையை யகன்றே
புத்தகடி தேகிது பொருேமென வுரைத்தார்.

இ—ள்: தத்தம் மனம் நொந்து கனருனென வெகுண்டு - அங்ஙனந்திரண்ட சைவர்களெல்லாந் தங்கள் தங்கள் மனம்வருந்தி அக்கினியென்றுசொல்லும்படி மகாகோபங்கொண்டு,—சித்தம் அயர்வு எய்தும் வகை சில் மொழிகள் கூறு - அப்புத்தர்கள்கேட்டு மனந்திகைக்கும்படி சில குரூரவார்த்தைகளைப் பேசி,—அத்தன் உறை தில்லை நகர் எல்லையை அகன்றே புத்த கடிது ஏகு - நம்பரமபிதாவாகிய சிவபெருமான் வீற்றிருக்கப் பெறுகின்ற இத்தில்லைமாநகரினெல்லையைவிட்டுப் புத்தகுருவே நீ சீக்கிரம் ஓடிப்போய்விடு,—இது பொருேம் என உரைத்தார் - இவ்வபசாரத்தை நாம் எவ்வாற்ருனும் சகிக்கமாட்டோமென்று கூறினர். எ-று.

இது கலிவிருத்தம். (உ0)

தார்வளவன் முன்னருயர் தர்க்கவுரை கொண்டே
நீர்பரவு சைவநிலை யன்றென மறுத்துச்
சீர்மருவு புத்தனுயர் தெய்வமென விப்போ
தேர்பெற நிறுத்தியல தேகுவதி லென்ருன்.

இ—ள்: தார் வளவன் முன்னர் உயர் தர்க்க உரை கொண்டு - வெற்றிமாலையைத்தரித்த சோழராசாவுக்கெதிரே உயர்வாகிய தர்க்கஞ்

செய்து,—நீர் பரவு சைவம் நிலை யன்று என மறுத்து - நீவிர் அநுசரிக்கும் சைவசமயம் பொய்ச்சமயமென்று அதனை நிராகரித்து,—சீர் மருவு புத்தன் உயர் தெய்வம் என இப்போது ஏர் பெற நிறுத்தி அலது - புகழை யுடைய நம்புத்தனே உலகத்துக்கு முதற்கடவுளென்றிந்தக்ஷணமே தர்க்கநீதிபொருந்தத் தாபித்தல்லது,—ஏகுவது இல் என்றான் - யாமிவ்விடத்தைவிட்டுப் போவதில்லையென்று கூறினான். எ-று.

உரை-நூல்; ஆகுபெயர்; வினாவிடைகளென்றலுமொன்று. (உக)

புத்தகுரு வின்னன புகன்றபி னெவர்க்கு
மித்திற முரைக்குவ மெனக்கடி தகன்றே
மெய்த்தவர்கள் வேதமுத லோர்பரி கலத்தோர்
தத்தமனை தோறுமிது சாற்றினர்க ளன்றோர்.

இ—ள்: புத்தகுரு இன்னன புகன்றபின் - புத்தகுரு இன்னோரன்னவார்த்தைகளைக் கூறியபின்னர்,—அன்னோர் எவர்க்கும் இத்திறம் உரைக்குவம் எனக் கடிது அகன்று - அச்சைவர்கள் சிதம்பரதலவாசிகளெவர்கட்கு மிச்சமாசாரத்தைச் சொல்வேமென் றவ்விடத்தைவிட்டகன்று,—மெய்த்தவர்கள் வேதமுதலோர் பரிகலத்தோர் தத்தமனை தோறும் இது சாற்றினர்கள் - உண்மையாகிய தபோதனர்களுக்கும் வேதவித்துக்களாகிய தில்லைவாழந்தணர்களுக்கும் ஏனைப் பரிகலத்தோர்கட்கும் அவ்வவரில்லந்கடோறுஞ் சென் றிதனைக்கூறினார்கள். எ-று.

இன்ன அன்ன என்பது இன்னனவென மரீஇயிற்று. பரிகலத்தோர்-பரிவாரசனம்: கோயிற்குரிய உட்டொழும்புபூண்டொழுகுவோர் என்றதாம். பரிகரத்தோர் என்று பாடமோதுவாருமுளர். (உஉ)

புண்ணுழையும் வேனிகர் புகன்றமொழி கேளா
வண்ணலுறை கோயிலிடை யாவரு மடைந்தே
வண்ணமணி மண்டபம தெய்திவரு புத்த
னெண்ணமது கேட்குவ மெனக்கடிது சென்றார்.

இ—ள்: புண் நுழையும் வேல் நிகர் புகன்ற மொழி கேளா - புண்ணின்கணுழையும் வேற்படைபோலும் அவ்வார்த்தையை அவர்களனைவருங்கேட்டு,—அண்ணல் உறை கோயில் இடை யாவரும் அடைந்து - எப்பொருட்கு மிறைவராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற பேரம்பலத்தின்கண் வந்தனைவருமொருங்குதிரண்டு,—வண்ண மணி மண்டபம் அது எய்தி - இனி நாம் புலீச்சரத்திலுள்ள அழகிய அவ்விரத்தினமண்டபத்தின் கட்போய்,—வரு புத்தன் எண்ணம் அது கேட்குவம் எனக் கடிது சென்றார் - அம்மண்டபத்தின்கண் வந்திருக்கும் புத்தகுருவினது மனக்கருத்தென்னையென்று கேட்டறிவோமென்று அங்ஙனம் விரைந்துசென்றார்கள். எ-று.

நிகர்மொழி புகன்றமொழி எனத் தனித்தனி முடிபுசெய்க. எண்ணமது எண்ணமாகிய அது. ஈண்டதுவென்றது முக்கியவிஷயமென்னுங் கருத்திற்று. (உ௩)

தெய்வநர ரானவர்கள் செல்லவெதிர் வாரா
மெய்யுணர்வில் புத்தனை வெகுண்டுபல சொல்லா
வுய்வதறி யாதவொரு நீபயமு றாதே
யிவ்வகை யிருந்தமதி யாமையெது வென்றார்.

இ—ள்: தெய்வ நரரானவர்கள் செல்ல - பூசுரர்களாகிய தில்லைவாழந்தணர்கள் அங்கேசெல்ல,—எதிர் வாரா மெய் உணர்வு இல் புத்தனை வெகுண்டு பல சொல்லா - எதிர்கொண்டுவாராத மெய்யறிவற்ற புத்தகுருவைக் கோபித்துப் பலவற்றைப் பேசி,—உய்வது அறியாத ஒரு நீ பயம் உறாது இவ்வகை இருந்த மதியாமை எது என்றார் - உய்யுநெறியறியாத மூழ்மகனாகிய நீ ஒருசிறிதும் அச்சமின்றி இங்ஙன மிறுமாந்திருந்த அவமதிப்புக்குக் காரணமென்னையென்று வினவினர். எ-று.

பரமபதியாகிய சபாநாயகர் "நாமிவரிலொருவர்" என்றெடுத்தருளிச் செயப்பெற்ற தெய்வத்தன்மையையுடைய நரர் என்பார் தெய்வநரர் என்றாரென்றலுமொன்று. அவர்வரவுக் கெதிர்கொண்டு சேறல் புண்ணியமும் செல்லாதொழிதல் பாவமுமாமென்னு முண்மையறிவு தலைப்படாத புத்தகுரு என்பார் செல்லவெதிர்வாரா மெய்யுணர்வில் புத்தன் என்றும், குற்றஞ்செய்தாரைத் தண்டித்தல் தகுதியேயாமாகலின் நன்குமதியாமையாகிய இக்குற்றஞ்செய்த புத்தகுருவை ஈண்டுக் கோபித்துரைத்தல் தக்கதேயாமென்பார் "புத்தனைவெகுண்டுபலசொல்லா என்றும், இன்னோரன்ன நூலவறிவுமில்லாத நீ உன்னுயிருய்தற்கேற்ற சூக்குமவறிவுமுடையையல்லையாதலின்மேல், "தன்னிலத்தினிற்குறுமுயறந்தியின்வலிது" என்பதறியாது நமதுநிலத்துத் தனிவந்தநீ என்பார் உய்வதறியாதவொருநீ என்றும், அஞ்சவேண்டுழி அஞ்சாமை மேலும் இங்ஙன மிறுமாந்திருத்தற்கேற்ற மகிமை ஒன்றும் நின்னிடத்தின்றென்பார் பயமுறாதே, யிவ்வகையிருந்தமதியாமையெதுவென்றார் என்றும் கூறினர். (உ௪)

அங்கமறை யாகம புராணமவை யாலே
நுங்கடவு ளேகடவு ளென்றுநுவல் வீரே
லெங்கடவு ளேகடவு ளென்றுநவில் வேன்யா
னிங்கெனெதிர் கூறுமென வேயவ னிசைத்தான்.

இ—ள்: அங்கம் மறை ஆகம புராணம் அவையாலே நும் கடவுளே கடவுள் என்று நுவல் வீரேல் - ஆறங்கம் நால்வேதம் இருபத்தெட்டாகமம் பதினெண்புராணமாகிய நுஞ்சமயசாத்திரங்களினாலே உமது சிவனே உலகத்துக்கு முதற்கடவுளென்று நீவிர் பிரதிபாதித்தல் கூடுமாயின் அதனைநிராகரித்து,—எம் கடவுளே கடவுள் என்று யான் நவில்

வேன் - நஞ்சமய சாத்திரங்களைக்கொண்டு எம்புத்தகடவுளே உலகத்துக்கு முதற்கடவுளென்று யான்பிரதிபாதிப்பேன்,— இங்கு என் எதிர் கூறும் எனவே அவன் இசைத்தான் - ஆகலின், இங்கெனக்கெதிரே நீவிர் வாதஞ் செய்யுங்களென்று அப் புத்தகுரு கூறினன். எ-று.

ஆறங்கம் வியாகரணம், தர்க்கம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன. ஏனையவெளி. அவை-தொகுதி. நும்மை ஒட்டி வாதிக்க வந்தமையின் மதியாதிருந்தே னென்றானென்பது கருத்து (௨௫)

போற்றுமறை யந்தணர்கள் புத்தனை வெகுண்டே
தோற்றனை யெனக்கலைஞர் சொல்லவுனை வெல்வோ
மாற்றமினி யுன்னுட னுரைக்குமது மற்றோர்
சேற்றினெதிர் கல்லெறிதல் செய்வதல துண்டோ.

இ—ள்: போற்றும் மறை அந்தணர்கள் புத்தனை வெகுண்டு-யாவ ராலுந் துதிக்கத்தகும் வேதங்களை அத்தியயனஞ்செய்யுந் தில்லைவாழந்த ணர்கள் இங்ஙனங்கூறிய புத்தகுருவைக்கோபித்துப்பார்த்துக் கூறுவாரா யினர்,—தோற்றனை எனக் கலைஞர் சொல்ல உனை வெல்வோம் - நீ தோற் றனையென்று தார்க்கிகர்சொல்லும்படி நாம் உன்னைத் தப்பாது வெல் வோம்,—இனி மற்று ஓர் மாற்றம் நின்னுடன் உரைக்கும் அது - அஃதொ ழிந்து இனிப் பிறிதொருவார்த்தையை நின்னோடு கூறுமக்கூற்று,—சேற் றின் எதிர் கல் எறிதல் செய்வது அலது உண்டோ - சேற்றின்மீது கல்லு விட்டெறிந்தவழி அச்சேறு எறிந்தார்மீது தெறித்தல்போல அவப்பிரயோ சனமாவதல்லது சற்பிரயோசனமாவதுண்டோ. எ-று.

இல்லையென்பதாம். உரைக்குமது என்பதனில் அது என்பதனைப்பகு திப்பொருள் விகுதி எனினும் அமையும். மற்று-வினைமாற்று. (௨௬)

நன்றிதரு வாருமொரு ஞாளிகுரை செய்தா
னின்றதன் வெகுட்சியை நிறுத்தல் கடனுமா
லின்றிழியு நின்னுட னிகழ்ச்சியெனி னுஞ்சீ
ரொன்றுமிலை யானவுனை யோருரையில் வெல்வேம்.

இ—ள்: நன்றி தருவார் ஒரு ஞாளி குரை செய்தாலும் நின்று அதன் வெகுட்சியை நிறுத்தல் கடனும் - தமக்கும் பிறர்க்கும் நன்மையை ஈட்டும் புருஷோத்தமர் ஒருநாய் குரைக்கினும் அங்ஙனந் தங்கிநின்று அதன்வெகுளியைத் தணித்தல் அவருக்கு முக்கியகடமையாகும், அது போல,—இன்று இழியும் நின் உடன் இகழ்ச்சி எனினும்-இத்தின மிழிவு பொருந்திய நின்னோடு வாதஞ்செய்தல் எமக்கிழிவாயினும்,—சீர் ஒன்றும் இலை ஆன உனை ஓர் உரையில் வெல்வேம் - சமயவாதஞ் செய்தற்கு வேண்டப்படுஞ் சிறப்பிரண்டினுள் ஒருசிறப்புமில்லாத உன்னை ஓராக்ஷேப த்தில் வெல்வேம். எ-று.

சிறப்பும்மை பிரித்துக் கூட்டியுரைக்கப்பட்டது. உரை ஈண்டு ஏற்புழிக்கோடலான் வினவுரையின்மேற்று. சமயவாதஞ்செய்தற்கேற்ற கல்விச்சிறப்புச் சமயச்சிறப்பென்னு மிரண்டனுள் ஒன்றுமுடையையல்லையாகலின் விரைவில் வெல்லுதுமென்பார் சீரொன்றுமிலையானவுனையோருரையில் வெல்வேமென்றாரென்க. வேதபாகியமதாநுசாரியாயுள்ள நின்னோடொட்டி வாதஞ்செய்தல் நஞ்சமயக்கொள்கைக்குத் தகுவதன்றாயினும் உலகவழக்குப்பற்றி வாதித்து ஒருதலையாக விரைவில் வெல்லுதுமென்றாரென்பது கருத்தென்க. வேதபாகியம் வேதத்திற்குப் புறமானது. (உஎ)

மிக்கதிறன் மன்னவரு மெய்யுணர்வி னோருந்
தொக்கசபை முன்னர்நம தர்க்கவுரை சொன்னாற்
றக்கதென லாமிது தகாததிது வென்றா
லெக்கலக முமிலை யிதேகரும மாமால்.

இ—ள்: மிக்க திறல் மன்னவரும் மெய் உணர்வினோரும் தொக்க சபை முன்னர் நம தர்க்க உரை சொன்னால் - மிக்க வலிமையையுடைய அரசர்களும் மெய்யுணர்வையுடைய சகலகலாபண்டிதர்களுமொருங்குதிரண்ட மகாசபைக்கெதிரே நாமிருதிறத்தேமும் நம்முடைய பக்க சபக்க விபக்கங்களைக்கொண்டு சுட்டிவாதித்தால்,—இது தக்கது இது தகாதது எனலாம் - இதுகுணம் இதுதோஷம் என்று அவர்களே வாதசித்தாந்தஞ் செய்துவிடலாம்,—என்றால் - அங்ஙனஞ் சித்தாந்தஞ் செயப்படின், —எக் கலகமும் இலை - ஒருகலகமுமில்லை ஆகலின்,—இதேகருமம் ஆம்-இதுவே ஈண்டுச் செயற்பாலதாகியகாரியமாம். எ-று.

கலகந்தோன்றினுமடக்கி இடையீடின்றி வாதத்தை நடத்தற்குமிக்க திறன்மன்னவரும், வாதவிகற்பங்களை உள்ளவாறுணர்ந்து நடுநின்று விஷயசித்தாந்தஞ்செய்தற்கு மெய்யுணர்வினோரும் சபைக்கங்கமாகவொருதலையான் வேண்டப்படுதலின் மிக்கதிறன்மன்னவரு மெய்யுணர்வினோருந் தொக்கசபையென்றும், சபைகூட்டிப் பேசுதலே துணிந்தகருமமென்பார் பிறிதிலையேகாரந்தந்து இதேகருமமாமென்றுங் கூறினார். (உஅ)

உத்தர முரைக்கவறி யாதுபுலி யூரர்
புத்தனை முனிந்தனர் புடைத்தனர்க ளென்றே
யித்தல முரைத்துவிடு மென்றுவள வன்பான்
மெய்த்தவர் விரித்தெழுது மோலையை விடுத்தார்.

இ—ள்: மெய்த்தவர் - மெய்ம்மையாகிய தவத்தையுடைய தில்லைவாழந்தணர்கள்,—புலியூரர் உத்தரம் உரைக்க அறியாது புத்தனை முனிந்தனர் புடைத்தனர்கள் என்று இத்தலம் உரைத்துவிடும் என்று - சிதம்பரதலவாசிகள் புத்தகுருவின் வினுக்கட்கு விடைகூற வகையறியாமல் அப்புத்தகுருவை வெகுண்டு புடைத்தார்களென் றிவ்வுலகந் தப்பாது தம்மை அப

வாதஞ்சொல்லுமென் றுலோசித்து.—வளவன் பால் விரித்து எழுதும் ஓலையை விடுத்தார் - சோழராசாவினிடத்துச் சம்பவங்களைக் கூறுபட விரித்தெழுதி, அவனதுவரவை அபேக்ஷிக்கும் ஒரு திருமுகமனுப்பினார்கள். எ-று.

உரைத்துவிடுமென்பது வந்துவிட்டானென்பதுபோலத் தவறாது சொல்லுமென்னுந் துணிவுப்பொருடந்துநின்றது. புலியூரரென்றது ஈண்டுத் தில்லைவாழந்தணர்களை. (௨௯)

அந்தணர் பெருந்தவ ரருங்கலை யுணர்ந்தோர்
வந்தணுகு நாளைமணி மன்றுதொழ வென்றே
புந்திமகி ழோலைபல போக்கியபின் வெய்யோன்
முந்துற வொளித்தனன் முளைத்தன னிராவோன்.

இ—ள்: அந்தணர் பெருந்தவர் அரும் கலை உணர்ந்தோர் - பிராமணர்களும் பெரிய தபோதனர்களும் அரிய சகலகலாபண்டிதர்களும்,—மணி மன்று தொழ நாளை வந்து அணுகும் என்று புந்தி மகிழ் ஓலை பல போக்கிய பின் - அழகிய கனகசபையைத் தரிசித்துவணங்க நாளை இங்ஙனம் வந்துசேருங்களென்று வாசிப்பவர் கேட்பவரது மனம்மகிழுதற்கேதுவாகிய திருமுகங்கள் பலவற்றை எழுதியனுப்பியபின்னர்,—வெய்யோன் முந்துற ஒளித்தனன் - சூரியன் முன்னர் அஸ்தமயனமாயினான்,—இராவோன் முளைத்தனன் - சந்திரன் பின்புதயஞ்செய்தான். எ-று.

அரசனாதலின், அச்சத்தாற் சம்பவங்களைச் சிறப்புவகையாற் றெரித்தெழுதி முன்னர்த் திருமுகமனுப்பினாரென்பார் மேலைச்செய்யுளில் வளவன்பான் மெய்த்தவர்விரித்தெழுதுமோலையைவிடுத்தார் என்றும், அவ்வச்சமின்மையின், அந்தணர்முதலாயினோர்க்குச் சம்பவங்களைப் பொதுவகையாற் பின்னர் விதவாதெழுதினாரென்பார் இச்செய்யுளில் அந்தணர் பெருந்தவ ரருங்கலை யுணர்ந்தோர் வந்தணுகு நாளைமணிமன்று தொழவென்றே புந்திமகிழோலைபலபோக்கியபின் என்றும், இழிந்த புத்தனுடன் வாதுசெய்ய வருகவென்றெழுதல் எழுதுவோர் எழுதப்படுவோரென்னு மிருவர்க்குந் தகுதியன்மையின் சிறந்த பிறிதோரேதுவின்மேல் வைத்து மணிமன்றுதொழவென்றெழுதினாரென்றுங் கூறினார். அரசனை வருகவென்று பணியாதெழுதியதூஉம், ஏனையோரை வருகவென்று பணித்தெழுதியதூஉம் அக்கருத்தேபற்றியென்க. (௩௦)

வேறு.

துங்கவா னென்னு மாதின் சுடர்நுதற் றிலகை மென்னக்
கங்குலா மடந்தை பார்க்குங் கவின்கொள்கண் ணாடியென்னச்
சங்கவார் குழையார்க் கிட்ட தரளவெண் கவிகை யென்னத்
திங்கண்மா கடவு டோன்றச் சிறந்தது ஞால மெல்லாம்.

இ—ள்: துங்க வான் என்னும் மாதின் சுடர் நுதல் திலகம் என்ன - உயர்ச்சிபொருந்திய ஆகாயமென்னும் பெண்ணினதொளியை யுடைய நெற்றியின்கண்விளங்குஞ் சிந்தூரதிலகம்போலவும்,—கங்குல் ஆம் மடந்தை பார்க்கும் கவின் கொள் கண்ணாடி என்ன - இராக்கால மாகிய பெண் தன்வடிவழகைநோக்குமழகிய கண்ணாடியைப்போலவும்,— சங்க வார் குழையார்க்கு இட்ட தரள வெண் கவிகை என்ன - நெடியசங் கக்குண்டலத்தையுடைய சிவபெருமானுக் கிந்திரன்கவித்த வெண்மை யாகிய முத்துக்குடையைப்போலவும்,—திங்கள் மா கடவுள் தோன்ற - தெய்வத்தன்மையையுடைய சந்திரனுதிக்க,—ஞாலம் எல்லாம் சிறந்தது - இவ்வுலகமுழுதுஞ்சிறப்படைந்தது. எ-று.

சந்திரனுதிக்கும்போது சிவந்துதோன்றுதலின், அதுபற்றிச் சிந்தூர திலகமாக அதனையுவமிப்பார் அதற்கேற்ப ஆகாயத்தைப்பெண்ணாகவுருவ கஞ்செய்து வானென்னுமாதின் சுடர்நுதற்றிலகமென்னஎன்றும், மாலைக் காலத்துமயங்கிருளான் மறைந்த உருவங்களை விளக்குதலின், அவ்விளக்க முடைமைபற்றி அதனைக்கண்ணாடியாக உவமிப்பார்அதற்கேற்ப இராப் பொழுதைப்பெண்ணாக உருவகஞ்செய்து, கங்குலாமடந்தைபார்க்குங் கவின்கொள்கண்ணாடியென்ன என்றும், உலகமே உருவமாகிய கடவுட் குக் கவிக்குங்குடை உலகெங்கும் நிழற்றுமாகலின, அவ்விசேடம்பற்றி அதனைக்கடவுளது வெண்கொற்றக்குடையாக உவமிப்பார் சங்கவார்குழை யார்க்கிட்ட தரளவெண்கவிகையென்னஎன்றும், பகற்போதிற் சூரியனது உஷ்ணகிரணங்களாலாய வெம்மையைத் தன் அமுதகிரணங்களாற்றணித் திராப்போதில் உலகத்தை இன்புறுத்தி யழகுசெய்தலின், அவ்வேதுப் பற்றித் திங்கண்மாகடவுடோன்றச் சிறந்ததுஞாலமெல்லாம் என்றுங் கூறினர். உவமவுருபிடைச் சொல்லடியாகப் பிறந்த என்னவென்னும் செயவெனெச்சங்கண்மூன்றும் தோன்றவென்னும் காரணப்பொருட்டாய வினையெச்சத்தைத் தனித்தனி கொண்டன. இது அறுசீரடியாசிரிய விருத்தம். (௩௧)

இன்றொரு தினமுந் தேரா விங்கிரு நாளை யாங்க
ளுன்றன துயர்ச்சி யின்மை காட்டுது முலகிற் கென்று
நன்றிகொண் மனையிற் சென்றே யாருநல் லுணவு மாந்தி
யன்றிருண் மேன்மை யாள ரருந்துயில் பயிலுங் காலை.

இ—ள்: மேன்மையாளர் - மகிமையையுடைய தில்லைவாழந்தணர் கள்,—தேரா இன்றொரு தினமும் இங்கு இரு - புத்தகுருவே இவ்வொரு தினமாத்திரம் நீயிங்கிரு,—நாளை யாங்கள் உன்றனது உயர்ச்சியின்மை உலகிற்குக் காட்டுதும் என்று - நாளை நாமுன்னுடைய இழிவை உலகிற்கு நேரே காட்டுதுமென்று கூறி,—நன்றி கொள் மனையில் சென்று யாரும் நல் உணவு மாந்தி - நன்மையையுடைய தம்மில்லங்களிற் சென்றனைவரும்

நல்ல உணவுகளையுட்கொண்டு,—அன்று இருள் அரும் துயில் பயிலும் காலை - அவ்விராக்காலத்தின்கண் அரியநித்திரைசெய்யும்போது எ-று.

இருள் ஆகுபெயர். தில்லைவாழந்தணர் அறுவகைச்சைவருண் மேம்பட்ட ஆதிசைவரென்பார் மேன்மையாளர் என்றும், விருந்தினரையுபசரித்தன் முதலியநன்மைகளைக் கடைப்பிடிக்கு மனையாளையுடைய இல்லங்களென்பார் இடத்துநிகழ்பொருளின் றொழிற்பண்பை இடத்தின்மேலேற்றி நன்றிகொண்மனை யென்றும், அதிதிமுதலாயினோர்க் குதவியுண்ணு மறுசுவைப் போனகமென்பார் நல்லுணவென்றும், புறப்புறச்சமயிகளாகிய புத்தரைச் சிதம்பரத்தின் எல்லையினின்றும் ஓட்டுதற்குரிய யோசனை மேலீடு மிகவுமுடையரென்பார் அருந்துயிலென்றுங் கூறினார். நடேசபிரான் கனவில்வெளிப்படுந் துயிலென்பார் அருந்துயிலென்றாரெனினு மமையும்.

(௩௨)

அழகுற மன்றி லாடு மையர்கைப் பிரம்பு தாங்கித்
தழைசடை முடியு மேனி சாத்திய நீறு மாகி
விழைதரு வடிவங் கொண்டு வெளிப்படக் கனவில் வெய்யோ
னெழுவதன் முன்ன ரெய்தி யாவர்க்கு மிதுபு கன்றார்.

இ—ள்: அழகு உற மன்றில் ஆடும் ஐயர் - தரிசித்தபக்குவான்மாக்கள் பரமுத்தியடையும்படி கனகசபையின்கண்ணே ஞானநடனஞ்செய்தருளும் பரமபிதாவாகிய சபாநாயகர்,—கைப் பிரம்பு தாங்கி - தமதருமைத்திருக்கரத்திற் பொற்பிரம்பைத்தாங்கி,—தழை சடை முடியும் மேனி சாத்திய நீறும் ஆகி - தழைத்தசடாமுடியையும் திருமேனியிலே தரித்தவிபூதியையுமுடையவராகி,—விழைதரு வடிவம் கொண்டு - எவரும் விரும்பத்தகும் பேரழகுபொருந்திய ஒரு சித்தவடிவங்கொண்டு,—கனவில் வெய்யோன் எழுவதன் முன்னர் வெளிப்பட எய்தி - அவ்வந்தணரது சொப்பனாவத்தையிற் சூரியோதயத்துக்குமுன்னர் நான்காஞ்சாமத்தில் வெளிப்படவந்தருளி,—யாவர்க்கும் இது புகன்றார் - அவரனைவர்க்கு மிதனைத் திருவாய்மலர்ந்தருளினார். எ-று.

அழகியபொருள்களெவற்றினும் மிகவழகியபொருண் முத்தியாகலின் அஃதீண்டழகெனப்பட்டது. நாடகநூல் அழகமைய நடிப்பவராகலின் அழகுறமன்றிலாடுமையரென்றாரெனினு மமையும். வெய்யோனெழுவதன்முன்னரெனவே கடைச்சாமமென்ப தினிதுபெறப்படும். படவே, அக்காலத்துக்காணுங் கனவின்பலன் உடனே பலிதமாமென்னுங் கனவுநூற்றுணிபுங் குறிப்பிக்கப்பட்டதாயிற்று.

(௩௩)

வருந்துவ தொழிமி னம்மூ ரெல்லையின் வைகி யன்பா
லிருந்தனன் வாத வூர னிவ்வுரை கேட்ட போதே
பொருந்திய தர்க்க நூலாற் புத்தரை வெல்வா னின்னே
யருந்தவ முடைய நீர்போ யழைத்திடு மவனை யென்றார்.

இ—ள்: வாதவூரன் அன்பால் நம் ஊர் எல்லையில் வைகி இருந்தனன் - திருவாதவூரன் உண்மையன்பினன் நமது தில்லைமாநகரின் புறவெல்லையிற் சிவயோகஞ் செய்துகொண்டிருக்கின்றனன்,—இவ்வுரை கேட்டபோதே பொருந்திய தர்க்க நூலால் புத்தரை வெல்வான் - இவ்வார்த்தையை நீவிர் சொல்லக் கேட்டதுணையானே சித்தாந்தத்திற்பொருந்திய தர்க்கநூல்விதிப்படி பௌத்தர்களைத் தவறாது வாதித்துவெல்வான்,—அரும் தவம் உடைய நீர் இன்னே போய் அவனை அழைத்திடும் - அரியதவத்தையுடைய நீவிர் இப்பொழுதேபோய் அவனைத் தப்பாதழையுங்கள்,—வருந்துவது ஒழிமின் என்றார் - இஃதன்றி வெல்லுதற்கண் ஐயுற்றுமனம்வருந்துதலை இனி நீக்கிவிடுங்களென்றருளிச்செய்தார் எ-று.

சிதம்பரம் பூலோகசிவலோகமாகலின் அதனுள்ளெல்லைக்குள் வசித்தல் சிவஞானிகட்குந் தகாதென்னுமுண்மையைத் திருவாதவூரடிகள் தம்மெய்யன்போடுணர்ந்து அதன்புறவெல்லையில் வசித்தலின், நம்மூரெல்லையில்வைகியிருந்தனனென்றொழியாது அன்பாலிருந்தனனென்றும், சைவசித்தாந்தத்துக்குப் பொருந்தாத தர்க்கநூற்பாகுபாடுகளுமுண்மையின் அவற்றையொழித்தற்குத் தர்க்கநூலெனவாளாகூறாது பொருந்திய தர்க்கநூலென்றும், சிவானுபூதிமானாகிய திருவாதவூரனைக்கண்டு வசனித்தற்கேற்ற அரியதவத்தைச்செய்தநீவிர் என்பார் அருந்தவமுடைய நீர் என்றும், இது பொய்க்கனவென்றிகழாதொருதலையான் அவனைச் சென்றழையுங்களென வற்புறுத்துவார் அழையுமென்னாது அழைத்திடுமென்றும், அவன்வரின் நீவிர் வெல்லுதல் நிச்சயமென்பார் வருந்துவதொழிமினென்றுங்கூறினார். வைகியிருத்தலென்னு மொருபொருட்பன்மொழி தங்கியிருத்தலென்னும்பொருட்டாய், ஈண்டுச் சிவயோகஞ்செய்துகொண்டிருத்தன்மேலதாயிற்று. ஊரெல்லையென்ற தீண்டுக் கிழக்கெல்லையின் புறத்துள்ள வில்வவனத்தை. அது, "விண்டுழாவியகுடுமி மன்றுடையான் றிருவாக்கான் மிகுந்த நேயங், கொண்டுபோய்க் குணதிசையி லருந்தவர் வாழ்தபோவனத்தைக்குறுகி" என வழிநூலாசிரியர் விதந்துகூறியவாற்றானுமுணர்க. (௩௪)

கண்டனர் கனவு தன்னில் விழித்தனர் கனக மன்றி
லொண்டொடி பாகனன்பா லுரைத்தது கருத்தி லாய்ந்து
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை குவித்தனர் முடியிற் கோயின்
மண்டப மிசையே யெல்லா மாந்தரும் வந்து தொக்கார்.

இ—ள்: கனவுதன்னில் கண்டனர் விழித்தனர் - சொப்பனாவத்தையின்கணிங்ஙனங்கண்ட தில்லைவாழந்தணர்கள் நித்திரைவிட்டெழுந்து,—கனக மன்றில் ஒண் தொடி பாகன் அன்பால் உரைத்தது கருத்தில் ஆய்ந்து மகிழ்ச்சி கொண்டனர் - கனகசபையின்கண்ணே திருநிருத்தஞ்செய்தருளும் ஒளிபொருந்திய வளையலைத்தரித்த சிவகாமியம்மைசமேதராகிய சபாநாயகர் தம்மாட்டு முகிழ்த்த பெருங்கருணைத்திறத்தாற்றமாக

வே வந்து திருவாய்மலர்ந்தருளிய தர்க்கஜயோபாயத்தைத் தம்முள்ளத்தின்கட் பலகாற் சிந்தித்துத் தெளிந்து மனமகிழ்ச்சிகொண்டார்கள்,—முடியில் செம் கை குவித்தனர் - சிரசிலே சிவந்தகைகளைக் கூப்பிவைத் தஞ்சலிசெய்தார்கள்,—கோயில் மண்டப மிசையே எல்லா மாந்தரும் வந்து தொக்கார் - பின்னர் அவ்வாலயத்தின் பேரம்பலமாகிய திருமண்டபத்தின்கண் அவரனைவரும் வந்தொருங்குகூடினார்கள். எ-று.

தில்லைவாழந்தணர்கள் ஓர்நிமித்தத்தின்மேல்வைத்துச் சபைகூடுங் கால், அது கூடுமிடம் பேரம்பலமே என்பதைக் கன்னபரம்பரையானும், தற்கால அனுபவத்தானுமறிக. (௩௫)

புல்லறி வுடைய புத்தன் புகன்றதற் கிரங்கிப் பின்ன
ரெல்லையில் கருணை யான்வந் திருங்கன வதனி லெய்தச்
சொல்லிய மொழியி னாலே சோதிகொண் முகத்த ராகி
வல்லிருட் கொடுங்கி வெய்யோன் வரவிரி கமல மொத்தார்.

இ—ள்: புல் அறிவு உடைய புத்தன் புகன்றதற்கு இரங்கி - மேற் கூறியபிரகாரம் பேரம்பலத்தின்கண்வந் தொருங்கு கூடிய தில்லைவாழந் தணர்கள் அற்பவறிவையுடைய புத்தகுரு முன்னர், "எங்கடவுளேகடவுளென் றுநவில்வேன்யான்" எனக் கூறிய அக்கூற்றிற்குத் தம்முகமொளி குன்றி வாடப்பெற்று,—பின்னர் எல்லை இல் கருணையான் இரும் கனவதனின் வந்து எய்தச் சொல்லிய மொழியினாலே சோதிகொள் முகத்தர் ஆகி - அதன்பின்னர் முடிவற்ற பேருளையுடைய சபாநாயகர் பெரிய சொப்பனவத்தையின்கண்வந்து வாதவூரடிகளிடத்துத் தம்மைச் சென்று சொல்லும்படி பணித்தருளிய திருவாக்கினாலே அவ்வொளி நிறையப் பெற்று மலருமுகத்தையுடையவராகி,—வல் இருட்கு ஒடுங்கி வெய்யோன் வர விரி கமலம் ஒத்தார் - செறிந்த இருளையுடைய இராக்காலத்திற்குக் குவிந்து சூரியனுதிக்க விகசிக்கும் தாமரைமலரை ஒத்தனர். எ-று.

வல்லிருட்குடைந்து எனவும் பாடம். (௩௬)

தெய்விக மான மன்றிற் றிருநடம் புரியு நாதன்
றைவரு நீறுஞ் செய்ய சடையுநற் பிரம்புந் தாங்கி
மைவிரி கங்குற் காலை வந்துநன் மகிழ்ச்சி யெய்த
விவ்வகை மொழிந்தா ரென்றே யாவருங் கனவு சொன்னார்.

இ—ள்: தெய்விகம் ஆன மன்றில் திரு நடம் புரியும் நாதன் - தெய்வத்தன்மைபொருந்திய கனகசபையின்கண்ணே திருநடனஞ்செய் தருளுஞ் சபாநாயகர்,—தைவரு நீறும் செய்ய சடையும் நல் பிரம்பும் தாங்கி மைவிரி கங்குல் காலை வந்து - பரவப்பூசிய விபூதியும் சிவந்த சடாமுடியும் பொற்பிரம்புங்கொண்டு இருள்விரிந்த இவ்விராக்காலத்தின்கண் நமது சொப்பனவத்தையில் வந்து,—இவ்வகை மொழிந்தார் என்று யாவரும் கனவு சொன்னார் - இந்தப்பிரகாரந் திருவாய்மலர்ந் தருளினா

றென்று அவரனைவருந் தாங்கண்ட கனவுநிலையைத் தனித்தனி ஒருவர்க் கொருவர் மாறின்றிக் கூறினார். எ-று.

நாதன் மொழிந்தார் என்பதனைச் சிவபெருமான் வந்தார் என்பது போலச் சமயசம்பிரதாயமாகக் கொள்க. கனகசபை பராசத்தியா லதிட்டிக்கப்பட்ட சுத்த மாயாரூபமாகலின் தெய்விகமான மன்றென்றும், கொண்ட சித்தவடிவமும், கண்டகாலமும், கனவுநிலையும், எமக்கெல்லா மொத்திருந்தன என்பார் தைவருநீறுஞ்செய்ய சடையுநற் பிரம்புந்தாங்கி, மைவிரிகங்குற்காலைவந்து நன்மகிழ்ச்சியெய்த, இவ்வகை மொழிந்தாரென்றே யாவருங்கனவுசொன்னார் என்றுங் கூறினார். மைவிரி கங்குலென்றது கண்டகனா உடனேபயத்தற்குரிய குமரி இருள் செறிந்த விடியற் காலத்தை உணர்த்திற்று. (௩௭)

அத்தனை மன்று ளாடு மையனை வியந்து கூறித்
தத்தமி லன்பு கூர்ந்து தரித்துள வருத்த நீங்கி
மெய்த்தவ வாத வூரர் மேவிடத் தணுகு வோமென்
றுத்தம பன்ன சாலை யொல்லையிற் குறுகி னார்கள்.

இ—ள்: அத்தனை மன்றுள் ஆடும் ஐயனை வியந்து கூறி - பரமபிதாவும் கனகசபையின்கணடிக்கும் பூசிதையுடையவருமாகிய சபாநாயகரது திருவருட்டிறத்தை எடுத்துத்தோத்திரஞ்செய்து,—தத்தமில் அன்பு கூர்ந்து தரித்துள வருத்தம் நீங்கி - தங்கடங்களுள் அன்பு மிக்குத் தாங்கொண்ட சமயவாதத்தைச் சுட்டிய மனவருத்தத்தினின்று நீங்கி,—மெய்த்தவ வாதவூரர் மேவு இடத்து அணுகுவோம் என்று - மெய்ம்மையாகிய தவத்தையுடைய திருவாதவூரடிகள் வீற்றிருக்குமிடத்தை அடைவோமென்று கருதி,—உத்தம பன்னசாலை ஒல்லையில் குறுகினார்கள் - அவரது நல்ல பன்னசாலையை அதிசீக்கிரத்திலடைந்தார்கள். எ-று.

தில்லைவாழந்தணர்கள் தாமெல்லா மீண்டொருங்கு கூடியவழித் திருவருளானிகழ்ந்த கனவு நிலைபற்றி முன்னையினும் மிகச் சபாநாயகர் மாட்டுப் பேரன்புடையர்களாயினார்களென்பார். அத்தனைமன்றுளாடுமையனை வியந்து கூறித், தத்தமிலன்புகூர்ந்தென்றும், இடத்துநிகழ் பொருளின்விசேடத்தை இடத்திற்கேற்றிக் கூறுவார் உத்தம பன்னசாலையென்றும், வாதவூரடிகளைக் காண்டற்கண் வேணவாவோடு சென்றனரென்பார் ஒல்லையிற் குறுகினார்களென்றுங் கூறினார். (௩௮)

கூடினார் பன்ன சாலை கூரருட் குன்றை யன்பா
னாடின ருவந்து கண்டார் நளினவா சனத்தின் மீது
பீடின ரிருந்த யோகம் பெயர்ந்தனர் வியந்து மன்றி
லாடின ருரைத்த வெல்லா மாங்கவர்க் கியம்பி னார்கள்.

இ—ள்: பன்னசாலை கூடினர் - இங்ஙனம் வில்வனத்துள்ள பன்னசாலையையடைந்த தில்லைவாழந்தணர்கள்,—கூர் அருள் குன்றை அன்

பால் நாடினர் உவந்து கண்டார்-ஒருகாலைக்கொருகால் மிக்கோங்கும் திருவருட்குன்றாகிய வாதவூரடிகளைப் பேரன்போடுநாடி மனமுவந்து தரிசிக்கப்பெற்றுக்கொண்டனர்,—பீடினர் நளின ஆசனத்தின்மீது இருந்தயோகம் பெயர்ந்தனர் - அப்பொழுது சிவபத்தசிரோமணியாகிய எம்பெருமான் பதுமாசனமாக வீற்றிருந்து சாதித்த சிவயோகங் குலைந்தெழுந்தனர், அங்ஙனமெழுதலும்,—பிறங்கு மன்றில் ஆடினர் உரைத்த எல்லாம் ஆங்கவர்க்கு இயம்பினர்கள் - பஞ்சசபைகளுள் மேம்பட்டு விளங்கும் கனகசபையின்கட் பஞ்சகிருத்திய நிருத்தஞ்செய்தருளுகின்ற சபாநாயகர் தமக்குச் சொப்பனாவத்தையின்கண் வெளிப்பட்டுத் திருவாய்மலர்ந்தருளிய மங்கல சமாசாரங்களையெல்லாம் அவ்வடிகட் கவ்வந்தணர் விரித்து விண்ணப்பஞ்செய்தனர். எ-று

கூடினர் என்பது வினையாலணையும்பெயர். ஆங்கவர் ஒருசொல். நாடல்-விரும்பல். எதிர்காலத்துள்ள பகுவான்மாக்கள் ஓதி முத்திபெற்றுய்யும் வண்ணந் திருவாசகமாகிய தமிழ்வேதத்தைத் திருவாய்மலர்ந்தருளும் அசைவற்ற கிருபாமூர்த்தியாகலிற் கூரருட்குன்றென்றும், அறிவாகியவுள்ளீட்டாற் றமக்கும் பிறர்க்கும் பயன்பட்ட பெருந்தகைமையினராகலிற் பீடினர் என்றுங் கூறினர். பதுமாசனம் அட்டாங்க யோகாசனத்துளொன்று. அஃது இருகாலையுமடக்கி இருதொடைமேல் இரண்டுள்ளடிகளையும் மாறிவைத்திருத்தல். (௩௬)

வேறு.

அந்தமொழி யன்பினர் செவிப்புல னிலங்குதலு
  மன்றிறை பணித்த துணரா
வந்தவரு டன்கடிது சென்றுதிரு மன்றனை
  வணங்கியருள் பெற்று மயலாஞ்
சிந்தைய ரிருந்தமணி மண்டபம தெய்தியவர்
  தீயமுக நாடி லிடரே
நந்துமென வேயெழினி கொண்டுமறை வித்தெதி
  ரிருந்தனர் நலங்கொ ளணைமேல்.

இ—ள்: அந்த மொழி அன்பினர் செவிப்புலன் இலங்குதலும் - அவ்விண்ணப்பவாசகம் சிவபத்திமானாகிய திருவாதவூரடிகளது செவிப்புலங்கட்கு விடயமாதலும்,—அன்று இறை பணித்தது உணரா - திருப்பெருந்துறையின்கண் ஞானோபதேசஞ் செய்த அக்காலத்துப் பரமாசாரியர் தமக்காஞ்ஞாபித்தருளிய அவ் வாஞ்ஞையை நினைந்து,—வந்தவர் உடன் கடிது சென்று திரு மன்றனை வணங்கி அருள் பெற்று - தம்மிடத்துவந்த தில்லைவாழந்தணர்களோடு விரைந்து சென்று அழகிய சபாநாயகரைத் தரிசித்து வணங்கித் திருவருள்பெற்று,—மயல் ஆம் சிந்தையர் இருந்த மணி மண்டபம் எய்தி-ஐயந்திரிபறியாமையாகிய மயக்கங்கள் பொருந்திய மனத்தையுடைய புத்தர்களிருக்கும் இரத்தினமண்டபத்தை யடைந்து,—அவர் தீய முகம் நாடில் இடரே நந்தும் எனவே எழினி கொண்டு மறைவித்து -

அப்புத்தர்களது தூர்முகத்தை நாம் நேரேநோக்கிற் பாவமே மிகுமென்று இடுதிரைகொண்டு அவர்களைத் தமக்கு வெளிப்படாதிருக்கும்படி மறையச் செய்து,—எதிர் நலம் கொள் அணைமேல் இருந்தனர் - அவர்கட் கெதிரே அழகுபொருந்திய ஆசனத்தின்மீது வீற்றிருந்தருளினார். எ-று.

இடர் ஆகுபெயர். வேதத்துக்குப் புறமாகிய மித்தியாசமயிகளைக்காணிற் சைவசித்தாந்திகட்கது பெரும்பாவமென்ப துண்மைநூற்றுணிபாதலாலும், இப்புத்தமதம் பொய்ம்மதமாதலானும், அவர் தீயமுகநாடி விடரேந்துமெனவே யெழினிகொண்டு மறைவித்தென்றும், சிவஞானிகள் திருவருளைமுன்னிட்டல்லது தற்போத முனைப்பை முன்னிட்டொன்று செய்பவரல்லராகலின் வந்து திருமன்றனை வணங்கியருள்பெற்றென்றுங் கூறினார். இது எழுசீரடியாசிரியவிருத்தம். (௯௰)

மன்னுமறை யந்தணர் புராணிக ரருங்கலைகள்
வல்லவர்நல் லோர்க ளுடனே
சென்னிவள வன்கடிது வந்துதிரு மன்றனெதிர்
சென்றுதொழு தங்க ணகலா
மின்னுமணி மண்டபம தெய்தியரு ளன்பரை
வியந்தடி வணங்கி யருகா
நன்னரணை யின்புற மிருந்தனன் விரிந்தகலை
நாணிறைவு கொண்ட மதிபோல்.

இ—ள்: சென்னி வளவன் - தமிழ்நாட்டு மூவேந்தருள்ளும் சிரஸ்தானமாகவைத்து நன்குமதிக்கற் பாலனாகிய சோழமகாராசா,—மன்னும் மறை அந்தணர் புராணிகர் அரும் கலைகள் வல்லவர் நல்லோர்கள் உடனே கடிது வந்து - நிலைபெற்ற வேதசிவாகமங்களிலே மகாபாண்டித்தியமுடைய பிராமணர்களும் பௌராணிகர்களும் அரியகலைஞானங்களில்வல்ல விற்பன்னர்களுமாகிய இந்நல்லவர்களுடனே விரைந்து சிதம்பரத்திற்கு வந்து,—திரு மன்றன் எதிர் சென்று தொழுது அங்கண் அகலா மின்னு மணி மண்டபம் எய்தி - அழகிய சபாநாயகரது சந்நிதியையடைந்து தரிசித்து வணங்கி அவ்விடத்தைவிட்டகன்று திருப்புலீச்சரத்துள்ள இரத்தினமண்டபத்தையடைந்து,—அருள் அன்பரை அடி வணங்கி வியந்து - திருவருளையுடைய மெய்யன்பராகிய திருவாதவூரடிகளது திருவடிகளை வணங்கி ஸ்தோத்திரஞ்செய்து,—விரிந்தகலை நாள் நிறைவு கொண்டமதிபோல் அருகா நன்னர் அணையின்புறம் இருந்தனன் - சோடசகலைகணிறைந்த பூரணசந்திரனைப்போல அவ்வடிகளதொரு திருமருங்காக இடப்பட்ட நல்ல ஆசனத்தின்மீது வீற்றிருந்தனன். எ-று.

சென்னிவளவன் இருபெயரொட்டுப் பண்புத்தொகையென்றுமாம். வேத சிவாகமங்களாகிய முதனூல்களிரண்டும் ஆதி நித்தியமாகலின் மன்னுமறை என்றும், தன்கலைகண்முழுவதும் தன்மாட்டு நிறையப்பெற்ற

பூரணசந்திரனைப்போல அறுபத்துநான்கு கலைகளும் தன்னகத்துநிறையப்பெற்ற புலமைத்திறத்தோ டிருந்தானென்பார் விரிந்தகலை நாணிறைவு கொண்டமதிபோனன்னானை யின்புறமிருந்தனன் என்றுங் கூறினார். தன்னைச் சார்ந்துவந்தவர்கள் புடைசூழ இருந்த அரசன் நக்ஷத்திரங்களி னடுவிற் பிரகாசிக்கின்ற பூரணசந்திரன் போன்றானெனினுமமையும்.

(௬௧)

ஈழவள நாடனு மெழுந்தடி பணிந்துதிறை
யிட்டகுறை நல்கி யிறைவா
வாழிமிக வாழியென நின்றபொழு தங்கவனை
மன்னர்பெரு மானு மகிழா
வேழமிவை நல்லவிலை யில்லையிம் மணிக்கென
வியந்தரு கிருத்தி யெவருஞ்
சூழுமவை தங்குதலு மங்கய லிருந்தனர்கள்
சூழ்ந்துகரி சொல்லு மயலோர்.

இ—ள்: ஈழவள நாடனும் எழுந்து அடி பணிந்து திறை இட்டகுறை நல்கி - வளம் பெருந்திய ஈழமண்டலாதிபதியும் சோழமண்டலாதிபதியைக்கண்டு விரைந்தெழுந்து பாதங்களைவணங்கி முன்கொடுத்தெஞ்சிய திறைப்பொருட்குறையைக்கொடுத்து,—இறைவா வாழி மிக வாழி என நின்றபொழுது - மகாராசாவே நீடூழிவாழுக வாழுக வென்று துதித்து நிற்குந்தருணத்து,—அங்கவனை மன்னர் பெருமானும் மகிழா - அப்புத்தராசாவைச் சோழராசாவும் மனமுவந்து நோக்கி,—வேழம் இவை நல்ல - நீதந்த இவ்வியானைகள் மிகவும் நல்லன,—இம்மணிக்கு விலை இல்லை என வியந்து அருகு இருத்தி - இவ்விரத்தினங்கட்கு விலைமதிப்பென்பதொன்றிலையெனப்புகழ்ந்து தன்பக்கத்திருத்தி,—எவரும் சூழும் அவைதங்குதலும் - அனைவரும் சூழ்ந்திருக்குமச்சபையின்கட்டானு மிங்ஙனம் நடுநாயகமாக வீற்றிருத்தலும்,—சூழ்ந்து கரிசொல்லும் அயலோர் அங்கு அயல் இருந்தனர்கள் - வாதி பிரதிவாதிகளது விக்ஷேப ஆக்ஷேபங்களை ஆராய்ந்துணர்ந்துசெய அப்செயங்களை நடுநின்று வரையறுத்து நிச்சயித்துக்கூறும் மத்தியஸ்தர்களாகிய நொதுமலர் அவ்வரசனுக்குப் பக்கத்தே இருந்தார்கள். எ-று.

கரி சாட்சியம். நொதுமலர் பகை நட்பென்னுமிரண்டினும் படாதவர். புத்தராசா குறுநிலமன்னனாகலின் அதுவிளக்கிய அவனைஈழநாடனென்றும், சோழராசா நெடுநிலவரசனாகலின் அவனை மன்னர் பெருமானென்றும், ஈழதேயத்தியானையும் மாணிக்கம் வைடூரியம் முத்துமுதலிய ரத்தினங்களும் ஏனைத்தேயத்து யானையினு மிரத்தினங்களினும் மிகச் சிறந்தனவாகலின் வேழமிவைநல்லவிலையில்லை இம்மணிக்கென வியந் தென்றுங்கூறினார். அடுக்குவப்பின்கண்ணும் உம்மையுயர்வு சிறப்

பின்கண்ணும் வந்தன. உம்மையிரண்டனுள் முன்னையது உயர்வு சிறப்போடு எதிரதுதழீஇயவெச்சமுமாம்; ஈழவழநாடனும் பணிந்தெனவே பணியத்தக்கவர் பிறரும் பணிந்தென்பது முன்னர்ப் பெறப்படுதலி னென்க. (௬உ)

தில்லைநக ரந்தணர் தபோதனர் சிறந்தினி
  திருந்துழி விரிந்த சிவநூல்
வல்லவ ரிழிந்தகுண புத்தனுடன் வாதுசெயு
  மன்னுசபை காண வருவோர்
தொல்லைமறை தந்தவன் முகுந்தன்முனி வோரெழுவர்
  சூழுமிரு நான்கு திசைமே
லெல்லையி லிருப்பவ ருருத்திரர்கள் விஞ்சைய
  ரிராப்பக லிலங்கு கதிரோர்.

இ—ள்: தில்லை நகர் அந்தணர் தபோதனர் சிறந்து இனிது இருந்துழி - இவ்வாற்றானே தில்லைவாழந்தணர்கள் தபோதனர்களோடு மனமகிழ் சிறந்தினிதாக வீற்றிருக்கும்பொழுது,—விரிந்த சிவ நூல் வல்லவர் இழிந்தகுண புத்தன் உடன் வாது செயும் மன்னு சபை காணவருவோர் - பரந்த சிவாகமங்களில் வல்ல திருவாதவூரடிகள் இழிகுணம்பொருந்திய புத்தகுருவோடு சமயவாதஞ்செய்யும் நிலைபெற்ற சபையைக் காணும்படி இன்னும்வந்தவர்கள் யாரெனின்,—தொல்லை மறை தந்தவன் - பழைய வேதங்களை இந்நிலவுலகிற்றந்து பரப்பிய பிரமாவும்,—முகுந்தன் - விஷ்ணுவும்,—முனிவோர் எழுவர் - சத்த விருடிகளும்.—சூழும் இரு நான்கு திசை மேல் எல்லையில் இருப்பவர்,—இவ்வுலகைச் சூழ்ந்த அட்ட திக்கின் முடிவுகடோறும் வசிக்குமிந்திரன் முதலிய திக்குப்பாலகரெண்மரும்,—உருத்திரர் - உருத்திரர்களும்,—விஞ்சையர் - வித்தியாதரர்களும்,— இராப் பகல் இலங்கு கதிரோர் - சந்திரசூரியர்களும் பிறருமாம். எ-று.

இறுதிக்கண் ஆமென்னும் வினைப்பயனிலை கொடாது அவாய்நிலையான் முடித்தமையான் இன்னோரன்ன மேலுலகவாசிகள் பிறரும் வந்தாரென்பது பெற்றாம். இனிக் கீழிரண்டடியினரையும் எழுவாயாக்கிவருவோர் என்பதனைப் பயனிலையாகக்கொண்டு முடித்தலுமொன்று. தில்லைவாழந்தணர்கள் சபைகூட்டுதற்கட் கருத்தாக்களாகிச் சிறந்தமையின் அதுபற்றி அவரை முன்னர் வித்ந்து தில்லைநகரந்தணர் என்றும், அவர்களோடுடன்வைகுதற்குத் தக்கவர்கள் தபோதனர்களேயாதலின் அதன் பின்னர்த் தபோதனர் என்றும், தாமே வேறல் நிச்சயமென்னுந் துணிவான் ஓர்கவலையுமற்றிருந்தாரென்பார், சிறந்தினிதிருந்துழியென்றும், சிவாகமங்களிருபத்தெட்டும் இருபத்தெட்டுக்கோடி கிரந்தங்களுடைமையின் விரிந்தசிவநூல் என்றும், அபரஞானமாகிய சிவாகமங்களைப் பரஞானமாகிய அநுபூதிஞானத்தோடொட்டி யுணர்ந்தவராகலின் சிவநூல்வல்லவரென்றும், இருதிறத்தாசர்முன்னும் சமயவாதஞ்செய்து பதிநிச்சயம்

பண்ணும் மகாசபையாகலின் மன்னுசபையென்றுங் கூறினர். தொல்லைமறை என்பதற்கு மேன் மன்னுமறை என்பதற் குரைத்தாங் குரைக்க. எல்லையென்னாது மேலெல்லையென்றார் திகந்தமென்பது விளக்குதற்கு. திருமுகம்பெறாது தாமே அறிந்துவந்த மேலுலகவாசிகளாதலின். இவரை வேறுசெய்யுளான் இறுதிக்கட்டந்து கூறினர். சபையின்கண் வருவோர் என இடம்பற்றிக் கூறாது சபைகாணவருவோர் எனச் செயல்பற்றிக் கூறினமையின், இவரெல்லாம் ஆகாயநெறிக்கண் வந்து நின்று ஆண்டைச் சபைநிகழ்ச்சிகண்டு பின்னர் அந்நிலையே மீண்டாரென்பது பெற்றாம்.

(௬௩)

வேறு.

தன்பெருந் தானை சூழ விருந்ததண் பொன்னி நாடன்
றென்பெருந் துறைசூழ் நாடன் றிருவடி வணங்கி நின்று
நின்பரஞ் சைவ ஞான நிலைமையை நிறுத்தல் பின்னை
என்பரம் புத்தர் தம்மை யீங்குயிர் செகுப்ப தென்றான்.

இ—ள்: தன் பெரும் தானை சூழ இருந்த தண் பொன்னி நாடன் - தன்மிக்க சேனைகள்சூழச் சபாநாயகமாக வீற்றிருந்த தண்ணிய காவிரி நாட்டையுடைய சோழமகாராசா அப்பொழுதெழுந்து,—தென் பெருந் துறைசூழ் நாடன் திருவடி வணங்கி நின்று - தெற்கின்கணுள்ள திருப்பெருந்துறையைச்சூழ்ந்த பாண்டிநாட்டையுடைய திருவாதவூரடிகளது திருவடிகளை வணங்கிநின்று,—சைவ ஞான நிலைமையை நிறுத்தல் நின் பரம் - சிவஞான நீர்மையையுடைய நமது சித்தாந்த சைவத்தைத் தாபித்தல் தேவரீரது கடமையாகும்,—புத்தர்தம்மை ஈங்கு உயிர் செகுப்பஃது என் பரம் என்றான் - அதனைத் தாமே நிராகரிக்க ஈண்டுவந்த இப்புத்தர்களைத் தப்பாதுயிர்வதைசெய்வது தமியேனது கடமையென்று விண்ணப்பஞ்செய்தான். எ-று.

திருப்பெருந்துறை உபதேசத் தானமாகலின் அவ்வுரிமைதோன்றப் பாண்டிநாட்டைத் தென்பெருந்துறைசூழ்நாடென விசேடித்தார். முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துநின்ற செம்பொருளைச் சிவஞானம் வாயிலாக உள்ளவாறுணர்த்துவது சித்தாந்த சைவமொன்றேயாகலின் அதனையே ஈண்டுத்தாபிக்க என்பான் நின்பரஞ்சைவஞான நிலைமையை நிறுத்தல் என்றும், சிவநிந்தகர் வேதசிவாகம நிந்தகர்களுக்குப் பிராணதண்டமே பிராயச்சித்தமென்பதுண்மைநூற்றுணிபாகலின், அது தப்பாது செய்வேன் என்பான் என்பரம்புத்தர்தம்மை யீங்குயிர்செகுப்பதென்றான் என்றுங் கூறினர். சித்தாந்தசைவக்கடவுளாகிய முதற்பொருள் பூதமுதலிய முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துநின்றதென்பது, "மொய்தரு பூத மாதி மோகினி யந்தமாகப், பொய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும்பு கன்று, மெய்தரு சைவ மாதி யிருமூன்றும் வித்தை யாதி, மெய்த் துதத் துவங்க ளேயு மொன்றுமின் றெம்மி றைக்கே" என்பதனானறிக

சிவநிந்தகர்களைக் கோறலே பிராயச்சித்தமென்பது, "கண்டன ஞயின் முக்கட் கடவுளை நிந்திப் போனைத், தண்டனைபுரிந்து கொல்க வரிதெனிற் சமிக்க நின்று, மண்டனில் வலிய னன்றேல் வான்செவித் துளைகள்பொத் திக், கொண்டவ ணகன்று செல்க குலகுலந் தமல பத்தன்" என்பதனு னுமறிக. இது அறுசீரடியாசிரியவிருத்தம். (௬௪)

வளவனிவ் வகையிற் கூற வந்தபொய்ப் புத்த ரெல்லா
முளமயர் வெய்த வாத வூரருண் மகிழ்ச்சி யெய்திக்
களவுரை பகர்வோய் வந்த காரண முரைநீ யென்னக்
கிளர்செவி நுழைவே லென்னக் கேட்டவ னிதனைச் சொல்வான்.

இ—ள்: வளவன் இவ்வகையில் கூற-சோழமகாராசா இந்தப்பிர காரம் வாதவூரடிகளுக்கு விண்ணப்பஞ்செய்ய,—வந்த பொய்ப்புத்தர் எல் லாம் உளம் அயர்வு எய்த-இலங்கையினின்றும் வந்த பொய்ச் சமயிகளாகிய பௌத்தர்களெல்லாம்அதுகேட்டுமனமயர்ச்சியடைய,-வாதவூரர் உள்மகிழ் ச்சி எய்தி - திருவாதவூரடிகள் மனமகிழ்ச்சியடைந்து,—களவு உரை பகர் வோய் நீ வந்த காரணம் உரை என்ன-மயக்கவார்த்தைகளைப்பேசும் புத்தகுருவே நீ ஈண்டுவந்த காரணமென்னை சொல்லென்று வினவ,— கிளர் செவி நுழை வேல் என்னக் கேட்டவன் இதனைச்சொல்வான் - கிளராநின்ற செவித்துவாரங்களில் நுழையும் பழுக்கக்காய்ச்சிய வேலைப் போல அவ்விளியுரை வினவுரைகளைக் கேட்ட புத்தகுரு இதனைச் சொல் வான். எ-று.

விளியுரையான் வெகுளியும், வினவுரையான் அவரது சொற்சாது ரியமுதலியவற்றிற் கழுக்காறுங் கொண்டானென்பார் கிளர் செவிநுழை வேலென்னக்கேட்டவனென்றார். களவு.மயக்கம்; திருட்டென்பாருமுளர். கலு என்னும் வடமொழி தமிழிற் களவெனத் திரிந்ததென்றுமாம்; தீய தென்னும்பொருட்டு. உளம் மயர்வெய்தவெனக்கண்ணழித்தலுமொன்று. சோழமகாராசாவினது சிவபத்திமேலீட்டைநோக்கி வாதவூரடிகள் உண் மகிழ்ந்தாரென்க. (௬௫)

மன்னுமெங் கடவு ளல்லான் மற்றிலை கடவு ளென்றே
யிந்நெடும் பதியி லெய்தி யியம்பியிங் கெவருங் காணப்
பொன்னினம் பலத்தே யெங்கள் புத்தரை வைத்தல் வேண்டி
யென்னைவந் திருந்தே னிங்கு வேறிலை நினைந்த தென்றான்.

இ—ள்: இந் நெடும் பதியில் எய்தி-இப்பெரும்பதியின் கண்வந் து,—மன்னும் எம் கடவுள் அல்லால் மற்றுக் கடவுள் இலை என்று இயம் பி-நிலைபெற்ற நம் புத்தகடவுளல்லது உலகிற்கு வேறுகடவுளில்லையென்று நும்மோடு வாதித்து வென்று,—இங்கு எவரும் காணப் பொன்னின் அம் பலத்தே எங்கள் புத்தரை வைத்தல் வேண்டி-இங்கே நீவிரெல்லீருங்கா ணக் கனகசபையின்கண்ணே நம்புத்தகடவுளைத் தாபனஞ்செய்யும்படி

கருதி,—னென்னல் வந்து இருந்தேன் - முன்னைநாளின் கண் வந்திருந்தேன்,—இங்கு நினைந்தது வேறு இலை என்றான் - இங்கே நான் எண்ணி வந்தகாரியம்பிறிதொன்றில்லை என்றுகூறினன். எ-று.

நமதுவாதத்தான் நங்கடவுள் கடவுளல்லரென இடையே வாதிக்கப் படமாட்டாத நித்தியரென்பான் மன்னுமெங்கடவுளென்றும், நம்மைவாதில்வென்று நம்புத்தசமயக்கொள்கைக் குடம்படுத்தி நமது சம்மதமுங் கொண்டே நங்கடவுளைக் கனகசபையிற் றாபனஞ்செய்வேனென்பான் இங்கெவருங்காணப் பொன்னினம்பலத்தே யெமகள்புத்தரை வைத்தல் வேண்டி என்றுங்கூறினன். (௬௬)

என்றனும் வாத வூரெம் மிறைவர்புன் முறுவ லெய்தி
முன்றவ மொன்று மில்லாய் முயலிப மாவ துண்டோ
நன்றது நிற்க வுன்ற னற்பெருங் கடவு டானுஞ்
சென்றவ னடியிற் சேருஞ் செய்தியுஞ் செப்பு கென்றார்.

இ—ள்: என்றலும் - என்றிங்ஙனம் புத்தகுரு கூறுதலும்,—வாதவூர் எம்மிறைவர் புன்முறுவல் எய்தி - நஞ்சமயகுரவராகிய திருவாதவூரடிகள் திருப்புன்னகைசெய்து,—முன் தவம் ஒன்றும் இல்லாய் - பூர்வசன்மதவம் ஒருசிறிதுமில்லாத புத்தகுருவே,—முயல் இபம் ஆவது உண்டோ - எவ்வாற்றானும் முயல் யானையாவதுமுளதோ,—நன்று - நீ கூறிய இது மிகவும் நன்று,—அது நிற்க - அஃதவ்வளவினிற்க,—உன்றன் நல்பெரும் கடவுடானும் அவன் அடியில் சென்று சேரும் செய்தியும் செப்புக என்றார் - உனது நல்ல பெரிய கடவுளினது இலக்கணத்தையும் உயிர்கள் அக்கடவுளதடியிற் சென்றடையு முத்தி இலக்கணத்தையும் இங்கே சொல்லுகவென்று வினவியருளினர். எ-று.

என்றலுமென்ப தும்மீற்றுவினையெச்சம்; "அன்ன மரபிற் காலங் கண்ணிய, வென்ன கிளவியும்" என்பதனாற்கொள்க. ஓகாரம் எதிர்மறை. நன்றென்பது குறிப்புமொழியாய்த் தீதென்னும் பொருடந்தது. முயல் இபமாயின், நீயும் நஞ் சைவமதகண்டனமும் நின் புத்தமதஸ்தாபனமும் செய்து, கனகசபையிலே நஞ்சபாநாயகரை நீக்கி நின்புத்தகடவுளைத் தாபனஞ்செய்வாய். முயலிபமாகாமையின், நீயும் அங்ஙனஞ்செய்ய வல்லையல்லை என்பார் ஒட்டென்னுமலங்காரநெறியான் முயலிபமாவதுண்டோ என்றார். ஒட்டெனினும் பிறிதுநவிற்சியெனினு மொக்கும். (௬௭)

அண்ணலா ருரைத்த போதி லாங்கவன் வெகுட்சி யெய்திக்
கண்ணிலா தவற்கு வெய்யோன் கதிரொளி காட்ட லாமோ
நண்ணலா வெங்க ளாதி னற்புக ழுரைக்கி னன்று
வெண்ணிலா யிரங்கள் வேண்டு மென்றுபி னிதுபு கன்றான்.

இ—ள்: அண்ணலார் உரைத்த போதில் - பெருமையிற் சிறந்த திருவாதவூரடிகள் இவ்வாறு வினவியசமயத்தில்,—ஆங்கவன் வெகுட்சி எய்தி - அப்புத்தகுரு கோபங்கொண்டு,—கண் இலாதவற்கு வெய்யோன் கதிர் ஒளி காட்டல் ஆமோ - பிறவிக்குருடனுக்குச் சூரியகிரணத்தினொளியைக் காட்டுதல்கூடுமோ, கூடாதன்றே, அதுபோல.—நண்ணலா எங்கள் நாதன் நல் புகழ் உரைக்கின் - நும்மறிவு சென்றறிதற்கரிய நங்கடவுளது உத்தமலக்கணத்தைச் சொல்லப்புகின்,—நல் நா எண் இல் ஆயிரங்கள் வேண்டும் என்று - அஃதிவ்வொருநாக்கிற் கமையுமோ நல்ல பல்லாயிரம் நாக்குக்கள்வேண்டுமென்று முன்னர்ப்பொதுவகையாற்கூறி,—பின் இது புகன்றான்-பின் சிறப்புவகையால் இதனைக்கூறத் தொடங்கினான் எ-று.

நண்ணலொருசொன்னீர்மைப்பட்டுநின்ற நண்ணலாகாத வென்னுமெதிர்மறைப்பெயரெச்சம் நண்ணலாவெனக்குறைந்துநின்றது. அறிவென்னும் வினைமுதல் அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது. புகழ் ஆகுபெயர். கண்ணிலாதவற்கு வெய்யோன் கதிரொளி காணப்படாதவாறுபோல நுண்ணறிவில்லாத நும்மனோர்க்கு நங்கடவுளது இலக்கணமறியப்படாதென்பது கருத்து. அக்கடவுளது புகழாகலின் நற்புகழ் என்றும், அப்புகழைக் கூறும் நாவாகலின் நன்னாவென்றும் விசேடித்தான். சேடன்போல்வார்க்கல்லது நம்போல்வார்க்கு விரித்துரைக்கமுடியாதென்பதாம். (௪௮)

அறந்திகழ் பிடக நன்னூ லோதியன் புடையனாகிப்
பிறங்குபல் யோனி தோறும் பிறந்துயிர்க் குறுதி செய்து
மறந்தரு கோற லாதி நால்வகை யொழித்து மாண்பு
சிறந்துள போதி நீழற் சேர்வனெம் மிறைவ னாவான்.

இ—ள்: எம் இறைவன் ஆவான் - நங்கடவுளாவார்,—அறம் திகழ் நல் பிடக நூல் ஓதி-கொல்லாமைமுதலிய தருமங்களை விதித்து விளங்கும் நல்ல பிடகநூல்களைக் கூறி,—அன்பு உடையன் ஆகிப் பிறங்கு பல் யோனி தோறும் பிறந்து - உயிர்களிடத்தன் புடையவராகி விளங்காநின்ற பலயோனிகடோறும் பிறந்து,—உயிர்க்கு உறுதி செய்து - அவ்வுயிர்கட்கு நன்மைகளைச்செய்து,—மறம் தரு கோறல் ஆதி நால்வகை ஒழித்து-வன்கண்மையையுடைய ஜராத்மவாதமுதலிய குற்றங்களனைத்தையுநீக்கி,—மாண்பு சிறந்துள போதி நீழல் சேர்வன் - மகிமைசிறந்ததுள்ள அரசமர நீழலில் உருவத்திருமேனிகொண்டு வீற்றிருப்பர். எ-று.

கோறலாதிநால்வகை மேற்செயிர்நான்கென்புழி விஸ்தரிக்கப்பட்டன. தம்பொருட்டன்றி ஆன்மாக்களாகிய பிறர்பொருட்டுச்செய்யப்படுவனவாய் ஆகியென்ப தொழித்தொழிந்த வினையெச்சங்களனைத்தானும் அடையடுத்த பயனிலையானும் விளக்கிய இவ்வைந்தும் இவைபோல்வனபிறவும்நங்கடவுட்கிலக்கணமென்றானென்பதுகருத்து. இவைபோல்வனபிறவுமென்பதுமுன்னர் நிராகரிக்கப்படுகின்றுழி இனிதுவிளங்கும். இதனான்

வினாவிரண்டனுட் கடவுள் செய்திகூறென்னும் முதல்வினாவுக்கு விடை கூறப்பட்டது. சென்றவனடியிற்சேருஞ் செய்திகூறென்னும் இரண்டாம் வினாவுக்கு விடை வருஞ்செய்யுளாற் கூறப்படும். (௪௧)

மேவிய கருவிற் சேரு முருவம்வே தனைகு றிப்புப்
பாவனை யுடன்விஞ் ஞானப் பஞ்சகந் தங்கள் கூடி
யோவில்பல் லுணர்வுண்டாகி யொழிவது பிறவித் துன்ப
மாவது பொன்றக் கேடா யழிவது முத்தி யென்றான்.

இ—ள்: மேவிய கருவில் சேரும் உருவம் வேதனை குறிப்புப் பாவனை உடன் விஞ்ஞானம் பஞ்ச கந்தங்கள் கூடி-உதரத்திற் பொருந்திய கருப்பத்தின்கட்சேரும் உருவம் வேதனை குறிப்புப் பாவனை விஞ்ஞானமாகிய இப்பஞ்சகந்தங்களுங் கூடித் தேகந் ஜனித்து,—ஓவில் பல் உணர்வு உண்டாகி ஒழிவது பிறவித் துன்பம் - ஒழிவற்ற பலதிற அறிவுகளுமுதித்துப் பின்பு தாங் கூடியவாறே அக்கந்தங்களின் கூட்டம் ஒவ்வொன்றாக அழிவைப்பொருந்துவதே பிறவித் துன்பமாம்,—ஆவது பொன்றக் கேடாய் அழிவது முத்தி என்றான் - அங்ஙனங்கூடிய அப்பஞ்சகந்தக்கூட்டமும் இல்லையென்னும்படி நாசமாயழிவதே நமது முத்தியென்று புத்தகுரு கூறினான். எ-று.

"தூக்கிற் சுட்டு, நீளின் யகரமுந் தோன்றுத னெறியே" என்புழி நெறியே என்னுமிலேசாற் சுட்டுநீண்டவழி யகரந்தோன்றாது வகரந் தோன்றிற்று. துன்பமாவதெனக்கூட்டிப் பின் மொழியை எழுவாய் வேற்றுமையின் சொல்லுருபென்றலுமொன்று. இப்பஞ்சகந்தங்களின் பாகுபாடும் பிறவும் மேன் மூன்றும் பிடகமென்னும் செய்யுளுரையில் விரித்துக் கூறினாம் ஆண்டுக் காண்க. பிறவித்துன்பமாகிய பந்தகாரியத்தை முன்னர் விளக்கியவழியல்லது பந்தநீக்கமாகிய முத்தியின்பம் தெற்றெனவிளங்காமையின், மேவியகருவிற்சேருமுருவம் வேதனை குறிப்புப், பாவனையுடன் விஞ்ஞானப்பஞ்சகந்தங்கள்கூடி, யோவில்பல்லுணர்வுண்டாகி யொழிவது பிறவித்துன்பமெனா அதனை முன்னர் விளக்கி, ஆவதுபொன்றக்கேடாயழிவது முத்தியென இதனைப் பின்னர்க் கூறினானென்க. ()

வாதவூ ரண்ண லாரும் வண்புனற் பொன்னி நாடன்
றீதிலா முகத்தி னூடு சிறந்தருட் பார்வை நல்கிப்
பேதையா யறிமால் கொண்டு பித்துரை பகரும் புத்தற்
கேதியா மின்று சொல்வ தென்றுபின் னிதுபு கன்றார்.

இ—ள்: வாதவூர் அண்ணலாரும் பொன்னி வண் புனல் நாடன் - பெருமையிற்சிறந்த திருவாதவூரடிகளும் காவிரிநதி வளஞ்சுரக்கும் புனனாட்டையுடைய சோழமகாராசாவினது,—தீது இலா முகத்தின் ஊடு சிறந்த அருள் பார்வை நல்கி - நன்முகத்தின்கட் பொருந்தத் திவ்விய கிருபாநோக்கஞ்செய்து,—பேதையாய் அறிமால் கொண்டு பித்து

உரை பகரும் புத்தற்கு - முழுமகனும் அறிமடம்பூண்டு ஒன்றற்கொன்று சம்பந்தமற்ற பித்துரைகளை வசனிக்கும் இப்புத்தகுருவுக்கு,—யாம் இன்று சொல்வது ஏது என்று - யாமின்று சொல்லற்பால தென்னையோவென்று சிறிது சிந்தித்து, - பின் இது புகன்றார் - பின்னர் இதனைக் கூறியருளுவாராயினர். எ-று.

உண்மை இறந்தது தழீஇயிற்று. பேதை - யாதுமறியாதவன். அறிமால் - அறிமடம். அஃதாவது தான் சிற்றறிவினனாகவேயிருந்துகொண்டு தன்னைப் பேரறிவினனாகவைத்து நன்குமதித்தல். அது "காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான், கண்டானுந் தான்கண்ட வாறு" என்பதனானு முய்த்துணர்க. ஈண்டியாங் கூறப்புகுவன தெற்றென விளங்கும் அறிவிலனாகலின் யாதுசொல்லி விளக்குதுமென்பார் பித்துரைபகரும்புத்தற்கேதியாமீண்டு சொல்வதென்றும், தருக்கமுகத்து வாளாவிருத்தல் தோல்வித் தானத்தின்பாற் படுமாகலின் பின்னிதுபுகன்றார் என்றுங் கூறினர். அறிமால், அறிமடம், புல்லறிவென்பன ஒருபொருட்கிளவி (௫க)

தருமமுண் டென்று நன்னூல் சாற்றினன் றலைவ னென்பை
மருவிய வுணர்வுண் டாகி மறைந்திடுங் கணத்தி னென்பை
பொருளுட னுரைநீ தேடிப் புகலுமுன் னுணர்வு போனு
லிருடரு நின்னூல் சொல்வ தெப்படி யியம்பல் வேண்டும்.

இ—ள்: தருமம் உண்டு என்று நல் நூல் தலைவன் சாற்றினன் என்பை - கொல்லாமை முதலிய அறங்களுண்டென்று நல்ல பிடகநூல்களை நங்கடவுள் கூறினரென்று முற்கூறினை,—மருவிய உணர்வு உண்டாகிக் கணத்தில் மாய்ந்திடும் என்பை - பொருந்திய அறிவுண்டாகிப் பின்னர் அது கணப்பொழுதிற் கெடுமென்று பிற்கூறினை,—உரை உடன் பொருள் தேடிப் புகலும் முன் உணர்வு போனல் - சொல்லையும் பொருளையுந் தேடி நூல் செய்வதன்முன்னமே அவ்வறிவு க்ஷணபங்கமுறுமேயானல்,—இருள் தரும் நின் நூல் சொல்வது எப்படி நீ இயம்பல் வேண்டும் - மயக்கத்தைத்தரும் நின் பிடகநூல்களை நுங்கடவுள்கூறிய தெங்ஙனம் நீ சொல்வாயாக. எ-று.

இரண்டும் பரஸ்பரவிரோதமாகலின் நங்கடவுள் நூல்செய்தாரென நீகூறியது அசம்பாவிதமே என்பதாம். இதனால் அறந்திகழ் பிடகநன்னூலோதி என்னும் முதலாங் கூறு மறுக்கப்பட்டது. (௫௨)

ஆதலா லறநூ லென்ப துனக்கிலை யுயிர்கட் காகப்
பேதமாம் யோனி தோறும் பிறந்தன னிறைவ னென்றாய்
தீதுசே ரொருவர் மாலைத் தீர்க்கவந் தவர்க டாமும்
போதமால் கொள்ளி னம்மால் போவதங் குள்ள தாமோ.

இ—ள்: ஆதலால் அற நூல் என்பது உனக்கு இலை - ஆதலினாலே தருமசாஸ்திரமென்பதொன் றுனக்கில்லை, அதுநிற்க,—உயிர்கட்கு

ஆகப் பேதம் ஆம் யோனி தோறும் இறைவன் பிறந்தனன் என்றாய் - உயிர்கண்மாட்டன்புபூண்டு அவைகட்காக நாலுபேதமாகிய யோனிகடோறும் நங்கடவுள் பிறந்தாரென்றனை, (சனனமானது மயக்கந்தருவது சரதமேயாகலின்),—தீது சேர் ஒருவர் மாலைத் தீர்க்க வந்தவர்கள் தாமும் போத மால் கொள்ளின் - தீமைபொருந்திய ஒருவரது மயக்கத்தை நீக்கும்படி வந்தவர்கள் தாமும் அவரினும் மிகமயக்கத்தைக் கொள்ளின்,— அம் மால் அங்குப் போவது உள்ளது ஆமோ - அம்மயக்கம் அந்நீக்கப்படுபவரினின்றும் நீங்குவது உண்மையாகுமோ. எ-று.

ஆகாதென்பார் எதிர்மறையோகாரந்தந்து உள்ளதாமோ என்றும், பிறர் மயக்கந் தீர்க்கவந்து தாம் மயங்குதலே பெருமயக்கென்பார் போத மால் கொள்ளின் என்றும் கூறினர். இனிப் போதமால் என்பதனைப் போதம் மால் எனக் கண்ணழித்து, அறிவுமயக்கம் என்றலுமொன்று. இதனால் அன்புடையனாகிப் பிறங்குபல்யோனிதோறும் பிறந்துயிர்க்குறுதிசெய்தென்னும் இரண்டாங்கூறு மறுக்கப்பட்டது. (ருங)

கொல்வது கருதானெங்கள் கோவென வுரைத்தாய் முன்னம்
பல்வகை யோனி தோறும் பார்மிசைப் பிறக்கு நாளில்
வெல்புலி நரியே யாகி வெம்பசி யுற்றான் மற்றுப்
புல்லொடு தழையோ தின்பா னின்பெரும் போதி நாதன்.

இ—ள்: எங்கள் கோ கொல்வது கருதான் என முன்னம் உரைத்தாய் - நங்கடவுள் உயிர்க்கொலைசெய்ய நினைக்கவுமாட்டாரென்று முன்னர்க் கூறினாய்,—நின் பெரும் போதி நாதன் பல்வகை யோனி தோறும் பார்மிசைப் பிறக்கும் நாளில் - அதற்குமுன்னர்க் கூறியபிரகாரம் அக்கடவுள் நாலுவிதயோனிகடோறும் பூமியிற் பிறந்துதிரியுங் காலத்தில்,—வெல் புலி நரி ஏ ஆகி வெம் பசி உற்றால் - தன்பகையைவெல்லும் மாமிசபக்ஷணிகளாகிய புலியும் நரியுமாய்ப்பிறந்து கொடும்பசி பொருந்தப்பெறின்,—மற்றுப் புல் ஒடு தழையோ தின்பான் - அவ்வுயிர்க் கொலைக் கேதுவும் பயனுமாய ஊன்றின்பதைவிட்டுப் புல்லையும் பச்சிலைகளையுமா தின்பார், சொல்வாயாக. எ-று.

ஆண்டுப் புல்லையுந் தழையையுந் தின்னார் ஊனையேதின்பாரெனப் பொருடருதலின் மற்றுப் பிறிதென்னும் பொருட்கண்வந்தது; வினைமாற்றெனினுமமையும். ஆகவே, ஊன்றின்றல் எவ்வாற்றானும் உயிர்க்கொலையை இன்றியமையாமையின், கொல்வது கருதானெங்கள்கோ என்றதும் அசம்பவமே என மறந்தருகோறலாதி நால்வகை ஒழித்தென்னும் மூன்றாங்கூறு மறுக்கப்பட்டவாறாயிற்று. பொறுத்தற்கரிய பசியென்பார் வெம்பசி என்றார். பசியுற்றாலென்பது, "நீரின் றமையா துலகெனின்" என்புழிப்போல ஈண்டுச்சங்கேத திருட்டாந்த வாய்பாடாய் நின்று பசியுறுமென்பதை வலியுறுத்திற்று. புலி பசியுறினும் புற்றின்

ஞமையை, "புலியது பசியுறிற் புல்லுந்துய்க்குமோ" என்பதனுனு மறிக. (௩௪)

கரவெனு முன்ற ஞூலிற் கந்தமைந் துடனே கூடி
யுருவமு மழியு மென்று யுன்னிறைக் குருவ மெங்கே
விரவிய யோனி தோறு முயிர்க்கருள் செய்ய வேண்டி
மருவொரு வடிவங் கொண்டா னென்பதே மதியி லாதாய்.

இ—ள்: கரவு எனும் உன்றன் நூலிற் கந்தம் ஐந்து உடனே கூடி உருவமும் அழியும் என்றுய் - பொய்யென்று சொல்லப்படும் நின் பிடகநூலிற் கூறியபிரகாரம் பஞ்சகந்த சகிதமாகி உருவமும் பங்கமு றுமென்றனே,—உன் இறைக்கு உருவம் எங்கே - இதுவே நின்மதசித்தாந் தமாயின், நின் கடவுட்கு நின் பிடகநூல் உண்டென்று கூறுமுருவம் பின்னர் யாண்டையதோ,—மதி இலாதாய் - இங்ஙனம் கொள்கின்ற கழி மடவோனே,—விரவிய யோனி தோறும் உயிர்க்கு அருள் செய்ய வேண்டி மருவு ஒருவடிவம் கொண்டான் என்பதே - பொருந்திய பலயோனிகடோ றும் ஆன்மாக்கட் கருள்செய்யவிரும்பி நங்கடவுள் அதற்கியைந்தவடி வங் கொண்டு பிறந்தாரென்று நீ கூறலாமா! அங்ஙனங்கூறின், அத்தி ருட்டாந்தங்கள் பரஸ்பரவிரோதமுறுகின்றனவன்றே. எ-று.

அப்பஞ்சகந்தங்களேயன்றி உருவமும் பங்கமுறுமெனப் பொருடரு தலின் உம்மை இறந்ததுதழீஇயிற்று. முன்னர் நங்கடவுட் குருவமுண் டென்று கூறிப் பின்னர் அது பங்கமுறுமென்றல் விரோதம்; அதன் பின்னர் நங்கடவுள் ஆன்மாக்கட் கருள்செய்யவிரும்பி யோனிகடோ றும் உருவங்கொண்டு பிறந்தாரென்பது அதன்மேல் விரோதமாகலிற் பரஸ்பரவிரோதமுறத் தருக்கிக்கும் நீ குதர்க்கியென்பார் மதியிலாதாய் என்றுர். பரஸ்பரவிரோதம் ஒன்றற்கொன்று விரோதம். (௩௫)

காரண வுயிரிற் கூடுங் காரிய வுருவின் றேனுன்
சீரணி போதி நீழற் சேரிறைக் குருவ மில்லை
பூரண ஞான மில்லாய் பொன்றுதன் முத்தி யென்னும்
பேருணர் வில்லா வுன்றன் பிடகநூல் யாவர் சொன்னுர்.

இ—ள்: காரண உயிரில் கூடும் காரிய உரு இன்றேல் - காரண வஸ்துவாகிய ஆன்மாவோடு கூடும் காரியமாகிய உருவம் இவ்வாற்று னில்லையாயின்,—சீர் அணி போதி நீழல் சேர் நின் இறைக்கு உருவம் இல்லை - அழகுபொருந்திய அரசமர நீழலிலிருக்கும் நின்புத்த கடவுட் குருவந்தான் இல்லையே,—பூரண ஞானம் இல்லாய் - அற்பவறிவையு டைய புத்தகுருவே,—பொன்றுதல் முத்தி என்னும் பேர் உணர்வு இல்லா உன்றன் பிடக நூல் யாவர் சொன்னுர் - பஞ்சகந்தமும் கெடுதலே முத் தியென்றுகூறும் பேரறிவற்ற நின் பிடகநூலை வேறுயாவர் கூறினர், சொல்வாயாக. எ-று.

ஒருவாற்ருன் முறைமையே ஆன்மாவுக்கு முருவத்திற்கும் காரண காரிய சம்பந்தம் உண்டென்பார் காரணவுயிரிற்கூடுங் காரியவுருவென்றும், நின்மதத்திற் கமைந்தில்லையென்பார் இன்றேல் என்றும், இல்லையாகவே நின்கடவுட் குருவமில்லையென்பதும் பெறப்படுமென்பார் நின் சீரணி போதிநீழற் சேரிறைக்குருவமில்லை என்றும், இவ்வவசித்தாந்தம் நினக்குடன்பாடாயது நின் அற்ப ஞானத்தாலென்பார் பூரணஞானமில்லாய் என்றும், இறத்தலே முத்தியென்றுகூறும் நின் விபரீதநூல் அஞ்ஞான நூலென்பார் பொன்றுதன் முத்தியென்னும், பேருணர்வில்லாவுனிறன் பிடகநூலென்றும், அந்நூலை உருவமில்லாதகடவுள் கூறமாட்டாராகலிற் பாரிசேடத்தால் உருவமுடைய ஏனைப்பசுக்களே கூறியிருத்தல் வேண்டுமென்பார் நின்பிடகநூல் யாவர்சொன்னூர் என்றுங்கூறினூர். ஆன்மாவுக்கு முருவத்திற்கு மொருவாற்ருற் சம்பந்தமுண்மை முன்னர்ப்பெறப்படும். இவ்விரு செய்யுளானும் உருவமின்மை சாதித்தன்மேல்வைத்து, மேன்மை சிறந்துள போதிநீழற் சேர்வனெம்மிறைவனுவான் என்னும் நாலாங்கூறு மறுக்கப்பட்டது. (௫௬)

இருபதிற் றொருவ ராக வெண்ணுமுன் புத்த ரெல்லாம்
வருவது சிறந்த தாயர் வயிற்றினைப் பீறி யென்னை
பரிவொடு சுமந்து பெற்ற ருயிர் கெடப் பழுது செய்தே
யருநர கத்தில் வீழு மவர்களோ கடவு ளாவார்.

இ—ள்: இருபதிற்று ஒருவர் ஆக எண்ணும் உன் புத்தர் எல்லாம் வருவது சிறந்த தாயர் வயிற்றினைப் பீறி என்னை - தண்ணங்காரன், மகாவீரன் முதலாக இருபதிற் றொருவராகச் சொல்லப்படும் நின் புத்த கடவுளரெல்லாம் பிறப்பது ஐவகைத்தாயருட் சிறந்த தமது நற்றாயாது வயிற்றைப் பிளந்தென்று கூறுவை,—பரிவு ஒடு சுமந்து பெற்றார் உயிர்கெடப் பழுது செய்து அரு நரகத்தில் வீழும் அவர்களோ கடவுளாவார் - வருத்தத்தோடு பத்துத்திங்கள்சுமந்து தம்மைப்பெற்ற நற்றாயரை உயிர்துறக்கும் வண்ணங் கொன்று முடிவில் அப்பாவத்தாற் பிறர்புக்கழுந்துதற்கரிய நரகக்குழியின்கண் வீழ்ந்தழுந்தும் அவ்வதிபாதகர்களோ கடவுளரென்று கொள்ளத்தக்கவர், இது சாலவும் நன்று. எ-று.

அருநரகம் வேதனைசகித்தற்கரிய நரகமென்றுமாம். ஐவகைத்தாயராவார் பாராட்டுந்தாய், கைத்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், நற்றாயென்பவர். பசுவர்க்கத்துள்ளும் அதிபாதக்காரிகளாகிய இவரைப்பதியென்று கோடல் பெரும் பேதமை என்பது கருத்து. இதனுன் நாலாங்கூற்றிற் பெறப்பட்ட இறைவனுவான் என்பது பன்மைபற்றியும் செயல்பற்றியும் இறைவனல்லனென மறுக்கப்பட்டது. (௫௭)

கரவுடைப் பூத நான்கின் கலப்பினிற் பேத மல்லா
துருவினுக்குயிர்வேறின்றென்றுரைப்பைநின்பொய்மைநூலி

விரவினிற் றுயிலுங் காலுன் முகத்தினி லேறிப் போகு
மரவினைப் பூத பேத மறிந்ததோ வறிவி லாதாய்.

இ—ள்: கரவு உடைப் பூதம் நான்கின் கலப்பினில் பேதம் அல்லாது உருவினுக்கு உயிர் வேறு இன்று என்று நின் பொய்ம்மை நூலில் உரைப்பை - தத்தங்காரணதன் மாத்திரைகளுள்ளே அடங்கி மறைதலையுடைய பிருதிவிமுதலிய சாதுர்ப்பூத சம்மிச்சிரத்தானுய ஓர் வேறுபாடே யல்லது இவ்வுருவத்தின் கண் இதற்கு அந்நியமாக உயிரென்றொருபதார்த்தமில்லையென்று நின் பொய்யாகிய பிடகநூற் கோட்பாடுபற்றிக் கூறுவை,—இரவினில் துயிலும் கால் உன் முகத்தினில் ஏறிப் போகும் அரவினைப் பூத பேதம் அறிந்ததோ அறிவு இலாதாய் - இராக்காலத்து நீ நித்திரைசெய்யும்போது அச்சாதுர்ப்பூத சம்மிச்சிரத்தானுய வேறுபாடு நின்மாட்டுளதேயாகவும் நின் முகமுதலிய உறுப்புக்களினேறிச் செல்லும் பாம்பை அப்பூதபேதம் அறியாததென்னையோ மூழுமகனே நீ சொல்வாயாக. எ-று.

சத்ததன்மாத்திரையும் அதன்கணுடுங்கு மாகாயபூதமும் ஆசீவகர்க்குடம்பாடன்மையின், ஏனை நான்கு தன்மாத்திரைகளும் அவற்றின்கணொடுங்கும் ஏனைநான்கு பூதங்களுமே ஈண்டுக்கொள்ளப்பட்டன. அவை அவ்வாற்றானொடுங்குதலைச் சங்காரக் கிரமத்தின் வைத்துக் கண்டுகொள்க. பாக்கு வெற்றிலை சுண்ணும்பென்னும் இம்மூன்றும் தம்முட்கூடுங் கூட்டத்தின்கண் ஓர் நிறவேறுபாடு தோன்றுதல்போலப் பிருதிவி முதலிய நான்குபூதமும் தம்முட்கூடுங் கூட்டத்தின்கண் ஓர் அறிவுவேறுபாடு தோன்றுவதல்லது உடம்பின்கண் அதற்கு அந்நியமாக உயிரென்றொரு பதார்த்தமில்லையென்று இங்ஙனம் பொய்ப்பொருளைக் கற்பித்துப் பிடகநூல் கூறுதலின் அதனைப் பொய்ம்மைநூலென்றும், பாம்பு ஏனை ஊர்வனபலவற்றுள்ளும் மிக அஞ்சிப் பரிகரித்தற்குரிய தொன்றாகலின் அதனையே விதந்து அரவினை என்றும், அந்நான்கு பூதக்கலப்பும் துயிலுங்காலத்து முள்ளதேயாகவும் ஆண்டைநிகழ்ச்சியை அறியாமையின் பூதபேதக் கலப்பான் ஆண்டோரறிவு தோன்றுமென்றல் ஒருவாற்றானும் பொருந்தாதென்பது நின்காட்சி யளவையான் அறிதற்பாலதொன்றேயாகவும் அதனையறியாது பிணங்கும் நீ பெரிதும் பேதைமையை யுடையையென்பார் அறிவிலாதாய் என்றும் கூறினர். சம்மிச்சிரம்-கலப்பு. (௫௮)

உருவமு முயிருங் கூடு முணர்வுனக் கில்லை யிந்த
வுருவமிங் கிறந்தகாலை யுயிர்கடி தகன்று போகு
முருவமு முயிருங் கூடிப் பிறக்குமே லிதனு லுன்ற
னுருவமு முயிரும் வேறு மென்றுரை யுன்றன் வாயால்.

இ—ள்: உருவமும் உயிரும் கூடும் உணர்வு உனக்கு இல்லை - மேற்கூறியவாறல்லது உடம்பு முயிரும் தம்முட் கூடுதலானே அறிவு

நிகழு மென்னும் உண்மையறிவு நின்மதத்திற்கில்லை, அற்றேல், அங்ஙனங்கூடிய உடம்பு முயிரும் பின் யாதுசெய்யுமெனின்?,—உருவம் இங்கு இறந்த காலை உயிர் கடிது அகன்று போகும் - இவ்வுடம்பு இங்ஙனம் இறந்தவழி அவ்வுயிர் சூக்குமதேகத்தோடு தன்வினைகாட்டும் கதிநிமித் தம்பற்றி விரைந்துசெல்லும், சென்றபின் யாதுசெய்யுமெனின்?,—மேல் உருவமும் உயிரும் கூடிப் பிறக்கும் - மேலும் அவ்வாறே தன்வினைக்கீடாகப் பொருந்துவதோர் தூலதேகமும் அவ்வுயிருங்கூடிப் பிறக்கும்.— இதனால் - இவ்வாற்றான் உடம்புமுயிருங் கூடியவழியே அறிவுநிகழுக்காணும் இவ்வனுமானவளவையால்,—உன்றன் உருவமும் உயிரும் வேறும் என்று உன்றன் வாயால் உரை - உன் உடம்புமுயிரும் தம்முள் வேறுமென்னும் நமது சித்தாந்தமே கொள்ளற்பாலதென்று நீயே உன்வாயால் இட்டபங்கஞ் சொல்லக்கடவை. எ-று.

சொற்பொருட்பின்வருநிலை. மேலுமென்னுமெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. வாயாலெனை வேண்டாகூறினார், பஞ்சகந்தங்கட் கந்நியமாய் உயிரென்பதொன்றில்லையெனச் சாதித்தவாயென அதன்புன்மை விளக்குதற்கும், இன்னும் இதன்கட்படுங் கடாவிடைகளை யெல்லாம் ஈண்டுத் தந்துரைத்துக் கொள்கவென்னும் தந்துணிபுமுடித்தற்குமென்க. உடம்பிறத்தல் நின்காட்சிப்பிரமாணத்தான் அறிந்துகொள்ளற்பாலதொன்றென்பார் உருவமிறந்தகாலையென்னாது உருவமிங்கிறந்தகாலையென்றும், உருவமிறக்கின்றுழி உயிர் அவ்வுடம்பினின்றும் முற்பிற்பாடற நீங்குமென்பார் உயிர்கடிதகன்றுபோகுமென்றுங் கூறினார். மேலைச்செய்யுளான் நான்குபூதக்கலப்பானே அறிவு நிகழுமென்னும் அவன்மதம் மறுக்கப்பட்டது. இதனால் உடம்புமுயிருங் கூடியவழியே அறிவு நிகழுமென்னும் சுவமதஸ்தாபனம் அவாய்நிலைப்பொருள்கோளான் மேலைச்செய்யுளோடுளதாகிய இயைபுபற்றிச் சாதிக்கப்பட்டது. இவை இரண்டற்கும் தம்முள் வேற்றுமை. புத்தசமயிகளுக்குக் காட்சியும் அனுமானமுமென்னும் இரண்டுமே பிரமாணமாம். ஆகமப்பிரமாணம் அவர்கட் கின்று. அது, "மருவிய வளவை காட்சி மானமென் றிரண்டி வற்றால்" என்னும் பரபக்கச் செய்யுளானுமறிக. (௫௧)

வானமு மில்லை வானத் தோசையு மில்லை வான
மானதில் வழக்க தாமென் றரற்றுவை யுன்ற னூலிற்
கானிலம் புனறீ நான்குங் கலப்பதற் கிடம தாகு
நீநவி லோசை வானி னிகழ்ந்துள செய்தி யென்பாய்.

இ—ள்: வானமும் இல்லை வானத்து ஓசையும் இல்லை வானமானது இல் வழக்காம் என்று உன்றன் நூலில் அரற்றுவை - ஆகாயமென்றொரு திரவியமுமில்லை அதன்கட் சத்தமென்றொரு குணமுமில்லை அவ்வாகாயமென்பது இல்வழக்காமென்று நின் பிடகநூற் கோட்பாடுபற்றிப் பிதற்றுவாய்,—நீ நவில் ஓசை - நீ வானமுமில்லை வானத்தோசையுமில்லை

வானமான தில்வழக்கதாம் என்றிங்ஙனம் தன்னை மறுத்துக்கூறிய இச் சத்தகுணந்தானும்,—நிலம் புனல் தீ கால் நான்கும் கலப்பதற்கு இடம் ஆகும் வானின் நிகழ்ந்துள செய்தி என்பாய் - பிருதிவி முதலியநான்கு பூதமுங் கூடிப் பரிணமித்துத் தொழிற்படுதற்குத் தான் இன்றியமை யாது வேண்டப்படும் இடமாயிருக்கும் அவ்வாகாயத்தின்கட் சம்பவித்த காரியமேயென்று நீயே உடம்பட்டுக் கூறக்கடவாய். எ-று.

அரற்றுதல் பயனில் சொற்களைப் பலகாற் பேசுதல்; இழித்தற் கண்வந்தது. ஆகுமென்னும் பெயரெச்சம் வானென்னு மிடப்பெயர் கொண்டது. செய்தி - காரியம். நினக்குப் பிரத்தியக்ஷம் பிரமாணமாதலா னும், சத்தகுணமென்ப தொன்றுண்மை நீ தன்னை ஈண்டில்லையென அழித்துக்கூறும் இக்கூற்றின்கண்ணும் பிரத்தியக்ஷமாகத் தெளியக்கிடத்த லானும், அச்சத்தகுணத்துக்குப் பிருதிவியாதி ஏனை நான்கும் குணியல்லா மையிற் பாரிசேடத்தால் ஆகாயமே குணியென்பது பெறப்படுதலானும், படவே, அதுவுமோர் திரவியமெனக்கொடலே நினக்கினி யமைவுடைத் தென அவனைத்தம்மதத்திற் குடம்படுத்துவார் காணிலம்புனறீநான்குங் கலப்பதற்கிடமதாகு, நீ நவிலோசைவானினிகழ்ந்துளசெய்தி யென்பாய் என்றார். இதனால் ஆகாயபூதமும் அதன்கட் சத்தகுணமும் இல்லையென் னும் அவன் மதம் முறையே காரியவேதுப்பற்றியும் காட்சிப் பிரமாணம் பற்றியும் மறுக்கப்பட்டது. (௬0)

இடமிகுந் திசைதா னென்ப தில்வழக் கென்னு நீயே
வடநெடுந் திசையிற் போதி மரமென வணக்கஞ் செய்வை
புடவியி லறிவி லாரும் பித்தரும் பொய்ம்மை யோரு
முடனிக ழவையிற் கூறி னொக்குநீ யுரைப்ப வெல்லாம்.

இ—ள்: இடம் மிகும் திசை என்பது தான் இல்வழக்கு என் னும் நீயே நெடும் வட திசையில் போதி மரம் என வணக்கம் செய்வை - மிகவும் விசாலமாகிய திசையென்ப தொருதிரவியமானது இல்வழக் கென்று கூறும் நீயே அதனோடு மாறுபட உயர்வாகிய உத்தரதிக்கின்க ணுள்ள அரசமரமென அதனைக்குறித் தீண்டிருந்து நமஸ்காரஞ்செய் வாய்,—புடவியில் அறிவு இலாரும் பித்தரும் பொய்ம்மையோரும் உடன் நிகழ் அவையில் கூறின்-இப்பூமியின்கண் மந்தமதிகளும் பித்தாதிக்கரோகி களும் குதர்க்கிகளும் ஒருங்கிருக்கும் அவைக்களத்தின்மாத்திரம் கூறப் படின்,—நீ உரைப்ப எல்லாம் ஒக்கும் - நீ கூறுவனவெல்லாம் பொருந் தும். எ-று.

கூர்த்தவிவேகிகளாகிய கல்விமான்களது அவைக்களத்துக்கூறப்படின் நின்கூற்றுள் ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாதென்பது குறிப்பெச்சம். முன் இல்வழக்கென்றதனைப் பின் உள்வழக்கெனக் கொண்டிங்ஙனம் வெளிப்பட முன்னொடு பின்மலைய மயங்கிக்கூறும் நின்னொடு வாதித்தல்

நம்போல்வார்க்குத் தகாதென்பது கருத்து. அரசு வெள்ளரசு. அது தன் கடவுட்கு வாசஸ்தானமாகலின் வணங்கற்பாலதென்பது அவன்மதசித்தாந்தமென்க. உரைப்ப என்பது அன்பெறு அகரவீற்றஃறிணைப் பலவறிசொல் இதனாலே திசையென்ப தில்வழக்கென்னும் அவன்மதம் மறுக்கப்பட்டது. (௬௧)

மரமுயி ரல்ல வென்னை மன்னுமைம் பூத மான
வுருவினர் போல நன்னீ ருணவினாற் கிளைகொண் டோங்குஞ்
சருகெழு முணவின் றாயி னாதலாற் சனன பேதத்
தருவினை யருந்த வெங்கோ னாருயிர்க் கமைத்த தென்பாய்.

இ—ள்: மரம் உயிர் அல்ல என்னை - புன்மர முதலியவற்றை உயிரில்லாத சடப்பொருளென்று சொல்வாய்,—மன்னும் ஐம்பூதம் ஆன உருவினர் போல நல் நீர் உணவினால் கிளை கொண்டு ஓங்கும் - அவைநிலை பெற்ற பஞ்சபூதகாரியமாகிய சரீரத்தையுடைய நம்மனோர் உணவுள்வழி அங்கவிருத்தியும் அஃதில்வழி அங்கக்ஷீணமும் அடைவதுபோல நல்ல நீராகிய உணவுண்டாயிற் கவடு கோடு கொம்பு வளார் முதலிய கிளைகளை ஈன்று செழித்தோங்கி வளராநிற்கும்,—உணவு இன்று ஆயின் சருகெழும் - அவ்வுணவில்லையாயிற் சருகாய் உலர்ந்தழியும்,—ஆதலால் - இங்ஙனமாதலினாலே,—சனன பேதத்து அருவினை அருந்த எங்கோன் ஆருயிர்க்கு அமைத்தது என்பாய் - பலதிறத்தனவாகிய பூர்வசன்மங்களிற் செய்துகொண்ட அனுபவித்தற்கரிய தீவினைப்பயன்களை நுகர்வித்தற்கு நங்கடவுள் அரிய ஆன்மாக்கட் கியற்றியது அப்புன்மரமுதலிய அசர வடிவமென்று நீயே சொல்வாயாக. எ-று.

சருகெழுமென்பது ஈண்டொருசொன்னீர்மைத்து. ஏனை நில நீர் முதலிய சடப்பொருள்கள்போலத் தம்மியற்கையானன்றிப் புன்மரமுதலியவை உணவுடைமையாகிய செயற்கையான்வளர்தலும் அஃதின்மையான் வளராது கெடுதலும் கண்கூடாகக் காண்டலின், நின்பிரமாணங்களிரண்டனுள் ஒன்றாகிய பிரத்தியக்ஷப் பிரமாணத்தானும் அவை உயிர்ப்பொருளாமென்றுடம்படுதலே நினக்கினிச் சால்புடைத்தென்பார் எங்கோனாருயிர்க் கமைத்ததென்பாய் என அவனையே அங்ஙனங் கூறென்றார். இதனாற் புன்மரமுதலிய ஓரறிவுயிர்களை உயிரல்பொருளென்னும் அவன்மதம் மறுக்கப்பட்டது. (௬௨)

வன்பெரும் பழுது கோறன் மண்மிசைப் பிறர் செகுத்த
புன்புலா றின்ன னன்றென் றுரைப்பைநின் பொய்ம்மைநூலிற்
றின்னையென் றுனக்கு நல்லூ னுடலுயிர் செகுத்தே யூட்டி
யுன்பசி தணித்தார் பாவ மெய்துவ துனக்கு நன்றோ.

இ—ள்: கோறல் வன் பெரும் பழுது - யாதானுமோருயிரை அதற்கு நிலைக்களமாகிய உடம்பினின்றும் தாமாகவே கொன்று நீக்கி

அவ்வூனை உண்ணுதலே ஒருவர்க்குப் பெருங்கொடும்பாவமாம்,—மண்மிசைப் பிறர் செகுத்த புன் புலால் தின்னல் நன்று என்று நின் பொய்ம்மை நூலில் உரைப்பை - அஃதன்றி இவ்வுலகத்து ஒருவர்கொன்ற புல்லிய ஊனை மற்றொருவர் உண்ணுதல் பாவமாகாதென்று நின் பொய்ம்மையாகிய பிடகநூற்கோட்பாடுபற்றிப் பேசுவை,—உடல் உயிர் செகுத்து நல் ஊன் தின்பை என்று உனக்கு ஊட்டி உன் பசி தணித்தார் - உயிரை உடம்பினின்றுங் கொன்று நீக்கி இந்நல்ல ஊனை உண்பாயென்று உபசாரத்தோடளக்கூட்டி இங்ஙனமுன் பசியைத் தணித்தவர்,—பாவம் எய்துவது உனக்கு நன்றோ - இக்கொலைப்பாவத்தை அடைவது அவ்வூனை மகிழ்ந்துண்ட உனக்கு நல்லதோ. எ-று.

நன்றாகாதென்பார் எதிர்மறை யோகாரந்தந்து நன்றோ என்றும், இங்ஙனம் குற்றத்தைக் குணமாகத்திரித்துக்கூறும் நின்னூல் மெய்நூலன்றென்பார் அதனைப் பொய்ம்மைநூலென்றுங் கூறினார். பாவமென வந்தமையின், முன் அதனைச் சாதிக்கவந்த பழுதென்பது பாவமென்பதும், நன்றென்பது பாவமாகாமை என்பதும் தாமே போதருமென்க. உடலுயிர் செகுத்தேயூட்டி என்பது எதிர்நிரனிறை. ஊன் முன்னும் கொலையால்வந்தமையின் ஊனுண்டல் கொலைப்பாவத்திற்குக் காரியமாதலும், பின்னும் கொலையை உண்டாக்குதலின் அதற்குக் காரணமாதலும் ஒருங்குடைமையானும், செய்ந்நன்றி மறத்தலாகிய உய்தியில் குற்றந் தங்குதலானும், பிறர் கொன்ற ஊனை உண்ணுதலும் பெரும்கொடும் பாவமென்பது இதனாற்சாதிக்கப்பட்டது. செய்ந்நன்றி மறத்தல் உய்தியில் குற்றமென்பது, "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்பதனானுமறிக. இருபதிற்றொருவரென்னுஞ் செய்யுண்முதல் இதுகாறுமுள்ள ஏழுசெய்யுட்களானும் பின்வரும் ஐந்தாங்கூற்றுளடங்காது எஞ்சிநின்ற புத்தமத ஆபாசங்களுட்சில அவாய்நிலைப்பொருள்கோளான் இடையே எண்டெடுத்தோதி மறுக்கப்பட்டன. இனிஐந்தாங்கூறு மறுப்ப. (௬௩)

காரண நிற்க வென்றுங் காரியங் கெடுதல் வீடென்
றாரணம் பரவு மெங்கோ னாகமம் புகல்வார் சொல்வார்
போரணங் குயிருஞ் சேரப் பொன்றுதன் முத்தி யென்றா
பேரணங் குற்ற நீயே பிறிவறி யாது சொன்னாய்.

இ—ள்: காரணம் (என்றும்) நிற்க என்றும் காரியம் கெடுதல் வீடு என்று - காரணமாகிய ஆன்மா நித்தியப்பொருளாய் நிற்க என்னான்றும் காரியப்பொருளாகிய சரீரம் கேடடைதலே முத்தியென்று,—ஆரணம் பரவும் எங்கோன் ஆகமம் புகல்வார் சொல்வார் - வேதங்களுந் துதிக்கும் பசுபதியாகிய சிவபெருமான் அருளிச்செய்த ஆகமங்களை ஓதியுணர்ந்த மகான்கள் கூறுவர்,—போர் அணங்கு உயிரும் சேரப் பொன்றுதல் முத்தி என்று - ஐம்புலன்களாகிய வேட்டுவரானிகழும் பிரபஞ்சப்

போரால் வருந்துமுயிரும் அச்சரீரத்தோடு தீரக்கெடுதலே முத்தி யென்று,—பேர் அணங்கு உற்ற நீயே பிறிவு அறியாது சொன்னாய் - கழிமடச்செயலையுடைய நீயே அவற்றின் வேறுபாடுகளை யுணராது இங்ஙனம் கூறினாய். எ-று.

அணங்கு பின்னையதாகுபெயர்; இயற்பெயரெனக்கொண்டு பைசாசமென்பாருமுளர். காரியப்பொருள் இடையே ஆக்கப்படும் பொருள். ()

அழிந்திடி னைந்து கந்த முத்தியென் றுரைத்தா யைந்து
மழிந்திடின் முத்தி பெற்றா ராரென வினவுங் காலை
யழிந்திடு மைந்தி னுண்டா முணர்வென வுரைக்கி னைந்து
மழிதன விலையா முத்தி யாவது மில்லை யென்றார்.

இ—ள்: ஐந்து கந்தம் அழிந்திடின் முத்தி என்று உரைத்தாய் - பஞ்சகந்தங்களுந் தீரக்கெடின் அதுவே முத்தியென்று நீ கூறினாய்,— ஐந்தும் அழிந்திடின் முத்தி பெற்றார் ஆர் என வினவும் காலை - அவ்வைந்துமங்ஙன மழிந்தவழி ஆண்டு முத்திபெற்றவர்தாம் யாவரென்று வினவமிடத்து,—அழிந்திடும் ஐந்தின் உண்டாம் உணர்வு என உரைக்கின் - அழிந்த அப்பஞ்சகந்தங்களினுமுளதாகிய அறிவென நீ விடைகொடுக்கின்,—ஐந்தும் அழிந்தன இலையாம் - அப்பஞ்சகந்தங்களும் அழிந்தன வல்லவாகும்,—முத்தி ஆவதும் இல்லை என்றார் - ஆகவே, அம்முத்தியுமொன்றில்லையெனத் திருவாதவூரடிகள் புத்தமத ஆபாசங்களை எடுத்து விளக்கி இங்ஙனம் பரமதகண்டனஞ் செய்தருளினார். எ-று.

சொற்பொருட்பின்வருநிலை. புத்தகுருவே, நின்முத்தியாவது பஞ்சகந்த நாசமாம். அவைநாசமாகவே, முத்திபெற்றவர் யார் என்பார்க்கு அப்பஞ்சகந்தங்களினுண்டாகி நிகழும் அறிவென்பையாயின், அவ்வறிவு அப்பஞ்சகந்தங்களுள்வழி உள்ளதாய்; அவை இல்வழித்தானும் இல்லையாம். ஆகவே, அப்பஞ்சகந்தங்களழிய அவ்வறிவுமுடனழியுமென்பது நன்குசித்தித்தலின், அறிவே முத்திபெற்றதென்று நீ அவ்வறிவை உள்பொருளாகக்கோடல் பொருந்தாது. பொருந்தின், அப்பொழுது பஞ்சகந்தமுமழியாமை நிச்சயமெனவே படும். படவே, பஞ்சகந்தமுமழிதலே தனக்கிலக்கணமாகவுடைய நின்முத்தியும் இல்லையென்றாரென்பதாம். இவ்விருசெய்யுளானும் பஞ்சகந்தங்களழிந்துழியும் முத்திப்பேறின்று, அழியாவழியும் முத்திப்பேறின்றென மேவிய கருவிற்சேருமென்னுஞ் செய்யுளிற்கூறிய ஐந்தாங்கூறு மறுக்கப்பட்டது. (௬௫)

வேறு.

பொங்குபுகழ் மங்கியுள புத்தனும் வெகுண்டே
யெங்கடவு ளேதுபெறு முத்தியெது வென்றீ
ருங்கடவுள் யாதுமது முத்தியெது வென்னத்
தங்குசிவ ஞானமுணர் சைவரிது சொல்வார்.

இ—ள்: பொங்குபுகழ் மங்கி உள புத்தனும் வெகுண்டு - இதுகாறும் மேன்மேற்கிளரும் தன் புகழாகிய தீபம் ஈண்டொளி மழுங்கப் பெற்ற புத்தகுருவும் அதுகேட்டுக் கோபங்கொண்டு,—எம் கடவுள் ஏது பெறு முத்தி ஏது என்றீர் - நீர் நமக்குக் கடவுளும் நம்மாற் பெறப்படும் முத்தியுமில்லையென் றித்துணையுஞ் சாதித்தீர், அதுநிற்க,—உம் கடவுள் யாது உமது முத்தி ஏது என்ன - நுங்கடவுளிலக்கணம் யாது? நீர் பெறும் முத்தியாவதென்னை? சொல்லுமென்று வினவ,—தங்கு சிவ ஞானம் உணர்வார் இது சொல்வார் •சைவாகமங்களிற் கூறப்படும் சிவஞானத்தை அநுபூதியில் வைத்துணர்ந்த சைவாசாரியராகிய திருவாதவூரடிகள் அவ்வினாக்கட் கிங்ஙனம் விடைகொடுத்தருளுவாராயினர். எ-று.

• குறிப்புருவகம். ஏதுவென்பது ஏதுவெனக்குறுகிற்று. வினாவிரண்டும் ஈண்டின்மை குறித்துநின்றன; எவனென்னும் வினைப்பெயர் இன்மைகுறித்து நிற்புழிப்போல. இனி எங்கடவுளேதுபெறு முத்தியெதுவென்றீர் என்பதற்கு நமது கடவுள் யாது நம்மாற்பெறப்படும் முத்தியாது என்று நீர் முன்வினவினீர் எனப்பொருள் கூறி, ஆகலின், யானும் அவ்வாறு உம்மை வினவுகின்றேனென்பது தாற்பரியமாக்குவாருமுளர். இது கலிவிருத்தம். (௬௬)

ஆலமணி நீழலி லிருந்தற முரைக்குங்
கோலமது கண்டுபலர் கும்பிட நடிப்போன்
மேலணியு நீறனுமை கூறனருண் மேவுஞ்
சீலனவ னற்பெருமை செப்பவெளி தாமோ.

இ—ள்: மணி ஆல நீழலில் இருந்து அறம் உரைக்கும் - நங்கடவுள் அழகிய கல்லாலவிருக்ஷநிழலிலே தக்ஷிணாமூர்த்தியாயிருந்து சனகர் முதலிய முநீந்திரர்களுக்குத் தருமோபதேசஞ்செய்பவர்,—கோலம் பலர் கண்டு கும்பிட நடிப்போன் - தந்திருமேனியைத் தம்மடியவர் பலரும் தரிசித்து வழிபடும்பொருட்டு இங்கே கனகசபையின்கண் அநவரததாண்டவஞ் செய்தருளுபவர்,—மேல் அணியும் நீறன் - திருமேனியிலணிந்த விபூதியையுடையவர்,—உமை கூறன் - உமாதேவியை வாமபாகமாகவுடையவர்,—அருள் மேவும் சீலன் அவன் நல் பெருமை செப்ப எளிது ஆமோ - திருவருணிரம்பும் சுபாவகுணத்தை யுடையவராகிய அக்கடவுளது நல்லமகிமை இவ்வியல்பிற்றென்று நாஞ் சொல்வதற்கு அது எளியதோ. எ-று.

நற்பெருமை மெய்ப்பெருமை. உரைக்குமென்பது செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்றுலணையும்பெயர். உரைக்கும் கோலமெனப் பெயரெச்சமாகக் கோடலும், அருண்மேவுஞ்சீலனென்பதனை அடைமொழியாக்காது மேலனவற்றோடு வைத்தெண்ணி அடைகொளியாக்கலும் பொருந்தாமை, முன்னர்த் தோஷாரோபணஞ் செயப்படுகின்றுழியும் அத்தோஷம் பரிகரிக்கப்படுகின்றுழியு மொய்த்துணர்க. தோஷாரோபணம்- குற்றமேற்றல். (௬௭)

தில்லைமணி மன்றிலுறை திங்களணி யெங்கோ
னெல்லையுள னோமொழிய வென்றருள் புரிந்தே
சொல்லுமள விற்பல தொடுத்துமுய லாதே
நில்லுமிது கூறுமென நீசனி துரைத்தான்.

இ-ள்: தில்லை மணி மன்றில் உறை திங்கள் அணி எம் கோன் - இத்தில்லைமாநகரின் கணுள்ள அழகிய கனகசபையில் வீற்றிருக்கும் வாக்கு மனோதீத கோசரப்பொருளாகிய நங்கடவுளானவர்,—மொழிய எல்லை உளனோ என்று அருள் புரிந்து சொல்லும் அளவில் - இவ்வியல்பினரென்று வரையறுத்துக்கூறி நாம் நினக்கு விளக்குதற்கு அவர் ஓர்வரையறையுள் அகப்பட்டவரோ அல்லராகலான் நினக்கெங்ஙனம் விளக்குதுமெனத் திருவாதவூரடிகள் கூறியருளி, அப்பாலும் ஒருவாறு தாலநிலையில்வைத்து விளக்கத் தொடங்குகின்றுழி,—பல தொடுத்து முயலாது நில்லும் - நீர் மேலும் நானாவித சொற்பிரயோகஞ் செய்து பரக்கச்சொல்லாது நுங்கூற்றை இவ்வளவினிறுத்தும்,—இது கூறும் என நீசன் இது உரைத்தான் - இவ்வினாவிற்கு விடைகூறுமென்று பதிதனாகிய புத்தகுரு இதனைக் கூறுவானாயினான். எ-று.

எல்லை அளவை. திங்களணிதல் எல்லையிலனாதலைச் சாதிக்கவந்த குறிப்பேது. வாக்குமனோதீதகோசரம் வாக்கையும் மனத்தையுங் கடந்து வெளிப்படுவது. (௬௮)

முன்னர்வட நீழலி லிருந்தற மொழிந்தா
னென்னிறைவ னென்னுமுரை யென்னெதி ருரைத்தீர்
மன்னுசெப மாலைகொ டிருக்குமது மற்றோ
ருன்னரிய நற்கடவு ளுண்டென நினைந்தோ.

இ-ள்: என் இறைவன் - நங்கடவுளானவர்.—வட நீழலில் இருந்து அறம் மொழிந்தான் என்னும் உரை என் எதிர் முன்னர் உரைத்தீர் - கல்லாலவிருக்ஷநிழலிலிருந்து தருமோபதேசஞ் செய்தாரென்னும் வார்த்தையை நீர் எனக்கெதிரே முன்னர்க்கூறினீர்,—மன் செப மாலை கொடு இருக்குமது - அக்கடவுள் செபமாலை கையிற்கொண்டிருக்கு மத்தன்மை,—மற்று ஓர் உன்னரிய நல் கடவுள் உண்டு என நினைந்தோ - தமக்குப் பிறிதோர் தியானித்தற்கரியமுதற்கடவுள் உண்டென்று கருதிப் போலும். எ-று.

கருத்ததுவாயின், அம்முதற்கடவுள் நம் புத்தகடவுளேயாமென அறிதிரென்பது குறிப்பெச்சமென்க. உகரம் சாரியை. மன்னுதல் நிலைபெறுதலுமாம். இதனால் ஆலமணிநீழலிலிருந் தறமுரைக்குமென்னும் முதலாங் கூற்றிற்குத் தோஷம் கற்பிக்கப்பட்டது. (௬௯)

மல்லலுல கத்தவர் வணங்கிட நடிப்பன்
றில்லையிறை யென்னவுரை செப்பினிர் செகத்தே

நல்லறிவி னோர்கள்சிலர் நாடுபவ ருண்டா
யல்லதுத மிச்சைதனி லாடுபவ ருண்டோ.

இ—ள்: தில்லை இறை - நஞ்சிதம்பர சபாநாயகர்,—மல்லல் உலகத்தவர் வணங்கிட நடிப்பன் என்ன உரை செப்பினிர் - வளவிய இவ்வுலகத்தவர் தரிசித்து வணங்கி வழிபட அனவரததாண்டவஞ்செய்தருளுவாரென்று கூறினீர்.—செகத்தே நல் அறிவினோர்கள் சிலர் நாடுபவர் உண்டாய் அல்லது தம் இச்சைதனில் ஆடுபவர் உண்டோ - இவ்வுலகின்கண்ணே தம்மினும் நல்லறிவை உடையோர் ஒருசிலராயினும் காண்போர் உள்ளவிடத்தல்லது சுவேச்சையான் நடனஞ்செய்பவருமுண்டோ, இல்லையே. எ-று.

ஆதலால், நுங்கடவுளது நடனம் அவரினும் மேம்பட்டவர் நோக்கும்பொருட்டுச் செய்யப்படுமென்பது பெறப்படும்; படவே, அம்மேம்பட்டவர் நம்புத்தகடவுளேயாமென வறிதிரென்பது குறிப்பெச்சமென்க. உண்டாயவழியல்லதென்பது உண்டாயல்லதெனத் திரிந்து நின்றது. உம்மிரண்டும் விகாரத்தாற்றொக்கன. உலகத்தவரென்றது தம்மிற்றாழ்ந்த பசுக்களென்னுந் துணையாய்நின்றது. இதனாற் கோலமதுகண்டுபலர் கும்பிடநடிப்போன் என்னும் இரண்டாங்கூற்றிற்குத் தோஷம் கற்பிக்கப்பட்டது. (௭0)

வையமுழு துய்யமணி மன்றினு ணடிப்போன்
மெய்யணியு நீறனென மேன்மைகொ டுரைத்தீர்
செய்யவொளி தங்குதிரு மேனிதனி னீறே
துய்யதென வோவுமது தொல்லிறை புனைந்தான்.

இ—ள்: வையம் முழுது உய்ய மணி மன்றினுள் நடிப்போன் - உலகமுழுவது முய்யும்வண்ணம் அழகிய கனகசபையின்கண்ணே திருநடனஞ்செய்தருளும் நங்கடவுளானவர்,—மெய் அணியும் நீறன் என மேன்மை கொடு உரைத்தீர் - திருமேனியிலணியும் விபூதியையுடையவரென அதனை நுமக்கோர் மேம்பாடாகக்கொண்டு கூறினீர்,—உமது தொல் இறை - நும் பழையகடவுள்,—செய்ய ஒளி தங்கு திருமேனி தனின் நீறு துய்யது எனவோ புனைந்தான் - செவ்வொளிபொருந்திய திருமேனியிலே விபூதி அதிபாவனமென்று கருதிக்கொல்லோ தரித்தார். எ-று.

தந்திருமேனி அதிசுத்தமுள்ளதென்று கருதின், அதன்மீது நீற்றைப் புனைய நினையார், அதினும் அதிசுத்தமுள்ளதென்று கருதியே நீற்றைப் புனைந்தாராகலின், நுங்கடவுள் நிருமலதேகியல்லர் சமலதேகியேயாமென்பது நுமக்கு முடன்பாடுபோலுமென்பது குறிப்பெச்சமென்க. அதிபாவனம்-அதிசுத்தம். இதனான் மேலணியு நீறனென்னும் மூன்றாங்கூற்றிற்குத் தோஷம் கற்பிக்கப்பட்டது. (௭௧)

மங்கையொரு பங்கனென வண்மைகொ டுரைத்தீர்
பங்குபடு பெண்வடிவு பாரின்மிசை யுண்டோ

அங்கமொரு பாதிமட மாதினுரு வாகு
லுங்களிறை நீர்துறவி லுற்றதவ மன்றே.

இ—ள்: மங்கை ஒரு பங்கன் என வண்மை கொடு உரைத்தீர் - நுங்கடவுள் எஞ்ஞான்றும் மங்கைப்பருவத்தையுடைய உமாதேவியை வாமபாகமாக வுடையவரென்று அதனையுமோர் மேம்பாடாகக் கொண்டு கூறினீர்.—பெண் பங்கு படு வடிவு பாரின் மிசை உண்டோ - ஸ்திரீபுருஷரூபமாய்ப் பங்குபட்ட வடிவமொன் றிவ்வுலகத்தின்கண்ணுள்ளதோ இல்லையே, ஆதலான் அஃதசம்பாவிதமே, அதுநிற்க,—உங்கள் இறை அங்கம் ஒரு பாதி மட மாதின் உருவு ஆகுல் - நுங்கடவுள் தந்திருமேனியிற் செம்பாதி ஸ்திரீரூபமாயின்,—நீர் துறவில் உற்றது அவம் அன்றே - நீர் இல்லறத்தை யொழித்துத் துறவறத்தை மேற்கொண்டநுட்டிப்பது பயனின்முயற்சியாய் முடியுமன்றே. எ-று.

ஸ்திரீபுருஷ ரூபமாய்ப் பங்குபட்ட வடிவமொன்றுண்மை இவ்வுலகத் திதுகாறுங் கேட்கவும்படாமையின், மங்கையொருபங்கனென நுங்கடவுட்கு நீர் கூறிய அர்த்தநாரீசுவரவடிவமும் அசம்பாவிதமே என்பான் பங்குபடு பெண்வடிவுபாரின்மிசையுண்டோ வென்றும், வித்தின்கணுள்ளதே விளைவின்கண்ணும் வருவதாகலின், நுமக்கெல்லாம் பெரியதோராதாரமாகிய நுங்கடவுள் அர்த்தநாரீசுவரராய் இல்லறத்தை யநுட்டிக்க, அவர்வழிப்பட்ட நீர் அவ்வில்லறத்தை ஆகாதென்றொழித்ததும் துறவறத்தை ஆகுமென மேற்கொண்டநுட்டிப்பதும் அதனோடு மாறுபட்டுப் பயனின்முயற்சியாய் முடியுமன்றே என்பான் அங்கமொருபாதிமடமாதினுருவாகு, லுங்களிறைநீர்துறவிலுற்றதவமன்றே என்றுங் கூறினன். தவமென்னோ என்பதூஉம் பாடம். இதனல் உமை கூறனென்னும் நாலாங்கூற்றிற்குத் தோஷம் கற்பிக்கப்பட்டது. (எ௨)

என்றவன் மொழிந்தபி னிகழ்ச்சிநகை செய்தே
மன்றனடி யார்கள்பெரு வாழ்வுபெற வந்தார்
நன்றியுப தேசமிது நற்றவ மிலாதா
யுன்றனெதிர் சொல்வதல வென்றிதுரை செய்வார்

இ—ள்: என்று அவன் மொழிந்த பின் - என்றிங்ஙனம் அப்புத்தகுரு கூறியபின்னர்,—மன்றன் அடியார்கள் பெரு வாழ்வு பெற வந்தார் இகழ்ச்சி நகை செய்து - சிவனடியார்கள் பேரானந்தப்பெருவாழ்வு பெற்றுய்யும்வண்ணம் ஈண்டவதாரஞ்செய்த திருவாதவூரடிகள் அவனதறிவின்மையைக்குறித்து அவமதிபயப்பச்சிரித்து,—இது நன்றி உபதேசம் - நின்ஞக்ஷேபங்கட்கு நம்மாற் கூறத்தகும் சமாதானங்களாகிய இவை வேதசிவாகமங்களிலே உள்ள நல்லரகசிய வுபதேசப் பொருள்களாம், ஆகலான்,—நல் தவம் இலாதாய் உன்றன் எதிர் சொல்வது அல என்று - நல்ல பூர்வசன்ம தவமில்லாத புத்தகுருவே பதிதனுகிய உனக்கெதிரே சொல்லற்பாலனவல்லவென்று மறுத்து,—இது உரைசெய்வார் - மற்றிஃதொரு சமாதானஞ்செய்யத் தொடங்கியருளினர். எ-று.

பதிதனுகிய புத்தகுருவுக்கெதிரே வேதசிவாகமங்களிலுள்ள சூக்கு மார்த்தங்களைக்கொண்டு சமாதானஞ்செய்யப்புகின், அது அதிபாதகத்தின் பாற்படு மாகலான் அந்நெறியானன்றி ஸ்தூலார்த்தங்களினுற்றல்கொண்டு பிறிதோர் நெறியாற் சமாதானஞ்செய்யத் தொடங்கினுரென்பார் நன்றி யுபதேசமிதுநற்றவமிலாதா, யுன்றனெதிர்சொல்வதலவென்றினுரைசெய் வாரென்றும், அச்சமாதானங்கள் இந்நிலைமைக்கண் வெளிவாராதிருப் பினும் தமதுநெஞ்சத்துண்மையின் இதுவெனத் தன்மையாற் சுட்டியுங் கூறினுர். நகை உவகைமுதலிய பலதிறத்தனவாகலிற் பிறிதோடியையு நீக்கிய விசேடணத்தான் ஈண்டிகழ்ச்சிநகை என்ருர். சுட்டு முன்னையது சாதியொருமை. (எங)

ஓங்குசெப மாலைகொ டிருத்தலுல கெல்லா
மீங்குயர் தவங்கள்செய வென்றினிது கொள்ளாய்
தாங்கிய படைத்தொழில்கள் சார்பொடு பழக்கும்
பாங்குள பணிக்கர்கர பத்திரம தாகும்.

இ—ள்: ஓங்கு செப மாலை கொடு இருத்தல் - நங்கடவுள் உயர்ந்த செபமணிமாலையைத் திருக்கரத்திற்கொண்டு கல்லாலவிருக்ஷநிழலில் வீற் றிருத்தல்,—ஈங்கு உலகு எல்லாம் உயர் தவங்கள் செய என்று இனிது கொள்ளாய் - இவ்வுலகத்தவர்களெல்லாம் உயர்ந்த தவங்கள் செய்யும் பொருட்டென்று நன்கறிந்துகொள்ளக்கடவாய்,—தாங்கிய படைத் தொ ழில்கள் சார்பொடு பழக்கும் பாங்கு உள பணிக்கர் கரபத்திரம் ஆகும் - அது, கைகளிலே தாங்குகின்ற படைக்கலவித்தைகளை மாணுக்கர்க் கன்போடு பயிற்றும் கடப்பாட்டையுடைய ஆசிரியர்களது கையின்க ணுள்ள வாட்படைபோலாகும் என்றறிந்துகொள்ளக்கடவாய்: எ-று.

மறுபொருளுவமை. நங்கடவுள் செபமணிமாலையைத் தந்திருக்கரத் திற்கொண்டு வடவிருக்ஷநிழலில் வீற்றிருத்தல் தம்பொருட்டன்றி ஆன் மாக்கட்கு யோகநிலையை அறிவுறுத்தும்பொருட்டென் றறிந்துகொள் ளக்கடவாய் என்ருரென்பது கருத்தென்க. அவர் பேரருளின் வயத்த ராகலின், அவர்க்கதுவே கடப்பாடு, அஃதொழிந்து வாளாவிருத்தல் அவரது பேரருட்கிழுக்காய்முடியுமெனப் பொருட்கோதி வலியுறுத்து வார் சார்பொடுபழக்கும் பாங்குளபணிக்கர் கரபத்திரமதாகும் என உவ மைக் கடைகொடுத்தோதி வலியுறுத்தினுர். இதனுல் மன்னுசெபமாலை கொடிருக்குமதுமற்ருே, முன்னரிய நற்கடவுளுண்டென நினைந்தோ என முதலாங்கூற்றில் ஆரோபித்த கற்பனுதோஷம் பரிகரிக்கப்பட்டது. கரபத்திரம் - வாள். ஆரோபித்தல்-ஏற்றுதல். (எச)

ஈட்டிய தவப்பய னில்லாதவர்கள் போலு
ணுட்டமுடை யாரெதிர் நடித்திடுவ னென்ருய்
காட்டவனல் போலுடல் கலந்துயிரை யெல்லா
மாட்டுமொரு நட்டுவனெம் மண்ணலென வெண்ணுய்.

இ—ள்: ஈட்டிய தவப் பயன் இலாதவர்கள் போல் ஊன் நாட்டம் உடையார் எதிர் நடித்திடுவன் என்றாய் - சனனங்கடோறு மீட்டிய புண்ணியப்பயனாகிய அனுபவப்பொருளில்லாத இவ்வுலகத்து நாடகர்களைப்போல நங்கடவுள் ஊனக்கண்ணையுடைய இவ்வுலகத்துப் பேதைகள்காண அவர்கட்கெதிரே ஊனநடனஞ்செய்வாரென்று கூறினாய்,— எம் அண்ணல் - நங்கடவுள்,—காட்ட அனல் போல் உடல் கலந்து உயிரை எல்லாம் ஆட்டும் ஒரு நட்டுவன் என எண்ணாய் - விறகின்கண்ணே தீயைப்போல உடம்பின்கண் வியாபித்துநின்று உயிர்களையெல்லாம் பஞ்சகிருத்தியத்துள் அகப்படுத்தியக்கி இகபரங்களில் விட்டாட்டி ஞானக்கண்ணையுடையார்க்குமாத்திரம் ஒருவாறு புலப்படும் ஓர் ஞானநாடகவாசிரியரென்று அறிந்துகொள்ளக்கடவாய். எ-று.

பஞ்சகிருத்தியத்துள் அகப்படுத் தியக்கி ஆட்டும் ஞானநாடக வாசிரியரெனவே, ஆன்மாக்கள் பாசபந்தவேதனையகன்று கைவல்லிய சுகமடைதல் சத்தியமென்பது தாற்பரியமாகலின், தம்மின் மேம்பட்டவரொருருமின்றித் தாமே மேம்பட்டவர் என்பது தானேபோதருமென்க. காட்டம்-விறகு. விறகின்கட்டீ அந்தர்ப்பவித்திருத்தலை, "விறகிற்றீயினன் பாலிற்படுநெய்யின், மறையநின்றுளன்மாமணிச்சோதியா, னுறவுக்கோனட்டுணர்வுகயிற்றினான், முறுகவாங்கிக்கடையமுன்னிற்பனே என்னுந் திருவாக்கானுமறிக. ஊனக்கண் ஞானநடனத்தை யுணராமையை, "ஊனக்கண் பாச முணரா பதியை ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி" என்பதனானு முய்த்துணர்க. இதனால் நல்லறிவினோர்கள் சிலர் நாடுபவருண்டா, யல்லதுதமிச்சைதனிலாடுபவருண்டோ என இரண்டாங்கூற்றின்மேல் ஆரோபித்த கற்பனாதோஷம் பரிகரிக்கப்பட்டது. (எ௫)

நீற்றினை யணிந்ததுவெ னின்னிறைவ னென்றே
சாற்றினை யுயிர்க்கிடர் தணிக்கவென வெண்ணாய்
தோற்றியுள தம்புதல்வர் துன்பமுறும் வெந்நோய்
மாற்றும்வகை யன்னைய ரருந்திய மருந்தாம்.

இ—ள்: நின் இறைவன் நீற்றினை அணிந்தது என் என்று சாற்றினை - நுங்கடவுள் தமது செம்பவளத்திருமேனியின்மீது விபூதிதாரணஞ் செய்ததென்னையென்று முன்னர் ஆக்ஷேபித்தனை,—உயிர்க்கு இடர் தணிக்க என எண்ணாய் - அது, ஆன்மாக்களது பிறவித்துன்பத்தை நீக்கியருளும்பொருட்டென் றறியக்கடவாய்,—தோற்றி உள தம் புதல்வர் துன்பம் உறும் வெம் நோய் மாற்றும் வகை அன்னையர் அருந்திய மருந்து ஆம் - அஃது, தங்கணவராற் றம்மாட்டே தோற்றுவிக்கப்பட்டுள்ள தங் குழந்தைகளது துன்பமிக்க கொடிய நோயை நீக்கும்பொருட்டு நற்றாயர் உட்கொண்ட மருந்துபோல்வதாம். எ-று.

ஈண்டுத் தோற்றி என்பது பிறவினைப்பொருளில் வந்தது; "தொல் காப்பியனெனத் தன்பெயர்தோற்றி" என்புழிப்போல; தன்வினைப்பொ ருளில் வந்ததெனக் கோடலுமொன்று. (எசு)

புல்லறிவு கொண்டுபல பொத்துமொழி புத்தா
நில்லவன லாலொருவர் நீறணிவ துண்டோ
நல்லதிரு நீற்றினுள நன்குமறை தானே
சொல்லுமத லாலொருவர் சொல்லவெளி தாமோ.

இ-ள்: புல் அறிவு கொண்டு பல பொத்து மொழி புத்தா நில் - அற்பவறிவைக்கொண்டு பலபொய்வார்த்தைகளைக்கற்பித்துக்கூறும் புத்த குருவே இனி அவ்வளவினின் குதர்க்கத்தைநிறுத்து,—அவன் அலால் ஒருவர் நீறு அணிவது உண்டோ - அக்கடவுளல்லது மற்றொருவர் பிறர் துன்பத்தைத் தீர்க்கும்பொருட்டுத் தந்திருமேனியில் விபூதிதரிப்பது முண்டோ, இல்லையே.—நல்ல திருநீற்றின் உள நன்கு மறை தானே சொல்லும் - நல்லவிபூதியினிடத்துள்ள மகிமையை வேதசிவாகமங்களே பிரசங்கிக்கும்,—அது அலால் ஒருவர் சொல்ல எளிது ஆமோ - அம்முத நூல்களல்லது மற்றொருவர்சொல்ல அஃதெளியதோ. எ-று.

மற்றொருவர் பிறர்துன்பத்தைத் தீர்க்கும்பொருட்டுத் தந்திருமேனி யில் விபூதிதரித்தவழி அதுதீருமாயினன்றே அங்ஙனந்தரிப்பர், தரியா தொழிந்தமையின் அதுதீராதென்பதும், தரித்துத் தீர்த்தலாற் சிவபெ ருமானொருவரே உலகிற்கு மெய்க்கடவுளென்பதும் இனிது பெறப்படு மாகலின், இஃதொன்றுமே பதிநிச்சயஞ்செய்தற்கமையும், அமையவே, இனி நின் குதர்க்கத்தை இவ்வளவினிறுத்தென்பார் புல்லறிவுகொண்டு பலபொத்துமொழிபுத்தா, நில்லவனலாலொருவர் நீறணிவதுண்டோ வென்றும், பவரோகத்துக்குப் பரமஔஷதமாகலின் நல்திருநீறென் றும், முற்றறிவுடைய முதல்வன் வாக்காகலின் அது சொல்லுதல் கூடுமென்பார் மறைதானே சொல்லுமென்றும், ஏனையர் சிற்றறிவையு டைய பசுக்களாதலின் அவ்வாற்சொல்லப்படுதல் கூடாதென்பார் ஒருவர் சொல்ல வெளிதாமோ என்றுங் கூறினர். மறை சாதியொருமை. பொத்து- பொய். மகிமை சுசியுடைமை முதலாயின. இவ்விருசெய்யுளானும் செய் யவொளிதங்குதிருமேனிதனினீறே, துய்யதெனவோவுமது தொல்லிறை புனைந்தான் என மூன்றுங் கூற்றின்மேல் ஆரோபித்த கற்பனுதோஷம் பரிகரிக்கப்பட்டது. (எஎ)

பாகமதி லுத்தமியை வைத்தல்பழு தென்றாய்
போகமுல குக்கருள் புரிந்தருள வென்றே
மாகமுகி லொத்தகுழன் மங்கையொ டிருந்தான்
யோகமுயிர் கட்குதவ யோகவுரு வானான்.

இ-ள்: பாகமதில் உத்தமியை வைத்தல் பழுது என்றாய் - நங் கடவுள் தம்பாகத்தே உமாதேவியை இருத்தியருளியது குற்றமென்று

கூறினாய்,—உலகுக்குப் போகம் புரிந்தருள என்றே மாக முகில் ஒத்த குழல் மங்கை ஒடு இருந்தான் - அபக்குவான்மாக்கட்குப் போகமூட்டித் தொலைத்துப் பாகம்வருவித்தற் பொருட்டென்றே ஆகாயத்தின்கட் சஞ்சரிக்கும் முகிலையொத்த கரியகூந்தலையுடைய உமாதேவியோடுகூடிப் போகவடிவாயிருந்தனர்,—உயிர்கட்கு யோகம் உதவ யோக உருவு ஆனான் - பக்குவான்மாக்கட்கு யோகமுத்தி யுதவுதற்பொருட்டு யோகவடிவாயிருந்தருளினார். எ-று.

நங்கடவுள் தம்பாகத்து உமாதேவியை இருத்தியருளியது தம்போக விச்சையின்பொருட்டன்று, போகவிச்சைதீர்ந்தவழியே பாகம்வர, முத்தி சித்திக்குமாகலின், அபக்குவான்மாக்கட்குப் போகத்தையூட்டித் தொலைத்துப் பாகம்வருவித்தற்பொருட்டே என்பது, பக்குவான்மாக்கட்கு யோகமுத்தி யுதவுதற்பொருட்டு யோகவடிவாயிருத்தலான் நிச்சயித்தறியப்படுமென்பார் மேற்பெறப்பட்டதனையே ஈண்டுத் தந்து யோகமுயிர்கட்குதவயோகவுருவானான் என்றும், அபக்குவான்மாக்களென்பார் உலகென்றும், பக்குவான்மாக்களென்பார் உயிர் என்றும் கூறினார். போகவிச்சைதீர்ந்தவழியே முத்தி சித்திக்குமென்பது, "பேசிலந்நாட்டினோரே, சேருவர்வீடும்போகந்தீர்ந்துழிச்சேர்தலாலே" என்பதனானுமறிக. என்றே-எனத்திருவுளங்கொண்டே. "போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார், யோகியாயிருந்துமுத்தியுதவுதலதுவுமோரார், வேகியானற்போற்செய்தவினையினைவீட்டலோரார், ஏகியாமூடரெல்லாமும்பரிலொருவனென்பார்" "முன்புலகின் றமுகிழ்மூலைக்கன்னியோ, டின்புறும் யோகியெழுபுவிக்கரசே" என்பனவு மிக்கருத்தேபற்றிவந்தன. அநாதியே தொடர்ந்த கன்மங்களனைத்தும் அனுபவித்தன்றித் தொலையாமையானும், அக்கன்மங்களை இயற்றுதற்கு இச்சையே முக்கியகருவி யாதலானும், அவ்விச்சைதான் பெரும்பான்மையும் காமரூபத்துள் அந்தர்ப்பவித்தலானும், அக்காமம் இவ்வுலகத்துப்பெண்களால் அடையப்படுதலானும், உலகானுக்கிரகசத்தியையே ஈண்டுமையாகிய பெண்ணாக ரூபீகரித்தமையானும், அச்சத்தியோடு கூடி உத்தியோகித்துப் போகமூர்த்தியும், அவ்வனுக்கிரகம் பெற்றபின்னர் அச்சத்திவேண்டப்படாமையின் அச்சத்தியினின்றும் பிரிந்து யோகமூர்த்தியும் ஆயினரென்பது நஞ்சைவத்துள்ளுறையென்க. இன்னோரன்ன சைவத்துள்ளுறையுண்மைகளை யுய்த்துணராமையிற் பரசமயிகள் தம்முட்பிணங்கித் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாங் கூறி இடர்ப்படுவாராயினரென்பது. ஈண்டுச் சத்தியென்பதற்கு வல்லமையென்பது பொருளன்றிப் பெண்ணென்பது பொருளன்று. இதனாற்பங்குபடுபெண்வடிவுபாரின்மிசையுண்டோ என்னும் நாலாங்கூற்றின்மேல் ஆரோபித்த கற்பனாதோஷம், அங்கமொருபாதிமடமாதினுருவானான, உங்களிறைநீர்துறவிலுற்றதவமன்றோ என்னும் அவாந்தர தோஷத்தோடும் பரிகரிக்கப்பட்டது. (௭௮)

அந்தர்கர முற்றதடி யன்றியறி யார்போ
லிந்தமொழி கற்றனை யினிப்பிறிது தேராய்
மைந்துபுனை சந்தவிடை யான்மலரின் மன்னுங்
கந்தமென நின்றநிலை கண்டிலைக ணில்லாய்.

இ—ள்: அந்தர் கரம் உற்ற தடி அன்றி அறியார் போல் - குருடர் தங்கையிலகப்பட்ட ஊன்றுகோலையல்லது பிறிதொன்றை அறியமாட்டார் அதுபோல,—இந்த மொழி கற்றனை - இவ்வாக்ஷேபங்களை மாத்திரம் வினவக்கற்றுக்கொண்டனை,—இனிப் பிறிது தேராய் - இனி இவ்வாக்ஷேபசமாதானமின்னதென் றறியமாட்டாய்,—கண் இல்லாய் - அறிவில்லாதவனே,—மைந்து புனை சந்த விடையான் மலரின் மன்னும் கந்தம் என நின்ற நிலை கண்டிலை - வலிமைபொருந்திய அழகிய விஷ்ணுவாகிய இடபத்தை வாகனமாகக்கொண்ட நஞ்சிவபிரான் மலரின்கண் மணம்போல உலகெங்கும் வியாபித்து மறைந்துநிற்கும் அகண்டபரிபூரணசச்சிதானந்த நிலையை நீ சிறிதுமறிந்தாயில்லை. எ-று.

அந்நிலையை நீ ஒருசிறிதறிதல்கூடுமாயின் இங்ஙனம் பிணங்கி வாதிககமாட்டாயென்பதுகருத்து. பிறிது சாதியொருமை. அந்தகரன்றி அந்தரென்பதும் குருடருக்கோர் பரியாயநாமமெனக. அது "அத்திருபுரியதனிலே வருடனரியுஞ்சென்றந்தன்முன்னர்ப், பத்தியினுலிறைஞ்சுதலும்" என்பதனுனு மறிக. கண்-அறிவு. அது "கடவுட்கண்ணே" என்புழிக் "கண் அறிவு" என்னும் பொழிப்புரையானுமறிக. கண்டிலையென்பதற்கேற்பக் கண் என்றதை ஞானக்கண்ணெனச் சொற்சித்திரம் படவைத்துரைக்க. காண்டல் ஈண்டறிதன்மேற்று. (௭௧)

ஆதிசிவ யோகிமிகு போகியரு வாகுஞ்
சோதிவெகு ரூபிசுக வாரிதுய ரில்லா
நீதிமணி மன்றதனி னின்றநிலை யல்லால்
யாதுமுடி யாதுபதம் யாரறிவ ரென்றார்.

இ—ள்: சிவயோகி - தக்ஷிணா மூர்த்தியும்,—மிகுபோகி - அர்த்தநாரீசுவரரும்,—அரு ஆகும் சோதி - விந்து நாத சத்தி சிவங்களும்,—வெகுரூபி - பிரம விஷ்ணு உருத்திர மகேசுவரர்களும்,—சுகவாரி - சதாசிவமூர்த்தியும்,—துயர் இல்லா நீதி - இந்நவந்தருபேதங்களையுங்கடந்த நிராமயநீதியுமாகிய,—ஆதி அதிசயநிலையையுடைய நங்கடவுள்,—மணி மன்றதனில் நின்ற நிலை அல்லால் - அழகிய கனகசபையின்கட் சகளீகரித்து நிற்கும்அநவரததாண்டவநிலையை ஒருசிறிதறிவதல்லது,—முடியாது பதம் யாது - அவருக்குத் திருமுடியாது திருவடியாது,—யார் அறிவர் என்றார் - அவரை யாவர்தாம் அறிய வல்லுநரென்று திருவாதவூரடிகள் சுவமதஸ்தாபனஞ்செய்தருளினர். எ-று.

ஆதி அதிசயம்; ஆகுபெயர். அதிசயநிலை உருவம் அருவம் ரூபா ரூபமென்னும் இம்மூத்திறவடிவங்களும் தம்முள் ஒன்றேடொன்று வேறு

பட்டதில்லை. இனி ஆதி முதற்கடவுளென்றுமாம். நீதி-நடத்துபவர். அது "நீதியாய் நியமாய்நியமாவதற், கேதிலாதவர்" என்பதனானுமறிக. துறவியாகிய தமக்கு உபதேசமூர்த்தியாதன்மேல் ஏற்புடைக் கடவுளுமாயிருத்தலின் யோகரூபியாகிய தக்ஷிணாமூர்த்தியை, வெகுரூபியென்பதனுட்பெறப்பட்ட மஹேசுவரவர்க்கத்தினின்றும் வேறுபிரித்தோதினார். யோகவடிவுக்குப் போகவடிவம் வேறுபட்டதாகலிற் போகியாகிய அர்த்தநாரீசுவரரையும் அவ்வாறு பிரித்தோதினார். புத்திமுத்தியிரண்டுந் தருதலிற் சதாசிவமூர்த்தியைச் சுகவாரியென்றார். நங்கடவுள் வாக்குமனாதீத கோசரப்பொருளாதலின், தமதுண்மைநிலையைத் தாமே அறிவிக்க நாம் அவரது திருவருளை முன்னிட்டுநின்று ஒருசிறிதறியின் அறிவதல்லது நம்மியல்பானறிய நாம் வல்லேமல்லேம் என்பது கருத்து. "சீலமோவுலகம்போலத்தெரிப்பரிதததனிற்குங், கோலமுமறிவாரில்லை" "பாதாளமேழினுங்கீழ்சொற் கழிவுபாதமலர், போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிபே, பேதையொருபாற்றிருமேனியொனறல்லன், வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலு, மோதவுலவாவொருதோழன்றொண்டருளன், கோதில்குலத்தரன்றன்கோயிற்பிணாப்பிள்ளைகா, ளேதவனூரேதவன்பேராருற்றாராயலா, ரேதவனைப்பாடும் பரிசேலோரம்பாவாய்" என்னும் திருவாக்குக்களும் இக்கருத்தே பற்றிவந்தன. இன்னும் இச்செய்யுட்கு, நங்கடவுள் சிவயோகியும், மிகுபோகியும், நிஷ்களரும், சகளரும், சுகோததியுமாயிருப்பவர் அவர், பிறவித்துயரை இலதாகச்செய்யும் பராசத்தியால் அதிட்டிக்கப்பட்ட கனகசபையில் நின்றருளும் நிலையை அறிவதல்லது அவருக்கு ஆதியுமந்தமுமில்லை அவரை யாவரறியவல்லுனர் என்றார் எனக் கோடலுமொன்றென்க. இப்பொருட்குத் துயரில்லாநீதி யென்பதனை "மலைவில்லார்" என்பதுபோலக்கொள்க. (அ0)

மைந்தர்மட வார்தமது வாக்கிறைவி நீயே
யிந்தவகை பொய்ம்மொழி யியம்புவதெ னென்றே
யந்தமில வாகிய வருங்கலைகள் வல்லார்
முந்துகலை மாதினை முனிந்திது மொழிந்தார்.

இ—ள்: அந்தம் இல ஆகிய அரும் கலைகள் வல்லார் - முடிவற்ற அரிய கலைஞானங்களில் வல்ல திருவாதவூரடிகள்,—மைந்தர் மடவார் தமது வாக்கு இறைவி நீயே - ஆடவர்மகளிரது வாக்கிலிருந்து வசனிப்பிக்கும் தலைவியாகிய நாமகணீயே,—இந்தவகை பொய் மொழி இயம்புவது என் என்றே கலை மாதினை முந்து முனிந்து - இந்தப் புத்தகுருமுதலிய புத்தர்களது வாக்கிலிருந்து இந்தப்பிரகாரம் பொய்வார்த்தைகளைக் கூறுவிப்பதென்னையென்று முன்னர்க் கோபித்து,— இது மொழிந்தார் - பின்னர் இதனைக் கூறியருளுவாராயினார். எ-று.

இயம்புவதென்னுமொருமை அத்தொழின்மேனின்றது. இயற்றும் வினைமுதலாகிய புத்தகுரு முதலாயினார் செய்யும் சிவநிந்தைக்குற்றம்

ஏவும் வினைமுதலாகிய நாமகண்மாட்டும் எய்துதல் ஒருகலையென வலியுறுத்துவார் அவ்வேவுதற்கருத்தாவை இயற்றுதற்கருத்தாவாக வைத்து மைந்தர்மடவார்தமதுவாக்கிறைவிநீயே, இந்தவகை பொய்ம்மொழியியம்புவதென்னென்றும், கலைமகளை முனிந்து கோடற்கேற்ற உரிமைவிசேடம் திருவருளானன்றி அமையாது கல்வித்திறத்தானு முண்டென்பது விளக்குவார் அந்தமிலவாகிய வருங்கலைகள் வல்லார். மூந்துகலைமாதினை முனிந்தென்றுங் கூறினார். சிவபெருமானைப் புகழ்வித்தற்குரிய நீயே இகழ்விப்பது நினக்குய்தியில் குற்றமாமென்றார் என்பது கருத்து. இதனை வருஞ்செய்யுளான் இனிதுவிளக்குப. (அக)

வேறு

தொக்கநான் மறைசொல் லுநீயிவை சொல்வ தென்கலை மாதராய்
தக்கன் வேள்வி யிலுன்ற னாசி தடிந்த தின்று மறப்பதே
முக்க ணானரு ளில்லை யென்றிடு மூகர் நாவை யகன்றுநீ
நக்க னார்திரு வாணை யேகென நாம டந்தையு மஞ்சினாள்.

இ—ள்: கலைமாதராய் - கலைமகளே,—தொக்க நால் மறை சொல்லும் நீ இவை சொல்வது என் - தொகுதியாகிய சதுர்வேதங்களைச் சிவபிரானே பரமபதியென்று பிரமாவின் வாக்கிலிருந்துண்மைகூறிய நீ ஈண்டதற்குமாறாக இப்புத்தகுரு முதலாயினார் வாக்கிலிருந்து அவர் பரமபதியல்லரென்றற்றொடக்கத்துப் பொய்ம்மொழிகளாகிய இன்னோரன்னவற்றைக் கற்பித்துக் கூறுகின்றதென்னையோ,—தக்கன் வேள்வியில் உன்றன் நாசி தடிந்தது இன்று மறப்பதே - சிவபிரானை நிந்தித்தியற்றிய தக்கனது யாகத்தில் உடம்பட்டிருந்த நின்மூக்கை வீரபத்திர ருத்திரர் துணித்த தண்டத்தை நீ இப்பொழுது மறந்துவிடலாமா,— முக்கணான் அருள் இல்லை என்றிடு மூகர் நாவை அகன்று நீ நக்கனார் திருவாணை ஏகென - சோமசூரியாக்கினிகளாகிய மூன்று திருக்கண்களையுடைய சிவபிரானது திருவருள் உலகிற்கில்லையென்று மறுக்கும் இப்பதிதர்களது நாக்கைவிட்டகன்று நீ சிவாஞ்ஞைப்படி போய்விடென்று கடிந்துகழற,—நாமடந்தையும் அஞ்சினாள் - அதற்கு நாமகளுமச்சங்கொண்டனள். எ-று.

விகாரத்தாற்றொக்க நான்மறையுமென்னும் முற்றும்மை எச்சமுமாகிச் சிவாகமங்களையுந் தழீயிற்று. ஏகாரம் எதிர்மறை. நாமடந்தையுமென்னும் உம்மை உயர்வுசிறப்பின்கண்வந்தது. முக்கணானருளில்லையென்பது தாற்பரியத்தாற் பதியல்லர் என்னும் பொருள்பயப்பநின்றது. தக்கனது யாகத்தில் நாசிதடியப் பெறுதலாகிய முன்னைநிகழ்ச்சியை ஈண்டெடுத்துக்காட்டி அநுபவத்தில்வைத்து வலியுறுத்தன்மேலும், நக்கனார் திருவாணையுந் தந்து அஞ்சுவித்தலின் நாமடந்தையும் அஞ்சினாளென்றும், அவ்வாணையது கடத்தற்கரிய விசேட ஆற்றலை யுணர்த்துதற்கு நக்கனாணையென்னாது நக்கனார்திருவாணையென்றும் கூறினார். மூகர்-எளியவர். இது எழுசீரடியாசிரியவிருத்தம். (அஉ)

அஞ்சி வஞ்சகர் நாவி னின்று மகன்ற பின்பவர் தாமெலா
நஞ்ச யின்றவர் போலொ டுங்கி நடுங்கி மூகர்க ளாயினர்
நெஞ்ச நொந்துபி னீழ நாட னிறைந்தி டுஞ்சிவ ஞானநூ
லெஞ்ச லின்றிய செல்வர் பாத மிறைஞ்சி நின்றிது கூறுவான்.

இ—ள்: அஞ்சி வஞ்சகர் நாவில் நின்றும் அகன்ற பின்பு - நாமகள் அதற்கச்சங்கொண்டு கபடிகளாகிய புத்தர்களது வாக்கினின்று நீங்கியபின்னர்,—அவர் எலாம் நஞ்சு அயின்றவர் போல் ஒடுங்கி நடுங்கி மூகர்கள் ஆயினர் - அப்புத்தர்களனைவரும் விஷத்தை உண்டவர்களைப்போல மனமொடுங்கிச் சரீரநடுங்கி ஊமைகளாயினார்,—பின் ஈழ நாடன் நெஞ்சம் நொந்து - அதன்பின்னர் ஈழமண்டலாதிபதி கண்டு மனம்வருந்தி,—நிறைந்திடும் சிவஞான நூல் எஞ்சல் இன்றிய செல்வர் பாதம் இறைஞ்சி நின்று இது கூறுவான் - திரிபதார்த்த லக்ஷணங்கணிறைந்த சிவஞான நூல்களில் ஒருசிறிதுங் குறைவற்ற அருட்செல்வராகிய திருவாதவூரடிகளது திருவடிகளை வணங்கி எழுந்துநின்று இதனை விண்ணப்பஞ்செய்வான். எ-று.

தாமென்பது கட்டுரைச்சுவைக்கண்வந்தது. அரசன் கபடசிந்தையிலனும் வாதத்திற் கந்நியனுமாகலின் ஊமையாதற் கேதுவின்மைகாட்டி விலக்குவார் கபடிகளும் வாதத்திற் கநந்நியர்களுமாகிய ஏனைப்புத்தர்களை ஈண்டு வஞ்சகரென்றார். அரசன் கபடசிந்தையிலனாதல் முன்னைநிகழ்ச்சி பற்றித் தெள்ளிதிற் றுணியப்படும். படுமாயின், நெஞ்சநொந்தனெற்றுக் கெனின், அது இந்நாள்காறும் உயிர்க்குறுதிபயவாத இப்பொய்ச்சமயத்தை மெய்ச்சமயமெனக்கொண்டே விசுவசித்துழன்றேனே என்னறிவிருந்தவாறென்னை என்னும் துக்கமிகுதி பற்றியென்க. தேசாபிமானம்பற்றி எனக்கோடலுமொன்று. ஈண்டுவஞ்சகரென்றது புத்தகுருவையும் உசாத்துணைவரையும் சீடரையுமென்க. வாதிற்றோற்றவர்களைக் கோறலேதண்டமெனச் சோழமகாராசாவான் மேல் விதிக்கப்பட்டமையின் ஈண்டபசெயமடைந்த புத்தர்கள் அதனை நினைந்து வருந்தி நடுங்கினரென்பார் நஞ்சயின்றவர்போலொடுங்கி நடுங்கி என்றார்.　(அ௯)

சொல்ல வல்லவர் மூகையாயினர்சொல்லிலாவொருமூகையாம்
வல்லி யென்புதல் விக்கு மூகை மறைந்து நல்லுரை கூடினு
னல்ல தொண்ட னுமக்கு நானென நாய னாரவ டன்னைநீ
யொல்லை யிங்கழை யென்ன வந்தவ ளுண்மை சேரவை நண்
[ணினள்.

இ—ள்: சொல்ல வல்லவர் மூகை ஆயினர் - பிறவிதொடுத்துப் பேசவல்ல புத்தர்கள் இதுபொழுது ஊமைகளாயினர்கள்,—சொல் இலா ஒரு மூகை ஆம் வல்லி என் புதல்விக்கு - பிறவிதொடுத்துப் பேசுஞ்சத்தியற்ற ஒரு ஊமைப்பெண்ணாகிய காமவல்லிபோலும் என்மகளுக்கு,—மூகை மறைந்து நல் உரை கூடினால் - அவ்வூமைத்தன்மை நீங்கி நல்ல

சொற்களைக் வசனிக்கும் வாக்குவன்மை கைகூடுமாயின்.—நான் உமக்கு நல்ல தொண்டன் என - தமியேன் தேவரீருக்கு நல்ல அடிமையென்று விண்ணப்பஞ்செய்ய.—நாயனர் அவடன்னே நீ இங்கு ஒல்லை அழை என்ன - திருவாதவூரடிகள் அப்புதல்வியை நீ இங்கே விரைவாக அழையென்று பணித்தருள.—அவள் (ஒல்லை) வந்து உண்மை சேர் அவை நண்ணினாள் - அப்பெண் பிதாவாகிய பௌத்தராசனால் விரைவாக அழைக்கப்பட்டு வந்து உண்மைபொருந்திய அச்சபையை அடைந்தாள். எ-று.

பேசுவாரை ஊமைகளாக இயற்றுதலினும் ஊமையைப் பேச இயற்றுதலே அருமையுடைத்தென்றுனென்பார் சொல்லவல்லவர் மூகையாயினர் சொல்லிலாவொருமூகையாம், வல்லியென்புதல்விக்குமூகைமறைந்துநல்லுரைகூடிஞல் என்றும். புத்தசமய விசுவாசஞ் சிறிதுமின்றித் சைவசமய விசுவாசியாவேனென்று கூறினுனென்பார் நல்லதொண்டனென்றும். ஏனைப்புத்தர் சைவராதற்கு இந்நிலைமைக்கண் உறுதிகூறமாட்டேனென்றுனென்பார் நான் என்றும், வாதத்தின்முடிவாகிய வேறலை இடையீடின்றிச் சபைக்குணர்த்த விரும்பினர் என்பார் ஒல்லையிங்கழையென்றும், மெய்ச்சமய நிச்சயஞ்செய்யும் சபையாகலின் உண்மைசேரவையென்றுங் கூறினர். நாயனர் தலைவரென்னும் பொருட்டு (௮௫)

நண்ணி யங்குமு னின்ற கன்னியை நன்மை யாளரு நாடியே
கண்ணினின்னருள் செய்துபின்னர்கரைத்துமுன்னரிருத்தியே
யுண்ண டுங்கியி ருந்த புத்த னுரைத்த தர்க்க மவைக்கெலாம்
தண்ண றுங்குழல் வல்லி நல்லுரைசாற்றுகென்றுவிளம்பினர்.

இ—ள்: அங்கு நண்ணி முன் நின்ற கன்னியை நன்மையாளரும் கண்ணின் நாடி இன் அருள் செய்து - அங்ஙனம்வந்து தமக்கெதிரே சிறிது சேய்மைக்கண்ணிற்கும் அக்கன்னிகையை எல்லாநன்மைகளையும் ஒருங்கு கடைப்பிடித்தொழுகும் அத்திருவாதவூரடிகளும் கிருபாகடாக்ஷ வீக்ஷணஞ்செய்து,—பின்னர் கரைத்து முன்னர் இருத்தியே - அதன்பின்னர் இங்ஙனம் வருகவென்று அதிசமீபத்தழைத்துத் தமதபிமுகத்திருக்க வைத்துக்கொண்டு,—தண் நறும் குழல் வல்லி - தண்ணிய நறியகூந்தலையுடைய பெண்ணே,—உள் நடுங்கி இருந்த புத்தன் உரைத்த தர்க்கம் அவைக்கெலாம் நல் உரை சாற்றுக என்று விளம்பினர் - அச்சத்தான் மனம்நடுங்கி ஈண்டிருக்கும் புத்தகுரு நங்கடவுண்மீது தோஷாரோபணை நிமித்தம் வினவிய தருக்கவினக்கட்கெல்லாம் இனி நீயே நியாயசல்லாபங்களைச் சொல்லுகவென்று பணித்தருளினர். எ-று.

கண்ணினடியென வேண்டாகூறினர் இந்நாட்டம் அக்கன்னிகையது அஞ்ஞானவிருத்திகளை அகற்றிச் சைவசமயப் பிரவேசமுந் தந்தமையிற் சக்ஷுர்தீக்ஷையாயிற்றென்னுந் தந்துணிபு முடித்தற் கென்க. முன்பு தம்மை வாதத்தில் வென்று பின் ஊமைகளாக்கினமையின், இனிச் சமயவாதவெற்றி அவரதேயென்னு மச்சத்தான் மனம் நடுங்கி இருந்த

புத்தகுருவென்பார் உண்ணடுங்கியிருந்த புத்தனென்றார். கரைந்தென் பது வலிந்துநின்றது. கிருபாகடாக்ஷவீக்ஷணம் - கிருபையை யுடைய கடைக்கண்ணினது பார்வை. சல்லாபம் வினாவும் விடையுங் கூடியசொல் அங்ஙனம் வருமாற்றைத் திருச்சாழலுட் காண்க. (அ௫)

பற்று நன்குணராத புத்தர் பகர்ந்த தர்க்க மவைக்கெலாங்
கற்று ணர்ந்தவர் போல மன்னிய கன்னி மாறுரை கூறினாண்
மற்று மங்கையர் சாழ லாம்விளை யாட லாக மகிழ்ச்சியா
லுற்ற தன்பொரு டன்னை வாசக மாக வுண்மைய ரோதினார்.

இ—ள்: பற்று நன்கு உணராத புத்தர் பகர்ந்த தர்க்கம் அவைக்கு எலாம் - தம்மாற் பற்றப்படும் சற்சமய மின்னதென் றிதுகாறு மறிந்து கொள்ளமாட்டாத புத்தர்கள் வினவிய தருக்க வினாக்கட்கெல்லாம்,—மன்னிய கன்னி கற்று உணர்ந்தவர்போல மாறு உரை கூறினாள் - ஈண்டும் நிலைபெற்ற அக்கன்னிகை வேதசிவாகமங்களை ஓதியுணர்ந்த மகா பண்டிதர்களைப்போல எதிருத்தரம் கூறினாள்.—உண்மையர் - அப்பொழுது மெய்யுணர்வையுடைய திருவாதவூரடிகள்.—அதன் பொருடன்னை உற்று - அவ்வினாவுத்தரங்களின் முடிந்தபொருளை எதிர்காலத்தவர்க்குணர்த்தும் படி திருவுளங்கொண்டு,—மற்றும் மங்கையர் சாழல் ஆம் விளையாடல் ஆக மகிழ்ச்சியால் வாசகமாக ஓதினார் - அக்கன்னியர்கள் தம்முட்கூடிக் கைகொட்டி விளையாடும் சாழல்விளையாட்டின் பயத்ததாக மனமகிழ்ச்சி யோடு "பூசுவதும்வெண்ணீறு" என்றெடுத்துத் திருச்சாழலென்னும் திருவாசகமாகப் பாடியருளினார். எ-று.

பற்றுதல்-அங்கீகரித்தல். நன்கு-ஆகுபெயர். வாதி புத்தகுரு ஒருவனேயாகலின், மேல் உண்ணடுங்கியிருந்த புத்தனென ஒருமைப்பாலாற் கூறினார்; ஈண்டு, அவற்கொருசாலை மாணாக்கராகிய உசாத்துணைவரையும் சீடவர்க்கத்தினரையும் அவ்வாதியோடுசேர்த்து, எத்திறத்துச் சகல வினாக்கட்கும் அக்கன்னிகை விடைகூறினாள் என்னும் பொருள்பயப்பப் புத்தரெனப் பன்மைப்பாலாற் கூறினாராகலிற் பால்வழுவின்மையுணர்க. அப்பெண் இராசகன்னிகையாயினும் மூகத்துவமுடைமையின் ஒருசிறிதுங் கற்றிலளென்பார் கற்றுணர்ந்தவர்போலென்றும், ஈண்டும் அக்கன்னிகையது புகழுடம்பு நிலைபெறுதல் விளக்குவார் மன்னியகன்னியென்றும், விடையானது விதிவினை மறைவினைகளின்வைத்து நோக்குமிடத் திருதிறப்படுமாகலின், அவற்றுள் இஃதுயாதோ என்னும் ஆசங்கை யகற்றுதற்கு மாறுரை என்றும், அக்கன்னிகையது வினாவுத்தரங்கள் வேதாகமங்களின் சாரமாய் அரும்பெரும் பயத்தனவாகலின், இவற்றை எதிர்காலத்துப் பக்குவான்மாக்கள்பொருட் டொருதலையா னுணர்த்தல்வேண்டுமெனத் திருவுளங்கொண்டு திருவாசகமாகப்பாடி வெளிப்படுத்தியருளினாரென்பார் மகிழ்ச்சியாலுற்றதன்பொருடன்னை வாசகமாகவுண்மையரோதினார் என்றுங் கூறினார். உறுதல்-குறித்தல். அது உற்றுக்கேட்டல், உற்று

நோக்கல் என்பனவற்றானுமறிக. இனிப் "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்புழிப் பற்றென்றது முத்திநெறியையாகலின் அதுபோல ஈண்டும் பற்றுநன்குணராத புத்தரென்பதற்கு முத்திநெறியை நன்குணராத புத்தரெனக்கோடலுமொன்று. (௮௬)

ஈழ மன்னனு மஞ்செ ழுத்து மியம்பி நீறு புனைந்துபின்
றாழ நின்றடி மைத்தி றந்தவ றாத தொண்டின னாயினான்
சோழ னும்புலி யூரின் மன்னிய தொன்மை யாளரு மம்பலம்
வாழ்க வென்று துதித்து நின்றெழில் வாத வூரரை யேத்தினார்.

இ—ள்: ஈழமன்னனும் அஞ்செழுத்தும் இயம்பி நீறு புனைந்து - ஈழமண்டலாதிபதியாகிய புத்தராசனும் தான் முன்செய்துகொண்ட வாக்குத்தத்தத்தின்படி சிவமூலமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்து விபூதியைத் தரித்து,—பின் தாழ நின்று அடிமைத்திறம் தவறாத தொண்டினன் ஆயினான் - அதன்பின்னர் நாயனாரை வணங்கிநின்றெத்திறத்தடிமைத்தொழில்களினும் வழுவாததாசத்துவ முடையனாயினான்,—சோழனும் புலியூரின் மன்னிய தொன்மையாளரும் அம்பலம் வாழ்க என்று துதித்து நின்று - சோழமண்டலாதிபதியாகிய தஞ்சைவ அரசனும் பழைய தில்லைவாழந்தணர்களும் பிறரும் பொன்னம்பலம் நீடூழி வாழ்கவென்று நெடிது வணங்கித்துதித்துப் பின்னர்,—எழில் வாதவூரரை ஏத்தினார்-பரமததிமிரபானுவாகிய திருவாதவூரடிகளை வணங்கித் துதித்தனர். எ-று.

ஈழமன்னனுமென்னுமும்மை இழிவுசிறப்போடிறந்தது மெதிரதுந் தழீஇய வெச்சமாய்நின்றது. அஞ்செழுத்துமென்னுமும்மை உயர்வுசிறப்போடு முற்றும்மை. சோழனும் தொன்மையாளருமென்னு மும்மைகள் எண்ணுப்பொருளோ டெச்சமுமாய் நின்றன. தாழ்ந்தென்னுஞ் செய்தெனெச்சம் தாழவெனத் திரிந்து நின்றது. தாழநின்றென்பதனைத் தாழ்ந்தென ஒரு சொல்லாகக் கோடலுமாம். அச்சம் முதலிய ஏதுக்களாலன்றி உண்மையன்பால் அடியனாயினனென்பார் அடிமைத்திறந்தவறாத தொண்டினனாயினனென்றும், சபாநாயகர் திருவாதவூரடிகள் வாயிலாகப் புத்தரை வாதில்வென்று தந்தமையின், சோழனும் புலியூருளாரும் அந்நன்றியை மறவாதவராய் முடிவின் முறையானே சபாநாயகரை முன்னும் திருவாதவூரடிகளைப் பின்னும் வணங்கித் துதித்தனரென்பார் சோழனும் புலியூரின் மன்னிய தொன்மையாளருமம்பலம், வாழ்கவென்று துதித்து நின்றெழில் வாதவூரரை யேத்தினாரென்றுங் கூறினார். எழிலென்றது ஈண்டுச் சமயவாதவெற்றியானாயதொருமெய்ப்பாட்டுப்பொலிவையென்க. (௮௭)

தக்க சீர்பயி லீழ மன்னுயர் சைவனா னெதிர் நின்றுநன்
றக்க மாலை புனைந்து நீறு மணிந்து தொண்டின னானபின்
றுக்க மாகிய சீவ ரத்துவ ராடை மூடு முடம்பினார்
மிக்க காதர மூகை தீர்ந்திட வேண்டு மென்று வணங்கினான்.

இ—ள்: தக்க சீர் பயில் ஈழ மன் உயர் சைவனார் எதிர் நின்று அக்கமாலை புனைந்து நீறும் அணிந்து நன்கு தொண்டினன் ஆன பின் - கொடையோடுபட்ட செல்வத்தையுடைய ஈழநாட்டரசன் மேற்கூறிய பிரகாரம் சைவாசாரியராகிய திருவாதவூரடிகளுக் கெதிரே நின்றுருத்திராக்கமணிமாலைகளையும் விபூதியையும் விதிப்படி தரித்து மிகவுந் திருத்தொண்டையுடைய சைவனாகியபின்னர்.—துவர் துக்கம் ஆகிய சீவர ஆடை மூடும் உடம்பினர். மிக்க காதர மூகை தீர்ந்திட வேண்டும் என்று வணங்கினன் - மருதந்துவர்தோய்த்த துக்கமயமாகிய சீவரவஸ்திரத்தினாலே போர்க்கப்படு முடம்பையுடைய இப்புத்தர்களெல்லாம் மிக அச்சத்தைத்தரும் மூகத்துவத்தினின்றும் நீங்கவேண்டுமென்று அதிவிநயத்தோடு பிரார்த்தித்து அவ்வரசன் வணங்கினன். எ-று.

சீர்-செல்வம். அதற்கு மற்றெவற்றினுந் தகுதி கொடையோடு படுதலேயாகலின் தக்கசீர் என்பதற் கிங்ஙனம் பொருளுரைக்கப்பட்டது. காதரம்-அச்சம். அது, "காதரமார்தருமனமேகமலமலரயனல்லை, சீதரமாயனுமல்லை சிவனுமனற்றிரளல்லன்" என்பதனானுமறிக. சைவாசாரிய மூர்த்தியென்பது விளக்குதற்கு உயர்சைவனார் என்றும். அவரையே தனக்குத் தீக்ஷாகுருவாகக்கொண்டு சந்நிதியினின்றும் விபூதி ருத்திராக்ஷங்களாகிய சிவசின்னங்களை விதிப்படி தரித்து உள்ளபடி சைவனாயினனென்பார் ஈழமன்னுயர்சைவனெதிர்நின்றுநன், கக்கமாலைபுனைந்து நீறுமணிந்து தொண்டினனானபின் என்றும். நரகில்வீழ்த்தும் புன்னெறியாகிய புத்தசமயிகட்குரியதாகலின் துக்கமாகிய சீவரத்துவராடை என்றும், நாமுமிவ்வாறு சிவநிந்தை சிவாகமநிந்தைகளைச் செய்வோமாயின் இங்ஙனமே ஊமைகளாகத் தண்டிக்கப்படுவோமெனத் தமக்கும் பிறர்க்கும் மிக அச்சத்தைத்தரும் ஊமைத்தன்மையென்பார், மிக்ககாதர மூகை என்றும், தானடைந்த பெரும்பேறொன்று தன்கீழ்வாழும் பிரசைகளும் அடைதற்பாலதேயாமாயின் அதனை அங்ஙனமடைவித்தல் உத்தமலக்கணஞ்சிறந்த அரசனுக்குக் கடப்பாடாகலின், அஃதடைவிப்பான் துக்கமாகிய சீவரத்துவராடை மூடுமுடம்பினர், மிக்ககாதரமூகைதீர்ந்திடவேண்டுமென்று வணங்கினனென்றுங் கூறினர். ஈழமென்பதிலங்கையை யுணர்த்துங்காற் சிங்களமென்பது பொருளன்று. பொன் என்பது பொருள். அதனைத் தக்ஷிண கைலாயபுராணத்துக்காண்க. ஈண்டுவிரிக்கின் மிகவும் விரியும்.

(௮௮)

இன்ன வாறருள் செய்கு வாயினி யெம்பி ரானென வன்புடன்
பொன்னி சூழ்வள நாட னும்புலி யூரு ளாரு மிறைஞ்சினார்
மன்னு சீர்புனை வாத வூரர் மகிழ்ந்து பார்வையை நல்கவே
மூன்ன ராக வணங்கி யேயவர் மூகை தீர்ந்திது கூறினார்.

இ—ள்: பொன்னி வளம் சூழ் நாடனும் புலியூர் உளாரும் - அப்பொழுது காவிரிநதி வளஞ்சுரக்கும் நாட்டையுடைய சோழமகாராசாவும்

தில்லைவாழந்தணர்களும் பிறரும்,—இனி எம்பிரான் இன்ன ஆறு அருள் செய்குவாய் என அன்பு உடன் இறைஞ்சினார் - இனி யெம்பெருமானே புத்தராசா வேண்டிக்கொள்கின்ற இந்தப்பிரகாரந் தேவரீர் திருவருள் செய்கவென்று அன்போடு வணங்கினார்,—மன்னு சீர்புனை வாதவூரர் மகிழ்ந்து பார்வையை நல்க - நிலைபெற்ற புகழையுடைய திருவாதவூரடிகள் அதற்கு மனமகிழ்ந்து கிருபாநோக்கஞ் செய்தருள,—அவர் மூகை தீர்ந்து முன்னர் ஆக வணங்கி இது கூறினார் - அவர்கண் மூகத்துவம் நீங்கப்பெற்றுச் சந்நிதியிலே வணங்கி இதனை விண்ணப்பஞ் செய்வாராயினார். எ-று.

ஆதாரமாகிய உலகம் பொன்றுந்துணையும் ஆதேயமாகிநிற்கும் பெரும் புகழென்பார் மன்னுசீரென்றார். வாதிலே தோற்றவரைக் கொல்வேனென்று முன் சோழராசா கூறினமையால் அக்கொலைக்குத் தப்புவித்தல் சோழராசனுக்கும் ஈண்டுடம்பாடாதல் தோன்றப் பொன்னிநாடனும் புலியூருளாருமிறைஞ்சினாரென்றார். பார்வைமாத்திரையான் மூகத்துவம் நீங்கிற்றென்பது கருத்து.

(௮௧)

மாசி லாத மனத்தி னாய்முன மன்னு தீவினை செய்தலா
லாசி லாதவெ ணீற ணிந்துந லஞ்செ ழுத்துரை செய்திலேம்
பூச லாகிய நீறு டன்புனை யக்க மாலைகள் காவியாந்
தூசு தாதுவ ராடை யைச்சுடு வென்று துன்றி வணங்கினார்.

இ—ள்: மாசு இலாத மனத்தினாய் - களங்கமற்ற மனத்தையுடைய சைவாசாரிய மூர்த்தியே,—முனம் மன்னு தீவினை செய்தலால் - நாம் பூர்வசன்மங்களிலே மிகத் தீவினைகள் செய்திருந்தமையினால்,—ஆசு இலாத வெண் நீறு அணிந்து நல் அஞ்செழுத்து உரை செய்திலேம் - குற்றமற்ற வெண்மையாகிய விபூதியைத்தரித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபிக்கப் பெற்றிலேம், ஆயினும்,—பூசல் ஆகிய நீறு உடன் புனை அக்க மாலைகள் காவி ஆம் தூசு தா - பூசத்தகும்விபூதியோடு புனையத்தகும் உருத்திராக்கமணி மாலைகளையும் காவிவஸ்திரத்தையு மெமக்களித் தந்தருளும்,—துவர் ஆடையைச் சுடு என்று துன்றி வணங்கினார் - மருதந்துவர் தோய்த்த எமது சீவர வஸ்திரங்களை அக்கினியிலிட்டுத் தகித்துவிடுமென்று மிகச் சமீபித்து வணங்கினார். எ-று.

நாம் சைவராய் இம்மைமறுமை இன்பங்களையும் முத்தியையும் பெறுதற்கண் ஒருசிறிதும் அழுக்காறுசெய்யாத சுத்தமனமுடைய சைவாசாரிய மூர்த்தி நீரே என்பார் மாசிலாதமனத்தினாய் என்றும், நாம் பூர்வசன்மங்களிலே பிராயச்சித்தங்களானீக்கிக் கோடற்கரிய பெரும் பாவங்களைச் செய்துகொண்டமையின் இம்மையிற் செய்வன தவிர்வன அறியப்பெற்றிலேமென்பார் முனமன்னுதீவினைசெய்தலா, லாசிலாதவெண்ணீறணிந்துநலஞ்செழுத்துரை செய்திலேமென்றும், ஆயினும், இங்ஙனம் தேவரீரது தரிசனவிசேடத்தாற் சைவராதற் கருகராயினேமென்றுரி

மையோடு வணங்கினரென்பார் பூசலாகிய நீறுடன் புனையக்கமாலைகள் காவியாந், தூசுகாதுவராடையைச்சுடுவென்றதுன்றி வணங்கினரென் றுங் கூறினர். இதனன் மாணிக்கவாசக சுவாமிகள் காவிவஸ்திரதாரி கள் என்பது தெள்ளிதிற்றுணியப் படுமெனக. (௬0)

கோட்ட மின்றிய வுண்மை யார்நகை கோட்டுகின்ற முகத்தரா யீட்டு முன்செய் தவத்தி னரிவ ரென்றுசிந்தையிலெண்ணியே
வாட்ட ருந்திரு நீற ணிந்து வயங் குருத்திர சாதனம்
பூட்டி யங்கவர் சீவ ரங்கிளர் பொங்கு தீக்கிரை யாக்கினர்.

இ—ள்: கோட்டம்இன்றிய உண்மையார் - எஞ்ஞான்றும் தன்னிலையினின்றுங் கோணுதலில்லாத மெய்யுணர்வையுடைய திருவாதவூரடிகள்,—இவர் முன் செய் ஈட்டு தவத்தினர் என்று சிந்தையில் எண்ணி-இவர்கள் பூர்வசன்மங்களிற் செய்தீட்டிய தவத்தையுடையவரென்று தந்திருவுள்ளத்திற் சிந்தித்து,—நகை கோட்டுகின்ற முகத்தர் ஆய்—அது பற்றித் திருப்புன்முறுவல் செய்கின்ற முகத்தையுடையவராய்,—வாட்டு அரும் திரு நீறு அணிந்து – விதிப்படி தரிப்பவரது மலவலியை வாட்டுகின்ற அரிய விபூதியைத் தந்திருக்கரத்தினல் அவர்கட்கணிந்து,-வயங்கு உருத்திர சாதனம் பூட்டி—விளங்காநின்ற உருத்திராக்கமணிமாலைகளை அவர்கட்குப் பூட்டி, – அங்கவர் சீவரம் கிளர் பொங்கு தீக்கு இரை ஆக்கினர் - அவரது மருதந்துவர்தோய்த்தசீவரவஸ்திரங்களைமிகவுஞ் சுவாலிக்கின்ற அக்கினிக் கிரையாகக் கொடுத்தருளினர். எ-று.

எண்ணிக் கோட்டுகின்ற முகத்தரென முடிக்க. முன்செய்தீட்டு தவமெனற்பாலது செய்யுணடைக்கேற்பப் பிரயோகிக்கும்வழி ஈட்டுமுன் செய்தவமெனப் பிரயோகிக்கப்பட்டது. வாட்டருந்திருநீறென்பதனை வாள்தரும் திருநீறெனக் கண்ணழித்து, ஞானத்தைத்தரும் விபூதியெனக் கோடலுமாம். உருத்திரசாதனம் உருத்திராக்ஷமணிமாலையாகிய சாதனம். சாதனம் சாதித்தற்கருவி. உருத்திரசாதனம் உருத்திரனைச் சாதிப்பதெனக் கோடலுமாம். தமது மெஞ்ஞான நிலையினின்று மெஞ்ஞான்று மொருசிறிதுந் தவறுதவரென்பார் கோட்டமின்றியவுண்மையாரென்றும், அவமதியானன்றி நன்குமதிக்கற்பாட்டான் நகைத்தனரென்பார் ஈட்டுமுன்செய்தவத்தினரென்று சிந்தையிலெண்ணியே நகைகோட்டுகின்ற முகத்தராயென்றுங் கூறினர். சீவரம் என்புழிச் சீ - நரகம். இவரம்-கேடு. வருமொழிமுதலிகரம் புணர்ச்சிவிகாரத்தாற்கெட்டுச் சீவரமெனமுடிந்தது. தன்னையுடுப்பவரது நரகயாதனையைக் கெடுப்பதென்பதவர்கருத்தென்க. கோட்டமின்றிய நெஞ்சினர் எனவும்பாடம். இப்பாடத்திற்குக் கோட்டமென்பதற்கு மாறுபாடெனப் பொருள்கொள்க. அவர் கேட்டவரம் மூன்றனுள் ஒன்றைமாத்திரம் கொடுத்திலர் என்பது தாற்பரியம். (௬௧)

பொய்யி லாவரு ளைய ரும்புலி யூரு ளார்களு முன்புசேர்
மைய லாகிய வேட மின்றி வயங்கு நீறணி வார்களுந்
துய்ய காவிரி நாட னுந்துக டீரு மீழர்த மன்னனுஞ்
செய்ய மாமணி மன்று ளார்திரு முன்பு சென்று வணங்கினார்.

இ—ள்: பொய் இலா அருள் ஐயரும்-மெய்ம்மையாகிய சிவகாருண்ணியத்தையுடைய திருவாதவூரடிகளும்,—புலியூர் உளார்களும் - தில்லைவாழந்தணர்களும் பிறரும்,—முன்பு சேர் மையல் ஆகிய வேடம் இன்றி வயங்கு நீறு அணிவார்களும் - முன்னரேபொருந்திய மயக்கத்தைத் தரும் புத்தசமயவேடத்தை யொழித்துப் பிரகாசிக்கின்ற விபூதியையணிந்த அந்தியசைவர்களும்,—துய்யகாவிரி நாடனும் - சுத்தமாகிய காவிரிநதி வளஞ்சுரக்கும் நாட்டையுடைய சோழமகாராசாவும்,—துகள் தீரும் ஈழர்தம் மன்னனும் - புத்தசமயானுசாரமாகிய குற்றமற்ற ஈழதேயத்தரசனும்,—செய்ய மாமணி மன்றுளார் திருமுன்பு சென்று வணங்கினார் - அழகிய மாணிக்கமணிகொண்டு குயிற்றிய சபையையுடைய நங்கடவுளை அவரது சந்நிதியிற் சென்று வணங்கினார்கள். எ—று.

பௌத்தர்களைக் கபடின்றி உள்ளபடி சைவர்களாக்கிய திருவருளையுடையவராகலிற் பொய்யிலாவருளையரென்றும், இந்திரனது பூங்காவின் பொருட்டு அகத்தியமுனிவரது கமண்டலத்தினின்றும் விநாயகக்கடவுளாற் கவிழ்க்கப்பட்டு விரிந்தநதி வளஞ்சுரக்கும் நாடாகலின் துய்யகாவிரிநாடென்றும், வாதநிகழ்ச்சிக் கிடனுகிய புலீச்சரத்தினின்றும் கனகசபையையடைந்து சபாநாயகரை நேரே தரிசித்துவணங்கினாராகலிற் செய்யமாமணிமன்றுளார்திருமுன்புசென்று வணங்கினாரென்றுங்கூறினார். ஈழர் - ஈழதேயத்தவர். ஈழம் - பொன். இலங்கை மேருகிரியின் முடியாதலான் அதனை ஈழமென்றார். அது, "சிலையுடைவடவரைகுலைய நேர்ந்தனன், றலையெனவிளங்கிய தபனியப்பெரு, மலையினை மும்முடி வாங்கியோங்குநீ, ரலைகடலிட்டனனனுமன்றுதையே" "ஏழுநூறுயோசனை யகலமிட்டகீ, மூழநூறுயோசனை" என்பனவற்றானு மறிக. (௬௨)

பொன்று கின்றதுமுத்தி யென்றுபுகன்றுநின்றுழல் புத்தர்தா
மன்று கண்டு வணங்கி யன்புடன் மாபெ ருந்தவ ராவதே
யின்றி தன்பொரு ளாவ தென்பல வாறுடன்கடன் மீதிலே
சென்ற தண்புன லல்ல ரோவுயர்தில்லையெல்லையை நண்ணினார்.

இ—ள்: பொன்றுகின்றது முத்தி என்று புகன்று நின்று உழல் புத்தர்தாம் மன்று கண்டு அன்பு உடன் வணங்கி மா பெரும் தவர் ஆவதே - பஞ்சகந்தங்களு முற்றக்கெடுகின்றதனையே முத்தியென்று கூறி நின்றுழலும் புத்தர்கடா மிங்ஙனம் சுத்தமாயாரூபமாகிய கனகசபையைத் தரிசித் தன்போடுவணங்கி மிகவும் பெரிய சைவர்களாகியதென்னே

போற்புதம்.—இதன் பொருள் ஆவது என் - இதனதுதாற்பரியமென்னை யெனின்.—உயர் தில்லை எல்லையை நண்ணினர் - உயர்ந்த தில்லைமாநகரினெல்லையையடைந்தவர்கள்.—பல ஆறு உடன் கடல் மீதில் சென்ற தண் புனல் அல்லரோ - பலநதிகளாய் ஒருசேரச் சமுத்திரத்தின்கட்சென்ற நீரினியல்பையுடையரல்லரோ. எ - று.

பலநதிகளாகிச் சமுத்திரத்தின்கட்சென்ற ஆற்றுநீர் அந்நீரோடு சேர்ந்து தன்னியல்புமுழுதும் கெட்டு அச்சமுத்திரநீரேயாய்ப் பின் மீளாதவாறுபோலத் தில்லைமாநகரினெல்லையையடைந்த புத்தர்கள் அந்நகரின்கணுள்ள சைவர்களோடு சேர்ந்து தம்மியல்புமுழுதும் கெட்டுச் சைவர்களாய்ப் பின் புத்தசமயத்தில் மீளாராயினார்களாகலின், இதுவே அதன்றாற்பரியமென்பார் இதன்பொருளாவதென் பலவாறுடன் கடன் மீதிலே சென்ற தண்புனலல்லரோ வுயர்தில்லை யெல்லையைநண்ணினார் என்றார். தில்லைத்தலவிசேடம் மூர்த்திவிசேடம் தீர்த்தவிசேடங்கள் கூறியவாறென்பது நுண்ணிதினுணர்க. எனினென்பது விகாரத்தாற்றொக்கது. "பன்னிறங்களவைகாட்டும்படிகம்போலுள்ளம் பலபுலன்களிறங்காட்டும் பரிசுபார்த்திட். டந்நிறங்களென்னிறமன்றென்று தன்றனெழில்நிறங் கண்டருளினாலந்நிறத்தின்வேறாய்ப், பொய்ந்நிறமைம்புலனிறங்கள் பொய்யென மெய்கண்டான் பொருந்திடுவன் சிவத்திதினொடும்போதான் பின்னர், முன்னிறை நீர்சிறை முறியமுடுகியோடி முந்நீர் சேர்ந்தந்நீராய்ப் பின்னீங்காமுறைபோல்" என்பதனானுமறிக. (௩௯)

மன்ற கன்றபின் யாவ ருஞ்செல வாத வூருறை வள்ளலார்
சென்றி லங்கு திருப்பு லீசர் சிறந்த பாதம் வணங்கியே
நன்றி துன்றிய வங்கண் வைகினர் நல்ல தில்லையு ளாரெலா
மென்று மிங்கிரு மையர் நீரினி யென்று தம்மனை யேகினார்.

இ—ள்: மன்று அகன்றபின் யாவரும் செல - கனகசபையை விட்டு நீங்கியபின்னர் மற்றையனைவரும் தத்தமுறைவிடங்கட்குச் செல்ல,—வாதவூர் உறை வள்ளலார் - வரையாதுகொடுக்கும் உதாரகுணசீலராகிய திருவாதவூரடிகள்,—சென்று இலங்கு திருப்புலீசர் சிறந்த பாதம் வணங்கி - மறித்துஞ் சென்று விளங்காநின்ற திருப்புலீச்சரத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுடைய அழகிய திருவடிகளை வணங்கி,—நன்றி துன்றிய அங்கண் வைகினர் - தமக்கும் பிறர்க்கும் நன்மைமிகும்படி அங்கே சிவயோகத்தில் வீற்றிருந்தருளினார்,—நல்ல தில்லையுளார் எலாம் ஐயர் நீர் இனி என்றும் இங்கு இரும் என்று தம்மனை ஏகினார் - நல்ல தில்லைவாழந்தணர்களும் பிறரும் சுவாமீ நீர் இனி வில்வாரணியத்துக்குச்செல்லாது எம்பொருட்டெப்பொழுதுமிங்கே தேவரீர் சிவயோகம் பயின்றிருமென்று கூறித் தம்மில்லங்களிற் சென்றார். எ-று.

துன்றிய என்பது செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். பிறக்க முத்திதருந் திருவாரூரினும் இறக்க முத்திதருங் காசியினும் ஒருகாற்றரிசிக்க முத்திதருந்தில்லை சிறந்ததென்பார் நல்லதில்லை என்றார். இச்செய்யுளால் திருவாதவூரடிகள் சிவஞான முதிர்ச்சியுடையவராயினாராகலின் அரசன் முதலாயினோர் வேண்டிக்கொண்டபிரகாரம் வில்வாரணியத்துக்குச் செல்லாது தில்லையிலே வாசஞ்செய்துகொண்டிருந்தார் என்பதூஉம், இதன்பின்னிவ்வடிகண்மாட்டு நிகழ்ந்த நிகழ்ச்சிகளெல்லாம் தில்லையை யிடமாகக்கொண்டே நிகழ்ந்தன என்பதூஉம் பெற்றாம். (௬௪)

பொன்னி நாடனு மீழநாடு புரந்த மன்னனு முன்புசேர்
மன்னு தீவினை தீர மன்று வணங்கி நீறணி வார்களும்
முன்ன ராக விறைஞ்சி ஞான முதிர்ந்த கோனைய கன்றுபோய்
மின்னு மாமணி மாட மாளிகை தம்மி லன்புடன் மேவினார்.

இ—ள்: பொன்னி நாடனும் - காவிரிநதி வளஞ்சுரக்கும் நாட்டையுடைய சோழமகாராசாவும்,—ஈழநாடு புரந்த மன்னனும் - ஈழதேயத்தரசனும்,—முன்பு சேர் மன்னு தீவினை தீர மன்று வணங்கி நீறு அணிவார்களும் - பூர்வசன்மங்களில் ஆர்ச்சித்த நிலைபெற்ற பாவம் நீங்கக் கனகசபையைத் தரிசித்து வணங்கி விபூதியை அணிந்த புத்தர்களாகிய அந்நியசைவர்களும்,—ஞானம் முதிர்ந்த கோனை முன்னர் ஆக இறைஞ்சி அகன்று போய் - சிவஞானத்தின்மிக்க சமயகுரவராகிய திருவாதவூரடிகளைச் சந்நிதியில் வணங்கி அநுமதிபெற்றவ்விடத்தைவிட்டகன்றுபோய்,—மின்னு மா மணி மாட மாளிகை தம்மில் அன்பு உடன் மேவினார் - பிரகாசிக்கின்ற ரத்தினங்கள் குயிற்றிய மேன்மாடங்களினும் திருமாளிகைகளினும் குருலிங்கசங்கமபத்தியோடிருந்தனர். எ-று.

திருவாதவூரடிகளது சகவாசத்தாற் குருலிங்கசங்கமங்களில் விசேடபத்தி செய்திருந்தனரென்பார் ஞானமுதிர்ந்த கோனையகன்றுபோய் அன்புடன்மேவினார் என்றார். அன்புடனெனப் பொதுப்படக் கூறுதலாற் குருலிங்கசங்கமங்களிலென்பது பெற்றாம். இதனாலே திருவாதவூரடிகள் புத்தரைவாதில்வென்றபின்னர்த் திருப்புலீச்சரத்திலே சிவயோகம் பயின்றிருப்பச் சோழமகாராசாவும், ஈழதேயத்தரசனும், அந்நியசைவர்களும், அவரிடத் தனுமதிபெற்றுக்கொண்டு சென்று சிதம்பராலயவீதியிலே யுள்ள சோழமகாராசாவினது மாடமாளிகைகளில் அவ்வரசனுபசரிக்கத் தங்கினாரென்பது பெறப்பட்டது. (௬௫)

புன்மை வேட மகன்று நீறு புனைந்து ளார்களு மன்னனுந்
தொன்மை யார்திரு வாத வூரர் துலங்கு பாதம் வணங்கியே
நன்மை யார்மணி மன்றி றைஞ்சிநயந்து நெஞ்சினில்வஞ்சமாம்
வன்மை யானதொ ழிந்து தில்லைத மன்னு மூரென வைகினார்.

இ—ள்: புன்மை வேடம் அகன்று நீறு புனைந்துளார்களும் மன்னனும் - புல்லிய புத்தசமயவேடத்தைக் களைந்து விபூதியைத்தரித்த அந்தியசைவர்களும், அவர்கட்கரசனும்,—தொன்மை ஆர் திரு வாதஊரர் துலங்கு பாதம் வணங்கி - பழைய திருவாதவூரடிகளது விளங்காநின்ற திருவடிகளை நாடோறும் போய் முன்னர்த் தரிசித்து வணங்கி,—நன்மை ஆர் மணி மன்று இறைஞ்சி - அதன்பின்னர் நன்மைபொருந்திய அழகிய கனகசபையையடைந்து சபாநாயகரைத் தரிசித்துவணங்கி.—நெஞ்சினில் வஞ்சம் ஆம் வன்மை ஆனது ஒழிந்து - அவ்வழிபாடுவாயிலாகத் தம்மனத்தின்கட் புத்தசமய வாதனுபலம் பற்றியுள்ள கபடமாகிய முரண் தானே நீங்கப்பெற்று,—தில்லை நயந்து தம் மன்னும் ஊர் என வைகினார் - தில்லைமாநகரை விரும்பித் தமது சனனவூராகக்கொண்டு அங்கிருந்தனர். எ - று.

தொன்மை திருவாதவூரை விசேடித்துநின்றது. தம்மை யுள்ளபடி விசுவசித்து வழிபடுமன்பர்களது இருதயத்தின்கண் விளங்கித் தோன்றும் பாதங்களாகலிற் றுலங்குபாதமென்றும், சம்சாரவழுக்கறுக்கும் புண்ணியசபை யாதலின் நன்மையார் மணிமன்றென்றுங் கூறினார். குருவாகலிற் றிருவாதவூரடிகளை முன்னும், அவராற் காட்டப்படுங் கடவுளாகலிற் சபாநாயகரைப் பின்னும் வணங்கினாரென்க. (௧௬)

புத்தரை வாதில்வென்ற சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம், ௫௧௦.

உ

திருவடிபெற்ற சருக்கம்.

உடம்படப் பொய்யை மெய்யா வுரைத்திடு சமய மென்னுந்
தடங்கயத் திரளை வெல்லுந் தனிப்பெரு மடங்க லன்னார்
நெடுந்தவப் பெருமை யாலே நினைப்பருஞ் சைவ ஞான
மிடம்படப் புகல்வார் பின்ன ரெய்திய செய்தி சொல்வாம்.

இ—ள்: பொய்யை மெய் ஆ உடம்பட உரைத்திடு சமயம் என்னும் தடம் கயத் திரளைத் தனி வெல்லும் பெரு மடங்கல் அன்னார் - தமது பொய்ச்சமயத்தை நமது மெய்ச்சமயம்போலத் தார்க்கிகர்களும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வாதிக்கவல்ல பௌத்தசமயமாகிய பெரியகாட்டின்கண் வாழும் புத்தர்களாகிய யானைக்கூட்டங்களைத் தனிநின்று வென்ற ஒரு சிங்கவேறுபோல்பவரும்,—நெடும் தவப் பெருமையாலே

நினைப்பு அரும் சைவஞானம் இடம்படப் புகல்வார் - அனந்தகோடி பூர்வசன்மங்களிற் செய்துகொண்ட சிவபுண்ணியவிசேடத்தினாலே நம்மனோர் இவ்வியல்பிற்றென்று நினைத்தற்குமரிய சிவஞானத்தை அத்தியற்புத அதிமதுர சுத்தச்செந்தமிழ் மொழியினாலே திருவாசகமாக அகல விரித்துப் பிரசங்கிக்குஞ் சமயகுரவருமாகிய திருவாதவூரடிகள்,—பின்னர் - இங்ஙனம் புத்தரை வாதில் வென்றருளியபின்னர்,—எய்தியசெய்தி சொல்வாம் - சபாநாயகர்து திருவடிபெற்ற சரித்திரத்தை இனியாங் கூறுவாம். எ-று.

வாய், மெய், தடம் என்பன ஆகுபெயர். தடமென்பதனை இயற்பெயரெனக்கொண்டு மலைப்பக்கமென்றலுமொன்று. தடக்கையமென்பாலூது மெலிந்துநின்றது. ஆக்கம் உவமப்பொருட்கண் வந்தது. தனி வெல்லுமடங்கல், பெருமடங்கலெனத் தனித்தனி கூட்டுக. ஒருவரே பலரை வென்றார் என்பார் தடங்கயத்திரளை வெல்லுந்தனிப்பெரு மடங்கலன்னார் என்றும், இவ்வொருபிறப்பிற்செய்த தவந்தானே அமையாதென்பார் நெடுந்தவப்பெருமையாலென்றும், திருவடி ஞானமாகலின் அதனை நினைப்பருஞ்சைவஞானமென்றும், சூக்குமமாகிய அச்சிவஞானத்தையே நம்போலிகளும் ஒருவாறுணரும்வண்ணம் திருவாசகமாக மிகவும் விரித்துப் பாடியருளினர் என்பார் சைவஞானமிடம்படப் புகல்வார் என்றுங் கூறினர். திருவடிபெற்றசருக்கம் என்புழி அடியென்றது சித்தாந்தசைவ சுத்தாத்துவித முத்தியையாகலின் அஃதீண்டுபசாரத்தின் பாற்படுமென்க. சைவஞான மிடம்படப்புகல்வார் என்பதற்குத் தாம் முன்னுபதேசிக்கப்பெற்ற சிவஞானபோதப்பொருளைப் பின்னர் உலகங்கடைத்தேறும்பொருட்டுத் திருவாசகமாக விரித்துரைப்பவர் என்றலுமொன்று, சிவஞானபோதப்பொருள் திருவாசகத்து ளடங்கியிருத்தலை, "வேதம்பசு வதன்பால் மெய்யாகம நால்வ, ரோதுந்தமி ழதனி னுள்ளுறுநெய் - போதமிகு, நெய்யினுறு சுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான், செய்ததமிழ் நூலின் றிறம்" என்பதனாலுமறிக. (க)

ஆடல்வெம் படையி னாட்சி யெழுச்சியோ டச்சோ வென்னும்
பாடலுந் தெய்வ லோக யாத்திரைப் பத்து மோதித்
தேடலுந் திகைப்பு மீளத் தெளிதலுஞ் சிறுமை கொண்டு
வாடலுங் களிப்பு மில்லா நற்பெரு வாழ்வி லானார்.

இ—ள்: ஆடல் வெம் படையின் ஆட்சி எழுச்சி ஓடு - திருவாதவூரடிகள் விரும்பத்தகும் ஞானவெற்றியினையுடைய, "கண்களிரண்டுமவன்கழல் கண்டுகளிப்பனவாகாதே" என்பதை முதலாகவுடைய திருப்படையாட்சியும், "ஞானவாளேந்துமையர் நாதப்பறையறைமின்" என்பதை முதலாகவுடைய திருப்படையெழுச்சியும்,—அச்சோ என்னும் பாடலுடம் - "அச்சோ" என்பதனை இறுதியாகவும், "முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனை" என்பதை முதலாகவுடைய அச்சோப்

பதிகமும்,—தெய்வலோக யாத்திரைப்பத்தும் ஓதி—“பூவார்சென்னிமன்னனெம்புயங்கப் பெருமான்சிறியோமை” என்பதை முதலாகவுடைய சிவலோக யாத்திரைப்பத்துமாகிய திருவாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளி,—தேடலும் திகைப்பும் மீளத் தெளிதலும் சிறுமைகொண்டு - தமது அகதரிசனத்துக் கப்படும் அறிவுருவாகிய சிவத்தை ஓரொருகான்மறந்துதேடுதலும் தேடியவழிக் காணாது திகைத்தலும் பின்பு கண்டு தெளிதலுமாகிய ஆன்மபோதச்சேட்டைகளென்னும் சிறுமைகளைப் பொருந்தி,—வாடலும் களிப்பும் இல்லா நல்பெருவாழ்வில் ஆனார் - அவற்றாற்றுன்புறுதலுமின்புறுதலுமாகிய சீவோபாதிகளில்லாத சதாதரிசனமெனப்படும் நல்ல பேரின்பவாழ்வையுடைய சிவஞானச்செல்வராயினார். எ-று.

வெம்மென்பதற்குப் படையென்பதற்கேற்ப வெவ்வியவென்னவும் பொருள்கூறுக. படையென்பது எழுச்சியோடுங் கூட்டப்பட்டது. தேடலுந் திகைப்பும்பற்றி வாடலும், மீளத்தெளிதல்பற்றிக் களித்தலுமில்லாதவாழ்வென்க. தேடுதன்முதலிய வைந்துமில்லாத வாழ்வென்றலுமொன்று. ஓதி, ஆனார் எனக் காரணகாரிய முறையாகவைத்து முடித்தலின், இத்திருவாசகங்களை ஓதி இச்சீவோபாதிகளை நீங்கினார் என்பதுபெற்றாம். “அறியாமையறிவகற்றி யறிவினுள்ளேயறிவுதனையருளினாலறியாதேயறிந்து, குறியாதேகுறித்தந்தக்கரணங்களோடுங்கூடாதேவாடாதேகுழைந்திருப்பையாகிற், பிறியாதசிவன்றானேபிறிந்துதோன்றிப்பிரபஞ்சபேதமெலாந்தானாய்த்தோன்றி, நெறியாலேயிவையெல்லா மல்லவாகி நின்றென்றுந்தோன்றிடுவனிராதாரனாயே” என்பதூஉம் இக்கருத்தேபற்றிவந்தது. (உ)

போற்றுமஞ் செழுத்து நீறும் புவிமிசை விளங்கத் துன்ப
மாற்றிடுஞ் சைவ ஞான வாசகம் புகல வந்தார்
சீற்றமில் புலியும் பாம்புஞ் சீர்பெற விளங்கு மன்றி
லேற்றினன் புலியூர் மேலைச் சிவபத மென்று கண்டார்.

இ—ள்: போற்றும் அஞ்செழுத்தும் நீறும் புவிமிசை விளங்க-விதிப்படி அன்போடு செபிப்பவரையும் தரிப்பவரையுஞ் சனனசாகரத்தமிழ்ந்தாது காக்கும் சிவமூலமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமும் சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களும் இந்நிலவுலகெங்கும் பிரகாசிக்கும்படி,—துன்பம் மாற்றிடும் சைவ ஞானவாசகம் புகல வந்தார் - ஆன்மாக்கட்குப் பாகம்வருவித்துப் பிறவித்துன்பத்தைத் தப்பாது நீக்கவல்ல சிவஞானத்தையே பொருளாகவுடைய திருவாசகத்தைப் பாடியருளும்வண்ணந் திருவவதாரஞ்செய்தருளிய சமயகுரவராகிய திருவாதவூரடிகள்,—சீற்றம் இல் புலியும் பாம்பும் சீர் பெற விளங்கும் மன்றில் ஏற்றினன் புலியூர் - வியாக்கிரபாதமுனிவரும் பதஞ்சலிமுனிவரும் பாமுத்திபெற்றுய்யும்பொருட்டுப் பராசத்தியால் அதிட்டிக்கப்பட்ட சுத்த மாயாமயமாய் விளங்கும் கனகசபையையுடைய சிவபெருமானது சிதம்பரத்தை,—மே

லேச் சிவபதம் என்று கண்டார் - எவ்வுலகங்கட்கு மேலாகிய சிவலோக மென்று தம்மநுபூதியிற் கண்டு தெளிந்தார். எ - று.

உருத்திராக்ஷம் உபலக்கணத்தான் வருவிக்கப்பட்டது. விளங்கப், புகல, வந்தார் எனக் காரியகாரண முறையானே ஒருதொடராகவைத்து முடிக்க. விளங்கவந்தார் புகலவந்தார் எனத் தனித்தனி முடித்தலுமொன்று. மாற்றிடும் வாசகமென்க. சீற்றமில்புலியும்பாம்புமென்பன பிறிதினியைபுநீக்கிய விசேடணமாய் நடைமலை என்பதுபோனின்ற குறிப்புமொழிகள். விலங்கினுட் புலியும் ஊர்வனவற்றுட் பாம்பும் மிக்கசீற்றத்தையுடையனவாகலின் இவ்வாறுகூறினார். சீர் ஈண்டு முத்தி. மன்றிலேற்றினன் புலியூர் என்புழி ஏற்றினனென்ப திடைப்பிறவரல். போற்றல் துதித்தலுமாம். அஞ்செழுத்தும் நீறும் புவிமிசைவிளக்குதற்குக்காரணம் திருவாசகம் புகன்றருளினமையும், அதற்குக் காரணம் திருவவதாரமுமாமென்பார் போற்றுமஞ்செழுத்துநீறும் புவிமிசைவிளக்கத்துன்ப, மாற்றிடுஞ்சைவஞானவாசகம் புகலவந்தாரென்றும், சிதம்பரம் பூலோக சிவலோகமென்ப தநுபூதியில்வைத்து நிச்சயித்தறிந்தாரென்பார் புலியூர் மேலைச்சிவபதமென்று கண்டார் என்றுங் கூறினார். (௩)

அய்யரங் குறையு நாளி லாடக மன்றி லாடு
மெய்யர்தங் கருணை யாலோர் வேதிய வடிவங் கொண்டு
துய்யமுப் புரிநூன் மார்புந் துலங்குபுத் தகமுந் தோன்றச்
செய்யமென் பாத நோவச் சென்றுமுன் னாக நின்றார்.

இ—ள்: அய்யர் அங்கு உறையும் நாளில் - திருவாதவூரடிகள் அங்ஙனம் சிவயோகஞ்செய்துகொண்டிருக்குங் காலத்தில் ஒருநாள்,— ஆடக மன்றில் ஆடும் மெய்யர் - கனகசபையிலே பஞ்சகிருத்திய நிருத்தஞ் செய்தருளும் அருட்டிருமேனியையுடைய சபாநாயகர்,—தம்கருணையால் - தந்திருவுள்ளத்தெழுகிழ்த்த கைம்மாறற்ற பெருங்கருணைத்திறத்தினாலே,—மார்பு துய்ய முப்புரிநூலும் துலங்கு புத்தகமும் தோன்ற ஓர் வேதியவடிவம் கொண்டு - திருமார்பிலே சுத்தமாகிய உபவீதமும் திருக்கரத்திலே வெண்மைவிளங்கும் புத்தகமும் வெளிப்படுமாறோர் பிராமண வடிவங்கொண்டு,—செய்ய மெல் பாதம் நோவச் சென்று முன் ஆக நின்றார் - சிவந்த மெல்லிய திருவடிகள் கன்றிவருந்த நடந்து திருப்புலீச்சரத்திற் சென்று அவ்வடிகட்கெதிராக நின்றருளினார். எ - று.

அய்யரென்பது சமனுக்கரம். அது "போலியெழுத்தைப் போற்றுதல்கடனே" என்பதனாற்கொள்க. மார்புமென்னுமும்மை மாற்றிப் பொருள்கொள்ளப்பட்டது. தோன்றக்கொண்டு, நோவச்சென்று நின்றாரெனமுடிக்க. பிரமதேஜஸ்ஸைத் தருவதாகலிற் றுய்யமுப்புரிநூலென்றும், எழுதி மைக்காப்பிடுதல்செய்யா வெண்புத்தகமாகலிற் றுலங்கு புத்தகமென்றும், அம்மை தடவக் குழைந்து கன்றும் பாதமாகலிற் செய்யமென் பாதமென்றுங் கூறினார். (௪)

முன்புற நின்ற வேத முதல்வனை முகத்தி னோக்கி
யின்புற வாத வூர ரிருமென விருந்த பின்னர்க்
கொன்புனை மறையின் மிக்கீ ரெங்குளீர் கூறு மென்ன
மன்பெரு வளஞ்சேர் பாண்டி மண்டலத் திருப்பே மென்றார்.

இ—ள்: முன்பு உற நின்ற வேத முதல்வனை - இங்ஙனம்தமக்கெதிருறவந்து நிற்கின்ற வேதவித்தாகிய சிவபெருமானை,—வாதவூரர் இன்புற முகத்தில் நோக்கி இருமென - திருவாதவூரடிகள் இனிதாக முகத்திற்பொருந்த நோக்கி இங்கே இருமென்றுசொல்ல,—இருந்த பின்னர் - அவரிருந்தருளியபின்னர்,—கொன் புனை மறையின் மிக்கீர் எங்கு உளீர் கூறும் என்ன - பெருமைபொருந்திய வேதத்தில்வல்ல அந்தணரே உமது சனனதேயம் யாது சொல்லுமென்று வினவ,—மன் பெரு வளம் சேர் பாண்டி மண்டலத்து இருப்பேம் என்றார் - அதற்கவர் நிலைபெற்ற பெரிய வளம்பொருந்திய பாண்டிமண்டலத்தின்கண் ணிருப்பே மென்று கூறியருளினார். எ - று.

இன்புற என்னுமடையை இருத்தலுங் கூறுதலுமாகிய இரண்டிற்கும் பொதுவாகக்கொள்க. யோகக்காட்சியினன்றிச் சாக்கிரத்திற் கண்டனரென்பார் முகத்தினோக்கி என்றும், மறைந்தபொருளுடையதாய் வியாசமுனிவர் முதலிய எத்துணை நுண்ணறிவாளரையும் மயக்கும்பெருமையை யுடையதாகலிற் கொன்புனைமறை என்றும், பாண்டிமண்டலம் ஞானாசாரியராய் வெளிவந்துபதேசித்த தேயமாகலின் அதுபற்றிப் பாண்டிமண்டலத்திருப்பேமென்றுங் கூறினார். இருவருக்கு மொருதேயமாயின் அத்தேசாபிமானம்பற்றித் தம்வேண்டுகோட் கெளிதினுடம்படுவாரெனக் கருதிக் கூறும் நம்மனோர்போலக் கூறினாரென்பார் பாண்டி மண்டலத்திருப்பேமென்று கூறினார் என்றலுமாம். முகத்தினோக்கியென வேண்டாகூறினார், அம்முகம் அத்துணைப்பேரழகுடையதெனத் தாம் வேண்டியது முடித்தற்கென்க எனினுமமையும். மன்பெருவளஞ்சேர் பாண்டியென விசேடித்தார் கல்விவளம் செல்வவளமிரண்டு மொருங்குடைமையினென்க. (ரு)

பாண்டிநா டென்ற பின்னர்ப் பரிவுடன் செறிவு கூறி
யீண்டுநீர் வருதல் வேண்டுங் காரிய மியம்பு மென்ன
வாண்டநா யகன்ற னாணை யாகிய கரும நும்மைக்
காண்டலே யென்று பின்னுங் கருத்துற விதனைச் சொன்னார்.

இ—ள்: பாண்டி நாடு என்ற பின்னர் - அவ்வந்தணர் நந்தேயம் பாண்டிதேயமென் றருளிச்செய்தபின்னர்,—பரிவு உடன் செறிவு கூறி - அதுகேட்ட திருவாதவூரடிகள் முன்னையினும் அன்போடு கலப்புவார்த்தைகளைக் கூறி,—ஈண்டு நீர் வருதல் வேண்டும் காரியம் இயம்பும் என்ன - இங்கே நீர் வரவேண்டுங் காரியமென்னை சொல்லுமென்று வினவ,—

ஆண்ட நாயகன்றன் ஆணை ஆகிய கருமம் - அது, உம்மைத் திருப்பெருந் துறையின்கண் அடிமைக்கொண்ட ஆன்மநாதராகிய சிவபெருமானது ஆஞ்ஞையாகிய காரியமே,—நம்மைக் காண்டலே என்று - அது. நம்மைக் காணுதலான் முடிவதாமென்று முன்னர்ப் பொதுவகையாற் கூறி,—பின்னும் கருத்து உற இதனைச் சொன்னார் - பின்னரும் அவரது மனத்திற் பதியுமாறு சிறப்புவகையான் இதனைக் கூறியருளினார். எ - று.

பாண்டியனாடு பாண்டிநாடென மரீஇயிற்று. மேற் பாண்டிமண்டலமென்றதுமது. செறிவு ஆகுபெயர். காண்டலான் முடிவதைக் காண்டலென்றொழிந்த துபசாரம். நாம் ஈண்டுவருங் காரியம் நம்மையாண்ட சிவபெருமானது ஆஞ்ஞையாகிய காரியமேயாகலின் அது நம்மைக் கண்டவுடன் எளிதின்முடியுமென்பார் ஆண்டநாயகன்றனாணையாகிய கருமநம்மைக்காண்டலே யென்றுபசரித்தும், அது அவ்வடிகளது மனத்தை ஈர்க்கவல்லதென்பார் கருத்துற என்றும் கூறினார். மதுரைச் சோமசுந்தரக்கடவுள் பரிமேலழகராகியும், அருமைத்திருமுடிமேன் மண்சுமந்தும், அடியுண்டும், தம்மைப்பாதுகாத்த தேயம் பாண்டிதேயமாகலின், அதுபற்றிப் பாண்டிநாடென்ற பின்னர்ப்பரிவுடன் செறிவு கூறினாரென்றலுமொன்று. தக்கார் ஒருவர்மாட்டு மற்றொருவர் சென்றுழி ஈண்டுநீர் வந்ததென்னையென வினவுங்காற் றிருவருளே முன்னிட்டுத் தம்மைப் பார்க்குமாறு வந்தேனென முன்னர்ச் சற்காரங்கூறிப் பின்னர்த் தாம் வந்தகாரியங் கூறுதலே உலகவழக்காகலின், அவ்வாறு கூறியருளினாரென்பார், ஆண்டநாயகன்றனாணையாகியகருமநம்மைக், காண்டலே யென்றுபின்னுங்கருத்துற விதனைச்சொன்னார் எனினுமமையும். (௬)

மண்ணிடைப் புகுந்து மேலை வானிடைப் பறந்து முன்னர்க்
கண்ணனு மயனுந் தேடிக் காண்பதற் கரியார் தம்மைப்
புண்ணிய மன்றி லாடும் புனிதரைப் பரியி லேறப்
பண்ணுநும் பெருமை யாலே வாழ்ந்தது பாண்டி நாடு.

இ—ள்: முன்னர்க் கண்ணனும் அயனும் - முன்னொருஞான்று விஷ்ணுவும் பிரமாவும்,—மண் இடைப் புகுந்தும் மேலை வான் இடைப்பறந்தும் - மண்ணின்கட் பன்றியாகி அகழ்ந்துநுழைந்தும் மேலாகிய ஆகாயத்தின்கண் அன்னமாகிப் பறந்தும்,—தேடிக் காண்பதற்கு அரியார் தம்மை - முறையே அடிமுடிகளைத் தேடிக் காணுதற்கரியவரும்,—புண்ணிய மன்றில் ஆடும் புனிதரை - சுத்தமாகிய வெள்ளியம்பலத்தின்கண்ணே பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள்பொருட்டுத் திருநடனஞ்செய்தருளுபவருமாகிய சோமசுந்தரக்கடவுளை,—பரியில் ஏறப் பண்ணும் நும் பெருமையாலே - இடபத்தின்கணன்றிக் குதிரையிலிவர்ந்தெழுந்தருளும்படி செய்த உம்முடைய விசேடமகிமையினாலே,—பாண்டிநாடு வாழ்ந்தது - பாண்டிநாடு மற்றைச் சேர சோழ நாடுகளினும் பெருவாழ்வடைந்தது. எ - று.

மண்ணின்கீழும் வானுண்மையின் மேலைவானென்றது பிறிதினி யையுநீக்கிய விசேடணம். ஐ சாரியை. கண்ணனும் அயனும் மண்ணிடைப் புகுந்தும் வானிடைப்பறந்துமென்பது நிரனிறை. கண்ணன் - பாகதச் சிதைவு. சிருட்டி திதி கருத்தாக்களாகிய பிரமவிஷ்ணுக்கள் அங்ஙனந் தேடியுங் காணாமைக் கேது யானெனதென்னும் அகங்கார மமகாரங்க ளும், திருவாதவூரடிகள் இங்ஙனம் மிக எளிதிற் குதிரையிலிவர்ந் தெழுந் தருளச் செய்தமைக்கேது அகங்கார மமகாரக்கேடுமாகலின், அவற்றை யொழித்து மெய்யன்புபூண்டு, அத்திருமூர்த்திபரனையே முழுமுதலென் றும், அவரைவழிபடும் சைவசமயத்தையே மெய்ச்சமயமென்றும் உள்ள வாறு விசுவசித்து வழிபட்டுப் பெரும்பான்மையும் பெருவாழ்வடைதற் குரியார் அந்நிகழ்ச்சியை நேரேகண்டுங் கேட்டுமறிந்த பாண்டிநாட்டின் கணுள்ளவரேயாகலின், அவர்களே அந்நிரதிசயவின்பத்தைத் தப்பாது பெறுதற்குரியாரென்பார் நும்பெருமையாலே வாழ்ந்தது பாண்டிநாடு என இங்ஙனங் கூறியருளினார். (எ)

தென்பெருந் துறையி லையன் றிருவடி சேவை செய்து
துன்பமொன் றின்றி வாவி சூழ்கழுக் குன்றிற் சென்று
பொன்பொலி மன்றி லெய்திப் புத்தரைவாதில் வென்றீ
ரென்பது கேட்டுப் பின்னர் யாவரு மகிழ்ச்சி கொண்டார்.

இ—ள்: தென் பெருந்துறையில் ஐயன் திருவடி சேவைசெய்து- நீர் மதுரையை விட்டுநீங்கியபின்பு தெற்கின்கணுள்ள திருப்பெருந்து றையிலே பரமாசாரியரையடைந்து அவருடைய திருவடிகளைத் தரிசித்து வணங்கித் துதித்து,—துன்பம் ஒன்று இன்றி வாவி சூழ் கழுக் குன்றில் சென்று - வழிவருத்தஞ் சிறிதுமின்றித் தடாகங்கள்சூழ்ந்த திருக்கழுக் குன்றத்தையடைந்து சுவாமிதரிசனஞ்செய்து,—பொன் பொலி மன்றில் எய்தி - அதன்பின்னர் மீண்டுவந்து இச்சிதம்பரத்திலே கனகசபையை யடைந்து,—புத்தரை வாதில் வென்றீர் என்பதுகேட்டு - இலங்கையினி ன்றும் வந்த புத்தர்களைத் தருக்கத்திற் செயித்தீர் என்பதனைக் கேட்டறி ந்து,—பின்னர் யாவரும் மகிழ்ச்சி கொண்டார் - அதன்பின்னர் நமது பாண்டிநாட்டின்கணுள்ளவர்கள் அனைவரும் உம்மிடத்து மிகப் பிரீதிகொ ண்டனர். எ - று.

தென் அழகுமாம். ஒன்றுமென்னு மும்மை விகாரத்தாற்றொக்கது. கேட்டென்பதனால் யாவருமென்றது பாண்டிநாட்டின்கணுள்ளவர்களை யே என்பது பெற்றாம். திருப்பெருந்துறையினின்றும் மிகவுஞ் சேய்மைக் கணுள்ள திருக்கழுக்குன்றத்திற்குச்சென்றது சிவாஞ்ஞைபற்றியே யாக லின், அங்ஙனஞ் செல்கின்றுழி யெல்லாம் திருவருணையாகவே சென் றமைதோன்றத் துன்பமொன்றின்றிவாவிசூழ்கழுக்குன்றிற் சென்றென் றும், உயர்வாகிய கொங்கிற் பொன்னாற்பொலிந்த மன்றாகலிற் பொன் பொலிமன்றென்றும், திருவாதவூரடிகளுக்குப் புத்தரை வாதில்வென்ற

மை முதலியவற்றான் வந்த புகழெல்லாம் பாண்டிநாட்டார் தேசாபிமானம் சமயாபிமானம்பற்றித் தம்புகழாகவேகொண்டு மகிழ்ந்தாரென்பார் புத்தரை வாதில்வென்றீரென்பதுகேட்டுப் பின்னர் யாவருமகிழ்ச்சிகொண்டார் என்றுங் கூறியருளினார். துன்பமொன்றின்றி என்பதற்கு "உடையானே நின்றனையுள்கியுள்ளமுருகும்பெருங்காத, லுடையாருடையாய்நின்பாதஞ்சேரக்கண்டிங்கூர்நாயிற், கடையானே னெஞ்சுருகாதேன் கல்லாமனத்தேன்கசியாதேன், முடையார்புழுக்கூடிதுகாத்திங்கிருப்பதாகமுடித்தாயே" என்னுந் துன்பமொன்றின்றியென்றுமாம். சோழசேரநாட்டின்கணுள்ளாரையுந் தழீஇக்கோடற்கு யாவருமென்றா ரென்றலுமொன்று. (அ)

ஆதியை மன்று ளாடு மையனை யன்பி னாலே
யோதிய தமிழின் பாட லுள்ளவை யோத வெண்ணி
மாதுய ரகல வின்னே வந்தன மெழுதல் வேண்டும்
வேதியர் பெருமா னின்று விளம்பிடும் விளங்க வென்றார்.

இ—ள்: வேதியர் பெருமான் - பிராமணோத்தமரே,—ஆதியை-முதல்வரும்,—மன்றுள் ஆடும் ஐயனை - சபையின்கட் பஞ்சகிருத்தியநிருத்தஞ் செய்தருளும் பரமபிதாவுமாகிய சிவபெருமானைத் துதித்து,—அன்பினாலே ஓதிய தமிழின் பாடல் உள்ளவை - மெய்யன்புகாரணமாக நீர் பாடிய அருட்பாக்களனைத்தையும்,—மாதுயர் அகல ஓத எண்ணி இன்னே வந்தனம் - பெரிய பிறவித்துன்பம் நீங்கப் பாராயணஞ்செய்யும்படி கருதி இங்கே வந்தேம்,—எழுதல் வேண்டும் - யானவற்றை எழுதல் வேண்டும்,—விளங்க இன்று விளம்பிடும் என்றார் - அவைகளை ஈண்டுத்தெளிவாகச் சொல்லுமென்றனர். எ - று.

மாதுயரகலுதலை எதிர்காலத்துச் சிவபத்தர்கண்மீதேற்றுக. வேண்டுமென்பது இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாகித் தேற்றப்பொருடருவதோர் தொழிற்பெயர். அனைத்தையுமென்பார் உள்ளவை என்றும், அநாதியாகவரும் பிறவித்துன்பமென்பார் மாதுயரென்றும், ஒருவர்மாட்டொன்று பெறக்கருதினோர் அவரை உயர்த்துவ துலகவழக்கமாகலின் வேதியர் பெருமானென்றும், எழுதற்கேற்ப மெல்லெனக் கூறுக வென்பார் விளம்பிடும் விளங்க என்றுங் கூறியருளினார். (௯)

விண்ணகம் பரவு நாத னிவ்வகை விளம்பச் சிந்தை
நண்ணுமன் புடைய ராகி நற்சடை முடியார் தம்மை
யெண்ணருந் தமிழின் பாட்டா லியம்பிய வைய ரப்போ
துண்ணெகிழ்ந் துளமெஞ் ஞான வாசக முவந்து சொன்னார்.

இ—ள்: விண்ணகம் பரவும் நாதன் இவ்வகை விளம்ப - விண்ணுலகவாசிகளாகிய தேவர்களுந் துதிக்கும் சிவபெருமானாகிய அவ்வந்தணர் இந்தப்பிரகாரம் சொல்லியருள,—நல் சடை முடியார் தம்மை - நல்ல

சடாமுடியையுடைய சிவபெருமானை,—சிந்தை நண்ணும் அன்பு உடையர் ஆகிய எண் அரும் தமிழின் பாட்டால் இயம்பிய ஐயர் - மனத்தின்கட் பொருந்தும் அன்பையுடையவராகி மதித்தற்கரிய தமிழ்ப்பாக்களினுலே முன்பு துதிசெய்த துறவியாகிய திருவாதவூரடிகள்,—அப்போது உள் நெகிழ்ந்து - அதுகேட்டவுடன் மனம் நெக்குநெக்குருகி,—மெய்ஞ்ஞானம் உள வாசகம் உவந்து சொன்னார் - மெய்ஞ்ஞானமாகிய பொருளையுடைய திருவாசகங்களை மனமுவந்து அடைவே சொல்லியருளினார். எ - று.

விண்ணகம் ஆகுபெயர். விண்ணகமுமென்னு முயர்வுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உடையராகி இயம்பிய ஐயரென முடிக்க. மன த்தோடுபடாது புறத்தேநடித்துக் காட்டும் பொய்யன்பினீக்குதற்கு மன த்தோடுபட்ட அடிகளது மெய்யன்பைச் சிந்தைநண்ணுமன்பென்றும், சந்திரனது சாபநிவிர்த்திக் கிடமாகிய சடையாகலின் நற்சடை என்றும், மெய்ஞ்ஞானவாசகமாகலின் எண்ணருந்தமிழின்பாட்டென்றும், ஓர்கா முகனுக்குத் தன்னால் விரும்பப்பட்ட வனிதையைப்பற்றிப் புகழ்ந்து பேசுதற்கண் விரைவும் அவா மிக்குடைமையும் உளவாமாறுபோலச் சிவ பத்திமானாகிய திருவாதவூரடிகளுக்குத் தம்மால் விரும்பப்பட்ட சிவபி ரானைப்பற்றிப் புகழ்ந்து கூறுதற்கண் விரைவும் அவா மிக்குடைமையும் உளவாமாகலின் அப்போ, துண்ணெகிழ்ந்துள மெய்ஞ்ஞானவாசக முவ ந்து சொன்னாரென்றுங் கூறினார். (௧௦)

அங்கவ ருரைத்த வெல்லா மம்பலத் தாடு மையர்
செங்கையி லேடு வாங்கித் தெளிவுற வரைந்த பின்னர்ப்
பொங்கிய வருளி னாரும் புகன்றிட ரகலத் தையல்
பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டு மென்றார்.

இ—ள்: அங்கு அவர் உரைத்த எல்லாம் - அங்கே அத்திருவாத வூரடிகள் சொல்லிய திருவாசகங்களை யெல்லாம்,—அம்பலத்து ஆடும் ஐயர் செம் கையில் ஏடு வாங்கித் தெளிவு உற வரைந்த பின்னர் - கனக சபையிலே திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமானனவர் தமது சிவ ந்த அருமைத்திருக்கரத்தினாலே ஏட்டை எடுத்துத் தெளிவாக எழுதி மு டித்தபின்னர்,—பொங்கிய அருளின் ஆரும் புகன்று இடர் அகல - பேர ன்பினாலே எதிர்காலத்துள்ள சைவர்களனைவரு மோதித் தமது பிறவித் துன்பத்தினின்று நீங்குமாறு,—தையல் பங்கினர் தம்மைக் கோவை பாடு தல்வேண்டும் என்றார் - சிவகாமியம்மை சமேதராகிய சபாநாயகரைப் பாட் டுடைத் தலைவராகக் கொண்டு ஒருகோவை பாடுதல்வேண்டு மென்ற னர். எ - று.

பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டு மென்றாரென்பது பங்கினரானவர் தம்மைக்குறித்து நீர் ஒருகோவை பாடுதல்வேண்டுமென் றாரென உண்மைவெளிப்பட வேறுமொருபொருடோன்ற நின்றவாறு

கண்டுகொள்க. ஏடு - பனையேடு. புகன்றிடாகல என்புழிப் புகன்றென்ப து காரணப்பொருட்டாய செய்தெனவாய்பாட்டுவினையெச்சம். கோவை யென்னும் பிரபந்தமாவது உருவுந் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றாற் றம்முளொப்புமையுடையாராய தலைமகனும் தலை மகளும் பிறர்கொடுப்பவு மடுப்பவுமின்றிப் பால்வகையான் ஓர்பொழிலி டத் தெதிர்பட்டு, எண்வகைவேதமன்றலுட் காந்தருவ விவாகநெறியாற் புணர்தல் பிரிதல் முதலிய பாகுபாடுபெற்றிவரும் இயற்கைப் புணர்ச் சிமுதலிய கிளவிக்கொத்துக்களை யுடையதாய்,காட்சிமுதலிய நானூறு துறைகளைக்கொண்டு, கட்டளைக்கலித்துறையாற் பாடப்படுவது. அது, "கோவையே யகப்பொருட் கூறுபா டிசைப்பட, நாவலர் கலித்துறை நானூ றிசைத்தலே" என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களானறிக. (கக)

மன்னிய தவத்தின் மிக்கா ரதற்குள மகிழ்ந்து கூற
முன்னுற விருந்து கோவை யெழுதினர் முடிந்த பின்னர்ப்
பொன்னவிர் வேணி யார்தாம் புத்தகஞ் சேமித் தங்கண்
மின்னென மறைந்தார் சொன்ன வித்தகரயர்ச்சிகொண்டார்.

இ—ள்: மன்னிய தவத்தின் மிக்கார் அதற்கு உளம் மகிழ்ந்து கூற - நிலைபெற்ற தவத்தான் மேம்பட்ட திருவாதவூரடிகள் அக்கேள் விக்கிசைந்து மனமுவந்து, "திருவளர்தாமரை" என்றெடுத்துத் திருக் கோவை பாடியருள,—பொன் அவிர் வேணியார் தாம் முன் உற இருந்து கோவை எழுதினர் - பொன்போல விளங்கும் சிவந்த சடையையுடைய சபாநாயகர் தாம் அவ்வடிகட் கெதிரேயிருந்து திருக்கோவையாரை எழு தினர்,—முடிந்த பின்னர் - அஃதெழுதி முடிந்தபின்னர்,—புத்தகம் சேமித்து அங்கண் மின் என மறைந்தார் - அத்திருமுறையைத் திருக் காப்புச் செய்துகொண்டு அங்கே மின்னலைப்போல மறைந்தருளினர்,— சொன்ன வித்தகர் அயர்ச்சி கொண்டார் - அவைகளைச் சொல்லியருளிய செந்தமிழ்க் கொருவராகிய திருவாதவூரடிகள் அதுகண்டு இவர் நம்பர மாசாரியர் போலுமென்று பிரமித்துத் தம்வசமழிந்தார். எ - று.

பொன்னவிர்வேணியென்றது நிறம்பற்றிவந்தமையிற் பண்புவமமும், மின்னெனமறைந்தாரென்றது செயல்பற்றிவந்தமையிற் றொழிலுவமமு மாம். சபாநாயகர் இங்ஙனம் கோவை பாடுகவென்று தமதருமைத் திரு வாக்காற் கேட்டருளுதற்கேற்ப அனந்தகோடி பூர்வசன்மங்களிலே ஆர் ச்சித்த தவவிசேடமுடையவரென்பார் அவ்வடிகளை மன்னியதவத்தின் மிக்காரென்றும், அக்கேள்வியை மனமுவந்தேற்றுக்கொண்டு உடனே விரைவிற் கூறினரென்பார் அதற்குளமகிழ்ந்துகூற என்றும், பாடுவோ ருக் கெழுதுவோர் எதிரிலிருந் தெழுதவேண்டுமாகலின் முன்னுற விரு ந்துகோவையெழுதினரென்றும், திருமுறையையு முடன்கொண்டு அவர் க்குத் தம்மை யுணர்த்தவேண்டி விரைவின் மறைந்தருளின ரென்பார் பொன்னவிர்வேணியார்தாம் புத்தகஞ்சேமித்தங்கண், மின்னெனமறைந்

தாரென்றும், கோவைபாடுக என்றதுணையானே அத்தியற்புத அதிமதுர சுத்தச் செந்தமிழ்மொழியினாலே பஞ்சலக்கணங்கட்கும் பிறவற்றிற்கும் மகாலக்கியமாக இறைவனூற்பொருளும் உலகநூல்வழக்கமுமென்னும் இருபொருளும் நுதலியெடுத்துக்கொண்டு சிறிதுந் தடையின்றிப் பாடினராகலின், அவ்வதுலசாதுரியந்தோன்றச் சொன்னவித்தகரென்றும், இவர் நங்குருமூர்த்தியாயின், இவரைப் பணிகொண்ட சிவாபராதத்திற்கு இனி யாதுசெய்வேனென்று மயங்கினாரென்பார் அயர்ச்சிகொண்டார் என்றுங் கூறினார். அதுலம் - ஒப்பின்மை. (௧௨)

எழுந்தன ரெங்கு மோடி நாடின ரென்கொ லென்னு
வழிந்தனர் மன்று ளாடு மாதியென் றறிந்த பின்னர்ப்
பொழிந்தனர் கண்ணீ ரெங்கே போயினை யென்று மண்மேல்
விழுந்தனர் பரமா னந்த வேலை வெள்ளத்து ளானார்.

இ—ள்: எழுந்தனர் - அங்ஙன மயர்ச்சியடைந்த திருவாதவூரடிகள் பின்னரவ்வயர்ச்சிநீங்கி விரைந்தெழுந்தனர்,—எங்கும் ஓடி நாடினர் - அவரை எவ்விடங்களினு மோடித் தேடினார்,—என் கொல் என்னு அழிந்தனர் - ஓரிடத்துங் காணாமையால் இஃதென்னை அற்புதமென்று மறித்து மனமழிந்தனர்,—மன்றுள் ஆடும் ஆதி என்று அறிந்தபின்னர் - பின்னுமொருபிரகாரந் தெளிந்து. அவ்வாதிவருணை வடிவங்கொண் டெழுந்தருளிவந்தவர் கனகசபையின்கண்ணே பஞ்சகிருத்திய நிருத்தஞ் செய்தருளும் சபாநாயகரேயாமென்று பலவேதுக்களினான் நிச்சயித்தறிந்தபின்னர்,—கண்ணீர் பொழிந்தனர் - அன்புகூர்ந்து கண்களினின்று மிகவுமானந்தவருவிசொரிந்தனர்,—எங்கே போயினை என்று மண்மேல் விழுந்தனர் - என்னுயிர்த்துணைவரே தேவரீர் இதுபொழுதெங்கே மறைந்தருளினீரென்று மறித்துஞ் செயலற்று விழுந்தனர்,—பரம ஆனந்த வேலை வெள்ளத்துள் ஆனார் - முடிவிற் சிவானந்தமாகிய சமுத்திரமத்தியிற் படிவாராயினார். எ - று.

பின்னர் என்பதனை ஏற்குமிடமெங்குங் கூட்டிப் பொருள்கொள்க. அருட்டிருமறையவரே தம்மாட்டன்புடையராய்வந்தளவளாவிப் பின்னேதுவுமின்றி மறைந்தமையின் மனமழிந்தனரென்பார் அழிந்தனரென்றும், அவரே தம்பாடலையுவந்து கூறுவித்து, அருமைத்திருக்கரத்தால் எழுதியருளினமையை நினைக்குந்தோறும் சிவானந்தம் பெருகிற்றென்பார் பரமானந்தவேலை வெள்ளத்துளானார் என்றுங் கூறினார். (௧௩)

செந்தமிழ்க் கன்பு மிக்கார் சென்றுதம் மன்றி லெய்தி
யந்தரத் தவரை மாலை யயனைநன் முகத்து நாடி
நந்தமக் கடிமை பூண்டு நயந்தவ னொருவன் சொன்ன
விந்தநற் பாடல் கேண்மி னென்றவர்க் கெடுத்துச் சொன்னார்.

இ—ள்: செந்தமிழ்க்கு அன்பு மிக்கார் - செந்தமிழ்மொழியினாலே செய்யப்படுந் தோத்திரங்களில் அன்புமிக்க நஞ்சிவபெருமானானவர்,—சென்று தம் மன்றில் எய்தி - அங்ஙனந் திருமுறையுடன் மறைந்துசென்று தங்கனகசபையையடைந்து,—மாலை அயனை அந்தரத்தவரை நல் முகத்து நாடி - அரிபிரமேந்திராதிதேவர்களைத் திருமுகமலர்ச்சியோடு பார்த்து,—நந்தமக்கு அடிமை பூண்டு நயந்தவன் ஒருவன் சொன்ன - நம்மைக் காதலித்து நமக்குத் தாசத்துவம்பூண்ட ஒரு அன்பன் பாடிய,—இந்த நல் பாடல் கேண்மின் என்று எடுத்து அவர்க்குச் சொன்னார் - இந்த நல்ல செந்தமிழ்ப்பிரபந்தங்களைக் கேளுங்களென் றவர்கட்குத் தமதருமைத்திருவாக்கினாலே விதந்து வாசித்துக் காட்டியருளினார். எ - று.

ஏனைக் கொடுந்தமிழினீக்குதற்குச் செந்தமிழெனை விசேடிக்கப்பட்டது. செந்தமிழ்க்கென்புழிக் குவ்வுருபைக் கண்ணுருபாகத்திரிக்க. செய்யுளாகலின் அந்தரத்தவரை மாலை அயனை என முறைபிறழவைக்கப்பட்டது. நந்தமக்கடிமைபூண்டு நயந்தவனென்பது நயந்து நந்தமக்கடிமைபூண்டவனென விகுதிபிரித்துக் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. தம்மால் அருளிச்செய்யப்பட்ட வேதசிவாகமங்கட்கும் அவற்றின் சாரமாகிய இச்செந்தமிழ்ப் பிரபந்தங்கட்கும் பேதமின்மை விளக்குதற்கு நற்பாடலென விசேடித்தார். காமுகனொருவன் தன்னைப்புகழ்ந்து தன்னாலுரைக்கப்பட்ட வாக்கினும் தன் காமக்கிழத்தியர்வாய்த் தோன்றிய வாக்கில் விருப்பமிக்குடையனாய் வசீகரிக்கப்படுமாறுபோலச் சிவபிரான் தம்மைப்புகழ்ந்து தம்மாலுரைக்கப்பட்ட வேதசிவாகமங்களினுந் தம் மெய்யன்பராகிய திருவாதவூரடிகள்வாய்த் தோன்றிய திருவாசகம் திருக்கோவையாரென்னும் செந்தமிழ்ப் பிரபந்தங்களில் விருப்பமிக்குடையராய் வசீகரிக்கப்படுதலின், இங்ஙனங் கூறியருளினாரென்பது கருத்து. சர்வஞ்ஞத்துவமுடைய அதிபரமாப்தராகிய சிவபெருமானே வேதசிவாகமங்களை அருளிச்செய்த தமது அருமைத்திருவாக்கினாலே அவ்விருபிரபந்தங்களையும் இந்நற்பாடலென்று வியந்து அரிபிரமேந்திராதிதேவர்கட்குத் தாமே வாசித்துக் காட்டியருளிக் கேட்பிப்பதுஞ் செய்வாராயின், சிற்றறிவுடைய பசுவர்க்கத்துள்ளும் மிகத்தாழ்ந்த பருவத்தையுடைய புழுத்தநாயினும் கடையேமாகிய நாமா அப்பிரபந்தங்களின் கீர்த்திப்பிரதாபங்களை எடுத்து விதந்துரைக்க வல்லேம். (௧௭)

மெய்த்தவ வாத வூரன் விளம்பிட வெழுது மிந்தப்
புத்தக மன்று ளாடல் புரிந்தவ னெழுத்தா மென்று
முத்தியை யுதவுங் கோவை முடிவிடத் தெழுதிப் பின்னர்ச்
சித்திர மலர்க்கை யாலே திருந்தமைக் காப்புஞ் செய்தார்.

இ—ள்: பின்னர் - அதன்பின்பு சபாநாயகர்,—மெய்த் தவ வாதவூரன் விளம்பிட - மெய்ம்மையாகிய தவத்தையுடைய வாதவூரன்கூற,—எழுதும் இந்தப் புத்தகம் - எழுதிய இப்புத்தகம்,—மன்றுள் ஆடல் புரிந்

தவன் எழுத்தாம் என்று - கனகசபையின்கட் பஞ்சகிருத்தியநடனஞ்செய்யும் அழகிய திருச்சிற்றம்பலமுடையானது கையெழுத்தாமென்று, முத்தியை உதவும் கோவை முடிவு இடத்து எழுதி - பாராயணஞ் செய்யும் பக்குவிகட்கு முத்தியைக்கொடுக்கவல்ல திருக்கோவையார் முடிவிடமாகிய, "ஊரன்மற்றியாவர்க்குமூதியமே" என்பதன்பின்னர் எழுதி,—சித்திர மலர்க் கையாலே திருந்தமைக்காப்பும் செய்தார் - சித்திரமாகிய தாமரைமலர்போலும் அருமைத்திருக்கரங்களினாலே திருத்தமுற மைக்காப்புஞ்செய்தருளினார். எ - று.

அன்விகுதி முன்னையது படர்க்கையினும் பின்னையது தன்மையினும் வந்தன. என்று எழுதிச்செய்தாரென முடிக்க. முடிவிடம் இறந்தகாலவினைத்தொகை. உம்மை இறந்ததும் எதிரதுந்தழீஇயிற்று; இழிவுசிறப்புமாம். உலகநூனுதலிய ஏனைக்கோவைகளெல்லாம் புத்தியைக்கொடுப்பனவாக, இஃதொன்றே இறைவனூற்பொருளுநுதலி முத்தியைக் கொடுப்பதென்பார் முத்தியையுதவுங்கோவையென்றும், விரிதலுங் குவிதலுமாகிய விகாரமில்லாத தாமரைமலர்போலுந் திருக்கரமென்பார் சித்திரமலர்க்கையென்றும், அவ்வருமைத்திருக்கரங்களினாலே இங்ஙனஞ் செய்தருளினாரென்பார் திருந்தமைக்காப்புஞ் செய்தாரென இழிவுசிறப்பும்மைகொடுத்துங் கூறினார். சித்திரம்-அதிசயம், நூதனம். (௩௫)

வெண்பிறை முடித்த வேணி வித்தக ருலகுக் கெல்லா
நண்புடை வாத வூரர் நற்றவ முணர்த்த வெண்ணி
யெண்பெறு முனிவர் விண்ணோ ரிறைஞ்சுமம் பலத்து வாயில்
வண்படி மீதே யுண்மை வாசக முறையை வைத்தார்.

இ—ள்: வெண் பிறை முடித்த வேணி வித்தகர் - வெண்மையாகிய பாலசந்திரனையணிந்த சடையையுடைய சர்வகர்த்திருத்துவ சாதுரியராகிய சிவபெருமானனவர்,—உலகுக்கு எல்லாம் நண்பு உடை வாதவூரர் நல் தவம் உணர்த்த எண்ணி - இவ்வுலகிற்கெல்லாம் நட்பையுடைய திருவாதவூரடிகளது நல்லதவத்தை உணர்த்தி உய்விக்கத் திருவுளங்கொண்டு,—எண் பெறு முனிவர் விண்ணோர் இறைஞ்சும் அம்பலத்துவாயில் வண்படி மீதே - மூவாயிரமென்னுந் தொகைபெறுந் தில்லைவாழந்தணர்களும் அரிபிரமேந்திராதி தேவர்களும் தம்மைவணங்கி வழிபடும் சிற்சபையின் வாய்தலிலுள்ள வளவிய பஞ்சாக்ஷரப்படியின்மீதே,—உண்மை வாசக முறையை வைத்தார் - சத்தியசின்மலஞானத்தையே பொருளாகவுடைய திருவாசகபுத்தகத்தை வைத்தருளினார். எ - று.

உலகுக்கென்னும் நான்கனுருபை நண்புடைமையோடும் உணர்த்துதலோடும் தனித்தனிமுடிக்க. உலகுக்கெல்லாம் நட்புடைமையாவது சமயகுருத்துவமுடைமை; சீவகாருண்ணியமுடைமையென்றுமாம். நட்புடைய என்பது மெலிந்தும் தொக்கும் நின்றது. எண்பெறுமுனிவர் என்

பதற்கு இரண்டென்னுந் தொகைபெறும் பதஞ்சலி வியாக்கிரபாதரெ ன்னு மிருடிகளென்றும், தேவர்களினும் முன்வைத்து நன்குமதிக்கப் படும் முனிவர்களென்றுமாம். இடத்துநிகழ் பொருட்குரிய விசேடத்தை இடத்திற்கேற்றி இறைஞ்சுமம்பலமென்றார் என்றலுமொன்று. இறை ஞ்சும் வாயிலென முடிப்பினுமமையும். உண்மை ஆகுபெயர். சிவபெரு மானது சர்வகர்த்திருத்துவ சாதுரியத்தைத் தக்கனு லிடருற்றுவந்த சந் திரனது சாபநிவிர்த்தியின்மேல்வைத்து விளக்குவார் வெண்பிறைமுடித் தவேணி வித்தகரென்றும், அவரது கிருத்தியங்களெல்லாம் யாண்டுந் தம் பொருட்டன்றி ஆன்மாக்களாகிய பிறர்பொருட்டே செய்யப்படுமென் பார் உலகுக்கெல்லா, நண்புடைவாதவூரர் நற்றவமுணர்த்த வெண்ணி யென்றும், ஒரோவழி நாமே பிரமமென்னும் செருக்கையுடைய தேவர் களினும் அஃதியாண்டுமில்லாத முனிவர்களே அடிமைத்திறத்திற் சிறந்த வரென்பார் அவரை முன்வைத்து எண்பெறுமுனிவர் விண்ணோரென்றும், பஞ்சாக்ஷரப்படி என்பது விளக்குதற்கு வண்படி என்றும் கூறினர். சர்வ கர்த்திருத்துவம் எல்லாவற்றையுஞ் செய்தற்கு வினைமுதலாந்தன்மை. ( )

வைத்தபின் பூசை செய்யு மந்தணர் வந்து கண்டிப்
புத்தக மிங்கு நண்ணும் புதுமை தைவிகமா மென்று
சித்தமங் குருகி நின்று தில்லையுள் ளார்கட் கெல்லா
மித்திறங் கூறல் வேண்டு மென்றுமன் றகன்று போந்து.

இ—ள்: வைத்தபின் - திருமுறையை நடராசர் அங்ஙனம் வைத் தருளியபின்னர்,—பூசை செய்யும் அந்தணர் வந்து கண்டு - சுவாமிக்கருச் சனைசெய்யும் தில்லைவாழந்தணராகிய ஆதிசைவரொருவர் வந்து அதனைக் கண்டு,—இப்புத்தகம் இங்கு நண்ணும் புதுமை தைவிகம் ஆம் என்று - நாம் அர்த்தயாமபூசை முடித்துத் திருக்கதவந் திருக்காப்புச் செய்துழி ஈண்டில்லாத இப்புத்தகம் இப்பொழுதிங்கிருக்குமற்புதம் தேவச்செய லேயாமென்று நிச்சயித்து,—அங்குச் சித்தம் உருகி நின்று - அங்ஙனம் தம்மனம் நெக்குநெக்குருகிச் சிறிதுபோது தம்வயமின்றிநின்று,—தில்லை உள்ளார்கட்கு எல்லாம் இத்திறம் கூறல் வேண்டும் என்று - பின்னர் இச் சிதம்பரதலவாசிகட்கெல்லாம் இவ்வத்தியற்புத சமாசாரத்தை விரைந்து சொல்லுதல்வேண்டுமென்று கருதி,—மன்று அகன்று போந்து - அக்கன கசபையைவிட்டரிதினீங்கிச்சென்று. எ - று.

தேவசம்பந்தம் தைவிகமென்க. அந்தணர்கண்டென்றது பூசை செய்யும் அந்தணர் வந்து கண்டென ஈண்டு விதத்தலானும், எம்மிறை யுறையுமன்றுட், டேவரும் புகுதவொண்ணு தெய்விகமிதுவென்றெண்ணி யென முன்னர் விதத்தலானும், அவ்வந்தணர் அதுகண்டகாலம் உஷக் காலமென்பது பெற்றும். கடைகாப்பின் றிட்பமுதலியவெல்லாம் அவ் வருச்சகர்க் கினிதுவிளங்குமாகலின், இது மானுஷியமன்று தைவிகமே

யென அனுமானப் பிரமாணம்பற்றி அவரான் நிச்சயிக்கப்படுதல் சாலுமென்க. இங்நிகழ்ச்சி பராசத்தியா னதிட்டிக்கப்பட்ட சுத்தமாயாமயமாகிய கனகசபையின்கண்ணதாகலின், தைவிகமென்றது சபாநாயகரது செயலையே குறித்தலின், அதுபற்றி மனம் நெக்கு நெக்குருகியவழித் தம்மை மறந்து சிறிதுபோழ்து வாளாநிற்ற லமையுமாகலிற் சித்தமங்குருகியென்றொழியாது சித்தமங்குருகிநின்றென்றார். சித்தமங்குருகியென்றவிதப்பால் அறிதினீங்கியென்பது தானே போதருமென்க. (௧௭)

செந்திரு மருவுந் தொல்லைத் தில்லைநன் னகரி லுள்ளார்
தந்திரு முன்பு சென்று சாற்றினா ரிந்த நீர்மை
யந்தணர் மொழிந்த பின்ன ரதிசய மிதுவென் றோடி
வந்தவர் படிமே லண்ணல் வைத்த புத்தகங் கண்டார்கள்.

இ—ள்: செந்திரு மருவுந் தொல்லைத் தில்லை நல்நகரில் உள்ளார் தம் திரு முன்பு சென்று - இலக்குமி வசிக்கும் பழைய தில்லைமாநகரவாசிகளது சமீபத்திற்போய்,—இந்த நீர்மை சாற்றினார் - இவ்வத்தியற்புத சமாசாரத்தைக் கூறினார்,—அந்தணர் மொழிந்த பின்னர் - அவ்வந்தணரங்ஙனங் கூறியவுடன்,—இது அதிசயம் என்று ஓடி வந்தவர் - இது பேரற்புதமென்று வல்விரைந்து வந்தவர்களெல்லாம்,—அண்ணல் படிமேல் வைத்த புத்தகம் கண்டார்கள் - சபாநாயகர் பஞ்சாக்ஷரப் படியின்மீது வைத்தருளிய திருமுறையை நேரேகண்டார்கள். எ - று.

செந்திருவென்புழிச் செம்மென்பது இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயரடையாகலிற் பிறிதினியையபுடைமைநீக்கிய விசேடணமென்க. வந்தவர் வினையாலணையும்பெயர். அருட்செல்வம், பொருட்செல்வமென்னுமிரண்டு மொருங்குடையரென்பார் செந்திருமருவுந்தொல்லைத் தில்லைநன்னகரிலுள்ளாரென்றும், அதிசமீபத்திற் சென்றென்பார் திருமுன்சென்றென்றும், இது முன்னோர்காலுங் கண்டுங் கேட்டுமறியாத பேரதிசயமென்பார் அதிசயமிதுவென்றும், ஈண்டுக் கேட்டறிந்தவர் நேரே இனிக் கண்டுமறிதற்பொருட்டு மிகக்கடுகி நடந்தமைதோன்ற ஓடிவந்தவர் என்றுங் கூறினார். (௧௮)

யாவருந் தம்மு ணாடி யெம்மிறை யுறையு மன்றுட்
டேவரும் புகுத வொண்ணா தெய்விக மிதுவென் றெண்ணி
மேவுமன் பதனா லண்ணல் விளம்பிய சைவ நூலோ
தாவுசெந் தமிழோ வென்று பார்ப்பது தக்க தென்றார்.

இ—ள்: யாவரும் தம்முள் நாடி - அவரனைவரும் தம்முளாராய்ந்து,—எம் இறை உறையும் மன்றுள் தேவரும் புகுத ஒண்ணா - நம்முழுமுதலாகிய சபாநாயகர் வீற்றிருக்கும் கனகசபையின்கண்ணே அர்த்தயாமபூசைமுடித்துத் திருக்கதவந் திருக்காப்பிட்டபின்னர் அரிபிரமேந்திராதி

தேவர்களும் உட்பிரவேசிக்கக் கூடாது,—இது தெய்விகம் என்று எண்ணி—ஆதலான் இது நங்கடவுள் செயலேயாமென்று தீர்க்கநிச்சயம் செய்து,—மேவும் அன்பு அதனால் அண்ணல் விளம்பிய சைவநூலோ - இத்திருமுறை ஆன்மாக்களாகிய நம்மாட்டுத் திருவுள்ளத்து முகிழ்த்த கைமாறற்ற பெருங்கருணைத் திறத்தினாலே சதாசிவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய வடமொழிச் சைவாகமமோ,—தாவு செந்தமிழோ என்று பார்ப்பது தக்கது என்றார் - அல்லது முச்சங்கத்திலும்பரவிய செந்தமிழ் நூலோவென்று நாம் பார்ப்பதுவே, இனிச் செயற்பாலதென் றொருங்குகூறினார்கள். எ - று.

ஒண்ணாதென்னுந் தொழிற்பண்பின்மேனின்ற முற்று விகுதிகுறைந்து ஒண்ணாவென நின்றது. நூலென்பதனைத் தமிழென்பதனோடுங் கூட்டுக. எல்லாரும் ஆண்டைநிகழ்ச்சிகளெவற்றையு மொருங்கொப்பக் கூறினாரென்பார் யாவருமென்னு மெழுவாயை முதலினும், என்றாரென்னும் பயனிலையை முடிவினுந் தந்து, யாவரும் என்றார் என முடித்தார். ()

தேக்கிய வருளு மன்புஞ் சிறந்தவ ரெல்லாஞ் சொல்லும்
வாக்கினி லொருவர் சென்று மலர் கொடு வணக்கஞ் செய்து
பூக்கமழ் சடையோன் வைத்த புத்தகம் தன்னைச் சேம
நீக்கின ரோதி னார்முன் னீதிகொ ளகவ னான்கும்.

இ—ள்: தேக்கிய அருளும் அன்பும் சிறந்தவர் எல்லாம் சொல்லும் வாக்கினில் - நிறைந்த சீவகாருண்ணியத்தினாலும் சிரத்தையினாலும் விசேடித்த தில்லைவாழந்தணர்களெல்லா மொருங்கொப்பச் சொல்லிய சொல்லின்வண்ணமே,—ஒருவர் சென்று மலர் கொடு வணக்கம் செய்து - அவ்வந்தணருட் சிறந்தவரொருவர் திருமுறைக்குச் சமீபத்திற்சென்று மலர்களைக்கொண் டருச்சித்து வணங்கி,—பூக் கமழ் சடையோன் வைத்த புத்தகந் தன்னைச் சேமம் நீக்கினர் - கொன்றைமாலை நறுமணம் கமழும் சடையையுடைய சபாநாயகர் பஞ்சாக்ஷரப்படியின்மீது வைத்தருளிய அப்புத்தகத்தைக் கட்டவிழ்த்து,—முன் நீதி கொள் அகவல் நான்கும் ஓதினார் - முதற்கண்நீதியையுடையசிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவலென்னும் ஆசிரியப்பா நான்கையும் வாசித்தனர். எ - று.

தேங்கியவென்பது தொடைநோக்கி வலிந்துநின்றது. ஐந்தனுருபே துப்பொருட்கண் வந்தது. நீக்கினர் என்ப தெச்சமுற்று. நீதி-முறைமை ஈண்டுக்கூறிய திருவாசகம் நான்கனுட் கீர்த்தித்திருவகவன்முதன் மூன்றையும் அகவலென் றதொக்கும், சிவபுராணம் கலிவெண்பாவாதலின், அதனையுமகவலென்றதென்னை வழுவாம் பிறவெனின்? கமுகந்தோட்டமென்றாற்போல மிகுதிபற்றிய குறியாதலின் அது வழுவன்றென்க. (௨0)

வேறு.

திருச்சதக முதலாகச் சிறந்ததமி ழறுநூறும்
விரித்தவகப் பொருட்கோவை விளங்கவொரு நானூறு
முரைத்தனர்பின் முடிந்தவிடத் துயர்வாத வூரன்மொழி
தரித்தெழுது மம்பலவ னெழுத்தென்று சாற்றினார்.

இ—ள்: திருச்சதகம் முதலாகச் சிறந்த தமிழ் அறுநூறும் - திருச்சதகம் முதலாக அச்சோப்பதிக மீறாகவுள்ள சீரிய தமிழ்வேதமாகிய திருவாசகம் அறுநூறும்,—அகப்பொருள் விளங்க விரித்த கோவை ஒரு நானூறும் உரைத்தனர் - காட்சிமுதல் ஊதியமெடுத்துரைத்தூடறீர்த்தலீறாகிய அகப்பொருட்டுறைகளைத் தெளிவுற விரித்துக்கூறிய திருக்கோவையார் நானூறுமாகிய அருட்பாக்களை வாசித்தனர்,—பின் முடிந்த இடத்து - பின்னர் அது முடிந்த முடிவின்கண்,—உயர் வாதவூரன் மொழி - இப்பிரபந்தங்களை உயர்ந்த வாதவூரன் பாட,—தரித்து எழுதும் (எழுத்து) அம்பலவன் எழுத்து என்று சாற்றினார்-எட்டையுமெழுத்தாணியையுந் தாங்கி எழுதிய இவ்வெழுத்தானது அழகிய திருச்சிற்றம்பலமுடையானது கையெழுத்தென்று நெட்டெழுத்தையும் அவ்வந்தணர் வாசித்தனர். எ - று.

மொழியவென்னுஞ் செயவெனெச்சத்தீறு விகாரத்தாற்றொக்கது. மொழி-வாக்குமாம். எழுத்தென்பது மேலுங்கூட்டப்பட்டது. சிறந்த என்பதனைக் கோவைக்குங் கூட்டுக. சிதம்பரத்துள்ள சிற்சபை, கனகசபை நிருத்தசபை, தேவசபை, இராசசபையென்னும் பஞ்சசபைகளுட் சிற்சபையில் சபாநாயகராது திருவருளாற் கனகசபையில் அபிஷேகிக்கப்படும் சிவலிங்கப்பெருமானே அழகிய திருச்சிற்றம்பலமுடையாரென்க. அவரே திருவாதவூரடிகளிடஞ்சென் றிவ்வருட்பாக்களை எழுதியருளினாரென்ப தான்றோர்வழக்காம். திருச்சதகமுதலாக அறுநூற்றுச்சேடத்தை அறுநூறென்றது தலைமைபற்றிய தொகையென்க. திருச்சதகம் முதலாகத் திருவாசகம் அறுநூற்றைம்பத்திரண்டும், அகவல் மூன்றும், கலிவெண்பா ஒன்றும், கோவை நானூறுமாக, ஆக ஆயிரத்தைம்பத்தாறென்க. இது கொச்சகக்கலிப்பா. (உக)

கேட்டவர்க ளெல்லோருங் கிளர்புளகங் குறுவேர்வு
காட்டிடவொண் கண்ணீருங் கசிந்துருகு சிந்தையுமா
யீட்டியமெய்த் தவமுடையோ ரியம்பியவித் தமிழன்றி
வீட்டுநெறிக் கினிச்சிவநூல் வேறுளதோ வென்றார்கள்.

இ—ள்: கேட்டவர்கள் எல்லோரும் - இப்பிரபந்தங்களையும் நெட்டெழுத்தையும் அவ்வந்தணர் வாசிக்கக்கேட்ட சிதம்பரதலவாசிகளனைவரும்,—கிளர் புளகம் குறுவேர்வு காட்டிட - தங்கட் கிளராநின்ற புளகமும் குறுவேர்வையுமாகிய மெய்ப்பாடுகளைப் பிறர்க்குத் தஞ்சரீரம் காட்டாநிற்ப,—ஒண் கண்ணீரும் கசிந்து உருகு சிந்தையும் ஆய் - ஆனந்தபாஷ

பழும் நெக்குநெக்குருகும் மனமுமாய்,—ஈட்டிய மெய்த்தவம் உடையோர் இயம்பிய இத்தமிழ் அன்றி - அனந்தகோடி பூர்வசன்மங்களிலே அரிதி ஞர்ச்சித்த மெய்ம்மையாகிய தவத்தையுடைய திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய இத்தமிழ்ப் பிரபந்தங்களல்லது,—வீட்டுநெறிக்குச் சிவநூல் இனி வேறு உளதோ என்றார்கள் - மோக்ஷவழிக்குச்சிவசாத்திரம் இனி வேறுமொன்றுளதோவென மிகவும் வியந்து பேசினார்கள். எ - று.

வீட்டுநெறி நான்கு அவை சரியை, கிரியை, யோகம், ஞானமென மேலுங் கூறினும். ஓகாரம் எதிர்மறை. சிவநூல் சிவாகமம். ஆனந்தபாஷ்பமென்பது போதர ஒண்கணீரெனவும், சிவபுண்ணியமென்பது விளக்குதற்கு மெய்த்தவமெனவும், திருவாதவூரடிகள் பசுகரணநீங்கிச் சிவகரணமுற்ற பெருந்தகையினராதலின் அவர் செய்த நூலே இத்தமிழன்றி வீட்டுநெறிக்கினிச் சிவநூல் வேறுளதோ வென்றும் கூறினார்களென்க. ()

பூணரவன் றிருநாமம் புகழுமருந் தவர்சொல்ல
யாணரிதன் பொருட்டேனே யின்றுணர்வோ மென்றெண்ணி
மாணுடைமன் றகன்றேகி மறைவல்லார் போதிநிழல்
வீணருடன் பெருவாது வென்றவர்முன் சென்றார்கள்.

இ—ள்: மறைவல்லார் - அதன்பின்பு வேதத்தில் வல்ல தில்லைவாழந்தணர்கள்,—இதன்பொருள் யாணர்த்தேனே - இந்நூற்பொருளாகிய புதிய தேனே,—பூணரவன் திருநாமம் புகழும் அருந்தவர் சொல்ல - சர்ப்பாபரணத்தையுடைய சிவபெருமானை நமச்சிவாய நாமம் முதலிய அளவிறந்த திருநாமங்களாலே துதிசெய்த அரிய தவத்தையுடைய திருவாதவூரடிகளாகிய ஆக்கியோரே சொல்லியருள,—இன்று உணர்வோம் என்று எண்ணி - நாமின்றறியக்கடவோமென்று சிந்தித்து,—மாண் உடை மன்று அகன்று ஏகி - மாட்சிமைபொருந்திய கனகசபையைவிட்டு நீங்கி,—போதிநிழல் வீணருடன் பெரு வாது வென்றவர் முன் சென்றார்கள் - அரசமரநிழலை நன்குமதிக்கும் பொறியிலிகளாகிய புத்தர்களோடு சமயவாதஞ்செய்து வென்ற ஆசாரியசுவாமிகளாகிய திருவாதவூரடிகளது சந்நிதியில் ஒருங்குசென்றனர். எ - று.

பூணரவன் என்பதனை அரவப் பூணனென விகுதிபிரித்துக் கூட்டுக. யாணர்-புதுமை. உண்ணுகின்றுழி மாதுரியச்சுவை பயப்பதாய்ப் பின்புளிச் சுவைபயக்கும் ஏனைத் தேன்போலாது இப்பொருட்டேன் என்றும் மாதுரியச்சுவையேபயத்தலின் அதனை யாணரிதன்பொருட்டேனென்றும், சமுசாரவழுக்கறுக்கும் மன்றாதலின் மாணுடைமன்றென்றும், புத்தசமயாசாரியராகிய கௌதமமுனிவர் காயாவனத்துள் ஓரரசமரநீழலின்கணிருந் தருந்தவமியற்றித் தம்மதஞானம் மிகவும் பெற்றுக்கொண்டமையின், அச்சார்புபற்றி அம்மரநிழலைத் தமக்கு விசேட தருநிழலாகக் கொண்ட

வர் அது சேட்டைக்குறைவிடமென்பது தறியார்போலுமென்பார் அவரைப் போதிநிழல் வீணரென்றுங் கூறினர். (௨௩)

சென்றவர்தந் திருமுன்பு திருமுறைவைத் தண்டர்பிரா
னின்றுசெயுஞ் செயலிதுவென் றியம்பினர்நின் றெல்லோரு
மொன்றுறுமென் புன்பாட லுவந்தருளப் புவிமீதி
லன்றுசெயுந் தவமறியே னென்றழுதா ரன்பாளர்.

இ—ள்: எல்லோரும் சென்று - தில்லைவாழந்தணரனைவரும் வில்வவனத்துச்சென்று,—அவர் தம் திரு முன்பு திரு முறை வைத்து - அவ்வடிகளது சந்நிதியிலே அத்திருமுறையைப் பீடத்தோடு வைத்து,—அண்டர் பிரான் இன்று செயும் செயல் இது என்று நின்று இயம்பினர் - தேவநாயகராகிய சிவபெருமான் இத்தினஞ் செய்தருளிய திருவிளையாடல் இதுவேயாமென்று வணங்கி யெழுந்துநின்று விண்ணப்பஞ்செய்தனர்,—அன்பு ஆளர் - அப்பொழுது அன்பையாளுந் திருவாதவூரடிகள்,—புன்(மை) ஒன்றும் என் பாடல் உவந்தருள - எளிமைபொருந்துமென் பிரபந்தங்களை நமதான்மநாயகர் திருவுளமுவந்து தமதருமைத்திருக்கரங்களினாலே எழுதியருள,—புவி மீது அன்றுசெயும் தவம் அறியேன் என்று அழுதார் - பூர்வசன்மங்களில் இக் கன்மபூமியிற்செய்த தவத்தைத் தமியேன் இன்னதென்றறியேனென்றழுதார். எ-று.

இன்னதென்றறியின் இன்னும் அத்தவத்தையே செய்வேன் என்பது கருத்து. இதுவென்றது திருமுறையைப் பஞ்சாக்ஷரப்படியின்மீது அகாலத்தில் வைத்தருளினதையும், இப்பிரபந்தங்களை வாதவூரன்பாட இவற்றை எழுதிய எழுத்து அழகிய திருச்சிற்றம்பலமுடையான தெழுத்தென் றெழுதியருளினதையுமாம்; தொகுதியொருமை. "வானிடத்தவரு மண்மேல்வந்தரன் றனையர்ச்சிப்பர்" என்பவாதலிற் புவியிலென்றார். கன்மபூமி பரதகண்டம். அத்தவமாவது அன்பையாளுந் தன்மையே பிறிதில்லையென்பார் அன்பாளரென உடம்பொடுபுணர்த்துக் கூறினர். (௨௪)

புண்ணியரிங் கிவ்வாறு புலம்பினர்பின் புலியூரி
லெண்ணருமன் புடையார்க ளிதமுடனஞ் சலிசெய்து
பண்ணுலவுஞ் சிவஞானப் பாடல்கொளும் படிநும்பா
னண்ணுமரன் செய்ததென்னீர் நவிலுமெனச் சொன்னார்கள்.

இ—ள்: புண்ணியர் இங்கு இவ்வாறு புலம்பினர் - புண்ணியபுருஷராகிய திருவாதவூரடிகள் இங்ஙனம் பிரலாபித்தனர்,—பின் - அதன்பின்பு,—புலியூரில் எண் அரும் அன்பு உடையார்கள் - சபாநாயகர்மாட்டெல்லையற்ற அன்பையுடைய தில்லைவாழந்தணர்கள்,—இதம் உடன் அஞ்சலி செய்து - பிரீதியோடு கைகுவித்துக் கும்பிட்டு வணங்கி,—பண் உலவும் சிவ ஞானப் பாடல் கொளும்படி நும்பால் நண்ணும் அரன் - பண்பொருந்துஞ் சிவஞானப்பொருளையுடைய இவ்வருட்பாக்களைப் பாடு

வித்துக்கொள்ளும்பொருட்டுத் தேவரீர்மாட்டெழுந்தருளிய அரசப்தத்தையுடைய சபாநாயகர்,—செய்தது என் - செய்தருளிய அற்புதம் யாது,—நீர் நவிலும் எனச் சொன்னூர்கள் - தேவரீர் சொல்லியருளுமென்று பிரார்த்தித்தார்கள். எ - று.

பண்ணுலவும் பாடலென முடிக்க, புலியூரிலெண்ணருமன்புடையார்கள் என்பதற்குப் புலியூரிலெல்லையற்ற அன்பையுடையவர்களென்றுரைப்பினு மமையும். புண்ணியர் வரபுருஷரென்னும்பொருட்டு. அரன் பக்குவான்மாக்களது பாசத்தை யரிப்பவன். அவ்வடிகளல்ல தவ்வற்புதத்தை உள்ளபடி தங்கட்குச் சொல்லியருளுவார் பிறரொருவருமின்மையானும், அவ்வற்புதங் கேட்டலல்லதொழிதலாகாமையானும், அடிகளை அந்தணர் இவ்வாறு கேட்டல் வேண்டிற்றென்பார் நீர் நவிலுமெனச் சொன்னூர்களென்றூர். (உரு)

அல்லலெனும் பிறவியிலா ரண்ணல்செயுஞ் செயல்யாவுஞ்
சொல்லினர்பின் புலியூரர் தொழுதுமனங் களிகூர்ந்து
தில்லையிலெம் பெருமானைச் செப்பியவித் தமிழ்மாலை
நல்லவரும் பொருள்கேட்க வேண்டுமென நவின்றூர்கள்.

இ—ள்: அல்லல் எனும் பிறவி இலார் - முழுதுந் துன்பத்திற்கேதுவாகிய பிறப்பிறப்பற்ற திருவாதவூரடிகள்,—அண்ணல் செயும் செயல் யாவும் சொல்லினர் - சர்வலோகைகநாயகராகிய சிவபெருமான் தம்மாட்டெழுந்தருளிவந்து செய்தருளிய அற்புதசமாசாரங்கள் அனைத்தையும் சொல்லியருளினூர்,—பின் - அங்ஙனஞ் சொல்லியருளியபின்னர்—புலியூரர் மனம் களி கூர்ந்து தொழுது - தில்லைவாழந்தணர்கள் அதுகேட்டு மனம் மிக மகிழ்ச்சியடைந்து அவ்வடிகளைவணங்கி,—எம் தில்லையில் பெருமானைச் செப்பிய இத் தமிழ் மாலை நல்ல அரும் பொருள்-நஞ் சிதம்பரசபாநாயகரையே பாட்டுடைத்தலைவராகக் கொண்டு தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய இத்தமிழ்ப்பிரபந்தங்களுதலிய நன்மையாகிய அரிய அர்த்தத்தை,—கேட்கவேண்டும் என நவின்றூர்கள் - தமியேம் தேவரீரிடம் கேட்கவேண்டுமென்று அதிவினயத்துடன் பிரார்த்தித்தார்கள். எ - று.

அல்லலெனும் பிறவி என்றது காரியகாரணவுபசாரம். மாலைக்கென நான்காவது விரிப்பினுமமையும். மாலைபோறலின் நூலை மாலையென்றூர். நல்லபொருள் அரும்பொருளெனத் தனித்தனிமுடிக்க. நல்லவரும் பொருளென விசேடித்தார் ஞானூர்த்தமென்பது விளக்குதற்கு. அல்லலெனும் பிறவிஎன்பதற்கு, அறிவிலாதார் முட்பூவிற்றேன்போல ஒருவாறின்பமெனக்கொள்ளினும், அறிவுடையார் முட்போல முழுவதும் துன்பமெனக்கொள்ளும், பிறவியென்பார் அல்லலெனும்பிறவி என்றூரெனக் கிளந்துரைக்க. அவ்வடிகளது பெருந்தகைபற்றிக் கூறுகஎன்னூது நாம் கேட்க

வேண்டுமென உபசாரமாகக் கூறினாரென்க. அது முன்னர்த் தில்லையுள்ளார் பொருள்கேட்க என்பதனானுமறிக. கேட்க என்னும் பாடத்தை மாற்றி வேறுபாடம் கற்பிப்பாருமுளர். (உசு)

ஓங்குபுகழ்த் திருவாத வூருறைஎம் பெருமானுந்
தேங்கியமெய்ச் சிவஞான சிந்தையுடன் களிகூர்ந்து
பூங்கனகப் பொதுவெதிரே போய்ப்புகல்வே னெனப்போக
வாங்கவர்முன் சென்றாரு மன்பொடுபின் சென்றார்கள்.

இ—ள்: ஓங்கு புகழ்த் திருவாதவூர் உறை எம் பெருமானும் ஒருகாலைக்கொருகால் மிக்கோங்கித் தழைக்கும் பெரும்புகழையுடைய திருவாதவூரிலே திருவவதாரஞ்செய்து வசித்த நஞ்சமயகுரவராகிய மாணிக்கவாசகசுவாமிகளும்,—களி கூர்ந்து - அதுகேட்டு மனம் மிகக்களிப்படைந்து.—மெய்ச் சிவ ஞானம் தேங்கிய சிந்தை உடன் - மெய்ம்மையாகிய சிவஞானம் பொங்கிவழிகின்ற இருதயத்துடன்,—பூம் கனகப் பொது எதிரே போய்ப் புகல்வேன் எனப் போக - பொலிவாகிய கனகசபைக்கெதிரே போய் இவைகளின்பொருளை உங்கட்குச் சொல்வேனென்று கூறிச்சென்றருள,—ஆங்கு அவர் முன் சென்றாரும் அன்பு ஒடு பின் சென்றார்கள் - அவ்விடத்து அவர்மாட்டு முன்சென்ற தில்லைவாழந்தணர்களும் அவர்மீதன்புகூர்ந்து அவ்வடிகட்குப் பின்னாகச் சென்றனர். எ - று.

ஓங்குபுகழ் நிகழ்காலவினைத்தொகை. உறைபெருமானென்ப திறந்தகாலவினைத்தொகை. உம்மை முன்னைய துயர்வுசிறப்பும், பின்னைய திறந்ததுதழீஇயவெச்சமுமாம். சிந்தையுடன் போகவெனவியையும். சென்றாரென்பது வினையாலணையும்பெயர். திருவாதவூரடிகளது திவ்விய சரித்திரம் புதிதுபுதிதாகக் கேட்கப்படுந்தோறும் ஒருகாலைக்கொருகால் மிக்கோங்கித் தழைக்கும் பெரும்புகழையுடைய திருவாதவூரென்பார் ஓங்குபுகழ்த்திருவாதவூரென்றும், அவ்வந்தணராற்கேட்கப்பட்டது தம்பரமாசாரியசுவாமிகளது விஷயமே யாதலாற் களிகூர்ந்தென்றும், பொருள்சொல்லும்படி கேட்டதுணையானே தம்வயமின்றிச் சிறிதுந் தடையற்றுச் சென்றாரென்பார் தேங்கியமெய்ச்சிவஞான சிந்தையுடன்போக என்றும், தங் கேள்விக்கிசைந்தமையின் முன்னையினு மவர்மீ தன்புகூர்ந்து பின் சென்றாரென்பார் ஆங்கவர்முன்சென்றாரு மன்பொடுபின் சென்றார்கள் என்றுங் கூறினார். (உஎ)

நின்றபுகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச்
சென்றருளுக் கிடமான செம்பொனினம் பலமெய்தி
யொன்றியவித் தமிழ்மாலைப் பொருளிவரென் றுரைசெய்து
மன்றதனிற் கடிதேகி மறைந்தனரங் கவர்காண.

இ—ள்: வாதவூர் உறை எம்பெருமான் - நஞ்சமயாசாரிய சுவாமிகளாகிய திருவாதவூரடிகள்,—நின்ற புகழ்ப் புலியூரர் நேயம் உடன்

புடைசூழச் சென்று - திரிகாலத்தும் நிலைபெற்ற கீர்த்தியையுடைய சிதம்பரதலவாசிகளெல்லாம் பத்திமையோடு பக்கத்தேசூழ்ந்து சேவித்துவரச் சென்று,—அருளுக்கு இடம் ஆன செம்பொனின் அம்பலம் எய்தி - பராசத்தியால் அதிட்டிக்கப்பட்ட சுத்த மாயாரூபமாகிய கனகசபையையடைந்து,— இத் தமிழ் மாலை ஒன்றிய பொருள் இவர் என்று உரை செய்து - இத்தமிழ்ப் பிரபந்தங்களுக்கமைந்த பொருள் இச்சிற்சபாமத்தியில் விளங்கும் சபாநாயகரேயாமென்று திருவாய்மலர்ந்து,—மன்றதனில் கடிது ஏகி அவர் காண அங்கு மறைந்தனர் - அச்சிற்சபையின்கண் விரைந்துசென்று அவர்கள் சமஸ்தரும் நேரேகாண அங்கே மறைந்தருளினார். எ - று.

வினைமுதல் மேலைச்செய்யுளினின்றும் வருவிக்கப்பட்டது. தில்லைவாழந்தணர்களோடிடைநெறிக்கண்வந்து சேர்ந்த சிதம்பரதலவாசிகள் பிறரும் அவ்வடிகண்மீ தன்புகூர்ந்து சென்றாரென்பார் ஈண்டும் புலியூரர்நேயமுடன் புடைசூழச்சென்றென்றார். "தற்பரமாய்ப்பரபதமாய்த்தாவிலநுபூதியதா, யற்புதமாயாரமுதா யானந்தநிலயவொளிப், பொற்பினதாயறிவரிதாய்ப்பொருளாகியருளாகுஞ், சிற்பரமாமம்பரமாந் திருச்சிற்றம்பலம்போற்றி." என்பதனாலே திருவாதவூரடிகள் அந்தர்த்தானமான சிற்சபையினியல்பை அறிக. மறைவெனினும் அந்தர்த்தானமெனினுமொக்கும். (உ௮)

செய்காட்டுங் கமுகடவித் தில்லையுளார் பொருள்கேட்கக்
கைகாட்டித் தம்முருவங் காட்டாமன் மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவியநீ ராக்கினார்.

இ—ள்: செய்காட்டும் கமுகு அடவித் தில்லை உளார் பொருள் கேட்க - வயல்கள் தம்மிடத்துக்கொண்டு சேய்மைக்கட்காட்டும் கமுகங்காடுசூழ்ந்த தில்லைவாழந்தணர்கள் இப்பிரபந்தங்கட்குப் பொருள்என்னையென்றுவினவ,—கை காட்டித் தம் உருவம் காட்டாமல் மறைந்தாரை - அதற்குத் தங்கையினாலே சபாநாயகரைச் சுட்டிக் காட்டிவிட்டுத் தந்திருமேனியைக் காட்டாது மறைந்தருளிய திருவாதவூரடிகளை,—பை காட்டும் பேர் அரவப் பணி உடையார் - படத்தைவிரித்துக் காட்டும் பெரிய சர்ப்பத்தை ஆபரணமாகவுடைய சபாநாயகர்,—தமக்கு மெய் அன்பு காட்டி - தம்மிடத்தவர்கொண்ட மெய்யன்பை நம்மனோர்க்கு இந்நிகழ்ச்சிகளாற் காட்டிவிட்டு,—பால் உடனே மேவிய நீர் ஆக்கினார் - பாலோடு கலந்த நீர் அப்பாலாமாறுபோலத் தம்மோடுகலந்து தாமாந்தன்மைப் பேரின்பப் பெருவாழ்வடையும்படி செய்தருளினார். எ - று.

சிவபெருமானது திருவருட்செயல்களெல்லாம் தம்பொருட்டன்றிப் பிறர்பொருட்டே செய்யப்படுவன என்பதிதனானுமறிக; பிறர்பொருட்டன்றாயிற் நமக்கிந்நிகழ்ச்சிகளாற் போந்தபயனென்னை ஒன்றுமின்றென்பது தாற்பரியமாகலினென்க. செய் - வயல். மிகுதிதோன்ற அடவியெ

ன்றூர். பாலொடுகலந்த நீர் பிரிக்கப்படுதலு முண்மையின், இது கலப்புறுதற்றொழிலேபற்றிவந்த ஒருபுடையுவமையென்க. (உ௯)

வே று.

அண்டனை யண்டர் கோனை யன்பின ரடையு மாறு
கண்டனர் புளக மெய்திக் கம்பித மாகி நின்று
விண்டனர் கசிந்து சிந்தை வேர்த்தனர் மேனி யெங்குங்
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை குவித்தனர் தில்லை யுள்ளார்.

இ—ள்: தில்லையுள்ளார் - அப்பொழுது சிதம்பரதலவாசிகளெல்லாம்,—அண்டனை - சிதாகாசரூபனை,—அண்டர்கோனை-மகாதேவரை,—அன்பினர் அடையும் ஆறு கண்டனர் - சிவபத்திமானாகிய திருவாதவூரடிகள் சித்தாந்தசைவ சுத்தாத்துவிதமுத்தியடையுந்தன்மையைக் கண்டார்கள்,—புளகம் எய்திக் கம்பிதம் ஆகி நின்று சிந்தை கசிந்து விண்டனர் - குதூகலங்கொண்டு சரீரம்விதிர்விதிர்த்துநின்று மனம் நெக்குநெக்குருகினார்கள்,—மேனி எங்கும் வேர்த்தனர் - சரீரமெங்கும் வியர்வைகொண்டார்கள்,—மகிழ்ச்சி கொண்டனர் - பரமானந்தமடைந்தார்கள்,—செங்கை குவித்தனர் - சிவந்தகைகளைக் கூப்பிக் கும்பிட்டு வணங்கினார்கள். எ - று.

சிந்தைவிண்டனர், மேனிவேர்த்தனர் என்பன சினைவினை முதலோடு முடிந்தன. புளகமும் சிந்தைவிள்ளுதலும் செங்கைகுவித்தலும் அன்பானும், கம்பிதமும் வெயர்வையும் அச்சத்தானும் வந்த மெய்ப்பாடுகளென்க. செய்யுளாகலின் விரவிக்கூறினார். இது அறுசீரடி ஆசிரிய விருத்தம். (௩0)

வே று.

பூத நடங்க டொடங்கின போத மகிழ்ந்தணு குங்கண
நாதர் புகழ்ந்தனர் தும்புரு நாரத ரங்கிசை கொண்டனர்
வேதமொ டந்தர துந்துபி மீது முழங்கி யெழுந்தன
மாதவ ரிந்திர ரைந்தரு மாமலர் சிந்தி வணங்கினர்.

இ—ள்: அணுகும் பூதங்கள் போத மகிழ்ந்து நடம் தொடங்கின - அப்பொழுதாகாயமார்க்கமாக வந்த பூதங்கள் மிகமகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடின,—கணநாதர் புகழ்ந்தனர் - சிவகணநாதர்கள் துதித்தார்கள்,—தும்புரு நாரதர் அங்கு இசை கொண்டனர் - தும்புருவும் நாரதரும் அவ்வாகாயத்திலே சாமவேத கீதம்பாடினார்,—வேதம் ஒடு அந்தர துந்துபி மீது எழுந்து முழங்கின - வேதங்களும் தேவதுந்துபிகளும் ஆகாயத்திலேயெழுந்து மிக்கொலித்தன,—மாதவர் இந்திரர் ஐந்தரு மாமலர் சிந்தி வணங்கினர் - பெரிய தபோதனர்களும் இந்திராதிதேவர்களும் பஞ்சதருக்களின் சுவர்ண புஷ்பாஞ்சலிசெய்து அவ்விருவரையும் வணங்கித் துதித்தார்கள். எ - று.

ஒடு எண்ணொடு; உயர்பின்வழித்தாய ஒருவினை ஒடுச்சொல்லென்றலும் ஒன்று. விகுதிகள் பிரித்துக் கூட்டப்பட்டன. நடனபேதங்கள் விளக்குதற்கு நடங்களென்றாரெனினுமமையும். மகிழ்ந்து, அணுகும் என்னுமெச்சங்களை ஏற்குமிடமெங்குங் கூட்டிப் பொருள்கொள்க. வேத்மொடந்தரதுந்துபி முழங்கின என்பது கருமகருத்தா. மாதவரிந்திரர் என்பதற்கு அரிபிரமேந்திராதி தேவர்களென்பாருமுளர். அணுகுமென்றார் இச்செய்யுள் ஆகாயவாசிகள்செய்தியும் மேலைச்செய்யுள் சிதம்பரதலவாசிகள் செய்தியுமென்னும் வேறுபாடு தெரித்தற்கென்க. (௩க)

ஞான நடம்பயில் சங்கர ளுமமிருந்துள நெஞ்சினர்
மோன சுகந்த முடன்சிவ பூசை முயன்று நயந்தவ
ரூனமி லன்பொடு தென்புலி யூரி லுறைந்து சிறந்தவர்
வானக மும்பர வுந்திரு வாசக வின்ப நுகர்ந்தனர்.

இ—ள்: ஞான நடம் பயில் சங்கரன் நாமம் இருந்துள நெஞ்சினர் - சூக்கும நடனஞ்செய்தருளும் சிவபெருமானது திருநாமமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரம குடிகொண்டிருக்கும் மனத்தையுடைய யோகிகளும்,—மோன சுகந்த உடன் சிவபூசை முயன்று நயந்தவர் - மௌனத்தோடும்சுகந்தவர்க்கங்களோடும் சிவபூசையைவிடாது முயன்றுசெய்து நன்மையையடைந்த கிரியாவான்களும்,—ஊனம் இல் அன்பு ஒடு தென் புலியூரில் உறைந்து சிறந்தவர் - குற்றமற்ற அன்பினுடனே தெற்கின்கணுள்ள சிதம்பரத்தில் வசித்தலான் முன்னையிருவரோடொப்பச் சிறந்த சரியாவான்களும்,—வானகமும் பரவும் திருவாசக இன்பம் நுகர்ந்தனர் - விண்ணுலகவாசிகளாகிய தேவர்களும் துதிக்கத்தகும் திருவாசகந் திருக்கோவையாரென்னும் தமிழ்வேதங்களின் சொற்சுவை பொருட்சுவைகளை நன்கனுபவித்தனர். எ - று.

ஞானநடம்பயில் சங்கரநாமமிருந்துளநெஞ்சினரென உட்டொழிலைபற்றி ஓதுதலின் யோகிகளென்பதூஉம், புலியூரிலுறைந்து சிறந்தவரெனப் புறத்தொழில்பற்றி ஓதுதலிற் சரியையாளரென்பதூஉம் பெற்றாம். உடனென்னும் சொல்லுருபு மோனமுடனென முன்னுங் கூட்டப்பட்டது. வானகம் ஆகுபெயர். உம்மை சிறப்பும்மை. சுகந்தம் சந்தனம் புஷ்பம் முதலிய வாசனைவர்க்கம்; மோனமாகிய சுகத்தின் அந்தத்தில் உடனேசெய்யப்படும் சிவபூசையென்றுமாம். நயம் நன்மை: அஃதீண்டுப் பிறந்ததிறைப்பெறும் பேற்றின்மேனின்றது. புலியூரிலுறைந்து சிறந்தவரெனவே சிவாலயசேவை முதலிய தொண்டுசெய்யும் கிரியையாளர்க்கும், அவைசெய்தற்கட் சிதம்பரமே சிறந்ததலமென்பதூஉம் போதருமென்க. (௩உ)

வேறு.

ஊனமிகுந் துளதோலு மென்புநரம் புஞ்சீயு
மானவுடல் சிவரூப மாமிதனைத் தெளியாம
லூனுடலுக் கிரைதேடி யுழன்றுலகிற் றடுமாறி
மாநரகிற் புகுதுமதோ மாயைவலைப் படுவார்கள்

இ—ள்: மாயைவலைப் படுவார்கள் - மாயாகாரியமாகிய பிரபஞ்ச வலையிற் சிக்குண்ணும் நம்மவர்கள்,—ஊனம் மிகுந்துள தோலும் என்பும் நரம்பும் சீயும் ஆன உடல் - இழிவுமிகுந்துள்ள தோலு மெலும்பும் நரம்புஞ் சீயு முதலிய சத்ததாதுக்கண்மயமாகிய திருவாதவூரடிகளது உடம்பும்.—சிவரூபம் ஆம் இதனைத் தெளியாமல் - ஈண்டுச் சிவரூபமாகிய இதற்குக் காரணமென்னையென ஆராய்ந்து, அது சிரத்தையன்பேயாமெனத்தெளிந்து, தாமு மவ்வன்பைச்செய் துய்யாமல்,—ஊன் உடலுக்கு இரை தேடி உலகில் உழன்று தடுமாறி - தசைப்பொதியாகிய இவ்வுடம்பிற் குணவைத்தேடி அதுநிமித்தம் உலகெங்கும் சுழன்று தடுமாறித்திரிந்து,—மா நரகில் புகுதும் அது ஓ - முடிவிற் பெரியநரகத்தின்கண் வீழ்ந்தழுந்தும் அதுவோ தெளிந்து செய்யத்தக்கது! ஐயையோ இஃதென்னை தகவின்மை!! எ - று.

உடல் சிவரூபமாதல் சதேகமுத்தியடைதல். இது சொரூபமானந்த முத்தியெனவும் பெயர்பெறும். விதேகமுத்தியென வேறொன்றுண்மையின் இங்ஙனம் விதந்துகூறினார். உடல் மாயேயமாகிய மலமாகலின், அது ஈண்டுச் சிவரூபமாம் என்றது, கட்புலனாகாது ஞானாக்கினியாற்றகிக்கப்படும் விசேடம்பற்றிநேர்ந்த துதிவாதமெனவுய்த்துணர்ந்துதெளிக. இதற்குப்பிறிதுகூறுவாருமுளர். ஊனமிகுந்துளதோலுமென்பு நரம்புஞ் சீயு, மான என்னு மடை உடம்புகட்கெல்லாம் பொதுத்தன்மையை விசேடித்துநின்றது. ஓகாரம் கழிவிரக்கப்பொருட்கண் வந்தது. ஒருசொன்னீர்மைப்பட்டு நிற்கும் தெளிந்துசெய்யத்தக்கதென்னும் தோன்றா எழுவாய் அவாய்நிலையானும், ஐயையோ இஃதென்னை தகவின்மை என்பது இசையெச்சத்தானும் வருவிக்கப்பட்டன. உழலல் உதரநிமித்தம் தொழின்முயற்சிகளை மேற்கோடற்கும் மேற்கொண்டவற்றை வழுவாது செய்தற்கும் ஒருகாற்சென்றுழிப் பலகாற் சேறல். தெளிதல் உண்மையுணர்தல். அங்ஙனந் தெளியாமைக்கேது பாசத்தடையே பிறிதில்லையென்பார் மாயைவலைப்படுவார்களென அவ்வேதுவை உடம்பொடு புணர்த்துக் கூறினார். உட்கொள்ளப்பட்ட ஆவினறும்பாலும் சருக்கரையும் முப்பழங்களும் தேனும் கண்டும் இவைபோல்வன பிறவும் பின் மலமாய் வெறுப்பொடு கழிக்கப்படுதல் அப்பொருள்களின் குற்றமன்று; உடம்பின் குற்றமேயென்பார் ஊனமிகுந்துள தோலு மென்பு நரம்பும் சீயு,

மானவுடலென விசேடித்தார். அது, "ஆனமுதுஞ்சருக்கரையுமருங்க னியும் பசுந்தேனு, மூனமுறுமலமாதலுதரமதிற் புகுந்தன்றே, கானுலவு நறுந்தெண்ணீர்கடியுமுவர்ப்புனலாத. லீனமிகுமுடைக்குரம்பை யிதிற்பு குதப்பெய்தன்றே" "நறுந்தவளத்துகிலெழுக்காய்நாறுதற்கு நவையுடம்பி, னுறுந்தவறுதனையன்றி யொருநிமித்தம்பிறிதுண்டோ" என்பவற்றானு மறிக. ஆசிரியர் தாம் செய்யுள்செய்ய எடுத்துக்கொண்ட திருவாதவூரடி களது சரித்திரமாகிய நுதலியபொருண் மேலைச்செய்யுள் காறுங் கூறப் பட்டு முடிந்தவழி இச்செய்யுளால் இச்சரித்திரசாரமாய்த் தம்முள்ளத் துத் தோன்றிய பாவமெனப்படும் அபிப்பிராயத்தை இந்நூல் பயில் வோரை நோக்கிக் கூறியவாறென்க. இது கொச்சகக்கலிப்பா. (௩௩)

வேறு.

வாதவூ ரந்தணர் தந்திரு வாய்மை விளங்கு திருக்கதை
யோதின ரன்புட னொண்செவி யூடு முகந்தது கேட்டவர்
போதமெய்ஞ் ஞான முறுஞ்சுக போக முடன்புகழ் பெறுவர்க
டீதில் பவங்க டொலைந்துபின் சேர்குவர் வண்சிவ லோகமே.

இ—ள் திருவாதவூர் அந்தணர் தம் வாய்மை விளங்கு திருக் கதை - அழகிய தண்ணளியையுடைய திருவாதவூரடிகளது சரித்திரவுண் மையைவிளக்கும் இத்திருப்புராணத்தை,—அன்பு உடன் ஓதினர் - அன் போடு வாசித்தவர் பொருள்சொன்னவர்களும்.—ஒண் செவி ஊடு முகந் து அது கேட்டவர் - அழகிய செவிகளான் முகந்து அதனை உற்றுக் கேட்டவர்களும்,—போத மெய்ஞ் ஞானம் உறும் சுக போகம் உடன் புகழ் பெறுவர்கள் - இறப்பவும் மெய்ஞ்ஞானத்தையும் தகுதியாகிய சுகபோக வாழ்வையும் புகழையும் இம்மைக்கட் பெறுவார்கள்,—பின் பவங்கள் தொலைந்து தீதில் வண் சிவலோகம் சேர்குவர் - தேகாந்தத்திற் பிறவிக் கேதுவாகிய இருவினைகடொலையுமாறு தீதற்ற வளவிய சிவலோகத்தை அடைவார்கள். எ - று.

விளக்கெனற்பாலது இன்னிசைபற்றி விளங்கென மெலிந்துநின் றது; வாய்மை தானேவெளிப்பட்டு விளங்குதிருக்கதை என்றுமாம். பவம் ஆகுபெயர். தொலைய என்னும் காரியப்பொருட்டாய செயவென்வாய் பாட்டு வினையெச்சம் தொலைந்தெனத் திரிந்துநின்றது. அரசவாழ்வென் பது விளக்குதற்கு உறுஞ்சுகபோகவாழ்வென விசேடித்தார். அது புந் திமகிழப்புவிபுரப்பர் என மேற்கூறியவாற்றானுமறிக. அன்பின்றி ஓதினோ ர்க்கும் கேட்டோர்க்கும் அதனாற் பெரும்பயனின்மையின் அன்புட னென்றும், ஒருவற் கிம்மைக்கண் மெய்ஞ்ஞானமும் புகழுமின்றிப் பெறுஞ் சுகபோகவாழ்வு விலங்கின்வாழ்வோ டொக்குமாகலின் இந்நன் மக்புள் சுகபோகவாழ்வுடன் அவற்றையும் பெறுவார் என்பார்போத